ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வடிவழகிய நம்பிதாஸர்

இயற்றிய

# ஆழ்வார்கள் வைபவம்

20764

இது

ஸ்ரீரங்கத்திலிருக்கும்

வக்கீல் ஸ்ரீ. உ. J. கிருஷ்ணையங்கார் ஸ்வாமி

நியமனப்படி

பண்டிதர் P. R. கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்பாசிரியர்

PRINTED AT
THE WEDNESDAY REVIEW PRESS
TRICHINOPOLY
1909.

(Copy Right)

ஸ்ரீ

# முதலாழ்வார்கள் பிரபந்தம்.

பிறவிபல பிறந்திடவும் பிணங்கியவ ஞேடுயிர்க
ளுறவின்றிப் பகையாகி யரக்கர்களா யுயிர்மாய
வறமெலிந்து சோதிசில ரகப்பட்டா தம்மொடும்போய்த
துறவுசெறி யந்தாமம் புகுந்திருந்தோர் சூட்சியினல்.

மான்காட்டி மான்பிடிக்கு மதியினர்போல் வரியளிசேர்
தேன்காட்டுந் துழாயினன் சீவைகுந்த முததாகளுக
கூன்காட்டா ஞன்காட்டி யுலகமுய்யும் பொருட்டாக
வான்காட்டு மயர்வில்லா மதிநலமு மகிழ்ந்தருளி.

வாழ்விப்பான் யோனியராய் முதலாழ்வார் களைமணற்
ருழ்வில்லா வற்பசியோ ணம்மவிட்டஞ் சதையததிற்
சூழ்புரிசைக் கசசிமல்லை மயிலையென்னுந் தொன்னகரி
லூழில்பொய்கை பூதம்பே யெனுநாமத துதிப்பிததான்.

வேறு.

ஏம வுலகி லிடர்நீஙக வெவ்வுயிர்க்குங
காமக் குரோதாதி கால்குலையச செந்திருவின்
நாமம் விளஙக நறையார் பசுந்துளவத
தாம முடியான் றமராய மூவர்களும்.

வேறு.

ஒருவரை யொருவர் காணு துரைத்தவப் பதிக டோறுந்
திருவளர் மார்ப னன்றிச செகததிலோர் துணைகா ணுதே
வருபகல் பல்வுழ் வைகி வளருநா ளொருநாண மாயக
கருநெறி கடக்கின் ருரைக் காசினி யெஙகு நாடி.

திரிந்துநாங காணடல் வேணடு மெனத்திரு வுளததி லெண்ணிப்
பரிந்தெழு சிந்தைப்பொய்கை பழனஞ்சூழ் கசசி நீஙகி
விரிந்தெழு கருணை பொஙக விடைகொள்வார் கோவ லூரிற்
புரிந்தவன புடைய மாய னருளினு லதனுட் புக்கார்.

புக்கவர் கமலக் கண்ணன் பூஙகழ லிணைந்து வாழ்த்தி
பக்கர மெட்டு முள்ள படியினு லமைய வோதி
மூக்கணுன் சாபந் தீர்தத முதல்வனென் றன்பு செயது
மக்கவப் பதியி லன்று தஙகுவான் சமைந்த போதில்.

# முதலாழ்வார்கள் பிரபந்தம்.

பூதபூ மல்லை யென்னும் பொன்னகர் தன்னு ணின்
வேதநா யகற்கா ளாய மெய்யரை யெங்கு நாடிப்
பாததா மரைக ளேத்திப் பரவுவான் பரிந்த வன்பாற்
போதுவார் கோவ லூரிற் பூவைப்பூ வண்ண னாய.

அருமறை முதல்வன் கூட்டு மருளினா லதனுட் சென்று
கருமுகில் வண்ணன் செம்பொற் கழனினைந் தன்றவ் வூரின்
மருவிட வந்த நாளிற் பேயரு மயிலை நீங்கித்
திருவருட் செயலால் வந்து திருக்கோவ லூரைச் சேர்ந்தார்.

பொருந்திய மூவர் தாமும் புனிதனை நினைந்து வெவ்வே
றிருந்தன ரிரவி பட்டா னிராப்பொழு தடங்கி வைகத்
திருந்திய பொய்கை சென்றோர் வேதியன் மனையிற் சேர்ந்து
நெருங்கிடை கழியின் மன்னித் துயில்கொள்வா னினைந்து சார்

வேறு.

பொருவினெறிப் பூதத்தார் புகுந்திதனு ளுறைபவரார்
தருமினிராத் தங்குமிட மெனப்பொய்கை தான்விழித்திங்
கொருவருக்கே கண்டுயில வுள்ளதிட நீரணைந்தா
லிருவருக்கு மிருந்திடலா மெனத்திறந்தார் திருக்கதவை.

முன்சென்றார் பின்சென்றார் முகங்காணா ரிருளின்கண்
பொன்சென்ற விடைகழியி லிருவர்களும் புகுந்திருப்ப
மின்சென்ற சுடராழி விண்டுவருள் கொண்டுவரப்
பின்சென்ற பேயாரு மம்மனைவா யிற்புறமாய்.

சென்றாரிவ் விடைகழியிற் செறிபவரா ரிடமுளதோ
குன்றாத வன்புடையீர் கூறியிடு மெனவுரைப்ப
நன்றாய்முன் னொருவர்படுத் தோமிருவர் நன்கிருந்தோ
நின்றீர்நீர் வந்தணைந்தா னின்றிடலா மூவர்களும்.

எனவுரைப்பத் திறவுமென்றா ரிருந்தவர்தா டிறந்துநின்றார்
மனமகிழ்ந்து சென்றவரு மற்றவர்க ளுடனின்றா
ரனவயல்சூழ் கோவலூ ராயனா மாயவனும்
புனமலர்ச்செந் திருவோடும் புகுந்திருளி லாங்கவரை

நெருக்கினா னொருக்குண்டு நின்றாழ்வார் மூவர்களு
முருக்காட்டா திவணெருக்கி யுறைபவரைக் காண்டுமெனுங்
கருத்தினாற் சுடர்ஞானக் கனல்விளக்கை யேற்றினார்
திருக்கண்டேம் பொன்மேனி கண்டேமென் றுடன்றெளிந்தே.

பூடினார் குணலைக்கூத் தங்கைகொட்டி நான்மறையைப்
பாடினார் பாரோடும் பணிந்தெழுந்து பதுமத்தாள்
சூடினார் சுகவடிவைப் பிரிந்ததுன்ப மவைதீரக்
கூடினா ரானந்தக் கொழுஞ்சோதிக் கடற்குளித்தார்

# முதலாழ்வார்கள் பிரபந்தம்.

அத்திக்கா யுட்கீட மத்திநடுவாதியந்த
மெத்திக்கா லும்மறியா வகைபோனின் னிடையிலண்
டொத்திப்பா ழுறவதனுட் பிரமனா னெனத்தோன்றி
வத்தித்தா ருணையறியா ரென்றாலிம் மண்ணுலகில்.

பேரானந் தச்சோதிப் பிரளயமா நினையடைய
ஓராத காதலரா யகப்படுவார் தமைக்காணென்
நாராயணச்செய்யுந் திறமறியே னவில்கவெனக்
கூராழி சங்கேந்துங் கொண்டலுடன் குறித்துரைத்தா

மூவர்களு மவைகூற மூவுலகு முண்டுமிழ்ந்த
தேவர்கடே வன்னகைத்துச் செப்புவா னீர்வேட்டா
ரேவர்கடா மடைத்துடைத்தா லூடுவா ரிரும்புனலோ
டாவயின்னு மடைப்பதல்லா லருள்கவென வாழ்வார்க

செங்கமலை தனிவாழ்வின் சேவடியி லுறப்பணிய
வங்கமுற மூவரையு மெடுத்தணைத்தீ தருள்புரியு
முங்கள்பொருட் டாலுலகந் திருந்தவின்ப முண்பதியா
பங்கமிலா நெறியுடையீர் பார்முழுதுந் திருத்துமென.

எம்பெருமா னின்றனனுங் கிணையில்பெருங் கருணை
மன்பர்களா மூவர்களு மச்சுதன்சீ ரருளுக்கி
யின்பமய மேயென்று இரங்கிக் கரைந்தழுதவ
ரும்பர்முதன் மாநிலத்தோ ருய்யும்வண்ண மின்னிசை

வேறு.

வையந் தகளியென்றும் வார்கடலே நெய்யென்றும்
வெய்யகதி ரோனை விளக்கேற்றி னேனெனவுங்
கையம் புதத்தான் கழற்கேற மந்தாதி
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு கட்டுரைத்தான்

அன்பே தகளியென்று மார்வமே நெய்யென்று
மின்புருகு சிந்தை யிடுதிரி யாமென்று
மின்பொருவு மாழி விமலன் கழற்குலகிற்
புன்பிறவி நீங்கவிளக் கேற்றினார் பூதத்தார்.

வேறு.

திருக்கண்டே னென்றுபேய் செப்பியசீர்ச் சொற்றொடை
யிருக்கின்முடி வானோனை யேத்தினார்சீர்ச் சொன்மாலை
பெருக்குநெறி மூவருஞ்செய் பேரருண்மூ வந்தாதி
கருக்கடலை யுயிர்கடக்குங் கப்பலெனும் படிசுழ்றி.

வாழ்வித்தா ருலகனைத்து மாமாயப் பெரும்பிணியை
யாழ்வித்தார் முதன்மூவ ரெனத்தோன்று மாழ்வார்கள்
வீழ்வித்தார் திங்களொடு மும்மாரி மெய்ஞ்ஞானஞ்
சூழ்வித்தா ரனைவரையு மரிசாமஞ் சொலவைத்தார்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

டிவழகியநம்பிதாஸர்

இயற்றிய

# பெரியாழ்வார் பிரபந்தம்.

குப்பியம்

ஸ்ரீமாந் திருநாராயணபிள்ளையவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர், **P. R.** கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பட்டது.

ன்னை:

கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

1908

*(Copy Right)*

# பெரியாழ்வார் பிரபந்தம்.

பொய்கை பூதம் பேயென்னப் புகல வரிய முதலாழ்வார்
செய்ய கமலத் திருவடிக டிருந்த விறைஞ்சித் திருவருளான்
மெய்கொள் புதுவை நகர்வந்த விட்ணு சித்தன் கதைவிரிவை
யையம் புலனா லலைப்புண்ணு மடியே னறிந்த படியறைவேன்

## வேறு.

2 விண்ணாட்டு ளந்தாம வியன்புரிசை வேந்தனுக்கு
மண்ணாட்டு ளான்மாவாந் தவசமருள் வழிநடத்தி
யெண்ணாட்டு மூவர்களு மேகியபின் னிருநிலத்தின்
கண்ணாட்டி நீங்காத களப்புலனாய்க் குறும்புசெயும்.

3 வேடர்களோ ரைவர்களு மேதினியின் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி யேயிடமாய்க் கலித்திலங்கு
நாடுமதின் கீழாய நற்பதியு நசிப்பித்து
மூடவிலங் கவைசாத்தி முடித்தனர்கள் புவிமுழுதும்.

4 அத்திறத்தாற் புவிமுழுது மல்லலுறும் படிகண்டு
மெய்த்திறத்தான் மெய்வீட்டில் வீற்றிருந்தே ழுலகாள்
பொய்த்திறத்தார் புலைச்சர்ப்பம் பொடியாகக் கருடனை
சித்திரத்தாற் பெரியாழ்வா ராயுலகைத் திருத்தென்றான்

5 என்றிறைவ னருள்புரிய விறையருளுந் திருவருளு
மொன்றியசீ ரன்பினா லுடன்கொண்டு புவியிலிறை
சென்றுதுயில் கொண்டவருட் சிறந்தவில்லி புத்தூரி
னன்றிதரும் வேதியரிற் சோழியரென் றேநவிலும்.

6 குலத்தினெறி யுடைமுகுந்தர் தந்தையாய்க் கோதில்வ
நலத்தினார் தேவியார் பற்புமைநற் றாயாராய்
நிலத்தினிருள் கெடத்தோன்று மருக்கனென நிலவுமுயிர்
புலக்கூடா நிசியொழிக்கும் போதமாக் கதிரவனாய்.

7 ஆனியெனுந் திங்களினில் வளர்பிறையி லருஞ்சோ
மேனியனார் சோதியினில் விண்ணவர்பூ மழைசொரிய
வானில்வரு முகிலொலியு மறையொலியு மாறுசெயப்
பானிலா முகத்தியர்கள் பல்லாண்டி னிசைபாட.

8 அ[illegible]ழைப்ப மெய்ஞ்ஞானம் யாவர்களு மறிந்துய்ய
மறந்திய வேரோடு மடியவஞ்சம் பாழாக
நிறந்திறம்பா துயர்ந்தோங்கத் தீவினைகள் குலைந்தோட
[illegible]ங்கினா னுடேடா வீனாதே யுயிர்நோக்க.

9 திருவவதா ரஞ்செய்தார் செகமுழுது மீடேற
மருவமரும் பொழிற்புதுவை வடபெருங்கோ யிலானன்
தருகுழவி தனைநோக்கிச் சதஞ்சீவ வெனவாழ்த்திப்
பொருவவருக் கவரேயாய்ப் புவிமீதில் வளர்ந்திடுநாள்.

10 பூதமுத னாயகன்சீர்ப் பூங்கழற்கீழ்ப் பசுந்துளவா
லேதமிலாப் பூமாலை பாமாலை யெனுமிரண்டு
மாதரவி னற்கட்டி யருளவல்ல வாழ்வார்க்கு
வேதநெறி விட்ணுசித்த னெனுநாமம் வியந்துரைத்தார்.

தருக்காக்கு மிந்திரனுஞ் சதுமுகனுஞ் சராசரமு
மொருக்காக்குஞ் சடையானு மிறைஞ்சவெய்தா திடர்க்கரியி
னுருக்காக்கும் பெருமானை யுவந்துபல்லாண் டெனவோதித்
திருக்காப்பன் றிடுவார்க்குத் திருக்காப்புஞ் செய்தனரால்.

வேறு.

பூதத்தனி நாயக னுயலையார் புனலூட்டியி லும்புயன் மேனியினுய்
வேதத்தனி நாயக னேயெனவான் விடையாரய னோர்விண் ணோர்கோமா
னேதிக்கவை வாழ்தி யானெறியா னுலகிற்றமர் கட்குத வுந்திருமாற்
பாதக்கம லங்கா ணீரென்றார் பாதக்கம லங்கண் டார்பலரும்.

வேறு.

ஒத்தவரு மிக்கவரு மன்றியொளி ரும்பன் னேதமனை யேழுமுல கேழுமலை யேழு
மித்திறமு லாதுபிறி தில்லையென வொல்லை யின்பமுறு மீரடியி னுலுறவ ளந்தான்
முத்துமிளை யன்னநகை பத்திகள் விளங்கு மொய்ம்மல ரிலைமருது வாமுளரி யந்தாட்
பத்திவிர னுங்காண்மினென் றவர்பதந்திற்பந் துவிரலுந்தொழுது பத்தர்கள்பரிந்தார்.

வேறு.

14 வினைகளா றுமெயாடு மிக்கவி ரண்டை வேலனை யாமல மிடற்று முழைப்
பிணைக்கா ளுன்மறை யைப்பக லோரைப் பலவைக் கூவிவா யுறைவுண் டிறவோர்
துணைக்கா லாகக் கொண்டிலை மீதிற் றுயிலும் பெருமா டிருமா லழகார்
கணைக்கால் காண்மி னெனக்கசி வோர்தங் கணைக்கால் கண்டு களித்தன ரன்பர்

வேறு.

15 பாராளு நூற்றுவரைப் பாழாக்கிப் பாண்டவருக்
கீராத வின்ப மருளப் பிறந்தபிரான்
சீரார் கருணைத் திருமுழந்தாள் காண்மினென்று
னோரார் முழந்தாள் யாவருங்கண் டின்புற்றார்.

16 வங்கக் கடற்றுயின்ற மாமான் மதுசூதன்
வெங்கட் களிறடர்த்தான் றைவர்கலை வெல்லுவித்த
செங்கமலக் கண்ணன் றிருக்குறங்கு காண்மினென்று
னங்கக் குறங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

MAHAMA...
Dr U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

புணைபுலத்தார் பாரம் புவிமடந்தை யாற்றறிதென்
றன்புறநின் றேத்த வவனியின்கட் போந்தபிரான்
மின்பொறுத்த சோதி விளங்குமுத்தங் காண்மினென்று
ணின்பமுறு முத்[illegible] யாவருங்கண் டின்புற்றார்.

வைய முழுதும் வயிற்றுள்வைத்துத் தேவகியா
ருய்ய வழகா ருதரத் துதித்தபிரான்
மையணிய சோதி மணிமருங்குல் காண்மினென்ற
வையன் மருங்கை யணைவருங்கண் டாதரித்தார்.

சத்தும் பரிசு முருவந் தரைக்கந்த
மொத்த குறும்பைதொறு மூட்டியென்னை யாட்டுவிக்கு
மத்தன் றிருவுந்தி யாயிழையீர் காண்மினென்ற
சித்தனெழி லுந்திகண்டு நீணிலத்தோர் வாழ்த்தினர்.

கொல்லு மதவானைக் கோடுங் கொடியவிறன்
மல்லுந் தொலைப்ப வடமதுரை வந்துதித்த
செல்லுருவ மன்னன் றிருவுதரங் காண்மினென்று
சொல்லும் பிரானுதரம் போற்றினர் தாயோரே.

சங்கக் குழையரன்கைச் சாபந் தவிர்த்திரைக்கும்
பொங்குகட லேழும் பொடிசெய்து வந்தபிரான்
செங்கமலை தங்குந் திருமார்பு காண்மினென்றன்
பங்கமில்லா மார்பழகு கண்டார் பரிவோடே.

வேறு.

2 பெருத்தோங்கு நாற்றுவர் மாளப் பிறந்த
குருத்தோங்கு நான்மறைக் கோவலர் குட்டன்
றிருத்தோ ளிருந்தவா காணென்றான் றோள்கள்
கருத்தோங்கு மன்பர்கள் கண்டார் களித்தே.

3 சூழவிசும் போடுமுன் றொல்லுல குண்டவ
னாழியுஞ் சங்கு மடங்கு கரங்களை
[illegible]யழையர் [illegible]ின்க ளென்றவன் கைத்தலம்
[illegible]ாழிய மன் [illegible] கண்டு பணிந்தார்.

4 பெருக்கண் [illegible]டிப் பிறங்கிய பொன்ன
னுருக்கண்டங் கண்டே முலகுமுண் டான்றன்
றிருக்கண்டங் காணென்ற செய்களங் கண்டு
கருக்கண்டங் கண்டனர் கற்றறிந் தோரே.

5 முன்றொண்டை தண்டாமன் மூவுலகு முண்டவன்
செந்தொண்டை வாய்காண்மி னென்றுபின் செப்ப
நன்றொண்டு [illegible]னை சகியாய்ப் பிறந்தவ
ளின்றொண்டை வாய்கண் டியாவர்க்கு [illegible]ன்புற்று

26 பூக்குந் திருவுந்திப் பூவை நிறத்தமலன்
வாக்கு நயனமும் வாயு முறுவலுஞ்சீர்
மூக்கு மிருந்தவா காணீரென் றுன்முகத்தி
லாக்கு மதுவதுகண் டந்தணர்கள் வாழ்த்தினர்.

27 திங்கள் வதனத் திருவனைய தேவகிபாற்
றங்கிப் பிறந்தாயர் தன்பால் வளர்ந்தபிரான்
செங்கமலக் கண்காண்மின் சேயிழையீ ரென்றவர்க்கு
மங்கமலக் கண்கண் டனைவர்களும் வாழ்த்தினர்.

28 நெருப்புருவத் தான்சாப நீக்கிவரு நீலப்
பொருப்புருவங் கொண்டவிறை பூமகடன் கேள்வன்
றிருப்புருவங் காண்மினென்ற செல்வன் புருவத்
திருப்புருவங் கண்டாங் கிமையவரும் வாழ்த்தினர்.

29 ஆகரத் தனிச்சோதி யாயர்கள் கோமா
னுகரத்தி னுளை யுரத்திற் றரித்தான்
மகரக் குழையிரண்டுங் காண்மினென்ற வள்ளல்
பகர வரியகுழை பார்த்தமரர் வாழ்த்தினர்.

30 உற்ற புவன மனைத்துமுதிப் பித்ததனுட்
சிற்றிடைத் தேவகியார் சீரார் வயிற்றுதித்தா
னெற்றி யிருந்தவா நேரிழையீர் காண்மினென்று
னெற்றைப் பிறைநுதல்கண் டுத்தமர்கள் வாழ்த்தினர்.

31 ஆராயும் வேத மயர்வெய்த வண்டர்கையி
லோரா ரணைகயிற்றாற் கட்டுண்ட வெம்பெருமான்
சீரார் குழல்காண்மி னென்றான் றிருக்குழல்கண்
டோரு முற்றுரு முண்மகிழ்வோ டாடினர்.

வேறு.

32 இவ்வண்ணம் பாத மாதியாய்க் கேச மந்தமா யிலங்குமெய்ஞ் ஞான
மெய்வண்ணக் குழவி யவையவச் சிறப்பை மேதினி யுள்ளவர் தமக்கு
மைவண்ணத் திரைசேர் புதுவைமா நகரின் மறையவர் மகிழ்வொடு முரைப்பப்
பொய்வண்ணத் துயரைக் கடிபவர் பலரும் புகுந்தனர் முகுந்தன தகத்தில்.

33 ஆணவந் திரண்டே னுருவெடுத் துலாவு மைம்புல வேடர்க ளணியாம்
பூணவம் பூண்டு பொய்ப்பரி மீதாய்ப் பூமியைப் பொடிசெய்வார் செயலைக்
காணவந் தவனைக் காணவந் தவர்க ளுடம்பெலாங் கண்ணிலா கையினு
லூணவா முறக்க மவம்பிறப் பவமென் றுளங்கசிந் துருகிநைந் தொசிந்தார்.

ண்ணிரின் றிறைஞ்சிப் பாலனை நோக்கி யிரங்கினர் வாக்கினு லிசைப்பார்[முந்தோ
ண்ணியக் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ போதத்தின் பொலிசுடர்க் கொ
ண்ணிய சாந்தி தருமெழிற் கொழுந்தோ விசைப்பதோர் கமையருட் கொழுந்தோ
ண்ணிய வமுதின் சுவைதிரண் டதுவோ வேதியர் தவந்திரண் டதுவோ.

நங்கைதாய் செய்த தவப்பயனின் றுளேனோ தத்துவத் தாற்றமெய்ப் பொருளோ
விந்தமா நிலத்தோர் செய்தவப் பயனோ விலங்குவா னவர்செய்த தவமோ
யந்தநாண் மலரோன் வாசவ னக்கன் காண்பரும் பரஞ்சுட ரொளியைத்
தந்துநா முய்ய வந்ததோ ருருவோ வென்றென்று சாற்றிவாழ்த் தினரால்.

6 இப்படி படியிற் பாலனைக் கண்டார் யாவரு மிரங்கினின் றேத்த
மைப்படி கண்ணார் மாதர்கள் பலரும் மகப்பெறு பற்புமைத் திருவு
மெய்ப்படிந் திலங்கு குழவியோ டளாவி மிகுமனு பவவினை யாட்டு
கைப்படிந் திலங்கும் பருவமோர் பத்துங் கருமுகிற் குழைத்தவற் குழைத்த.

37 சீருடைக் குழவி யிணையடி யாதி திருமுடி வரையினி லணியா
மேருடைச் சதங்கை சுட்டிமற் றிதனுக் கிடையிடை பூண்பன கமலத்
தாருட னணிந்து வளருநா ளொருநாட் டையலார் தற்பரா வமுதைக்
கூரிய தவத்தோர் செவிப்புல னிறைப்பீர் கொள்ளுமி னமுதெனக் கொடுத்தார்.

38 இன்னமு தருந்திச் சவுளநான் மறைக ளிசைத்தவர் செய்துமுப் புரிநூ
றன்னையு மந்நா லறைந்தவப் படியே தரித்துமா னுரிமுஞ்சி தரித்து
மன்னிய பிரம சாரியாய்ப் புவியில் வாழுநாண் முழுவதும் வாழ்வா
ரன்னம தூர்தி தாதையா ரடிமை யாகுநா மென்பதை யறிந்தார்.

39 அத்திற மறிந்து வடபெருங் கோயி லுடையவ ரடியிணை வணங்கி
யெத்திறஞ் செய்தா லிவருள மகிழு மெனவிறை திருவவ தார
மெய்த்திறத் தாறின் மூன்றினிற் கஞ்சன் விறல்கெடப் பிறந்தவர் தமக்குச்
சித்திர மாலா காரர்தம் பூவிற் றிருவுள மகிழ்தல்சிந் தித்தார்.

40 அதுவலா லடிமைத் திறத்திலுக் குரிமை யிலதென வகத்தினுட் டௌ
மதுமலர்த் துளவு மல்லிகை யலரி சண்பகம் வளர்மதுப் பிச்சி
புதுமதுப் பொங்கி வளர்கழு நீர்கள் செவ்வந்தி புகரறு கமல
மிதுவது வென்று திறைவனுர் சாத்தற் கிசைவன நறுமலர் யாவும்.

41 ஆக்கிடு நந்த வனங்கள்பற் பலவு மணிதிகழ் பொய்கைகள் பலவு
மாக்கிமற் றதனு ளலர்மலர் போக்கி யரும்புவிட் டப்பொழு தலரும்
பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப் பொய்யிலா மெய்யுனர் புனைதீர்
மூக்கிலும் பண்டுசென் றணைந்திடா வண்ண மூடிவாய் புனைத்துமுக் குணக்கில்.

42 அன்பகல கூடையரு துடைத்துமெய்ஞ் ஞானச் சுடர்தரு சாத்திகத் துளவா
லன்பனுர் திருப்பூக் கூடையின் முன்ன மறைந்தசீர் நறுமல ரமைத்து
முன்பினுர் கூடை யிரண்டொரு கோலின் முறையினுற் கோத்தவை காவி
யென்பெலா முருக வானந்த வாரி யிருகணு விடையறு தொழுக.

43 பங்கய வடிபோர்த் திடுந்தொறு மதனுட் பட்டபுற் பசுமைகொண் டோங்கப்
பொங்கிய சாமு மசாமு முருகப் பூமகண் மனமொடு வாக்கு
மங்கமுங் குழைய நடந்தவர் கிடந்த வச்சுதன் வடபெருங் கோயி
றங்கிய திருமா றிருவுள மூவப்ப டமலர்க் கார்பவ சமைக்கே.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

பகலொரு சாமங் கழித்தபின் ஞெளிக்கொள் பரஞ்சுடர் வடபெருங் கோயிற்
புகலருங் கருணை யிறைவனை வணங்கிப் பூமலர்க் காவினிற் புகுந்தே
யகலம துடைத்தாய் நொய்யதாய்க் கைசேர்ந் தழகுறு கொட்டவ ணெடுத்து
சகலரு மிரங்க விருசிலங் குடைந்து தட்டற நித்தியத் தலத்தில்.

## வேறு.

மருவோரு மல்லிகையுஞ் சண்பகமும் வளர்துளவுந்
திருவேலி தருதவிரு நிலாமிச்சி னெழின்மூடுங்
கருவேலை யறுத்தபிரான் கயிங்கரிய முதிர்ச்சிதருந்
திருவேர்வி லாணர்க்குக் கண்ணீரிற் சேறுசெய்தே.

வைத்தநன்னீ ருறப்பாய்ச்சி மாயனிடை மடைமாறாப்
பத்தியினோர் மடைமாற்றிப் பகற்பொழுதைக் கழித்ததற்பி
னெய்த்தநறு மலர்கொய்து திருமாலை நேயத்தாற்
பைத்தபாம் பணைக்கிடந்த பரமனுக்குச் சமைத்தளித்தே.

மங்குறோய் மணிமாட வடபெருங்கோ யிலர்தமக்குப்
பொங்குமதுப் பொழிற்காவிற் புகுந்துபணி செய்வதற்குக்
கங்குலெனத் தடைசெய்த கயிங்கரிய விரோதியைநொந்
தங்கரிடந் திருந்தாழ்வா ருணர்வதை யத்தெழுந்தே.

சீராடிக் கற்பனையா னியமத்தின் குறைமுடித்துங்
கூராழி சங்கங்கைக் கொண்டபிரான் றனைவணங்கிப்
பாரோருங் விண்ணோரும் பணிந்தேத்தப் பசுந்துளபத்
தாரேறு மெழிற்கூடை தாங்கிநந்த வனஞ்சார்ந்தும்.

## வேறு.

சிலபகல் கடத்தி னோர்ச் செயல்கண்டு புதுவை மன்னுஞ்
புலவர்க ளிவரை வாழ்த்திப் பூங்கழ லிறைஞ்ச வன்னோர்
மலமறத் திறைக்காட் செய்யு மதியளித் தவர்பான் மாற்
நலமரு வாழி சங்க நற்பொறி நல்கி யாண்டார்.

ஏருடைத் தொண்ட ரோடு மிலங்கைசெற் றவர்க்கு
தாருடன் சமைத்து மாயன் றாளிணை வணங்கு நாளிற்
பார்முழு தாளுஞ் சீதிப் பாண்டியர் குலத்திற் கொண்டு
சீர்பெற வவனி காக்குஞ் சீவல தேவ னென்றோர்.

தென்னவன் மதுரை மன்னனிச் சிறந்தர சாளு நாளின்
மன்னுமந் நகரி னுள்ள மாந்தர்கட் காசா லெய்து
மின்னலு மிகழுங் காண வேண்டுமென் றிராக்கா லத்துப்
பொன்னகர் வீதி யெங்கு மொருவனாய்ப் போய்மீள் போதி

52 துருநகர் காவ லாளர் செழுமணிப் பாரி போட்டு
வருபவ ரெதிரே மன்னன் மன்னவன் மறைந்தோர் நீதி
யருமறை யந்த ணாளன் றிணையோ னன் மறைய வாய்
யொருவனோர் மூசச னாகி யுற்றங்குவா பிர்ப்பாக கொட்டான

53 கட்டமெய் நீதி மன்னன் கிளரொலிப் பாரிக் காரர்
கூட்டமல் வீதி நீங்கக் குவலையந் தாங்கு மன்னை
பூட்டியவுடைவா ளோடும் புகுந்தவ னாருங் கின்றான்
மாட்டணைந் திருந்தா ரேர்கொ லிவனென மனத்தி னெண்ண

54 இருந்தமன் கிடந்தான் றன்னை யெழுப்பினீ யாவ னென்று
திருந்துமின் னாளையார் கூறத் திணையணையிற் றுயில்கொள் வே
வருந்துயில் யாவு நீங்கி மறையவ னுகு நானென்
றருந்தவன் கூற மன்ன னவனெதிர் மறைவ தானேன்.

55 வேதியர் குலத்து ளீபோல் வெறுமையுற் றிவணத் துஞ்சு
நீதியே தறைக வென்றான் மன்னவ னெறியின் றேர்ந்த
ழுதிய மறிந்த பார்ப்பா னரைப்பதென் கமலை யாடி
யாதியெம் பிரா மசேது வாடிவா னன்னாட்கே னயா

56 என்றவ னுரைப்பக் கேட்டா கிருபை முழுது மாரும்
வென்றிவேல் வேந்த னந்த வேதியன் றன்னை நோக்கி
நன்றிசேர் கதைகள் போமே னவில்கவென் றுரையப் பாரா
னென்றுநா னறியே னையா வளவொரு கிரந்த மென்றான்.

57 அந்தகதை யருளு வீரென் றருளு முவாந்த கூற
வோர் குசி ... ளனுரை ... னுரைப்ப ...
நாங்கிய மன்னர் மன்னன் சாற்றுவீர் பயனை யென்றான்
மூங்கரு மறியும் வண்ணம் மொழிந்தனன் ... சொல்

58 மாரியின் காலந் துப்பான் மறுநாள காலத் திட்டு
கூரிய விருளிற் றுய்ப்பான் கொழுந்தடாப் பகலி னீட்டின்
சீரிய விளமை தன்னின் மூப்புக்குஞ் சிறப்பா யீட்டு
மேரியல் பரனை யிம்மை தன்னிலே மறுமைக ணட்டுப்.

என்பதை ... யனை கேட்டா கிங்கிதைத் துருகி யாக
வன்பனை யட்டனொன படுகி யனைவருந் தியங்க ...
புன்புல னற்றுமே யகென் றவுப்பியப் போழ் ...
தன்பெரும் கோயில் புக்கான் றடமனை வயி ... மான்.

வேறு.

60 வந்துமனை பு ... எவர்கண மன்னை
னந்தனை னுவனைத்த பொரு ளாய்வுமெய் நூலின்
மூந்தவரு மொன்றுட னரிணைமுடி வெய்து
...

61 இருந்தன னிருந்துழி யிருட்பொழுது மாயா
வருந்துயரு மாயவெழி லாதவ னெழுந்தான்
றிருந்துநிய மத்தொழில்கள் செய்துமறை வாழ்வை,
தருந்தவர்கள் கொள்வபல தானமு மளித்தே.

62 அண்டமுக டுடுருவி யாசற நிமிர்ந்த
மண்டல விலங்குமணி வாயிலுற மன்ன
னெண்டரு திசைப்புவியின் மன்னவ ரிறைஞ்சத்
தண்டரள மார்புனுயர் தானையர் வணங்க.

63 எய்தியரி யாசனம தெய்தியிட னுற்ற
வைதிகர்க ளாசிரொடு மன்னவெழின் மன்ன
னுய்திற மறிந்திடு முபாயமவை யெண்ணிச்
செய்திற மறந்துவளர் தென்னவ னிருந்தான்.

வேறு.

64 பூங்கழற்கால் விறற்றென்னன் புக்கிருக்கு மவையின்க
ணோங்கவற்குப் புரோகிதனு மூச்சுதன்சீ ரருள்வடிவைத்
தாங்குமெழின் மனத்தினனாய்த் தத்துவனைப் பிரியாதே
யோங்குமடி யவராலும் பழவடியா னெனுமுறையில்.

65 உற்றவனாய்த் தென்னவனுக் குயிர்த்துணையா யறமன்றி
மற்றறியா நிலையானாய் மறைநாலுங் கற்றவனாய்ச்
செற்றநிலா மனத்தினனாய்ச் செல்வநம்பி யெனுநாமம்
பெற்றவனா யெதுவரினும் பேராத நிலையானாய்.

66 உளதொருவ னவன்வந்திட் டோங்கியசீர்த் தென்னவன்முன்
னளவிறந்த மகிழ்ச்சியொடு மிணைந்தருகோ ராசனத்திற்
றளவநெடு மணிமுடிமா றேத்திரம்வாக் கேத்தவஞ்சா
வளவனுக்குஞ் சேரனுக்கு மன்னவவாழ் கெனவிருந்தான்.

67 பொய்மையற்ற மறையோனைப் பூபால னுறநோக்கி
மைமையெனும் புலைச்சமைய மயக்கிடையிற் படர்தடிய
னிம்மையிலே மறுமைதனக் கியற்றுவதேப் படியென்று
மெய்மையையா னடையுநெறி செல்வநம்பி விளம்புகென்றான்.

வேறு.

68 முத்திசித் திக்கு மாறு மொழிகென மன்னன் கூற
முத்திரு மொழிகேட் டுள்ளத் தந்தண னன்பு கூர்ந்து
தத்துவ மறிய வேண்டு மன்னவர் தலைவ வென்றான்
மெய்த்திற மருள்வார் யாரென் றரசனவ் வியனைக் கேட்டான்.

படிமுழு தாளுஞ் செல்வம் பின்னுனிப் பனியென் றெண்ணி
முடிவிலாப் பேரா னந்த முத்திநீ விரும்ப லாலே
விடிவிலா மாயா கங்குல் விடியும்வீ டெய்தக் காட்டு
மடிகள்வே தாந்தம் தே ... நுள்வர்நீ யஞ்ச லென்றான்.

70 வேதிய னஞ்ச லென்ற மெய்ம்மொழி விளக்கங் கேட்டுப்
பூதல முழுது மாளும் புண்ணியன் மகிழ்ச்சி தாங்கி
யோதுமெய் வேத வாண ருறைவதெத் தலத்தி லன்னோர்
பாததா மரைக ளுன்போய்ப் பணிவனீ பகர்வா யென்ன

71 மன்னவர் பெருமான் கூற மாசறு செல்வ நம்பி
யென்னுமம் மெய்ம்மை யாள னியம்புவா னிலங்கு நீதித்
தென்னவ பூமி யெங்குந் திரிந்துநாங் காண்போ மென்று
லன்னவர் வெளிவா ராரோ ருபாயமிட் டழைப்போ மென்று

72 சென்றுநாந் தேடி யாடுந் தீர்த்தநின் னன்பி னாலே
யின்றெனி லாடி யுய்யென் றெனக்குமீண் டெய்து மாகி
லொன்றதி னுறுதி யுண்டோ வுரைத்தியவ் வுபாய மென்று
னன்றுகே ளென்று செல்வ நம்பியு நவில லுற்றான்.

73 ஆதியம் பரமன் மாயா விநோதத்தா லனந்த கோடி
நீதிகொள் சமைய மாக்கி நின்றன னதிற்று ளொன்று
யோதிய சமையத் துள்ளோ ரொன்றையொன் றுரல்வா றெ
வேதமு மவணுஞ் சொல்ல விதித்தவம் மெய்ம்மை யாளன்.

74 அத்திரு வேத நீதிச் சிரத்தினி லமரு மந்த
மெய்த்தவ னிலையைத் தாங்கும் வேதமு மறிய மாட்ட
வுத்தம குணத்தி னூனே யோங்கிய பரம சோதிச்
சித் ... ருள்பெற் றோருங் திறத்தினர் தெளியக் காண்பார்.

75 அதுவலாற் சமையத் தோர்க ளவனருட் சமையந் தன்னை
யிதுவது வாகு மென்றே யெடுத்தெடுத் தியம்பா நிற்பர்
பொருவென்பர் சிலர்க ளந்தப் பொய்ம்மையைத் தெரிக்க ம
... ாற் றோன்றி யுறையுமம் மணியோ டொத்

76 அன்றது காண வேண்டி லறைதரு வழிகே ளாக்கி
நன்றுநீ திரண்டுங் காணு நன்மையர் தன்மை போல
வின்றுநாம் பரத்தின் மேன்மை யிதுவென வறிய வேண்டி
லொன்றிய மறையோ ராகி யுரைத்தபல் சமையத் தோரும்.

77 வருகவென் றழைத்து நின்பொன் வாயிலிற் கிழியைத் தூக்கி
யருமறை முடிவில் வைகு மாதியம் பரமீ தென்னப்
பொருவறு முறையால் வென்ற புண்ணியர் கொள்க வென்று
லொருவரே யறுப்பர் வேண்டா வெனினுமவ் வுண்மை காட்

78 ஆதலா னினக்கு நீன்சி ரவனியோர் தமக்கு மன்ற
வோதுமிப் பரமீ தென்ன வுணர்ந்ததை யடைத லாகு
மாதவத் தோரும் வாழ்வ ரென்றனன் மறைவ லாளன்
பூதலத் திறைவ னேலை புரையறு பூமி யெங்கும்.

79 ஒன்றுகற் றோர்க ளாதி யோங்குநான் மறையு மோதிச்
சென்றதின் முடிவு கண்ட சின்மயத் தோர்க ளந்தம்
பொன்றலின் முத்தி நீதி புகலவல் லார்க ளெல்லா
நன்றிசேர் மதுரை நண்ணி நவிலுநுங் கடவுண் மேன்மை.

80 இதுவென வருளி யென்னை யிலங்குநுங் கடவு ளார்த
மதுமலர்க் கமல பாத மன்னவைத் தென்றற் கட்டும்
பொதுவுறு கிழியுங் கொண்டு புகழ்கொண்டு போவா னின்றே
கதுமெனப் புகுவீ ரென்னும் வாசகங் கழறி விட்டான்.

81 தூதுவர் கையி னீதி தொடர்ந்தவா சகங்கொ ளோலை
மாதிர மெட்டு முட்ட மன்னவன் விடுத்த பின்னைப்
பூதல முழுதுங் காணும் பொற்கிழி பொருந்தச் சேர்த்துக்
கோதறு நெறியான் மன்னுங் கோமுனை வாயி றன்னில்.

82 கட்டினன் றாத ரோலை காசினி யுள்ளோர்க் கெல்லா
மிட்டனர் தவத்து ளோரும் யாவரு மறிந்தா ரன்றே
வட்டமா மேரு வொத்த மணிமதிண் மதுரை தன்னி
லுட்டெளி வுடையா ரெல்லாந் தூதுவ ருடனே சென்றார்.

## வேறு.

83 சித்தர் புகுந்தார் தேவர் மகிழ்ந்தா
ரத்திரம் வாழ்வென மந்தணர் வந்தா
புத்த ரடைந்தார் சைவர் புகுந்தார்
மத்த முறும்மீ மாங்கிசர் வந்தார்.

84 மாயா வாதியர் வந்துபு குந்தா
ரோயா தேமது வுண்டு தமைத்
ஞயா வாமிக ளக்கணம் வந்தா
தேயா வஞ்சவை சேடியர் சென்றார்.

85 ஆசறு சாங்கிய யோக ரணைந்தார்
பாசுப தத்தவ ரும்பதி யுற்றார்
மாசில னமெனு மாவிர தத்தார்
தே... ரும்படி கூடல்செ றிந்தார்.

## வேறு.

ஆருயிர் கொல்லோ மென்னு மருகரு மதுரை சார்ந்தார்
தேருமெய் யன்பில் காளா முகவருஞ் சென்று சேர்ந்தார்
பாருறு மீன்ப மல்லாற் பரமெனல் பழுதா மென்றே
யோகூல காய தத்தோ ரெனும்வ ருடனே சென்றார்.

87 நல்லியற் கூட றன்னி லிவரிவர் நண்ணு நாளில்
வில்லிபுத் தூரின் மாயன் விட்டுணு சித்த னென்பா
னெல்லியம் பொழுதிற் றுஞ்சு மிடத்தினி லொருநா ளெய்தி
பல்லியங் கண்ணு னோக்கி யருளளித் தன்பன் மாட்டில்.

88 இருந்தவர் திருப்பேர் சொல்லி யெழுப்பினு ரெழுப்புங் காலை
யருந்தவ முடையார் துஞ்சணென் றெழுந்திருந் தருகி னோக்கக்
கருந்தட முகில்போன் மேனிக் கருணையங் கடலைக் கண்டார்
குருந்துறைந் தவனே போற்றி யெனக்குழைந் தடியில் வீழ்ந்தார்.

வேறு.

89 வையமுழு துண்டவர் பதங்களில் வணங்கி
நைவுறு மனத்தின ரெழுந்துநவை யில்லாக்
கைதலை குவித்தெழில்கொள் கண்கள்புனல் சிந்தச்
செய்திற மறந்துருகு சிந்தையரு நின்றார்.

90 நின்றநெறி யன்பனிலை கண்டுசிக ரில்லா
வொன்றுளது கேளென வுகந்திறை யுரைப்ப
மன்றல்கம ழுந்துளப மாலைபுனை மார்பா
வின்றறியும் வண்ணம தியம்பிடுக வென்றான்.

வேறு.

91 நன்னெறி மதுரை தன்னின் னூற்பெருந் திசையுங் காணத்
தென்னவன் விகாரத் தாலே திரண்டபொற் கிழியொன் றாக்கி
மின்னவிர் முடியான் றன்சீர் விளங்கிய வாச றன்னின்
முன்னுறத் தூக்கி வைத்தான் முகுந்தனூர் மதலாய் நீபோய்

92 அறுத்திவண் கொணர்வா யென்ன வச்சுத னருளிச் செய்ய
வெறுப்புடன் விருப்பொன் றில்லா விட்டுணு சித்தன் கூறுங்
கறுத்தமா முகிலே வாதில் வென்றவர் கைக்கொ ளென்றே
திறத்தினை மன்னன் வாய்மை நீணில மதனிற் றெண்டன்.

93 எதுரைத தறுப்ப னெந்தா யிருகையா லெடுத்து வெட்டு
நீதிமண் வெட்டிக் கோட்டா னிறைபெருந் தழும்பைக் காட்டி
வேதநிச் சயங்காட் டாதே விமலனே யறுக்க லாமோ
பூதல மாளு மன்னன் பொறுப்பனோ புகல்வா யென்றான்.

94 அன்பரிவ் வாறு கூற வச்சுத னவரை நோக்கித்
துன்பிலா மன்னன் கேட்ட சுருதியின் முடிவைக் காட்ட
லென்பரம் வாயி றன்னி லிலங்குபொற் கிழிகைக் கொ
ளுன்பர மேகா யென்றாங் குரைத்தி

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR, MADRAS-90

# பெரியாழ்வார் பிரபந்தம்.

பூதல முழுதி லுள்ள புலவர்கள் சபையி னுள்ளே
மாதிரம் பொருந்து திண்டோண் மன்னவர் மன்னன் முன்னே
யோதுமோ ரெழுத்தும் போகா வாத்தையே னுடலந் தா
நாதனே வெட்க மின்றி நண்ணுத னலனோ வென்றார்.

என்றிவா றுரையக் கேட்டங் கிறைபெரு முறுவல் செய்து
நன்றிகொள் வேத நான்கு நவிலுஞ்சாத் திரமோ ராறு
மின்றென துடைமை யாகு மென்னைநீ யுடைமை யானா
லொன்றுனக் கரிய துண்டோ வுத்தம குணத்தி னானே.

97 என்னமின் னவிரு நேமி யெம்பிரா னருளிச் செய்யப்
பொன்னடித் தலத்தில் வீழ்ந்து புண்ணியக் கொழுந்தே யன்னார்
தென்னவன் மதுரை தன்னிற் றிருமக ளாத வின்றே
மன்னுவான் விடைகொள் கின்றேன் வாழியென் றெழுந்து வாழ்த்தி

98 நின்றவர் தம்மை யேகு நீயென வனுப்பித் தாமுஞ்
சென்றுதங் கோயில் சேர்ந்தார் திருமறு மார்ப ரன்று
நன்றிகொள் பெரியாழ் வாரு நற்றவத் தோர்க டாங்கப்
பொன்றிகழ் சிவிகை யேறிப் பூபதி கூட னோக்கி.

99 ஏகினா ரன்பர் சூழ விமையவர் வணங்கி வாழ்த்த
மாகமீ திலங்குஞ் சோதி மதிக்குடை நிழற்றச் சீர்கொள்
பூகமார் மருத வேலிப் புதுவைமா நகர நீங்கி
மேகமே சாவா யென்னா விழிவழி யருவி சோர.

வேறு.

00 கற்குழைய மரங்குழையக் கானில்வளர் விலங்கினத்தின்
விற்குழையப் பறவைகளின் மெய்குழைய மேதினியிற்
புற்குழைய வேதாந்தப் பொருள்குழைய மெய்ஞ்ஞானச்
சொற்குழைய வேகுமவர் துலங்குவனம் பலகடந்தே.

வேறு.

01 சென்றவர் மதுரை நோக்கித் தென்றிசை வாயில்
நன்றதி னுறையுங் கூட லழகிய பெருமா டன்னை
யொன்றிய மனத்த ராகி வணங்கினா ரோவா தன்பா
னின்றிருந் தவனை நோக்கி நிலவுசித் திரம தானார்.

02 இமைத்திலர் விழிகள் வாயா லிசைத்திலர் துதிக ணின்ற
தமைச்சில கடிகைப் போது முணர்ந்திலர் தரணி தாங்குங்
கமைப்பெரு முகின்மேற் சென்ற கருத்தினைத் திருத்தி வாக்கா
லமைத்தொடர்ந் தெடுத்தாட் கொள்வீ ரென்செய்கேன் கைம்மா றெ

103 அவணகின் றாழ்வார் கூற வண்டமுண் டண்டத் துள்ளே
யுவணம தேறி வீதி யுலாவுவா ரிசைப்பா ரந்தோ
விவணமோ ரன்பா னோக்கி லிகபரத் திலதென் றெண்ணு
மவணமற் றவரே சென்றவ் வாதினை வெல்வீ ரென்றார்.

104 என்றிறை யருளிச் செய்ய விருகணீ ரருவி சோர
நின்றவ ரிருந்தார் தம்மை நீணிலத் திறைஞ்சி வாழ்த்திச்
சென்றனர் வீதி யூடே தென்னவன் செயலே தென்னிற்
குன்றென வுயர்ந்த நீதிக் கோமனை வாயி லெய்தி.

வேறு.

105 வாசம லர்த்திரு மங்கையும் வாணியு மமர மடந்தையும்
நேசமு டன்புவி மங்கையு நேர்பெற நேமி தரித்தவன்
றேசுடை வானவர் கோனெனச் செல்வநமி குந்துசி றந்தசிங்
காசன மீதிலி ருந்தன னண்டரும் விண்ணவ னெருங்கினர்.

106 நன்றித ருஞ்செல்வ நம்பியு நான்மறை யாளரு மன்பருஞ்
சென்றுயர் தென்னனி ருந்ததோர் சீரிய வாசன மாடுற
வன்றரு ளெய்தவி ருந்தன ராசரு மன்னர மைச்சரு
நின்றனர் முத்திவி ரும்பினோர் நேர்பெற வந்துநி றைந்தனர்.

107 போக்குமி குத்துழல் புத்தரும் போதம கன்றவை சேட
நக்கனை நம்பிய சைவரு நன்றிகொள் சாங்கிய யோகரு
தொக்குல காயுத வீணருந் துன்புறு மாவிர தத்தரு
மெக்கரு மத்தினு மையுற வேயுறு மாற்கரு மெய்தினார்.

108 மாயைத ரும்பெரு வாதரும் வஞ்சம்வி டாவரு கோர்களு
ரய்வுறு வாமியர் கூட்டமு மாதிய வாதிய ரெய்தினா
ரயுறு மவ்வவை யின்கணே யேழுல குண்டவர் தொண்ட[illegible]
தூயது யத்தைவி ளக்கியு சுந்தர வந்தணர் தோன்றினார்.

109 தோன்றிய வன்பரை நோக்கினன் றேமறு வார்செல்வ நம்பியு
[illegible]ண்டவர் தொண்டனோ ரெய்தின ரென்றுமொ ழிந்திட
வூன்றுமெய் யன்பின்மன் னோக்கின னுத்தம னார்வண மாயனைத்
தோன்றினர் தென்னவன் கண்கணோர் துண்ணென வோடி யெ

வேறு.

110 எழுந்திருந்த வீறர்தென்னன் செல்வநம்பி யுடனேஇச்
செழுந்தவனை யடிவணங்கிச் சீரியநான் மறைக்குமொரு
கொழுந்தென்னத் திருவுருவங் கொண்டபெரி யாழ்வாரு
விழுந்திறைஞ்சு மன்பர்களை விரைந்தெடுத்தா சீர்வதிப்ப.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

1 கொடியகொடு வினைக்கீடாய்க் கூற்றுவன்கைப் பட்டுழலு
மடியனேற் கருணல்கி யாளவந்த திருவுருவோ
படிமீதின் மாமாயை பாறவந்த பரஞ்சோதி
வடிவிதுவோ வெனமன்னன் மகிழ்ந்துரைத்தாங் குடன்கொடுபோ

சீரியசிங் காதனத்திற் றேவவினி திருத்தியென்று
னேரியனான் மறைவல்லா ரெழிலரியா சனத்திருந்தார்
கூரியமெய் யறிவில்லா வாதியர்கள் குழாத்திடையிற்
றேரிலுறு மிரவியெனச் சென்றவர்தே வர்கள்கண்டார்.

வாசவனு மதுகண்டு மற்றிவனாற் றென்னவனம்
ஈசனடி யறிந்தடைவ னிவையுலைக்க வேண்டுமெனத்
தேசுபொலி சுரர்குருவைச் சென்றுசிங்கா சனத்திருந்த
மாசிலான் றனைவெல்க மானுடனா யெனவிட்டான்.

இந்திரன்சொற் பணியாலே யிருநிலத்தில் வியாழகுரு
வந்துமா னிடவடிவாய் மன்னவன்முன் றோன்றினா
னெந்தநா டெவ்வூர்நீர் யாவரதை யியம்புமெனச்
சந்திரன்சீர்க் குலத்துதித்த தார்வேந்தன் மகிழ்ந்துரைப்ப.

5 பொன்னுலகாள் பவன்கூறாற் போந்தவர்சென் றங்கிருந்து
மன்னவநீ கிழிகட்டி வாதிடைநின் றவர்கொண்மி
னென்னவுரைத் தனைபார்ப்பா னேதுசெயித் தவன்றனிற்
றன்னவிழுந் தனையாதைச் செப்புதிநா னெனைச்செப்ப.

6 என்றுரைத்த வவ்வேலை யிருந்தசம யத்தவர்க
ளொன்றுபட வியாழகுரு வுடன்கூடி முடிவேந்தை
யின்றெமது முன்னாக விருநிலத்தி லிறைஞ்சுவித்த
நன்றிதீரும் வேதியரே கிழியறுக்க நாமுமென.

7 சன்னைசொல்லி யவன்பதத்திற் றாழ்ந்தமன்னை மிகவிகழத்
தென்னவனு மருகிருந்த செல்வநம்பி முகநோக்கி
யென்னையினிச் செய்வதென வியம்பியிடு மளவையினின்
மன்னவமற் றிவரவரை வெல்வர்வருந் தேலென்றான்!

8 எனவியந்து செல்வநம்பி யுரைப்பவிற வியல்வேந்தன்
மனமகிழ்ந்தாங் கினிதிருந்தான் வானவர்கோன் விடுத்
னவயல்சூழ் புதுவைநக ரச்சுதனார் விடுத்தவரும்
வினவரிய பரசமைய தர்க்கத்தின் மிகமூண்டார்.

9 பரத்துவமே தறைந்துகிழி பற்றுமென்றான் வி[illegible]முனி
விரத்திநெறி நின்றவரும் விண்டுவென்றா ரண்டர்குரு
வுர்த்துமல ரயனென்றா ரைதவண்ணர் தொண்டரவன்
சிரத்தையரன் கைக்கொடுத்த திறமறந்தா யோவென்றார்.

20 நன்றவ்வா றானாலு நாரணனன் றேபரமன்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பரென்றே கூறுதுநா
மென்றனன்வா னவர்குரவ னேழுலகு முண்டவனை
யொன்றியசீர் மனத்துள்வைத்த வுத்தமனார் நகைத்துரைப்பார்

21 அறிவிலாய் முன்புகன்ற வயன்சிரத்தை யறுத்துரைத்த
மறியமருங் கரத்தரனார் மற்றவினை போக்கியிடு
நெறியறியார் பலியிரந்து நெடுங்காலந் துயரமுற
வெறியார்பூந் துழாய்முடியெம் விண்டுவென்றே வறுதவிர்த்தா

22 இவ்வண்ண மிவர்கூற விமையவர்தங் குருவுரைக்கு
மெய்வண்ண முடைக்கால கற்பிதத்தில் விட்டதெனப்
பொய்வண்ணக் காலத்தைப் பரமென்றான் போக்கற்றான்
மைவண்ணப் பரஞ்சோதி தொண்டரிவை மறுத்துரைப்பார்.

23 காலமொரு மூன்றுமுடைக் கடவுளரார் கருத்தினிடை
மூலமுடி வறியாதாய் மொழிகவென வவன்மொழிவான்
ஞாலமிசை யிருணீக்கி நற்பொருளை விளக்குவிக்குங்
கோலவெழிற் கதிரொளியை யவன்பரமா மெனக்கொண்டே.

24 உரைத்தனனவ் வுரைகேட்ட வுத்தமனார் முறுவல்செய்து
வரைத்தடந்தோள் விறன்மன்னன் மாமுகத்தை நோக்கியிவன்
றிரைக்கடலுட் டினம்பிறந்துஞ் செத்துமுழல் கின்ற
யிரைக்குமறை காணாத பரமென்றா விசைந்திடுமோ.

25 சொல்லாயென் றனராழ்வார் தொல்லுலகங் காத்தளிக்கு
மல்லார்திண் புயத்தென்னன் மதிகெட்டா னெனவுரைத்த
கல்லாத சுரர்குருவுங் கட்டுரையற் றாங்கிருப்ப
வல்லாருந் தங்கடங்க டெய்வமெழிற் பரமென்றார்.

[illegible] செல்வநம்பி யாழ்வார்த முகநோக்கி
யிதுவேனிப் புல்லருட னெம்பெருமான் விளையாடன்
மதுவேத [illegible]தற்பொருளை மொழிந்துவெளி யிடுகவென
கருமமென வாழ்வாரங் கெதிர்ந்தவரில்.

27 சைவர்களாங் கலித்திரட்கோர் சாற்றுசிங்க வேறானோர்
பொய்யுடைய வாமிகளாம் புலையிருட்கா தவனானை
ரையமுறு புத்தர்களா மாட்டினத்துப் புலியானோர்
மையலரு கப்பஞ்சின் மாகனலா னார்பிறராம்.

28 சற்பங்க டனைமாய்க்குங் கருடனெனத் தானுசமைந்தார்
நிற்பனசெல் வனவிரங்க நேமியான் றிருத்தொண்ட
ரற்புதமென் றமரர்குழா மிறைஞ்சவா ரணத்தூர்ந்தச்
சிற்பரத்தை யலகுய்யத் தென்னவன்முன் கட்டுரைத்தா

கட்டுரையைக் கேட்டுமெண்ணோர் கனன்மெழுகாய்க் கரைந்திட
டொட்டியெர்ந்த மண்டபத்திற் றூக்கியசீர்க் கிழிதாழ
வெட்டெழுத்துக் குறைவிடமா மாழ்வார்த மிருதாளிற்
பட்டகிழி தனையறுத்துப் பாண்டியன்முன் பரிந்திட்டார்.

130 தென்னவனச் செயல்கண்டு திருவடியி லுறவீழ்ந்தான்
முன்னவனை யிகழ்ந்துரைத்த முழுமூடச் சமையத்தார்
மன்னவனு முறுவல்செய வந்தாழ்வார் பதத்திறைஞ்சப்
பொன்னகரத் திறைபணியாற் போந்தவரும் போயினரால்.

வ ரு

இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் குழாங்க ளார்ப்பப்
படிமுழு தடைய வாளும் பாண்டியன் பரிவி னோடும்
மடியனே னல்ல நீர வாளவந் தவரே யின்றிக்
கடிநகர் வலமாய் நண்ணிக் காட்சிதந் தருள்வீ ரென்றான்.

132 என்றசொற் கேட்ட போதி லீசனை நினைந்தாழ் வாரு
மொன்றதற் காமா காதென் றுரைத்தில ரொடுங்கி நின்று
சென்றெடுத் தவரை நீதித் தென்னவன் நீலக் கைக்குன்
றென்றென வுயர்ந்த யானை யெருத்தமீ துவப்போ டேற்ற

133 பூதமோ ரைந்து மேத்தப் புரையறு மறங்க ளேத்த
வேதமோர் நான்கு மேத்த விண்ணவர் குழாங்க ளேத்த
வோதுமூ வுலகு மேத்த வோங்கிரு சுடரு மேத்த
மூதறி வுடைய மன்னன் சேனைகண் முழுது மேத்த.

134 அந்தணர் குழாங்க ளேத்த வருமுனிக் கணங்க ளேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதி தோறுஞ்
சந்தனக் குழம்பு சுண்ணந் தாதவிழ் மலர்கள் சிந்தி
யிந்திர விழாவ தென்ன விறைத்தனர் மணியும் பொன்னும்.

135 மதிக்குடை நிழற்றத் தெய்வ மங்கையர் கவரி வீசக்
கதிக்குநின் றிரங்கு வோருங் காசினி யோருங் கண்டு
துதித்தெழ வேகுங் காலைச் சுடரொளிப் பரலோ கத்திற்
பதித்தபே ரருளோ டோங்கும் பரவசா னந்த நாதன்.

13 அந்தமில் பேரின் பத்தா ரடியரோ டமைந்த சோதிச்
செந்திரு மார்ப ராழ்வார் சிறந்தசீர்ப் பவனி காண
வந்தனர் கருடன் மீதின் மான்மறிக் கரனும் வையந்
தந்தநான் முகனும் போற்றத் தாமரைச் செல்வி யோடும்.

137 மண்ணெலா மனிதர் செற்ற மறையவர் மறைகள் பாட
விண்ணெலா மிமையோர் செற்ற விரிஞ்சனு மரனும் போற்ற
மண்ணலீர் நித்தர் முத்த ரணியணி நிரைப்ப வாழ்கே
கண்ணெலாங் களிப்பானை வேங்கலைங் கனிந்து போற்ற.

138 கண்டயர் பெரியாழ் வாருங் கருத்தினி லிறுமாப் பற்புங்
கொண்டிலர் கொண்டல் வண்ணன் குளிர்மதி வதனங் கண்ட
புண்டரீ கத்துள் வைகும் பூவையை மார்பிற் கண்டார்
தொண்டர்கள் குழாத்தைக் கண்டார் துணைவிழி யருவி சோர

139 கருதுவார் கருத வாடுங் கருணையங் கடலார் மேனி
மிருதுவை யிளமை தன்னை மெய்யுறு குழைவை மார்பில்
வருதிரு வருளைக் கண்டு மண்ணவர் கண்ணேறாலே
பொருவரு முருவில் மாசு புகுமெனத் துணுக்கென் றஞ்சி.

140 தன்னிரு விழிகள் சென்று சாரினும் பிழைக்கு மென்ன
முன்னுறப் பல்லாண் டென்று மொழிந்துகாப் பிட்டக் கோலப்
பின்னுறக் காண்போ மென்று பிரிந்தொரு திசையை நோக்கி
யென்னையாண் டருள்வார் பல்லாண் டெனுந்திருப் பதிகந் த

141 ஆனைமே லிலங்கப் போட்ட வணிமணி தாள மாகத்
தேனையுந் தலங்க லான்றன் சேவடி செவ்வி மார்பிற்
கானையுந் தளத வல்லி கதிரொளித் திகிரி சங்க
மேனைய பிறவுங் காப்பென் றிசைத்தன ரிசைத்த பின்னர்.

142 நோக்கினர் திருக்கோ லத்தை நேரற்றநோன் புடைய வன்பர்
வாக்கொடு மனமுங் கண்ணும் வள்ளற னுருவிற் பாயக்
கோக்கிளர் மதுரை யுள்ளோர் மன்னவன் கோதி லாத
பாக்கியச் செல்வ நம்பி யெனுமவர் பலருங் காண.

வேறு.

143 உளங்கருணைச் சடகோப ருரைத்ததிரு வாய்மொழியில்
விளங்கியசீர் நெறிப்படியே விமலனருட் கருடன்மிசைக்
கிளர்ந்துபிர மன்சிவனென் றிவர்வணங்கக் கிளரொளியா
ளனந்தெவரு மறிவரிய வச்சுதனார் வீற்றிருந்தார்.

144 அவ்வண்ணம் வீற்றிருந்த வருளுருவை யாழ்வார்கண்
டெவ்வண்ணத் தவஞ்செய்தேன் யானந்தோ வெனவழு
மவ்வண்ண மிலாதவரு மலர்க்கரங்கள் சிரங்குவித்து
மைவண்ணப் பரனேகைம் மாறில்லே னெனவாழ்த்தி.

145 காராருந் திருவுருவின் கருணையினு லுளமழிந்திட்
டாராத காதலினு ரனுபவமுள் ளடங்காதே
கூராழி சங்கேந்துங் கொண்டலுக்குப் பாமாலை
சீராருஞ் சொற்றமிழாற் பாடவென்று சிந்தைசெய்தே.

மச்சமுதல் கற்கிவரை மண்ணிடையில் வந்துதித்த
வச்சுதனார் திருவுருவி லாயர்மனை வளர்ந்தவர்த
மெச்சதிருக் கலியாண குணங்களுமெய் விளங்கியசீர்ப்
பச்சைமயிற் யாவுகளும் பருவத்தின் ...

147 பாவொன் சிந்தித்தும் பரிவோடு மிகுந்திருந்தார்
குடிவொ னினைந்தனரத் தோமில்லார் தஞ்சிரத்திற்
றேவொர் தேடநின்ற திருமாலிசீ ரடிவைத்தா
ளுடிஞர் வானவர்கண் மண்ணவர்க ளதிசயித்தார்.

148 சைவர்முதற் சமையத்தார் தத்தமக்காங கடவுளரைக்
கைவிட்டா ரிங்கில்லா ரங்கில்லை யெனுமகருத்தான்
மெய்வைத்தார் திருமாலிசீ ரடியார்தம் விரைமலர்த்தா
ளைவுற்றான் பாண்டியனு நாரணன்சீர் நலந்தெரிந்தே.

149 நின்றனனக் காலதனு நெடுமாலுஞ் சமயிகளை
வென்றவரே யின்றுமுதல் வேதக்கோன் பட்டர்பிரா
னென்றிசைக்கு மெழிலுமை மியம்பினே மெனவியம்பிச
சென்றனர்வான் றேவருடன் றெளிவிசும்பிற் சேர்ந்தனரால்.

150 பட்டர்பிரா னாழ்வாரும் பரஞ்சோதித தடங்கடலா
மெட்டெழுத்தின் றனிநாத னேகியபின் மாகரியை
விட்டிறங்கித் தோற்றவரை வியன்மதுரை மன்னவனை
மட்டவிழ்பூந் துழாய்முடியா னடியவராய் மன்னவைத்தே.

151 மனக்கருத்து முற்றுவிப்பான் வடமதுரை பிறந்தவர்வாழ்
புனத்துளப வனஞ்சூழ்ந்த புதுவைநகா தனிற்போந்து
தினத்தினமு மருள்விளங்குந் திருப்பல்லாண டாதியாய்க்
கனத்தவருட் சென்னியோங் கத்தமாய்க் கலைதெரிந்தே.

152 நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்று நாற்பதையு
மின்னிசையா லெடுத்தோதி யேழுலகு முய்வித்தாங
கன்னவயற் புதுவாரி லளவிறந்த பலகால
மின்னுமணி முடிமாயன் றிருவடிக்கீழ் வீற்றிருந்தார்.

20764

MAHAMAHOPADHYAYA
DR U V S IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90.

20764

MAHAMAHOPADHYAYA
Dr U V S IYER LIBRARY,
BESANT NAGAR MADRAS-90.

ஸ்ரீ

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

இந்தவகை பெரியாழ்வா ரிலங்குமருள் புவிமீது
பந்தரத்துந் திசையெட்டுந தழைத்தோங்கு மந்நாளி
லெந்தைதிருக் கலிகன்றி யெழிற்குறையற் றிருநகரில்
வந்தபடி யருள்வழியால் வாழ்ந்தபடி வகுத்துரைப்பாம்.

மாயவனை வாள்வலியான் மந்திரங்கொண் டவர்திறத்தை
யாயவெனை விதித்ததெய்வந் தானேமற் றடியேனே
பேயரென வறியகிலேன் பேதையேன் பிதற்றுவதந்
தூயவனார் பெரும்புகழ்க்கோர் துகள்வருத்தத் துணிதலினால். (உ)

அருந்தமிழு நான்மறையு மந்தணரும் வீறுபெறத்
திருந்துநெறித் தொண்டரணி தேசமெங்குஞ் சிறந்தோங்க
விருந்தருந்தி விதுரனுடை வின்முழிப்பித் தவரருளா
லிருங்குறைய லூர்நகரின் மண்முழுது மீடேற.

ஆத்திபிறை யரவணிவா ரகம்படிமைக் குடியினிடைக்
கார்த்திகைக்கார்த் திகைதன்னிற் கருணையிளங் கொழுந்தெனப்
பூத்தவுநதி யெழினமாயன் பொன்னடியை யெவ்வுலகு
மேத்தவைத்த பரகால னிருநிலத்திற் றோன்றினான். (௪)

நறுந்துளவ முடிமாயன் வயிற்றிலுல கிடைநண்ணி
யுறும்பெரிருண் மற் றவரென்னு முணர்வறியாப் பரசமயக்
குறும்பறுர மவைமாய்க்குங் கோளரியின் குருளையெனப்
பெறுந்தருமக் கொழுந்தெனப் பிள்ளைவளர்ந் திடுநாளில். (௫)

வேறு.

காம மாதிகள் கைவல மென்னும்பேய்
வாம மாதிகண் மாயவு மன்னிய
தூம னத்தர்க்குச் சொற்றெரி நீலனை
நாம மிட்டனர் நான்மறை யாளரே.

வேறு.

நமறையின் முதற்பொருளி லாய்ந்தெடுத்த பாவமிர்தாந்
நமொழிசெய் தடியவர்கள் செவிப்புலனை நிறைப்பவர்க்குக்
காயவிழிச் செய்யவாய்க் காரிகையார் களிப்பினொடு
முரியவமிர் தவையூட்டி வுலகமுண்டார் தொண்டருண்டார். (எ)

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

ஒத்தார்மிக் காரில்லா வுத்தமனார் தொண்டரந்நாள்
வத்தாவி னுளுகந்த மயிர்வினையின் குறைமுடித்துச்
சத்தாகி யுரங்கெடுத்துச் சதுமறையை யுணர்வாரு
முத்தாரைச் சொற்றமிழும் வடமொழியு முழுதுண

ஆயகலை யறுபத்து நாலுமடை வாலுணர்ந்து
தூயபரம் வெளியிடவித் தொல்லுலகிற் பிறந்தவனை
வேயமர்தோட் பின்னைகோன் விளையாட்டுக் கொளவேண்டி
மாயையைவிட் டவர்தம்மை யறியாத வகைமறைத்தான்.

உரமொத்த திருநாத னருளால்வந் துதித்தவருஞ்
சிரமத்தின் றெழில்பயின்றார் செகத்திலிவ ருடனெதிர்ந்தார்
விரமற்று ராயுதத்தான் மிகுதிறலுங் கைக்கொண்டார்
பரமத்தர் சரணென்னப் பாதுகைக்கீழ் விழவளர்ந்தார்.

மாமாயை வகுத்துயிரை வருத்தியுயிர் வாடல்கண்டு
தாமாவி சோர்ந்தவையைத் தவிர்க்கவெண்ணாத் தவிராதே
யேமாறி யழுதிரங்கு மெம்பெருமா னேவலிலத்
தேமாலை மார்பினரைச் செறிந்ததுதன் சிக்கனவால்.

கற்றின்ப வீடுகண்டு கலைதெரிந்த திருமடலாஞ்
சொற்றமிழான் மாமாலைத் துணையாகத் துணிபவர்தா
முற்றபெரு மாமாயை யுடையவனை யூட்டுதலாற்
சிற்றின்பப் பெருங்கடலிற் செறிந்தாழுஞ் சோதித்தார்.

## வேறு.

திருவய தொருபத் தாறிற் செங்கணா யகனார் தொண்ட
ரரிவையர் தங்கட் கின்ப மருளுமன் மதனு மாகி
யொருபொழு தகலா நீதி யுடையமா மாத ரோடு
வருபகல் பலவு மன்னி வளருநா ளொருநாண் மாயன்.

இனிதமர்ந் துறையு நீதி யெழிற்றிரு வாலி
புனிதநீர்ப் பொய்கை சூழ்ந்த பூம்பொழிற் [illegible]
னளிமறை யந்த ணாள னொருவனோ டோறும் வைகித்
தனியிருந் தகத்தி னுள்ளே தரணியுண் டுமிழ்ந்தார்க் கன்பாய்

பூசனை யியற்றி யன்பிற் போதுவா ரந்நா ளந்த
மாசறு பொய்கை தன்னில் வானவூர் மங்கை மார்க
ளாசறு விமானத் தேறி யகன்புன லாடிப் பூக்கொய்
தீசன் தாலி நோக்கி யிட்டுவா னெய்து வார்கள்.

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

அப்படிப் பலநா ளெய்து மரிவையர் தம்மை யோர்நாட்
செப்பமார் மறைவ லாளன் றிருக்கணைத் திறந்து கண்டா
னொப்பிலா மங்கை மார்கள் யாவரு முயர்தே ரேறி
யிப்படி விட்டு வான்சென் றெய்தின ரிமையா முன்னம்.

ஆங்கதி,லொருத்தி பூவுக் ககன்றவ ளவரைக் காணா
ளேங்கினாள் பதைத்தா டேடி யெங்கணுந் திரிந்து வாடித்
தாங்கிய தவத்தோ டோங்குஞ் சதுமறை யவனைக் கேட்பப்
பூங்குழ லார்கள் போனார் பூவைநீ யஞ்ச லென்றான்.

போயினா ரவர்க ளென்ற பொழுதினின் மறையோன் றன்னை
யாயிழை வணங்கி நானும் புதல்வியா மையா வென்னைத்
தூயநின் மனையிற் கொண்டு போகுதி தொடர்வே னென்றாள்
வேயமர் தோளி தன்னை வேதிய னுடன்கொண் டேகி.

தன்னகம் புகுதான் வஞ்சத் தரணியோர் தங்கட் கஞ்சிப்
பன்னகப் பாயன் மேவும் பரஞ்சுட ராலி நாதன்
பொன்னகம் படியா ராகிப் புனிதன்முன் னிருத்தஞ் செய்து
முன்னகம் விளங்க வாழு முதற்குடி யாரி லோர்பெண்.

பொருளினா லுயர்ந்தாள் கண்ணோர் புத்திரி யின்மை யாலே
யருளுடை யவர்க்குத் தற்பி னுடல்பா டற்கா ளின்றி
யிருளுறு மனத்த ளாகி யிரப்பக லிரங்கு வாள்பாற்
றெருளுறு மறையோ னம்மா மயிலொடுஞ் சென்று புக்கான்.

தெய்வவான் விளக்கி னோடச் சேயிழை தன்பா லன்...
லைவகைப் புலனை வென்ற வந்தண னணையக் கண்டு
மையமர் கண்ணா ளந்த மறையவன் கழலில் வீழ்ந்து
கையுமன் புடைய ளாகி நங்கையு மெழுந்து நின்றா...

நின்றவத் தையலாளை நிகரிலா மறையோ னோக்கி
யின்றனக் கிவளை யீந்தே னிரங்கலை புதல்வி யாக
நன்றிசேர் தவத்திற் பெற்றே னிவ டாதை யாகு
மென்றுரைத் தவனுந் தன்பா லெய்திய வாறு கூறி.

வேதியன் போனான் றெய்வ விளக்கினை யுகந்து நாளு
நீதிகொண் மடவா ளாவி யாமென நினைவாற் பேணி
யூதிய மிவளா லெய்து முலகுக்கு மெமக்கு மென்றப்
போதினா ளனையா டன்னைப் பொதுவற வளர்க்கு நாளில்.

மண்ணிடை மங்கை மார்க்கும் வளரொளி யிளமை மாறா
விண்ணியன் மங்கை மார்க்கும் வெயின்மணி நாக லோகத்
தெண்ணரு மங்கை மார்க்கு நாயக மிவளென் றெண்ணும்
பெண்மணியினைக் குமுத வல்லி யென்பதோர் பெயரு மிட்டார்.

ஆடகச் செம்பொ னாலே யமரர்நாட் டணங்கி னாளைப்
பாடகஞ் சிலம்ப தாதிப் பணிவலை பலவும் பூட்டி
யேடவிழ் துளபத் தாரா னிணையடி தொழுவித் தாங்கே
நாடகம் பயிலும் வண்ண நாடகச் சாலை சேர்த்தார். (உ

தேமல ரிருந்த வேதன் சிந்தையாற் படைத்த தெய்வத
தாமநீள் குழலாண் மஞ்ஞை வெருவுறுஞ் சாயல் கண்டாங்
கோமெனு மெழுத்தை யுன்னி யொடுங்கிய முனிவோர் தாமுங்
காமனும் பணிசெய் தேத்தக் காரிகை வளரு நாளில். (உ

வையக முழுது மாளு மன்னவர் பலருங் கேட்டத்
தெய்வமா மடந்தை தன்னைத் திருக்கலி யாணஞ் செய்ய
வெய்துமோ நமக்கென் றெண்ணி யாவரு மிரங்கு நாளிற்
பொய்யறு குறைய லூர்வாழ் புண்ணிய ரதனைக் கேட்டார். (உ

கேட்டவப் பொழுதே தாமுங் கிளர்ந்தெழு தோழன் மார்தங்
கூட்டமோ டெழுந்து மேன்மை குலவுபொற் சிவிகை யேறி
யோட்டரிற் கடிதி னெய்தி யுத்தம ராலி நண்ணி
யீட்டுபஃ றவத்தி னாளைக் காண்பதெவ் விடத்தென் றெண்ணி. (உ

ஓரிடத் திருந்து தாந்த மொற்றரை யழைத்து நீர்போ
யாரிடத் திருந்தா ளந்த வணங்கினை டன்னை நோக்கி
யேருடை யெழிலை நோக்கி யெனக்கிவ ணுரைபபீ ரென்னச்
சீர்பெற வனுப்பி விட்டார் சென்றவர் பதியைச் சேர்ந்தார். (உ

அன்றவர் மனையிற் காணா தகன்றுநா டகசா லைக்கே
சென்றனர் கண்டி லார்க டிகைத்தனர் பள்ளிக் கூடத்
தென்றதை நாடிச் சென்றோ ரெழின்மணி மாடத் துமபர்
மன்றல்சேர் குழலி னார்கள் குழாத்திடை மயிலைக் கண்டார். (ரு

மாந்தளிர் மேனி வாய்ந்த வடிவகிர் விழிச்செவ் வாயா
ளேந்திள முலையாள் கீதம் பயிலுமின் னிசையாள் சேரப்
பாந்தளி னல்கு லாள்செம் பஞ்சனை பதத்தாள் கான்சேர்
காந்தளங் கரங்க ளேந்தும் வீணையே ழிசையுங் காட்ட. ரு

இருந்தவள் செயலைச் சென்ற தூதுவ ரிசையக் கண்டெம்
மருந்தனைப் பரகா லற்கே யாக்குமின் னமிர்த மாமிவ்
விருந்துணை வந்தார் தம்மை விரைவினிற் கொணர்வோ மென்னப்
பொருந்திய காத லார்பாற் போயிவை புகல லுற்றார். (ரு

எந்தையா ___த் தேடி யெழுநிலை ம___ தன்னி
லிந்தமா நிலத்தின் மாதரேத்துநான் முகன்றொடாது
சிந்தையால் விதித்த தெய்வத் தெள்ளமு திருந்தாள் கண்டேம்
வந்துநின் னைவி யாய மடந்தையைக் காண்பா யென்றார். (ரு

தூதுவ ருரைத்த காமச் சொல்வழி மனத்தைப் போக்கி
மாதினைக் காண்போ மென்ன மன்னிய துணைவ ரோடும்
பூதநா யகற்காட் செய்யும் புண்ணியர் பொருந்து மேவல்
கோதறு குணத்தா ணம்மைக் கொள்ளுமோ வெனவுட் கொண்டு. ([illegible])

பொருக்கென வெழுந்து சென்ற புண்ணிய ரெய்து முன்னே
யருக்கன்மேல் கடலி லாழ்ந்தா னாயிழை யாலி மேவுந்
திருப்பொலி யூர்பர் நீதித் திருமுனி லாடப் போனாள்
குருக்களை யிகழ்வார் சிந்தை போன்றது குலவு மண்டம். (௫௫)

தூதுவ ரோடு சென்றத் துகளறு தலத்தி லின்ப
மாதினைக் காணா துள்ள மயங்கிமா துயர முற்று றி
ரேதினிச் செய்வ தென்ன விருந்தன ரொற்றர் தேடி
யாதியம் பரமன் கோயி லெய்தினா ளாடற் கென்றார். (௫௬)

வேறு.

அத்த லத்தி லெய்த வெண்ணி யன்ப ரோடு மேகினார்
கொத்த லர்ந்த தண்டு ழாய்மு டித்த கொண்டல் கோயிலி
லெத்த லத்து ளோரும் வந்தி றைஞ்சு முற்ற மெய்தியச்
சித்தி ரத்தி லாவி பெற்ற தெய்வ மங்கை யாடினாள். (௫௭)

கண்டு ளம்ம கிழ்ந்தி ருந்த காமு கர்க்கு முன்னுறக்
கொண்டு கொண்டல் வண்ணன் மாம ருங்கி ருந்து கோதிலா
வண்டு கிண்டு தண்டு ழாய்ம லர்ப்ப தம்வ ணங்கினார்
பண்டு கண்டி லோமி தார்கொ லென்று பாவை நாடினாள் (௫௮)

நாடி யாடு பாவை தன்னை நாடி நண்ணி யாருயிர்
வாடி யென்செய் கின்ற தென்ன மன்னி னாரவ் வேலையிற்
பாடி யாடு சிந்தி லங்கொர் பாவை யோடம் மாதினாள்
சேடி மற்றி தார்கொ லென்று செப்பி னாள்வி ருப்பினால். (௫௯)

அன்[illegible]யாடி யாடு மன்ன மோடம் மின்னனாண்
முன்பு நான றிந்தி லேனிம் முறுவல் வாண்மு கத்தரைப்
பின்ப றிந்து கொள்ள லாகு மென்று தோழி பேசனு
மென்ப றைந்து கரும மெங்க ளீசர் தொண்ட ரல்லரேல்.

என்று சிந்தை நைதன் மாறி யீச னார்மு னாடினா னாரோ,
ளன்று கண்டு கந்தி ருந்த வாலி நாத ரர்ச்சகர்
நன்று பூவை யென்று ரைத்து நற்க லன்க ணல்கினார்
முன்றி னின்ற கன்று தெய்வ முளரி மாமு கத்தினாள்.

## வேறு.

தோழியர்கள் பலர்சூழத் தும்புருநா ரதரென்ன
வேழிசையின் றிறம்பயில்வோ ரெழில்வீணை யாழ்முழவஞ்
சூழநிரைத் திரைத்துவரத் துகளறுசீர்க் கவிவாணர்
வாழியெனு முரைமுழங்க வானவர்நா டுடைமங்கை. (சஉ)

சீறடிநூ புரத்தரிகள் சிற்றிடையிற் றிடுமந்தோ
மாறியடி யிடுந்தோறும் வளர்தனத்தான் மலர்க்குழலி
லேறுமறு பதத்திரளா லெனப்பாங்கில் வருபவர்க்குக்
கூறுவது போன்றொலிப்பக் கோலமயில் பதிநோக்கி. (சங)

## வேறு.

அன்னம் வெள்கந டந்து சென்றவ ளாவி யன்னமி னூரொடும்
பொன்னி லங்கிய மாட மாளிகை மேவி யங்கொரு பூவையி
னன்ன லந்தெரி வாச கங்கொள நங்கை நண்ணின ளிங்கிருந்
தென்னை யாள்கலி கன்றி செய்ததுமென்ன தாமெனின் மின்னனாள்.

போய பின்புபு ழுங்கு நெஞ்சர்பு லம்பு நாவர்பு லம்பிமா
மாய னாரை வணங்கி னார்பின னங்கின் மேன்மனம் வைத்துநற்
றாய மாறிரு வாயி லெய்திய தோழன் மாரொடு துன்னினா
ராய காலைய னங்க னார்கணை நாலு மாக மழுத்தினார். (சரு)

அனங்க னார்கணை பாய வன்றிய வன்றி லுஞ்சிறு தென்றலுங்
கனஞ்செய் தாவிகொள் கங்கு லும்பொரு காம நோயி லழுந்தினார்
மனங்க ரைந்தொரு மண்ட பத்தினின் மன்னி யன்னம னூளெனப்
பினங்க மாநமு னார்ந்து ரைப்பவர் விம்மி யிம்மொழி பேசுவார். ()

## வேறு.

விண்ணோ ரமுதை வடித்ததினான் மேனிசெய்திம
மண்ணோ ருயிர்கவர வந்த மணிவிளக்கோ
பெண்ணோவென் னாருயிரைப் பேதித்தாள் பெற்றதிருக்
கண்ணோ திருப்பாற் கடலோ கருதேமால். (சஎ)

காரோ வறலோ விருளோ கனங்குழைதன்
சீரோதி நெற்றியிலுந் திங்களோ விண்ணை
மூரோ விரிஞ்ச னுலகோ வுறையுமிட
மாரோ் வினையிவளுக் கந்தோ வறியேமால்

பூவாளி மன்மதனார் பொற்சிலையோ நற்புருவ
மாவா திலமோ் குமிழோ வணிமூக்குத்
தேவாதி தேவர் திருவாலி நாரணர்மு
னோவாத் துயராளித்துப் போனார்க் கீணரேயால். கோ (சகூ)

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

வள்ளையோ காது வடித்த மதுரவுரை
கிள்ளையோ செவ்வாய் கிளர்கவிரோ தீவினையே
னுள்ளையே நைய வுருக்குநங்கை நித்திலமோ
கொள்ளையோ நண்பா வெனதாவி கொம்பினுக்கே.

வட்டமதி யுள்ளாய் வளராதே தேயாதே
யொட்டியொளி ரொற்றைக் கலைப்பிறைபோ லுள்வளைந்து
கெட்டேன் றிருமுகத்திற் கேசவனே யென்றுரைத்தாங்
கிட்ட திரு மண்காப்பின் றென்னாவி கவராதோ.

சீரொத்த பூகக் கழுத்திற் சிறந்திலங்கி
யாரத் தொளிவீ சமழகார் கலந்தானோ
வேரொத்த வேயா ரிணைத்தோளோ வென்னுயிரை
வாரொத்த கொங்கைகளோ மாய்த்ததறி யோமம்மா.

மின்னா ரிடையோ வுடுத்தமணி மேகலையோ
பொன்னா ருரோமக் கொழுந்தோ புறவடியோ
வன்ன நடைதானோ வணிமயிலின் சாயலோ
வென்னாவி கொண்டகன்ற தேதோ வெனவிரங்கி.

வேறு.

அங்க னொந்துகலி கன்றி சோர்வதோ ரணங்கு காரணமி தாமெனா
கங்கு னங்கையிவை கண்டு நிற்றலரி தென்று கால்விசையி னேகினா
பொங்கு தண்பரவை மன்ன னைந்துற புலம்ப லொத்தலை யலம்பிட
திங்க ளங்குறைய லூர ருக்குவினை செய்ய வந்துதய மெய்தினார்.

அமுத வெண்கதிர் பரப்பி யார்கலியி னின்றெ ழுந்தலை தலைப்படுந்
துமிதன் மீத்ற நனைந்து மீமிசை தொலைந்து நானில வணங்கினாள்
விமுத னத்தினைக ளொத்த தாமரைக ளன்றி மென்பவள வாயெ
குமுதம் வேல்விழிக ளன்ன காவிகள் குளங்க ளூடுற மலர்ந்தவா

எண்டி சைக்கணும் விளங்க விண்டல மிலங்க வந்துநிமி ரிந்துமை
கண்டு [illegible] வண்ண ருக்கினிய தொண்டர் கஞ்சமுக மங்
லுண்டு கொல்லுறவு தண்மதிக்கென வொடுங்கி னாருயிர் நடுங்கினா
ரண்டமுண்டவர்கையாழியென்னவொளிவீசியாதவனுமெய்தினான்.

வேறு.

வெய்யவ னுதித்த போதில் வெண்மதித் தழலில் வெந்தத்
தெய்வவான் மடந்தை யென்றே சிந்தைநொந் திரங்கு மன்ப
பொய்யறு நண்பரோடப் பூவையைப் பொருந்தி நானின்
றுய்வதோ ருபாய முண்டே லுரைமினீ ருரைமி னென்றார்.

ஆசறு மன்ப ரிவ்வா றறைதலு மருகி னண்ப
ரீசன தருளிற் போந்த விமையவர் வல்லி தன்னைப்
பேசிய முறையிற் பேசிப் பெருந்தனம் பெறுவார்க் கீந்தும்
மாசறு கற்பி னாளை மணவினை புரிவோ மென்றார். (௫௮)

நன்றென வவரைப் புல்லி நம்பிமீர் சென்மி னென்றா
ரன்றவர் தம்மி னல்வ ராங்கதற் கிசைந்தன் போடுஞ்
சென்றனர் தெய்வ மங்கை சேடியர் மனையைச் சேர்ந்தும்
மன்றல்சேர் குழலி னார்க்கு வகுத்துரைத் தவரோ டேகி. (௫௯)

கற்பக வல்லி மன்னுங் காசொளிர் மாட மெய்திப்
பற்பல வுரையுங் கூறிப் பரிவினி லிருந்த வேலை
யற்புத வணங்கைப் போற்று மன்னையும் பிதாவு மந்த
மற்புரை திரடோ ளாரை வந்தமை பகர்வீ ரென்றார். (௬௦)

ஓதுமின் வந்த வாறென் றுரைத்தலும் புவனந் தந்த
வேதியன் றாதை தொண்ட ரன்பர்கள் விளம்புந் தொல்லை
யேதமில் குறைய லூரி லெம்பிரான் பரகா லற்கிம்
மாதினை யுவந்து சார்வான் மகப்பேசி வந்தோ மென்றார். (௬௧)

படிமுழு திறைஞ்சுந் தெய்வப் பாவைபாற் புரந்த வன்பர்
குடிகுல முரைமி னென்றார் கோதில ருரைத்தா ரந்த
வடிவருக் கியாங்க ளிந்த மயிலினைத் தருவோ மென்றார்
துடியிடை யதனைக் கேட்டுத் தோழியர்க் குரைப்ப தானாள். (௬௨)

சீரிய தேவர் நாட்டிற் செனித்தவென் னலத்தை மண்ணிற்
கார்முகில் வண்ணற் காளாய்க் கசிபவர் கைக்கொ ளாதே
யாரெனைக் கொள்வார் சைவற் கன்னையு மிணங்கி னாலேல்
வாருறு கொங்கை நல்லீர் மாய்ப்பனென் னுயிரை யென்றாள். (௬௩)

கேசவ னடியார்க் கல்லாற் கிளிமொழி யிணங்கே னென்று
பேசிய வுரையைக் கேட்டுப் பேசியாண் டிருந்தார் சொல்வார்
மாசறு மயிலே யெங்கள் வள்ளலு மகிழ்வா னுங்க
ளீசனார்க் காமை யாவ ரெனவுரைத் திணக்கி மீண்டு. (௬௪)

மீண்டவர் குறைய லூரில் விமலர்பா லணைந்து கூறு
நீண்டமா லடியா ரல்லார் நீணிலத் தெவருந் நீசர்
தீண்டுமோ நீசர் தம்மைத் தெய்வவூரன் மங்கை யென்றாள்
வேண்டுகி றிருமா றொண்ட ராயிடும் விரைவி லென்றார். (௬௫)

நணத்தினி லுயர்ந்த தெய்வக் கொம்பெனை விரும்பி யென்பான்
மணத்தவி சேறு வானோன் மற்றவை யரிதோ வென்றக்
கணத்தினி லெழுந்து சென்று காம்பறத் தலைசி ரைத்துப்
பணத்தணைக் கிடந்தா ராழி சங்கமும் படர்பொற் றோளில். (௬௬)

பொறித்தபின் கேச வாதி நாமங்கள் பொருந்தச் சாத்திக்
குறித்தெழு சுண்ணஞ் சாத்திக் கோகன கத்தின் முத்தும்
வெறித்துழாய் மணியும் வெவ்வே றுகிமெய் விளங்கக் கோத்தங்
கெறித்தசீர்ச் சோதி மார்பில் யாவரு மிறைஞ்சச் சாத்தி. (சுரு)

சென்றுமெய்க் கோலத் தோடுந் திருமணம் புணர்ந்தா ரன்ப
ரன்றிவ ருருவங் கண்ட வாயிழை யாலி நாதர்க்
கின்றிவர் தெரண்ட ரானு ரிதயத்தி லவரைக் காணே
னென்றுணர்ந் தமளி நீங்கி யிருந்தன ளிருந்தா டன்னே. (சுஅ)

என்னினைந் தகன்றீ ரென்று ரெழிலுடைக் குறைய லூரர்
மின்னெனு மிடையாள் கூறும் விண்ணவர் நாட்டின் மங்கை
யிந்நிலத் தரிக்கா ளானார் பாரியா யிசைந்தாற் கூடி
நன்னலம் பொருந்து நாளும் வேறுள நவிலக் கேளீர். (சுகூ)

மண்ணவர் யாக்கை மற்றோ ரோசனைப் பரப்பின் வட்டம்
விண்ணவர் தமக்கு நாறும் விண்டுவுக் கடிமை யாகி
நண்ணிய காயத் துற்ற செடியினைக் கெடுப்பர் நல்லோர்
புண்ணிய வாளர் நீரே யத்திறம் புகலக் கேளீர். (எ0)

வேறு.

எட்டெழுத்தே தாயா யெழிற்குருவே தந்தையாய்
மட்டார் துழாயான் மலரடியை யோர்போதும்
விட்டகலா வன்பர் பிராதாவாய் வீறுடைய
சிட்டர்களோர் நூற்றெட்டுப் பேரைத் தினந்தினமும். (எக)

நன்னெறியாற் பூசித்து நாரணனி லெண்மடங்கா
யுன்னுங்கா லேற்ற முடையா ரெனவுகந்தே
யன்னவர்கள் சேட மருட்பாத நற்றீர்த்த
மென்னுமவை தானருந்தி யெய்துநா ளின்புறுநாள். (எஉ)

ஆதலா னீரு மவைசெய்து வந்தணைந்தாற்
போதெலா மென்பாற் பொருந்துநலங் கைக்கொள்ளலா
மீதெலாம் வாரா வெனிலென்பா னீர்வைத்த
காதலா லென்ன பயனென்றாள் காரிகையும். (எரு)

வேறு.

அவ்வுரை கேட்ட போதே யகன்றருட் குறைய லூரர்
செவ்விய வாலி நாதர் தொண்டரிற் சிறப்போ டோங்கி
நவ்விபோல் விழியாண் முன்ன நவிலுநூற் றெட்டு மூட்ட
வவ்விய வினைகள் விட்டார் மாமயின் மனையிற் சேர்ந்தார். (எச)

சென்றவர் தம்மைக் கண்டச் சேயிழை யெதிர்கொண் டேகி
யொன்றிய காத லோடும் பூவணை யுடனே வைகி
யன்றிலும் பெடையு மென்ன வனுபவக் கடலி லாழ்ந்து
ரென்றுமப் படியே பாக வதர்க்குமின் னமுத மூட்டி. (எடு)

மருவரு மயிலின் சாயல் வல்லிதன் சொல்லைப் பேணிப்
பொருவருங் குறைய லூர்வாழ் புண்ணியக் கொழுந்தே யுன்னு
ரருமறை முதல்வர் தொண்டர்க் கறுசுவை யடிசில் பேணித்
திருவுள மகிழ வூட்டிச் சிலபகல் செல்லு நாளில். (௬

விருந்தின ரருந்தும் வண்ணம் வேண்டிய தளிக்கின் றார்த
பெருந்தனஞ் சுருங்க வாடார் பிறருடன் கடன்கொண் டீந்தார்
பொருந்திய கடனும் பின்னைப் பூதலத் தீவா ரற்றார்
வருந்திருத் தொண்ட ருண்டி முடக்கிமான் மனையைச் சேர்ந்தார்.

அண்டமுண் டுமிழ்ந்தார் தொண்ட ரருந்துதன் முடக்கிச் சென்ற
தொண்டரைக் கண்ட போதத் தோயறு சிந்தை யன்னந்
தெண்டிரைப் பள்ளி கொண்ட தேவனை யும்மோ டிங்கே
கண்டில மென்ன வோடிக் கதவடைத் திருந்து சொல்வாள். (எஅ

பழிப்பிலா நிலையீ ருற்ற வாற்றினைப் பகர்வீ ரென்றாள்
கிழிப்படு தனமொன் றின்றிக் கேசவன் றமர்கட் கூட்ட
லொழித்தது வினையே னென்று ரோவிய மதனைக் கேட்(
வழிப்பறி பறித்து மூட்டி வருவதே கரும மென்றாள் எகூ

செழுந்தவ முடைய மங்கை திருடியு மிடுவீ ரென்ன
வெழுந்தனர் குறைய லூர ரிமைப்பினிற் பதியை யெய்தி
யுழுந்துருள் பொழுதிற் சார்வோ ருற்றவர் சம்பந் தத்தா
ரழுந்துற வாயி னரென் றனைவரும் வருக வென்றார். அ0

என்றவ ரருளிச் செய்ய வின்னுயிர் போன்றா ரெல்லாஞ்
சென்றனர் சென்றார் தம்மிற் றிருடவல் லாரை யெல்லா
மன்றறக் கூட்டிப் போகா தவர்களை யனுப்பி விட்டு
வென்றிவே லீட்டி வில்வா ளத்திரம் விளங்கு சொட்டை அக

வேறு

நேரார் தடிவளை கடிகவ ணுடனே நிமிர்கைக்கோல்
பாரார் வளையஞ் சமுதா டுடன்வாள் பத்திரமுங்
கூரா ருங்கைக் கத்தியி னோடங் குசங்குந்தஞ்
சீரா ரங்கைக் கொண்டார் சென்றார் திசைதோறும்

மேரு கிரிக்குந் தென்கட லுக்கும் மெயிலானவந்
தாரு கிரிக்கு மத்த மனத்தி லொளிமிக்கோன்
றேரு மிதிக்கு நாக மதற்குந் திகழுள்ளாம்
பாரின் மிதிக்கும் வதிவதி யெங்கும் படர்வுற்றார். (அ௩)

வஞ்சி நகர்க்கு மாமது ரைக்கும் வளர்சோழ
னெஞ்ச றவிர்க்கு நன்னக ருக்கு மிடைபோவார்
நெஞ்சு பதைக்கும் வண்ண மிலங்கு நெறியெல்லாங்
கஞ்ச முகப்பெண் மேன்மனம் வைத்தார் களைவைத்தார். (அ௪)

வேறு.

நெறிதோறு மாளிருத்தித் தாம்போயோர் நிழலிடையி
லறியார்போ லிருந்துபெண்ணோ டாண்வதியி லகப்பட்டார்
பறிபோக்கி வந்தவர்க்குப் பழஞ்சீரை கோவணங்கள்
செறியாமுன் னெதிர்கொடுத்துச் சிந்தையிடர் கெடவுரைத்து. (அ௫)

வேறு.

ஈட்டிய தனத்தி னோடு மெய்திமா றொண்டர் தம்மைக்
கூட்டிநால் விதத்தி லுண்டி கொழுங்கனி செழுந்தே னோடு
மூட்டிய சேடந் தாமு முவந்துபின் னருந்தித் தம்மைப்
பூட்டிய காத லாள்பாற் போயனு பவித்து வாழ்ந்தும். (அ௬)

ஆண்டுபற் பலவுஞ் செல்லு நாளினி லொருநா ளன்பர்
பாண்டவர் தூத னைய பரஞ்சுடர் தொண்டர் துய்ப்பான்
வேண்டுவ வளித்த லாலே விமலனார் வினோதந் தன்னாற்
பூண்டமா மாயா வல்லி பூங்கழ றொழுது போனாள். (அ௭)

மாயவன் விடுத்த மாயை மற்றவன் வாங்கு முன்னே
போயதே ழுலகு முண்ட புண்ணிய ரடியா ரான
தூயவர் தளிகைச் சேடந் துய்த்ததன் பொருட்டா லென்று
லாய்பவ ரெவரோ கண்ண னடியவர் திறத்தை யம்மா. (அ௮)

வேறு.

அந்நாளிற் றிருமங்கை யாழ்வாரு மடியவரும்
பொன்னாழி சங்கேந்தும் பூவைப்பூ வணாரருளாற்
பன்னாளும் வழிபறிக்குப் பலநெறியும் படர்வருந்
தென்னாவென் றளிமுரலுந் திருமணக்கொல் லைக்காட்டில். (அ௯)

சென்றுபெரு வழிக்கரையிற் சேவகரைத் தெரியாம
லன்றநெறி யிருமருங்கும் பதிகிடையி லாங்கமர்த்தி
யொன்றியசீர்த் திருவரசிற் றுனேறி யொற்றிருந்தார்
வென்றிவேற் பரகாலர் வழிப்பறிமேல் விருப்புடைத்தால். (௯0)

அந்நெறியிற் றிருமங்கை யாழ்வாரு மமர்ந்திருப்ப
நன்னெறிசேர் வைகுந்த நாதனுமத் திறமுணர்ந்து
மின்னென்றியுஞ் சுடராழி விளங்குநித்தர் முத்தருடன்
றன்னெறியாங் கமலையொடுந் தரணிசெறிந் தாழ்வார்க்கு. (கூக)

வேறு.

மயர்வற மதிநல மருளிநாம் வருவது நலனென வானினு
முயர்வற வுயர்நல முடையவ னுமையொரு கூறவ னாதியா
யயர்வறு மமரர்க ளடிதொழு வனவய லாலிநன் னாடருந்
துயரறு சுடரடி தொழுதெழத் தொல்லுல கதனிடை நண்ணினான். (கூஉ)

பழிப்பறு பேரருள் வாரியாம் பங்கய வாணய னத்தனார்
வழிப்பறி நல்கிய பின்னையா மந்திர நல்குதல் வண்மைசீர்
மொழிப்படு மின்னிசை பாடுவார்க் கென்று முரண்டரு மாயையின்
சுழிப்படு மானிடர் தம்மிலோர் சுந்தர வேதிய ராயினார். (கூங)

செங்கம லத்துறை செல்வியுஞ் சீரிய வேதியர் மங்கையா
யங்கவர் தம்மொட மர்ந்தன ளண்டரு மண்டர்க ளாயினார்
சங்கர னும்முமை மாதொடுஞ் சங்கம ரூபம தாயினா
னங்கம லத்தய னாருடன் வாசவ னும்மனு வாயினான் (கூச)

நித்தரு மந்தண ராயினார் நேமிய ருட்பத மெய்திய
முத்தரு மவ்வண மாயினார் மூவுல குண்டவர் தாடொழுஞ்
சித்தரு மாமுனி வோர்களுஞ் சீர்வணி கத்திர ளாயினா
ரத்தனு மாங்கவர் தம்முட னாசறு மோர்வனு மெய்தினான். (கூரு)

எய்திய வீசனு மன்பரோ டின்புற வோருரை கூறுவான்
வைதிக மாமண வாளனாய் மாதொடு பின்வரு கின்றனன்,
செய்திற முன்னிய வானுளீர் சீரிய தோர்நெறி யின்கணே
மைதிகழ் கண்ணியர் தம்மொடு மங்கையர் கோன்முன மேகுமின்.. (கூசா)

வேறு.

என்றுரைத்தா னருணாத னிலமையவல்லி தன்மணுடபமை
சென்றனன்முன் சங்கமரிற் றிலதமென மாதினொடு
மன்றுதிரு வரசின்மே லிருந்தருளு மாழ்வாரு
மின்றிவர்க டனங்கொளலா மெனவிறங்கி நெறியணைந்தார். (கூஎ)

திருமங்கை யாழ்வாருந் திருவரசை விட்டிறங்கு
விருமருங்கும் பதிகிடந்த சேவகரு மெழுந்திருந்து
பொருகங்கைச் சடையானைப் போகலைநீ யெனமறித்தார்
வருமங்கை யதில்வெருவி மறைந்தனளாங் கரனிடத்தில். (கூஅ)

20764

அப்போதவ் வுருத்திரனு மேகவுரு வாயமைய
விப்போதுன் னுடன்வந்த வேந்திழையெங் கேயதனைச்
செப்பாயென் றவர்மறுக்கத் திங்களறு கரவணிந்தங்
கெப்போது நடம்புரிவான் யாங்காணே னெனநின்றான். (கூகூ)

வேறு.

ஆய காலையி னான்முக னங்கமர்
தூய வாணிதன் னோடவண் டுன்னினா
னேய பல்கலன் கண்டதி லேகினார்
பேயொ டாடி பெயர்ந்தன னக்கணம். (௧00)

சென்று மங்கையர் கோனருட் சேவக
ரன்று நான்முகன் றன்னை யடர்த்தெடா
வின்றுன் மேனியி லிட்டுடுத் திட்டதி
லொன்று வைக்கலை போவென் றுருக்கினர். (௧0௧)

அன்னை வாணியு மஞ்சியென் னையன்மீ
ரென்னை நீர்வருத் தேன்மினென் மேனியிற்
பொன்னை யாடையைப் போட்டவிப் போதிலென்
மன்னை யும்விடு வீரென வாழ்த்தினள். (௧0௨)

ஆன வாசக மன்னமி யம்பலு
நான்மு கற்கொரு கோவண நல்கியு
மான மாரருள் வாணிக்கு மாக்கலை
தான நல்கித் தனங்களை வவ்வினர். (௧0௩)

முண்ட கத்தயன் போயபின் முத்தரு
மண்ட ருங்புகுந் தாரருள் வாரிதி
தொண்டர் மற்றவர் தொல்பொருண் முற்றவுங்
கொண்டு சேவகர் கையிற்கொ டுத்துமீ. (௧0௪)

ஏகு மின்பதிக் கென்ன வனுப்பினர்
பாக சாதன் னாதிய பத்தர்கள்
மாக மீதின் மறைந்தன ரக்கணே
தோகை மாரும் வணிகருந் துன்னினர். (௧0௫)

வேறு

அன்னவர் தம்மையு மன்பர் பறித்துத்
தன்னய னின்றவர் தம்மி லளித்தே
நன்னக ரின்க ணடப்ப வனுப்பி
யின்னமு மிங்கேறி யேகின ருண்டேல். (௧0௬)

கண்டு பறித்தவர் கைப்பொரு ளுமே
கொண்டகல் வோமென வன்பர் குறித்துப்
பண்டுறை கின்றர கின்பனை நண்ணப்
புண்டரி கத்திரு வோடரி புக்கான். கOஎ

வேறு.

திருத்திகழ் மார்ப ரன்று திருமக ளோடு மெய்த
வொருத்தரா யரசி லேறி யுறைபவ ரதனைக் கண்டு
கருத்தினில் வியந்து தாமுங் கதுமென விறங்கி வேத
குருத்தினை மறித்துக் கொண்டு கொக்கரித் தாட லுற்றார். (கOஅ

ஆடினு ராலி நாட ரங்கையுங் கொட்டிக் கொட்டி
யோடினர் வட்ட மிட்டா ருகந்ததை நோக்கி நின்று
தேடினான் மறையுங் காணுத் தேவனுந் தேவி தானும்
வாடினுர் போல நின்று மற்றவர்க் குரைப்ப தானுர். (கOகூ

வேட்டமீந் தன்னி னின்று வேதியர் விரும்பு மாலி
நாட்டக நண்ண வென்றே நண்ணினே மெம்மை நீயிக்
கார்ட்டகத் தொருவ ரில்லாக் காலத்தின் மறித்துக் கொண்டிங்
கூட்டகம் புகுந்த பேய்போற் றுள்ளலென் னுரைப்பா யென்றூர் ககO

எமைமறித் தாட லென்னீ யியம்புதி யென்னக் கேட்டு
தமைவுடைத் தாலி நாட ரருள்வரந் தணரே கேளு
முமையிவ ளோடுங் கண்ட போதிலெம் முள்ளந் துள்ளி
நமையுநா மிறந்தோ மந்த முறைமையை நவிலக் கேளீர். (கக்க

வேறு.

என்னுவி யெனத்தோன் றுங் குமுதவல்லி யென்மனைவி
புன்னுவி யென்னுமிவ ளானுமவ ளுருவொவ்வாள்
பன்னுளு நூற்றெட்டுப் பாகவதர்க் கூட்டியல்லாற்
றன்னுக மெனைத்தீண்ட வொட்டாளத் தார்குழலாள். (ககஉ)

பொன்னுளதும் பணமுளதும் பூவுடனெப் பொருளுமென்னிட
முன்னுளதுந் தொலைந்ததற்பின் வழிப்பறியின் மிகமூண்டேன்
மன்னுலகில் யானடித்துப் பறியாத வழியுமில்லை
யிந்நெறியி னீரணிந்து புகுந்தவிருந் தனங்கண்டால். (ககங

வேறு.

ஆடேன்று நானிவை விடுவேனோ வையையா
பாடேனோ நானுமை விடுவேனோ பலவட்டத்
தோடேனோ நானென் றுரைசெய்தா னுடையானு
நின் றலர்மங்கை யோடோது மபிலன்னுய். (ககச

வேறு.

பெண்டாசை தவிராமற் பெருவழியிற் போயிருந்து
கண்டாரை வழிபறிக்குங் கள்வனோ வத்தனங்கொண்
டுண்டாரோ நெறியுள்ளா ருரையாயென் றிறையுரைப்ப
வண்டார்பூங் குழலினாள் மணவாள னெடுமுரைப்பாள். (கக௫)

ஏதாயென் னன்னையெனக் கிட்டதன மத்தனையும்
போதாம லென்றந்தை பூட்டியபொற் கலன்முழுது
மூதாதை யிட்டபணி முற்றுமிவர் கொள்வரென்றே
நாதாவென் மனமறுகு நானறியே னோர்மாற்றம். (கக௬)

வேறு.

என்ற காலையி லீசனை யோங்கினர்
வென்றி வேற்பர காலரோர் வேலினா
லின்று கொன்றதி லென்பய னென்றனர்
நன்று நல்குவ னென்ன வோதினர். (கக௭)

வேலை வைத்தனர் மண்மிசை வேதமு
மோல மிட்டறி யாவொரு மூர்த்தியைக்
கோலெ டுத்தடிப் பேனெனக் கூடினர்
ஞால முண்டவ ராடையை நல்கினர். (கக௮)

வேறு.

அந்தண ராடை போட்ட வளவினி லருகு நின்ற
பந்தனை விரலி யாடை பறிக்கிலேம் பார்ப்பா னீயே
தந்தனை யமையும் விட்டோந் தையலுக் காடை மற்றவ்
விந்துவா ணுதலி யிட்ட தனங்கழித் தீவா யென்றார். (கக௯)

நல்லதென் றிறைவன் சென்று நான்மறைக் கொழுந்தே யன்ன
மெல்லிய லணிந்து நின்ற மிகுந்தபொற் கலன்கண் முற்று
மொல்லையிற் கழற்றக் கண்ட மங்கையர் கோனு மோங்கு
மல்லிய றோளாய் வாங்கேன் மங்கலி யத்தை யென்றார். (கஉ0)

பூமகள் மேனி தன்னிற் பூட்டிய தனங்கண் முற்றுந்
தேமலர்க் கையால் வாங்கிச் சீரையிற் றேவ னல்கத்
தாமரைக் கண்ண நீயுஞ் சாத்திய கலன்கண் முற்று
நாமுனைத் தீண்ட வேண்டா நல்குதி விரைவி னென்றார் (கஉக)

அப்படிச் செய்வே னென்ன வங்கையி லாழி யன்றித்
தப்பறக் கழித்தன் றீந்தான் கோவணந் தரித்து நின்று
னெப்படிக் கழிப்பே னிந்த வங்குலி யிறுகிற் றென்று
னிப்படிக் கழிப்பே னென்ன வெட்டியங் கையைப் பற்றி. (கஉஉ)

ஆழிபூண் டிலங்கு நீதி யங்குலி தன்னை நீக்கி
யேழிசை பாடும் வாயா லெடுத்துற மடுத்துப் பல்லாற்
பாழியந் தோளார் வாங்கப் பரமனங் கலிய னோவென்
றாழிவா னவரும் போற்ற வொருகையைத் தலைமேல் வைத்தான்.

திருக்கரம் வைத்த போதுந் தேவனென் றறியார் தொண்டர்
பொருக்கென நெறியை விட்டுப் போவதே கரும மென்ன
விருக்கர னயனுங் காணு விறைவனூர் துகிலிற் கூட்டிப்
பெருக்குபல் கலனுங் கட்டி யெடுத்தனர் பெலத்தி னோடும். (கஉச

சுந்தரத் தோளு ளூரத் துகிலிடைத் தனத்தை யேந்த
வந்தரத் தெழுந்தி டாமை கண்டரு ளாலி நாடர்
மந்திர வாதம் பண்ணி வைத்தனை கொல்லோ வென்று
ரிந்திரன் பகையை மாய்த்தான் யானது செய்தே னென்றான். (கஉரு

நன்றதை யெனக்கு மிப்போ நல்குதி நல்கா யாகில்
வென்றிசேர் வாளா லுன்னை வெட்டுவே னென்று நீங்கி
யொன்றிய தடக்கை வாளை யுருவினு ரோங்கக் கண்டு
மன்றல்சேர் துளவத் தாரான் வாளைவை யுரைப்பே னென்றான். (

உரையென வாளை முன்போ லுறையிடைப் பொருந்தப் பூட்டித்
தரைமிசை வைத்துச் சென்றார் தாமரைக் கையா லீச
னிரைகொள்வா னவருங் காண நின்றவர் செவியைப் பற்றிப்
பறவெழுத்தோ ரெட்டு முரைத்தனன் பூத நாதன் (கஉஎ

வேறு.

அன்று தானர னுரண னுகிமெய்
குன்றி டாதவண் கூறி யிருந்ததோ
ரொன்றும் வேதனை தீர வுரைத்தனன்
வென்றி வேற்பர காலர்க்கு விண்டுவே. (கஉஅ

வேறு.

பின்ன மற்றமுப் பதமதாய்ப் பிரமனு லரனு
லுன்னு நற்பொரு ளெந்ததா யுயிர்பர மருளாய்
வுன்ன மெட்டதா மாத்திரு மந்திரம் வாக்கா
லன்ன மூர்தியார் தாதையார் தொண்டருக் களித்தார். (கஉகூ

மின்னை யொத்தபொய் வாழ்வினை விரும்பிநின் றுலகி
லன்னை யத்தனென் றலமரு மல்லலை யறுக்கு
முன்னை நான்மறை முடிவினி லுறைமுதற் பொருளாந்
தன்னை யுள்ளவர் சாற்றினன் றரணியுண் டுமிழ்ந்தான் (கங0

வேறு.

இந்திரன் போற்ற விமையவர் போற்ற விலங்குசீர் நான்முகன் போற்றச்
சந்திரன் போற்ற வாதவன் போற்றச் சங்கரன் மாதொடும் போற்ற
வந்தரத் தொளிரு நித்தரு மிறைவ னருள்பெறு முத்தரும் போற்ற
மந்திர மாழ்வார் திருச்செவி யுறலும் வையகத் தியற்கையை மறந்தார். ()

சீருறு மிறையைக் கமலையைத் தன்னைச் செறிபெரு மாயையைச் சரணத்
தேர்பெறு நெறியைப் யின்பவீ டதனை யின்னுயிர் பெறும்பெரு வாழ்வை
யோரெழுத் திடையே கண்டுநற் றெண்ட ருலையின்வாய்மெழுகென வுருகிப்
பார்மிசை விழுந்து வணங்கின ரணங்கும் ப்ரமனும்படர்விசும்பமைந்தார்

வானிடைக் கருடன் றோண்மிசைத் தோன்றி வளரொளி யாழிசங் கேந்து
மோனரு முத்தர் நித்தரும் வணங்க முனரியு ளபனரன் வணங்கத்
தேனமர் துளவத் தாரினு னின்ற சீர்பெறப் படிமிசைப் பணிந்தார்
தானெழுந்தவரைநோக்கினர் காணார்விசும்பிடைத்தமர்தொழக்கண்டார்.

வேறு.

கண்டனர் விழிக ளாரக் கனகமா மேரு மீதிற்
கொண்டல்வீற் றிருந்தா லென்னக் கொழுஞ்சுடர்க் கருடன் றோண்மே
லண்டமுண் டுமிழ்ந்த சோதி யமுதனைத் திருவி னோடுந்
தண்டுழாய் மாலை யானை சரணெனப் பின்னும் வீழ்ந்தார். (கஙச)

பண்ணுறப் பணிவர் வாயால் வாழ்த்துவ ரழிவர் சோர்வர்
விண்ணுறப் பார்ப்பர் நீதி மெய்யருட் கடலைத் தாந்தங்
கண்ணுற முகப்ப ராடிக் களிப்பர்கை கொட்டி யார்ப்ப
ரெண்ணுவர் செய்த தன்மை யிருப்பர்பின் னெழுவர் சொல்வார். (கஙரு)

நாயினேற் காக மண்ணி னுண்மலர் மங்கை யோடுந்
தூயநின் பத்த ரோடுந் தொன்னெறி யடைந்து நின்ற
மாயனே யுனையெண் ணாதே வழிப்பறி பறித்தே னந்தோ
வேயமர் கோளி யிட்ட கலனையும் வேண்டி னேனே. (கஙசா)

முடிதத வான வானோர் போற்று முளரியங் கண்ண வுன்னை
யடிப்பதற் கொருப்பட் டேனே யடியனே னந்தோ வென்பர்
துடிக்கெதி ரிடையா ளஞ்சத் துகளறு மாழி தன்னைக்
கடித்துற வூக்கை வாயால் வாங்கினே னென் கண்ண வென்பர். (கஙஎ)

மட்டுவார் துழாயி னானே மதியிலே னுனையும் வாளால்
வெட்டுவா னொருப்பட் டேனே வினையுறு புலைய னேனுந்
தொட்டுவான் றடக்கை பற்றித் துலங்குசீ ராழி கொண்டேன்
முட்டுவன் சிரத்தைக் கல்லின் முடிப்பனென் னுயிரை யென்பர். (கங

என்றபற் பலவுஞ் சொல்லி யிரங்கினின் றழுது சோரும்
வென்றிவேற் பரகா லர்க்கு விமலனு ருரைப்ப ராழ்வீ
ரொன்றுநீ ரிரங்க வேண்டா முமைவினை யாட்கொண் டிங்
கின்றுநான் பெற்ற வின்பம் யாவரே பெறுவார் மண்ணில். (கஙகூ)

சீருறு புதல்வ ரற்றார் செய்தவஞ் செய்து பெற்றா
லேர்பெறு மதலை சொல்லு மின்சொலுக் கின்பு றாதே
யாரதை யிகழ்வ ராழ்வீ ரத்திற மன்றோ வின்று
நீரெனிற் செய்த வெல்லா மென்றுபின் னிமலன் கூறும். (கசO)

வேறு.

பூமாதுங் காண வாழி பூட்டுமென் விரலை நீரு
மாமாறும் வாயி லிட்டாங் கதுக்குநீ ரதனை மோந்தேம்
பாமாலை மணத்த தின்று பாடுமென் புகழைப் பாடித்
தேமாலை மார்ப ரேநந் திருவரங் கத்தை யுன்னி. (கசக)

எனையுமக் குறவாய்க் கூட்டு மேந்திழை குமுத வல்லி
தனையுமெப் போதும் போலத் தாரமா யுவந்து கொண்டு
கனைகடல் சூழ்ந்த மண்ணிற் கண்டவர் தனங்கள் வவ்வி
நினைவிலென் பணிகள் செய்து நின்றுவீ டடைவீ ரென்றான். (கசஉ)

இன்றுமை யுடனே கொண்டென் னின்பவீ டடைவே னும்மாற்
பொன்றிகழ் புவியோ ருய்யும் பொருட்டினாற் புவியிற் போந்தீர்
நன்றிசேர் பாட்டி னாலிந் நானில முய்யு மாழ்வீ
ரொன்றுநீர் சலிக்க வேண்டா மேகுமென் றுரைத்துப் போனான். (கசங)

வேறு.

உருத்திரனு நான்முகனு மும்பர்களு மடிவருட
வருத்திசெய்து திருவருளுந் தனதருளு மாழ்வார்சீர்
கருத்தினுறப் பதிவித்துக் கருடன்மிசை நித்தர்தொழத்
திருத்திகழ்பூந் திருமார்பன் வைகுண்டஞ் சென்றடைந்தான். (கசச)

வேறு.

விண்ணிற் றோன்றி யருள்செய்து விமலனேக வவ்வுருவை
நண்ணி யெங்கே காண்பேனென் றிருந்து வருந்தி யெழுந்தவரிம்
மண்ணி னூற்றா றென்றுமறை வகுத்த பதிகள் வளமோங்க
நண்ணி யுறையுந் திருக்கோலங் கண்டு தீர்வே னெனென்ன. (கசரு)

வேறு

மன்றல்கமழ் பசுந்துளப மாமாலைப் பதிதோறுஞ்
சென்றிறைஞ்சிப் பரகாலர் திருவருள்பெற் றனுபவத்தி
லொன்றியசீ ரானந்தச் சுகோததியுள் ளடங்காமற்
குன்றாநற் பாமாலை கூறுதற்கே யொருப்பட்டார். (கசசு)

வேறு

சார் பெரிய திருமொழியுந் திருத்தாண் டகங்க ளோரிரண்டு
மேரா ரெழுகூற்றிருக்கைதிரு மடலோ ரிரண்டு மின்னிசையாற்
பாரோ ரேத்து மாறங்கம் பரிவாற் பாடிப் பரகாலர்
நாரா யணன்மெய்ப் புகழ்விளக்கி ஞால முழுதும் வாழ்வித்தார். (கசஎ)

வேறு.

பேசரிய பிரபந்த மிருமூன்றும் பிறப்பித்து
மாசிலாக் குமுதவல்லி தன்னொடுமா மாயன்வளர்
தேசுபொலி திருவரங்கஞ் சென்றடைந்தா ரதிலிருந்தாங்
கீசனுக்குக் கைங்கரிய மியற்றுதற்கே யொருப்பட்டு. (கசஅ)

சீராருந் திருவரங்க நகருறையுந் திருத்தொண்ட
ரோருந் திருமங்கை யாழ்வாரை யெதிர்கொண்டு
பாராரப் பணிந்தனரப் பாகவதர் பதங்களினு
மாராத காதலொடு மாழ்வாரு முறைபணிந்தார். (கசகூ)

படியுற்ற வைகுந்த மெனமறைகள் பகர்பதியின்
முடிவற்ற சுகோததியின் முழுகியெழு மன்பரொடுங்
கொடிபெற்ற மணிமாட கோபுரத்தைக் கண்ணுறலு
முடியற்ற மரம்போல விழுந்திறைஞ்சி யகங்குழைந்தார். (கரு0)

மாகனகச் செழுஞ்சோதி மணிமாடந் தனில்விசும்பின்
மேகநக மெனச்செறியும் வீதிபல கடந்தசுர
ஞகநகத் தாலிடந்த வம்மானை யரவணைமேற்
கோகனகச் செழுந்திருவோ டிறக்கண்டார் கும்பிட்டார். (கருக)

வேறு.

வையக மனைத்தும் வயிற்றிலோ ரிட்டத்தில் வைத்தந்த வயிற்றிடை யுலகிற்
பையர வணைமேல் யோகுசெய் தழகார் பங்கயக் கண்வளர் பரனைப்
பொய்யிலாமெய்யர்வணங்கினர்வணங்கிப்பூமிசைப்பணிந்தெழுந்துருகிக்
கைதலைகுவித்துக் கண்கணீர் சொரியக் கருணைவா ரிதியொடுங் களித்தார். ()

வேறு.

அப்படியே நம்பெருமா ளனுபவத்தின் மடைமாறு
வொப்பரிய பத்தியொடுங் கலிகன்றி யுடனுறைந்து
செப்பரியா னருள்செய்த திருப்பணிமே லொருப்பட்டாங்
கெப்படியே பெருந்தனம்வந் தெய்துமென [illegible]. (கருரு)

வேறு.

மன்னவர் பொருளும் பௌத்தர்கள் பொருளு மனையிருள் வல்லடிப்பொருளும்
பன்னுபன் முறியாற் கடன்படு பொருளும் பத்தரிற் பெற்றன பொருளு
முன்னுளோர் புவியிற் புதைத்தன பொருளு மூங்கைய ரந்தர் தம்பொருளுந்
தன்னுற வுடனே கவர்ந்துகொண் டணைந்து தயங்கிரு நான்கு கோபுரமும். ()

திருமதி ளிரண்டுந் திருமடைப் பளியுஞ் சிறந்தவான் மண்டபத் துடனே
பொருவற விரிந்த நெற்குறு சாலை புகலுநெற் களஞ்சியு முதலாய்க்
கருமுகில் வண்ணன் றிருவுள முவப்பக் கட்டினர் வெட்டுவான் றுணிந்து
பெறுவழித் தலையிற் றடக்கைவாள் வலியாற் பின்னைகோன் பெரும்பதம் பெற்றார். ()

சைவரை மாயா வாதியர் தம்மைப் பௌத்தரை யருகரைத் தவமில்
பொய்யரை யுலகா யதர்களை வாமப் புலையரை நிலையிலா நிலைசேர்
கையரைக் கலையால் வாக்கினு லறிவாற் கருதரு மறைமுடி வென்னு
மெய்யினால் வென்று பலபல திருப்பேர் விளம்பிட விளங்கினர் கலியர். ()

வேறு.

அப்படியே விளங்கிடுநா ளரட்டமுக்கி யருண்மாரி யடையார் சீயஞ்
செப்பரிய திருவரங்கத் தம்மானைச் சென்றிறைஞ்சி யொருநாட் செப்பு
மிப்படியி லிருவினையு மடியேற்குத் தொலைந்தவினி யிறைவா நானுன்
னொப்பரிய பரமபத மடையவிடை யருள்கவென்ன வுடையா யென்ன. ()

நின்றுரைத்து விழுந்திறைஞ்சி நெக்குருகி யன்பிலெழு நிகரி லாரைக்
குன்றெடுத்துக் கன்மாரி காத்தபிரா னருள்விழியாற் குளிர நோக்கி
யின்றுநீ கேட்டதற்கு நம்முடைய தெற்குவீ டென்னப் பட்ட
மன்றல்கமழ் பொழில்புடைசூழ் குறுங்குடியில் வருதியென்றான் மாயை வல்லான். ()

அப்பொழுதே கலிகன்றி யணியரங்கத் தம்மானை யலர்மேல் வைகுஞ்
செப்பரிய சீரங்க நாயகியார் முன்னிலையாய்ச் சென்று தாழ்ந்தி
னிப்பொழுதே சரண்புக்கே னென்றிறைஞ்சி நின்றசரா சரங்க ளேத்த
வொப்பரிய பரசமய கோளரிவந் தானென்றூங் கூறுஞ் சின்னம். (கருசு)

வேறு.

நாலிரு திசையு மண்ணு நாகர்தம் பதியு மெல்லா
மேலுயர் விசும்புங் கேட்ப விரிபொழி லரங்க நீங்கி
மாலிருஞ் சோலை நோக்கி வையக மனைத்து முண்டோ
ராலிலைக் கிடந்த மாய னின்றமெய்ந் நதனைச் சார்ந்தார். (கசுo)

வேறு.

அந்தரத்தோர் மலர்மாரி பொழிந்தேத்தி யடிபரவுஞ்
சுந்தரத்தோ ளுடையானைத் தொழுதேத்தி விடைகொண்டிங்
கிந்தமா நிலத்தோர்க்கு மிமையவர்க்கும் பல்லாண்டைத்
தந்தபிரான் கிழியறுத்த தமிழ்மதுரைப் புரஞ்சார்ந்தார். (கசுக)

பணியணைமேல் வீற்றிருந்து பட்டர்பிரான் றமிழ்க்குருகு
மணிவண்ணர் கழல்வணங்கி மன்னவனும் பின்றொடரக்
கணிகண்ணன் பின்போனான் கண்டுயிலும் புத்தூரை
நணியிறைஞ்சி வலஞ்செய்து நான்மறைக்கு மொருவித்தாம். (கசுஉ)

திருமாலை யுறவணங்கிப் பெரியாழ்வார் திருவடியை
யருகாத பேரன்பா லகங்குழைந்து பணிந்தேத்தி
மருவார்பூம் பொழிற்பொருனை வடகரைத்தண் வைகுந்தப்
பெருமானெம் மிடர்கடியும் பிரானுரைத் தொழுதேத்தி. (கசுங)

கலைபயிலுங் கலிகன்றி காசினிவேந் தைத்தொழுது
தொலைவிலிமங் கலந்தொழுது சொற்குளந்தை நகர்தொழுது
சிலையெடுத்த பிரானிருந்த திருப்பேரை நகர்தொழுது
புலையனே னுயிர்காத்தார் திருக்கோளூர் புக்கிறைஞ்சி. (கசுச)

வேறு.

குன்றம் போனு மணிமாட நீடு குருகூர் நகர்புக்கு
நின்ற வாதிப் பிரான்றன்னை நெஞ்சால் வாக்காற் காயத்தா
லன்று நினைத்துத் துதித்திறைஞ்சி யன்பால் வான மாமலையை
யின்று வணங்க வேண்டுமென வெழுந்து சென்றார் கலிகன்றி. (கசுரு)

வேறு.

ஊனமாம் பிறவி யுததியிற் கிடந்திங் குலைந்தல மந்தற மெலிந்தேன்
வானமா மலைகண் டேறினேன் வீடு மற்றெமக் கணித்தெனப் புழுதே
போனகா லங்கட் கிரங்கிய கலிய னுங்கவர் பூங்கழ லிறைஞ்சித்
தேனமாம் பொழில்சூழ் திருக்குறுங் குடிமேற் சிந்தையை விழியொடுஞ் செலுத்தி. ()

ஏறிய சவ்வை வட்டிழிந் தருளி யிருபதம் வருந்திட விரைவா
லாறுசெல் பொழுதி லழகிய நம்பி யாங்குறை பவர்க்கதை யறைய
மாறிலா வனைத்துக் கொத்தும்வந் தெதிர்கொண் டேத்திட மற்றவருடனே
சேறுசெய் குளனூர் கழனிகள் புடைசூழ் திருக்குறுங் குடியினுட் செறிந்தார். (கசுஎ)

திருக்குறுங் குடியிற் செறிந்தமெய்ஞ் ஞானி செழுந்தவரெழுந்தடிவணங்கி
யிருக்கொலிமுழங்குநகர்வலஞ்செய்தாங்கிமையவர் முறைமுறையிறைஞ்ச
விருப்புடன் றிருப்பாற் கடற்புனல் படிந்து மெய்யுறும் பன்னிரு நாமங்
கருத்துற வணிந்து திருமணு மஞ்சட் காப்புடன் கோப்புற வணிந்தே. ()

எண்ணருந் துயத்தை வாக்கினிற் றரித்தாங் கிதயதா மரைமலர் மிசையிற்
கண்ணனைத் திருமா மகளொடு மிருத்திக் கருணையா னந்தநீர் சொரிய
மண்ணவ ரிறைஞ்ச நடந்தவர் தொடர்ந்த வானவ ருலகினு முயரும்
விண்ணளா வோங்கி யிலங்குகோ புரத்தைக் குறுகினர் விரிஞ்சனுந் துதிப்ப.

திரண்டவா னவரு முனிவருந் துதிப்பத் திகழொளிக் கோபுரங் கடந்திங்
கிரண்டுதோ ளகற்றி நான்குதோ ளாகி யிங்கு மிறைதிருக் கோயிலிற் குடபாற்
கரண்டமாடியசீர்ப்பொய்கையின்புடைசூழ்கரும்பணைப்பெரும்பழமுலைந்து
புரண்டுவீழ்வதுவும்வாளைபாய் வதுவு நோக்கினர் புலவர்கள் பெருமான்.

அத்திறங் கண்டு திருவுள முவந்த வாலிநா டுடையவா ரமுத
மித்திருப் பதிநே ரித்திருப் பதியுண் டிருநிலத் தென்றுநின் றியம்பிப்
பத்தருந் துதிப்ப வலஞ்செய்தாங் கிரந்து பக்கநின் றவர்திற நோக்கிச்
சித்தர்மாமுனிவரிறைஞ்சிடக்கிடந்தசெங்கணாயகன்முனஞ்செறிந்தார். ()

சென்றவர் கிடந்த நம்பியை வணங்கித் திருமகள் பூமியோ டிலங்குங்
குன்றென விருந்த நம்பியைப் பணிந்து கோதிலா வேதங்கள் புகழ
நின்றநம் பியையுஞ் சென்றடி பணிந்தோர் நிலவுசித் திரமென நின்றாங்
கின்றெனக் குரைத்த வின்பவீ டருள்வா யெந்தையென் றிணையடி பிடித்தார். (கஎஉ

ஆங்கவர் தம்மை யன்பொடு நோக்கி யழகிய நம்பியன் றருளு
மோங்குநம் மேலை வீடினைக் களிக்கோ மேகுதி யொன்றுவந் தருளிப்
பாங்குடன் சிரத்திற் றிருவடி யிரண்டும் பதித்தனன் பக்தரப் பொழுதே
தேங்குநீர் விரசைத் திருநதிப் புனலிற் செறிந்துற வாடியக் கரைமேல். (கஎங)

தூய்யமாப் பளிங்கு நிறத்தமா னவனுஞ் சுடர்விடு சோதியீ ரிரண்டாங்
கைகளாற் றீண்டிப் பரிசனஞ் செய்யக் கடுப்பினிலொளிக்கொண்டசோதி
மெய்யெடுத் தேகி முத்தியை யடைந்து விளங்குசீ ராலிநா டுடையார்
செய்யவள் கொழுந னடியரோ டிருந்த மாமணி மண்டபஞ் செறிந்தார். (கஎச)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

20764

MAHAMAH... LIBRARY
BESANT NAGAR MADRAS

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வடிவழகியநம்பிதாஸர்

இயற்றிய

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

மகா-ா-ஸ்ரீ

பள்ளிப்பட்டு: தேவநாயகரெட்டியாரவர்கள் குமார

மகா-ா-ஸ்ரீ

வேங்கடரங்க ரெட்டியாரவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர், P. R. கிருஷ்ணமாசாரியரால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908

(Copy Right)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வடிவழகியநம்பிதாஸ

இயற்றிய

# திருமழிசைப்பிரானாழ்வா

# பிரபந்தம்.

மகா-ள-ஸ்ரீ

ட்டு: தேவநாயகரெட்டியாரவர்கள் குமார

மகா-ள-ஸ்ரீ

ங்கடரங்க ரெட்டியாரவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர், P. R. கிருஷ்ணமாசாரியரால்

20764
(72-23)

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

(Copy Right

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

குறையலூராப் பரகாலர் கோதில்பெரும் புகழ்விரிவை
யிறைவெளியிட் டடியேன்பா லிருந்தறைந்த படியியம்பி
மறையாய்ந்த திருமழிசைப் பிரானார்மாப் புகழுமந்த
முறையாலே பகர்வனல்லோ முனியாது கொளல்வேண்டும் (க)

அப்படியே சிலநாள்க ளற்றதற்பி னங்கொருநா
ளொப்பரிய பாரக்கவனே முதலாக வுளமுனிவ
ரிப்படியிற் றிருமகள்கோ னின்பமுறக் கமலையொடு
மெப்பொழுதும் பிரியாம லினிதமரு மிடம்பலவும். (உ)

உண்டெனினு மோரிடத்தி லுற்றிருப்ப னத்தலத்தைக்
கண்டறிவ மெனினமக்குக் காண்பரிதா மதுகாட்டும்
புண்டரிகத் தயன்சென்றப் புனிதனைநாம் புகழ்ந்திறைஞ்சித்
தொண்டுசெய்து கேட்பதுவே கருமமெனத் துணிவினொடும். (ங)

சென்றார்க ளயனருகிற் செறிந்தார்கள் விழுந்திறைஞ்சி
நின்றார்க ளன்முகனு நீணிலத்தி லெப்பொழுதுங்
குன்றாத ஞானத்தின் கொழுந்தாய செழுந்தவரே
யென்றாசி பலகூறி யிருமினென விருந்ததற்பின். (ச)

வேறு.

பற்பல வுரையுங் கூறிப் பங்கயப் போதி னானு
மற்புத முனிவோர் தாமு மன்புசெய் திருந்த வேலை
முற்பக லுலக மெல்லா முதற்படைத் தருளு மாதிச்
சிற்பரா வெங்கட் கொன்று செப்பிட வேண்டு மென்றார். (ரு)

ஆங்கவை யேது சொன்மி னென்றன னலருள் வேத
னோங்கிய தவத்தின் மிக்க வுத்தம முனிவர் சொல்வார்
தாங்கிய வுலக மெல்லாந் தன்னுளே யிருத்திக் காத்துப்
பூங்கம லத்தி லுன்னைப் புறப்பட விட்ட மாயன். (சு)

விண்மிசை யிருப்ப தன்றி வேதியர் துதிசெய் தேத்த
மண்மிசை நாளு நாளு மன்னிய விடங்க டம்மிற்
பண்ணமா மறைகள் வல்லாய் பதுமையோ டுகந்தெப் போது
நண்ணுமோ ரிடமுண் டென்றே நான்மறை நவிலக் கேட்டேம். (எ)

அத்தல மேது காட்டி யருளுதி யென்று போற்று
முத்தமப் பிரம னந்த முனிவரை யுவந்து நோக்கிச்
சித்தம தொருக்கிக் கேண்மின் றிருமழி சைக்கு நேரா
யொத்தவத் தலமொன் றில்லை யகிலுலக் குறைவ னும்பன். (அ)

# திருமழிசைப்பிராளுழ்வார் பிரபந்தம்.

என்றனன் பிரமன் கேட்ட முனிவர்க ளிசைப்ப ரெந்தாய்
நன்றநின் மேன்மை காட்டி யருளுதி நங்கட் கென்ரு
ரொன்றிய மலருள் வைகு மும்பனும் புவிமே லின்றே
சென்றறிந் திடுவோ மென்னச் செறிந்தவம் முனிவ ரோடும். (௯)

விண்மிசை நின்று போந்து வினையெலாம் விளக்கும் வஞ்ச
மண்மிசை யிறங்கிச் சீரார் மழிசையம் பதியை மன்னிக்
கண்ணம ருலகைத் தூக்குந் தராசொன்று கடுப்பிற் பண்ணி
யெண்ணரு முனிவர் காண விசைத்தவத் தராசு தன்னில். (௧௦)

கூறிய வுலகை யெல்லாங் குறித்தொரு தட்டில் வைத்து
மாறிய தட்டின் மற்றை மழிசையை வைத்துத் தூக்க
வேறிய மழிசைத் தட்டாங் கெட்டனை யெழாத வாறும்
வேறுசெய் துலகம் வைத்த தட்டுவான் மேவு மாறும். (௧௧)

கண்டனர் முனிவர் விண்ணோர் காசினி யோர்கள் செய்ய
புண்டரி கத்துள் வைகும் புனிதனை யிறைஞ்சி வாழ்த்தி
யுண்டிதிற் றெய்வ மென்ன வொடுங்கிமா தவங்கள் பண்ணி
யெண்டரு தினமும் வாழ்ந்தாங் கிருந்தன ரிருந்து ளாரில். (௧௨)

பார்க்கவ முனிவன் செய்ய பவளவாய்க் கமலச் செங்கட்
கார்க்கடல் வண்ண ளுரைக் கருதியோர் யாகம் பண்ண
வார்ப்பொலி கொங்கைச் செங்கண் மலர்மக ளோடும் வானோ
ரார்ப்பொடுந் தோன்றி யம்மா லவனுட னருளிச் செய்வான். (௧௩)

மாசறு தீவத்தி னுனே மற்றுநீ யின்று செய்த
வாசறு மியாகந் தன்னு லளவறு மின்ப முற்றேம்
பேசுநீ வேண்டு மின்பம் பெறுதிநா மீவே மென்றே
யீசனு ரருளிச் செய்ய விருடிநின் றிறைஞ்சிக் கூறும். (௧௪)

அருமறை முதல்வ நான்செய் மகத்தினி லன்பு கூர்ந்துன்
றிருவுள மகிழ்ந்த தென்ருய் சிறியனேற் கதன்மேல் வேருர்
கருதிடும் பொருளு முண்டோ கண்ணனே நீயின் றென்பாற்
றருவது மடியேன் கொள்ளும் பொருளுமற் றவையே சாற்றில். (௧௫)

என்றன னிருடி மாயன் யாகத்தி லுவப்பிற் பார்ப்பா
னன்றுரைத் திட்ட சொல்லி லளவறு மன்பு கூர்ந்திட்
டின்றுன தருள லாதே யாவையும் வேண்டே னென்ருய்
நன்றுநின் னினைவா னுலு நானிவண் வந்து தோன்றி. (௧௬)

எப்பொரு ளெனினு மொன்றை யீந்துபின் னேகே னுகி
லப்பவென் னருண்மா சுன்னு மாதலா லென்பா லொன்றைத்
தப்பற வுரைத்தி யீவே னென்றிறை சாற்றப் பார்ப்பா
னைப்பிலா மணியே கேட்ட பொருட்கொ [illegible] க லுற்ருன். (௧௭)

விண்ணவர் பதங்கள் பொன்றும் விடைவலான் பதமும் பொன்று
மண்ணவர் பதமும் பொன்று மலரயன் பதமும் பொன்றுங்
கண்ணமற் றதனு ளொன்றுங் கைக்கொளேன் காயா வன்ன
வண்ணவென் சிந்தை யுள்ளே மலர்மகள் பூமி நீளை. (௧௮)

அடிதொழு திறைஞ்சி யேத்த வல்லுநன் பகலு மாதி
முடிவிடை யிவைக ளில்லா முழுமுதற் சோதி நீயே
குடிபுகுந் தென்று நீங்கா திருத்தனுன் கொள்வ தென்றான்
படிமுத லுலக முண்ட பரம்பரன் பகர லுற்றான். (௧௯)

அப்படி சிந்தை யுள்ளே யிருப்பனு னன்ப நின்பா
லொப்பிலாப் புதல்வ னிவ்வா றொருவனை யுவப்பி னோடு
மிப்படி தன்னி னல்கி யிடுகின்றே னிருத்தி யென்னச்
செப்பருந் திருவின் கோமான் சென்றுவை குண்டஞ் சேர்ந்தான். (௨௦

DR. U. V. SWAMINATHA IYER LIBRARY

வேறு.

இறையிவண மகன்றதற்பி னிருநிலத்திற் பார்க்கவன்பால்
மறைபுகலுந் தைமகத்தில் வானவர்க டுதிசெய்யப்
பிறையணியுஞ் சடையானும் பிரமனுங்கண் டுளமகிழத்
திறைகொணர்ந்து முனிவர்தொழத் திருமழிசைப் பிரான்பிறந்தான் (௨௧)

வேறு.

அந்தமில் குணத்தான் பிறந்ததிற் பின்பு பார்க்கவ னவன்முக நோக்கி
யிந்தமா நிலத்திற் புத்திர னுடையார்க் கிறையரு ரேமென் றெண்ணிச்
சிந்தையில் வெறுத்தப் புதல்வனைக் கொடுபோய்த் திருமக ணாயகன் றுணையாய்
விந்திய மணைந்தோர் பிரம்படிக் கீழே விரித்தொரு சிறுதுணி மேலே. (௨௨)

இட்டுமீண் டேகித் தன்பதி யணைந்தாங் கிருந்தன னெழின்மலர் மிசையா
ளூட்டெளி வுடையாற் குணவளித் திடச்சென் றுகந்துதன் றிருமுலைப் பாலைக்
கூட்டுற வூட்டுந் தேனிரு லாக்கிப் பிரப்பிலைக் கவட்டில்வைத் தருந்து
மட்டுமட் டாக வாயிக்கொளும் படிசெய் தேகினாள் வானவர் துதிப்ப. (௨௩)

வேறு.

அங்கவ ரமரு நாளி லத்திரு நகரி லென்றுந்
தங்கிய மேதை யாரிற் சாற்றிய திருவா ளற்கும்
பங்கய வல்லி யார்க்கும் படியிலோர் பால னின்றித்
தங்களி லழுது சோர்வார் தத்துவ னருளி னாலே. (௨௪)

அருந்துநல் லுணவுக் காக வடுத்தன தொழில்கள் செய்வார்
வருந்திநற் பிரப்பங் கூடை மாசற முடைந்து விற்பார்
பொருந்தினர் பிரப்பங் காட்டிற் பொருவிலா நிலையா ரங்கே
திருந்துமச் சேயைக் கண்டெஞ் செய்தவப் பயனே யென்ன. (௨௫)

துதிசெய்தெவ் வுலகும் போற்றுந் தகளறு நிலையி னுரைப்
பதியினிற் கொணர்ந்தா ரன்னை பங்கய வல்லி யாரும்
விதிமுறை சுரந்து நல்கு மெய்ம்முலைப் பாலு மூட்டி
மதிசெயு மாவி யென்ன வளர்த்தனர் மாசி லாதார். .சு)

வேறு.

அந்த மில்லாப் பெருங்கருணை யமுத வாரி யண்டர்தொழ
வந்து புவியில் வசுதேவர் மகனாய்ப் பிறந்து மாயத்தா
னந்த கோபர் திருமகனாய் ஞால மறிய வளர்ந்ததுபோற்
றந்தை தாய ரிவராகத் தன்னை யனையான் சகமனைத்தும். (உஎ)

வணங்க மழிசை வளம்பதியில் வந்து தோன்றி மேதையரி
னுணங்கு கேள்வி யுடையவர்முன் னேற்ற நோன்பின் பொருட்டிலவர்
கணங்கொ டிறைஞ்ச வளர்ந்தருளிக் கலித்த வினைக ளோரிரண்டுங்
குணங்கண் மூன்றுங் கரணங்க ணன்குங் கொடுமா புலனைந்தும். (உஅ)

ஒடுக்கிப் பிரம ரந்தரத்தி லுயிரை நிறுத்தி யோகத்தைக்
கொடுக்கு மொற்றை யெழுத்தாலே கூறும் வாச லொன்பதையு
மடுத்த கபாடந் தாட்பூட்டி யபான பிராண னசையறுத்திட்
டெடுக்கு மிறைசீ ரருணோக்கி யிருந்தா னண்டோ ரெழுநூறும். (உகூ)

வேறு.

அப்படி யிருந்து கண்ட வட்டாங்க யோகந் தன்னிற்
செப்பரு நவயோ கத்திற் சீருறு மிறைக்கும் வஞ்சத்
தப்பறு முயிர்க்கு முள்ள சம்பந்தஞ் சதுரர் காணு
தொப்பிலா முந்நான் காய சமயத்துக் குளனு யோங்கும். (ஙo)

கடவுளர் மேன்மை கண்டக் கருத்தறிந் திடுவோ மென்னத்
திடமுட னவர வர்க்காய்ச் செப்புபன் னூலு மோதி
யுடலுயிர் பரத்தைச் சொல்லி யுபாயஞ்சொல் லாமை கண்டு
படவர வணையார் தொண்டர் பார்மிசைப் பதைக்கு நாளில். (ஙக)

துவரிதழ்ப் பவளச் செவ்வாய்த் துடியிடைக் கமலை கேள்வ
னவரவ ரிதயந் தோறு மந்தரி யாமி யாகக்
கவர்வற நின்று வீணே கழிப்பவர்க் கழுவ னென்று
லிவர்கதி விரும்பக் கண்டும் விடுவனோ வெடுப்ப தல்லால். (ஙஉ)

இரும்புண்ட வுதக மென்ன வியம்பரு முத்தி யெய்த
விரும்பிய மழிசைக் கோமான் மிகப்பதைத் திரங்கல் கண்டு
சுரும்பமர் துளபத் தாரான் றுகளறு மன்பர் தம்பூற்
பெருந்திரு வோடு மெய்திப் பேரருட் கருணை செய்தான்.

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

## வேறு.

கானத் தெறித்த நிலாவென்னக் காண்பா ரன்றிக் கழியாமற்
கூனற் சங்கங் கைக்கொண்டார் கோதி லின்பங் கொளவேண்டி
ஞானக் கண்ணைக் கொடுத்தருளி நலனு ரந்தா மத்தணியைத்
தானத் தோடும் வெளியிட்டுக் கொடுத்தார் மழிசைத் தலைவருக்கு. (௫௪)

## வேறு.

ஆங்கதனுட் பரஞ்சோதி யச்சுதனு ரருள்வடிவைப்
பாங்கிலனு பவவளத்திற் பதிந்தநித்தர் முத்தர்களை
யோங்குமருட் கலியாண குணங்கடமை யொழிவின்றித்
தாங்கியவைம் படையெழிலைச் சாத்துமணி கலப்பொலிவை. (௫௫)

இருநிலத்தின் கமர்க்கவிழ்த்த வின்னமுதென் றிசையாமற்
பொருவிறந்த மெய்ந்நலத்தைப் பூண்டுபுல்லி யனுபவிக்கும்
திருமகளே முதலாய பிராட்டிமார் பெருந்திரளை
யருமறையும் புகலரிய வானந்த லீலைகளை. (௫௬)

எண்ணிறந்த பெருவளத்தை யிருவகையாம் விபூதிசெறி
தண்ணளியைத் திருவுந்திக் கமலத்திற் சதுமுகனி
னண்ணியசீ ருருத்திரனை நான்மறையைப் பெரும்பாழை
விண்முதலாம் பூதத்தின் விரிவுகளை விளக்கத்தால். (௫௭)

முத்தொழிலுந் தானாகி மூவுலகு முண்டுலகின்
மத்தமுறு புத்தர்முதற் சமயத்தின் வகைவகுத்த
தொத்தவர்மிக் கவரில்லா வோதவண்ணர் விநோதமெனச்
சித்தமுறத் திருமழிசைப் பிரானாழ்வார் தெரிசித்தார். (௫௮)

செப்பரிய பெரும்பசியான் மிகவாடித் திரிந்துலகி
லுப்பகன்ற நீர்க்கூழுங் கிடையாதே யுழல்பவர்க்குத்
துப்புடைநற் பேரமுதந் தொல்லுலகிற் கிடைத்ததுபோற்
றப்பில்கதிக் கிரங்கினரும் தலைவரைக்கண் டனுபவித்தார். (௫௯)

## வேறு.

இறந்த காலந் தனின்முத்தி யெய்த விரும்பிச் சாக்கியமு
மறந்த சமணர் தங்கலையு மங்கை பங்க னாகமமுந்
துறந்து கற்றேன் பனிநீராற் பாவை செய்யத் துணிந்தேன்பின்
சிறந்த செங்கட் கரியானைச் சேர்ந்தேன் வினைக டீர்ந்தேனே. (௬0)

ஆத லாலே யினியெனக்கோன் றரிய தில்லை யெனமகிழ்ந்தாங்
கோதி யோதி யனுசந்தித் துள்ளந் தன்னை யொருபோதும்
வேத நாத னகலாத விரகு செய்து விண்முதலாம்
பூத மைந்துந் தத்துவமு முணர்ந்தா ரிருந்து புரைதீர.

## வேறு

ஆறாறு மையைந்து மேழைந்து மகமுலவ
வேறாகி நின்றொளிரு மெய்ஞ்ஞான விளக்கின்மடை
மாறாத பத்தியொடு மழிசையர்கோ னனுபவித்துச்
சேறார்பூங் கமலவயற் றிருவல்லிக் கேணிநண்ணி. (௪௨)

இனிதமருந் திருமாலை யிறைஞ்சியெந்தா யாவருக்குந்
தனிமுதலே யெனவுருகிச் சங்கரனு நான்முகனு
நனியமரர் பெருமானு நான்மறையுங் காண்பரிய
புனிதனுட னாங்கிருந்தாண் டெழுநூறும் போக்கினார். (௪௩)

எண்டருஞ்சீ ராண்டாங்கோ ரெழுநூறுஞ் சென்றதற்
னண்டமுண்ட பெருமானு மாழ்வாரை நோக்கிநாங்
கண்டுயிலும் வெஃகாவில் வருகவெனக் கட்டுரைப்பப்
புண்டரிகக் கண்ணனைந்தாய் போற்றியெனப் புகழ்ந்திறை (௪௪)

அடிதொழுது திருவல்லிக் கேணிவிட்டங் கமரர்தொழ
படிமீதி னடந்தழகார் பங்கயச்செந் தாள்சிவப்பக்
டியார்பூம் பொழில்புடைசூழ் வெஃகாவைக் கண்டதனு
கொடியாடு மணிமாடக் கோபுரத்தைக் குறுகினார். (௪௫)

லஞ்செய்த விருந்தவத்தா னேமிமிசை மேதையர்தங்
குலஞ்செய்த புண்ணியத்தாற் கோதறமுன் வளர்ந்தவ
லஞ்செய்யா வன்பர்தொழுந் தத்துவனை யுற்றிறைஞ்சி
வலஞ்செய்தாங் கதிலாண்டோ ரெழுநூறு மன்னினார். (௪௬)

அந்நாளிற் றிருமழிசைப் பிரானாழ்வா ரடியிணையிற்
பொன்னார்சீர்க் கவிவல்லான் கணிகண்ண னெனும்புல
பன்னாளுந் திருமாலைப் பாடியவர் பணிநின்று
தன்னாவி யாக்கைபொரு ளெனவொன்றுந் தனக்கின்றி. (௪௭)

பேறிழவி லிடரின்ப மெனுமிரண்டும் பிணியாதே
நாறுபூந் துழாய்முடியான் றிருத்தொண்டர் நற்புகழ்பே
லேறுசீர்ப் பாமாலை யிசைத்தேத்தி யாழ்வார்பா
லாறுபெருங் காதலரா யொருபொழுதும் பிரியாதே. (௪௮)

அந்நகரி லமர்ந்துறைவா ராங்கவரை யந்நாட்டின்
மன்னவனோர் கவியென்பாற் புகலவென மற்றவர்க்கு
மின்னுமணி முடிகடக மாதியாய் மிகுதனங்கண்
முன்னுறவோர் குன்றென்னச் சொரிந்துகவி மொழிக (௪௯)

கவியென்பான் மொழியென்னக் கழறுமுறை கணிகண்
செவியுறலு நாராசஞ் சேர்ந்ததெனத் தீதுற்றுப்
புவிவேந்தன் முகநோக்கிப் பூபால வுனைநோக்குங்
குவிகையார் புலவருக்கே கூறுகமா னிடர்தம்மை. )

## வேறு.

பாடும் புலவ னல்லேனுன் பணமும் பொன்னு மீங்கெனக்கின்
ருேடுங் கல்லும் போலாகு முலகை யாளு மன்னவரு
நாடு மெனக்கோர் துரும்பாகு நாரா யணன்சீர்க் கமலபதஞ்
சூடும் புலவ னுனக்கிச்சை சொல்லும் புலவ னல்லேனே. (௫௧)

என்று கூறி யெழுந்திருந்தாங் கெதிரே மன்ன னெடுத்திட்ட
குன்று போன்ற விருநிதியை நாடு மென்னக் கொதித்தகன்று
நன்றி சேர்தம் பதிநோக்க ஞால மாளு மன்னவனு
மொன்று கேளு மெனக்கூவிக் கணிகண் ணர்க்கன் றுரைக்கின்ருன். (௫௨)

ஈசன் செய்யு முத்தொழிலும் யானே வல்லே னெனையின்று
நீச னுக்கி யெழுந்திருந்தீர் நெடுமால் புலவ ராயிடிலென்
றேசத் திருக்க வொட்டேனு னென்ருன் மன்னன் சிலுகற்ரு
ராசு மிகுந்த வுன்னுட்டி லிருப்பார் புலைய ரெனவகன்று.

## வேறு.

தம்மையாட் கொண்டார் செய்ய தாடொழு தியம்பு மன்ன
னெம்மைநீ பாடன் ருகி லேகுதி பதிவிட் டென்ருன்
மும்மையும் பாவி போறே னென்றவர் மொழிய வாழ்வா
ரும்மைவிட் டிருப்பே னல்லே னேகுவ னுடனே யென்ருர். (௫௪)

எனச்சொலிக் கணிகண் ணன்பின் னேகினு ராழ்வா ரேகி
வனப்புடைத் திருவெஃ காவில் வளரொளி யரவின் மன்னும்
புனத்துழா யானை யவ்வூர்ப் புறத்தினின் றிறைஞ்சி யாங்கே
கனத்தசீ ரன்பி னேடும் வலஞ்செய்து கழற லுற்ருர்.

கணிகணன் போகின் ருனிக் கடிநகர் தன்னை விட்டுத்
துணியுடை நீச னேனு மவனுடன் ருெடரு கின்றேன்
மணிவணு கிடக்க வேண்டாம் வருதியென் றறைந்தார் மாயன்
பணியூணைப் படுக்கை யூாய பாயலைச் சுருட்டிக் கொண்டான். (௫௬)

பங்கயச் செல்வி பூமி யென்றருள் பதியு மெய்ம்மை
மங்கைய ரிருவ ரோடும் வளநகர் வீதி யூடே
சங்குசக் கரமுந் தண்டுஞ் சாபமுந் தயங்கு சோதிச்
செங்கைக டோறுந் தாங்கித் திருமறு மார்பர் சென்ருர். (௫௭)

கடிகமழ் துளபத் தாரோய் கணிகண்ணன் போனுஞ் பின்பே
கொடியனேன் ருனும் போறேன் வருதிநீ யென்று கூறப்
படிமுத லுலக முண்ட புரஞ்சுடர் நடந்தா னம்மா
லடியவர் திறத்தை நம்மா லாயவும் படுமோ வம்மா.

## வேறு.

அந்தாம நீண்முடியு மாசின் மதிமுகமுஞ்
செந்தா மரைக்கண்ணுஞ் செவ்வாய்ச் சிறுநகையுஞ்
சந்தார் தடம்புயங்க ளோர்நான்குந் தண்ணளிசேர்
மந்தார நீல முகில்போல் வருமெழிலும். (ருகூ)

செய்ய கமலத் திருவாழ் தடமார்பும்
வைய மனைத்து மொடுக்கு மணிவயிறும்
பொய்யில் சதுமுகனைப் பூத்தவுந்தி மாமடுவும்
வெய்யவொளி வீசி விளங்குதர பந்தனமும். (சு0)

பீதாம் பரமுங் களிருர் பெருநடையுஞ்
சீதார விந்தத் திருவடிக ளோரிரண்டும்
வேதா முதலாய விண்ணோர் தொழுதேத்த
நாதாந்த நாத னடந்தாழ்வார் பின்போனான். (சுக)

முன்னே கணிகண்ண ரேகவந்த மூதறிவர்
பின்னே மழிசைப் பிரானுர் தொடர்ந்தேகத்
தன்னே ரிலாதா னவர்பின்னே தான்போனு
னென்னே புலவ ரிவைகேட்டுந் தேறிலரே. (சுஉ)

செஞ்சொற் கவிக்காய்த் திருமா லொருபுலவன்
பின்சென்று னென்றவுரை பேசுவது கேட்டிருந்தும்
வஞ்சப் புலவர்கவி மானிடர்க்கே யாக்கியவர்
தஞ்சமென நின்றே முடித்தார் தமையந்தோ. (சுங)

இட்டார்கண் முற்பிறப்பி லிட்டபுசிப் பெல்லாம்பின்
கட்டார் பிறப்பினிடைக் காட்டுமென வெண்ணுதே
மட்டார் துழாயானை மானிடனுக் கொப்பாக்கிக்
கெட்டார்கள் கேட்டிலுமோர் கேடுமுள தோவம்மா. (சுச)

மாமாய வஞ்ச மயக்கிற் படாதிருந்து
காமாதி யெண்மரையுங் கால்குலைத்து நாரணற்குப்
பாமாலை சேர்க்கவல்ல பாக்கியத்தார் தம்பெருமை
நாமா றறையவம்மா நான்முகற்குங் கூடுமதோ. (சுரு)

## வேறு.

ஓங்கிய கவிஞ ரென்பே ருறுதியை யுணர்ந்தோ ரல்லோர்
மூங்கரிற் கனவு கண்ட முறையென மொழிந்த நீச
ராங்கத் திடக்க முன்போ மன்பரை யணித்துக் கூவி
யேங்கிடைக் கமலை கேள்வ னேகிய தெதனு லென்றான். (சுசு)

கண்ணனே யிறைவா மன்னன் கணிகனென் றன்னைக் கூவிப்
பண்ணமர் கவிக ளென்பாற் பாடெனப் பலவு மீந்தான்
விண்ணவர் தாதை யாய விண்டுவைப் பாடு நாவான்
மண்மிசை மனுவைப் பாடே னென்றிவர் மறுத்துக் கூற. (௬௭)

நன்றெனைப் பாடா யேலென் னாட்டினி லிருக்க வொட்டே
னென்றனன் மன்னன் போறே னெனவிவ ரேகி யென்பா
னின்றதை மொழிந்து போந்தார் நின்னைவிட் டகன்ற வன்றே
பொன்றுவ னென்றார் யானும் பொருக்கென விவர்பின் போந்தேன். (௬௮)

உன்னைவிட் டடிய னேனு மோரிமைப் பளவும் வாழே
னென்னுயிர் நிலையா வுன்னை வருதியென் றிசைத்தே னென்றுங்
கன்னம தார்தி தாதை யடிதொழு தாழ்வார் கூறப்
பொன்னவிர் நேமி யானு மவருடன் புகல லுற்றான். (௬௯)

பூதல முடைய மன்னெம் புலவனைப் போகென் றானே
லாதெனை யிகழ்ந்த தன்றோ வவனுடை நாட்டி லாழ்வீ
ரோதுமோ ரிடத்தும் வாழே னென்றுரைத் துடனம் மன்னன்
கோதறு நாட்டி லுள்ள கோயில்க டோறு மன்னி. (௭௦)

இருந்தவர் கிடந்தார் நின்றார் யாவரு மறைந்தார் சென்றா
ரருந்தவத் தமரர் போற்ற வேகினா ரந்த நாட்டிற்
பொருந்திய கோயி றோறும் பூவைப்பூ வண்ணரைக் காணார்
திருந்துமர்ச் சகர்கண் மன்னன் றன்னொடுஞ் செப்ப லுற்றார். (௭௧)

மன்னவ நின்னாட் டுள்ள திருப்பதி தோறு மன்னு
மின்னவிர் நேமி யாய விண்டுவைக் காணே மந்தோ
வென்னமா யங்க டாமோ வென்றவர் பகர மன்னன்
றன்னறி வழிந்தான் கேட்டு மந்திரத் தலைவர் சார்ந்தார். (௭௨).

வந்தவர் தம்மை நோக்கி மன்னவ னதனைக் கூற
வெந்தைமுன் னுலக முண்டாற் கென்பிழைத் தனைகொ லென்றார்
சிந்தனை வருந்தி மன்னன் செப்புமத் தேவன் பாணா
ணந்தூரில் குணத்தீ ரொன்றும் பிழைத்திலே னவனைப் பாடும். (௭௩)

கணிகனென் றன்னை யென்மேற் கவிசொலச் சொன்னே னன்னான்
மணிவண்ணன் றன்னைப் பாடும் வாக்கினாற் பாடே னென்றன்
பணிமறுத் தேகி னானைப் பத்தனைக் கூவி யானென்
னணிநக ரிருந்தா லுன்னை யாக்கினை யிடுவே னென்றேன் (௭௪)

அவ்வுரைக் கஞ்சிப் போன கணிகனை னகன்றான் கொல்லச்
செவ்வியோ னகலக் கண்ட செங்கண்மால் பின்போ னான்கெ
லவ்வினைப் பயனால் வந்த திதுவென வறியே னென்றான்
கவ்வையற் றவர்கண் மன்னா கேளெனக் கழற லுற்றா (௭௫)

## வேறு.

உன்னை யிகழ்ந்தா னூரமுனக்கு மேலொருவன்
றன்னை யுறக்கண்ட பின்னன்றோ தார்வேந்தே
யன்னை பிதாவேறோ வடியார்க் கரியன்றி
மின்னைப் பிரிந்துமொளி மேதினியிற் றங்கிடுமோ. (எசு)

காவலவா திண்ணங் கணிகணற்கா யீங்குறையுங்
தேவர்கடந் தேவன் றிருமாலும் போய்மறைந்தான்
பாவலவன் றாளிற் பணிந்தா லவன்மீள்வன்
கேவலமோ சொன்மாலை கேசவற்குச் சூட்டுதலே. (எஎ)

## வேறு.

என்றன ரமைச்சர் கேட்டாங் இருநில முழுது மாளும்
வென்றிவேன் மன்ன னாழ்வார் வீற்றிருந் தருளு மூரிற்
சென்றன னவரும் போனா ரென்பதுந் தெளியக் கேட்டா
னின்றில னவர்கள் போன நெறியனைந் தவனும் போனான். (எஅ)

போனமன் முன்னே போன புலவர்க ளிருவர் தம்மைக்
கானமர் துழாயி னானைக் கண்டிலன் வழியில் வானோர்
கோனயன் முனிவோர் சித்தர் கொன்றையந் தாரா னாதி
யேனையர் பலரும் போற்ற விருக்கையம் பதியிற் கண்டான். (எகூ)

கண்டமன் னுருகி நைந்து கணிகணர் கமலத் தாளி
லண்டமுண் டுமிழ்ந்தா ராழ்வா ரம்புவி யோர்கள் வானோ
ரெண்டிசைக் கணங்கண் மிக்க யாவரு மிரங்க வீழ்ந்து
தொண்டனேன் பிழைத்த தெல்லாம் பொறுத்தரு டுணைவா வெ (அ0)

பொறிபுலன் வசத்தில் வீழ்ந்து புண்ணிய பாவ மென்னு
நெறியுறு வலையிற் பட்டு நெடும்பக லாவி வாடுஞ்
சிறியனேன் பிழைத்த தெல்லாஞ் செங்கணா யகனைப் பாடு
மறிவனே பொறுத்தி யென்றாங் கரசனின் றழுங்கக் கண்டு. (அக)

துணிவுடைப் புலவன் வேந்தன் றன்புற விரங்கித் தான்போ
யணிபொழின் மழிசைக் கோமா னடிதொழ வவருஞ் சென்று
மணிவணர் தாளில் வீழ்ந்து மன்னவன் பணிய வெந்தாய்
கணிகணன் மீண்டான் போய்நீ கண்டுயில் கொள்வா யென்றார். (அஉ)

என்றிவை யாழ்வார் கூற வேழுல குண்டா ராழ்வீர்
நன்றுநீர் முன்னே போனா லுமதன் பின்னே யென்றா
ரோன்றிய கருணை யெந்தை யோங்குசீர்க் கணிகண் ணன்முன்
சென்றிடிற் பின்னு னென்றான் றிருமழி சைக்கு நாதன். (அங)

ஆங்கது கேட்ட வேந்தன் கணிகண்ணருகு சார்ந்து
பூங்கழ றொழுதின் றெந்தாய் போதுநீ முன்னே யென்னத்
தீங்குபுஃ றவத்தி னானுந் தடையற முன்னே போனா
னேங்கிய மன்னன் வாழ்ந்தே னினியென விறைஞ்சி யேத்த.

கணிகணர் பின்னே யாழ்வார் காசினி யிறைஞ்சச் சென்றார்
மணிவண ராழ்வார் பின்னே வானவர் வணங்கப் போனா
ரணிபொழிற் றிருவெஃ காவி லனைவரு மணைந்தார் மாயன்
பணியணைச் சுருளை நீக்கிப் படுத்ததிற் படுத்துக் கொண்டான். (அரு)

கருமுகில் வண்ணன் மீண்டு கண்டுயில் கொள்ள வன்னான்
றிருவடி முடிமேற் சூட்டித் திங்கள்சேர் சடையான் போனா
னருமறை யயனும் போனா னமரர்கள் கோனும் போனான்
பொருவருஞ் சித்தர் தேவர் பொருந்துதம் மிருக்கை சேர்ந்தார். (அசு)

மன்னவன் கணிக ணன்சீர் மலரடி யிறைஞ்சி யாழ்வார்
பொன்னடி வணங்கி மாயன் பூங்கழ றொழுது போனான்
பின்னதின் மழிசைக் கோமான் பேருட் கடலின் மூழ்கிப்
பன்னெடும் பகலும் வைகி யிருந்தபின் பழனஞ் சூழ்ந்த. (அஎ)

குடந்தையம் பதியை மன்னிக் கோவலர் குட்டன் மேலே
தொடர்ந்தெழு காத லோடுந் துன்னியா டரவப் பள்ளிக்
கிடந்தவம் முகிலை வாழ்த்திக் கிளரொளி யோடு மொன்றா
யிடம்பெறு மாண்டு மாங்கோ ரீரெழு நூறு வாழ்ந்தார். (அஅ)

வேறு.

மாசின் மழிசையர்கோ னிவ்வண்ணம் வாழ்ந்திடுநாட்
பேச வரிய பெரும்புலி யூரடிக
ளாசின் மகமோன் றியற்றிஞ னாழ்வாரு
மீசன் கழறொழுதாய் கெய்தினு ரப்பதியில்.

வேறு.

நலஞ்செய்யும் யாகங் காண நண்ணினா ரவ்வூர் மாலை
வலஞ்செய்தார் வலஞ்செய் போதில் வளரொளி மாயன் மன்னும்
பொலஞ்செயும் விமான நீண்ட கோபுரம் பொன்னின் கம்ப
நிலஞ்செய்மா நகரஞ் சூழ்ந்த நெடுமதிள் பொழில்க ளாறும். (க0

சீருறு மழிசைக் கோமான் செறிவன திசைக ளோடு
நேர்தர வலம தாகத் திரிவதை நின்று கண்ட
பாருளோ ரிவரா லிந்தப் படியென வுணரார் தம்மி
லார்வம்வந் திரங்கி யீதோ ரதிசய மென்ன வெண்ணி.

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

பாருந்தின ரந்த நாளிற் பெரும்புலி யூரிற் பார்ப்பான்
வரும்புன லாடி மீளும் வழியிலோர் மடந்தை யெய்தி
யிருந்துகா ணீட்டக் கண்டோர் யாகம்வல் லவாகாண் வாரா
கருங்குழல் வல்லி காலை வாங்கெனக் கழறுங் காலை. (கஉ)

நக்கிரு கரங்க டட்டி நன்னுத லவிலுங் கெட்டேன்
மக்களிற் றேவ னாய மழிசையாழ் வாரைப் போற்றி
யக்கிர பூசை நல்க வறிவிலா யேகா யென்றாள்
வெட்கினான் யாக சாலை மேவினா னந்த ணாளன். (கங)

செய்யிழை யுரைத்த நீதித் திருமழி சைக்கு வாழ்வா
மையனைத் தலத்தி லுள்ளா னெனப்பதைத் தந்த ணாள
னைவுறக் கனவி லிவ்வூர் தன்னிலங் நம்பி யென்னைப்
பையர வணையா னாங்கோர் பனவனாய்ப் பகர்ந்து போனான். (கச)

ஆதவ னெழுந்த போதி லந்தண னவ்வூர் தன்னி
லோதுபல் குலத்தில் யாரா யெய்தினான் கொல்லோ வொப்பின்
மாதவ னென்ன வெண்ணி மனிதரா னாரை யெல்லாம்
பேதம தறத்தா னோக்கித் திரிந்தனன் பிரம னொத்தான். (கரு)

அப்படித் திரியு நாளி லருளுறு மழிசைக் கோமான்
செப்பிய பிரப்பங் கூடை சீர்பெற முடைந்து விற்று
மொப்பிலா விறையைப் போற்றி யொடுங்கியாங் கொருத்த னாகித்
தப்பறத் திரித னோக்கி யிவர்கொலத் தலைவ ரென்ன. (கசு)

அருமக மியற்று நீதி யந்தணன் கண்டப் போதே
கருமுகிற் கினிய தொண்ட ரிவரெனக் கருத்து ளெண்ணித்
திருமழி சைக்கு நாதர் சேவடி யிறைஞ்சி யாங்கே
யிருவரு மாக யாக சாலையை யெய்தி னார்கள். (கஎ)

எய்திய பொழுதே சம்பா வனையிவர்க் கீயக்க
வைதிக ரிகழ்ந்தார் தன்ம புத்திரர் மகத்தின் முன்னே
செய்கட னேற்ற மாலைச் சிசுபால னிகழ்ந்தாற் போலம்
மெய்யரு மினிநா நம்மை வெளியிட வேண்டு மென்ன. (கஅ)

அலம்புபாற் கடலுள் மன்னு மராவணை யமலா வாழி
வலந்திக ழாழி யானே வள்ளலே வாழி பார்ப்பார்
குலம்பொலே னென்ன வென்னை மகத்தினிற் கூட்டோ மென்றா
ரிலங்கைசெற் றவனே நீயுன் னரவணை யோடு மெய்தி.

BESANT NAGAR

எய்தியீண் டிருந்து தீமை யியம்பியுன் னருளேக் காத
வைதிக ரிகழ வென்னை வணங்கியம் மறையோ னன்பிற்
செய்மகங் கூட்டும் வண்ணந் திருவொடும் வருதி யென்றே
கைதலை குவித்தா ராழ்வார் கார்முகில் வண்ணர் சென்றார். (௧௦௦)

பங்கயத் தயனுஞ் சென்றான் பாகசா தனனுஞ் சென்றான்
கங்கைசேர் சடையான் சென்றான் கருதரு முனிவோர் சென்றார்
பொங்குமே முலகி லுள்ள புலவரும் பொருந்தி னார்கள்
சங்கையுந் திருந்த பார்ப்பார் மழிசைமன் சரணந் தாழ்ந்தார். (௧௦௪)

பெரும்புலி யூரின் மன்னும் பேரரு ளடிக ளன்றே
திரும்பலின் முத்தி நல்கச் செய்மக முடித்த போதில்
வருங்கரு முகிலும் வானோர் வேந்தனு மழுவ லானு
மருந்தவத் தயனும் புக்கோ ரனைவரும் போயி னார்கள். (௧௦௨)

கரமரு மலர்கள் சிந்திக் களிப்பொடந் தணர்கள் கண்ணன்
பரமென வடங்கி வாழும் பத்தரைப் பரிவி னோடும்
பிரமர தத்தி லேற்றிப் பிரானிவ னென்னத் தாங்கி
வரமருள் பதியை முக்கால் வலஞ்செய்து வாழ்த்தி னார்கள். (௧௦௩)

சிறுமைகண் டிகழ் றானுஞ் சீரிய னெறியோர் தம்பாற்
றெறுமுறு பெருமை கண்டாற் சென்றடி வணங்கு மாறு
முறுநெறி யுலகி லென்று முள்ளதென் றுணர்ந்தோ மந்தோ
பெறுபயன் மதியார் புல்லோர் பிழைபொறுத் தருளு மாறும். (௧௦௬)

ஆயதோர் நிலைபா லாழ்வா ரந்தணர் தம்மை யீன்ற
தாயினு மிகுந்தன் போடுந் தத்துவ முபதே சித்துத்
தூயவர் துதிசெய் தேத்தச் சுருதிக ளொடர்ந்து போற்ற
மாயமால் குடந்தை தன்னின் மன்னியா டரவின் மன்னும். (௧௦௫)

## வேறு.

காரார் முகிலிற் கமல மலர்ந்ததொத்தச்
சீரார் திருவுருவிற் கண்கால் கரஞ்சிவந்த
வாரா வமுதை யனுபவித்த மெய்ந்நலத்தைப்
பாரோ ரறியும் படிபாட வெண்ணினார்.

## வேறு.

தேன்முகந் தளிகள் பாடுந் திருத்துழாய்க் கண்ணி யானை
வான்முக மதிகண் டஞ்சும் வளரொளி வதனத் தார்க்குக்
கூன்முகச் சங்க மாழி கேழ்துகைக் கொண்டோலார்க்கு
நான்முகன் றிருவந் தாதி லெந்திகழ் நூறு மோதி. (௧௦௭)

# திருமழிசைப்பிரானாழ்வார் ப்ரபந்தம்

சிறப்பினிற் சிறப்பு மிக்க திருச்சந்த விருத்த நூற்றே
றெப்புகு மிருபத் தென்றே யுரைதரு தொகையு மாங்கே
யறப்பொரு ளாய வாரா வமுதடி பனவ ரேத்திப்
பிறப்பறும் வண்ண மோதிப் பேரருள் விரசை மூழ்கி.

அன்றதன் றீர மன்னு மமானவ னுரை யேத்திச்
சென்றுவை குண்ட மெய்திச் செங்கணா யகன்முன் னாகி
நின்றவன் சாம வேத கீதங்க ணிகழ்த்தி மாலோ
[illegible] றியம் மழிசைக் கோமா னொளிக்கொண்ட சோதி யானான்

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

20764



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வடிவழகியநம்பிதாஸர்

இயற்றிய

# தொண்டரடிப்பொடியாழ்வார் ப்ரபந்தம்
# குலசேகரப்பெருமாளாழ்வார் ப்ரபந்தம்
# திருப்பாணாழ்வார் ப்ரபந்தம்

இவை

ம-ா-ா-ஸ்ரீ

பள்ளிப்பட்டு

ரா. துரைசாமி ரெட்டியாரவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர் P R கிருஷ்ணமாசாரியரால்

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

1908

(Copy Right)

# தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபந்தம்.

மண்டல மெண்மழி சைப்பதி மன்சீா
கொண்டபெ ரும்புகழ் கூறியிம் மண்ணோ
டண்டரி றைஞ்சவ ரங்கம மாந்த
தொண்டர டிப்பொடி யைத்துதி செய்வாம்.

வேறு.

எண்ணும் திங்க ளீராறி லீச னுருவா மார்கழியி
னெண்ணுங் கேட்டை தனிற்சிறந்த நாற்பாற் குலத்தின் மேற்பாலாய்
மண்ணும் விண்ணுந் தொழுதேத்த மண்டங் குடியா மாநகரி
லண்ண றொண்ட ரடிபபொடியாா பிறந்தா ரறந்தான் சிறந்தோங்க. (உ)

தூய ஞானச் சுடரொளியாய்ச் சுருதி முடிவில் வீற்றிருக்கு
மாய னருளாற் பரஞ்சோதி வடிவை மறைத்து மண்மிசையிற்
காயம் புனைத லாலந்தோ காமா தியாசென் றுறத்தீண்டி
யாயு மறிவை யிருட்டறையி லடைத்தா ரவரு மடைபட்டார். ([illegible])

மண்ணில் வஞ்ச வலைப்பட்டு வருந்து முயிாக ளிடாநீக்க
விண்ணின் றிழிந்த முதல்வரையும் விரைந்து மாயை தீண்டுதலா
லெண்ணுங் காலிப் புவிமீதி லியமன் கயிற்று மனைவயிற்று
நண்ணி யுழலு மானிடாசொன் ஞானந் தனக்கா நடுவம்மா.

வேறு.

சீரிய ஞானச் சோதித் திருவுரு வுடையா ரேனும்
பாரமிசை யுற்றுன் மாயை படுக்குமென் றஞ்சி யன்றோ
ஆரியாா மகனுா கண்க டிறந்திலா கமல மனன
வேரியல் வாயா லொன்று மிசைத்திடா திருந்தா ரந்தோ.

அறந்தலை நின்ற நீதி யச்சுத னன்றி மண்ணிற்
பிறந்தவ ரயாந்தாா தம்மை யெனமறை பேசு கின்ற
இறந்தனை மறந்து கெட்டேன் மாயையின் சிணுக்கிற் பட்டுக்
[illegible]றங்கெனச் சுழல்வோா ஞானங் காயமோ டடங்கிற் றன்றே.

வேறு.

முன்னை வினையின் றொடாபாலே மோட்டுப் புலனு லிருநீர்தோய்ந்
தன்னை யுதாக் குழிவீழ்ந்தங் கவலும் வருந்தப் புவியுற்ற
பின்னை விருப்பு வெறுப்பன்றிப் பிறிதொன் றறியா தவர்ஞானந்
தன்னை யடியே னெடுத்துரைக்கத் தகுமோ தாமோ காககமோ.

வேறு.

படுக்கையின் மலசலம் பாய வைகுவான்
கடுப்பிணி யுலகெலாங் காண்பு னென்பபோ
[illegible] மாயையின் சூட்டி லாடுவா
[illegible]யின் ஞானம முரைக்கு மாய்தலே.

### வேறு.

பொறிவழிப் பொருந்தி மேயும் புலன்வழிப் போக்கு மாற்றார்
செறிபெரு மனுதி செய்யுந் தீமைக ளடக்கார் காம
வெறியுறு வெகுளி மாயை யாணவம் விலங்க வாழா
ரறிவெனக் குருவ மென்றே யழிபவர்க் கறைவ தென்னோ. (கூ)

அத்திறங் கிடக்க மண்டங் குடியில்வர் தாசி லாத
மெய்த்தவ முடையார் தம்பால் விண்டுவின் பணியாற் போந்த
வுத்தம குணத்தார் காம னுருவினிற் சிறப்போ டோங்குஞ்
சித்திர வடிவிற் றோன்றித் திருவவ தரித்த பின்னர். (க0)

### வேறு.

அன்ன மென்னடை யந்தணர் மங்கையர்
பொன்னி னன்மணிக் காப்புறப் பூட்டினர்
செந்நெ லின்னடி சில்லொடுந் தேன்கனி
மன்னு மின்னமு தும்மகிழ்ந் தூட்டினார். (கக)

எண்ட யங்கு பதங்க ளிரண்டினுந்
தண்டை தண்டு சதங்கை யணிந்தனர்
கெண்டை யங்கண் மடந்தையர் கேடிலா
மண்ட யங்க வயங்கு மருங்கினில். (கஉ)

இரைத்த கிண்கிணி பன்மணி யேயுற
நிரைத்த ணிந்தனர் நீண்டக ரங்களி
லுரைத்த பொன்வளை யோங்கவ ணிந்தனர்
விரைக்கொள் பூங்குழன் மெல்லிய லார்களே. (கஙு)

செய்ய வாயமு தின்றிரை தத்திடு
மையன் மார்பினி லாரம ணிந்தனர்
துய்ய நற்களத் தைம்படை சூட்டினர்
மையி லங்கொளி வாள்விழி மாதரே. (கச)

கோதி லாத குழைகளிற் றோடணிந்
தோது கண்களின் மையுமிட் டொப்பிலா
மாத ரார்களம் மைந்தர்த நெற்றியின்
மீது பட்டமுஞ் சுட்டியும் வீக்கினார் (கரு)

### வேறு.

இப்படி பலபல விலங்கு பொற்கலன்
றப்பற வணிந்துறத் தவழ்ந்த பின்னவண்
முற்பகற் செய்தவ முதல்வர் போற்றிட
வொப்பிலார் தெருவிற்றே ருருட்டி வாழுநாள். (கசு)

### வேறு.

விதிவழிச் சவுளஞ் செய்து வேதியர் குழாத்துண் மிக்கு
முதியவர் சடங்கிற் றோன்ற முப்புரி நூலுஞ் சாத்தித்
துதிசெய்வே தங்க ளுணர் துகளற வோதி யின்பக்
கதிவீழ்ச் செல்வா ரரங்கே களிப்புடன் வளரு நாளில். (கஎ)

அந்தணர் பலருங் கூடி யாசறு குணத்தி னார்க்கோர்
செந்துவர் வாயி னாளைத் திருமணம் புணர்த்த வெண்ணி
வந்தமெய் மரபி லாங்கோர் மறையவன் மகளைப் பேசப்
பந்தணை விரலார் மைந்தர் பவருமப் பதியைச் சார்ந்தார். (கஅ)

காமனுக் கழகு நல்குங் கதிர்மணி வடிவி னார்க்காந்
தேமலர்க் குழலைப் பெற்ற தந்தைதாய் தமக்குச் செப்ப
மாமனை யழைத்தார் பிள்ளை மரபினை வழங்கக் கேட்டா
ராமதற் கிசைந்தோ மென்றுங் கணைந்தவர்க் கடைக்கா யீந்தார். (க௯)

ஆங்கவ ரிசைந்த மாற்ற மன்பரைப் பயந்து செல்வத்
தோங்கிய தந்தை தாயர்க் குரைப்பவப் பொழுதே யன்னார்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தனம்பல நல்க வந்தப்
பூங்குழ றன்னை வேட்டார் பூவைப்பூ வண்ணர் தொண்டர். (உ0)

வேறு.

சீருறு திருமணஞ் செய்த பின்பலு
வாருறு தனத்தியர் வசத்த ராயவர்
காருறு குழல்களிற் கமலம் போன்றொளி
ரேருறு முகங்களி லிலங்கச் சேர்ந்தரோ. (உக)

சிறுபிறை நுதலினிற் சிலையி ரண்டென
வுறுபுரு வங்களி லொளிகொள் வேலெனக்
கறுவுறு விழிகளிற் கவினும் பொற்பணி
மறுவறு குழைகளின் மாசி லாததோர். (உஉ)

திலமலர் குமிழெனச் செப்பு நாசியி
லிலவவாய் முறுவலி லிலங்கு பன்மணி
நலமுறு களத்தினி னவையி றோள்களின்
மலமுறு வீணையின் மதுர வாக்கினில். (உ௩)

செப்பெனக் கிரியெனத் திரண்டு விம்மிய
வொப்பறு தனங்களி லுதர வாலினிற்
றுப்புறு தளிரெனத் துலங்கு மேனியிற்
றப்பறு துடியினைத் தள்ளு மொள்ளிய. (உச)

இடையினி லல்குலி லிலங்க ரம்பையுந்
துடைகளி னூபுரந் துலங்கு தாள்களில்
விடைமுதிர் பெடைகளில் விளங்கு சூலன
நடைகளின் மனம்பதித் தாவி நைந்தனர். (உரு)

வேறு.

அத்திறத் தமைந்தார் திருவுருக் கண்ட வரிவைய ரலமர வவர்கள்
சித்திர வுருக்கண் டிவருமப் படியே சிலபக லனுபவித் தொழுகப்
பத்தர்கட் கினிய புறஞ்சுட ராங்கன் பார்மிசைப் பிறந்தது பொருட்ட
லித்திற மெமதா யின்பவீட் டிருந்தா ரிடர்ப்படத் தகாதென விரங்கி. (உசு)

# தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபந்தம்.

வஞ்சமா மடவா ரவயவத் தமர்ந்த மனத்தினைத் திரித்துத்தன் மாசில்
பொன்செய்நீண் முடியிற் கமலவா னனத்திற் பொருவறு மிருகுழைப் பொலிவிற்
கஞ்சமா மலர்க்கண் ணிணைகளிற் புருவக் கால்வளை யிருசிலைக் கறுப்பி
லெஞ்சலி லொளிசேர் நாசியிற் பதும மலர்ந்தன விலங்குசெவ் வாயில். (உஎ)

அண்டமுண் டுமிழ்ந்த வழகிய மிடற்றி லஞ்சன நிறத்தினி லழகார்
வண்டடங் கிரியொத் தோங்கிரு புயத்தில் வளரொளி திகழ்திரு மார்பில்
விண்டலத் திலங்குஞ் சுடரிரண் டென்ன விளங்குகைச் சங்குசக் கரத்தி
லெண்டரு முலகம் யாவையு மடக்கி யெழிறிகழ் திருவுத ரத்தில். (உஅ)

உந்திமா மடுவி லுதரபந் தனத்தி லொடுங்கெழின் மருங்கினி லொளிதொ
ளந்திமா முகிலொத் திலங்கிய செம்பொ னுடையி லழகுறு குறங்கின்
முந்திய புவிவா னளந்திட வளர்ந்த முளரியந் தாள்களின் முறையே
சிந்தைபாய்ந் தாழ்வா ருளமகிழ்ந் துருகித் திருக்கண்வைத் தவர்முனே சென்றான்.

சென்றவன் றொண்ட ரடிப்பொடி யெதிரே தீதறு திருமக ளோடு
நின்றன னந்தத் திருவுருக் கண்ட நிகரிலா வன்பர்நீ ணிலத்தின்
மன்றல்சேர் குழலா ருருவையு மாயன் வடிவையு மதித்துற நோக்கி
யின்றிவ ரெழிலுக் கரிவைய ருருவ மிசைந்திடா தென்றதை யிகழ்ந்தார். (௩0)

இன்னமு திருக்க நஞ்சினை யருந்த லினித்தகா தெனமுன மறைந்த
வன்னமென் னடையா ரவயவத் தமைத்த மனத்தினை வாங்கியச் சுதனார்
பின்னவிர் மவுலி யாதியா யலர்ந்த மென்மலர்த் திருவடி வரையி
னன்னலத் துறுப்பிற் பதித்தனர் திரும்பா திரும்புண்ட நாரம தெனவே. (௩க)

ஆதியம் பரம பதத்தினிற் றுமுன் பிருந்தது மச்சுதன் பணியா
லோதிய வுலகிற் பிறந்ததும் வினைவந் துற்றெடுத் தொடுக்கிய பரிசும்
வேதியர் வணங்குந் திருவரங் கத்தான் விரைந்துவந் தவ்வினை கெடுத்த
நீதியு மறிந்தங் கிறைவனை வணங்கி நின்றுநின் றிவையிவை நிரப்பும்; (௩உ)

அண்டர்கோன் பிரம னுருத்திரன் வணங்க வரங்கமா நகரமர்ந் தரவிற்
கண்டுயில் கொள்ளுங் கருணைமா முகிலே கண்ணனே கள்வனேன் பொருட்டாற்
புண்டரீ கச்சீர்த் திருவடி வருந்தப் பூமிசை நடந்தனை புலையேன்
கண்டிலேன் கைம்மா றிதற்கெனப் பணிந்தான் கலந்தமா மாயையைக் கடந்தான்.

## வேறு.

மெய்யன்ப ரிவைகூறி விரைமலர்த்தா டொழுதேத்தப்
பொய்யன்புக் கெட்டாத புனலரங்கத் தரவணைமேல்
வையம்புக் குண்டுறங்கு மணிவண்ணனச் செழுஞ்சோதி
யையன்செங் கனிவாயா லகங்குழைந்து கட்டுரைப்பான். (௩ச)

## வேறு.

அப்பாவென் சூழ்ச்சியிடை யங்குரித்த மாமாயை
எப்பா ரெவரெனினு மேழே ழுலகினிடைக்
குப்பாயத் தாக்கையுறக் கொண்டார் தம்மைத்தீண்ட
றப்பா தவைத்தப்பச் சங்கரற்குங் கூடாதால்.

புண்டரிகப் போதயனும் பொன்னுலகை யாள்பவனு
மண்டர்களு முக்கணனு மாசின் முனிவர்களு
மெண்டருஞ்சீர்ப் பூதங்க ளைந்து மிருசுடருங்
கண்டபொருள் முற்றுமதின் கைவசமாய் வைகிடுமால். (ரு௬)

வேறு.

எலையறு பாவை தனையொரு தாம்பி லிணைத்தொளித் தாட்டுவான் போல
நிலையிலே மேழா முலகங்க டமையோர் நெடுங்கொடும் பாசத்திற் பிணைத்தாங்
கலைவுறு தொழிலிற் படுத்தியோர் விரகா லாட்டுமென் மாயைமற் றதற்குத்
தலைவனுய்ச் சொன்ன விரண்டினும் படாதே தங்குவ தெனக்கலாற் றகுமோ. (ரு௭)

ஓங்குமம் மாயை வசத்தினிற் சரிக்கு முலகிடை நீயும்வந் துறலாற்
பூங்குழன் மடவா ரவயவத் துணையும் பூட்டிநின் றூட்டுதல் கண்டே
ஞங்கது தடுப்பா னிருவொடும் புகுந்தே னணியரங் கத்தினி லனந்தன்
றுங்கவெப் பொழுதுந் துயிலமர்ந் துறைவே மெனவுரைத் தவர்தலை தடவி. (ரு௮)

ஏகினு னீயும் வருதியென் றியம்பி யிமையவ ரடிதொழ விலங்கும்
பூகமார் பொழில்சூழ் திருவரங் கத்திற் பொன்வரை மீதினிற் பொருந்து
மேகமா மிதுவென் றியாவரும் புகழ விளங்கொளி யனந்தன்மேற் படுத்தான்
மாகமான் மண்டங் குடியுறை பவரும் வந்தனர் திருவரங் கத்தில். (ரு௯)

அண்டர்கள் புகழு மணியரங் கத்தி லணைந்தவ ரத்திரு நகர்வாழ்
தொண்டரை யிறைஞ்சி யவரரு ளோடுந் துலங்குபல் வீதிகள் கடந்து
விண்டல மளப்ப வுயர்ந்தமா மதிள்கள் விளங்கொளி தயங்குகோ புரங்கள்
கண்டவை யிறைஞ்சி யனந்தன்மேற் றுயிலுங் கருணைமா முகிலினைக் கண்டார்.

நோக்கிய விழியான் மனத்தினு லவைசேர் நுண்ணுணர் வாகிய வுயிரால்
வாக்கினு லன்பா லன்புறு வழியான் மாசறு வடிவொடு மமைந்த
வாக்கையான் மண்டங் குடியுறை பவரு மச்சுத னுயவின் னமுதைத்
தேக்கினர் தேக்கி யிறையொடு தமையுஞ் சிறிதுபோ தயர்ந்துபின் றெளிந்தார். (௬௧)

நின்றனர் ... ... ...ன்டினு மொழுகு நெடும்புன லருவிக ளிழியுங்
குன்றெனக் குன்றுப் பச்சைமா மலைபோற் கோவிந்தன் கிடக்கையைக் குறித்தா
கொன்றிய வன்பிற் றந்தைதாய் தமக்கன் றுரைத்தபேர் மாற்றியப் பொழுதே
யன்றிறை பணிசெய் தடிதொழுந் தொண்ட ரடிப்பொடி யெனும்பெய ரமைத்து

வஞ்சமா மடவார் கலவியிற் படிந்து வருந்திடுந் தமையெடுத் தாண்டு
தஞ்சமா யாவி யுறக்கலந் திருந்த தலைவனுக் குறுபணி செய்ய
நெஞ்சினி னினைந்தார் நினைந்தவப் பொழுதே நேமியான் செய்யவாய் திறந்து
கஞ்சமா மலர்க்கண் விழித்தவர் செய்யுங் கயிங்கரி யங்கள்கற் பிப்பான். (௬௩)

வேறு.

அந்தமில் குணத்தி னுனே யவனியி லியாவ ரேனுந்
தந்தமக் கியன்ற தென்பாற் றரப்பணி விடைகள் செய்யச்
சிந்தையி னினைந்தா லன்றே செய்தன ரென்று கொள்வேட
பந்தமு மறுப்பே மேலைப் பரமமாம் வீடு மீவேம். (௬௪)

திலத்தினைக் கோடி கூறு செய்ததி லொருகூ றென்ட
னலத்துறு நேயத் தாலே நல்குமா சிந்தித் தானேற்
புலப்படா நிலையாய் கேட்டி பொன்வரை தனினு மிந்த
நிலத்தினும் விரிவோ டோங்கு நீணிதி யெனவுட் கொள்வேம். (௫)

சீருறு மன்ப கேட்டி சகத்திலென் பணிமேற் செல்வா
ஞொடி யெடுத்திட் டான்பின் னெழிந்தனன் போக்கென் றுலும்
பாரிடை விண்ணின் மூன்று ளவன்செய்பா தகங்க ளங்கி
நேருறு பஞ்சிற் றீயு நீணர கவர்கட் கில்லை. (௪௬)

மலையெனப் பெரியார் செய்யு மாப்பொரு ளுவந்தும் யாக்கை
நிலையினிற் சிறியார் செய்யு நேர்மையை யிகழ்ந்தும் வாழ்க
விலையெமக் கிரண்டு மொக்கு மென்பதை யன்ப யூக
மலையடைத் துகந்த நாளி லணிலுயர்ந் ததனிற் காணாய். (௪௭)

அத்திறங் கிடப்ப வஞ்சத் தழுந்துமின் னுயிர்க ளென்னை
யெத்திறத் தானு முன்னி யெய்துமா றியற்றி யன்போ
டித்திறத் தாலிம் மண்ணோ ரிறைஞ்சவீற் றிருந்தேன் யானென்
மெய்த்திற முணர்ந்து நோக்கில் விரிஞ்சனால் விதிக்கப் பட்ட. (௪௮)

அண்டங்க ளனைத்து மந்த விரிஞ்சனு மரனுங் கோத்த
வெண்டங்கு பூத மைந்து மென்னிலோ ரிடத்தி னுள்ளே
விண்டங்கோ ரணுவை மான விளங்கிடு மதனா லென்னைக்
கண்டெங்கே யாவ ரன்ப கயிங்கரி யங்கள் செய்வார். (௪௯)

வேறு.

உற்றநெறி யிருவகையு முரைத்தோமிவ் வுலகிலெமைப்
பற்றினர்செய் கயிங்கரியம் பலவுமுவப் போமெனினுஞ்
சொற்றமிழென் பாற்பாடுந் துணிவுடையோர் மனக்கோயி
மற்றெமக்குப் பரமபதம் வடதடம்பாற் கடன்மைந்தா. (௫௦)

அன்பதிரு மஞ்சனமு மர்ச்சனையும் பாட்டேயாம்
பொன்பொருந்து சாந்துகலன் பூம்பட்டும் பாட்டேய
மின்பமுற யாமருந்து மின்னமுதும் பாட்டேயாந்
துன்பகற்று மணிவிளக்குந் தூபமும்பாட் டெனத்துணிவாய். (௫௧)

வேறு.

ஆங்கது கூடா தாகி லன்பபூ மாலை கட்டி
யோங்குநம் வசத்தி னல்கி யொன்றினு மிச்சி யாதே
தாங்கிய மகிழ்ச்சி யோடெந் தமர்களுக் கெளிதா யன்னார்
பூங்கழ றொழுவார் தாமும் பொருந்துவ ரென்னை யன்பா. (௫௨)

வேறு.

ஆத லாலைய பாமாலை பூமாலை யளவில்
காத லோடுரைத் திட்டுமக் கட்டலுன் கடன்முன்
வேத வாணர்வாழ் புதுவைமன் விட்டுணு சித்த
னோது நீதியன் செய்தது மிதுபிறர்க் குறுமோ. (௫௩)

என்று சீரரங் கத்துறை யெம்பிரா னியம்ப
நின்று கேட்டவ னிறையரு ளிருந்ததை நினைந்து
சென்று தாழ்ந்தனன் றிருவடி யருளெனத் திருமா
லன்று சென்னியிற் பதித்தெனைப் பாடென வறைந்தா (௫௪)

வேறு.

மூதறி வுடைய வன்பர் முதல்வரை வணங்கி யெந்தாய்
வேதனு மானும் வந்தார் விண்ணவர் முனிவோர் வந்தா
ராதவன் குணபால் வந்தா னவர்க்கருள் புரிவா யென்னத்
தீதகன் றுலக முய்யத் திருப்பள்ளி யெழுச்சி செய்தார். (௫௫)

வேறு.

மரமோ ரேழுந் துளைத்துவந்த வடிவங் கிலதே லடியேற்
பரம பதத்தி லென்கரும மென்னப் படிசே ரனுமனைப்பே
லரவத் தணையாய் நீயல்லா லமரர்க் கரசா யவராலும்
பரவப் படுமச் சுவைபெறினும் வேண்டே னென்னும் பாவகத்தால. (௫௬)

கடிசேர் துளவத் திருத்தாரான் கழல்பெற் றுடையே னமன்றமர்கண்
முடிமேன் மிதிப்பேன் பாகவதர் முளரி யென்னச் சிறந்திலங்கு
மடிமே லென்றன் முடியிடுவே னடியேன் றொண்ட ரடிப்பொடியென்
றொடியா வின்பத் தலைநின்று மோங்கு மரங்க னுருவன்றி. (௫௭)

அறியேன் வேறோ ருருவினையு மகலேன் வேறோர் திருப்பதியிற்
செறியே னிவனே யங்கங்கே யிருந்தா னெனினுந் தீவினையேன்
பொறிசேர் புலனு னுற்றிறைஞ்சேன் போதத் தாலும் போற்றுகிலேன்
குறிசேர் கற்பி லருந்ததியுங் கூசக் குறித்தே னெனக்கொண்டு. (௫௮)

வேறு.

கருமாலை கடந்திவ் வையங் காகுத்த வேட மாகி
வருமாலை மூவர் காணு மாமாலை யளவி லின்பந்
தருமாலை யடையும் வண்ணஞ் சதுமறைச் சொல்லிற் கோத்த
திருமாலை நாற்பத் தைந்துஞ் செப்பினு ரொப்பி லாதார். (௫௯)

ஆகத் தொண்ட ரடிப்பொடியார் பாட லைம்பத் தைந்துரைத்து
மாக மேத்தும் புண்டரிகர் மாலா காரர் தமைப்போல
மேக வண்ண ரெடுத்துரைத்த விதியா னந்த வனங்கள்பல
பூக வேலி மருதநிலத் தாக்கிப் புவன முண்டவர்க்கு. (௬௦)

கோலத் துளவு மல்லிகையுங் குளிர்சண் பகமு மருவலை
மூலத் தொடருங் கழுநீரு முதலாய் மூப்குப் புதைத்தெடுத்து
சால வெழிலார் பூமாலை தாமே சமைத்துக் கூற்பிறந்த
வால மிடற்றன் றுயர்கடிந்த வரங்கத் தம்மா னன்க்களிக்க.

# தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபந்தம்.

## வேறு.

[illegible]டு நாளி லோர்நாண் மாசறு சவுனர் சொல்ல
மெய்யுறு சதானி மேலாம் விண்டுவி னுமங் கேட்டு
நைவுசெய் திருவோ ரொன்ருய் நண்ணிய வாறு போலப்
பையர வணையா ராழ்வார் பங்கய வதன நோக்கி.

மாசிலா நிலையீ ராழ்வீர் வம்மினீர் நம்பாற் சொன்ன
வாசறு தமிழோ ரைந்து மைம்பது மடைவே யோதிப்
பேசுமப் பயனைக் கேட்க விரும்பினேம் பெருக வென்று
னீசனவ் வுரைகேட் டாழ்வா ரிணையடி யிறைஞ்சி நின்று. (சுங)

திருமகள் விரும்பு மார்ப சிறியனே னிழைத்த புன்சொற்
றரும்பயன் விரும்பிக் கேட்பான் றடையறு மாசை யுண்டே
லருமறை முதல்வ சொல்வா னடியனேன் றனக்கு மாசை
பெருகவுண் டதனாற் கேணீ பேசுவ னென்று சொல்வார். (சுச)

## வேறு.

சீராருந் திருப்பள்ளி யெழுச்சி பத்துஞ் செப்பியதிற் றெளிவுறுசற் பொருளுஞ் செப்பி
யாராயும் வேதங்க ளொருநான் காலு மயனாலு மரனாலு மறியொ ணாத
நாராய ணன்சொரூப ரூப மாதி நலந்திகழும் விபூதியருட் குணங்க டங்கு
மோராருந் திருமாலை நாற்பத் தைந்து மிலங்குசரா சரமுருக விசைப்பா ராவி. (சுரு)

காயமொடு கரைந்துநீ ராள மாதல் கண்டனர்தன் மீதிலுறை கமலச் செங்கண்
மாயவனார் பூவிலுறை மங்கை யோடு மனமகிழ்ந்து தொண்டரடிப் பொடியார் தம்மைப்
போயெடுத்துத் திருமார்போ டழுந்தப் புல்கப் புறம்பொசிந்த நிலையாழ்வார்பூண்டயாக்கை
தோயமொடு தோயமுறக் கலந்த தொத்தார் சுடராழிக் கையனுமத் தொண்டர் தாமும்.

என்புநரம் புரோமநீர் மூளை மச்சை யிவையாலே திரண்டிலங்கும் யாக்கை கெட்டென்
மின்பொருவுஞ் சுடராழித் திருமா லெம்மான் மெய்ம்மையினே டுறக்கலந்த பரிசு தன்னை
யன்பாருட் பாகவத ரறையக் கேட்டு மச்சுதற்கா ளாகாதே யவனி யோர்க
டுன்பவலை வசத்துழன்றும் பிறந்துஞ் செத்துந் தொல்லைநமன் பாசத்தாற் சுழலு மாறே.

திரும்புண்ட கதியாபூந் தேவர் காணத் திருவுந்தி மடுவினிடைச் சிறந்து தோன்றி
வரும்புண்ட ரீகத்தி லயனுங் காண வானவர்கள் கோன்காண மண்ணுங் காண
விரும்புண்ட நீர்போல வரங்கத் தம்மா னிணையடிக்கீ ழடைந்தார்சொல் லிசைநன் மாலை
தருந்தொண் டரடிப்பொடிசெய் தவத்தின் வாழ்வைச் சதுமறைக்கு மெடுத்துரைக்கத் தகு
[மோ வம்மா.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளேசரணம்.

[illegible]

ஸ்ரீ

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

ஆசிலாத் தொண்டர் தொண்ட ரடிப்பொடி யரங்க மன்னு
மீசனைப் பாடி யாட்செய் திணையடி யடைந்த வாற்றைத்
தேசிக னருளா லடியேன் சிறிதறிந் தளவுஞ் செப்பி
மாசிலாக் கொல்லிக் கோமான் செய்கையும் வழுத்த லுற்றேன்

பொருவரும் வஞ்சி வேந்தர் பூண்டமா தவத்தி னாலே
திருவளர் கூட றன்னிற் சிறந்ததோர் மாசித் திங்க
டருபுனர் பூச நாளிற் சங்கரன் மகிழ்ந்து வாழ்த்த
வருமறை நாலும் வாழ்த்த வமரர்கள் குழாங்கள் வாழ்த்த. (உ)

காருறு முருவச் செய்ய பவளவாய்க் கமலச் செங்க
ணேருறு திருமா லேவ விருந்தவை குண்ட நீங்கிப்
பாருறு தவங்க ளேத்தப் பங்கயச் செல்வி காக்கச்
சீருறு கொல்லிக் கோமான் றிருவவ தாரஞ் செய்தான். (௩)

வேறு.

ஆர்த்தன சராசர மண்டர் பூமழை
தூர்த்தனர் முனிவர்க ளாசி சொல்லினர்
போர்த்தனர் சித்தர்கள் விசும்பிற் புன்மைகள்
வேர்த்தன தருமமு மெய்யு மோங்கின. (௪)

ஆடின ரந்தண ராயு நான்மறை
பாடின ரிருடிகள் படியில் வஞ்சகம்
வீடின வுவப்பொடும் விரிஞ்சன் வாழ்த்தின
னோடின ரொன்னல ருலக மோங்கின. (௫)

அப்படி நன்மைக ளன்பு கூரவும்
பொய்ப்படு தீமைகள் புரண்டு சாயவு
மிப்படி யுற்றசே யில்ங்கு சீரரு
ளொப்பரு மேனிகண் டுலகர் கூறுவார். (௬)

அருமறைக் கொழுந்திது வென்ப ரந்தணர்
திருவருண் மெய்யிது வென்பர் சித்தர்கள்
பொருவரு ஞானியர் போத மென்பர்க
டருமமென் பார்படி தாங்கு மன்னவர். (௭)

பொறையொரு பாலனாய்ப் புகுந்த தென்னவு
மறைதரு சாமந்தி யாக மென்னவு
மறைகளோ டயனரன் வாழ்த்தி யேத்தரு
மிறையருண் மதலையா யெய்திற் றென்னவும்.

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

தோன்றிய மதலையைச் சுருதி நீதியி
னீன்றவள் களிப்புற வெடுத்திம் மண்முதன்
மூன்றுல குயத்தமிழ் முறையி னல்கென
வூன்றிய திருமுலைப் பாலு மூட்டினாள். (௯)

## வேறு.

திருவவ தாரஞ் செய்த தினத்தினுக் கேழா நாளிற்
பொருவறு மதலை கையிற் பொருந்துபொற் காப்பும் பூட்டி
யருமறை விதியா லாரும் திங்களி லமுது மூட்டி
வருகலன் பலவுஞ் சாத்தி மாசற வளர்க்கு நாளில். (௧0)

## வேறு.

அல்லிப் போதயன் றனையை யன்பினாற்
புல்லிப் பூண்டு புனைரு மதலையைக்
கொல்லிக் கோன்குல சேகர னென்றுபேர்
சொல்லி வாழ்த்தித் துதித்தன ரந்தணர். (௧௧)

தென்னர் செம்பிய ராதியர் திக்குறை
மன்ன ரன்பின் வருமணித் தொட்டிலின்
மின்னு சோதி மதலையை மேவுவித்
தன்ன மன்னவர் பாட்டொடு மாட்டினார். (௧௨)

கிடந்தி ருந்து தவழ்ந்துபொற் கிண்கிணி
யிடங்கொ டண்டைத் தொனியு மிரைந்தெழ
நடந்து பேதையர் சிற்றிலை நாடொறுந்
தொடர்ந்த ழித்து வளர்ந்தனன் சேயிலான். (௧௩)

## வேறு.

யறுவறு முகுந்த மாலை வழங்கிடு மதுர வாயின்
றுறுபெரு மமுதந் தந்த வுடன்வளர் பேதை யார்பாற்
குறுநடைக் குறும்பு செய்து குவலயத் தரசர் போற்ற
சிறுநெறி யுறுதே ரோட்டித் தீதற வளர்ந்த மன்னர். (௧௪)

மறையவர் வகுத்த மெய்ம்மை வளந்தரு மனுநூ னீதி
முறையினிற் சவுளஞ் செய்து முப்புரி நூலுஞ் சாத்தி
யறைதரு கலைக ளெட்டெட் டாசற வாய்ந்திம் மண்ணி
னிறைகொண்ணர்ந் தரசர் போற்றத் திருமணம் புணர்ந்த பின்னர். (௧௫)

ஒருவரு மிருவர் தாமு மும்பரு மகிழ்ச்சி யெய்த
திருபர்க ளமைச்சர் கூடி நீணிலங் காத்தற் கிந்தப்
பொருவரு மைந்தம் இன்றே பொன்முடி புனைவோ மென்று
திருவடி டேக்கு ஞ்சூட்டச் சிறந்தா சாரு நாளில்.

### வேறு.

விரைசெய்தார் மணிமுடி வேந்த னாகியே
தரைமிசை யுயிர்க்கெலாந் தானொ ராக்கையாய்ப்
புரையறு மதிக்குடை நிழற்றும் பூபதி"
யரசியல் பதனையு மறைகு வாமரோ. (௧

### வேறு.

பொங்கோத வேலை புடைசூழ மன்னு புவிமன்னர் மன்னு புகழான்
வெங்கோப மிக்க வசுரேசர் சேனை விறலோடு வென்ற விமல
னெங்கோனி ராம னுயிர்காவல் செய்த படியென்ன வன்றி யிறைவன்
செங்கோல்செ லுத்தி வருநீதி தன்னை யெவரோ சகத்தி லறைவார். (௧௮)

புலிபால்சு ரப்ப விளமான்ம திக்கள் புரைதீர வுண்டு பொருமு
மெலிபால ருந்து சிறுகுஞ்சு பூசை முலையூடு மின்ப முறுமால்
வலிபான்மி குத்த கொலிகாவ லற்கு வருநீதி மானி னுயிர்கொள்
விலிபாலி ருந்த தெனலாவ தன்றி யெவரான டக்கும் வினையே. (௧௯)

மறைவாண ராலு முனிவோர்க ளாலும் வளர்வான வர்க்கி னுணைவாம்
குறையாத செல்வ முறுமாறு மன்னு கொடையான டத்தி யவராம்
பொறையார்பு விக்க னுறுதிங்க டோறு முயர்மாரி மூன்று பொழிய
விறையாறி லொன்று படிமேன்ம கிழ்ந்து குடிமல்க வின்ப முறுவான். (௨௦)

கூசாது வேத நெறியிற் றொடுத்து குலநாலு நீதி குலைய
மாசான்ம யக்கி வருமாய வஞ்ச வலைவேர றுத்து மதியை
யூசாடு ஞான வுருவிற்பி றந்தி வுலகேழின் மன்னி யொளிரு
மாசார முற்று மொருமேனி கொண்ட திருவென்ன மன்னு மறிவோன். (௨௧

படையால்வி ரிந்த புகழாலி லங்கு படிவானம் வேலை முழுது
முடையான ரக்கர் குலம்வேர றுத்த வுரவோனை யுற்ற நெறியா
கொடையாலெ டுத்த கரநீதி லங்கு குணஞான தான முடையா
னடையாரி டத்து முறுகோய்பொ ருமலருண்மாரி பொங்கும் விழியான்.

பூதால மென்று புகழட்டி லுற்ற பரதார மாசில் புகழான்
மாதாவெ னக்கு மெனவேயொ டுங்கு மனமாதி மூன்று முடையான்
பாதார விந்த மலராலி லங்கு படிவான வந்த பரனார்
வேதாக மங்கண் மனுநூல்பு ராண மிகுகேள்வி மன்னு செவியான். (௨௩

செய்யாளி லங்கு புவிநாத னென திருமால்சி றந்த வடிவா
மையாய சோதி யுருவைப்பி ரிந்து மதியார்க ளொன்றை யெனினு
மெய்யாய காதன் மகவொன்று பேணி யுடன்வாழ வீறு பெறுவோன்
பொய்யாத வாய்மை யுடையான டைந்த புலனைந்தும் வென்ற பொறியான். (௨௪

நெறியாலி றந்த புவியோர்க ளுக்கு நிரயாதி துன்ப வினைகள்
செறியாத விச்சை யவைசெய்து மன்னு செவியாதி யாகி வளரும்
பொறிவாயி னுற்ற புலன்மேவு தீமை பொடிசெய்யு நீதி யறிவை
யறியாத வர்க்கு மறிவார்த மக்கு மகல்வான ளிக்கு முரசோ (௨௫

குருநாடர் சோழர் மகதேசர் தென்னர் குகுநாட ராதி யரசர்
வருவார்நெ ருங்கி யிருபாணி ரைத்து மலர்தூவி நின்று தொழுதெந்
திருவாள வஞ்சி நகராள வென்று செறிமன்னர் பன்னி யடைவே
தருபாகு டங்கண் மலைபோலு யர்ந்த தலைவாசன் முன்றி லுடையான். (உசு)

வாயாலொ ருத்தர் கெடுமாறு ரைத்தன் மனதாலு மெண்ண லறியான்
காயாநி றத்தன் மகனூர்வ குத்த ககனாதி பூத மிடையி
லோயாது மன்னு முயிரான வைக்கு முறுதந்தை யோடு தமராய்த்
தாயாகி யன்பு புரிவானு யர்ந்த தனையேத னக்கு நிகரான். (உஎ)

வேறு.

இந்தவகை யாலவனி யின்பமுற வென்றே
வந்தகுல சேகரர் வழங்கிவரு நாளின்
முந்தைமறை தந்தபிர மற்குமுனி வர்க்குந்
தந்தையவர் கண்டுயி றலத்தினி லமர்ந்தார். (உஅ)

செய்யமலர் மங்கைதிரு மார்பினி லிருப்பக்
கையமரு மாழிவளை கார்முகின் மருங்கின்
வெய்யவொளி வீசுகதி ரிந்துவின் விளங்கப்
பையரவு தன்னுயர் பணங்கொடு கவிப்ப. (உகூ)

கோடிகதிர் மின்மினியின் மங்கியொளி குன்ற
நீடுமவு லிக்கிரண நேமியில் விளங்க
வேடவிழ் மலர்ப்பதும நான்முகனொ டீசன்
பாடமறை வானவர் பரிந்துநட மாட. (௩0)

கற்பக நிழற்கடவுள் காமனொ டமர்ந்தே
யற்புத மதிக்குடை யடுத்துற நிழற்ற
விற்புருவ மென்கொடிகள் வெண்கவரி வீசச்
சிற்பரம சோதிபெறு சித்தர்மலர் சிந்த. (௩க)

இருந்தன னனந்தன்மிசை யெந்தையரு ளாலே
திருந்தவுல காளுமுயர் சேரர்பெரு மானும்
பொருந்துமணி தங்கியொளிர் பூவணையி லின்பந்
தருந்துயிலில் வேதவொலி தானுற வெழுந்தான். (௩உ)

வேறு.

எழுந்தவர் பரமா னந்த னிருக்கையைத் திருந்த நோக்கி
யழுந்துறப் புவியிற் றாழ்ந்தா ரச்சுத னுசி லாத
செழுந்தவ முடையார் தம்பாற் றிருவருட் கருணை செய்தே
குழுந்தருள் பொழிதி லேகி யொளிவளர் விசும்பி லானன் (௩௩)

மண்ணுறப் பணிந்த வன்பர் மாயனை யுருகிற் காணார்
விண்மிசைக் கருடன் றோண்மேல் விளங்கிவீற் றிருப்பக் கண்டா
ரெண்ணரும் பரம சோதி யெழிறிகழ் சொரூப ரூப—
நண்ணுமெய்க் குணவி பூதி ஞானவா னந்த லீலை. (௩௪

அனைத்தையுந் திருந்த நோக்கி யரசர்கள் பெருமா னென்னே
வினைக்கட னடுவண் வைகி வெறுமையுற் றடியே னுன்னை
நினைத்திலே னமலா வென்று நெடுங்கணீ ரருவி சோரத்
தனைக்கரைத் துருகி நின்றார் தலைவர்த மிருக்கை சார்ந்தார். (௩௫)

மன்றல்சேர் துளவத் தாரான் மறைதலு முனைநா ளீன்ற
கன்றுபோய் மறைய நெஞ்சங் கரைந்திடுந் துருகு மான்போ
னின்றுநின் றிரங்கி வாழே னீணிலத் தினியென் றெண்ணி
வென்றிவேன் மன்ன னின்றான் விடிந்தது பொழுது மாதோ. ௩௬)

ஆதவ னெழுந்த போதி லரசர்க ளமைச்சர் நீதி
வேதியர் கவிஞர் பாணர் வீணையாழ் முழவம் வல்லோர்
மூதறி வுடையோர் கால மூன்றையு முணர்ந்து வைகு
மாதவ ராதி மன்னன் வாயிலின் மன்னி னார்கள். ௩௭)

இருட்பொழு தகன்ற வாறு மியாவருந் தன்பா லெய்தி
பொருட்பெற நின்ற வாறு முணர்ந்திலன் பூவை வண்ணத
தருட்கட றனக்கன் றீந்த வனுபவத் தொழுகி மன்னன்
மருட்கொளு முலக வாழ்வை மறந்திருந் துருகி னைந்தான்.

உய்வுற வாயி லுற்றோ ருத்தம னணையக் காணார்
வைகறை யெழுந்து நாளும் வந்தருள் புரியு மன்னன்
வெய்யவ னுதித்தோர் சாமஞ் சென்றது விறல்கொள் வேலான்
செய்திற மறியோ மின்னுஞ் செறிந்தில னென்று சிந்தை. (௩௯

வருந்தினார் வாயி லோனை வருகநீ யென்று கூவித்
திருந்திய மன்ன னின்னுஞ் செறிந்திலன் சீர்கொள் கோயில்
பொருந்தியத் திறத்தை யோர்ந்து பொருக்கென வுரைப்பா யென்றா
ரருந்தவ முடையான் சென்று தாதியர் தம்மோ டாய்ந்தான். (௪௦)

தாதியர் மன்னர் மன்னன் றங்கிய மாடஞ் சேர்ந்தாங்
கோதினார் வணங்கி நின்சீ ரோங்குபொன் வாயி றன்னில்
வேதிய ரமைச்சர் மன்னர் வேந்தநின் வரவு காணார்
மாதுய ருற்றா ரென்ன வாயிலோன் வந்தா னென்றே. (௪௧)

கூறினார் மடவார் கூறக் கொழுஞ்சுடர் மவுலி மீதி
னாறுபூந் துழாய்சேர் மாமா னல்குமா னந்த மன்னி
யூறிய வறிவை மீட்டுப் புலன்படு மொழுங்கிற் சேர்த்த
மாறிலாத் தன்பொற் கோயில் வாயில்சென் றடைந்தான் மன்னன் (௪௨)

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

மன்னவன் வாயி னண்ணி மறையவ ரரசர் வேந்த
னுன்னிய துணரு நீதி யமைச்சர்க ளுவந்து போற்ற
மின்னவிர் மணியிற் பொன்னில் விளங்குமா சனத்தி லேறி
யென்னையாண் முகிலே யென்ன விருந்தன னிருந்த காலை. (சங

மன்னவ ரமைச்சர் நீதி மறையவர் தம்மை நோக்கி
மின்னவிர் மவுலி வேந்தன் விளம்புவான் வேதாந் தத்தி
னுன்னரும் பொருள்கண் டுள்ள மோங்கினோ ருடன்வா ழே
லென்னைநான் வேண்டே னிந்த விருநிலத் தின்ப மென்னே. (சச

பின்னைமன் னவரை நோக்கான் பிரகிரு திக்கு மீடா—
மின்னையே யனைய செல்வம் விரும்பினர் குழாத்து னின்றெ
னன்னையே யத்தா வீதை யரியணை யாகு மென்றே
யென்னையிக் கழுமேல் வைத்தா ரியாவரொன் றிரங்கி னைந்தான். (சரு

அத்திறங் கண்ட மன்ன ரமைச்சர்க ளாவி வாடி
மெய்த்திறத் தின்ப நல்கும் விண்டுவுக் கடிமை யாய
சித்திர நிலையார் தம்மைச் சென்றழைத் திறைமுன் னுய்க்கி
யித்திறந் தேர்மி னென்ன யாவரு மிறைஞ்சி நின்றார். (சசா

கமலநான் முகத்தோன் செல்வ நரகெனக் கண்டு மெய்ம்மை
யமலவீ டறிந்து மன்னு மச்சுத னடியார் தம்மை
மமலமு மில்லா மன்னன் முன்னுறக் கண்ட போதி
லமலமுங் கடிவீர் வம்மி னிருமினென் றிறைஞ்சித் தானும். (சஎ)

இருந்தன னிலத்திற் கண்ட விருந்தவத் தோர்கண் மன்னு
திருந்துபார் முழுதுஞ் செங்கோல் செலுத்தியாள் கின்ற செ
பொருந்துமா சனத்தின் முன்போற் போயிருந் தருள்வா யெ
னருந்தட முகின்மேற் சென்ற கருத்தினர் கழற மன்னன். (சஅ)

மாசிலா நிலையீ ருங்கண் மலரடித் துகளே யின்றென்
பாசமார் பிறவி நோய்க்கு மருந்தெனப் பணிந்தேன் 'பின்னே
ராசனத் திருந்தா னன்றெ னறிவென வழுதான்" மன்னன்
றேசுடைத் திருமா றொண்டர் சென்றவ னடியிற் றாழ்ந்தார். (சகூ)

திருமகள் கொழுநற் கன்பு தினையின தளவு மின்றி
யிருநில மிறைஞ்ச யானை யெருத்தமுற் றிருமாப் பெய்தி
யருவினை வசத்தி லாடு மடியனை யிதுநீர் செய்தாற்
பொருவினன் னிலையீ ரந்தோ பொறுக்குமோ வென்று போற்றும். (ருo)

பின்னுமாங் கவர்பொற் றாளைப் பிடித்துயர் முடிமேல் வைத்தா
னன்னெறி யன்ப ரோடு நான்மறை முடிவின் மன்னி
யுன்னரும் பொருளை யுன்னி யுவந்தரி யருளாற் றன்னின்
மூன்னெடும் புவியிற் சேர்ந்த முத்தர்கண் மூவர் நால்வர்.

20764

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

எனவிசைத் தருளும் பொய்கை பூதம்பே யிசைத்த பாட்டு
மனவயற் புதுவைக் கோமா னவதரித் தரசன் முன்னே
வினிவருஞ் சமயத் தாரை வென்றதும் வேதக் கோன்பின்
மனமகிழ்ந் தருளிச் செய்த தமிழுமா மாய னூர்பால்.

மந்திரங் கேட்ட தீரன் றமிழுமா மழிசைக் கோமா
னந்தரத் தமரர் பாரு வரியைவா வென்று கூவப்
பந்தணை விரலாள் பூமி பதுமையோ டெம்மா னேகி
யிந்திரன் வணங்கச் சென்றாங் கிருக்கையூர் புக்க வாறும். (௫௩

ஓங்குசீர் மழிசைக் கோமா னுரைத்தநற் றமிழு மன்போ
டாங்கதற் பின்பு தொண்ட ரடிப்பொடி யாழ்வார் தோன்றி
பாங்குட னுரைத்த பாட்டும் பரமனை யடைந்த வாறுந்
தேங்கமழ் மாலை மார்பன் றிருந்துற விருந்து கேட்டு. (௫௪

செங்கழு யகனூர் மீதிற் றிருவரு ளிருந்த தன்றிப்
பங்கமின் முத்த ரிந்தப் படிமிசை வந்து தோன்றிப்
பொங்குமே மூலகி லிங்காப் பொறிபுல னோடு மாடு
மெங்களுக் கின்ப மல்கு மிருந்தமி ழிருந்த வாறே. (௫௫

என்றுரைத் துருகி னைந்தாங் கிருந்தமன் றிருந்து நீதி
யொன்றிய பகவற் பத்த ருடனிவை யுரைக்குந் தொண்ட
னின்றுநீர் புகலு மிந்த வெம்பெரு மக்க டம்பாற்
சென்றுநா னவர்க்காட் செய்யுந் தினமெனக் குறுமோ வென்றும. (௫௬

ஆங்கவர் தமக்காட் செய்வா ருடனமர் காலந் தானு
மோங்குசீ ரரங்க மாதி யுளதிருப் பதியின் மாயன்
பூங்கழல் வணங்கு நாளு மென்றுகொல் புகுமென் றெண்ணி
யேங்கிமன் னிருந்தான் மண்மீ தியாவரு மிறைஞ்சி யேத்த. (௫௭

வேறு.

[illegible] மச்சுதன்சீ ரடியருட
னிப்படியிற் சிலகாலங் கடத்துநா ளிகல்வேந்த
னொப்பரிய கருகூலந் தாரத்தி லொன்றுகெட
வெப்படியீ துரைப்பகெனக் காவலவ ரிடருற்று. (௫௮

மந்திரிக ளுடனுரைப்ப மன்னவனே டம்மொழியைத்
தந்திரித்தார் மந்திரிக டார்வேந்த னதுகேட்டு
வந்திருந்தா ரார்வேற்று மானிடராய் மனையிலெவ
னொந்திறைஞ்சிக் காவலவர் பாகவத ரெனநுவன்று

வேறு.

அவ்வுரை மன்னர் மன்னன் செவியுற வாவி வாடி
வெவ்விடங் குடித்தா ரென்ன விம்மினன் மனத்தி னுள்ளே
யெவ்வகை செய்தாற் றீரு மிப்பழி யென்ன வெண்ணிக்
கவ்வையில் குடப்பாம் பின்றே கதுமெனக் கொணர்மின் [illegible]

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

அடுத்துநின் றவர்க ளேகி யராக்குடங் கொணர்ந்து வைத்தா
டுப்பினின் மன்னன் பொற்பண் டாரியைக் கண்ணு ேனாக்கி
யெடுத்ததா ரயிர்த்த தாரை யியம்புகை யிடவு மென்று
குடத்தரு கணைந்தான் கேட்டோர் கோவொடு முரைப்ப தானார். (௬௧)

மண்டல முழுது மாளு மன்னவர் மன்ன கேட்டி
யண்டமுண் டுமிழ்ந்த சோதி யச்சுத னுசி லாத
தொண்டர்க ளன்றி யாருந் துன்னின ரில்லை யென்று
ருண்டுமெற் றியாங்க ளல்லா லுட்புகுந் தவர்க ளில்லை. (௬௨)

எனவுரைத் தையந் தீர்வேம் யாமெனக் குடத்தி னேரே
மனமகிழ்ந் தன்பர் சென்றார் வையக மன்ன னின்மி
னெனவவர் முன்ன மெய்தி யேழுல குண்ட சோதிப்
புனைமலர்த் துழாயான் றொண்ட ரெடுத்திலர் பொற்பண் டாரம் (௬௩)

என்றுசென் றிருந்த பாம்பின் குடத்தினில் யாருங் காண
வென்றிவேன் மன்னர் மன்னன் றிருக்கையை விரைவி னிட்டாங்
கன்றுதன் பொற்பண் டாரம் போக்கினு ரிட்ட வாழி
யொன்றெடுத் தரச னின்று னும்பர்பூ மாரி பெய்தார். (௬௪)

மந்திரித் தலைவர் தாமு மன்னவ னடியிற் றாழ்ந்தா
ரிந்திரன் பிரம னக்க னாதிய ரெவருந் தத்தஞ்
சிந்தையின் மகிழ்ந்தா ராழ்வா ரரசியற் சிலுகை விட்டாங்
கெந்தநா ளரங்கத் தானை யாமனு பவிப்ப தென்ன. (௬௫)

## வேறு.

எம்பெருமான் சொன்மாலை யிருளிரியச் சுடர்மணிக ளென்று பத்து
நம்பெருமா டிருவுளமு நான்மறையு மயனரனு நலத்தோ டோங்கு
மும்புருமா முனிவர்களு முலகேழு முருகினீ ராள மாக
வம்பவிழ்பூந் துழாயானை யனுபவிப்ப தென்றெனவும் வகுத்துக் கூறி. (௬௬)

சீராருந் திருவரங்க நகருறையும் பாகவதர் சேடந் துய்த்தவ்
வாராத காதலர்கள் குழாங்களுட னடியேனு மமர்ந்து வைகி
யேராரும் பேரின்ப மென்றுகொலோ வுண்பதென வெடுத்தோர் பத்துங்
காராரும் பொழில்வஞ்சி காவலவன் கட்டுரைத்தான் ககனம் வாழ்த்த. (௬௭)

ஆங்கதற்குப் பின்வஞ்ச வுலகத்தின் வாழ்க்கையையா தரியே னென்றே
யோங்கியசீ ரரங்கத்தி லுற்றனந்தன் மீதேறி யொழிவில் காலம்
பூங்கமலக் கண்வளரும் புனிதனன்றி யெனும்பத்தும் பொருந்த வோதித்
தேங்கமழ்பூந் தார்வேந்தன் றிருமனத்தாற் றிருவரங்கஞ் சென்று சேர்ந்தான். ()

அந்நகரிற் பாகவத ரனைவர்களு மெதிர்கொண்டாங் காழ்வார் செய்ய
பொன்னடியிற் புக்கிறைஞ்சப் பூபதியா யாழ்வாராய்ப் போற்று மன்பர்க்
கின்னமுதாம் பெருமாளுந் திருத்தொண்டர் தாளிணைக ளிறைஞ்சி வாழ்த்தி
முன்னுறநா ளினைத்தின்றோ முடிந்ததென வணியரங்கன் முற்றத் துற்றார். (௬௯)

அணியரங்கன் திருமுற்றத் தன்பர்களோ டினிதமரு மாழ்வார் சோதிப்
பணியணைமே லமரர்தொழப் பங்கயக்கண் வளர்ந்தருளும் பரனைக் கண்டெம்
மணிவண்ணா சரணமென மண்மீதிற் பணிந்திறைஞ்சி முகுந்த மாலை
தணியாமா றணிந்துலகஞ் சுகமடைய வடமொழியாற் சாற்றி மாமால். (௭0)

அருகணைந்து திருவுருவை யுற்றிறைஞ்சத் திருக்கண்வள ரரங்கத் தம்மா
னுருகுபெருங் காதலரைத் திருக்கண்விழித் தறநோக்கி யொப்பி லாதீர்
திருமகளோ டியாமுறையும் வேங்கடத்தில் வருதியென்றான் செகங்கட் கெ
மொருவனென நின்றவரு மணிவணனார் செயனோக்கி யுருகி னைந்தார். (௭௧)

நைந்துருகித் திருவரங்கத் தம்மானை யன்பர்பெறு ஞான வாழ்வை
யைந்துதலை யாடரவை யலர்கமலத் துள்ளுறையு மன்னை தன்னைச்
சிந்தையுறப் பதிவித்துத் திருவரங்க நகர்நீங்கித் தேவர் வாழ்த்த
முந்தைமறை தொழுங்கச்சி யருளாளர் தமைவணங்கி முதல்வர் கூறும். (௭௨)

சீராரும் வேங்கடத்திற் சென்றடைந்தார் திருமலையைத் திருந்த நோக்கி
யேராரும் புவிமீதிற் பரமபத மிதுவென்றே யெண்ணி நின்று
காராரித் திருமலைமே லேதேனு மாவேனான் ககனத் தோடிப்
பாராரும் பதம்வேண்டே னென்றுரைத்தா ரங்கிருந்தோர் பத்து மன்பர். (௭

அந்நெறிமெய் யன்பினொடுந் திருமலையை வலஞ்செய்தாங் கதன்மேல் வை
பொன்னவிர்நே மிப்பெருமான் பூங்கழற்கீழ் வானவரும் புகழ வைகி
யென்னமுதே சரணமெனச் சிலகால மிருடிகளு மிறைஞ்ச வாழ்ந்து
பின்னொருநாள் விற்றுவக்கோட் டம்மானை யடிதொழுவான் பெயர்ந்து போனார்.

அண்டர்தொழும் விற்றுவக்கோட் டம்மானை யடிவணங்கி யதனுள் வைகுந்
தொண்டர்களை யடிதொழுது சுருதிமுதல் வானவருந் துதிசெய் தேத்த
வொண்டமிழோர் பத்துநீ யெனைவேண்டா யாயினுநா னுன்னை யல்லாற்
புண்டரிகக் கண்ணணெந்தாய் பற்றிலேன் மற்றெனவும் புவனம் போற்ற. (௭௫)

கட்டுரைத் கொல்லிநகர்க் காவலவன் செங்கமலக் கண்ணன் வைகு
மெட்டெழுத்தே துணையாக விருநிலமும் வானகமு மிறைஞ்சு மவ்வூர்
விட்டெழுந்து வசுதேவர் திருமகனா ராய்ப்பாடி சென்று மேவி
மட்டவிழுந் துழாய்முடியான் வரவுணரு மாய்மகளிர் வசன மாக. (௭௬)

ஊடலுடை யொருபத்து மெடுத்துரைத்து வான்முதலா முலகம் போற்ற
மாடமிசை மதிதவழும் வடமதுரை நகர்மன்னி யதில்வாழ் மாமா
றுடொழுது தேவகியார் தஞ்சிறுவன் மழலைச்சொற் றுங்கே ளாதே
யீடுபெட்ட சொற்றொகையோர் பத்துரைத்துக் கண்ணபுரத் தெய்தி னாரங்

அந்நகரத் தினிதமரு மச்சுதனைத் தயரதனா ராவி யாய
வென்னமுதா மிராகவனாய்த் திருவுளத்தி லெண்ணியவன் றன்னை யீன்ற
தன்னிகராள் கௌசலையா ளிராகவனைத் தாலாட்டுந் தாலாட் டாக
வின்னிசையாற் பத்துரைத்துத் தயரதனா ரிராகவனார் சீர்னி லேக.

வருத்துமுற்றுப் புலம்பியசொற் றொகையாலே யொருபத்தும் வகுத்துக் கூறி
திருத்திகழுந் தில்லைநகர்ச் சித்திரகூ டஞ்செறிந்து தேவர் வாழ்த்த
வுருத்திரனு மடிவணங்க வுலகனைத்து முண்டுறங்கு மொருவன் றன்னைக்
கருத்திலுறப் பதிவித்தக் கருணைமுகி லயோத்தியெய்திக் ககனம் வாழ. (எ

வேறு.

[illegible]ர் குலமுழுது மறுத்த வாற்றை வான்மீகி விரித்ததனைத் தொகுத்து ஞானச் [illegible]மைந்த தமிழ்ப்புத்தி லருளிச் செய்து சுருதிதொடர்ந் தறிவரிய சோதியாகி மல்லடர்த்த மாமால்வை குந்தம் புக்கு மாமணிமண் டபஞ்செறிந்து கொல்லிக் கோமா னெல்லையில்பேரின்பவெள்ளச் சுழியின் மூழ்கி யிருந்தளித்தார் முத்தருடனிருந்துவாழ்ந்தார்.

குலசேகரப்பெருமாளாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

காராரும் பொழில்வஞ்சி காவலவன் கதிர்மவுலிக்
கூராருஞ் சுடர்வேற்கைக் குலசேக ரன்றிறமு
மோராரும் பாகவத ரின்னருளாற் சிறிதியம்பிச்
சீராருந் திருப்பாணாழ் வார்திறமுஞ் செப்புவாம்.

மாணார்ந்த திறலரங்க மணிவண்ணனைக் கண்டகண்கள்
காணாமற் றொன்றினையு மெனக்கரைந்து கட்டுரைத்த
பாணாழ்வா ரனுபவத்தைப் பாடவெனப் பத்தர்கண்டு
நாணாதே யொருப்பட்டே னிதின்வேறு நகையுளதோ.

மனுமகனுக் கயன்கொடுத்த மரகதமா மணிக்குன்ற
மெனுமரங்கத் தம்மானை யிதயமல ரணைக்கிடத்தி
யனுபவிக்குந் திறமுணரிற் றிருமகளுஞ் சும்மடியேன்
பனுவலுக்கோ வெளியாவர் பாணாழ்வா ரல்லரோ.

என்றாற்பொய் யடியேனுக் கெளிதோமற் றவன்சீர்த்தி
நின்றாங்கே யதுநிற்க நாயினேன் புன்சொலினு
மொன்றாமா தென்னெண்ணி லுரைதோறுந் திருப்பாணன்
குன்றாத திருநாமம் வரலான்மெய் குறித்தோரே. ௨௫

ஆங்கவையே துணையாக வறைவேன்மெய் விண்ணின்று
பூங்கமலக் கண்ணெம்மான் றிருவருளாற் புவியின்மறை
யோங்குதிரு வுறையூரிற் றிருக்குலத்தா ருறுதவத்தின்
பாங்கதனாற் கார்த்திகைமா தத்தில்வளர் பக்கத்தில்.

செய்யநெறி யுரோகணியிற் றேவர்களுந் திருமறையும்
வையகமா முனிவர்களு மாதவரு மகிழ்ந்தேத்தப்
பையரவத் துணைக்கிடந்தான் பத்தர்குழாம் பரிந்தோங்க
வையனெனை யாளவந்த திருப்பாண னவதரித்தான்.

ஈன்றாரு மறியாதே யிலைமறைகா யெனமண்ணிற்
றோன்றாதே வளர்ந்தருளிச் சுருதிதொழ வுலகுய்ய
மூன்றாறு திருவயதிற் கைசிகநா ரதமுனிவர்
போன்றாரு மிவர்க்கொவ்வா ரெனுமிசையிற் பொதுவின்றி.

சூழ்விசும்பு மதிலமரர் தொல்லுலகு மம்புவியு
மாழ்கடலு மெண்கிரியு மயனரனு மசுரர்களும்
வாழுமுயிர்ச் சராசரமு நீராளு மயமாக
வேழிசையும் பாண்பெருமா னம்பெருமா னிடத்திசைத்தா.

தென்னாற்றங் கரைநின்று திருப்பாண ரிவைபயில
வந்நாட்டார் திருக்குலத்தி லவதரித்தா ரிவர்யாரோ
பொன்னாட்டி லுள்ளவரோ வெனப்புகலப் புண்ணியரும்
பன்னாளுந் திருவரங்கத் தம்மானைப் பணிந்தேத்தி. (௯)

அப்படியே பலகால மந்தரங்க சேவைபண்ணி
யொப்பிலார் சங்கீதம் பயின்றிடுநா ளுயர்வானு
மிப்படியு மளந்தபிரான் றிருமார்பி லினிதமருஞ்
செப்பென்னுங் கனதனத்தா டிருமங்கை மனமகிழ்ந்தே. (௧0)

வேறு.

திருவ ரங்கநக ரெம்பி ரானொடிவை செப்பும் வானிலுறை தேவரு
மருவ ரும்பொருவில் வீட தாதியுல கேழி னும்மிசை வழுத்துவோ
ரொருவ ரிங்கிவரை யொத்து ளார்கள்பிற ருண்டு கொல்லுரைசெ யும்பவிப்
பெருகு காதலர்பு றம்பு நிற்றல்பழு தென்று செங்கமலை பேசலும். (௧௧)

அண்ட ரண்டமு ளடங்க வுண்டுதுயில் கொண்ட மாலணி யரங்கனார்
புண்ட ரீகமலர் மங்கை கட்டுரைசெய் போதி லங்கவளி னோங்குநந்
தொண்ட ரைக்கொணர்மி னென்று செம்பவள வாய்திறந்திறைவர் சொல்லவக்
கொண்டல் கோயிறிரு வாயில் காவலவ ரேகி னார்குழுவொ டேகியே. (௧உ)

வீதி பற்பல கடந்து சென்றவர்க டிருமு கத்துறையை மேவிநின்
றோதி நாதனரு ளச்சு தன்னணி யரங்க னின்றனை யழைத்தனன்
போதி யெங்களொடு மென்று செப்பியவர் பொற்ப தங்களி லிறைஞ்சலுஞ்
சாதி யிற்கடைய னென்று பாணரது தக்க தன்றென வணங்கினார். (௧௩)

வணங்கி னறவ ருரைபப மற்றவர்கண் மாசி லாநெறி யரங்கர்மூக்
குணங்க டந்தவர்மு னெய்தி யிம்மொழிகள் கூறு வோமெனவு மேகிட
பணங்க ளாயிர மிலங்க னந்தன்மிசை மன்னு வோவினியபத்தனு
றிணங்கு கின்றிலர் குணங்க ளெண்ணியிவ ணெய்து வாரெனன விறைஞ்சினார். (௧௪)

வேறு.

அந்தவுரை சிந்தைபுக வாதியவ ரோடு
முந்தைமறை நீதிகுல முற்றும்வரு வித்த
வெந்தமுறு தொல்குல மியம்பிலெழு தன்ப
வந்தகுல மேகுலம் வரச்சொலுமி னென்றார். (௧௫)

கன்றிவை யுரைத்திடுவ நாதவென நால்வர்
சென்றுவிரை விற்றிரு முகத்துறை செறிந்தே
நின்றிசை வழுத்துநிம லர்க்கிவை நிகழ்த்த
வென்றுளது கேண்மினென மற்றவ ருரைப்ப (௧௬)

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

மின்னைமிளிர் நேமியுடை விண்டுவுரை மெய்யப்
பின்னைமனை வாளனை யடைந்துபிறி தற்றுத்
தன்னையற விட்டதலை வர்க்கசது தருங்கோ
லென்னையவ ரோடுமிறை யெண்ணிடவு மென்றே.

செப்பியடி யேன்முடிவி றீவினைசெய் நீச
னொப்பரிய சோதிவள ருத்தம தலத்தி
லெப்படி மிதிப்பதிரு கால்கொடெனை யாளு
மப்பனொடு கட்டுரைமி னன்பரென வாழ்வார்.

கூறவிறை யேவலொடு சென்றவர்கள் கோவே
மாறிடி லுமைக்கொடுசெல் வோம்வலியி லென்றே
யேறியெதிர் செல்லவவ ரோடியவ னொட்டா
தாறுவரு காவிரியி னக்கரையி லானார்.

இத்திற மரங்கரோ டியம்பிடுவ மென்றே
மெய்த்திற முணர்ந்தநெறி நால்வர்களு மீண்டாங்
கத்திறமு மாயனொ டறைந்தனர்க ளம்மா
னெத்திற மியற்றிலிவ னெய்துமென வெண்ணி.

வேறு.

லகி லாத மாமாயை யரங்கன் றனையர்ச் சனைசெய்யு
லக சார்ங்க மாமுனியை யுவந்து கூவி யுத்தமபோய்ப்
ருங் காண நின்றோளிற் பாணாழ் வானைப் பரிந்தேற்றி
வும் பதியை வலஞ்செய்து கொணர்க வென்றா னிகரில்லான்.

வேறு.

மாசிலா முனிவன் மாயன் மலரடி வணங்கி யேக
வாசிலா வனைத்துக் கொத்து மவனுடன் சென்மி னென்றே
யீசனு மருளிச் செய்ய யாவரு மெழுந்து சென்றத்
தேசினா னின்று பாடுந் திருமுகத் துறையை மன்னி.

சுற்றுற வளைந்து கொண்டு தொழுதனர் திருப்பாணாழ்வா
ருற்றவர் தாள்க டம்மி லுடன்பணிந் துருக வீசற்
கற்றமா முனிவ னாழ்வீ ரருளிப்பா டெமக்கின் றென்றா
னற்றவ முடைய பத்தர் நானது செய்யே னென்றார்.

ஏடவிழ் துளபத் தாரா னெடுத்துமைக் கொணரச் சொன்னா
னோடவு மொட்டோ மாழ்வீ ரென்றன ருவந்து சென்றார்
மாடுநின் றவரை நோக்கார் மற்றொரு திசையை நோக்கிக்
கூடுமோ நீசன் மாசில் குலத்தொடு மென்று கூறி.

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

கடுப்பிணி லாழ்வா ரோடக் காத்துற வளைந்து நின்றார்
தடுத்தன ரோட றன்னைச் சரணென வணங்கி மண்ணிற்
படுத்தனர் திருப்பா ணாழ்வார் பங்கயத் தயனும் போற்ற
வெடுத்துற முனிவ னேர்ந்தி யிருத்தினான் றிருத்தோ டன்னில்.

நண்ணரு மிலங்கை வேந்தை நாளைவா வென்ற வந்நாட்
கண்ணனைத் தோண்மேற் கொண்டு களித்தமா றுதியை மானட்
பண்ணமர் கவிவ லானைத் தாங்கிய பனவன் பெற்ற
வுண்ணிறை மகிழ்ச்சி யேழே ழுலகினி லொருவர்க் குண்டோ.

இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் முனிவர் சித்தர்
கடிமலர் சிந்தி யார்ப்பக் காசினி யோர்கள் போற்றிப்
படிமிசை யிறைஞ்சி வாழ்த்தப் பத்தர்கள் குழாங்களோடு
மடிதொறுஞ் சேறு பாயு மானந்த வருவி நீரால்.

அணியரங் கத்தை முக்கா லவ்வணம் வலஞ்செய் தேகப்
பணியணைக் கிடந்த மாமால் பாணர்மெய் விழிக ளோர்முன்
கணிகணன் பின்னே போன கஞ்சமா மலர்த்தா ளாதி
மணிமுடி வரையுங் காட்டி மாசிலா மகிழ்ச்சி யீந்தார்.

முமலமு மற்ற நீதி முனிவரன் றிருத்தோண் மன்னி
யெமலமுங் கடிவார் வீதி யூடவ ரேகுங் காலை
யமலனெம் மாதி நீதி யணியரங் கத்து ளெம்மான்
கமலபா தங்கள் வந்தென் கண்ணுளேநிற் கின்ற வென்றும்.

நின்றதாள் போய தாளா னிலம்விசும் பளந்து நீண்ட
வென்றிவே லரக்கர் துஞ்ச வெங்கணை துரந்த வேந்தன்
மன்றல்சேர் துளபத் தாரான் வளர்திரு வரையிற் கண்டு
சென்றதாஞ் சிவந்த செம்பொ னுடையிற் சிந்தை யென்றும்.

வேறு.

மந்திபாய் வேங்கட மலையை மன்னியு
மிந்தியங் கடிந்தவ ரிதயப் போதினுஞ்
சிந்தியா தடிதொழுந் திருவ ரங்கனு
ருந்திமே லனதுயி ரொடுங்கிற் றென்னவும்.

கலகமா ரிலங்கையர் வேந்தன் காட்டிய
வலகிலா வாற்றலை யறுத்த மாயனு
ருலகெலா முண்டொடுக் குதர பந்தனத்
திலவுமென் னுளத்தென நெகிழ்ந்து கூறியும்.

MAHAMAHOPADHYA
DR. U. V. S. IYER LIB
NAGAR, MADR

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

வேறு.

தந்தைதாய் சுற்ற முற்ற தமியனே னுயிரு மாகி
முந்தைநாள் விரும்பிச் செய்து மொய்த்தவல் வினையுந் தீர்த்தென்
சிந்தையே கோயில் கொண்டு திருவரங் கத்துள் மன்னு
மெந்தையார் திரு[illegible] வென்னையாட் கொண்ட தென்றும்

வண்டடு ரிதழித் தாரோன் வல்வினை முழுதுந் தீர்த்துக்
கொண்டல்வந் தமருஞ் சோலைக் குளிர்புன லரங்க மன்னி
யண்டரண் டங்க ளாதி யனைத்துள பொருளுந் தண்டா
துண்டமர் பிடற கண்டூ ருயக்கொண்ட தென்னை யென்றும்.

கையம ராழி சங்கங் கதிர்மதி யிருபான் மன்னு
மையமர் கிரியி தென்ன வளர்வதாங் கருணைக் குன்றம்
பையர வணையுண் மன்னு மரங்கனார் பதுமம் போன்ற
செய்யவா யையோ வின்றென் சிந்தனை கவர்ந்த தென்றும்.

பரியவா ளவுண னாகம் படிமிசை மடிமே விட்டே
யுரியவா னுகிராற் கீண்ட வரியென அரங்கத் தம்மா
னுரியமா முகத்தி னீண்டு செவ்வரி யோடி வாடாப்
பெரியவான் கண்க ளென்னைப் பேதைமை செய்த வென்றும்.

பாலனாய் ஞால முண்டு பங்கயச் செல்வி தன்னோ
டாலமா மரத்தி லோர்சிற் றிலையம ரரங்கத் தம்மான்
கோலமா மணிக ளாரங் குறுநகை முடிவில் சோதி
நீலமா மேனி நெஞ்சை நிறைகொண்ட தையோ வென்றும்

கொண்டல்போ லுருவத் தானைக் கோவல னாகி நெய்பா
லுண்டசெவ் வாயி னானை யுளம்புகுந் துருக்கு வானை
யண்டர்கள் பெருமான் றன்னை யமுதினை யரங்கத் தானைக்
கண்டவென் கண்க ளாற்பின் காண்கிலே னொன்றை யென்றும்.

வேறு.

அப்படியே திருமொழியோர் பத்துரைத்தாங் கணியரங்கன் றிருமு
லொப்பரிய முனிவரனோ டெய்தியவன் றிருத்தோணின் றும்பர் வா
செப்பரிய பாண்பெருமா ணம்பெருமாள் சரணமெனச் சென்று தா
ரிப்படியே யிறையருளின் செயலிருக்கு மென்றொருவர்க் கியம்ப லா

சரணமெனத் திருவடிக்கீழ்ச் சென்றிறைஞ்சும் பாண்பெருமா டன்னை
சரணவொழுங் குறும்வஞ்சப் பொய்யன்புக் கெட்டாத கமலச் செவ்
பூரணனெழுங் கிணையடியை மெய்யன்பர் சென்னிமிசைப் பொருந்த
பூரணிதுவே புகலிடமென் றக்கமலத் திருவடியி லடங்கி னாரே.

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

வேறு

இன்பவீ டடைவார் தூலமா முடல்விட் டெழிறிகழ் சூக்குமங் கழற்றித்
துன்பவா தனையும் விரசையிற் போக்கிச் செறிவர்க டுகளறு பாண
ரென்புதோ லுரோமத் தூலமு மரங்க ணிணையடி யெய்திய தென்று
லன்பினா லன்றி யொன்றினா லுய்யு முபாயமெவ் வண்டத்தி லுளதே.

திருப்பாணாழ்வார் திருவடிகளேசரணம்.

20764



ஸ்ரீ

வடிவழகியநம்பிதாஸர்

இயற்றிய

# நம்மாழ்வார் பிரபந்தம்.

இது

தென்னூரிலிருக்கும்—காசாங்குடி

ஆஸூரி. கி. வீரராகவாசாரியர் ஸ்வாமி

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர் **P. R.** கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.


திரிசிரபுரம்:

ரிவிபூ அச்சியந்திரசாலை.

1909.



*Copy Right.*]


[விலை அணா அ.

ஸ்ரீ

# நம்மாழ்வார் பிரபந்தம்.

உருவெழுதி யயனறியா வோதவண்ண ரடியடைந்த
மருவெழுதண் ணுறையூரன் வளர்புகழின் றிறங்கூறிக்
குருவெழுதி யடியேனுக் கருளியசொற் கொழுந்தமிழாற்
றிருவழுதி வளநாடன் றிறமறிந்த படிபுகல்வாம்.

படிமுதலை முலகுண்ட பரம்பரனைப் பத்தியினான்
யடிபிடித்து நின்னில்யான் பெரியனென வழக்காடி
யடியடைந்த சடகோப னனுபவத்தை யெடுத்துரைப்பக்
கொடியனே னொருப்பட்டேன் கொடும்பிழைவே றிதினுளதே

சீர்கொண்ட திருவழுதி வளநாட்டிற் சென்மித்தோர்
பேர்கொண்டோ ராவணத்தென்* பேரெழுதப் பெற்றுமிலே
னேர்கொண்ட திருக்குருகூர்† ரெல்லையிலோர் நாயாயவ்
வூர்கண்டு புறந்திரியா நாயேனாவீ தொருப்படுவேன்.

வேறு.

குரவர்பால் வஞ்சஞ் செய்து குறைகட னடுவட் சோதி
யரவணைக் கிடந்த மாய னடியவ ரபசா ரத்தி
லிரவுநன் பகலும் வைகு மிருவினை யேனோ மாலைப்
பரவிவாழ் குருகைக் கோனைப் பாடவென் றொருப்பட் டேனே

ஆசார வீன னாகி யரிவையர் கற்புக் கற்பங்
கூசாது சென்று தீண்டிக் கொடுவிடந் துய்ப்ப யாரு
நீசாபோ வென்று நீக்கு நீசனேன் றானோ மாறன்
றேசாரும் புகழைக் கூறச் சிந்தனை செய்தே னந்தோ.

அருவின தெழிலை யஞ்சா தந்தனிங் கறையு மாபோ
லிருவினை வசத்தி லாடு மிடுகடை யேனும் பாடத்
திருவரு ளுடையார் போற்றுஞ் செண்பக மாறன் றன்னை
கருதினே னென்செய் கின்றேன் கற்றவர் கருத்தி னேரே.

ஆவணம்—அடிமைச் சீட்டு. † குருகூர்-குருகனென்பவனது ராஜதானி.

வேறு.

மாசன மதுரகவி தம்பிரான் வாழ்மாற
ஞசி றமிழ்மறையோ ராயிரத்தி லோர்பாட்டி
லீசன் றிறமுணர்ந்தா ரெங்ஙனே சொல்லிடினுந்
தேசுறுபே ரின்பம் பயக்குமென்றான் றீவினையேன்.

ஆங்கவையே சார்வா யவனை நினைந்தவன்றன்
பூங்கழலே யேத்தப் புலையே னெருப்பட்டே
னோங்கு புகழ்க்கவிக ளோரா ரிதன்பிழைமண்
டாங்குமணற் சோறு தருங்கல்லா ராராய்வார்.

வேறு.

ஆதி நாதன் றிருவுந்திக் கமலத் தயனுக் காங்கொருநா
ளோதித் திரண்ட சதுரயுக மிரண்டா யிரமா மோராண்டு
பதித் திடாநாண் முந்நூற்றே டறுபத் தைந்தும் பேறுவண
[illegible] மாமயற்கு நிறைந்த வயது மொருநூறும்.

வேறு.

[illegible] சதுரயுக மீரைஞ்ஞூ றயன்பகலில்
வந்தமனுப் பதினால்வர் மற்றதனைக் கூறிட்டுப்
பந்தமறு மோரொருவற் கெழுபத்தொன் றுய்ப்பரிப்ப
நந்தலிலா வோராறு பாரணமென் னநாட்டி.

வேறு.

அத்திற முடைய நீதி யயற்கொரு பகலிற் றோன்றி
மெய்த்திற மனுக்க ளெண்ம ரறுவரும் விரைவின் வீவர்
பொய்த்திற மணையாக் கங்குற் பொழுதெலாஞ் சலதி மூடு
மித்திறம் பிரமர் தோன்றி யிறந்தவர்க் கிலக்கே தென்னில்.

செப்புமேழ் கடலி னெக்கர்ச் செறியுநுண் மணலின் மிக்க
தப்பற வுதித்தார் முன்னஞ் சாற்றிய விவரிற் பின்னு
மிப்பொழு தண்ட மெல்லா மியற்றிய பிரம னுருக்
கொப்பரும் வயது நூற்றி லோங்குமுன் னைம்ப தாங்கே.

அற்றபின் னைம்ப தென்றே யறைவதின் முதனா டன்னி
லுற்றதோர் பகலி லீரே ழுரைப்படு மனுவி னால்வர்
கற்றசீ ரிருவர் காலங் கடந்தபி னேழா நாமப்
பெற்றவை வச்சு [illegible]

## வேறு.

சாற்றரிய சதுரயுக மெழுபத் தொன்றிற்
சதுரயுக மிருபத்தே ழுவற்குச் சென்று
தோற்றியவை கழிந்ததற்பி னிருபத் தெட்டிற்
றுலங்கியதோர் துவாபரமா முகத்தந் தத்தி
லேற்றமுடை நாவலந்தீவிற் றென்பா
லிலங்குதிருக் குருகூரி லீசன் கூறு
மாற்றன்மிகுங் கேத்திரமோ ரைந்தின் மாய
னருள்வளருந் தாந்தக்*கேத் திரம தாய.

## வேறு.

ஆசில் பொதிய மலைநல்கு மலையார் பொருநை வளமுடைய
மாசில் வழுதி வளநாட்டின் மாடத் திருக்கு ருகூரின்மறை
பேசும் வன்ன நான்கிலறம் பெருக்கு நாலாம் வன்னத்திற்
றேசொ டோங்குந் திருவழுதி கிழவ னென்போன் றிருமகவ

## வேறு.

அறந்தாங்கி யொருதித்தா ரவர்மகனா யுலகுய்யச்
சிறந்தோங்கு மருட்சக்ர பாணியார் சென்மித்தார்
பிறந்தார்மற் றவர்மகனா யச்சுதரென் போர்பெரிய
திறந்தாங்குஞ் சேந்தரவர் திருமகனாய்ச் செனித்தனரால்.

மற்றவர்க்குத் திருமகனாய் வுந்தனர்செங் கண்ணரவர்
பெற்றமகன் போர்க்கழியார்† பெருந்தவத்தா லுயர்ந்தோங்
யுற்றவர்பாற் காரியா ருதித்தனரே யுலகுய்யக்
கற்றவர்கண் மணியெனுமக் காரியார் கலையனைத்துட்

ஓதிவளர் திருவயதாங் கொருபத்தா றுற்றதற்பின்
வேதியர்கள் விதிப்படியே விளங்கியதம் மரபினுறு
சாதியிலோர் மடக்கொடியைத் தானோக்கி மணஞ்செ
வாதியரு ளால்வந்த போர்க்கழியா ராய்ந்தனரால்.

உலகனைத்து முறநோக்கிக் காரியார்க் கொத்தவெழி
லிலவிதழ்வாய் மடக்கொடியைக் காணாதே யிறைபெருஞ்சி
நிலவுதிருப் பரிசார நீணகரிற் போர்க்கழிதங்
குலமிருந்த தெனக்கேட்டுச் சென்றுரக் குலமோங்க. (௧௬)

---

ந்தன்—ஒரு அரசன். * இவருக்குப் பொற்காரியா ரென்றுந் திருநாமம்
மாழ்வார் தாலாட்டில், 'கார்க்கழியாவேழக் கடறாண்டி மாறுபட்டோர்—போர்க்
ழியார் தோளாண்மை பூத்தகுணக் குன்றமோ' என வந்திருத்தல் காண்க.

வேறு.

ருவார் பொழில்கள் புடைசூழும் வண்ப ரிசாரத் துறவிபவரிற்
ருவாழ் மார்பர் திருத்தம்பி தர்ப்பா சனத்தர் திருமகளா
ருமா மறையின் றிருவுருவா முடைய நங்கை யெனுமணங்கைப்
பருமா கடலில் வருமமுதைப் பேசிச் சென்றார் போர்க்குழியார். (உ0)

வேறு.

பெண்பேசி யிவரணையப் பெற்றவர்மா துலைருற்றார்
மண்பேசு மரபுடையார் குடிகுலத்தின் வழிகேட்டு
விண்பேசும் புகழ்க்காரி யார்க்கந்த மெல்லியலைப்
பண்பேசு மறைவிதியிற் கொடுத்தாரிப் படிவாழ. (உக)

வேறு.

திருமணம் புணர்ந்த பின்பு சிலபக லுகந்தவ் வூரிற்
பெருமணக் கோலத் தோடும் பிதாவொடு மன்னை யோடு
மருமணக் குழலி யோடும் போர்க்குழி வைப முய்யத்
தருமண வாள னின்பந் தாங்கிவாழ்ந் திருக்கு நாளில். (உஉ)

வேறு.

செங்கமலத் தடவயல்சூழ் திருப்பரிசா ரத்திருந்து
பொங்குபுகழ்க் காரியா ருடையநங்கை யொடும்போந்து
கொங்குகமழ் பொழில்புடைசூழ் குறுங்குடியைக் கும்பிட்டுத்
திங்கடவழ் மணிமாடத் திருக்குருகூர் நகர்செறிந்தார். (உங)

வேறு.

சீரார் மாடத் திருக்குருகூர் செறிந்கா ரின்பச் சிறப்பினெடும்
பாரோ ரறியாப் பெருஞ்செல்வம் படிமே லெய்தும் பதம்பெற்றுங்
கேரா ருடைய நங்கையொடுங் காரி யார்வாழ்ந் திருப்பவெழில்
வாரார்முலையார் திருவயிற்றோர் மைந்தன் றோன்றா வருத்தத்தால். (உச

வேறு.

காரியார் மிகவாடிக் கற்புடைமெய்க் குலக்கொழுந்தாம்
காரியா ருடனெழுந்து தவஞ்செய்யும் பரிவோடுஞ்
சீரியார் பலர்வாழுந் திருக்குறுங்கை நம்பியுடை
மேவரியார் மலர்ப்பாதந் தொழவென்றே விடைகொண்டார். (உரு)

சென்றுதிருக் குறுங்குடியைச் செறிந்ததிருப் பாற்கடலின்
மென்றல்கமழ் குழலியொடு நீராடி வலஞ்செய்தாங்
கொன்றியசீர் மனத்தினரா யொருபுதல்வ னெமக்கருளென்
றன்றிறைவன் சன்னிதியி லருந்தவஞ்செய் திருந்தனரால். (உசு

# நம்மாழ்வார் பிரபந்தம்.

க்நினைவி லவிருப்ப வந்தாமத் திறையுயிர்க
ண்ணினைவின் படியின்புந் தலைச்செய்யா வகையுணர்ந்தாங்
கன்னினைவின் படிகாண்பே னினமொருகாற் பிறந்தென்ன.
ன்னினைந்தா னருளுதை லவையறிந்த படிமொழிவாம். (உ

பாய்கைமுதற் றிருப்பாணர் வரையிலுள்ள புண்ணியரை
வையமிசைப் பிறப்பித்தோ மற்றவராற் சிறிச்சிறிதே
யுய்யுநெறி யுணர்ந்துயிர்க ளடைந்ததன்றி யொருமுகமாய்
மையலறத் தடைந்ததில்லை யெனவருந்தி மண்மீதில். (உஅ

பிறப்பேனு னெனின்முன்னம் பெரியதிரு வடியனந்தன்
சிறப்போடும் போய்ப்புளியிற் செனியுமெனச் செப்பவவர்க்
குறப்பொருளே யெவ்வுலகில் யாவர்களா யடியோங்க
ளுறப்புகுவதறைகவென வோதவண்ணன் கட்டுரைப்பான். (உகூ

பாட்டினு னுலகுய்யும் படிசெய்வேன் றிருவழுதி
நாட்டினுயர் குருகூரிற் கோனாரி னவமிருந்த
நீட்டுபுக ழுடையவரே திருப்புளியாய் மறையவனாய்
வாட்டமறப் பிறவென்று னிறைவனவர் மறுத்துரைப்பார் (௩௦

அப்படிச்செய் வேமடியே மச்சுதநின் னருளினொடு
மெப்பொழுது வருவதுநீ வந்தக்கால் யாங்களுனை
முப்பொழுதும் பிரியாமன் முறைமுறையே தொழுதேத்தித்
தப்பறநின் னடிபரவு நெறியருளித் தாரணியில். (௩௧

எத்தலத்தில் யாராக வெய்துவையத் திறங்கூறி
யத்தலத்தி லடியோங்கட் கருளியநின் பணிகூறி
யுத்தமனே விடையருள்க வடியோங்கட் கெனவுடை
பத்தருளம் பிரியாத பரம்புருடன் பகர்ந்தருள்வான். (௩௨

வேதங்க ளெனையுள்ள படிகூறி விரித்ததனை
யோதுங்கை மறையவரு மப்பொருளை யுணர்ந்தறியார்
பூதங்க ளாந்தாகிப் புலனாகிப் பொறியாகிப்
பேதஞ்செய் தென்னுடைய மாமாயை பிணித்ததனால். (௩௩

அம்மாயை தனைநீக்கி யான்மாக்க ளெனையறிந்திங்
கெம்மாவீ டுறும்படிதா னியற்றிடுமெய்த் திறமுணர
நம்மாலுற் றுறநோக்கத் தான்காணே னொருவரையு
மம்மான்மற் றதுகூட வேண்டுமெகர் காகான். (௩௪

அருமறையைத் தமிழாக்கி யண்டமெல்லாந் தொண்டர்களாய்
வருநெறியின் குழாங்காண மண்ணினில்யாஞ் சென்றிருந்தாற்
பொருவரிய வனந்தனிழ லாயெனையோ போற்றுவைமெய்
தருகவிக்குப் பட்டோலை கருடநீ தான்பிடிப்பை. (௫௫

நானுதிக்குங் குலநாலாம் வன்னத்தி னலமிக்கார்
வானுதிக்கு மணிமாடத் திருக்குருகூர் வளநகரி
லூனுதிக்கு மைந்தருக்கா யுடையநங்கை யொடுகா
தேனுதிக்கும் பொழில்புடைசூழ் குறுங்குடியிற் றவஞ்செய்வார். (௫௬

ஆங்கவர்க்குப் பிள்ளையா யவரிடரு மம்புவியோர்
தாங்கிடருங் கெடவருவேன் றசரதனார் தவந்தாங்கித்
தீங்குடைய வசுரரிறச்* செனித்தோமுன் னதுபோலத்
தேங்கமழ்பூம் பொழில்புடைசூழ் திருக்குருகூர் தனிற்காண்பீர். (௫௭

ஆதலான் முன்னேநீ ரேகுமென வருணாதன்
வேதநா வழுவாதா ரிருவர்களும் விடைகொண்டார்
சீதவான் சிறைக்கருடன்† சித்திரையிற் சித்திரையி
லோதுதிருக் கோளூரின் மதுரகவி யாயுதித்தான். (௫௮

வேறு.

நன்றி யாணி மூலத்தி னனந்தன் ஞானப் பிரானாகி
நின்ற வாதிப் பிரான்வளரு நிகரில் கோயில் வடவருகிற்
சென்று பொருனைத் தென்கரையிற் சிறந்த ஞானத் திருப்புளியா
யென்றும் பொன்றா வரத்தோடும் வளர்ந்தா னீரே மூலகேத்த. (௫௯

கோளூரின் மதுர கவியாய் வந்தவரு
ாசில் கங்கை யகன்புனல்சேர்ந் தாட வேண்டு மெனக்கருதி
யீச னருளால் வடதிசையி லேகிக் கங்கை யிரும்புனலுட்
டேச மறியச் சிலகாலந் தவஞ்செய் திருந்தார் தேவர்தொழ. (௬

வேறு.

உறுங்கரும முன்னிகழ்ந்த திவையவையு முரைத்தபடி
குறுங்குடியி லிருந்துதவ மியற்றிவருங் குணமிக்கார்
நறுந்துளவன் றிருவருளான் ஞானமா மதலையைப்பின்
பெறும்பரிசு மிறையருளா லறிந்தபடி பேசுவாம். (௬

---

அசுரா கெட என்றும் பாடம்.
'ஸ்ரீகுமுதகணேசாம்சராய்' என்றும், 'வேதாத்மகமான பெரியதிருவடி யம்சமா என்றும் இரண்டுபாடங்கள் குருபரம்பராப்ரபாவத்திற் காணப்படுகின்றன. இதனா இம்மதுரகவிகளை, கருடபகவான், குமுதரென்ற கணேசர் ஆகிய இவ்விருவ ரம்ச முடையவரென்பர் பெரியோர்.

## வேறு.

ஒருதின மூழி யூழி யோங்குமா தவத்தி னொரு
மருமுனிக் கணங்கள் செய்யு மாதவ மடங்கப் பண்ணி
வருபகல் வணங்கிக் கூறு மாகிலெண் ணைந்து செல்லத்
திருமகள் கொழுந னன்னார் கனவிடைச் செறிந்து செப்பும். (ச

மைந்தரை விரும்பி நீங்கண் மாசறு தவங்க டம்மை
யிந்தமா நிலத்தோர் விண்ணோர் யாவரு மிரங்கச் செய்தீ
ரந்தமில் குணத்தீ ருங்கட் கயன்விதி யடங்க நோக்கிற்
சிந்தைநோய் தீர்க்கு மைந்த ரிலையிந்தச் சென்மந் தன்னில். (சங.)

ஆயினு நம்மை நோக்கி யரும்பெருந் தவங்கள் பண்ணி
யோயுமெய் யுடைய ரானீ ராதலா லுங்கள் பாலுந்
தூயமெய் மதலை யாகித் தோன்றுவோந் துளங்க வேண்டாம்
போயினி நீங்க ளுங்கள் பதியிடைப் புகுவீ ரென்றான். (சச)

கனிபொழிற் குறுங்கை நம்பி கட்டுரை கேட்ட காரி
யினியெமக் கிதில்வே றுண்டோ வெம்பிரான் புதல்வ னாகித்
தனியனேற் கெய்தப் பெற்றுப் பேறெனச் சரணந் தாழ்ந்து
பணிமலர்க் குழலி யோடும் பதியணைந் திருந்து வாழ்ந்தான். (சரு)

அப்படி யிவர்கள் வாழு நாளினி லமலன் வையா
மிப்படி யுற்ற லீலா விபூதியி லிவனென் றென்னச்
செப்பருந் தனக்குத் தானோர் தொண்டனாய்ச் சீராட் டிட்டே
யொப்பருந் தனைத்தான்பாட வேண்டுமென் றுளத்துளெண்ணி

அண்டகோ ளத்தி னப்பா லவனுறு மயமா யாங்கே
புண்டிலை யென்னுந் தன்சீர் மாயையா லுற்ற யாக்கை
கண்டில திறைஞ்சத் தான்றன் கருணைவான் றிருக்கோ லத்தை
விண்டுவிள் ளாத ஞான யோகொடும் விண்ணோர் வாழ்த்த.

மண்மிசை யுடைய நங்கை வயிற்றினிற் காரி யாரா
மண்ணலுண் மகிழ்ச்சி தாங்கத் துவாபர யுகத்தந் தத்தி
லெண்ணுமா வணிமா தத்திற் றெய்தியோர் பத்தோ டேழி
னண்ணினன் ஞான நாத னன்மறை யிறைஞ்சி வாழ்த்த

அப்படி யுடைய நங்கை திருவயிற் றமர்ந்த யோகி
செப்பருங் கலியு காதி சிறந்தவை காசி தன்னிற்
றப்பறு பன்னி ரண்டாந் தெய்தியிற் சாற்றுமா வாரத்

ஏற்றநற் றிருவி சாகத் திலக்கின மெடுத்து வேதம்
போற்றுநற் கடகந் தன்னிற் பூசுரர் மகிழ்ந்து நாளுஞ்
சாற்றரு மெகின யோகந் தனிலிந்தத் தரணி மீதிற்
றோற்றினன் பிறவித் துன்பந் துடைத்தெனை யாண்ட சோதி. (௫

வேறு.

பெற்றவ ளிராமனைப் பெற்ற கோசலை
யுற்றமெய் மகிழ்ச்சியை யொப்ப வோங்கினள்
மற்றையக் காரியு மைந்தன் றோன்றவக்
கொற்றவன் கொண்டதோர் மகிழ்ச்சி கொண்டனன். (௫

வேறு.

அன்று மாடத் திருக்குருகூ ரயோத்தி நகரி லசுரரிற
வென்றி வேற்கை யிராகவனார் பிறந்த நாளின் விழாப்போன்றுங்
குன்ற மெடுத்தான் வசுதேவர் குமர னாகி யிடையரிடைச்
சென்று தோன்றவளமோங்குந் திருவாய்ப்பாடி நகர்போன்றும்.(௫

வேறு.

விலையறு மகிழ்ச்சி தாங்கி யிமையவர் குழாங்க ளொத்தக்
கலையறி காரி யார்தாங் காசொடு தூசும் பொன்னு
மலையெனக் குவித்தன் றெய்தும் வறியரின் மகிழ்வோ டந்தே
யலைபுனற் பொருனை யாடி யந்தணர் விதித்த வண்ணம். (௫

சித்திர மனையை யெய்திச் சேடியர் கொணர்ந்து காட்டப்
புத்திர முகமுங் கண்டான் புவனமீ ரேழுங் கண்டான்
மெய்த்திற வீடு காண விதிவழித் தவமுன் செய்தா
னைத்திற மிதன்மேல் வேண்டு மெனமகிழ்ந் திருந்த காலை. (௫

கூறநான் மறைக்கு மெட்டாக் கொழுஞ்சுடர்க் கருணைக் குன்றை
தேறநான் வணங்கத் தந்த திருமகள் கோனுக் காண
வீறனார் தமக்குப் பொன்று மெய்யனார் தமக்குக் காரி
மாறனா ரென்று நாமம் வழங்கினார் வானோர் வாழ்த்த. (௫

வேறு.

அப்படி யவர்கடம் மைந்த னாமென
விப்படி யவர்செயு மியற்கை செய்தனர்
செப்பரு முலகிடைச் சிலுகுக் கஞ்சிய
வொப்பிலா தவஞ்செயு முணர்த்து வாமரோ

20764
C7223

## வேறு

திறவாவாய் விழியாகண் டிகழ்வாரார் முலையாரா
வுறவாவா ரெவராவா ருலகோர்பா லெனவோயும்
பிறவாவா னுறுவானோர் பெருமானோர் திருநாம
மறவாநா னிலமாமால் வசமாமோ வெனவோயும். (நி

தமரானு நுரைகேளா தனிநாதா திருமாலே
யெமரானு ரிவரோநா னெவரோடே துரைசெய்டே
னமரார ரமுதானு யறிவானு யடியேனிங்
குமரானு ரொடுகூடே னுயிர்வாழ்வே யெனவோயும். (நி

ஓயாமா மயல்பூணு யுறவாயா ருயிரானுய்
மாயாமா தம்மாநீள் வலையோடா டிவோர்யார்
காயாமா மலர்மேலார் கருவான்மா முகில்போல்வாய்
சாயாமா திறலாயார் சரணுவார் தரைமீதே. (நிக

வினையாயா வுலகோடார் வினையாவா ரதில்வாழ்வார்
தனையாவாய் திறவாய்பா றரமாதா வெனவீணே
யெனையாயார் பலர்வாழ்வே யிவள்வாழா ளெனவோது
முனையாயா விவரோடா ருறவாவா ரெனவோயும். (

அறிவாரார் புவிமீதே கவிநாவா யனுழுவார் 
பொறிவாயா னெறியார்வாழ் பொருள்வாளா கொளூவே
குறியாமா மறைவானோர் குலமாமா முதலா
மெறியாமா சுடர்மாமா லிவனும மெனுமால். (

வாடாநாண் மலராள்வான் வளர்வானோர் பெருமான்
கோடர்ர்மா மழுவாள்வான் குலமாமா முனிவோர்
வீடாயா ரடையாரே முலகோடாய் விடமாமா
ருடாமுா ரெனின்யாரோ தலையாவார் தலைமேல். (சூ

வாரார்பூண் முலைவாடா மலராள்சேர் மணிமார்பா
சீரார ரமுதேவாழ் திருமாலே சிறியேனைப்
பாராயா நெறியாரார் பரமாவோ பகர்வாய்மெய்க்
காராவா ரெனவாழ்வா ருலகோடா சூலமாக.

முலையாரா வுடல்வாடா முகம்வாடா முனைநா
னுலையாமா தவமாமா னுறவாய்நா னிற்வே
யிலையாமா மகனுமே யினிவாரோ மெனுமா
வாரா ரெனமாதா நினைவாள்.

## வேறு

இப்படி யாழ்வா ரன்னை யிராப்பக லிடைவி டாது
மெய்ப்படும் வகையி ரண்டு விதம்பெற விளம்பி னைந்தா
ரப்படி தனையு நாயே னறிந்தவா றறைந்து பின்னவ்
வொப்பிலா வுடைய நங்கை செய்தது முரைக்க லுற்றேன் (௬௫)

## வேறு.

இன்னமுதக் குடமிரண்டா மெனவோங்கி மிகவிம்மி
மன்னுதிரு முலைப்பால்கள் பீரோட மனமிரங்கத்
ன்னுடைய திருமகனே முன்னிலையாய்த் தவமிருந்த
நடை யுடையநங்கை யிவையிவைக ளறைகின்றாள். (௬௬

## வேறு.

தப்பா நிலையார் தவமே தமிழ்மாறா
வப்பா முலையிரண்டும் விம்மிநா ஞற்றுகிலே
னொப்பாரில் லாதாய் சுரந்துபீ ரோடுகின்ற
திப்பா லருந்தாய்நா னென்பிழைத்தே னென்னமுதே. (௬௭

ஒக்கலைமேல் வைத்தோர் கரத்தா லுனைத்தாங்கித்
தக்கமுலை யூட்டத் தவமுன்பு செய்யாதேன்
மக்கடமைப் பெற்ற மடவார் முகநோக்கி
வெட்கினேன் மைந்தா விதியிலியே னானேனே. (௬௮

சீரார் பொருனைத் திருநாட னுன்றந்தை
நாரா யணன்குறுங்கை நம்பிதிரு முன்றினின்
றோரார் தவமன் றியற்றியுனைப் பெற்றவனைப்
பாராயோ வப்பாவுன் பங்கயக் கண்விழித்தே. (௬௯)

மானேர் விழியார்கண் மக்களழுத் தாலாட்டி
யேனே னெனச்சென் றெடுத்துமுலைப் பாலளிப்ப
நானேது செய்தேனென் னம்பீ யமுதமா
தேனே சுரந்த திருமுலைப்பா லுண்கிலையே. (௭௦)

விண்ணு மதிண்மேல் விதியிலியேன் மைந்தாநீ
யுண்ணு முலைப்பால் பிதிர்போக்க வோங்கறுந்
தண்ணு ரருவித் திரள்போன்ற தாரையையென்
கண்ணை [illegible] காண்கிலையோ

உன்னுடைய தாதை யுனையீன்ற சோபனத்தைத்
தென்னவனார் கேட்டோர் திருமா மணித்தொட்டில்
பொன்னுலகு மண்ணுலகும் போற்ற வரவிடுத்தா
ரென்னுடைய கண்ணே யிமைகுறித்து நோக்கிலையே. (௱௨)

ாரார் திருப்பரிசா ரத்தினின்று மென்னனந்தை
ரா ரொளிவீசுஞ் செம்பொன் மணித்தொட்டில்
ாராய் விடுத்தா ருனக்கென்றே பாலகனே
யாரா யிரங்கதிரு மொவ்வா திதனொளிக்கே. (௱௩)

வத விதியா லெனைவேட் டெனைவிரும்பி
யாத வரிய தவஞ்செய் துனையீன்ற
ாதை யுனக்களித்த தண்டரளப் பூந்தொட்டி
துறவே* நோக்கி யருளாயென் னின்னமுதே. (௱௪)

ருக்காதி வேத மெடுத்தேத்திக் காணு
ருக்காணு மென்பார் சிலருமை யென்பார்
ருக்கால்கள் கைக ளுதறிச் சிறிதே
யாருக்கான் மகனே யழுதா லுளனே.

ன்ற னுடைய விருகரத்தி லோர்கரந்தான்
சென்றோர் முலையைப் பிடித்துத் திருவாயோ
டான்ற மடுப்ப வொருகரமற் றம்முலைமே
ரின்று வருட நெடுந்தவமுன் செய்திலனே. (௱௬)

செய்ய கனிவா யமுதந் திரண்டொழுக
வய வுதவிக்† குறும்போ டணைந்தொருநாட்
பாய்ந்னேன் கொங்கையுறும் புத்தமுத நீயருந்
மய்யனே காண விரும்பிவிதி யற்றேனே. (௱௭)

ண்ணுட ரேயரிய மேதினியில் வாழ்வாரே
ண்ணார் மறையே பகலோனே நாண்மதியே
பண்ணாய்ப் பிறந்துமகப் பெற்றோரே யன்னைமுலை
ண்ணாப் புதல்வர்களு முண்டோ வுலகத்தே. (௱௮)

ாயா லழாதே மலசலமொன் றில்லாதே
ாயார் முலைப்பாலோர் சற்று மருந்தாதே
யாயா திருந்தரற்று முற்றுரைக் கண்டபாராச்
சயாரு முண்டோ செகத்திலிவ ரல்லாதே.

---

க்கி யென்றும் பாடம். † ஐய ருதவி யென்றும் பாடம்.

உள்ளார் மகிழ்ச்சி யுடையாய் குறுநகையாய்
விள்ளாய் கனிவாய் விழியாய் திருநயனங்
கொள்ளாய்நீ யம்மமிறை கோடாதுன் பொன்மேனி
பிள்ளாயுன் னுண்ணிணைவைப் பெற்றார்க்கும் பேசாயோ. (அ0)

பேய்க்கொளித்துக் காப்பிட்டுப் பெற்றேன் முலைவிம்மி
வாய்க்கொளித்தை யென்றான் மகனே யதுசெய்யாய்
நோய்க்கொளித்த ஞானத்தர் நோன்போ வெனநுவல்வாய்
தாய்க்கொளித்த சொல்லு முளவோவென் றார்வேந்தே. (அக)

ஆழிநீர் வண்ண னருளோநான் முன்செய்த
வூழிவினை தானோ வுலகத்தீ ரென்னுடைய
தோழிமீர் மைந்தனமா னுண்ணானோர் சொற்றாரான்
வாழியிதை நோக்கி வகுத்தெனக்குக் கூறீரோ. (அஉ)

மெச்சோர் குறியால் விளங்கியிந்த மேதினியோ
ரச்சுதனா ராகுமிவ னென்னிலவன் றன்முன்னாட்
பச்சைக் குழந்தைப் பருவத்தே பூதனைதன்
னச்சுமுலை யுண்டானென் ஞானமுலை யுண்ணானே. (அங)

எடுத்திருத்தி வைத்தா லிருப்பா னசையான்
படுத்தணையிற் சாய்த்தாற் படுப்பா னிளகா
னடுத்துமுலை யுண்ணென் றணைத்தா லருந்தான்
றொடுத்ததிவைமைந்தனைப்பாரே துரைப்பேனென்றோழீ. (அச)

சப்பாணி கொட்டாய் தவழாய் தளர்நடையென்
னப்பா நடவா யமுதே புறம்புல்கா
யிப்பார் முதலாய வீரே ழுலகத்து
மொப்பா ரிலாதாய்நா னென்னென் றுயிர்வாழ்வேன். (அரு)

வேறு.

இத்தி றத்தினு லிரங்கின ரிராவணன் சிரங்கள்
பத்தி றுத்தவன் செயலெனிற் படிமிசை யவன்வாழ்
கொத்தி றுத்தபூம் பொழிற்குரு கூரினிற் கொடுபோ
யத்தி றத்தையுங் காண்பமென் றதற்கொருப் பட்டே. (அசு)

சோதி மாமணித் தொட்டிலில் வானவர் துதிப்ப
நீதி மேவிய மாறனை நெறிபெற விருத்திச்
சாதி வேதியர் குழாங்களுந் தமர்களு நிரைப்ப
வாதி நாதன்வாழ் குருகையம் பதியினை யணைந்தார். (அஎ)

## வேறு.

சென்றணைந்தவர் திருவளர் திருக்குரு கூர்ப்புறஞ் செறிந்த
வன்றிறைஞ்சிமுக் கால்வல மாகவந் ததனுள்வாழ்ந் தமர்ந்து
நின்ற நாரணன் றிருமுன்னின் மைந்தனை யிருத்தினர் நின்றார்
மன்றி லன்றுமெய்ப் பாலகன் றவழ்ந்தனன் யாவரு மகிழ்ந்தார். (௮௮)

## வேறு.

திருமுனிற் றவழ்ந்த பாலகன் விரைவிற் றிருப்புளி யருகினி லணைந்து
மருவரு ஞான முத்திரை தரித்த வலத்திருக் கரத்தொடு மாசி
லருமறை துதிப்பத் தென்றிசை நோக்கி யழகுறும் பற்பவா சனத்தி
லிருபத மமைத்து மடியின்மேற் றரித்த விடத்திருக் கரத்தொடு மிருந்தான். (௮௯)

துன்பவீ டன்னை யத்தனென் றவமே சுழன்றருந் தொன்னர கடைவீர்
முன்புபோ லினிநீர் பிறவிமாக் கடலின் முறைமுறை முழுகுத றவிர்ந்தாங்
கன்பினு லுலக முண்டுமிழ்ந் தளந்த வச்சுதற் கடிமையாய் முடிவி
லின்பவீ டடைவீ ரிதுகுறிக் கொண்டு கடைப்பிடித் திருமினென் றிருந்தான். (௯௰)

மண்ணுறு முயிர்க ளறிவிலா மையினுன் மயக்கமுற் றரும்பிழை செய்தா
லுண்ணிறை யறிவாற் பொறுத்ததற் கிரங்கா தொழிவரு துயிர்க்கிடர் விளைக்கு
நண்ணுறுந் திசையோர் நான்கினிற் கொடுமா நமனமர் தென்றிசை நோக்கி
யெண்ணரு நரகும் பாழ்பட நமனு மிருநிலத் துறுவகை யிருந்தான். (௯௧)

ஒன்றியேழ் கடலு மோங்கிவா னிமிர வுலகுதாழ்ந் திடவுயிர் காப்பான்
பன்றியாய்க் கோட்டி லண்டங்க ளனைத்தின் பவங்கெடத் தரித்தமா தவன்செய்
நன்றியை மறந்து பிறந்திறந் திடுவா ரரண னக்கனுக் கிணையன்
றென்றுரைத் தவமே நரகிடைப் புகுது மிலிங்கிய ரிரிவுற விருந்தான். (௯௨)

ஈட்டிய தவத்தி னிராவண னாதி யிராக்கத ருலகமீ ரேழு
மூட்டிய தீயிற் சிதலெனப் புடைப்ப முடிவிலாத் துயர்பெய விரங்கி
நாட்டிடைப் பிறந்து பூதனை பட்டு நஞ்சினுங் கொடியரைக் கொன்ற
வாட்டமில் புகழான் [illegible] மன்றென் றுரைப்பவர் மடிந்திட விருந்தான். (௯௩)

நற்பக லயனுக கறுநமதாறுஞ சலதி நாட்டிய வுலகெலா முறுநாட்
பற்பல வுயிருந் திருவயிற் றொடுக்கிப் பழுதறக் காத்தளித் துமிழ்ந்து
நிற்பவன் றன்னைப் பரத்துவ மன்றென் றுரைப்பவர் நெஞ்சினைப் பிளக்கு
மற்புத வாணி யிவனென விருந்தா னடியனேற் காரமு தானான். (௯௪)

எண்ணருந் தரும நிலைபெற மேலோ ரிதமுற வஞ்சக ரிறப்ப
விண்மிசை யிரவி புனலுறு வதுபோ லுகந்தொறு மெய்யெடுப் பவனைப்
பண்ணிய வுலகிற் பிறந்திறந் திடுமால் பரமெனல் பழுதெனு மிலிங்க
ருண்ணடுக் கெய்த நீயது வானு யெனுமவ ருலைவுற விருந்தான். (௫

# நம்மாழ்வார் பிரபந்தம்.

இருந்தன னிவண மவுனியாய் மாற னெண்ணிரண் டாண்டுதாய் தந்தை
கருந்தட முகின்மற் றிவனதற் கைய மிலதெனக் காத்துட னிருந்தார்
பொருந்துமந் நாளில் வடதிசைக் கங்கைப் பொரும்புனல் படிந்தமர்ந் திருந்த
திருந்திய மதுர கவிகளென் போருந் திருமக ளுயக னருளால். (௯௬

விண்டலத் தருக்க னெழுந்திசை நோக்கி விரிபுனல் படிந்தெழு பவரு
மொண்டமிழ் மாறன் வருந்திசை நோக்கி யுதித்தன ருதித்தவர் விழிநே
ரண்டமூ டுருவும் பேரொளி மயமா யாயிர கோடிமேற் கோடி
யெண்டரு கதிர்கண் மின்மினி யாக வெழுதல்கண் டிவையென்கொ லென்ன. (௯௭

அதிசய மிதுசென் றறிந்திடல் வேண்டு மதுசெயா திவ்விடத் திருந்து
மதிசெயுங் கரும மன்றிதென் றுன்னி வானவர் முறைமுறை வணங்கித்
துதிசெய வெழுந்து தென்றிசை நோக்கி நடந்தனர் துகளறுத் தின்பக்
கதியெளி தளிக்கும் வேங்கடப் பொருப்பை யணைந்ததிற் கருணைமா முகிலை. (௯௮

[illegible]டடி வணங்கி யாங்குநின் றேகிக் காவிரி மடிமிசைக் கிடந்த
புண்டரீ கக்கட் செய்யவா யமுதாம் புனிதனைப் பூண்டடி யிறைஞ்சி
யண்டர்க டுதிப்ப வழகரை வணங்கி யாரண முடிவினி லமருங்
கொண்டலைக் கூட லழகிய முகிலாங் குருமணி குரைகழ றொழுமுன். (௯௯

இத்திரு நகரே தென்னவன் முன்னே யெம்பிரான் விட்டுணு சித்தன்
றத்துவ முரைத்துக் கிழியறுத் தாறு சமயமுந் தாழ்ந்திட வாழ்ந்தென்
னத்தனைக் கண்டு திருப்பல்லாண் டோத வருந்தவஞ் செய்ததென் றதனை
பத்தரு ரன்பில் வணங்கிப்பின் கூட லழகிய பரமனைப் பணிந்தார். (௧௦௦

அண்டமுண் டுமிழ்ந்த பரமனைப் பணிந்தார் விடையென வாங்குநின் றேகித்
தண்டலை புடைசூழ் புதுவைமா நகரிற் றலைவனை வணங்கித்தா முன்னங்
கொண்டசீ ருறுவான் றொண்டரை வணங்கிக் குறுமுனி செழுந்தமிழ் கொழிக்குந்
தெண்டிரைப் பொருனை வடகரை செறிந்தத் திகழொளி யுணித்தெனத் தெளிந்தார்.

அணிதமதனத்தெளிந்தார்கள்வனை வணங்கியவனருள்பெற் றுநற்பொருனை
நணித்திருச் சங்க மணித்துறைப் படிந்து நான்மறை யயனர னுலுங்
கணிப்பரு ஞானப் பெருங்கரை செறிவார் கடுப்பினிற் றென்கரை செறிந்து
மணிக்கதி ரெறிக்கு மாடமா ளிகைசூழ் வண்குரு கூருளே வந்தார். (௧௦௨

வந்தமா மறையோ ரந்நக ரதனில் வடதிசை யிருந்துதாங் கண்ட
வந்தமின் ஞானப் பேரொளி மயநின் றடங்குதல் கண்டதை வலஞ்செய்
திந்தவிப் பதியி லுளதுநாங் கண்ட வெலையறு பேரொளி யெனவென்
றந்தையா யெனக்கென் னுயிருமாய்ப் பொலிந்து நின்றமால் சரண்பணிந் திலங்கு

பேரொளி மயமிங் கடங்கிய விடமே தென்றதைப் பெற்றற நோக்கிக்
காரொளி வண்ணன் றிருவருள் பெற்றுக் களிப்பொடக் கண்ணன்வாழ்ந் துறையு
மோரொளி விமானந் தனைவலஞ் செய்தாங் கோங்கிட விழிகணோ ராமச்
சீரொளிமயநின் றடங்கிய திந்தத் திருப்புளியிடத் தெனச்செறிந்தார். (க௦௪

சென்றிவர் செறியத் திருப்புளி நிழலிற் சீரரு ளுடையமெய்ஞ் ஞானக்
கன்றெனை மாற னடுவிருந் தருளக் கணிப்பரு முனிவர்மா தவர்கண்
மன்றல்சேர் குழலார் மைந்தர்கள் பலரு மயர்வொடு மிருந்தமை நோக்கி
முன்னொருடர்விதியாற்காரியார் நம்மோ டென்கொன்மற்றிவையெனமொழிவார். (க௦ரு

மறையவ னேசேண் மகப்பெறு மையினால் வருத்தமுற் றிராப்பக லிரங்கி
நறைகமழ் குழலி தன்னொடு மேகி நனைபொழிற் குறுங்குடி நின்ற
விறைவனை வணங்கிபொருமக வருளென் றிரப்பமற் றவனெங்கள் கனவிற்
குறையறத் தோன்றி நின்றுமக் கயன்முன் விதித்திலன் மகவென்று கூறும். (க௦௬

என்னையே நோக்கி யிருந்தவஞ் செய்தா யாதலால் யானுநின் மடவா
ளன்னையாய் நீயென் னத்தனுய்ப் பிறப்பே னென்றெனக் கருளினன் போந்தேன்
பின்னையிப் பாலன் பிறந்தனன் பிறந்த பின்புள செயலையும் பேசின்
முன்னைநான் மறைக்கு மரிதையா மொழிய முளரியங் கண்ணிணை திறவான். (க௦எ

பெற்றதாய் சுரந்த திருமுலை யருந்தான் பிள்ளைகள் செய்குறி செய்யா
னுற்றொரு நாளும் வாய்திறந் தறியா னொருக்காலு மலசலங் காணே
மற்றிவை யென்கொ லெனத்துய ருற்றோ மாயவன் செயலெனு மறைநூல்
கற்றவ ருரைத்தார் நன்றெனு யானிக் கண்ணன்முன் கொணர்ந்திருத்திடலும். (க௦அ

கதுமெனத் தவழ்ந்திப் புளியரு கணைந்தீங் கிருந்தன னிவ்வணங் கண்டா
முதுமொழி மறையோ யாண்டிரண் டெட்டுஞ் சென்றதிம் முறைமையை யுணர்ந்த
புதுமைமற் றிதுவென் றென்னுட னிருந்தார் புத்திரன் விரும்பியான் பெற்
றிதுவெனநின்றார்க்காரியார்மதுரகவிகள்சென்றெம்பிரான்செவியில். (க௦௯

வேறு.

செத்தத்தின் வயிற்றி னுள்ளே சிறியது பிறந்தா லாதாங்
கெத்தைத்தின் றெதிலே தங்கிற்* றியம்புக வென்று கேட்க
வத்தைத்தின் றதிலே தங்கிற்§ றென்றன ராழ்வார் கேட்டென்
சித்தத்தி லுறையுந் தெய்வ மிவரெனச் சென்று தாழ்ந்தார். (கக௦

---

அசித்தாகிய சரீரத்திலே அணுவளவினதான ஆத்துமா சம்பந்தித்தால், அது எதை யனுபவித்து எங்கு இருக்கும்? என்பது பொருள். செத்தது—அசித்து; அப்ராண வத்தாய் ஜடமாயிருக்கையாலே அசித்தைச் செத்தது என்றார். 'சிறியதின் வயிற்றில் பெரியது பிறந்தால்' என்று பாடங்கொண்டு, 'அணுரூபமான ஜீவனிடத்து விபுரூபமான ஞானவிகாசம் உண்டானால் எதை அனுபவயோக்கியமாகக்கொண்டு எங்கு சேரும்?' என்று பொருளுரைப்பாருமுளர். § அச்சரீரத்தைச்சார்ந்த சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டு அதனையே ஆசிரயித்திருக்கும் என்பது பொருள். அகாரவாச்சியமான பரப்பிரஹ்மத்தை யனுபவித்து அதன் பக்கலிலே பற்றும் என்றலுமாம்.

வேறு.

அப்படி யந்தண னருளிச் செய்திடத்
தப்பறு மறுமொழி மைந்தன் சாற்றலு
மொப்பிலாத் தந்தையுந் தாயு முண்மகிழ்ந்
திப்படி யோவரு ளிருக்கு மென்றனர். (கககக)

வேறு.

சீருறு மறையோர் பணிந்தெழுந் திருந்தச் சேயைமுக் கால்வலஞ் செய்து
நேருறு தந்தை தாயொடு முரைப்பார் நீரினி வருந்தலென் னுலகி
லாருமை நிகர்ப்பா ரெம்பிரா னுமக்குப் புத்திர னாகிவந் தமைந்திப்
பார்மிசை யிருந்தா னென்றுரைத் துடைய நங்கையை யவரொடும் பணிந்தார். (ககஉ)

ஆங்கதற் பின்னம் மறையவ ரெம்மான் றிருவுரு விதுவருந் தமிழா
யோங்குநான் மறையை யெடுத்திசைத் திடுவ னினியென வுணர்ந்துதங் கரத்திற்
றுங்கினர் கவிக்குச் சிறந்தபட் டோலை தயங்கொளி வயங்குகைக் கவச
ார் சமயக் கவிகளா யுலகிற் றிரிபவர் யாவரு மிரிந்தார். (ககங)

வேறு.

அப்பொழுதிற் பரமபதத் திருந்தருளு மருளுதன்
செப்பரிய மறைநாலுஞ் செந்தமிழாய்ச் செய்வதற்கே
யொப்பரிய தொண்டரா யுதித்தனரென் செய்தனரோ
விப்பொழுது செறிந்தவர்க்குக் காட்சிகொடுத் தெமதெழிலை. (ககச)

உலகறியும் படிகாட்ட வேண்டுமென வோங்குமரு
ளிலவிதழ்வாய்த் திருமடந்தை யொடுமிலங்கு நித்தரொடு
மலகிலா மாமாய னடிக்கமலம் பாடவல்ல
புலவருக்காய்க் கருடனிரு திருத்தோண்மேற் பொன்னுலகம். (ககரு)

குறையறமுன் காப்போனுங் கோகனகத் திருப்போனும்
பிறையணியுஞ் சடையானுந் தொழுதேத்தப் பெருகுமருண்
முறைவளர்ச் சென்றணைந்தான் றமிழ்மாறன் முன்கருடன்
சிறையொலிகேட் டிவையென்கொ லெனத்திறந்தான் றிருநயனம். ()

வேறு.

ரார் கமலத் திருக்கண்க டிறந்து விசும்பிற் செலநோக்கிக்
கூரா ராழி வெண்சங்க மேந்தி யடியார் குழாம்புகழ
வேரார் திருமா மகண்மார்பி லிருப்ப வேத மெடுத்தே,
நாரா யணனைச் சீர்க்கருடன் றோண்மேற் கண்டா னலமிக்கான். (ககஎ)

கையுந தலைமே லஞ்சலிக்குங் கண்ணு மாறுப் புனறதும்பு
நையுஞ் சிந்தை யொசிந்துருகு நாவுஞ் சரணு கதிநவிலு
மெய்யு மீரும்பி விதிர்விதிர்க்கும் விழுந்து வணங்கு மெழுந்திருக்(
மையைம் புலனுக் செளிதாவா னிவனோ வென்னு மகங்குழையும். (கக அ)

உணரு மிவனோ திருமாலென் றோடு மாடு முவந்தவனைக்
கொணருங் கருட னெனக்கியா னென்னுங் கொம்பாய்த் தானவனைப்
புணர நினையு மகப்படான் போலு மென்னும் போற்றிசெயு
மெணருந் தினங்க ளுனைப்பிரிந்தீங் கிருந்தேன் வினையே னெனவிரங்கும்.

நெஞ்சு மறிவும் விழியிரண்டு நிமல னுலகை நிறைத்தளந்த
கஞ்சத் திருத்தா ளினைநோக்கிக் கவர்வொன் றின்றி யுறப்பாயுந்
தஞ்சந் திருமா லவனடியார் சரணே சார்வு மதுவல்லால்
வஞ்ச வுலகி லினியிறையும் வாழே னென்றே வாய்வெருவும். (கஉ0)

கொந்தார் துளப முடியானே கோலக் கனிவாய்ப் பெருமானே
செந்தா மரையா டனிவாழ்வே தேவா தேவர் பெருமானே
யந்தோ முண்மீ திருப்பந்தோ வடியேன் படிமீ தனைந்திருத்த
லெந்தா யிறையு முயிர்வாழ்க்கை வேண்டே னெனைக்கொண் டேகெனன.

செப்பா விழுந்து மோகித்துக் கிடந்தான் றன்னைத் திருமகள்கோ
னப்பா கேட்டி யொருவார்த்தை யார்க்குந் திருத்தற் கரிதாகு
மிப்பார் வஞ்ச மதற்காக வென்னின் றுன்னைப் பிரிந்திட்டே
னொப்பாரில்லாயெனவுரைத்துப் பின்னுமெந்தைபிரானுரைப்பான். (கஉஉ)

சீரார் மறையைத் தமிழாக்கிச் செய்தற் கரிய செயல்செய்து
நேராய் நின்ற சித்தையுட னிராகா ரத்தி னிலைநின்றிப்
பாரார் வஞ்ச மாமாயை தவிர்க்கப் புகுந்தீர் பயப்பட்டா
லாரான் முடியு மிப்படியைத் திருத்தற் கென்று னருளுதன். (கஉக)

நீட்டு மூரைப்பா னிருநதனுசா வினையி லசைந்து விரிந்தழியு
நாட்டைத் திருத்தி யென்னுடைய ஞானு னந்த நலமிக்க
வீட்டைக் காட்டுஞ் சுருதிகளைத் தமிழா லெவர்க்கு மெய்விளக்கும்
பாட்டை யிசையா லெடுத்தோதி யருள்வீ ரென்னப் பணித்தருளி.(கஉச)

ஏரார் நித்தர் முத்தரொடு மேகிப் பரம பதஞ்செறிந்தா
னாரா யணனம் மாழ்வாரின் ஞால முய்யும் பொருட்டாகக்
காரார் வண்ணன் றனைப்பாடுங் கவிக்குப் பிடிக்க பட்டோலை
சீரார் மதுர கவிகளென விருந்தான் ஞானத் திருப்புளிக்கீழ். (கஉரு)

### வேறு.

உருப்பவளம் பொய்ந்நின்ற ஞான*மெனத் திறந்துமுத
லிருக்கையருட் டிருவிருத்த நூறுக விசைத்ததற்பின்
பெருக்குமரு ளினலெசிறு வேதத்தைப் பெரியவரை
யுருக்குதிரு வாசிரிய மோரேழா யுவந்துரைத்தான். (கஉசு)

### வேறு

பேசு நாலாம் வேதத்தைப் பெரிய திருவந் தாதியென
வீசன் கழற்கே யன்புருகி யெண்பத் தேழு மிருந்துரைத்தா
னீச னேன்செய் குற்றங்க ளெல்லாம் பொறுத்தந் நெடுமாலை
வாச மலராண் முன்னிலையாய் வணங்கத் தந்த மகிழ்மாறன். (கஉஎ)

நாம மோரா யிரமுடைய நாத னருளை ஞாலத்தார்
காம மாதித் துயர்கடிந்து கண்டு மேலைக் கதிகாண
வோம தூமம் வான்மறைப்ப வோங்கு குருகூர் வளமோங்கச்
சாமவேதந் தனைத்திருவாய்மொழியாய்ச் சாற்றும்படி சமைந்தான். (கஉஅ)

ஆதி நாத னரியென்னி லனாதி சிவனென் றறிவிறந்திட்
டோதிப் பெற்ற தாயிருப்ப வுவந்து மனைக்கு நீராட்டும்
போத வீன ரிலிங்கத்தர் புராணப் போக்கைப் பொய்யாக்க
வேத வேதாந் தப்பொருளை வெளியிட் டருளும் படிவிரும்பி (கஉகூ)

### வேறு.

உரையறு மெழில்பெறு முழுநல முடையவ† னொருவ னின்பக்
கரையுறு மமரர்க ளதிபதி யெவனவன் கடவு ளென்றும்
புரையுறு மயர்வற மதிநல மருளிய புலவ னென்றுந்
துரையுறு புனமவ னிணையறு சுடரடி தொழுதெ ழென்றும். (கஙo)

### வேறு.

சீரார் சாம வேதத்தின் சிரத்தி லமருந் தேவனரி
நாரா யணனே பரத்துவமற் றவனே யெவர்க்கு நாயகமிப்
பாரோ ரறிந்து பற்றுமின்க ளென்ன வவன்வாழ் பரமபதத்
தோரார் பேரா னந்தத்தை முதலோர் பத்தி லெடுத்தோதி. (கஙக)

---

* பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பு
மிந்நின்ற நீர்மை யினியா முறாமை யுயிரளிப்பா
னெந்நின்ற யோனியு மாய்ப்பிறந் தாயிமை யோர்தலைவா
மெய்ந்நின்று கேட்டரு ளாயடி யேன்செயும் விண்ண"

† உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவ
னயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
றுயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

MAHAMAHOPADHYAYA DR. U. V. S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS

அடுத்த பத்தி லம்மாய னந்தா மத்தி னந்தத்தை
மடுத்துப் பருகி யுய்மின்கள் வம்மின் ...
விடுத்த வஞ்ச மாமாயைப் பற்றை முற்றும் விடுமினவ*
னெடுக்கு நுய்மை மின்னினில்லை யில †தாம் யாக்கை நிலையென்றா. (கசஉ)

வேறு.

இத்திற முடையபே ரின்ப நாயகன்
பத்துடை யடியவர்க் கெளியன்‡ பற்றுமி
னத்திற மில்லவர்க் கரியன் வெண்ணெய்தொட்
டெத்திற முரலிடைக் கட்டுண் டேங்கினன். (கசங)

வேறு.

என்ன வெழிலார் பத்திலரி யெளிய னடியார்க் கிருநிலத்தீர்
மன்னு மிதனை யறிந்தவனை யென்று கூறி வசுதேவன்
முன்ன மீன்ற வுயரிடைக் கட்டுண் டழுத முறைநோக்கித்
தன்னை மறந்தோ ராறுதிங்கட் கிடந்தா னுடுங்கித் தமிழ்மாறன். (கசச)

பாலார் மொழியோர் பெண்கொடியாய்ப் பரம பதத்தில் வீற்றிருக்கு
மாலார் தனக்கு நாயகராய் மற்றுங் கவரைப் புணர்வதற்கு
நாலாம் பத்திற் பறவைகளைத் தூது போக்கி§ நயந்துரைத்தான்
மூலா தாரத் தனன்மூட்டி முடியா வினையைப் பொடிசெய்தான். (கசரு)

முன்பே விடுத்த தூதுக்காய் முதல்வ னெய்தி மெய்தீண்ட
வன்பே யென்னைத் தீண்டிடினீ யாகா பிறர்க்கென் றகலவிறை
யென்பேச் சிட்டீ ருமைத்தீண்டப் பெற்று மேலற்ற மெமக்கென்ன
வன்பே செய்து மெய்தீண்ட வாழ்ந்து வளவே ழுலகு ||ரைத்தான். (கச...

வேறு.

... ... ... ளி லரங்கமா நகர மாதி
யிப்படி யுற்ற நூற்றெட் டெனுந்திருப் பதியி னுள்ள
செப்பமா ரிறைவ ரெல்லாந் திருப்புளி யருகின் மன்ன
வொப்பிலா நிலையார் கண்டாங் குளங்குளிர்ந் தருகி யேத்தி. (கசஎ)

---

* வீடுமின் முற்றவும் வீடுசெய் துமதுயிர் வீடுடை யானிடை வீடுசெய் மின்னே.

† மின்னி னிலையில மன்னுயி ராக்கைக ளென்னு மிடத்திறை யுன்னுமி னீரே.

‡ பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன் மலர்மகள் விரும்பும் நரும்பெற லடிகண் மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண் டெத்திற முரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே.

§ அஞ்சிறைய மடநாராய் அளியத்தாய் நீயுநின்
னஞ்சிறைய சேவலுமா யாவாவென் றெனக்கருளி
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தாற்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்
வன்சிறையி லவன்வைக்கில் வைப்புண்டா லென்செய்யுமோ.

|| வளவேழ் உலகின் முதலாய வானோ ரிறையை யருவினையேன்
களவேழ் வெண்ணெய் தொடவுண்ட கள்வா வென்பன் பின்னும்
தளவேழ் முறுவற் பின்னைக்காய் வல்லா னுயிர் தலைவனை
யிளவே றேழுந் தழுவிய வெந்தா யென்ப னினைந்துனைந்தே.

பரிவதி லீசன்* றன்னிற் பரம்பரன் பேரா னந்தன்
பெரியனென் றஞ்சி டாதே பெற்றது கொண்டு பே
லரியனன் றுரா திக்கு மன்பர்கட் கென்று னன்றே
விரிசரா சரங்கட் கெல்லா மெய்ந்நெறி விளம்பு மாறன். (கஙஅ)

வேறு.

மனனுமல பறவத் துயரின்† மூனம் வகுத்த வாரா தனைதுக்க
மென்னப் படுமற் றதற்கின்பம் யாக்கை முடிந்தா லென்பர்பிற
தன்னைப் பில்லாத் திருமாலுக் கல்லார்க் கதுவித் தகமுதலுக்
குன்னும்பொழுதுஞ் செய்பொழுது மோவாவின்ப முறுமென்றான்.(கஙகூ)

குன்று வோடும் புள்‡ ளதனிற் குறிக்கு மனவாக் குக்கன்ம
மொன்றாய் நில்லா தவைமூன்று மூன்று விதமா யொழுகிடி
மன்று மேய்த்தா னடியவர்கட் கதனு லாகும் வினைகடிந்து
சென்றாங் கந்தமூன்றினுந்தான் செவ்வாய் நிற்குஞ் சிறந்தென்றான். (கச0)

பண்ணி லிவையு மவையு§ மெனப் பகரும் பத்திற் பரஞ்சுடராங்
கண்ணன் குணங்க ளறிந்தொடுங்குங் காத லடியா ரனுபவத்தி
லெண்ணுங் கடலைக் குளப்படியின் மடுத்த வாறே யிசையாம
னண்ணி யருகா வொக்கலையாய் நெஞ்சாய் நவையி றோளிணையாய். (கசக)

பேசு நாவாய்க் கண்ணிணையாய்ப் பிறங்கு நுதலா யுச்சியதா
யீச னண்ணிப் பயப்பைய வேறி மாறி லின்பத்தைத்
தேசொ டேய்தி யனுபவிப்பா னென்றான் வஞ்சச் சிறியேனை
யாசைக் கடலின் றெடுத்துத்தன் னடியார்க் கடியா னாக்கினான். (க

பொருமா நீள்படை‖ யென்றெடுத்துப் புகலும் பத்தி லெனையாள்
திருமால் கைம்மா றொன்றின்றிச் செகத்தி லுயிர்க டமக்கிரங்கி
வருமா மாய்ப் புவிமீதி லந்தோ வந்தோ மற்றவனை
யொருமா நொடியும் பிரியாதே மனனே மனனே யெனவுரைத்தான்

---

* பரிவதி லீச னைப்பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூஉய்ப்
புரிவது வும்புகை பூவே.¶

† பிறவித் துயரற ஞானத்து ணின்று
துறவிச் சுடர்விளக் கந்தலைப் பெய்வா
ரறவனை யாழிப் படையந் தணனை
மறவியை யின்றி மனத்துவைப் பாரே.

‡ ஓடும் ட
சூடுந் தண்டுழாய்
நீடு நின்றவை
யாடு மம்மானே.

§ இவையு மவையு முவையு மிவரு மவரு முவரும்
யவையும் யவருந் தன்னுள்ளே யாகியு மாக்கியுங் காக்கு
மவையுட் டனிமுதலெம்மான் கண்ணபிரானென்னமுதஞ்
சுவையன் றிருவின் மணாள னென்னுடைச் சூழ லுளானே.

‖ பொருமாநீள்படையாழிசங்கத்தொ
திருமா நீள்கழ லேழுல குந்தொழ
வொருமா ணிக்குற ளாகி நிமிர்தவ
கருமாணிக்கமென் கண்ணுள தாகுமே

---

¶ 'புரிவது மாவது பூவே' எனப் பாடமோதி, 'தேடவெளியபூ' என்று பொருளுரைப்பாரு
அடுத்த செய்யுளில், 'வதுவார் தண்ணந்துழாய்' என்று கீழ்முடிந்த 'புரிவது வும்புகை பூவே
என்பதனோடு அந்தாதியாய்த் தொடர்ந்துவருமாறு பாடங்கொண்டு, 'வது' என்பதை 'வதுவை
என்றதன் கடைக்குறையாக்கி 'மணநிறைந்த தண்ணந்துழாய்' என்று பொருளுரைப்பாரும், உள்
வாறே பாடங்கொண்டு பொருளிசையந்தாதி யென்று இலக்கண மமைப்பாருமுளர். இறுதிநின்
சொற்பொருளேக்கந்தா லாகுபெயரா லந்தாதியாக வந்தது என்பர் மாறனலங்காரவுரைகாரர்.

சாற்றும் வாயுந் திரையுகளிற்* பெண்ணுத் தலைவன் றனைப்பிரிய
வாற்ற மாட்டா துலகத்தி லனைத்து மென்போ லச்சுதற்குத்
தோற்ற துண்டோ நெஞ்செனனச் சுபாவந் துயரிற் படச்சொன்னைக்
கூற்றின் செங்கோ றனக்கஞ்சாக் குடியாயடியே னறனைக்கொண் டான்.

திண்ணன் வீடு† முதற்பத்திற் பிரிந்த திருமால் சீக்கிரத்தி
னண்ணிப் புணர வனுபவித்து ஞால முய்ய வவதரித்த
கண்ண னுருவி னந்தகோன் மகனே பரமாய்க் கண்டுரைத்தான்
மண்ணி லடியே னினிப்பிறவா வரமே நல்கு மகிழ்மாறன். (கசரு)

வேறு.

ஊனில்வா‡ ழென்ற பத்தி லோதநீர் வண்ண னுரைத்
தானனு பவிக்கக் கூடத் தரணியி லொருவ ரின்றி
வானில்வாழ் முத்த ரோடு மன்னுநீ ரென்றே வென்றான்
ஞானநா யகனுய்க் காரி மாறனு யிருந்த நம்பி. (கசசு)

வேறு.

ஆடி யாடி§ யென்ற பத்தின் முத்த ரோடு மக்கணங்
கூடி யின்ப மெய்தி டாமை கண்டு தானோர் கொம்புமாய்
வாடி மெய்ம்ம றந்து சோர மாய னோடு தன்றயர்
சேடி மார்க ளன்னை மார்கள் சென்று செப்பல் செப்பினான். (கசஎ)

வேறு.

அந்தாமத் தன்பு|| தன்னி லச்சுத னித்த ரோடும்
வந்தாவி யுள்ளே யெய்தி வைகுந்தத் திருப்பைக் காட்டச்
சிந்தாமெய் யறிவா னேக்கித் திருவுரு வழகி தென்று
னந்தாகென் பிறவி வேரை ஞான்முத் திரையான் மாய்த்தான். (கசஅ)

---

ாயுந் திரையுகளுங் கானன் மடநாரா
ாயு மமருலகுந் துஞ்சிலுநீ துஞ்சாயா
ேனுயும் பயலைமையு மீதூர வெம்மேபோ
ீயுந் திருமாலா னெஞ்சங்கோட் பட்டாயே.

ிண்ணன் வீடு முதன்முழுதுமா
யெண்ணின் மீதிய னெம்பெருமான்
மண்ணும் விண்ணுமெல்லா முடனுண்டநங்
கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே.

‡ ஊனில் வாழுயிரே நல்லைபோ வுன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூத னென்னம்மான்
தானும்யானுமெல்லாந் தன்னுள்ளே கலந்தொழிந்தோந்
தேனும் பாலுநெய்யுங் கன்னலு மமுதுமொத்தே.

§ ஆடியாடி யகங்கரைந்திசை
பாடிப்பாடிக்கண்ணீர்மல்கியெங்கு
நாடிநாடிநரசிங்காவென்று
வாடிவாடுமிவ்வாணுதலே.

|| அந்தாமத் தன்புசெய்தென் னுவிசே ரம்மானுக்
கந்தாம வாண்முடிசங் காழிநூ லாரமுள
செந்தா மரைத்தடங்கண் செங்கனிவாய் செங்கமலஞ்
செந்தா மரையடிகள் செம்பொன் றிருவுடம்பே.

யம்மா னுவை குந்தா* வென்ன வகுத்தன பத்தின் மாறன்
றன்னிலைக் கருக னன்றென் றகலுமென் றதனைத் தாலே
யுன்னிமா னீங்கே னென்னப் பிடித்தன னுனைநா னென்றான்
பொன்னுல களவா யோங்கும் பூம்பொழிற் பொருநை நாடன். (கசகூ)

வேறு.

ஆங்கதற்பின் காரியார் முதலாகி யவர்தமர்கள்
பூங்குழலா ளுடையநங்கை பொலிவுடைய சீர்த்தமர்கள்
பாங்குடனே யிவர்க்கடுத்தார் பணிசெய்வா ரனைவருக்கு
மோங்கியசீர் வைகுந்த மும்பர்தொழ விறையளித்தான். கரு0)

வேறு.

கேசவன் றமர்க† ளென்னக் கிளத்திய பத்திற் கேடி
லீசனார் கீழ்மேன் மூவேழ் சுற்றமு மென்போற் பேணி
யாசறு மேலை வீட்டி லமைத்தன னென்றா னந்தோ
நீசனேன் றனக்கும் பொன்றா நெடுவிசும் பளித்த மாறன். (கருக)

வேறு.

ஆசி லணைவ தரவணையி‡ லொருவன் றிருந்தி யாட்செய்ய
மாசின் மூவேழ் சுற்றத்தார் தமக்கும் வீடு மகிழ்ந்தளித்தா
னீச னுலகத் தவர்திருந்திக் கிளேயோ டென்போ லுய்ம்மினெனத்
தேசத் தவர்கட் குபதேசஞ் செய்தான் வகுளத் திருத்தாரான். (கருஉ)

எம்மா வீட்டில்§ வீடுபுக வாவென் றிறைவ னியம்பிடநின்
செம்மா பாதப் போதல்லால் வேண்டாம் வீடு சிறியேனுக்
கம்மா நின்னை வேண்டுவது மஃதே யென்றா ரருவினையேன்
பம்மாத் திட்ட பொய்யன்பை மெய்யாக் கொண்ட பராங்குசனார். (கருங)

---

வைகுந்தா மணிவண்ணனே யென்பொல்லாத்திருக்குறளா வென்னுண்மன்னி
வைகும் வைகலுந்தோறு மமுதாய வானேறே
செய்குந்தா வருந்தீமை யுன்னடியார்க்குத் தீர்த்தசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா வுன்னைநான் பிடித்தேன்கொள் சிக்கெனவே.

கேசவன் றமர்கீழ் மேலெம ரேழெழு பிறப்பு
மாசதி ரிதுபெற்று நம்முடை வாழ்வுவாய்க் கின்றவா
வீசனென்கருமாணிக்கமென்செங்கோலக்கண்ணன்விண்ணோர்
நாயக னெம்பிரா னெம்மா னாரா யணனாலே.

அணைவ தரவணைமேற் பூம்பாவை யாகம்
புணர்வ திருவரவர் முதனுந் தானே
யிணைவனா மெப்பொருட்கும் வீடு முதலாம்
புணைவன் பிறவிக் கடனீந்து வார்க்கே.

எம்மா வீட்டுத் திறமுஞ் செப்பநின்
செம்மா பாதபற்புத் தலைசேர்த் தொல்லை
கைம்மா துன்பங் கடிந்த பிரானே
யம்மா வடியேன் வேண்டுவ தீதே.

### வேறு.

ஏருறு திருவடி யெளிதி னெய்துவான்
பாருளோர் பற்றுமின் படியிற் சுந்தரன்
காருறு மாலிருஞ் சோலை கண்டெனச்
சீருறு கிளரொளி யிளமை செப்பினான்

### வேறு.

அப்ப னழகர் திருமலையை யவனி யோர்கள் பற்றுமெனச்
செப்பத் திருமா லன்போடுஞ் சிந்தை யுள்ளே தோற்றித்தன்
னொப்பி லாத திருவுருவைக் காட்ட வுள்ளே யனுபவித்து
முப்பத் தாறின்மேலானன் முடிச்சோ தியையு† மொழிந்திட்டான். (கருரு)

அந்த வண்ண மனுபவித்தற் கந்தக் கரண மழுக்குடம்பிங்
கிந்தச் சடல மாகாது பரம பதத்தார் யாக்கையினைத்
தந்து வந்து கலவென்னத் தயங்கு முந்நீர் ஞாலத்தைச்‡
சிந்தை யாரத் தெளிந்துரைத்தான் சீரார் பொருனைத் திருநாடன். (கருசு)

### வேறு.

விரும்பிய வண்ண முத்த ராக்கைமை ||......
..............................................................................
..................................................................................
...வேங் கடவர்க் காட்செய் திடும்படி சிந்தை செய்தே. (கருஎ,

விரைகமழ் நறும்பூஞ் சோலை வேங்கடத் தவர்க்கு முன்ன
முரைசெய்த படியே யாட்செய் துள்ளவா றவனைக் கண்டு
புரையற யாவும் யாரும் புகழுநல் லொருவ§ னென்றான்
வரைநிரை மாட வீதி வண்குரு கூரின் மாறன். கருஅ

---

* இளரொளியிளமைமேவையதன்முன்னம்
வளரொளிமாயோன் மருவியகோயில்
வளரிளம்பொழில்சூழ்மாலிருஞ்சோலை
தளர்வில ராகிற் சார்வது சதிரே.

† முடிச்சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ
வடிச்சோதி நீநின்ற தாமரையா யலர்ந்ததுவோ
படிச்சோதியாடை யொடும்பல்கலனாய்நின்பைம்பொ
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே.

‡ முந்நீர் ஞாலம் படைத்தவெம் முகில்வண்ணனே
யந்நா ணீதந்த வாக்கையின் வழியுழல்வேன்
வெந்நாளோய்வீய வினைகளை வேரறப்பாய்ந்
தெந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவனே.

கருஎ—செய்யுளில், முதலடியின் இறுதி யிரண்டுசீர்களும், உ-ங-வது அடிகளும், ச-வது அடியின் முதற்சீரின் பகுதியும் காணப்படவில்லை எமக்குக்கிடைத்த ரு- ஏட்டுப்பிரதிகளிலும் இவ்வாறு அரை குறையாகவேதான் எழுதப்பட்டிருந்தது. இச்செய்யுள், "ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி, வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம், தெழிகுரலருவித் திருவேங்கடத், தெழில்கொள் சோதி யெந்தைதந்தைதந்தைக்கே." என்னுந் திருவாய்மொழியின் பொருளை விளக்குவதாகும்.

§ புகழுநல் லொருவ னென்கோ பொருவில்சீர்ப் பூமி யென்கோ
திகழுந்தண் பரவை யென்கோ தீயென்கோ வாயு வென்கோ
நிகழுமா காச மென்கோ நீள்சுட ரிரண்டு மென்கோ
விகழ்விலிவ் வனைத்து மென்கோ கண்ணனைக் கூவு மாறே!

இப்படி மாலைக் காணு தவர்களை யிகழ்ந்து மிந்தப்
பொய்ப்படி தன்னிற் கண்ட தொண்டரைப் புகழ்ந்து மன்பாற்
செப்பினன் மொய்ம்மாம்* பத்திற் செண்பக மாற னாயென்
னப்பனு யன்னை யாயா சாரிய னான வம்மான். (௧௫௯)

## வேறு.

செய்ய தாமரைக்† கண்ணனிற் செண்பக மாறன்
வைய மாந்தரில் வீட்டின்ப மருவிடு மவர்க்குப்
பொய்யி லந்தரி யாமியா யுயிர்தொறும் புகுந்த
வையன் சேவடி பற்றிவீ டடைதலு மரிதாம். (௧௬௦)

பிரம ருத்திர ருணர்வருந் தேவனைப் பிடித்துப்
பரப தத்தினை யடைதலு மருமைபாற் கடலி
லரவ ணைத்துயி லச்சுதன் றனையுணர்ந் தாவி
விரவு முத்தியிற் புகுதலு மரிதுவிண் ணின்றும். (௧௬௧)

மண்ணில் வைகிய தயரத ராமனை வணங்கி
நண்ணி வீட்டின்ப நலணவு மரிதுகோ லத்திற்
புண்ணி யந்தரு நந்தகோன் புதல்வனைப் போற்றி
யெண்ணும் வீட்டின்ப மடைதலு மரிதிரு நிலத்தில். (௧௬௨)

ஆத லாலுமக் கரியவீ டடைந்திடு முபாய
மோது மர்ச்சாவ தாரத்தை யுவந்துமெய் யன்பாற்
போது தூவிநின் றருச்சனை செய்பவர் புவியி
லேதுசெய்யினுமெளிதின்வீ டடைவரென் றிசைத்தான். (௧௬௩)

## வேறு.

அப்படியே வீடளிக்கு மர்ச்சாவ தாரத்தை
யிப்படியிற் பற்றுமவர் யாவர்களே யாயிடினு
மொப்பரியா ரென்னை யுடையா ரெனமாறன்
செப்பும் பயிலுஞ் சுடரொளி‡யிற் செப்பினன் (௧௬௪)

---

மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை முதலைச் சிறைபட்டு நின்ற
கைம்மா வுக்கருள் செய்த கார்முகில் போல்வண்ணன் கண்ண
னெம்மா னைச்சொல்லிப் பாடி யெழுந்தும் பறந்துந் துள் ளாதார்
தம்மூற் கருமமென் சொல்லீர் தண்கடல் வட்டத்துள் ளீரே.

செய்ய தாமரைக் கண்ண னாயுல கேழு முண்ட வவன்கண்டீர்
வையம் வானம்மனி சர்தெய்வ மற்று மற்று மற்று முற்றுமாய்ச்
செய்ய சூழ்சுடர் ஞான மாய்வெளிப் பட்டி வைபடைத் தான்பின்
மொய்கொள் சோதியோ டாயி னானொரு மூவ ராகிய மூர்த்தியே.

பயிலுஞ் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப்
பயில வினியநம் பாற்கடல் சேர்ந்த பரமனைப்
பயிலுந் திருவுடை யார்யவ ரேலு மவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடை தோறெம்மை யாளும் பரமரே.

### வேறு.

முடியா னே*யென் றருள்பத்தின் முன்ன மிரங்கி மாமால்சீ
ரடியார்க் கடியா ரென்றுரைப்ப வரியை விரும்பிக் கரணங்கள்
படியா மொன்றின் றொழிலினைமற் றொன்று விரும்பிப் பகர்ந்ததனைக்
கடியார் பொழில்சூழ் திருக்குருகூர்க் காரி மாறன் கட்டுரைத்தான்.(௧௫

சொன்னால் விரோத† மெனும்பத்திற் கரணங் களுக்குஞ் சுகமளிக்கு
மென்னா ரமுதைக் கவிசொல்ல வம்மின் புலவீ ரெனவழைத்து
மன்னா மனிசர் தமைப்பாடி வாய்மை யிழக்கும் புலவர்கட்குத்
தன்னா லாமா றுபதேசஞ் செய்தான் வகுளச் சடகோபன். (௧௬)

ஊறும் பாலுஞ் செழுங்கனியு மமுதுங் கூட்டி யுணவிடினு
நாறும் விடக்கின் சுவடெடுத்து நடக்கு கின்ற நாயேபோற்
கூறுங் கவிக டமிழ்மாற னுரையை யிறையுங் குறியாதே
மாறி வஞ்ச மானிடரைப் பாடி வாய்மை யிழந்தழியும். (௧௭)

தின்மை§ யுடையார் தின்மையுடன் சேர்மின் றேவர்க் கிடர்செய்யும்
வன்மை யுடைய வல்லரக்கர் மடியப் படைதொட் டெனையாண்ட
நன்மை யுடையோன் சீர்பரவி நானோர் குறையு மிலேனென்னச்
சன்மம் பல‡வென் றொருபத்து முரைத்தான் ஞானச் சடகோபன்.(௧௮)

ஒருநா யக¶மென் றருள்விளங்க வோதும் பத்தி லுலகத்தீர்
திருமால் பரம பதத்தின்பந் திகழும் போக மல்லாதே
வருமாப் பிரம னரனாதி போக மாய்த றிடமென்றான்
கருமாக் கடலின் றனையெடுத்த காரி மாறன் சடகோபன். (௧௯)

---

§ தின்மை—தீமை. "நன்மையுஞ் செல்வமு நாளு மல்குமே, தின்மையு மின்மையு மின்றித் தீருமே", என்னுங் கம்பராமாயணச் செய்யுளில் தின்மை என்பது தீமை யென்னும் பொருளில் பிரயோகிக்கப்பட்டிருத்தல் காண்க.

---

* முடியானே மூவுலகுந் தொழுதேத் துஞ்சீ
ரடியானே யாழ்கடலைக் கடைந்தாய் புள்ளூர்
கொடியானே கொண்டல்வண்ணா வண்டத் தும்பரி
னெடியானே யென்று கிடக்குமென் னெஞ்சமே.

† சொன்னால் விரோதமி தாகிலுஞ் சொல்லுவன் கேண்மினோ
வென்னாவி லின்கவி யானொரு வர்க்குங் கொடுக்கிலேன்
றென்னா தெனாவென்று வண்டு முரறிரு வேங்கடத்
தென்னானை யென்னப்ப னெம்பெரு மானுள னாகவே.

‡ சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம்வில்
லொண்மை யுடைய வுலக்கை யொள்வா ளண்டுகொண்டு புள்ளூர்ந்துலகில்
வன்மை யுடைய வரக்க ரசுரரை மாளப் படைபொருத
நன்மை யுடையவன் சீர்பரவப் பெற்ற நானோர் குறைவிலனே.

¶ ஒருநா யகமா யோட வுலகுட னாண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண விம்மையிலே பிச்சை தாங்கொள்வர்
திருநாரணன்றாள் காலம்பெறச் சிந்தித் துய்மினோ.

### வேறு.

பாலனா* யென்ற பத்திற் றானொரு பால னாகி
யாலமா மிடற்றன் போற்று மச்சுத னவதா ரத்திற்
கோலமா யணிந்த தாமங் கழிந்தமன் கொள்வா னெண்ணிச்
சாலவே யழுது விம்மிப் பொருமினான் றனைத்தா னொப்பான். (௧௭௦)

### வேறு.

இறந்த காலத் தவதாரத் திட்ட மாலை கேட்டவற்குச்
சிறந்து தோன்றி யவரவராய்த் திருத்தார் நல்கித் திருமாறன்
றிறந்த நெஞ்சைச் சாந்தாகப் பூசித் துகளி றிருவாயாற்
பிறந்த தமிழை யாடைகலன் றாரா யணிந்து பிரானிற்ப. (௧௭௧)

செப்புங் கோவை வாயாளி‡ லீசன் செய்யுந் திறனைக்கண்
டொப்பி லாதாய் தீவினையே னெஞ்சே சாந்த முனக்கென்றுந்
தப்பின் முனிவர் தலைவாவென் சொல்லோ வாடை கலன்றாரா
மப்ப வந்தோ வுனக்கென்ன வாழ்வா ரறத்தாழ்ந் தமைந்திட்டார். (௧௭௨)

என்ன கைம்மா றிதற்கந்தோ யாஞ்செய் கேனென் றிதயத்தி
னுன்னி யொடுங்கி யிருந்தனனே மூலக முண்டான் சிறிதகன்றான்
பின்னம் மாறன் கண்விழித்துப் பிரானை நோக்கக் காணாதே
மன்னுந் துயரத் துள்விழுந்து வருந்தி யழுத வருத்தத்தால். (௧௭௩)

வெண்ணெய் திருடி யுண்டவர்க்கு வீதி வாயி லகப்பட்ட
பெண்ணைப் போலோர் பெண்கொடியாப் பேரா மயலி னுள்விழுந்து
மண்ணை யிருந்து துழாவி§யுறும் பத்து மயலாய் வகுத்தானென்
கண்ணை யிறையும் விட்டகலாக் காரி மாறன் சடகோபன். (௧௭௪)

மாறா மயலி லவ்வண்ண மாறன் வருந்த வவைதீர்ப்பா
னாறார் சடையான் றொழுதேத்து மந்தா மத்தா னந்தத்தான்
சேறார் கமலத் திருவாதி மடவார் சூழ்ந்து திருவுருவில்
வேறா காதே யுடனுறைய நித்தர் முத்தர் வியந்தேத்த. (௧௭௫)

---

* பாலனா யேழுல குண்டு பரிவின்றி
யாலிலை யன்ன வசஞ்செய்யு மண்ணலார்
தாளிணை மேலணி தண்ணந் துழாயென்றே
மாலுமால் வல்வினை யேன்மட வல்லியே.

‡ கோவை வாயாள் பொருட்டேற்றி னெருத்த மிறுத்தாய் மதிளிலங்கைக்
கோவை வீயச் சிலைகுனித்தாய் குலநல் யானை மருப்பொசித்தாய்
பூவை வீயா நீர்தூவிப் போதால் வணங்கே னேலுநின்
பூவை வீயா மேனிக்குப் பூசுஞ் சாந்தென் னெஞ்சமே.

§ மண்ணை யிருந்து துழாவி வாமனன் மண்ணிது வென்னும்
விண்ணைத் தொழுதவன் மேவு வைகுந்த மென்று கைகாட்டுங்
கண்ணை யுண்ணீர் மல்கநின்று கடல்வண்ண னென்னு மன்னேயென்
பெண்ணைப் பெருமயல் செய்தார்க் கென்செய் கேன்பெய் வளையீரே.

வீற்றி ருந்தே ழுலகாள்வான் விரைவி னெய்தி யாழ்வார்முன்
றேற்ற விந்தத் திருக்கோலந் தொழுது பணிந்து கவிசொல்ல
நோற்றேற் கென்ன குறையென்ன* நுவல வினிய வப்பத்துஞ்
சாற்றி யவனைக் கவிபாடுந் தன்னை வியந்தான் சடகோபன். (கஎ

வேறு.

இவனைநான் பாடப் பெற்றே னெழுமையுங் குறைவி லேனென்
றவனிறை யுருவ நோக்கி யாடிநின் றுனைந் தித்திட்
டெவனெனை நிகர்ப்பா னென்ன விருந்தனன் சுகாதீ தத்திற்
சிவனய னிறைஞ்சி யேத்தத் திருமகள் கொழுநன் போனான்.(கஎஎ)

அச்சுதன் போன தோரா னனுபவக் கடலி லாழ்ந்தான்
பச்சைமா முகிலை மீட்டும் பங்கயக் கண்ணு னேக்க
நச்சரா வணையி னுனை நாடினன் காணு தேங்கி
யிச்சொன்ன துயர்தீர்ப் பாரை யாமினி¶ யென்ற பத்தில். (கஎஅ)

தானொரு மடந்தை யாகித் தலைவனைப் பிரிந்து வாழே
னெனை மோக முற்று நானிலத் தயர்ந்த தாக
வானவத் துயரங் கண்ட வன்னைமார் வருந்தி யின்றென்
றேனமர் குழலாள் கொண்ட நோயென்கொ லென்று சிந்தை.(கஎகூ)

வருந்தின ருடனே தேறி வாணுத லொண்க ணுட்குத்
திருந்துமெய் வெறியாட் டாலே தீருமென் றதனைச் செய்யக்
குருந்துறைந் தவர்க்குத் தோற்றாள் கொம்புயி ரென்று தோழி
பொருந்தியவெறியாட்டாங்கேவிலக்கவப்பொற்பின்மிக்காள். (கஅ0)

கண்ணனுக் காசை யுற்று ளென்றகட் டுரையைக் கேட்டு
துண்ணென வெழுந்து விண்ணைத் தொழுதவன் றன்னைக்
வெண்ணினு னெண்ணி மாறு திராப்பகல் வருந்தி மாற
னண்ணருஞ் சீல மில்லாப்§ பத்தினு ஞால முண்டாய். (கஅக)

---

வீற்றிருந் தேழுல குந்தனிக் கோல்செல்ல வீவில்சீ
ராற்றன் மிக்காளு மம்மானை வெம்மாபிளந் தான்றன்னைப்
போற்றி யென்றே கைகளாரத் தொழுதுசொன் மாலைக
ளேற்ற நோற்றேற் கினியென்ன குறையெழு மையுமே.

தீர்ப்பாரை யாமினி யெங்ஙன நாடுது மன்னைமீ
ரோர்ப்பாலிவ் வொண்ணுத லுற்றநன் னோயித தேறினோ
போர்ப்பாகு தான்செய்தன் றைவரை வெல்வித்த மாயப்(
தேர்ப்பாக னார்க்கிவள் சிந்தை துழாய்த்திசைக் கின்றதே.

சீல மில்லாச் சிறிய னேனுஞ் செய்வினை யோபெரிதால்
ஞால முண்டாய் ஞான மூர்த்தீ நாராயணா வென்றென்று
காலந் தோறும் யானிருந்து கைதலை பூச லிட்டாற்
கோல மேனி காண வாராய் கூவியுங் கொள்ளாயே.

[illegible] யணையா யன்றேல் வளரொளி திகழு ஞான
வந்தமில் பேரா னந்தத் தகல்விசும் படைவா னீயென்
சிந்தைநோய் தீரக் கூவி யருளென்று செப்பி நைந்தா
னிந்தமா நிலத்தோர்க் கெல்லா மின்பவீ டளித்த மாறன். (கஅஉ)

கூவுதல் வருதல் செய்தி யென்றுநான் குழறக் கேட்டுத்
தேவர்கோ னிரண்டி லொன்று செய்திலன் சிறிய வென்னை
மூவுல களந்தான் வேண்டா மெனமுனிந் தனனோ லென்னை
யாவநான் றானும் வேண்டே னென்னவே றுளும் பத்து. (கஅந)

செப்பினு னிகழ்ந்தான் றன்னைச் செண்பக மாறன் பின்னு
மொப்பிலா நண்ணு தாரி§ லுலகுறு கொடுமை கண்டே
யிப்படி யிடையி லந்தோ விமைப்பொழு தெனினும் வாழே
னப்பவென் னமுதே கூவி யருளுதி யன்பா லென்றும். (கஅச)

உரைசெய்தா னதற்பின் மாயத் துறுமுல குய்யும் வண்ணம்
வரைசெய்மா மாட மோங்கும் வண்குரு கூரி னின்ற
விரைசெய்தண் டுழாயெம் மாதி விண்டுவே பரமற் றெல்லாம்
[illegible]ரையறும் பரமன் றென்னப் பொருவிலாவொன் றுந் தேவில்‡. கஅரு

அறைதலுஞ் சமணர் சைவ ராதியோர் பகர்வ ராழ்வீர்
மறைகளி லுரைப்பக் கேளே மதிவிதி நலனி தென்ன
நறைகமழ் வகுளத் தாரா னகைத்துநால் வேதஞ் சொன்ன
துறைவறு பொருளை நானுங் கூறினே னென்று கூற. (கஅசு)

மற்றவ ருரைப்ப ராழ்வீர் மறைகளை யாதி யந்த
முற்றுநீ வோதி னோர்க ளுரைத்திடக் கேளே நீருங்
கற்றிலீ ரதனைத் தெய்வ கடாக்கத்தி னுணர்ந்தீ ராகி
லற்றமற் றிதுவென் றோது மாரண மறைக ளென்றார். (கஅஎ)

---

எருளு மிறையோனுந் திசைமுகனுந் திருமகளுங்
கூறுளுந் தனியுடம்பன் குலங்குலமா வசுரர்களை
நீறுகும் படியாக நிருமித்துப் படைதொட்ட
[illegible]ாறுளன் கவராத மணிமாமை குறைவிலமே.

நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
வெண்ணாத் துயர்விளைக்கு மிவையென்ன வுலகியற்கை
கண்ணளா கடல்கடைந்தா யுன்கழற்கே வரும்பரிசு
தண்ணவா தடியேனைப் பணிகண்டாய் சாமாறே.

ஒன்றுந் தேவு முலகு முயிரு மற்றும் யாதுமில்லா
வன்று நான்முகன் றன்னொடு தேவ ருலகோ டுயிர்படைத்;
குன்றம் போன்மணி மாட நீடு திருக்குருகூ ரதனு
ணின்ற வாதிப் பிரானிற்க மற்றைத் தெய்வ நாடுதிரே.

என்றவ ரறையக் கேட்டாங் கெம்பிரா னருளிச் செய்யு
நன்றுநா னூலாம் வன்ன நான்மறை நவில லாகா
தின்றுநீர் கேட்ட வேத மிசைத்தவப் பொருளை யெல்லா
மொன்றொழி யாது காட்டித் தருவனீ ருணர்மி னென்ன. (௧௮௮)

முனிவர்க ளுரைமின் வேத மெனவவர் முழுது மோத
வினியநற் பொருளை யெல்லா மெம்பிரா னியம்பக் கேட்டுத்
தனிமுத லிவனென் றெண்ணிச் சரண்புகுந் தவரும் வாழ்ந்தார்
கனிபொழிற் குருகைக் கோமான் கருணையார் கழறற் பாலார்.(௧௮௯

காசினி யோர்க்குக் கையார் சக்கரந்* தன்னிற் பின்னு
மாசற வுபதே சித்தா னணிகுரு கூரி னின்ற
வீசனைப் பொய்யன் பாலே யான்றொழ மெய்யாய்க் கொண்டான்
கூசிடர் கெடுப்ப னென்போற் கொள்கபொய் வேட மென்ன. (௧௯௦)

கூறிட வதனைக் காண்ப மென்றுபொய்க் கொடுந்து றுற்று
மாறுறு முலகத் துள்ளோர் வந்துபொய் வேடங் கொள்ள
நாறுபூந் துழாயான் மெய்யாய் நடத்தினா னதுகண் டாங்கே
தேறினார் மண்ணோ ரெல்லாஞ் செங்கண னடிய ரானார். (௧௯௧)

அன்பரிங் கொருவ ரின்றி யருந்துய ருற்று வாடித்
துன்புறு மாறன் றொண்டர் தோற்றிய குழாத்தைக் கண்டிங்
கின்பமுற் றிவைமேன் மேலும் பொலிக† வென் றெடுத்தோர் பத்தும்
வன்புல னவரைச் சீரா மங்கலா சாத னத்தை. (௧௯௨)

கட்டுரைத் தருளிப் பின்னுக் கண்ணனைக் ககனத் தே
விட்டிவண் பிரிந்து வைகும் வேதனை மிகுதி யாலே
மட்டவிழ் துழாயி னாற்கு மடலூர்வான் மனத்து ளெண்ணிச்
சிட்டர்வாழ் குருகைக் கோமான் மாசறு சோதி‡ செய்தான்.(௧௯௩)

---

* கையார்சக்கரத்தென்கருமாணிக்கமேயென்றென்று
பொய்யேகைம்மைசொல்லிப்புறமேபுறமேயாடி
மெய்யேபெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்று காப்பாரா
ரையோகண்ணபிரானறையோவினிப்போனாலே.

† பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாப
நலியு நரகமு நைந்த நமனுக்கிங் கியாதொன்று மில்லை
கலியுங் கெடுங்கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள்
மலியப் புகுந்திசை பாடி யாடி யுழிதரக் கண்டோம்.

‡ மாசறு சோதியென் செய்யவாய் மணிக்குன்
யாசறு சீலனை யாதி மூர்த்தியை நாடியே
பாசற வெய்தி யறிவிழந் தெனைநா ளைய
மேசறு மூரவர் கவ்வை தோழீயென் செய்யுமே.

ஆங்கதற் பின்பு முன்பே யறைந்தசீர் மடலூர் வானு
மேங்கிய வருத்தந் தன்னால் யாக்கையா லியலாத் துன்பந்
தாங்கிய வாவி யந்தச் சடத்தைவிட் டகலாத் துன்பு
மோங்கிடச் சிந்தை நொந்தாங் கூரெலாந் துஞ்சி* செய்தான்.(கசுச)

அருந்துய ரிவண மெய்த வழகிய நம்பி வந்து
திருந்துரு வெளியாய்த் தோன்றச் செண்பக மாறன் கண்டு
வருந்தறீர்ந் தெங்ங னேயோ வன்னைமீர்† றென்ன வாக்காற்
குருங்கைமா லருளைப் பெற்ற கொம்பெனக் கூறி வாழ்ந்தான்.(கசுரு)

அப்படி யாசை யுற்றுங் கறைந்தவக் கொம்பு பின்பு
செப்பருங் கடன்ஞா லத்திற் சிதரன் செய்த வெல்லா
மிப்பொழு தியானே செய்தே னெனமைய லேறி நின்று
தப்பற வுரைப்பத் தாயு மவைகண்டு தரணி யோர்பால். (கசுசு)

என்னென வறியே னந்தோ வென்மக ளறிவின் மேலே
முன்னுல் களந்தா னேறி மொழிவதோ வவனுற் செய்யு
முன்னருந் தொழில்க டான்செய் திட்டதென் றுரைக்கு மென்னப்
பன்னரு மொழியுந் தாயார் பகர்ந்ததாய்ப் பகர்ந்தார் பத்தர்.‡(கசுஎ)

ஆங்கதற் பின்பு நோற்ற நோன்பிலேன்§ னறிவி லேனென்
றேங்கிய பத்தி லில்லேன் றவமெழின் ஞான மென்னைத்
தாங்கிநீ தான்வீட் டின்பந் தருதியென் றறைந்தான் றன்சீர்ப்
பூங்கழ ஞெழுவார் தொண்டர் தொண்டர்கைப் பொருளை யீர்வான்.

---

ஊரெல்லாந் துஞ்சி யுலகெல்லா நள்ளிருளாய்
நீரெல்லாந் தேறியோர் நீளிரவாய் நீண்டதால்
பாரெல்லா முண்டநம் பாம்பணையான் வாரானு
லாரெல்லே வல்வினையே னாவிகாப பாரினியே.

எங்ஙனேயோவன்னைமீர்காளென்னைமுனிவதுநீர்
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்ட
சங்கினோடுநேமியோடுந் தாமரைக்கண்களோடுஞ்
செங்கனிவாயொன்றினோடுஞ் செல்கின்றதென்னெஞ்சமே.

கடன்ஞாலஞ் செய்தேனும் யானே யென்னுங்
கடன்ஞால மாவேனும் யானே யென்னுங்
கடன்ஞாலங் கொண்டேனும் யானே யென்னுங்
கடன்ஞாலங் கீண்டேனும் யானே யென்னு
கடன்ஞால முண்டேனும் யானே யென்னுங்
கடன்ஞாலத் தீசன்வந் தேறக்கொலோ
கடன்ஞாலத் தீர்க்கிவை யென்சொல்லுகேன்
கடன்ஞாலத் தென்மகள் கற்கின்றவே.

நோற்றநோன்பிலேனுண்ணறிவிலேனாகிலுமினியுன்னைவிட்டு
மாற்றகிற்கின்றிலே னரவினணை யம்மானே
சேற்றுத்தாமரை செந்நெலூடுமலர் சிரீவரமங்கலநகர்
வீற்றிருந்தவெந்தா யுனக்குமிகை யல்லேனங்கே.

ஆரா வமுத* மெனும்பத்தி லரிவைக் கூவ வவன்விரைவில்
வாரா தொழிய மிகவாடி மனத்தி லீடு பட்டுனடி
தாராய் தருவாய் நீயல்லா திலையோர் சார்விங் கெனக்கென்றென் றே
றீரா வினைக ளூர்த்தடியே னகத்தே வளர்செண் பகமாறன். (௧௯௯)

வேறு.

திருவல்ல வாழென்று† செப்பும் பத்தினிக
மருவிய திருப்பதி வணங்கப் போயபெண்
ணுருவழி நடப்பதற் காவி யின்றியப்
பொருவரு மூர்ப்புரம் புகுந்தோர் சோலையில். (௨௦௦)

கிடந்துயிர்த் தோழிய ரோடு கேடிலீர்
நடந்துநான் றிருவல்ல வாழி னுதனைத்
தடம்பெருங் கைகளால் வணங்கித் தாழ்வதிவ்
வுடம்புட னென்றெனக் குறுங்கொ லென்னவும். (௨௦௧)

கூறியும் பிறந்தவா‡ றென்று கூறிய
மாறிலாப் பத்தினி னந்த கோன்மக
னூறுபால் வெண்ணெய்தொட் டுண்ட தாதியாத்
தேறுசிற் குணங்களைச் சிந்தை செய்துநான். (௨௦௨)

உன்னைவிட் டிறையுமிவ் வுலகில் வாழ்கிலே
னென்னைநீ கூவுதி யிலங்கு வேல்விழிப்
பின்னைநா யகவெனப் பிதற்றி வாடினுன்
றன்னைநான் றுதிசெயத் தந்த தம்பிரான். (௨௦௩)

---

* ஆரா வமுதே யடியே னுடல நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய வுருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசுஞ் செழுநீர்த் திருக்குடந்தை
யேரார் கோலந் திகழக் கிடந்தாய் கண்டே னெம்மானே

† மானேய்நோக்குநல்லீர் வைகலும்வினையேன்மெலிய
வானூர்வண்கமுகு மதுமல்லிகைகமழுந்
தேனூர்சோலைகள்சூழ் திருவல்லவாழுறையுங்
கோனாரையடியேனடி கூடுவதென்றுகொலோ.

‡ பிறந்தவாறும்வளர்ந்தவாறும் பெரியபாரதங்கைசெய் தைவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோனமாயங்களு
நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண்கின்றவிச்
சிறந்தவான்சுடரே யுன்னையென்றுகொல்சேர்வதுவே.

---

"ஆராவமுதே" என்கிற இந்தத் திருவாய்மொழியை மேல்நாட்டினின்றும் எழுந்தருளிய சில ஸ்ரீவைஷ்ணவர்கள் மன்னனார் திருமுன்பே அநுஸந்தித்தருளக்கேட்ட ஸ்ரீமந்நாதமுனிகள் அதிப்ரீதராய் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களைப்பார்த்து, '"ஆயிரத்துளிப்பத்தும்" என்றிருந்தது; இந்தப்பிரபந்தம் உங்களுக்கு முற்றப்போமோ' என்று கேட்டருள, அவர்கள் 'இப்பத்துப் பாட்டுமே வருவது' என்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீமந்நாதமுனிகள் அவர்களை ஸத்கரித்துப்போகவிட்டருளி ஸ்ரீ சடகோபன் அவதரித்தருளின திருக்குருகூர்ப்ரதேசத்திற்கு எழுந்தருளித் திருப்புளியாழ்வாரடியிலே ஆழ்வார்திருமுன்பே, ஸ்ரீபராங்குசதாஸர் நியமித்தருளியபடி கண்ணிநுண்சிறுத்தாம்பைப்பன்னீராயிர உரு நியமத்தோடு அநுஸந்திக்க ஆழ்வார் ப்ரஸந்நராய் ஸ்ரீமந்நாதமுனிகளுக்குத் திருவாய்மொழியையும், மற்றுமுள்ள மூவாயிரப்ரபந்தங்களையும் ப்ரஸாதித்தருளினார் என்பது வரலாறு.

வேறு.

டுத்த வைகல் பூங்கழியிற்* றிருவண் வண்டூர் மாறன்பாற்
றடுத்த வாசை மிகத்தூதாய்த் தூநீ ரிரைதேர் பறவைகளை
டுத்துத் தலைவன் வரவுணருங் கொம்பாய் வாடி மெலிந்தாளீ
டுத்த பதினெண் பூமியையுந் திருவாய் மொழியா லுய்வித்தான். (௨௦௪)

வேறு.

தன்னுடைத் துயர மெல்லாஞ் சாற்றிமுன் விடுத்த தூதான்
மன்னுசீர்த் திருவண் வண்டூர் மாயன்மெய் வந்து தீண்ட
வுன்னையின் றளவுங் கூவு வென்செய்தா யென்ன வூடி
மின்னிடை மடவா ராதி† பத்தையும் விரித்தான் மாறன். (௨௦௫)

செல்வநான் மறையோர் வாழுந் திருவிண்ண கருள மாமால்
பல்பல பொருளு மாகிப் பரந்தமை யனைத்து நோக்கி
நல்குர‡ வாதி பத்து ஞானமாய் நவின்றா னென்னை
யல்லலிற் படாதாட் கொண்டென் னருவினை யறுத்த வம்மான். (௨௦௬)

விண்ணக ரண்ண லான பரிசெலாம் விரித்த தற்பின்
பண்ணமர் குரவை யாய்ச்சி§ யென்றுரைத் தருளும் பத்தின்
மண்மிசை நந்த கோபன் மகனுடை விளையாட் டெல்லா
மெண்ணிநான் பரவப் பெற்றே னெனக்கினிக் குறையே தென்றும். ()

எலையறு மகிழ்ச்சி தாங்கி யிருந்துபி னொருபெண் ணாகித்
தொலைவிலி மங்க லத்தைத் தொழுததிற் றுணிவி னோடுந்
தலைவனைப் புணர்வா னேகத் தாயது தடுப்பக் கண்ட்
நிலையுயிர்த் தோழி சென்றத் தாயரை நோக்கி நின்றே. (௨௦௮)

---

வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங்குருகினங்காள்
செய்கொள்செந்நெலுயர் திருவண்வண்டூருறையுங்
கைகொள்சக்கரத்தென்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன்காதன்மையே.

மின்னிடைமடவார்க ளின்னருள்சூடுவார்முன்புநானதஞ்சு
மன்னுடையிலங்கை யரண்காய்ந்தமாயவனே
யுன்னுடையசுண்டாய நானறிவனினியதுகொண்டுசெய்வதெ
னென்னுடையபந்துங்கழலுந் தந்துபோகுநம்பீ.

நல்குரவுஞ்செல்வமு நரகுஞ்சுவர்க்கமுமாய்
வெல்பகையுநட்பும் விடமுமமுதமுமாய்ப்
பல்வகையும்பரந்த பெருமானென்னையாள்வானைச்
செல்வமல்குகுடித் திருவிண்ணகர்க்கண்டேனே.

குரவையாய்ச்சியரோடுகோத்ததுங் குன்றமொன்றேந்தியது
முரவுநீர்ப்பொய்கைநாகங்காய்ந்தது முட்படமற்றும்பல
வரவிற்பள்ளிப்பிரான் றன்மாயவினைகளையேயலற்றி
[illegible]

வேறு.

காட்டிக் கொடுத்தீ ரறியாத கன்னி தனக்குக் கருமுகிலை
நீட்டிக் குறைக்கி னெடும்பகையென் றாலோர் சொல்லு நிலையன்றோ
நாட்டிற் பழிக்கு நீரஞ்சித் தடுத்தா னங்கை நிலாளென்னக்
கூட்டிக் கொடுத்த வுயிர்த்தோழி கொம்பின் செயலைக் குறித்திரங்கி.(உ0கூ

வேறு.

அன்னையோ டுற்ற தாக வருளினா ரங்கோர் பத்து
பின்னையு மாற்கு வைய† மென்றதி லந்தப் பெண்டான்
முன்னையா ரணங்கள் போற்று முதல்வன்மே லாசை பூண்டு
தன்னையு மறந்து தாய்மார் தன்னுடை மகிழ்நன் சாத்தும். (உக0

அணிகல னுடை முற்று மறவிகழ்ந் தெறியக் கண்டு
பிணியிவை யென்கொ லென்னப் பேசிய தேசத் தார்க்குப்
பணியணை யுடையார் மாய மயக்கிடைப் பட்டா ளென்னத்
துணிவுடை யன்னை சொல்லுந் துகளறு சொல்ல தாக. (உகக

செப்பினான் மாறன் பின்னச் சேயிழை தனக்கன் றன்னை
யொப்பிலா பரணஞ் சாத்தி யுடுதுகி லுடுத்தி யுண்ணான்
றப்பொழு தன்னந் தண்ணீர் வெற்றிலை யடைக்கா யீய
விப்பொழு தெனக்குக் கோளூர் பதியதா யினிது வைகும். (உகஉ

கண்ணனே யுண்ணுஞ் சோறுங் களிப்பொடு பருகு நீரும்
வெண்ணகைக் கழகு செய்யும் வெற்றிலைப் பிளவு மென்னத்
திண்ணமா யவ்வூ ரெய்தத் தேடித்தாய் வருந்த லாக
வுண்ணுஞ்சோ றுதி‡ பத்து முரைத்தன னுவமை யில்லான். (உ

ஆங்கதற் பின்பு தானே ரரிவையா யமரர் வேந்தன்
றாங்கிய வுலகு மன்னும் பறவைக டமக்கு நல்கி
யோங்குவை குந்த மன்னு முத்தமற் கென்றா தாகப்
...ந்தட னுரைத்தாள் வீரென் றன்பினாற் பகர்ந்த பண்சேர்.(உகச

---

துவளின் மாமணி மாட மோங்கு தொலைவில்லி மங்க லந்தொழு
மிவளை நீரினி யன்னை மீருமக் காசை யில்லை விடுமினோ
தவள வொண்சங்கு சக்கர மென்றுந் தாமரைத் தடங்க ணென்றுங்
குவளை யொண்மலர்க் கண்கணீர் மல்க நின்று நின்று குமிறுமே.

மாலுக்கு வையம ளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்குக்
கோலச்செந் தாமரைக் கண்ணற்கென் கொங்கல
ரேலக் குழலி யிழந்தது சங்கே.

உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்வெற் றிலையுமெல்லாங்
கண்ண னெம்பெருமா னென்றென்றே கண்கணீர் மல்கி
மண்ணினு ளவன்சீர் வளம்மிக் கவனூர் வினவித்
திண்ண மென்னிள மான்புகு மூர்திருக் கோளூரே.

வேறு.

சீரார் பொன்னு லகாதி* பத்துஞ் செப்பிப் பரம பதத்திருந்த
நாரா யணனே வருதியென ஞால மிரங்க விண்ணிரங்க
நீராய் நிலனு† யெனும்பத்தி னெடுமா லிரங்க விருந்துரைத்தான்
காரார் பொழில்சூழ் திருக்குருகூர்க் காரி மாறன் சடகோபன். (உகரு

வேறு.

பொருவிலா வுலகமுண்ட பெருவாய‡ னென்றன்பாற் புகலும் பத்தின்
மருவரிய வேங்கடப்பொற் குன்றிலுறை மாயவனை மார்பில் வைகுந்
திருமகளை முன்னிட்டுச் சிந்தனையூற் சென்றிறைஞ்சிச் சரணம் புக்கா
னருமறையு மறிவரிய பொருளையிந்த வம்புவியோர்க் கருளிச் செய்தான்

வேறு.

அடுத்த வுண்ணி லாவி§ தன்னிற் சரணு கதியென் றடிபணிய
வெடுத்து விரைவிற் பரமபதத் திறைவ னேற்று வகைகண்டு
தொடுத்த வஞ்சப் புலன்கடமக் கிரையா யென்னைத் துணிந்திட்டுக்
கெடுத்தா யின்னுங் கெடுப்பாய்கொன் முறையோவென்றான்கேடில்லான்.

அப்ப டியுண்ணி லாவியினின் முறையிட் டலற நான்மறைக்குஞ்
செப்ப வரிய பரம்புருடன் சேரா வகையான் மிகவாடி
யொப்பில் கங்கு¶ றனிலாசை யுற்றோர் பெண்ணாய் நம்பெருமா
ளெப்போ|| வருவ னெனத்தன்னை மறந்து கிடப்ப வவ்வியல்பை. (உகஅ)

---

* பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ
நன்னலப்புள்ளினங்காள் வினையாட்டியேனுனிரந்தேன்
முன்னுலகங்களெல்லாம்படைத்தமுகில்வண்ணன் கண்ண
னென்னலங்கொண்டபிரான்றனக்கென்னிலைமையுரைத்தே.

† நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனா யயனானாய்
கூரா ராழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்
வாரா யொருநாள் மண்ணும் விண்ணு மகிழவே.

‡ உலக முண்ட பெருவாயா வுலப்பில் கீர்த்தி யம்மானே
நிலவுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி நெடியா யடியே னாருயிரே
திலத முலகுக் காய்நின்ற திருவேங் கடத்தெம் பெருமானே
குலதொ லடியே னுனபாதங் கூடு மாறு கூறாயே.

§ உண்ணி லாவிய வைவராற் குமைதீற்றி யென்னையுன் பாத பங்கய
நண்ணிலா வகையே நலிவா னின்ன மெண்ணுகின்றா
யெண்ணி லாப்பெரு மாயனே யிமையோர்க ளேத்து முலகு மூன்றுடை
யண்ணலே யமுதே யப்பனே யென்னை யாள்வானே.

¶ கங்குலும் பகலுங் கண்டுயி லறியாள் கண்ணநீர் கைகளா லிறைக்குஞ்
சங்குசக் கரங்க ளென்றுகை கூப்புந் தாமரைக் கண்ணென்றே தளரு
மெங்ஙனே தரிக்கே னுன்னைவிட் டென்னு மிருநிலங் கைதுழா விருக்குஞ்
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தா யிவடிறத் தென்செய்கின் றாயே.

|| எப்போது வென்பது கடைக்குறை விகாரம்பெற்று 'எப்போ' என நின்றது.

ண்ட வன்னை நம்பெருமாண் முன்னே யிந்தக் கன்னிதனைக்
கொண்டு சென்றான் படிக்கிடத்திக் கூச்ச மின்றி மருமகனைத்
தண்டி நின்றென் மகளுன்னைச் சாற்றி மறந்தா னிவடிறத்திற்
பண்டு புவியுண் டவனோநீ யென்செய் திட்டா யெனப்பலகால்.

டரைத்த வாறே யுரைசெய்த வோங்கு வெள்ளைச் சுரிசங்கில்
திரைக்கொள் பொழில்சூழ் தென்னரங்கன் பேரை யன்னை முனமவள்பபத
தரைபுக் கயர்ந்தா ளுடன்றேறி வேட்டைக் கவன்போய்ச் சார்ந்திருந்த
திரைத்த பொருளைத் தென்றிருப்பேர் தன்னின் மனத்தை யிருந்தேவி.

புலம்பி நைந்த வாறுகச் செப்பி முன்னம் பூதலத்தி
லம்பு திரைநீள் பாற்கடலி லரவத் தணையிற் கிடந்தபிரான்
தலங்கொ டரும நெறிகாப்பான் குறையா நிறைவா லுகந்தோறு
நிலம்புக் கருளு மவதாரம் பத்திற் செய்த செய்ந்நெறிகள். (உஉக)

இப்போ காட்ட வேண்டுமென விரங்கி மால்சென் றெதிர்தோன்றித்
தப்போ கேட்ட துடனீவே மென்று சார்ந்து தன்னுருவந்
தொப்போ டமர ரறியாத வுருவம் பத்து முளசெயமு
டப்போ காட்டக் கண்டாங்கே யாழி யெழச்சங்† கருள்செய்தான். (உஉஉ)

கற்பா ரிராம பிரானுதி‡ கழறும் பத்தின் முன்கண்ட
நற்பா லுருவுக் கோரொன்றாய் நாட்டார்க் கறிய நயந்துரை
பொற்பார் பொழில்சூழ் திருக்குருகூர்ப் புறத்தே செறிந்தவ் வூர்தொழுது
நிற்பார் தமக்கும் வீடளிக்கு நெறிசேர் வகுளச் சடகோபன். (உஉங)

சாற்றும் பாம ருமூவுலகிற்§ றான்முன் கண்ட தனிமுதல்வன்
மேற்ற மோரைந் தொருநான்குந் தோன்றி மறையப் பிரிந்த
ளுற்ற கில்லே னெனக்கூவி யலறி யழுதா னயன்விதியுங்
கூற்றுங் கலங்க வேனதுள்ளே குருகூ ருடனே குடிபுக்கான். (உஉச)

---

வெள்ளைச் சுரிசங்கொ டாழி யேந்தித் தாமரைக் கண்ணனென் னெஞ்சி னூடே
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீ ரென்சொல்லிச் சொல்லுகே னன்னை மீர்காள்
வெள்ளைச் சுகமவன் வீற்றி ருந்த வேத வொலியும் விழா வொலியும்
பிள்ளைக் குழா விளையாட் டொலியு மறாத்திருப் பேரையிற் சேர்வ னானே.

ஆழி யெழச்சங்கும் வில்லு மெழத்திசை
வாழி யெழத்தண்டும் வாளு மெழவண்ட
மோழை யெழமுடி பாத மெழவப்ப
னூழி யெழவுலகங் கொண்ட வாறே.

கற்பா ரிராம பிரானையல் லான்மற்றுங் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன் றின்றியே
நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசர முற்றவு
நற்பாலுக் குய்த்தன னன்முகனார் பெற்ற நாட்டுளே.

பாமரு மூவுல கும்படைத்த பற்ப நாபாவோ
பாமரு மூவுல கும்மளந்த பற்ப பாதாவோ
தாமரைக் கண்ணா வோதனி யேன்றனி யாளாவோ
தாமரைக் கையாவோ வுன்னை யென்றுகொல் சேர்வதே

எண்ணு மேழை யராவியுண்ணுங் கூற்றங் கொல்லோ* வெனும்பத்திற்
கண்ண னுருவைக் கண்டிறைஞ்சிக் காதன் முதிர வுருவெளியாய்
நண்ண வதனைக் கண்டிரங்கி மனத்தில் வருந்தி நைந்துரைத்தான்
வண்ண மாடத் திருக்குருகூர் மாறன் வகுளச் சடகோபன்.† (உஉரு)

வேறு.

என்றைக்கு முய்யக் கொண்டே‡ யென்றெடுத் தருளும் பத்திற்
குன்றைக்கொண் டானைக் காத்த கோவிந்தா புலன்க ளோடுஞ்
சென்றெய்க்கும் வண்ண மண்ணில் வைத்ததென் செப்பா யென்ன
வொன்றைக்கொன் றொன்றைக்காத்த¶ வுத்தமனருளிச் செய்வான்.(உஉசு)

மண்மிசை யுவப்போ டும்மை வைத்தமை கேளும் வாக்காற்
பண்ணமர் கவிக ணம்மைப் பாடுமா றதனை வஞ்சக்
கண்ணம ருயிர்கள் கற்றென் கழலடைந் துய்யு மாழ்வீ
ரெண்ணமற் றிதில்வே றில்லை யெனவிறை யியம்ப வாழ்வார். (உஉஎ)

வேறு.

என்னை யிதற்கோர் கைம்மாறுங் காணே னென்னைத் தன்னாக்கித்
தன்னை ரில்லா னென்றறியே னுளத்தே புகுந்து தான்றன்னை
நன்னே ருற்ற கவிபாடி நாட்டா ரெல்லாஞ் சடகோபன்
சொன்னேர் பெற்ற கவியென்னச் சொல்லும் படிக்குச் சொல்வித்தான்.

என்ன விறையைக் கொண்டாடி யிசைத்தா னங்கே யொருபத்தும்
பின்னவ் வின்பம் பயக்கு§ மெனப் பேச வினிய வப்பத்தி
லின்ன வாறு கைம்மாறொன் றின்றிக் கவிகொண் டிட்டபிர
மன்னுந் திருவா றன்விளையை யென்றோ மன்னி வலஞ்செய்து. (உஉகூ)

---

* ஏழைய ராவியுண் ணுமிணைக் கூற்றங்கொ லோவறியே
னாழியங் கண்ணபி ரான்றிருக் கண்கள்கொ லோவறியேன்
சூழவுந் தாமரை நாண்மலர் போல்வந்து தோன்றுங்கண்டீர்
தோழியர் காளன்னை மீரென்செய் கேன்றுய ராட்டியேனே.

† எம்பெருமான் காட்டின விசித்திர ஜகதாகாரத்தையை யனுபவித்து ஆழ்வார் விஸ்மிதரான படியைத் தெரிவிக்கிற, "மாயா வாமன னேமது சூதா நீயருளாய், தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்த், தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய், நீயாய் நீநின்ற வாறிவை யென்ன நியாயங்களே." என்னும் இத்திருவாய்மொழியின் அர்த்தத்தையுட்கொண்ட பாட்டு எமக்குக்கிடைத்த வேட்டுப்பிரதிகள் ஒன்றிலுங் காணப்படவில்லை. ஆசிரியரே எழுதாது விட்டனரோ, அன்றி எழுதியிருந்ததுதான் பின்னர் இறந்துவிட்டதோ அறியோம்.

‡ என்றைக்கு மென்னை யுய்யக்கொண்டு போகிய
வன்றைக்கன் றென்னைத் தன்னாக்கியென் னாற்றன்னை
யின்றமிழ் பாடிய வீசனை யாதியாய்
நின்றவென் சோதியை யென்சொல்லி நிற்பனோ.

¶ ஒன்றைக்கொன் றொன்றைக்காத்த—முதலையைக்கொன்று கஜேந்திரனைக்காத்த.

§ இன்பம் பயக்க வெழின்மலர் மாதருந் தானுமிவ் வேழுலகை
யின்பம் பயக்க வினிதுடன் வீற்றிருந் தாள்கின்ற வெங்கள்பிரா
னன்புற் றமர்ந்துறை கின்ற வணிபொழில் சூழ்திரு வாறன்விளை
யன்புற் றமர்ந்து வலஞ்செய்து கைதொழு நாள்களு மாகுங்கொலோ

ஈசற் குவந்த கைங்கரியஞ் செய்வ தென்றோ வெனவிரங்கிப்
பேசித் தேவி மாராவா* ரென்னும் பத்திற் பேருலகி
லாசை தவிர்ந்த வடியவர்கள் வசமா மாறு மதுவன்றித்
தேசத் தெல்லாப் பொருளுமவ னென வாறுந் தெளிந்துரைத்தான். (உ௱௰)

கூறு நங்கள் வரிவளையார்† யென்னும் பத்திற் குநவுரையைத்
தேறி யெல்லாப் பற்றினையுந் திருமா லறிய விடிலெளிதி
னேற லாகும் பரமபதத் திருக்க லாகும் விடாதவர்க்கு
நாறு முடம்போ டெப்பொழுது நண்ண லாகு மெனநவின்றான். (உ௱௧)

வேறு.

ஆங்கதற்குப் பின்பங்கு மிங்கு‡ மென்ன வருள்பத்தி
லோங்கியசீ ரந்தாமத் தனுபவிக்கு நித்தர்முத்தர்
பாங்குடையர் பரிவுடையர் படிமீதி லிலரென்ன
வேங்கின னருண்மாறன் சிலவரைக்கண் டின்புற்றான். (உ௱௨)

வேறு.

மறித்தும் வார்கடா வருவி§ மால் யானையென் றுரைத்தாற் பத்தில்
வெறித்தண் பூந்துழாய் மாயவன் வலியையும் விளங்குற நோக்கிக்
குறித்த வன்பர்கள் குழாத்தையுங் கண்டுவெங் குளிர்ந்துரை செய்தான்
பறித்துக் காலன்கை நின்றெனைக் கொணர்ந்துதன் பத்தியிற் பதித்தான்

வேறு.

மாயக் கூத்தா‖ வென்றருளால் வகுத்த பத்தின் மாமாயன்
றூய வடியிற் சிந்தனைபோய்த் துன்புற் றிரங்கி மடமாறு
நேயத் தாலே யிருந்தழுதா னீச னெனிவ் வுடல்விட்டாற்
றூயைத் தேடிச் செலறவிர்க்குஞ் சரண கதியைத் தந்தாண்டான். (உ௱௩

*தேவிமா ராவார் திருமகள் பூமி யேவமற் றமரராட் செய்வார்
மேவிய வுலக மூன்றவை யாட்சி வேண்டுவேண் டுருவநின் னுருவம்
பாவியேன் றன்னை யடுகின்ற கமலக் கண்ணதோர் பவளவாய் மணியே
பாவியே யமுதே யலைகடல் கடைந்த வப்பனே காணுமா றருளாய்.

†நங்கள் வரிவளை யாயங் காளோ நம்முடை யேதலர் முன்பு நாணி
நுங்கட் கியாமொன் றுரைக்கு மாற்ற நோக்குகின் றேனெங்குங் காண மாட்டேன்
சங்குஞ் சரிந்தன சாயி ழந்தேன் றடமுலை பொன்னிற மாய்த்த ளர்ந்தேன்
வெங்கண் பறவையின் பாக னெங்கோன் வேங்கட வாணனை வேண்டிச் சென்றே.

‡அங்கு மிங்கும் வானவர் தானவர் யாவரு
மெங்கு மினையை யென்றுன்னை யறியகி லாதலற்றி
யங்குஞ் சேரும் பூமகண் மண்மக ளாய்மகள்
சங்கு சக்கரக் கையவ னென்பர் சரணமே.

§வார்கடா வருவி யானைமா மலையின் மருப்பிணைக் குவடிறுத் துருட்டி
யூர்கொடிண் பாக னுயிர்செகுத் தரங்கின் மல்லரைக் கொன்றுசூழ் பரண்மேற்
போர்கடா வரசர் புறக்கிட மாட மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள்சிற் றாயன் றிருச்செங்குன் றூரிற் றிருச்சிற்றா றெங்கள்செல் சார்வே.

‖மாயக் கூத்தா வாமனா வினையேன் கண்ணா கண்கைகால்
தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச்
சாயல் சாமத் திருமேனி தண்பா சடையாத் தாமரைநீ
ளாசத் தடம்போல் வருவானே யொருநாள் காண வாரா

வாடிச் சேரா மயலளிக்கு மாயக் கூத்தன் றனைமனத்தாற்
றேடி யெல்லி காலை* யினிற் சென்று தங்கி யுளமகிழ்ந்து
நாடி யிருத்தும் வியந்ததனி† னண்ணி யன்பி லனுபவித்தா
பாடிச் சாம வேதத்தைத் திருவாய் மொழியாய்ப் பரப்பினான். (௨௫௫)

சீரார் கண்கள் சிவந்‡ தென்னச் செப்பும் பத்திற் றிருமால்வா
தேரா ராவி யுறக்கலக்க விதுநீ பிரியே லெனவிரப்ப
நாரா யணன்வா ழான்மாவி னேற்ற மெல்லா நவின்றருளக்
காரார் பொழில்சூழ் குருகைக்கோன் கண்டு களித்துக் கட்டுரைத்தான்.

கருமா ணிக்க மலை§ தன்னிற் கழறுங் குட்ட நாட்டினுறை
திருமா றனக்கு நாயகனாய்த் தானோர் பெண்ணாய்த் திருவாக்கா
லொருமா னொடியு மவன்பெயரே யலதொன் றுரையா வகையுரைத்தா
னருமா மறையி னொலிமுழங்குங் குருகூர் நகர்வா ழருண்மாறன். (௨௫௬

எண்ணி நெடுமாற் கடிமை¶ யென விசைத்த வின்ப முறுபத்திற்
கண்ணாற் கடிமை யானவர்க ளேற்ற மெல்லாங் கண்டுவந்தே
யுண்ணக் குருகி யவரடியா ரடியார்க் கடிய னெனவுரைத்தான்
விண்ணுக் கேற வழிகாட்டும் வேதாந் தத்தை வெளியிட்டான். (௨௫௭

கொண்ட பெண்டி$ ராதியாய்க் கூறும் பத்தி னுலகத்தீ
ரண்ட முண்ட திருமாலை யல்லா தாவிக் குறுந்துணைநான்
கண்டி லேன்மற் றொருவரையுங் கைம்மா றின்றிக் காப்பாரை
யுண்டென் றுங்கட் குறவாவார் திறத்தைக் கேண்மி னுரைக்கின்றேன்.

---

எல்லியுங் காலையுந் தன்னை நினைந்தெழ
நல்ல வருள்க ணமக்கேதந் தருள்செய்வா
னல்லியந் தண்ணந் துழாய்முடி யப்பனூர்
செல்வர்கள் வாழுந் திருக்கடித் தானமே.

† இருத்தும் வியந்தென்னைத் தன்பொன்னடிக் கீழெ
றருத்தித் தெனைத்தோர் பலநாளழைத்தேற்குப்
பொருத்தமுடை வாமனன் றான்புகுந் தென்றன்
கருத்தையுற வீற்றிருந் தான்கண்டு கொண்டே.

கண்கள் சிவந்து பெரியவாய் வாயுஞ் சிவந்து கனிந்துள்ளே
வெண்ப லிலகு சுடரிலகு விலகு மகர குண்டலத்தன்
கொண்டல் வண்ணன் சுடர்முடிய னான்கு தோளன் குனிசார்ங்க
னொண்சங் கதைவா ளாழியா னொருவ னடியே னுள்ளானே.

கருமா ணிக்க மலைமேன் மணித்தடந் தாமரைக் காடுகள்போற்
றிருமார்வு வாய்கண் கையுந்தி காலுடை யாடைகள் செய்யபிரான்
றிருமா லெம்மான் செழுநீர்வயற் குட்ட நாட்டுத் திருப்புலியூ
ரருமாயன் பேரன்றிப் பேச்சில ளன்னைமீ ரிதற்கென் செய்கேனோ:

நெடுமாற் கடிமை செய்வேன்போ லவனைக் கருத வஞ்சித்துத்
தடுமாற் றற்ற தீக்கதிகண் முற்றுந் தவிர்ந்த சதிர்நினைந்தாற்
கொடுமா வினையே னவனடியா ரடியே கூடு மிதுவல்லால்
விடுமா றென்ப தென்னந்தோ வியன்மூ வுலகு பெறினுமே.

கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத் தவர்பிறருங்
கண்டதோடு பட்டதல்லாற் காதன்மற் றியாதுமில்லை
யெண்டிசையுங் கீழுமேலு முற்றவு முண்டபிரான்
றொண்டரோமா யுய்யலல்லா லில்லைகண்டீர் துணையே.

வேறு.

அருள்பெறு மடவா ளன்னை புத்திர னத்த னூற்றார்
பொருள்பெறக் காணிற் றத்த மாவிபோற் பூண்ப ரன்றேற்
றெருளுறு நிலைய ரேனுஞ் சீசியென் றிகழா நிற்பர்
மருளுறு முலகத் துள்ள வழக்கிந்தச் சழக்கை மாற்றி. (உசo)

வேறு.

உற்றாரு மைந்தர்களு முறவாய வுயிர்த்துணையும்
பெற்றாரும் பெண்டிர்களும் பெரும்பொருளும் பேருறவு
மற்றாருந் திருமாலே யென்றுமனம் வைத்துமன
பற்றாசற் றிருப்பீரே லதுபரம பதந்தருமே. (உசக)

வேறு.

...ன வுலகத் தவர்களுக்கு மிதமா யுபதே சம்பண்ணிப்
பின்னும் பண்டை நாளென்னப்* பேச வரிய பத்திலருண்
மன்னும் பதியாம் புளிங்குடியின் மற்ற விரண்டின்† மகிழ்வோடு
முன்னங்கிடந்தாங் கிருந்துநின்ற முதல்வன்றன்னைத் துதி... (உசஉ)

கொடியார் மாடப் புளிங்குடியிற் கிடந்தான் றன்னைக் குறளாய
நெடியாய் கமலக் கண்விழித்து நீச னேனை யுறநோக்கி
மடியா துலகை முண்டுமிழ்ந்த வாயி லுவந்த கைங்கரிய
மடியேன் செயுமா றெழுந்திருந்து பேசா யென்றா னருண்மாறன். (உசங)

ஓரா யிர‡ மென் றருள்பத்தி லுறக்க நீங்கி யெழுந்திருந்து
நாரா யணனம் மாழ்வாரை நாநீர் வேண்டும் பொருளெல்லாந்
தாரா நின்றோ மருள்கவெனச் சாற்ற மாறன் றத்துவனூர்
சீரா ரருளின் பரிசிருந்த படியே யென்னத் திருவுளத்தில். (உசச)

உருகி மையார் கண்ணி§ யினி லொளிசே ராழி சங்கேந்தித்
திருவி னுடனே புகுந்தருள்வாய் சிறியேன் காண வெனத்தேடிப்
பெருகு காத லுடன்கூவப் பெருமா னந்த வணமாழ்வா
ரருகிற் றோன்றக் கண்டிறைஞ்சி யாவ றீர வனுபவித்தார். (உசரு)

---

* பண்டைநா ளாலே நின்றிரு வருளும் பங்கயத் தாடிரு வருளுங்
கொண்டுநின் கோயில் சீய்த்துப்பல் படிகால் குடிகுடி வழிவந்தாட் செய்யுந்
தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்துன் றாமரைக் கண்களா னோக்காய்
தெண்டிரைப் பொருநற் றண்பணை சூழ்ந்த திருப்புளிங் குடிக்கிடந் தானே.

† மற்ற விரண்டு-வரகுணமங்கை, ஸ்ரீவைகுண்டம்; "புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை யிருந்துவை குந்தத்து ணின்று" என்றருளிச்செய்தது காண்க.

‡ ஓரா யிரமா யுலகே ழளிக்கும்
பேரா யிரங்கொண்ட தோர்பீ டுடையான்
காரா யினகா ளநன்மே னியின
னாரா யணனங் கள்பிரா னவனே,

§ மையார் கருங்கண்ணி கமல மலர்மேற்
செய்யா டிருமார்வினிற் சேர்திரு மாலே
வெய்யார் சுடராழி சுரிசங்க மேந்துங்
கையாவுன் னைக்காணக் கருதுமென் கண்ணே.

இன்னு யி*ரென்னு மெழிற்பத்திற் றலைவ னீங்க விருந்திரங்கு
மன்ன நடையோர் பெண்கொடியா யவனைக் காணு வருத்தத்தான்
மூன்னும் பறவை கூப்பிடும் பொருதே வருந்தி யணைந்துய்ந்தான்
றன்னி லெய்து மால்பிரியத் தளர்வுற் றழுத சடகோபன். (உசசா)

ஓது முருகு மாறன்னி† லோத வண்ண ரினிவந்தாற்
பாத முதல்கே சாந்தத்திற் பரிவாற் பண்ணி யிதம்வருத்தும்
வேதஞ் சொன்ன கைங்கரிய மெல்லாஞ் செய்ய வேண்டுமெனப்
போதுங்கரத்திற் கொண்டிருந்தார் வெள்ளப் புவனமுண்டபிரான். (உசஎ)

கதுமென் றெய்தி யிவரவற்குச் செய்வா னெண்ணுங் கருமமெல்லா
மதுவார் துழாயான் செய்தருள வாழ்வார் பதறி வாயடித்தே
யிதுவே னிறைவா வெனவொடுங்கி யிருப்ப வீச னிருவருக்கும்
பொதுவன்றேபே ரின்பமெனத் திருமாற் கடியனெனப்புகன்றான். (உசஅ)

பண்ணி லெங்கா னலங்கழியிற்‡ பரிந்த மூழிக் களத்துறையுங்
கண்ண னுருவைக் காதலித்துக் ககனத் தேகும் பறவைகளை
யென்னு நம்மை யிராப்பகலென் றீசன் போது மெனத்தூதாய்
மண்ணிற்றேனோர் பெண்கொடியாய் விடுத்தா னிருந்துமகிழ்மாறன். (உசகூ)

அறுக்கும் வினை§ யென் றருள்பத்திற் றாதி கூறி யவன்வருமுன்
பொறுக்க மாட்டா திவர்பதறித் திருநா வாயுட் புகநினைய
மறுத்தங் கதுவுங் கூடாம லிருந்து வருந்தி மல்லிகையிற்$
கறுத்த தென்றல் யாழாதி நலிய மெலிந்து கலங்கினார். (உருo)

---

ன்னுயிர்ச் சேவலு நீருங் கூவிக்கொண் டிங்கெத்தனை
யென்னுயிர் நோவ மிழற்றேன் மின்குயிற் பேடைகா
ளென்னுயிர்க் கண்ண பிரானை நீர்வரக் கூவுகிலீ
ரென்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கு மித்தனை வேண்டுமோ.

ருவாய்மொழி எம்பெருமானார்க்கு உகப்பாயிருக்கும் என்ப.

உருகுமா னெஞ்ச முயிரின் பரமன்றிப்
பெருகுமால் வேட்கையு மென்செய்கேன் றொண்டனேன்
றெருவெல்லாங் காவி கமழ்திருக் காட்கரை
மருவிய மாயன்றன் மாய நினைதொறே.

ங்கான லகங்கழிவா யிரைதேர்ந்திங் கினிதமருஞ்
செங்கால மடநாராய் திருமூழிக் களத்துறையுங்
கொங்கார்பூந் துழாய்முடியெங் குடக்கூத்தர்க் கென்றூதாய்
நுங்கால்க ளென்றலைமேற் கெழுமீரோ நுமரோடே.

அறுக்கும்வினை யாயின வாகத் தவனை
நிறுத்தும்மனத் தொன்றிய சிந்தையி னார்க்கு
வெறித்தண்மலர்ச் சோலைகள் சூழ்திரு நாவாய்
குறுக்கும்வகை யுண்டுகொ லோகொடி யேற்கே.

மல்லிகை கமழ்தென்ற லீரு மாலோ வண்குறிஞ் சியிசை தவரு மாலோ
செல்கதிர் மாலையு மயக்கு மாலோ செக்கர்நன் மேகங்கள் சிதைக்கு மாலோ
அல்லியந் தாமரைக் கண்ண னெம்மா னாயர்க ளேறரி யேறெம் மாயோன்
புல்லிய முலைகளுந் தோளுங் கொண்டு புகவிட மறிகிலர் தமிய மாலோ.

DR U V S IYER LIBRARY.
BESANT NAGAR. MADRAS-90.

மாலைநண்ணி* யெனும்பத்திற் றிருக்கண்ண புரமருவி
யாலினிலை யமர்ந்தபிரா னடிதொழுது பூவிட்டான்
மேலுரைப்ப தென்னிந்த வுடறவிர்த்து வீடளிப்பன்
காலமுறச் சென்றணைமி னென்றுரைத்தான் கருணையினான். (௨௫௧

ஆங்கதற்குப் பின்றாள தாமரையி† லம்புவியீர்
பாங்குடனே மோகூர்வாழ் பரம்பரனைப் போய்ப்பணிந்தா
லோங்குமருட் பரமபதத் துமக்கவனே வழித்துணையாய்த்
தாங்கியுறக் கொடுபோவன் சார்மினென்றான் றமிழ்மாறன். (௨௫௨

உன்னுமுனங் கெடுமிடரென்‡ றொருபத்து மனந்தபுர
மென்னுநகர் பரமபத முலகத்தி ரிறைஞ்சுமதின்
மன்னுவார் நித்தர்முத்த ரெனத்திடமாய் வகுத்துரைத்தான்
றென்னுலகி லென்னைவிடாத் திருவழுதி வளநாடன். (௨௫௩

வேறு.

சாற்றும் வேய்ம ருதோளிணையிற்§ றானோ ராயர் தலைமகளாயத்
தோற்றுங் கஞ்ச னுயிர்செகுத்த சுடரா ழிக்கை யம்மானைப்
போற்றிக் கூடி யனுபவித்துப் புணர்ச்சி நீங்கி யிருந்தளவிற்
றேற்றி யிருத்திப் பசுமேய்க்கப் போறே¶ னென்னத் திருமகள்கோன்.

செப்பாத் தடியும் வேய்ங்குழலு மெடுப்ப வந்தச் சேயிழைசென்
றிப்போ கூடி யான்வருவே னென்று தொடர வவன்றடுப்ப
வப்போ பரம பதத்தென்னைக் கொண்டு போவா னருளியதுந்
தப்பாமென்று னெவ்வுயிர்க்குந் துணையாய் நின்ற தனிமுதல்வன். (௨௫௫)

---

மாலை நணணித்தொழு தெழுமினோ வினைகெடக்
காலை மாலை கமலமல ரிட்டுநீர்
வேலை மோதுமதிள் சூழ்திருக் கண்ணபுரத்
தாலின் மேலாலமர்ந்தானடி யிணைகளே.

தாள தாமரைத் தடமணி வயற்றிரு மோகூர்
நாளு மேவிநன் கமர்ந்துநின் றசுரரைத் தகர்க்குந்
தோளு நான்குடைச் சுரிகுழற் கமலக்கட் கனிவாய்க்
காள மேகத்தை யன்றிமற் றொன்றிலங் கதியே.

கெடுமிட ராய வெல்லாங் கேசவா வென்ன நாளுங்
கொடுவினை செய்யுங் கூற்றின் றமர்களுங் குறுக கில்லா
விடமுடை யரவிற் பள்ளி விரும்பினான் சுரும்ப லற்றுந்
தடமுடை வயல னந்த புரநகர்ப் புகுது மின்றே.

வேய்மரு தோளிணை மெலியு மாலோ மெலிவுமென் றனிமையும் யாது நோக்கா
காமரு குயில்களுங் கூவு மாலோ கணமயி லவைகலந் தாலு மாலோ
வூமரு வினநிரை மேய்க்க நீபோக் கொருபக லாயிர மூழி யாலோ
தாமரைக் கண்கள்கொண் டீர்தி யாலோ தகவிலை தகவிலை யேநீ கண்ணா.

போகிறேன் என்பது 'போறேன்' என மருவி வந்தது "மும்மையும் பாவி போறேன்
என்றவிடத்தும் போகிறேன் என்பது 'போறேன்' என வந்திருத்தலறிக.

காட்டின் முன்னஞ் சானகியைக் கங்கைத் திருநா டுடையபிரான்
கூட்டிப் போய்முன் பட்டதெல்லாங் கூறக் கேட்ட தில்லைகொலோ
மாட்டின் பின்னே போய்த்திரிந்து வருந்த வேண்டாம் வனங்கொடிது
வீட்டிற் கூட்டிப் போதறிட மென்று விமலன் விரித்துரைப்ப. (உருசா)

மங்கை சிந்தை யுறத்தெளிந்து வாசு தேவா வனங்கொடிதே
லங்கம் வருந்தும் பசுமேய்க்க நீயும் போகே லெனவுரையச்
சங்க மேந்துங் கைத்தலத்தான் றவிர்ந்த பரிசாய்ச் சாற்றினன்
பொங்கு நறவப் பொழில்புடைசூழ் குருகூர் மருவும் புகழ்மாறன்.(உருஎ)

ஈணுஞ் சார்வே தவநெறியி* னிரைப்பின் னேக றவிர்கென்ன
நணணி யுரைப்ப வுடன்றவிர்ந்தாங் கிருந்த நம்பி நயநோக்கிக்
கண்ணன் மிகவு மடியவர்கட் கெளிய னென்னக் கட்டுரைத்தா
றிண்ணன் வீடு தந்தாண்ட தெர்ப்பா சனத்தர் திருப்பேரன். (உருஅ)

ஆத லாலே யுலகத்தோர் தமக்கு மாயர் தனிமுதலாய்ப்
பூத முதலாய் நின்றவனைப் புரையின் முத்தி பொருந்திடலாங்
காதலாலே பற்றுமெனக் கண்ணன் கழலிற்† கட்டுரைத்தான்
வேத சிரத்தில் வீற்றிருக்கு மெய்மையைத் தெளிந்து வெளியிட்டான்.(உருகூ)

வேறு.

அருளபெறுவார்‡ ரெனும்பத்தில் வாட்டாற்றி லச்சுதனை
தெருளுறுசீ ருடம்போடுந் தமையெடுத்துத் தேவர்தொழும்
பொருளுறுமேற் பரமபதம் புகநினைப்ப வதையறிந்து
மருளுறுமீ தென்றுசெஞ்சொற் கவி§ தன்னின் மாமாயன். (உசாo)

வேறு.

செய்ய கமலத் திருவடியைப் பிடித்தின் றெமையா டிருமாலே
மைய வுடம்பும் வாதனையும் போக்கி யுயிரை வாங்கென்ன
வைய வுடலென் செய்தமையென் றிறைவன் கூறவச்சுதனே
யைம்பொறியும் புலனைந்தும்பொருந்து பொற்றைப்புழுக்கூடு. (உசாக)

---

*சார்வே தவநெறிக்குத் தாமோ தரன்றாள்கள்
கார்மேக வண்ணன் கமல நயனத்த
னீர்வான மண்ணெரி காலாய்நின்ற நேமியான்
பேர்வா னவர்கள் பிதற்றும் பெருமையனே.

கண்ணன் கழலிணை
நண்ணு மனமுடையீ
ரெண்ணுந் திருநாமந்
திண்ண நாரணமே.

அருள்பெறுவா ரடியார்தம் மடியனேற் ...ழியா
னருடருவா னமைகின்ற னதுநமது விதிவகையே
யிருடருமா ஞாலத்து ளினிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே வாட்டாற்றா னடிவணங்கே.

செஞ்சொற் கவிகா ளுயிர்காத்தாட் செய்மின் றிருமா லிருஞ்சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன் மாயக் கவியாய் வந்தென்
னெஞ்சு முயிரு முள்கலந்து நின்றா ரறியா வண்ணமென்
னெஞ்சு முயிரு முவையுண்டு தானே யாகி நிறைந்தானே.

பஞ்ச பூதம் பிரகிருதி பற்றாங் கன்ம விந்திரிய
வஞ்ச வுடல மிதுநீக்கி வாங்கா யென்றான் மாறனிறை
யென்சொன் னீரிப் புவிதன்னி லிலங்குஞ் சாங்க மணிபவர்க
டஞ்ச மாக வவையிருந்த பாண்ட முடைத்தே* சாத்துவர்கள். (௨௬௨)

கூறு மென்னத் தமிழ்மாறன் கூறுங் கோதி லாதாயின்
நாறு முடம்பாற் பயனென்கொ லென்ன ஞால முண்டபிரான
றேறு மும்மை வைத்திருந்த தேக மன்றோ வெனச்செப்ப
மாறு மொழிய வல்லேனோ நின்னோ டென்ன மகிழ்மாறன். (௨௬௩)

பெருக வருந்தித் துன்புற்ற பின்பு திருமா னம்மாழ்வீ
ருருக வேண்டா முடறவிர்த்துக் கொடுபோ வேனென் றுரைத்திடலு
மருவி நயன மாருமல லாறு பாய வன்புருகித்
திருவுற் றமருங் குருகைக்கோன் சிந்தை குளிர்ந்து தெளிவோடும். (௨௬௪)

மன்றல் கமழ்மா லிருஞ்சோலைப்† பத்தின் மாயன் மடிபிடித்தேற்
றின்று வலிய மேல்விழுந்திங் கெடுத்தா யிற்றை வரையுமெனைக்
குன்ற மெடுத்தா யென்பொருட்டாற் கெடுத்தா யதனைக் கூறென்ன
வொன்று மதற்கு மறுமாற்றங் காணா துலக முண்டபிரான். (௨௬௫)

இந்த நினைவுக் கியாமேதை யியம்பி மடியை விடுவிப்போஞ்
சிந்தை தூய மகிழ்மாறற் கென்னத் திருமால் சிறுகுதலை
மைந்த னினைவை வேறென்றான் மறப்பித் துவக்கு மாதாப்போ
லந்த மில்லாக் குணத்தினனுக் கர்ச்ச ராதி மார்க்கத்தை. (௨௬௬)

எண்ண வரிய சூழ்விசும்பி‡ லிறைவன் காட்ட விவர்கண்டு
கண்ணன் மடியைப் பிடித்தகரந் தாழ்ன நெகிழக் கண்களிப்ப
நண்ணி மனத்தா லந்நெறியே ஞானா னந்தப் பெருவீடாம்
விண்ணை மேவி யனுபவித்து மீண்டு முனியே§ யெனும்பத்தில்.

---

* பாணி யுடைத்தோ' என்ற பாடமுங் காணப்படுகிறது.

† திருமாலிருஞ் சோலைமலை யென்றே னென்னத்
திருமால்வந் தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமாமணி யுந்துபுனற் பொன்னித் தென்பாற்
றிருமால்சென்று சேர்விடந் தென்றிருப் பேரே.

‡ சூழ்விசும் பணிமுகி றூரிய முழக்கின
வாழ்கட லலைதிரை கையெடுத் தாடின
வேழ்பொழி லும்வளை யேந்திய வென்னப்பன்
வாழ்புகழ் நாரணன் றமரைக்கண் டுகந்தே.

§ முனியே நான்முகனே முக்கண் ணப்பா வென்
கனிவாய்த் தாமரைக் கட்கரு மாணிக்கமே யெ
தனியே னாருயிரே யென்றலை மிசையாய் வந்திட்
டினிநான் போகலொட்டே னென்று மாயஞ்செ

வேறு.

ஞானமி லின்ப முத்தி யுற்றா னுபவித்த லாழ்வார்
மானத மாத லாலே மற்றுநங் கண்ணுற் கண்டங்
கானபே ரின்ப வீட்டி லச்சுதன் கமல பாதத்
தேனுகர்ந் தடிய ரோடுஞ் சென்றனு பவிப்ப வெண்ணி. (உ௬௮)

வேறு.

மாசிலாப் பரமபத்தி தலையெடுத்து மகிழ்மாறன்
றேசுபொலி கமலமலர்த் திருவாணை நின்னாணை *
சவெணை வாங்குதிநின் னிணையடிக்கீ ழெனக்கூவி
ாசைமிகுந் திருந்திரங்கப் பரமபதத் தப்புயைகோன். (உ௬௯)

பெரியதிரு வடிபெரிய பிராட்டியார் தனைத்தன்னை
யுரியநெறி யன்பினொடு முவந்தேந்த வுலகேழு
மரிகரியென் றடிபணிய வந்தாமத் தடியரொடுங்
கரியவொளி மணிவண்ணன் காரியார் திருமகன்முன். (உ௭0)

வள்ளிமறத் தோன்றியவா வறச்சூழ்ந்து கைப்பற்றப்
பள்ளமடை யுடைபுனல்போற் பரம்பரன்பாற் பத்திவெள்ளத்
துள்ளமடுத் துறப்பாய்ந்த படிதன்னை யுவந்துரைத்தான்
வள்ளலெனக் கருள்புரிந்த திருவழுதி வளநாடன். (உ௭௧)

வேறு.

ஆகத் திருவாய் மொழியித்தை யருளிச் செய்து மதுரகவி
யேகச் சிந்தைப் பெருஞ்செய்யி லிறங்கி விதைத்து மெய்ஞ்ஞானப்
போகம் விளைய வருண்மாரி பொழிந்து விளைவித் துலகேழின்
றாகந் தீர்க்குங் கவியமுதந் தந்தா னந்தாத் தமிழ்மாறன். (உ௭உ)

மாறன் கைம்மா றொன்றின்றி மதுர கவிகட் கிவைசெய்ய
வேறொன் றறியேன் சடகோபன் விரைத்தா ளன்றி யென்றுமனந்
தேறிக் குருகூர் நம்பியல்லாற் றெய்வ மறியேன் யானென்னக்
கூறி மாறன் சீரனைத்துந் தொகுத்தோர் பத்தின் கோவையாய். (உ௭௩)

வேறு.

மப ... னுண் ணிடைப்பின்னை மணவாளன் றிருப்பெயரி
லெண்ணி நுண் பொருடந்த சடகோப னெனிலென்பா
லண்ணிநின் றென்னுவுக் கமுதூறு மெனவன்பாற்
கண்ணிநுண் சிறுத்தாம்பை மதுரகவி கட்டுரைத்தான். (உ௭௪)

---

மாயஞ்செய் யேலென்னை யுன்றிரு மார்வத்து மாலைநங்கை
வாசஞ்செய் பூங்குழ லாடிரு வாணைநின் னாணைகண்டாய்
நேசஞ்செய் துன்னோ டென்னையுயிர் வேறின்றி யொன்றாகவே
கூசஞ்செய் யாதுகொண் டாயென்னைக் கூவிக்கொள்ளாய் வந்தந்தோ.

# நம்மாழ்வார் பிரபந்தம்.

## கண்ணி நுண்சிறுத் தாம்பு.

—(௧)—

௧ கண்ணி நுண்சிறுத் தாம்பினாற் கட்டுண்ணப்
பண்ணி யபெரு மாயனென் னப்பனி
னண்ணித் தென்குரு கூர்நம்பி யென்றக்கா
லண்ணிக் கும்மமு தூறுமென் னாவுக்கே.

௨ நாவி னானவிற் றின்ப மெய்தினேன்
மேவி னேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவனே.

௩ திரிதந் தாகிலுந் தேவ பிரானுடைக்
கரிய கோலத் திருவுருக் காண்பனான்
பெரிய வண்குரு கூர்நகர் நம்பிக்கா
ளுரிய னாயடி யேன்பெற்ற நன்மையே.

௪ நன்மை யான்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவ ராதலி
லன்னை யாயத்த னாயென்னை யாண்டிடுந்
தன்மை யான்சட கோபனென் னம்பியே.

௫ நம்பி னேன்பிறர் நன்பொரு டன்னையு
நம்பி னேன்மட வாரையு முன்னெலாஞ்
செம்பொன் மாடத் திருக்குரு கூர்நம்பிக்
கன்ப னாயடி யேன்சதிர்த் தேனின்றே.

௬ இன்று தொட்டு மெழுமையு மெம்பிரா
னின்று தன்புக ழேத்த வருளினான்
குன்ற மாடத் திருக்குரு கூர்நம்பி
யென்று மென்னை யிகழ்விலன் காண்மினே.

௭ கண்டு கொண்டென்னைக் காரிமா றப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினா
னெண்டி சையு மறிய வியம்புகே
னொண்ட மிழ்ச்சட கோப னருளையே.

௮ அருள்கொண் டாடு மடியவ ரின்புற
வருளி னானவ் வருமறை யின்பொரு
ளருள்கொண் டாயிர மின்றமிழ்ப் பாடினா
னருள்கண் டீரிவ் வுலகினின் மிக்கதே.

௯ மிக்க வேதியர் வேதத்தி னுட்பொரு
ணிற்கப் பாடியென் னெஞ்சு ணிறுத்தினான்
றக்க சீர்ச்சட கோபனென் னம்பிக்காட்
புக்க காத லடிமைப் பயனன்றே.

௧௦ பயனன் றாகிலும் பாங்கல்ல ராகிலுஞ்
செயனன் றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயினின் றார்பொழில் சூழ்குரு கூர்நம்பீ
முயல்கின் றேனுன்றன் மொய்கழற் கன்பையே

௧௧ அன்பன் றன்னை யடைந்தவர் கட்கெலா
மன்பன் றென்குரு கூர்நகர் நம்பிக்கு
அன்ப னாய்மது ரகவி சொன்னசொ

வேறு.

முன்பே தோன்றா மதற்பினரு ளுருவாய் மூவா முதலாய
பின்ப மயமாய்ச் சின்மயமா யிருக்கு முதலோர் நான்மறைக்கும்
பின்பு முன்பு மேல்கீழ்கள் பேச வரிதாய்ப் பேணுமவ
ரன்றி யெல்லா லயனரற்கு மறிய வரிதா மந்தாமம். (உஎ௫

வேறு.

நம்முடைய வீடென்று நம்மைநீர் கேட்பதென்மற்
றும்முடைய வீடின் றுமக்களித்தோ மும்பர்தொழ
வெம்முடனே போதுமின் னேயென் றிலக்குமிகோன்
றம்முடைய வீட்டைத் தமக்களித்துத் தாமகிழ்ந்தார். (உஎ௬

அப்படியே யெம்பெருமா னாழ்வார்க்கு வீடருள
விப்படிவிட் டேகு மினியென் றறிந்ததற்பி
னொப்பரிய ஞான முடைய மதுரகவி
யெப்படிவிட் டென்னை யிருப்பே னெனவிறைஞ்சி. (உஎ௭

சீரார் வகுளத் திருத்தாரான் சேவடியை
யோராரு மன்பாற் பிடித்தன் றிரங்கியழக்
கூராழி சங்கேந்துங் கொண்டலெனக் கண்டுநின்ற
நாரா யணனவரு நானிலமு மீடேற. (உஎ௮

கட்டுரைக்கு மாழ்வார் கருணைத் திருவுருவை
மட்டவிழும் பூம்பொழில்சூழ் கோளூர் மதுரகவி
யுட்டெளிவாற் கேட்டி யுனக்கு முலகோர்க்கு
மெட்டெழுத்தின் சார மிதுவென்றே யின்பமுற. (உஎ௯

தேசுடைய ஞானத் திருப்புளிக்கீழ்ப் பண்ணுவித்தங்
காசி றமிழ்வேத மாகவிவர் கட்டுரைத்த
பேச வரிய பிரபந்த நாலிணையுங்
கூசாதிம் மண்ணோர்க்குக் கூறி யதன்பயனே. (உஅ

காட்டிச் சிலநாளிக் காசினியி னீரிருந்தால்
வீட்டிற் பிணையும்மை யிவ்வண்ண மேவுவிப்பேன்
பாட்டை யுலகிற் பரத்துமென்றான் பல்லுயிரை
யூட்டி யுறக்கி யொழியாது காத்தளிப்பான். (உஅ

என்று மதுர கவிக ளிதயத்தின்
மன்றல் கமழும் வகுளத் திருத்தாரா
னென்று மனுபவத்தி லோர்ந்துரைத்த நூலனைத்து
மன்றமவே காபிக்காங் கச்சுதனை மாழ்வானை. (உஅ

வாருமினி யென்றழைத்து மாறன் றனைக்குருகை
யூரு முலகு முருகக் கருடனுமெய்த்
தேரு மிருப்பத் திருமடிமேல் வைத்தணைத்துப்
பாருந் துதிப்பப் படர்விசும்பின் மீதானான். (உஅங

வேறு.

தொடர்ந்துசூழ் விசும்பி லணிமுகிற் குழாங்க ளேரிய முழக்கிடக் கடல்க
டடந்திரைக் கரங்க ளெடுத்துவந் தடுத்தாங் காடிடத் தரைமுத லாகி
யிடந்திக ழுலக மேழுமே வலங்கொண் டேந்திட விமையவர் சித்தர்
நடந்துவந் தெதிர்கொண் டடிதொழ முனிவோர் நான்மறை பாடிநின் றார்ப்ப.* (உஅச)

மேருவேமுதலாம் வரைப்பெருங்குலத்தால்விளங்குசீர்த்தோரணநிரைத்தா
ரேர்கொளா காய கங்கையா லங்கங் கேந்தினர் பூரண கும்பஞ்
சாரணர் ரியக்கர் கின்னரர் வசுக்க டானவர் முறைமுறை துதிப்பச்
சீர்பெறு மிரவி யெல்லியைப் பிளந்து தேவர்க ளுலகினூ டேகி. (உஅரு)

இந்திர னெதிர்கொண் டிறைஞ்சிட வவன்வா முலகினூ டேகிமுக் கண்ணன்
மந்திர வுலகு மலரய னுலகுங் கடந்துமால் காரிய மயமாய்த்
தந்தவை குந்தத் தெல்லையுங் கடந்து தனியண்ட பித்தியுங் கடந்,
டந்தமில் சத்தா வரணமுங் கடந்தாங் கரும்பெரும் பாழையுங் கடந்தே. (உஅசு)

வேறு

முன்னஞ் சொன்ன பிரகிருதி மூலப் பெரும்பா முனைநீங்கத்
தன்னொப் பில்லாப் பிரகிருதி தாமாம் பரமா காயத்தை
மன்னிப் பேரா னந்தத்தால் வகுத்த புரிசை வைகுண்ட
மென்னப் பட்ட திருநகரின் புறத்தா மெல்லையில் வளத்தோடு -அஎ

வேறு.

விரைசைமா நதியிற் சூக்குமவுடலை† விடுத்துவா தனையையும் விடுத்தக்
கரைசெறிந் தமரு மமானவ னார்தங் கரங்களாற் சிரம்பத மாதி
புரையறத் தீண்டிப் பரிசனஞ் செயவப் பொழுதிலே யிறைவனுஞ் செந்தா
மரையுற்ற திருவு முடன் [illegible]ம் வந்தடி வணங்க. (உஅ

சீருறு ஞான வப்பிரா கிருதத் தெய்வவிக் கிரகம தென்னு
மேர்பெறு மொளிக்கொண் டிலங்குசோ தியுமா மீரிரு கருவுரு வெடுத்து
வாருறு ஞான வனமுலை மடவார் மாலைசாந் தாடையா பரணங்
காரொளி வண்ணன் விடுத்தவை யனைத்துங் கவின்பெற வணிந்துகைக் கொண்டே

---

* 'சூழ்விசும்பணி முகில்' 'முனியே நான்முகனே' என்னும் இந்த இரண்டு பத்தில் அர்த்தங்களையுங்கூடியவரையில் ஆழ்வாரது செஞ்சொற்களையே யமைத்துக்கொண்டு ஆசிரியர் இச்செய்யுளிலிருந்து முறையே கூறிச்செல்கின்றமை யறியத்தக்கது.

† 'சூக்கமா முடலை' என்றும் பாடம்.

வேறு

கோலத் திருமா மகளோ டுன்னைக் கூடாதே
சாலப் பலநா ளடியே னிதுவோ தளர்வேனென்ன
ஞாலப் பற்றுக் கஞ்சி யதன்ற னவையற்றான்
மூலச் சுருதிச் சாரத் திருவாய் மொழிசெய்தான். (உகூ0)

வேறு.

மதிமுக மடவார் பலவிதத் தேந்துஞ் வளங்கொடு புடைவர முத்தர்
துதிசெய்தாங் கிறைஞ்சிக் கைவிளக் கெடுப்பத் தோமறு நித்தர்கள் புகழ
விதியினிற் காளம் பேரிகை யாதி விளங்குசீர் வாச்சிய முழங்கக்
குதிகொளுங் கருணைக் கருடனுண் டேந்துங் கொழுஞ்சுடர் விமானம தணைந்தே. ()

வேறு.

மாக வைகுந்தங் காண்பதற் கென்மன
மேக வெண்ணு மிராப்பக லின்றியென்
றாகங் காந்து மனல்மெழு காயுருஞ்
சோக மன்று தவிர்ந்தனன் றீமிலான். (உகூஉ)

வேறு.

கொடியணி மதிள்சூழ் கோபுரங் குறுகக் கோதறு வேதமோர் நான்கின்
முடிவிடை யாதி யந்தமு மறியா முத்திமை யடைந்ததி லுறையும்
வடிவுடைச் சேனை முதல்வனே முதலோர்மடந்தைய ரோடும்வந்திறைஞ்சி
யடிகளெம் மிடம்புக் கிடுகெனக் கொடுபோ யணிதிக ழாசனத் திருத்தி.()

வேறு.

சிறந்தமெய்ஞ் ஞான நீராற் றிருவடி விளக்கிப் பூசித்
தறந்தலை நின்ற நீதி யச்சுத னென்ன வன்பிற்
றிறந்திறம் பாமற் பேணிச் செலவிடுப் பவரோ டேகிப்
பிறந்திற வாத முத்திப் பேரின்ப வீட்டை முக்கால். (உகூச)

வேறு.

வலம்வந்து திருமா மணிமண்ட பத்தி
னலமந்த மில்லா ஞானத்தின் ஞானப்
பலமுந்து சீரிற் படிந்தா னடர்ந்தென்
புலனோந்து மாயப் புகுந்தா னுவந்தான் (உகூரு)

வேறு.

களிப்புங் கவல்வும் பிறப்பிறப்புங் கடிந்து கண்ண னடியருட
னெளிக்கொண் டிலங்கு சோதியுமா யென்றோ வுடன்கூ டுவதென்று
துளிக்குங் கண்ணீர் மிகவழுத தன்று கூடித் துயர்தீர்ந்தா
னளிக்கென் னுயிரின் பாங்கீரக் கனக்காட் கொண்ட வருண்மாறன்

வேறு.

முடிவற்ற சுகோததியின் முழுகியெழுந் திறையொடொரு
படிபெற்ற நித்தரொடும் பற்பலகா லளவளவிக்
கடிபெற்ற துழாயலங்கற் கண்ணனையுங் கமலையையு
மடிபற்றித் தொழுதிறைஞ்சி யாங்கவரை வலஞ்செய்து. (உ௯எ)

வேறு.

எடுத்திறை யேந்தி மடிமிசை யிருத்தி யென்னுயி ரிதுவென விரங்கி
யடுத்தடுத் தணைத்து மார்பினோ டழுத்தி யலர்கம லத்தவ ளிடத்தில்
விடுத்தவ ளவண மணைத்தபின் சாம வேதநகீ தங்களைப் பாடிப்
படுத்தபாம் பணையான் பங்கயத் தாளி லடைந்தனன் பத்தர்கட் கினியான். (உ௯அ)

வேறு.

கண்டாற்றே னுலகியற்கை கடல்வண்ண வடியேனைப்
பண்டேபோற் கருதாதுன் னடிக்கேகூய்ப் பணிகொளென
மண்டாவி யிருந்துரைத்த வருத்தமன்று தீர்ந்தொழிந்த
னுண்டாட்டும் புலனைந்தின் வசங்கெடுத்தென் னுயிர்காத்தான். (உ௯௯)

வேறு.

தீரக் காய்ந்த விரும்பதனுட் டெறித்தாற் சிறிதும் பிரிக்கரிய
நீர தென்ன வந்தாமத் திருந்த நெடுமா னிகரற்ற
வேரிற் பொலிந்த திருவடியி லடைந்தா னென்னைத் திருநகரி
யூரைத் தொழுதே யுய்யென்ன வுபாயங் காட்டி யுரைசெய்தான். (௩௦௦)

வேறு.

மின்னிடைப் பிரிந்து கூடு மின்னொளி யென்னச் சென்று
தன்னுடைச் சோதி தன்னைச் சடகோபன் சார்ந்து வாழ்ந்தா
னென்னுடை யறிவிற் கண்ட திவையவன் புகழை முற்று
முன்னுல கனைத்துந் தந்த முதல்வற்கு மொழிய லாமோ. (௩௦௧)

வேறு.

ஆத்தான் கருணைத் திருவுருவு மழகப் பன்சீ ரருளுருவும்
பார்த்தா லொன்றாய்த் திரண்டெழுந்த பாலேய் தமிழ ரருளுமெனைக்
காத்தாட் கொண்ட திருமல்லி நாடி தாதர் கருணைகொடுங்
கோத்தா லொன்று மென்றிதனைக் கொடியேன் றுணிந்து குறித்துரைத்தேன். (௩௦௨)

வேறு.

காவியம் வல்லார் தொல்லைக் கலைவலார் கவிகள் வல்லார்
பாவியேன் பகர்ந்த தென்றிந் நூலினைப் பழிக்க வேண்டா
தேவிவாழ் மார்பன் றந்த செண்பக மாறற் கன்றி
யோவிய மாவி தாங்க வுலகிடைக் கண்ட துண்டோ. (௩௦௩)

வேறு.

தெய்வ மறிய வடியேனாற் செய்யப் பட்ட பொருளன்று
பொய்யின் றும்மிற் புகன்றேனேற் பொடியாய் முடிந்துபோகின்றேன்
வைய மறிய வேங்கடத்தான் மணவை நகரில் வந்தடியே
னுய்யும் படிமுன் பற்பலவு முரைத்தா னிவையு முரைத்தானே. (௩0௪)

வேறு.

நத்திரம் பூட்டி யாட்டி தொழிலென்ப ரறிந்தோ ரன்றிப்
பார்த்திருந் தவரம் மெய்யைப் பாவையிற் படுத்து மாபோற்
ாத்திர வசத்த ரீதைக் கடையனிற் காண்பர் ஞான
நத்திர முடையா ரெல்லா நேமியான் செயலி தென்பர். (௩0௫)

அஞ்சன வண்ண னாற்கு மாவிக்கு முள்ள நீர்மை
வஞ்சனேற் குணரக் காட்டி மாறனைக் குருகூ ரோடென்
னெஞ்சினி லிருத்தி நீங்கா நிலையளித் தாண்டாட் கொண்டான்
கஞ்சமா மலர்த்தா ளுன்னைக் கள்வனே கழறற் பாலேன். (௩0௬)

உருத்திரன் சமயத் துள்ள பத்தர்க ளொருங்கு கேட்டேந்
திருத்திகழ் மார்பர் தொண்டர் செய்கையிற் சிறிதுங் கேட்டே
கருத்துறு சமயத் தோர்கள் கற்பனை பலவுங் கேட்டே
மொருத்தரென் மாறன் போன்றார் கண்டில முலகு தன்னில். (௩0௭)

வேறு.

முன்னே பிறந்து வீடடைந்த முதல்வ ரனந்த மூவுலகிற்
பின்னே பிறந்தாங் கவையடைவா ரனந்த மனந்தம் பேசுங்கா
லென்னே மாற னிகரொருவ ரெக்கா லத்து மில்லையில்லை
தன்னேர் தனக்குத் தானாலென் னான் சாற்றத் தகுமந்தோ. (௩0௮)

ஸ்ரீ

# மதுரகவியாழ்வார் பிரபந்தம்.

செப்பரிய பெருங்கீர்த்தித் திருவழுதி வளநாட
னிப்பரிசே சென்றிறைவ னிணையடிக்கீழ் வீற்றிருந்த
னப்பெரிய கதையிறைவ னருளியதிற் சிலகூறி
யொப்பரிய மதுரகவி செய்திறமு மோதுவாம்.

வேறு

சீரார் திருவாய் மொழிப்பெருமான் செங்கட் கரிய திருமேனி
நாரா யணனை யடைந்ததற்பின் ஞால மிரங்க மதுரகவி
நீரா யுருகி மோகித்துத் தேறி மாற னிகரில்லா
வேரார் கோலத் திருவுருவை யிலங்கு ஞானத் திருப்புளிக்கீழ்

என்று முண்டாம் படிகுறித்தங் கேறி யருளப் பண்ணுவித்து
குன்றம் போன்றங் கருள்விளங்குங் கோயில் செய்துக் கோபுர
கன்றி யொன்றுந் தனக்கின்றி யல்லும் பகலு மவன்பணியி
னின்றங் கீரெட் டுபசார நேமி விளங்கும் படிபண்ணி.

திருவா சிரியந் திருவிருத்தந் திருவந் தாதி திருமால்சீ
ருருவாந் திருவாய் மொழியென்றே யுரைத்த பிரபந் தங்களை
யிருமா வினையிற் படுபவரை யிருந்து திருத்தி யோதுவித்திட்
டொருமா நொடியுஞ் சன்னிதியை யகலா தாங்கே யுடனுறைந்

தோது மாண்டன் றிருநூற்று நாற்ப திருந்திவ் வுலகனைத்தும்
பூத நாத னடியவராய்ப் பொருந்தும் வண்ணந் திருத்துவித்து
வேத நாலுந் தமிழ்செய்த விமல னருளா லுடலோடே
சீத விரசைப் புனலாடித் திருமா மணிமண் டபஞ்செறிந்தான்

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வடிவழகிய நம்பிதாஸர்

இயற்றிய

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

குப்பியம்

ஸ்ரீமாந் திருநாராயணபிள்ளையவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர், **P. R.** கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பட்டது.

தஞ்சை:

கலியாணசுந்தரம் முத்திராசாலை

1908

(Copy Right)

20764

20764

ஸ்ரீ

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

1 மாதக்கோ ருளம்பிரியா மதுரகவி திறங்கூறிச்
சீதக்கோ மளத்துளபந் திருத்தாயாய் வில்லிபுத்தூர்
வேதக்கோன் றந்தையாய் வந்துதித்த மெய்ஞ்ஞான
போதக்கோ மளக்கோதை திறமறிந்து படிபுகல்வாம்.

வேறு.

2 வையமோ ரேழும் வயிற்றிடை யடக்கு மாயனை யாயர்கண் மனையைச்
செய்யவாய் கமலங் கண்கைகா லுந்தி திகழ்தரு திருமகள் கோனைப்
பொய்யிலா மெய்யா மெய்யுளே தோன்றிப் போக்கொடு வரவிலாப் பொருளைத்
துய்யகார் முகிலைப் பழித்தமா நீலச் சோதியைச் சுருதிநா யகனை.

3 பூதநா யகனைப் புவனகா ரணனைப் பொருவிலாப் பொருள்களை விளக்கும்
வேதநா யகனை விதிசிவன் சனகன் விரும்பிநின் றேத்துநா யகனைப்
போதநா யகனை யமரர்நா யகனைப் புலையனே னாவிநா யகனைத்
தூதநா யகனை யைவர்கட் கலையார் தொடுகடற் கிடந்தநா யகனை.

4 மண்ணவர் துணையை மறையவர் துணையை மாசறு மன்பினால் வணங்கும்
விண்ணவர் துணையைவிடைவலான் றுணையைவிரிஞ்சனே முதன்முனிவோரென்
றெண்ணவர் துணையை யேழையேன் றுணையை யிராப்பக லிடைவிடா தேத்தும்
பண்ணவர் துணையைப் பத்தர்க டுணையைப் பங்கயச் செல்விநற் றுணையை.

5 ஆழியுஞ் சங்குந் தரித்தமா முகிலை யண்டமுண் டுமிழ்ந்தவா ரமுதைப்
பாழிசா லனந்தன் மீமிசைத் துலங்கும் பாற்கடற் கிடந்துபற் பலவா
மூழியா யிரங்க ளொருகண மாக யோகநித் திரைபுரி வானை
வாழியென் றேத்தி யொருபக லிலங்கு மண்மகள் மலர்மகள் முதலாம்.

6 மங்கையர் சேனை முதல்வன்வா ளனந்தன் வளரொளி திகழ்சிறைக் கருடன்
பொங்குமே வுலகின் முனிவர்க ளமரர் பொன்னுல காள்பவன் விரிஞ்சன்
சங்கரச் கரம்வா ட்ண்டுவில் லாதி தனித்தனி யடிதொழு திறைஞ்சி
யங்கவன் றுயிலு மழகினுக் கிரங்கி யிருந்தன ரலைகடற் றுயின்றான்.

7 கண்டுயி னீங்கி யிணையடி விளக்கிக் கருணைமாத் திருமுகம் விளக்கித்
தண்டர ளப்பூந் தவிசின்மே லேறித் தாமரைச் செல்வியும் மடந்தை
யொண்டொடி நீளை யடிதொழ மற்றை யனைவரு முளங்குளிர்ந் திறைஞ்சப்
புண்டரீ கக்கட் கருமுகி லிருந்தா னிருந்துழிப் புவிமக டொழுதாள்.

8 அப்பொழு திறைவ னவண்முக நோக்கி நினைந்ததென் னாமு தனையாய்
செப்புதி யென்ன நித்தரே யாதி செகத்துள பல்லுயிர்த் தொகையி
லொப்பிலா யார்க்கு நல்லைநீ யென்ன வோங்குபா மருவுபூ மாலை
தப்பற வெமக்கு நல்குவோ ரிடத்திற் றங்குவேன் சந்ததந் தையல்.

9 என்றுரைத் தருள மண்மகள் வணங்கி யேழையேன் றானுமப் பணியி
லொன்றிநின் றுன்னை யுகப்பிப்ப தன்றோ வுடம்பெடுத் துளபல னதனு
லின்றடியேன்போய்மண்மிசையதற்காயெடுக்கின்றேன்யாக்கையென்றிசைத்து
மன்றல்சேர் குழலா டுதித்துநின் றிறைஞ்ச மாயவன் மற்றவட் குரைப்பான்.

10 ஆயினம் பத்தன் வில்லிபுத் தூரி லாசறும் விட்டுணு சித்தன்
றாயவப் பணிசெய் தினிதமர் கின்றா னுங்கவன் புதல்வியாய்த் தோன்றி
யேயுநின் மனத்தி னினைத்ததை முடித்தி யானுமத் தலத்துளே னென்றா
னுயக னதுகேட் டன்னமென் னடையா ளன்றென மகிழ்ந்திவை நவிலும்.

11 என்னையாண் முகிலே வில்லிபுத் தூர்முன் யாவராற் றோன்றிய ததையு
முன்னைநான் மறைக்கு மரியநீ யதனுட் புகுந்தமை தன்னையு மொழிந்து
பின்னையத் தலத்தில் விட்டுணு சித்த னென்னுமப் பெரியவன் பணிக
டன்னையு முள்ள வாறுநீ கூறி யருளுதி தலைவவென் றிசைத்தாள்.

12 நன்றது கேட்டி மண்மிசை யணங்கே நாவல வன்பெருந் தீவிற்
றென்றிசை யரசன் பாண்டிய னென்போன் சிறந்தசெங் கோல்புரி நாட்டில்
வென்றிசேர் சேதுக் குமரிமா மலையு மேடத்தி னடுத்தவெற் பகத்தி
னின்றநூ புரியந் தத்தினிற் கீழ்பா னெரியிலோர் காதத்தி னளவில்.

13 மாதல மொன்றுண் டத்தலந் தனினும் வராகமா யுருவெடுத் துன்னை
வேதனை செய்த விரணியாக் கனைமுன் வென்றுபஃ றருமமு முனக்கே
யோதிடக் கேட்டன் றென்னைநீ நோக்கி யோங்குபல் லுயிர்களுக் குதவிக்
காதலோ டிருத்தி யீங்கென வுரைத்தாய் கண்ணினு மெனக்கினி யவளே.

14 மன்னுசீர் வராக க்ஷேத்திர மென்றே மறைபுகன் றிடும்படி பண்ணி
யுன்னுடன் வாழ்ந்தே னனந்தகற் பங்க ளதன்பிற கோருக முடிவி
லன்னமென் னடையா யடைவியாய்ப் பல்லாண் டமரரு முனிவரு மிரங்கத்
துன்னுபல் விலங்கின் கணங்கள்சஞ் சரித்துத்தொழுதெழக் கிடந்தது முளதால்

வேறு.

15 அத்தலத்திற் பிருகுமாற் கண்டன்முத லருந்தவத்தி லன்பு பூண்ட
வுத்தமமா முனிக்கணங்க ணெடுங்கால மிருந்துலையாத் தவங்கள் பண்ணிச்
சித்தமொருப் படுத்தியென்பா லன்பிருத்தி யுறவொழ்ந்து செல்லு நாளி
லெத்தலமும் புடைத்தழிக்குங் கொடுங்கால நேமியென்றோ ரிரக்க மில்லான்.

16 கடுவினைய நிசாசரனு வீடுபெட்டுக் கலங்கிமுனிக் கணங்க ளிந்தத்
தொடுகடலிற் கிடந்தவெமைத் துயிலெழுப்பி யவன்செய்த துயரங் கூற
விடுவிடெனப் புள்ளேறி யக்கணத்தி லத்தலத்தில் விரைந்து சென்று
முடுகிடலு மடலவுண னமர்குறித்துச் சேனையொடென் னேடே மூண்டான்.

17 பூமியே சேனையொடும் புவனம்வெரு வுறப்பூண்டு பொருத கால
நேமியையென் னேமியினு னேமியிடை யறுத்திடவந் நீசன் சோரி
நாமினிதின் வலத்தேந்துஞ் சக்கரத்திற் றோய்ந்திடவந் நவைக டீர்ப்பான்
காழியமா ணவமாமை கைவிட்டு வருணனுமக் களத்தி லெய்த.

18 ஆங்கவனைச் சக்கரத்தை நீராட்டி விடுதியென வவனு நக்கன் றோர்ந்
தோங்குபுனற் கங்கையினை யமுனையினைச் சரஸ்வதியைத் தாணி மாதேவை
பாங்குடனே கொணர்ந்தாழி நீராட்ட வம்மூன்றும் படியிலாக
வோங்குதிரு முக்குளமென் றக்குளத்துக் கும்பர்திரு நாம மிட்டார்.

19 அத்தலத்தி னின்றவட லரக்கனு லலம்வந்தங் காவி சோர்ந்த மு
வுத்தமர்கள் பட்டதுயர்க் கிரங்கிநா ளேவியமே யுருக நஞ்சீர்ப்
பத்தர்களு முனிவர்களும் வானவரும் வந்துதிருப் பல்லாண் டோதி
சித்தமுறப் பணிந்தேத்தி நின்றென்பா லொருவார்த்தை செப்புகின்றார்.

20 ஆங்கவைதா னேதென்னி லன்னநடை மின்னிடையா யாதி நாதா ஆ
வோங்குதிற னேமியைநீ யெங்களுக்கா யுயிர்மாய்த்த துலகிற் றேன்றப் (
பாங்குடனே பாற்கடலிற் கண்வளர்ந்த படிபோலிப் படிமேற் சேடன்
றாங்கிடவின் றித்தலத்திற் கண்வளர வேண்டுமென்றென் சரணந் தாழ்ந்த

21 திரண்டவர்க ளவைமொழிய நன்றென்று நானிந்தத் தேக நீள
மிரண்டுநா றாயிரத்தோ டைம்பதினு யிரமென்றே யிசைக்கப் பட்ட
வரண்டருஞ்சீ ரோசனைக ளளவிலடி முடியினையோ ரற்ப மாக்கி
முரண்டவிர்ந்த வனந்தனையு மதுக்களவாய்ச் செய்தந்த முனிவோர் காண

22 அத்தலத்தி லொருகோயி லமைத்ததனுட் படுத்தனனு னவைகண் டோங்கு
முத்தமர்கள் பாற்கடலிற் கிடந்ததிரு வுருப்பாப்பை யொடுக்கி மாய
னெத்திறத்தாற் கிடந்தனனென் றெனைவியந்திட் டுளமுருகி யிரங்கி யிந்த
சித்திரந்தா னுனக்கல்லா லெவர்க்கியலு மென்றேத்தித் தெளிந்து நின்றே

23 அண்டமெல்லாந் திருவுதரத் தொடுக்கியொரு பாலகனு மாக்கை தன்னைக்
கொண்டுவட தடத்திலைமேற் கிடந்ததெனக் கிடந்தனனக் குறியா லிந்தப்
புண்டரிகக் கண்ணனுக்கிங் குயர்வடவேச் சுரனென்றே பொருந்து நாமந்
தொண்டர்மகிழ்ந் தேத்தவென முனிக்கணங்கள்கட்டுரைத்தார்தொல்லைநாள

24 அந்நகருக் குறுபெயரு நல்வடவேச் சுரபுரமென் றருளிப பலகா
லென்னைவலம் வந்தேத்தி யிமையவரு முனிவர்களு மிறைஞ்சிப் போனார்
மின்னனைய நுண்ணிடையா யெட்டெட்டுச் சதுரயுகம் வேத மேத்த
தின்னையுமக் கமலையையு மடிமுடியி லுறவிருத்தி நெடுநாள் வாழ்ந்தேன்.

25 தேனமரும் பூங்குழலா யெட்டெட்டுச் சதுரயுகஞ் சென்ற தற்பின்
வானவர்கண் மகிழ்ந்துரைத்த மாவடவேச் சுரபுரம்போய் மடங்கல் வாழுங்
கானகமாய்க் கரடிபுலி மதயானை பகையின்றிக் களித்து வாழப்
போனயுக மனந்தங்க ளாங்கதற்பி னதன்மருங்கோர் புத்தூர் தோன்றி.

26 கந்தநறும் பூங்குழலாய் வேதமுதற் பலகலையுங் கருத்தி லோரு
மந்தணர்கள் பலர்வாழ வதன்மருங்கே வேடர்குடி யனந்த மேற
நந்தலில்லா வத்தலத்தில் வேடர்களே வேந்தர்களாய் நண்ணி வாழ்ந்தார்

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

ஆங்கிருவ ருடன்பிறந்து பாலர்களாம் பருவம்போ யரசா ளுளி
லோங்கிடநாங் கண்டெயிலுங் கானகத்து வேட்டைக்கென் றொருநாட் போந்தார்
தேங்கமழ்பூங் குழலணங்கே யிருவர்களிற் பின்பிறந்த கண்டன் சென்று
தாங்கியகை வேலினொடு மவ்வனத்தில் வாழுமொரு சார்த்தூ லத்தை.

தொடர்ந்தோட வதுசெடியாய்த் தோன்றாமை கண்டுசுவ டெடுத்து வாழு
மிடந்தேடி யிவன்றிரிய வயர்பிலம்பி லிருந்திவனுக் கெதிரே பாய்ந்து
நடந்தேறி மார்பிடந்து செங்குருதி யுண்டுசெடி நண்ணுங் காலை
யுடன்றேடித் தம்பியெங்கே யென்றுவில்லி தடமெடுத்தங் கோடி வந்தான்.

## வேறு.

வந்தவன் றம்பியி றந்தமை கண்டு மயங்கி மண்ணி
லெந்துணை போயினை யோவென வேங்கி யிரங்கி வீழ்ந்து
நந்தின ளுமென மோகம டைந்தன னுன தற்பின்
செந்துவர் வாய்மட மாமயி லேதுயில் செய்யும் வண்ணம்.

எண்ணிய வன்றுயில் போதினில் யானுமெ ழுந்துசென்று
புண்ணிய சிந்தைகொ டுத்தவ னோடு புகல லுற்றே
னண்ணினை யென்பதி யின்றுபு துக்கிடி னுளு நாளும்
பண்ணிய தீவினை முற்றும றும்மிது பண்ணி ரென்ன.

## வேறு.

அப்பொழுது சொர்ப்பனத்தி லாங்கவனு மென்னோடே யறைவ னுதி
யிப்பொழுதென் பின்பிறந்தான் வேட்டைக்கு வந்தவனிங் கிறந்து விட்டான்
கைப்பொருளு மிகவேண்டு மித்தலத்தை நவமாகக் காண வேண்டி
லெப்படிநீ கற்பித்தா யப்படியே செய்கின்றே னிறைவா வென்றான்.

மாசிலா வினிதுமொழிய மானனையா யவனோடு மறுத்துஞ் சொல்வு
ஞசிலா வும்பியையு மெழுப்புவே னவன்குருதி தன்னை வாயாற்
கூசிடா துண்டிடுஞ்சார்த் தூலத்தை யிக்கணத்திற் கொல்வேன் மற்றப்
பேசரிய தனம்வேண்டி லுதன்குகையிற் காட்டுகின்றேன் பெறுதி யென்ன.

செப்பினே னவன்கனவிற் றுணுக்கென்ன வெழுந்திருந்தான் றேனே வில்லி
யிப்பொழுது கண்டகனு வீதென்கொ லதிசெயமென் றிருந்தா னக்க
ணொப்பரிய கண்டனுயி ருடன்மேவி யோடியெழுந் திருப்பக் கண்டு
தப்பிலது கண்டகனு வுய்ந்தனனு னெனவவனைத் தழுவிக் கொண்டான்.

என்னுடைய கண்மணியே யெனத்தழுவி யணைத்தருகி லிருத்திக் கொண்டு
தன்னுடைய சொர்ப்பனத்தில் யான்றனக்குப் பகர்ந்ததெல்லாந் தம்பிக் கோ
மின்னிடையா யிருவர்களு மெழுந்திருந்தாங் கிருகவடு மேவ வில்லி

35 கண்டனையோ கண்டாவிப் புலியிறந்து கிடந்ததுமென் கனவு தன்னிற்
கொண்டல்வண்ணன் கட்டுரைத்த பரிசினையு மெனத்தம்பிக் குவந்து கூறிப்
புண்டரிகங் கிடந்தபெரும் பிலம்பிடையிற் கிடந்தொளிரும்பொருளைக்கண்டா
னுண்டிவிடந் தனிலெனக்குக் கனாக்காட்டி யுயக்கொண்ட வொருவனென்ன.

வேறு.

36 அத்தலத்தி லெனைத்தேடித் திரிந்தனனுங் கவ்வனத்திற்
சித்தமுறக் கேட்டிமுன்னாட் சிறப்போடு மெனக்கினிய
பத்தர்களுஞ் சமைத்தளித்த கோயிலறப் பழகவதி
லுத்தமமாம் வடமுன்னு ளுயர்ந்தோங்கி நமைத்தாங்கும்.

37 சேடன்முத னித்தர்களைத் திருமகளை யெனைநின்னை
யேடவிழ்தன் சினையாலு மெழுந்தோங்கு முயர்வாலும்
மீடுபெறப் பொதிந்துநிற்கும் பெரும்பூட்டி னதிசயத்தை
வேட்டனுங்கண் டெனதருளால் விரைந்தாங்கே யருகணைந்தான்.

38 வந்தவில்லி சிறந்தோங்கும் வடவத்தின் றிறநோக்கி
யிந்தவிதி யுளன்கனவி லெமக்கருளு மிறைவனெனச்
சிந்தையுறப் பணிந்ததனை வலம்வரவோர் சினையூடே
முந்துறநம் மனந்தாழ்வான் பணாமகுட மூன்றிரண்டும்.

39 கண்டனன்மற் றதற்பின்னே கரியவிழிச் செங்கனிவா
யொண்டொடியே யெனைக்கமலை தனையுன்னை யுற்றுறையுந்
தொண்டர்களைத் தனித்தனியே யாலமுட்டிற் றுணைவனொடு
மண்டமுண்ட செவ்வாயா சரணமென்றெ னடிவீழ்ந்தான்.

40 உடனெழுந்தென் னவையவங்க ளுறநோக்கி யன்பினைந்து
படவரவத் தணையானே யெனப்பலகாற் பணிந்தேத்தி
மடமயிலே நான்கனவில் வகுத்தபணி செய்யநம்மை
விடவழிக்க மாட்டாமல் விம்மிவிம்மி யிருந்திரங்கி.

41 அத்தலத்திற் சிலகடிகைப் போதிருந்த வடல்வில்லி
யித்தலத்தி லிவற்கிசையுந் திருக்கோயி லெடுத்திவற்காம்
பத்தர்களும் பலசனமும் பரிந்தினிதி னுறையவிதை
யுத்தமமாந் திருநகர மொன்றிதென வும்பர்தினம்.

42 கட்டுரைப்பக் குடியேற்றி யிடுவேனா னெனக்கருதி
வட்டமதி முகத்தணங்கே மாசிலா னத்தலத்தை
விட்டெழுந்து புத்தூரில் வேதியரை யழைத்தவரே
டிட்டெளிவா லிவையனைத்து முரைத்ததனிற் குடியேற.

43 வேண்டுமென்றான் விறல்வில்லி வேதியர்க ளப்பதிக்கு
மாண்டகையெம் மூர்ப்பெயரே யாக்குதியே லதுசெய்வான்
கூண்டுடனே வருகின்றோ மெனவுரைத்தார் குலமறையோர்
நீண்டபுக ழுறுவில்லி யதற்கிசைந்து நின்றவரை.

டன்கொடுபோய்க் குடியேற்றி யுத்தமமா மப்பதிக்குத்
டம்புடைசூழ் புத்தூர்ப்பேர் தன்பேரொன் றிரண்டொன்றாய்த்
டம்படவுள் ளுணர்ந்திதன்பேர் ஸ்ரீவில்லிபுத் தூரென்றே
டங்கிடவோ ரூர்க்கிருபே ராக்கினு னாமுதே.

45 நல்லிநாண் மலர்வதனத் தணங்கேயந் நாட்டின்பேர்
வல்லிநா டெனத்தன்னைப் பெற்றாள்பேர் மகிழ்ந்திட்டான்
வில்லிநான் மறைவாணர் வேதத்தின் விதித்தநெறி
சொல்லினூற் றனையிறையும் பிரியாத துணைவனொடும்.

46 ஆங்கதற்பி னனந்தாழ்வான் றனையென்னை யழகோடு
மோங்கியசீர்த் திருமகளை நினைமற்றாங் குள்ளவரைப்
பாங்குடனே திறல்வில்லி பரிவோடங் கோயின்முதற்
பூங்குழலாய் முன்கண்ட தனமெடுத்துப் புதுக்குவித்தான்.

47 பதுமமுகத் தணங்கரசே பழகினதைப் புதுக்குதலாற்
'புதுவை'யென்று மப்பதிக்கோர் பெயரிட்டான் புகழ்வில்லி
மதுமலர்ப்பூங் காக்கள்பல வைத்தனந்த மோடைகண்டா
னதுஇடப்பத் திருவிழா வாதியாய் மறையறைந்த.

வேறு.

48 வாரார் முலையாய்கேள் கீதங்கள் வாச்சியங்க
ளாரா தனைகட் களவிறந்த பல்வளங்க
ளோராரு நாடகங்க ளேழுலகுங் கண்டுவப்பச்
சீரார் திறல்வில்லி மற்றெமக்குச் செய்வித்தான்.

49 அன்பினு லிவ்வாறு செய்துபல காலமவன்
றன்பினுன் கண்டனொடு மத்தலத்திற் றான்வாழ்ந்து
பின்புநா மேவப் பிரமனூன் காணுவென்
னின்பநா டெய்தினு னீரே முலகேத்த.

முன்னாள் நிகழ்ந்த கதையுமந்த மூதூர்க்குப்
பின்னாய பேரும் பிரம னரனேத்த
வந்நாணு மத்தலத்தின் மேவியது மாரணங்கே
யிந்நா ளுரைத்தோ மிதுவன்றிப் பட்டர்பிரான்.

செப்ப முடைய திருநகரிற் சென்றுதித்தங்
கொப்பிலான் பூமாலை பாமாலை யுண்மகிழ்வா
லெப்பொழுதுஞ் செய்துவரு மென்றேன்முன் னத்திறமுந்
தப்பறநீ கேளா யுரைக்கின்றேன் றார்குழலே.

2 வையத் துயிர்களெனையுணர மாட்டாமற்
பொய்யி லுதித்தவமே போவதுகண் டவ்வுயிர்க
ளுய்யும்வகை யெண்ணியென தூர்தியினை யோவியமே
மெய்யைவிளக் கென்றுரைத்து மேதினியின் மேவுவித்தேன்.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

53 மற்றவனு மாணியினிற் சோதிதனின் மண்ணின்முனஞ்
சொற்றவில்லி புத்தூரிற் றொல்புகழ்சேர் வேதியரி
லுற்ற முகுந்தருக்கும் பற்றுமைக்கு மோர்மகவாய்ச்
சிற்றிடையாய் தோன்றினள் றேசஞ் சிறந்தோங்க.

54 அஞ்சு வயதி லளவிறந்த பூம்பொழில்கள்
கஞ்சங் கழுநீர் கலித்திலங்கு மோடைபல
நெஞ்சு நெகிழ்ந்த நினைவோடுங் கண்டெமையே
தஞ்ச மெனநின்று பூமாலை சமைத்தளித்தான்.

55 அந்நாளிற் கூட னகராளு மீனவர்கோன்
மின்னார் முடிவேந்தன் வேதாந்தத் துட்பொருளைத்
தன்னா லறியச் சமயிகளைத் தான்கூட்டிப்
பொன்னார் கிழியொன்று தூக்கினான் பொற்றொடியே.

56 வேண்டிய வாறுசில வேதாந்தம் போற்கூறிக்
கூண்டணைந்து சென்றுகிழி கொள்வான் சமயிகடாந்
தீண்டி யறுக்குநெறி செல்லா நலமருநாட்
பாண்டியன்முன் னெய்திக் கிழியறுத்தான் பட்டர்பிரான்.

57 தண்டிபுரா வித்த சமையத்தார் தார்வேந்தன்
கண்டிருப்பச் சென்றேநம் பத்தன் கழல்வீழ்ந்தார்
திண்டிறல்சேர் மன்னவனுந் தேவர்குழாம் போற்றிடவப்
பண்டிதனை யானைக் கழுத்திற் பரிந்தேற்றி.

58 கூடற் பதியை வலமாகக் கொண்டுவர
வாடற் பறவைமே லேறியவன் கண்டிடநா
னேடுற்ற தாரா யெதிர்செல்லப் பல்லாண்டைப்
பாடிப் பரிந்தெனக்குக் காப்பிட்டான் பட்டர்பிரான்.

59 ஆங்கதற்பின் வில்லிபுத்தூ ரெய்தியநா மாயரிடைப்
பாங்குடனே தோன்றி வளர்ந்திடுநாட் பாலகனை
யோங்குபருவத் தசோதை யுரையாகப்
பூங்குழலாய் பாமாலை பாடியென்னைப் பூசித்

என்று மரங்க மெழின்மா லிருஞ்சோலைக்
குன்ற மிலங்குங் குளிர்வேங் கடப்பொருப்பு
நன்றிதருஞ் சீவில்லி புத்தூரிந் நான்கினிலு
மொன்றிய சிந்தையனா யோவியமே வாழ்கின்றே

61 மடமயிலே வைகுந்த மாநகரி விந்தப்
படவரவ மேந்துவளர் பாற்கடலிற் பண்ணை
வடவிலையிற் பட்டன் மனமே யெனக்கா
மிடவகையாய்க் கொண்டாங்கே யெப்பொழுதும் வாழ்வேன்.

## வேறு.

என்றிறைவன் முன்னிகழ்ந்த கதையெலா மெடுத்தியம்ப
மன்றல்கமழ் பூங்குழலாண் மண்மடந்தை யுணர்ந்துமனத்
தோன்றியசீ ரன்பினளா யுலகளந்த வொருமுதலைச்
சென்றுபணிந் துவந்தேத்திச் சீவிலிபுத் தூர்நகரில்.

இப்பொழுதே யேகின்றேன் விடையருள்க விறைவவென
வொப்பரிய திருமாலு முவந்துவிடை கொடுத்தருள
செப்பமுடை யுலகேழுஞ் சீர்பெறவத் தேவன்மனை
மப்பொழுதே பின்றொடர வமரர்குழா மடிபணிய.

வேதங்க டொழுதேத்த விரிஞ்சனா னகயகிழப்
பூதங்க டொழுதேத்தப் பூசுரர்க ளம்மடந்தை
பாதங்க டொழுதேத்தப் பட்டர்பிரான் குலம்வாழப்
போதங்கொ ணெறிவில்லி புத்தூரின் புகழோங்க.

அருந்தவத்தோ ரின்பமுற வச்சுதற்கா ளாயுலகந்
திருந்தவரு முனிக்கணங்க டேசுபெறச் சித்தர்குழாம்
பொருந்துமது மலர்தூவிப் போகாத பிறவியறு
மருந்திதெனப் பணிந்தேத்த வசுக்கடிரு வடிபரவ.

ஏராரு நாரதனுந் தும்புருவு மிசைபாட
வாராரும் பூண்முலையாள் வளர்திருப்பாற் கடனீங்கி
கூராழி சங்கேந்துங் கொண்டலமர் புத்தூரிற்
சீராருந் திருவாடிப் பூரத்திற் சிறப்பினொடும்.

பட்டர்பிரான் பயிர்செய்து பலநாளும் பூவெடுக்கு
மட்டவிழ்பூம் பொழினந்தா வனத்திடையின் மதுப்பொங்க
விட்டிலங்கும் பசுந்துளப மென்பூட்டின் மேலான
சிட்டர்தொழப் புவிமடந்தை திருவவதா ரஞ்செய்தாள்.

## வேறு.

68 மண்ணோங் கினமா னிடரோங் கினசீர்
விண்ணோங் கினவே தியரோங் கினரேழ்
பண்ணோங் கினபா டல்களோங் கினதேர்
கண்ணோங் கினகற் றவரோங் கினரால்.

## வேறு.

மடிந்தது தீமை யாவி மயக்கிய மாயா கங்குல்
விடிந்தது ஞால மெங்கும் விளங்கின களங்க நீங்கி
யொடிந்தது வஞ்சர் வஞ்ச மோய்ந்தது கொடுமை யன்றே
படிந்தது வாது பேசும் பாதகச் சமைய மெல்லாம்.

வேறு.

70 பொய்யி றந்தன போதம் பிறந்தன
மெய்சி றந்தன வேக மெலிந்தன
வைய மெய்தும் வருத்த மயக்கமுங்
கைக ழன்றன காம மிரிந்தன.

வேறு.

71 அடைபட் டதுதீ வழியல் லவொடுந்
தடைபட் டதுசத் தமுதற் புலனே
யுடைபட் டதுநீ தியிலோ டுமுளங்
கிடைபட் டதுகீழ் மையவா யவெலாம்.

72 வண்ணந் திகழ்மண் மகளும் வளர்வா
னண்ணுந் திருநந் தவனப் பொழிலும்
விண்ணின் றலைமே கமுமின் னுமெனு
வெண்ணுந் திறமா கியிலங் கினவே.

வேறு.

73 வாவியி னலர்ந்த செந்தா மரைதிரு விளக்கே யாகக்
காவிகள் விழித்து நோக்கக் களிவண்டு கானம் பாட
மேவிய மயில்க ளாட விண்முகின் முழவி னார்ப்பத்
தேவியுந் தன்னை யீன்ற திருத்துழாய் மடியில் வாழ்ந்தாள்.

வேறு.

74 இச்சென்ற காலத் தெனையொப்பார் யார்புவிமா
னச்சொன் றெடுத்துவரப் பெற்றேனென் றன்புருகி
வெச்சென்ற வெந்நீரும் வேண்டாத் துழாயன்னை
பச்சென்ற கொங்கைப் பசுநறவப் பாலளித்தாள்.

75 அன்னைத் துளப மருட்பால் சுரந்தளிப்பப்
பின்னைநின்ற பூமரங்க ளெல்லாம் பிராட்டிதனக்
கென்னபணி செய்வதினி யாமென் றெழின்மரங்
டன்னையறத் தாவ வரிக்குயில்க டாலாட்ட.

76 செய்ய பசுங்கிளிகள் சென்றுங் குலைபயிற்ற
மையலறு மன்னம் வளர்சிறகால் வந்தணைப்பப்
பையவிளந் தென்றல் பசுமேனி மேற்றடவ
வுய்யவருட் பூவை யுறங்கக் குறங்குதட்ட.

வேறு.

77 பூவெலா மதுக்கள் சிந்தப் பொழிலெலாங் கனிகள் சிந்தக்
காவெலாம் பரந்த மந்தி கடுவனோ டெழுந்து செந்தே
னாவலா லருந்தி யாடி யன்னையின் றெமக்கு முன்போ
லேவலா னவைக ளுண்டேற் பணியென விறைஞ்சி யேத்.

78 சாதிக ணெறியில் வைகச் சதுமறை யவர்க டங்கும்
வீதிக டோறு ஞான விழாவொலி மேவி யார்ப்ப
வோதிய கலைக்கு முன்னே யுணர்வுசென் றருளின் வைக
நீதிகள் யாவர் மாட்டு நிலைதிறம் பாது நிற்க.

வே று.

79 கானில் வைகும் விலங்கினமுங் கரிச ணீங்கி யருளெய்த
வானில் வைகுந் தேவர்களும் வந்து மலர்மா மழைபொழியத்
தேனுண் டளிசேர் பூமரத்திற் செறியும் வெறியும் பறவைகளு
மூனு முயிரு முடன்கரைய வுணருந் திருவெட் டெழுத்தோத.

வே று.

80 மன்னுசரா சரமோங்க வானோங்க மறையோங்க
வன்னநடை மின்னிடையா ளிவ்வண்ண மாங்கமர
முன்னைவினைத் தொடர்வாலே முகுந்தனூர் திருமகளு
மென்னுமெழிற் பட்டர்பிரா னெப்போதும் போலிறைக்கு.

வே று.

81 கடிமலர் கொய்து நாளுங் கணிப்பரு மாலை கட்டி
யடிகளுக் களிப்ப ரென்று மாடிப்பூ ரத்தி னன்றும்
படிமுழு துலக முண்ட பரஞ்சுட ரருளி னாலே
விடிவதன் முன்னஞ் சென்று மென்மலர்க் காவைச் சேர்ந்தார்

82 ஆதவ னெழுந்த போதி லகலிடத் திருள்க ளெல்லா
மோதுமக் காவில் வைகி யுறையுமற் றதுதா னந்நாட்
போதமாக் கதிர்கொள் பூமி நங்கையும் பொருந்த லாலே
சோதிமேற் சோதி யாகித் துலங்குத றெண்டர் கண்டார்.

வே று.

83 அதுகண்டு மகிழ்ச்சி தாங்கி யந்தணர் கோனு நந்தா[illegible]
மதுமலர்க் காவு ளெய்தி வளரொளி மூல நாடிப்
புதுமதுப் பொங்கும் பச்சைப் பசுந்துழாய்ப் பூட்டி னூடே
கதுமென விழியா னோக்கிக் கருணையின் கொ[illegible]

84 கண்டவப் பொழுதே கண்ணு முள்ளமுங் களிப்பச் சென்ற
தொண்டரப் பெண்ணை நோக்கித் தோமறு மன்பு கூர்ந்திவ்
வொண்டொடி யார்கொ லென்ன வுரைத்தன ரதையென் மா
கொண்டபுன் சொல்லா னுயே னறிந்தவா கூற லுற்றேன்.

வே று.

85 பூதாதி யெல்லாப் பொருட்கு மனைத்துயிர்க்கு
மாதாவோ விண்ணவர்கள் வைப்போ மறுவறுசீர்
வேதாந்தந் தானோ விரிஞ்சனரன் செய்தவமோ
வோதாச் சுகோததியின் வித்தோ வொளிமணியோ.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

86 செந்தா மரைமலரிற் றோன்றிச் செகமெல்லாந்
தந்தாள வந்த திருமகளோ காரணிசேர்
நந்தா விளக்கோ ஞானத்தி னற்கொழுந்தோ
சிந்தா மணியோ திருப்பாற் கடலமுதோ.

87 கற்றவர்கள் கண்ணின் மணியோ கலைமகளோ
வுற்றுணரு மன்ப ருயிரோ வுயிர்த்துணையோ
முற்றப் புவன முழுது முறையாலே
பெற்று வளர்க்கும் பெரும்பார் மடமகளோ.

88 புண்ணியமோ வேதப் பொருளோவிப் பூதலத்தோர்
நண்ணிமுனஞ் செய்த தவமோவென் றுகணையான்
கண்ணின்மணி தானோ கலைப்பொருளோ காரணத்தா
லெண்ணரிய நீதிக் கொழுந்தோ விளக்குளிரோ.

89 பாலோ செழுங்கனியோ தேனேநற் பாகவதர்
நாலோ வதன்பயனோ நொய்தினெனை யாண்டதிரு
மாலோ மடப்பிணையோ மாசறுசீர் வேதமொரு
நாலோ வதின்மகலோ நம்மா லறிவரிதால்.

90 எல்லா மறிவித்தெ னின்றுயிர்க்கு வாழ்வருளு
மல்லாண்ட திண்டோண் மணிவண்ணன் முன்பிலிந்த
வில்லார் நுதலாளைக் கொண்டுசென்று மேவினற்
சொல்லா திரானெமங்கைத் தோகையவ ளாரென்ன.

91 எண்ணிப் பெரியாழ்வா ரின்னமுத மீதென்ன
மண்ணிற் கிடந்த மடமயிலைச் சென்றெடுத்துப்
பண்ணிற் சிறந்தமறை பாடப் பசுந்துளபக்
கண்ணிக் கருமுகிற்கோர் காணிக்கை யீதென்ன

கொண்டுசென்ற வன்பர் வடபெருங் கோயிலார்முன்
றொண்டர்குழாஞ் சூழக் கிடத்தித் தொழுதேத்திப்
பண்டுலக முண்ட பரனேயிப் பாவைதனைக்
கண்டனனின் னந்தா வனத்தமயோன் கண்களிப்ப.

93 மஞ்சுலவுஞ் சோலை வளர்பூந் தடவனத்திற்
பஞ்சவர்க தோவிப் பச்சைப் பசுங்குழவி
தஞ்சமெவ ராகவந்து தங்கிற்றா ரீன்றவர்கூ
முன்செய் வினையொன்று மறியேன் மொழிகவென.

94 வேதியர்கோன் கூறவில்லி புத்தூரிற் கண்டுவெ
மாதி மணிவண்ண னாழ்வார் முகநோக்கி
யோதியவ ளிந்நா ளுதித்த கருமத்தி
னீதியையும் பின்னே யுரைக்கின்றோ னீயிவளை.

95 இப்போ தகத்திற் கொடுபோயிவ் வேந்திழையை
முப்போதும் போற்றி மகளா முறைபொருந்த
வெப்போதும் பேணி வளர்ப்பா யிவள்பெயருஞ்
செப்போங்குங் கோதையெனச் செப்பென்றான் றேவர்பிரான்.

96 இன்றுநா மேறுஞ் சிவிகையினி லேற்றியிந்த
மன்றல் கமழு மடமயிலோ டாழ்வார்பின்
சென்றனைத்துக் கொத்துந் திரும்புகவென் றன்றிருமா
லன்றவர்க ளெல்லா மதற்கொருப்பட் டாங்கணைந்தார்.

97 மாணிக்க முத்து வயிர முதன்மணிகள்
பேணிப் பதித்தடங்காப் பேரொளியி னல்விளங்கு
மாணிப்பொற் பல்லக்கி லாழ்வார் திருமகளை
வாணித் திலநகையார் வாழ்த்தி மகிழ்ந்தேத்தி.

வேறு.

98 பேரிகை யெக்காளங் கொம்பொடு பேர்நவுரி
சீரிய நற்றாளஞ் சின்ன முழவதிர
வோரியல் பல்வளமு மெங்கணு மாகியெழக்
கூரிய மெய்ஞ்ஞானக் கொம்பினை யந்தணர்கோன்.

99 தன்றிரு மாளிகையிற் றாரணி யோர்கடொழ
வொன்றிய வன்பினொடு முத்தம னுள்புகலு
மன்றயன் மாளிகைவா ழாயிழை யார்மறையோர்
சென்றனர் யாவர்களு நின்றிவை செப்பினரால்.

வேறு.

தெள்ளமு தத்தைத் திரட்டித் திருமேனியைச் செய்த தென்பார்
வெள்ளமி டத்திற் செனித்த மலர்மங்கையின் மிக்க தென்பா
ருள்ள முடைத்துக் களித்துச் சிலரோவியப் பாவை யென்பார்
மெள்ள வெடுத்துப் படுத்துச் சிலர்மென்முலை யூட்டு மென்பார்.

வேறு.

1 மாசறு சோதி நீதி வளரொளிக் கருணை யென்பா
ராசறு குணங்கண் மூன்றுங் கடந்தவ ராவி யென்பார்
வர்சவ னக்குன் மிக்க வானவர் செல்வ மென்பா
ரீசனுக் கினிய நீளை யெடுத்ததோர் வடிவ மென்பார்.

அண்டங்க ளனைத்தி னுள்ள வழுகெலா மெடுத்துச் சேர்த்துப்
பூண்டரீ கத்துள் வேதன் பூமிசை விடுத்த தென்பார்
கண்டிடி யைனுற் செய்யுங் கன்னியோ விவடா னென்பா
ருண்டுகொல் லுலகி லிந்த வுருவினுக் குவமை யென்பார்.

20764



103 உலகிரு ளகற்ற வந்த வொண்சுடர் விளக்கி தென்பார்
பலகலை பகரும் வாக்கி னங்கையிப் பாவை யென்பா
ரலகிலா ஞான வாரி யாரமு தாகு மென்பார்
நிலமக ளிவளே யென்பார் நேமியா னுயிரி தென்பார்.

104 சனகனி லுதித்த சீதை பின்னுமித் தரணி மீதிப்
பனவனில் வந்து தோன்றும் படியிது வாகு மென்பார்
மனமகிழ்ந் தவளே யாகின் மற்றுநாம் வாழ்ந்தோ மென்பா
ரனகனு மாழ்வார்க் கீதை யறிவித்தா னிலனோ வென்பார். ன

105 அன்னையு முளளோ விந்த வமுதினுக் கறையி னென்பார்
முன்னைநான் மறையி னந்த முதற்பொருள் பெண்ணோ வென்பார்
தன்னையே நிகரா மாழ்வார் தவந்திரண் டதுகொ லென்பார்
பின்னையே யனையா டோன்றி மேதினி விளங்கிற் றென்பார்.

106 ஆசறு பெரியாழ் வார்த மகத்துக்குத் திரியு நெய்யுந்
தேசுறத் தேட வேண்டாந் திருவிளக் கிவளே போது
மாசறு புதுவை யுள்ள மானிடத் தவர்நம் வாழ்வைப்
பேசிலார் பெறுவா ரிந்தப் பெருநிலத் திடையி லென்பார்.

107 கற்றவ ருவமை சொல்ல வல்லரோ கமல நேரோ
சிற்றடி யிரண்டுக் கென்பார் சிறுவிரற் காண்மி னென்பா
ருற்றநற் புறந்தாள் கட்கிங் குவமையு முளதோ வென்பார்
பொற்றொடி கணைக்கால் கட்குப் பொருவிலை யுலகி லென்ப

108 இருகுறங் கெழிலை வேத மிசைக்கவும் வலதோ வென்பார்
பொருவரு மருங்கிற் கொப்பிப் பூதலத் துளதோ வென்பார்
ஒருபொரு ளுளதோ பேதை யுதரத்துக் குவமை யென்பார்
வருதன மிரண்டுந் தோன்று மார்பினுக் கிணையே தென்பார்

109 வேயையோ தோளுக் கொப்பு விளம்புவ திவளுக் கென்பா
ராயசீர்க் கழுத்துக் கொப்பிங் கறைவதா ரந்தோ வென்பார்
தேயுமா மதியோ விந்தத் திருமுகந் தனக்கொப் பென்பார்
வாய்தனக் கிணையுங் கூற வல்லரோ மனித ரென்பார்.

110 சீரிய பேதை மூக்குக் கிணையெது செப்பு மென்பார்
கூரிய விழிகட் கொப்புக் குவலயத் துளதோ வென்பா
ரேரியல் வள்ளை யொப்போ விருகுழை யிணைகட் கென்பார்
நேரிய பிறையோ மாதி னெற்றியை நிகர்ப்ப தென்பார்.

111 கருங்குழ றனக்கோ ரொப்புக் கூட்டவு முளதோ வென்பா
பெருந்திரு மங்கை யிந்தப் பெண்ணினுக் கிணையோ வென்
இருந்தின்மாற் கன்றி யார்க்கித் திருமண மேற்கு மென்பா
ரருந்தவ முனமிப் புத்தூர் செய்ததற் களவே தென்பார்.

112 இப்படி சென்று கண்டா ரிவையிவை யெண்ணி வாழ்த்த
வொப்பறு கோதை பேதைப் பருவமா யொழுகி வாழ்ந்து
தப்பற வதனுக் கேற்ற வணிகலன் பலவுஞ் சாத்திச்
செப்பமாய் வளர்ந்து பின்னப் பெதும்பையாம் பருவஞ் சேர்ந்தாள்

வேறு.

113 சீரார் கமலத் திருவடிக்குச் செம்பஞ்சு
மேரார் புறந்தாளி லிட்டிலங்கும் பொற்சிலம்பு
நேராக வங்குலிக டோறு நிரைநிரையே
பேரா தமைத்துப் பிறங்கும் பணிபலவும்.

114 எண்ணிய நூபுரங்கண் மீதே யிசைந்திலங்கப்
பண்ணிய பாடகமும் பைம்பொ னொளிவீச
நண்ணி யதின்மேலே தண்டை நலந்திகழப்
புண்ணிய மாதினல்லார் பூட்டி யுவந்தனரால்.

உற்றா நோக்கி லுளதா யொளிர்மருங்கிற்
சிற்றாடை சாத்தித் திருமடிதா றங்கமைத்துப்
பற்றா விடையிற் பசும்பொனரை ஞாணணிந்தார்
முற்றாக் கருணைக் கொழுந்தா முகிணகைக்கே.

11 தூயமலர்க் காந்தட் டிணைக்கரத்தி லங்குலிகட்
காயதிரு வாழி யிலைச்சினைக ளன்னமரு
ளேயதிரு முன்கைக் கெழிற்சரிகள் சூடகங்கள் பாடு
வேயனைய தோள்கட்குந் தோள்வளைகள் விஞ்சொளிசேர்.

17 சீர்மருங் கெச்ச மணிந்து திருக்களத்துக்
கேரமரும் பொற்பட்டக் காறை யிலங்கொளிசே
ராரம் பவளநிரை யாணிப் பசும்பொன்மணி
வாரமரும் பூண்முலையார் மண்மகட்குச் சூட்டினர்.

18 செய்யகனி வாயுந் திருப்புன் குறுநகையுந்
துய்ய குமிழிற் றுலங்குந் திருமூக்கு
மையமரும் வேல்விழியும் வார்காதும் பொற்றோடும்
வெய்யவொளி வீசி விளங்குதிருக் கொப்பினையும்.

119 வட்ட மதிமுகத்தில் வார்புருவப் பொற்சிலையூ
டிட்டதிரு மண்காப்பி னேரார் பிறைநுதன்மேன்
மட்டு மலிகுழலிற் சூழியமும் வாழ்திருவும்
பட்டந் திருப்பூரப் பாளை பலவணிந்தார்.

ஆழிநீர் வண்ண னருளாற் பெரியாழ்வார்
வாழியருட் கோதையென்னு மங்கலா சாதனத்தா
லேழுலகு மீன்றா ளெழுந்து நடையயின்று
தோழியர்க ளோடுவிளை யாடத் தொடங்கினள்.

வே று.

121 அந்நாளிற் பரமபத்தி தலையெடுத்தாங் கலைக்கிடந்த
பொன்னாழிக் கையாற்குப் புகுந்துபணி செய்துவருந்
தன்னாவித் தாதையைப்போற் றக்கபணி தான்செய்வான்
பன்னாரு மலர்க்காவிற் பட்டர்பிரா னுடனடந்தே.

122 சென்றுசிறுப் பொற்கும்பஞ் சிற்றிடைச்சே ரொக்கலைமேன்
மன்றல்கமழ் மலர்க்கோதை வாசநறும் புனல்கோரிக்
குன்றெடுத்தா னிசைகாத்தான் மனமகிழக் கொண்டணைந்தங்
கன்றுமுதற் பயிர்க்குநகம் பரிமாறி யன்பினொடும்.

வே று.

123 சிலபகல் செல்லு நாளிற் சீரிய பெரியாழ் வாரும்
பலநறு மலருங் கொய்து பரிந்துபூ மாலை சேர்த்து
மலமறு மன்பி னோடும் வைத்துபா தானம் பண்ண
நலமுற வேகுங் காலை நாரண னருளிற் போந்த.

வே று.

124 பெண்ணிற் பொலிந்த வருட்கோதை பெருமாற் கமைந்த வித்தாமம்
விண்ணிற் றாமந் தனக்கிணையாய் வருமோ காண வேண்டுமென
நண்ணித் திருப்பூக் கூடையின்முன் ஞான சிக்கார் வைத்தநறுங்
கண்ணித் தொடரி லொன்றெடுத்து மூக்கில் வைத்துக் கந்தித்தாள்.

125 துய்ய வாச முறநோக்கித் தோகை நினையுந் துகளாறும்
மையர் திருக்கை வாசியினா லான மணமீ தாதலினால்
வையத் துள்ள மலரெல்லா மென்னும் வானின் மலர்க்கிதுநஞ்
செய்ய கமலக் கண்ணற்குச் சேரா தென்னச் சிந்தித்தே.

வே று.

126 என்னுடைய கோதை மணமூட்டி யிலங்கைநகர்
முன்னடையச் செற்ற முதல்வர்தமக் கித்தாளைப்
பின்னளிப்பே னீதே பெறுநங் கயிங்கரிய
மன்னுமிறைக் கென்றுதிரு மாலை யனைத்தினையும்.

127 சீரார் திருக்குழன்மேல் வேய்ந்துதிருக் கண்ணாடி
யேரார் கிணற்றி னிழலி லெழினோக்கிப்
பாராநின் றண்மீண்டு பட்டர்பிரா னெய்திடுமுன்
றாராரக் கோதைமண மூட்டியவை தான்கழித்தே.

128 முன்ன மிருந்த தலத்தின் முறையாலே
மன்னுதிருப் பூக்கூடை யுள்ளமைத்து மாசிறந்த
வென்னமுதுக் கெப்போது மிப்பணிக ளன்போடு
நன்னெறியிற் செய்திடநாம் வேண்டுமென நன்குணர்

129 ஐயர்வரு முன்ன மகன்றிக் கயிங்கரியஞ்
செய்ய வுலகிற் செனித்தபலம் பெற்றதென
மையமருங் கண்ணாண் மனமகிழ்ந்து மண்ணவர்க
ளுய்யச் சிலநாள்க ளுற்றிதுவே நற்றொழிலாய்.

130 பண்ணிவரத் தாதை யூறிவா லிவண்முடித்த
கண்ணியணை மெங்கும் கமழக் கொடுபோயிம்
மண்ணின் றுயர்தீர் வடபெருங் கோயிலர்மு
னண்ணி யவற்களிப்ப நாரணனு மாங்கதனல்.

131 ஒப்பரிய வின்பம் விளைய வுளமகிழ்ந்து
செப்பரிய கோதை மணத்திற் றிருவுளம்பூண்
டிப்படியோர் வாச முளதோவென் றின்பமுற்று
னப்படியே நாள்கள் செலுமளவி லாங்கொருநாள்.

வே று.

32 ஆசி லாத வடபெருங் கோயி லுடைய வச்சுதனும்
பேச வரிய சீபூமிப் பிராட்டி யாழ்வார் பெண்மகளாய்
நேசத் தாலே யவதரித்து நின்று தமக்கிப் பணிசெய்த
றேசத் தவர்கட் கறிவிக்க வேண்டு மென்னச் சிந்தித்தான்.

33 அந்த நாளி லருட்கோதை யணிந்து கழித்த திருத்தாரிற்
கந்த நாறு மயிரொன்று கூட வாழ்வார் கண்டுப்பிச்
சந்த மாருந் திருமார்பர் சாத்தும் படியர்ச் சகர்கையின்
முந்த நாள்கள் போலளிப்ப முதிய மறையோ னதைவாங்கி.

கொண்டார் திருப்பூக் கூடையொடுங் கோதை யமைத்த குளிர்வாசத்
தண்டார் தன்னை யுறநோக்கிச் சாத்தக் கொடுபோம் வேலையினிற்
கண்டான் றாமத் துறுமயிரைக் கலங்கு மறையோ னுழ்வீரின்
றுண்டாய்த் தீதோர் பிழையென்ன வோதித் தாமத் துறுமயிரை

35 காட்டித் தாம மினைத்தினையுங் கடிசேர் கோதை மணமிகவு
மூட்டி யிறைக்கு வரவிட்ட வுபாய மறியா தர்ச்சகனும்
வாட்டிப் போட்டீர் மயிர்வைத்தீர் மாலை யாகா திறைக்கிதுநும்
வீட்டிற் கொடுபோய்த் திருமாலை கொணர்க வென்றே விரைந்தென்ன

வே று.

.36 வாங்கிய மாலை யெல்லாம் வாசவற கூடை யோடும்
பாங்கற வெறியக் கண்ட பட்டனும் பதைத்து விம்மி
யேங்கியப் பொழுதே நந்த வனத்தினி லெய்திப் பூக்கொய் தே
தோங்குசீர் மாலை கட்டி யுடன்கொணர்ந் தளித்து நின்றே.

.37 அர்ச்சகன் றனைப்பார்த் தின்றெம் மரும்பிழை பொறுத்தி யென்னக்
நச்சையுற் றாழ்வார் கூறக் கோதறு மறையோன் கூறும்
ச்சர வணையா னுணை நாள்பல பலவுங் கண்டே
ரிச்சலும் வாடி வாடி நிறங்குலேர் திருக்குந் தாமம்.

Dr U V S IYER LIBRARY, MADRAS-90.


138 மாசிலா நிலையார் கட்டு மாலைக்கோர் மறுவுண் டாக்கிப்
பேசினா லபசா ரத்தைப் பெறுதுமென் றென்னைப் பேணிக்
கூசினேன் மயிருங் கண்டேன் கூறினேன் கோதி லாதீ
ரீசனார் சூடுந் தார்க்கின் றிதுவா லெதனா லென்ன.

139 அந்தணன் கூற வாழ்வா ரறைவர்நா னென்றும் போல
வந்தநாண் மலர்க ளெல்லாம் வகைதெரிந் தெடுத்துக் கட்டித்
தந்துநான் போவ தல்லாற் றறியனே னிதற்கு மாசிங்
கெந்தவா றடைந்த தென்ன வறிந்திலே னிறைவ னாணை.

140 எனத்தொழு தாழ்வார் நிற்ப விலையறு கலைகள் வல்லான்
மனத்தினில் வருந்த வேண்டா மினிநன் மாலை பேணித்
தினந்தினங் கொணர்க வென்னச் செப்பியுங் கொணர்ந்து வாசப்
புனத்துழாய்த் திருத்தா ரெல்லாம் புவனமுண் டவற்குச் சாத்தி.

141 அச்சுத னினைவு காணா தர்ச்சக ரகத்திற் போனார்
பச்சைமா முகிலின் செய்ய பதம்பணிந் தாழ்வார் பாடி
யிச்செய லெதனால் வந்த தெனத்திரு வுளத்தி லெண்ணி
மச்சணி மாட மோங்கு மாளிகை யதனுண் மன்னி.

142 வண்டமர் தாமஞ் சேர்த்து வைத்துநா மகன்ற காலை
யுண்டெனி லபாயங் காண்போ நாளையென் றுளத்தி லெண்ணி
யண்டமுண் டுமிழ்ந்தார் தொண்ட னன்றையிற் பொழுதைப் போக்கிப்
பண்டுபோ லெழுந்து சென்று பனிமலர்க் காவி னுள்ளே.

வேறு.

143 வண்டூது முனமெய்தி மதுநிறைந்து கிண்கிணிவாய்க்
கொண்டோங்கு மலரெடுத்துக் கூடைநிறை வுறப்பெய்து
தண்டோடு மிருகூடை யொருதோளிற் றான்காவிப்
பண்டோங்குந் திருமாலைப் பணிப்புற்று மிடத்தெய்தி.

144 நாராய்ந்து கொண்டெடுத்து நறுமலரின் வகைதெரிந்து
சீராய்ந்த நறுங்கண்ணி சிறப்போடு முறச்சேர்த்தங்
கேராருங் கூடையினி லெடுத்தமைத்தெப் போதும்போ
னேராக வொருதலத்தில் வைத்தொளித்து நின்றனரால்.

145 அப்போதி லருட்கோதை யறியாள்போ லையரிலை
யிப்போது மெனச்சென்றாங் கிருந்ததிருத் தாரனைத்து
முப்போது மிறைக்கிடமா முகுந்தனார் முதல்காண
வெப்போதும் போற்றாம மிருங்குழன்மேற் சூடினாள்.

146 கண்டுநின்ற பெரியாழ்வார் கடிதினெய்திக் கோபித்துக்
கொண்டுசெல்ல வருட்கோதை குழற்சேர்த்த திருத்தாரை
பண்டிருந்த கூடையினிற் பயத்தோடும் பனிமலர்க்கண்
விண்டருவி மிகப்பாய வைத்திரங்கி விம்மினாள்.

வேறு.

147 சென்று கோபந் திருமுடிமேற் செறியச் செறிந்த வாழ்வாரு
மன்று பதறி யழுதிரங்கு மகளார் தம்மை யணைத்தம்மே
யொன்று மறியாய் போலுநீ யுலகத் தெவர்க ளிதுசெய்வா
ரின்று நீசெய் திட்டதெனத் திருமா லேற்ற மெலாமெடுத்து.

148 கூறித் தங்க ளௗிதரவுங் குலவு மறையி லெடுத்திசைத்துங்
காறி யிருத்தி யினியிவணுஞ் செய்யே லஞ்ச லெனத்தேற்றி
வேறே தாமம் பலசமைத்து விரைந்து கொடுபோ யிறைக்களித்திட்
டேறுங் கருணை மனத்தினரா யுலக முண்டார் திருத்தொண்டர்.

149 ஈண்டார் வேதக் கோன்சென்று விளங்கு மகம்புக் கின்றென்னை
யாண்டா டன்னை யருகிருத்தி யறத்தின் றிறங்கள் பலகூற
மாண்டா னிரவி குடதிசையின் மாணி யாகி மண்ணிரந்து
நீண்டான் கங்கு லிடைச்சென்று நிகரி லாத பெரியாழ்வார்.

வேறு.

150 தம்மிடத்திற் சொற்பனத்திற் றங்கியிறை சாற்றியிடு
மெம்மிடத்திற் பாங்கா யினிதமரும் பூமடந்தை
யும்மிடத்திற் புத்திரியா யுற்பவித்தா ளன்போடு
நம்மிடத்திற் பூமாலை பாமாலை நன்னெறியால்.

151 சூடித் தரவழகார் சொற்றெரிந்துள் ளன்புருகிப
பாடித் தரப்பிறந்தாள் பட்டர்பிரா னென்னலநீ
வாடிற்று முன்னே மயிர்கிடந்த தின்றென்று
நாடிக் களைந்ததா ரெங்கேயத் தார்நாளை.

152 நன்னலத்தாற் கொண்டுவந்து தந்தா லணிவோநா
னென்னலநீ தந்த நெடுந்தாமங் கோதைமண
முன்னப் பெருதமையான் மற்ற தணிந்திலநா
மென்னவுரைத் தேகிப் புதுவையுள்ளோ ரெல்லோர்க்கும்.

153 இப்படியே யர்ச்சகர்க்கு மீச னருள்புரிந்து
செப்பரிய கோயில் செறிந்தாங்கே கண்வளர
வப்புதுவை யுள்ளவரு மாழ்வாரு மர்ச்சகரு
மொப்பரியான் சன்னிதியி லுற்ரு ருகிப்பகன்ற

வேறு.

154 அத்திறத் தமைந்து சென்று ரர்ச்சக ராகி மாயன்
றத்தமக் கிருளிற் சென்று சாற்றிய பரிசை யெல்லா
முத்தம குணத்தான் மிக்காங் கோங்குசீர்ப் பெரியாழ் வாராட
பத்தரைக் குறித்துக் கோதை மகளென்று பகரே லென்ன.

---

[155 முதல் 165 வரையிலுள்ள செய்யுட்க ளிறந்துவிட்டனபோலும். எமக்குக் கிடைத்த நான்கு பிரதிகளில் ஒன்றிலாவது இவை காணப்படவில்லை. 165-வது செய்யுளில், 'மலர்ப் பூங்கோதை - முன்போல நம்மகளென் றெண்ணாதே முப்பெழுதும்' என்ற மூன்றாவது அடியின் ஒருபகுதியும் நான்காவது அடியும் காணப்படுகின்றன.]

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

166 ஆதரவாற் போற்றி யரங்க நகர்க்கிடந்த
மாதவனார் தேவியென்ன மாமனத்து ளூற்றெண்ணி
வேதக்கோ னன்போடும் வாழ்ந்தானம் மெல்லியலு
மாதக்கோர் போற்ற வளர்ந்தருளு மந்நாளில்.

## வேறு.

167 சீரமர் பெரியாழ் வார்தந் திருமக ளாத லாலும்
பார்மக ளாத லாலும் பவளவாய்க் கருங்கட் டோகை
யேரியற் கோதை யாக்கை யிறைப்போதைக் கிறைப்போ தாங்கே
கூரிய பரம பக்திக் கொழுந்தொடு மெழுந்து தோன்ற.

## வேறு.

168 நாரா யணனை யனுபவிக்கும் பருவம் வந்து நண்ணிடவக்
காரார் முகிலிற் றிருமேனி கண்கால் செவ்வாய் கரங்களிவை
யோரார் கமலம் போலுமெழி லீச னிடத்தி லெழுங்காதல்
வாரா நிற்ப மானிடவற் கெனிற்றான் வாழா மதிதோன்ற.

169 சேலைத் தேடிக் காணாதே குழையைச் சேருஞ் சினவிழியாள்
பாலைத் தேடிக் காணாதே பாகைக் காதும் பணிமொழியாள்
கோலைத் தேடிக் காணாதே குழைந்து வளைந்த கொழுங்கொ
மாலைத் தேடிக் காணாதே வாடிக் கோடு மனத்தினளாய்.

170 மண்ணிற் புத்தூர் நகருறையு மாலைக் கூடி வளர்துமென
வெண்ணி லர்ச்சா வவதார மதனு லிசையா னிவனென்ன
பெண்ணிற் சிறந்த வருட்கோதை பெருக வருந்தித் துன்பு
துண்ணெக் குருகி யவ்வூரி லுறையு நெறிசே ருத்தமரில்.

171 அந்த ணாளர் மங்கையரி லறிவிற் சிறந்தோர் தமைக்கூவி
முந்தை நாள்க டமிலிந்த முளரிக் கண்ண னொடுங்கூடி
யிந்த வுலகின் மடவார்க ளிருந்த துண்டே லியம்புமெனச்
சிந்தை யார நினைந்தவர்க டிருமா லவதா ரந்தன்னில்.

172 சீரார் நந்த கோன்மகனுந் திருவாய்ப் பாடி மடந்தையரு
நேரார் பருவத் தொன்றாகி நின்று கூடி யளவளவி
யேரார் யமுனைப் போற்றி லிறங்கிக் குளித்து விளையாட
வாரார் முலையார் துகிலெல்லா மாயன் வாரிக் குருந்தேறி..

173 அன்பிற் கலந்து விளையாடி யாசில் காதன் மிகப்பெருகித்
துன்புக் கிடமா மெனவெண்ணிச் சுருதி நாத னகன்றிடவே
பொன்புக் கிலங்குந் தடம்பொழிலிற் புகுந்து மறையப் புலம்பிமிகப்
பின்பங் கவனைக் காணாதே கலங்கி மிகவும் பேதித்தார்.

## வேறு.

174 எல்லையில் காதலோடங் கிருந்தன மடவா ரெல்லாம்
புல்லிய கண்ண னெங்கே போயின னென்று நாடி
யெல்லியும் பகலாய்த் தேடி யிளைத்தனர் மீண்டு முன்னஞ்
சொல்லிய பொழிலிற் கூடி யவன்முனந் துணிந்து செய்த.

175 படியைநாஞ் செய்யிற் றுன்பம் பாதியு மகலு மென்ன
வடிவுடை யொருத்தி தன்னைக் காளியாய் வகுத்து மற்றோர்
துடியிடை தன்னைக் கண்ண னாக்கியத் தொழில்கண் முற்றும்
விடிவத னளவுஞ் செய்து விடிந்தபி னவனைக் கண்டார்.

176 ஆங்கவர் தம்மிற் கூடி யானிரை மேய்த்துக் குன்றந்
தாங்கிய தாதி யாகக் கண்ணனத் தையலார்பாற்
பாங்குடன் களித்து வாழ்ந்த பரிசெலாம் பகர்ந்தார் கோதை
யேங்கினு ளன்று கூடப் பெற்றிலேன் யானு மென்ன.

177 தேனமர் குழற்பூங் கோதை தேவகி தனைய னோடே
நானுமோ ராய்ப்பெ ணாகி நலமலி பவிக்கு நோன்மை
யானவக் காலத் தப்பா னேற்றிலே னதனு லன்றே
போனதக் கண்ண னல்க மடந்தையர் பொருந்து மின்பம்.

178 நமையொரு பொருட்டா யின்று நானிலத் துறுவா னேகொ
லுமையொரு பாகன் காணு வோதநீர் வண்ண னம்மா
னமைவுற விருந்தும் கண்ணுந் தாகாச மீன்றின் பார்போற்
சமைவுறக் கழிந்த காலந் தன்னையிச் சிந்த னன்னில்

179 நந்தகோன் புதல்வன் முன்ன நற்றிரட் பசுவின் பின்போ
வந்தகாற் சுவடுங் கல்லின் மாரிக்கன் றெடுத்த குன்று
மந்தமில் குணத்தின் மிக்க வாய்ச்சிய ரோடுங் கூடிச்
சிந்தனை களிப்ப வாடுஞ் சீரிய யமுனை நீரும்.

180 உண்டெனி லின்றே யேகி யோரிடத் திராதே சென்று
கண்டுநங் கண்ணு னேக்கிக் காதனோய் தீர்வ மென்ன
வண்டமர் குழற்பூங் கோதை மனத்தினி னினைந்தாண் மான்மேற்
கொண்டபே ராசை வெள்ளக் கொழுஞ்சுழி யதனுட் பட்டே.

## வேறு.

181 கையுங் காலும் வழங்காதே கன்னி போக றவிர்ந்தந்தோ
செய்யும் வகையென் சீதைக்குத் தேற்றங் கொடுத்தல் சிலையுவதி
னையும் பின்னைப் பிராட்டிக்கு மவதி யேறு தழுவுதனு
னுய்யும் வகைக்கோ ரிலக்குளதோ வூழி சென்று மெனவோய்ந்தாள்.

## வேறு.

182 அத்திறங் கண்டு முன்னே யாங்கவ டனக்குக் கண்ணன்
மெய்த்திறங் கூறி வைகும் வேதியர் குலத்தின் மாத
ரித்திறம் வருந்தி யன்னே யெம்பிரா னணைய முன்னாட்
சித்திர வுருவி லாயர் மகளிர்செய் ததுவுங் கேளாய்.

183 என்றன ரெழுந்து கோதை யியம்பிடு மென்ன நின்றா
மன்றல்சேர் குழலாய் கேட்டி மாசிலாய்ப் பாடி தன்னி
லொன்றிய பஞ்ச லக்கங் குடியதி லுவந்து வாழு
மன்றதிற் கண்ணற் கொத்த பருவமா யளவி லாத.

184 மங்கையர் மாய னோடே மாசறக் கலந்து வாழ
வங்கது கண்ட வண்ட ரமலனும் மரபுக் கெல்லாய்
பங்கமே வருத்து மென்னப் பைந்தொடி யார்க ட
டங்களிற் கூடி யெண்ணித் தத்துவன் காணு வண்ண

185 மலமறு குணத்தி னாளே மங்கையர் வருத்த மெய்த
நிலவறை பலவுஞ் செய்தாங் கிருத்தினர் நோரிக் கஞ்
சிலபகல் கடக்க வந்தச் சேயிழை யார்க ளெல்லா
முலகமுண் டவனைக் கூடு முபாயமே தென்ன வெண்ணி.

186 ஒன்றிலு மவனைக் கூடி யுறுநெறிக் குபாயங் காணா
மன்றலங் குழலார் தம்மி லொருத்திமா மாய னம்பா
னின்றுயர் கருணை நல்கி னீணிலத் துய்வ மென்றா
ளன்றதை யுரைத்தி யென்ன வனைவரு மொழியச் சொல்வாள்.

187 செய்யமா மலர்க்கண் மாயன் றிருவருட் டிறத்தி னாலே
வையகத் துயிர்க ளெல்லா மழையற வாடு மாகி
லையன்மார் நம்மைக் கூவி வருணனோன் பனுட்டிப் பீரேற்
பெய்யுமா மழைக ணீங்கள் பிடிமினோன் பென்பா ராகில்.

188 கண்ணனை யந்த நோன்பின் கதையுணர்த் தென்பா ராகி
லுண்ணினை விருப்ப வும்மா லரிதென வுரைக்கு மாகிற்
றிண்ணமா யவர்கண் மாயன் றிருக்கையைப் பிடிப்பா ராகி
லெண்ணமற் றவனு மங்கே யிசைந்தது செய்யு மாகில்.

வாசமார் குழலி னாரே வாழுது மிவைய லாதே
பேசமோ ருபாய மில்லைப் பெண்களா யிருந்தோ மெல்லா
மீசனை வேண்டிக் கொள்வோ மிவணமாம் வண்ண மென்றா
மாசறு மனத்தி னார்கண் மற்றதற் கொருப்பட் டாங்கே.

## வேறு.

தங்க டங்கண் மனத்தினிற் கண்ணனைத் தாழ்வு தீர நினைந்திவை வேண்டினா
ரங்க நொந்து வருந்தி மடந்தைய ராவி சோர்வறிந்தருண் மாயனு
மங்கை மார்மிக நல்லதை யெண்ணினா ரென்ன வெண்ணி மகிழ்ந்து மனத்துட
யெங்கு மாமழை யின்றி வருத்தினா னீச னுயர்க ளின்ன லடைந்தனர்.

191 மண்ணின் மாமழை பெய்யு முபாயமென் மறைவ லாளர்கள் வாருமி தோதுமி
னெண்ணி யென்றன ராயர்க ளந்தண ரில்லை மாமழை யேயுறு கோளினாற்
பெண்ணின் மாசறு கன்னியர் தங்களைப் பெய்யு மாமழை நோன்பினைப் பீடுறப்
பண்ண வேசொலு மாரியுண் டென்றனர் பார்ப்பின் மிக்கவ ராயரப் பாவைமார்.

192 தம்மை மண்ணறை விட்டத் தலத்தினிற் றக்க நீதியிற் கூவிநன் மங்கைமீ [யின்
ரும்மை வேண்டின மாரியை நோக்கிநீ ரோங்கு நோன்பொன் றுறுதியிற் பண்ணி
றெம்மை யுய்யும் படிசெயு நோன்பினுக் கியற்றி வேண்டுவ தீந்து கதைசொலுஞ்
செம்மை வல்லவ னந்தகோன் புத்திர னென்று செப்பி யவனையுந் தேடியே.

193 மாட்டின் பின்றிரி கின்றமா மாயனை வருக வென்றோர் மனையினி லன்பொடுங்
கூட்டிக்கொண்டுபோய்வைத்துபின்கொண்டலாற்கோதில்பூமிகுறையுற்றுவாடின
நாட்டின் மற்றது பெய்யவோர் நோன்பதை நாடி மங்கையர் பண்ணுவர் நீகதை
காட்டி வேண்டுவ தீகுறி யென்றனர் காலி யாயர்கள் கண்ண னுரைத்திடும்.

194 கொண்ட னோன்புக் குறுங்கதை வல்லவர் குவல யத்தின் மிகவுளர் கூறுவர்
பண்டு மங்கைய ரோடெனைத் தூறுகள் பாணும் வீணும் பறையும் படியுளார்
கண்டி ருப்பவிக் நாரிகை யார்க்குநான் கதையு ணர்த்திற் கழறுத றிண்ணமா
மண்டபேசிய காரிய மீங்கெனக் கல்ல னல்கு மடாதென் றெழுந்தனன்.

195 சென்று மாயவன் கையைப் பிடித்துநீ செய்ய வேண்டு மிவையென் றிரந்தன
ரன்ற தற்பினக் கண்ணனு மொப்பின னுயர் மற்றவ் வரிவையர் தங்களை
யின்று நீரிவன் றன்னொடு மேகிநோன் பியற்றும் வேண்டுவ தீவனிக் கண்ணனோ
டொன்றி நோன்புக் கொருப்படு மென்றபின் னேங்கு தம்பதி யார்றன ராயர்கள்.

வேறு.

196 முனைக்கொடுங் கோலி னுய ரகன்றபின் முதலொன் றாகி
யனைத்தினு நின்ற மாய னடிபணிந் தாயர் மாதர்
நினைத்தவை முடித்த கண்ணு நீயினி யெம்மை விட்டோர்
கினைக்கணைப் பொழுது நீங்கே லென்றிவை செப்புங் காலே.

197 நந்தகோன் குமர னந்த நாரியர் தம்மை நோக்கி
முந்தைநா ளும்மைச் சீறி முடித்திட நினைத்த வாயர்
தந்தனர் வலிய மாரித் தவத்தொழி றன்னைப் போல
விந்தமா நிலத்தில் யார்கொ லிவ்வண முதவற் பாலார்.

98 என்றுரைத் தவர்க ளோடு மியமுனைக் கரையி லெய்தி
மன்றலம் பொழிலிற் றென்றல் வரும்பெரும் பளிக்குட்
யொன்றிய புளினக் குன்றி லோவிய மனையா ரோடுஞ்
சென்றன னென்னை யாண்ட தேவகி பெற்ற சிங்கம்.

99 அருக்கனுங் குடபால் வெற்பி லமர்ந்துதன் கிரண மெல்லாஞ்
சுருக்கினன் செக்கர் வானந் தோன்றின விசும்பினு மாரன்
செருக்கிளர் சிலையு மேந்தித் தென்றலந் தேரிற் றோன்ற

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

200 ஆங்கவர் மதன னாலே யஞ்சிய பரிசைக் கண்ட
வோங்குசீர் நந்த கோபன் றிருமக னெருத்திக் கோடோ
பாங்குறு முருவாய்த் தானே பலபல வாய்ந்தா னிற்பப்
பூங்குழ லாருந் தானும் புணர்ச்சியி லொருமை யாக.

201 எல்லையில் பேரா னந்தக் கடற்குடைந் தினிதி னாடிப்
புல்லிய மாத ராளைப் புணர்ச்சிபோ யுணர்ந்த தற்பி
னல்லியங் கண்ணா னோக்கி யரிவைமீர் நமக்கு நீதோ
ரெல்லியின் றிருந்த வாறே யெனவவர்க் கிதங்கள் கூறி.

202 கங்குலி னிணங் கூடி யிருந்தமை யொருவர் காணி
லெங்குமாம் பேச்சுக் கேட்டோர் யாவரு மிகழ்வர் நீர்போ
யுங்கள்பே ரகத்துண் மன்னி யுறிப்ப துன் முன்னை நாளை
யெங்கண்மா ளிகையில் வம்பி னெனவுரைத் திறைவன் போனான்

203 மாயவன் போன தற்பின் மற்றவன் றன்னை நீங்கிப்
போயமர் வருத்தக் கூர்வாள் புகுந்துளந் துயிலை யிர
வாயர்கண் மடவார் தத்த மகங்களின் முகங்கள் மாறிச்
சேயிதழ்க் கமல மன்ன திருவடி வருந்தச் சென்றே.

204 மெல்லணைப் படுக்கை மேவி வெதும்பினர் சிலவ ரீதோ
ரல்லலிற் பட்டேற் கென்ன வினையெனச் சிலவர் மண்ணி
லெல்லியிற் படுத்துந் துஞ்சார் சிலரிருந் திரங்கி வாடிப்
புல்லிய கங்கு லன்று புலருமுன் னெழுந்து மாதர்.

## வேறு.

205 முற்பட்டா ரெழுந்திருந்து வைகறையின் முறைகூறிப்
பிற்பட்டார் தமையெழுப்பிப் பெருந்திரளா டேகியவர்
கற்பட்ட திரடோளா னந்தகோன் கடைக்காவற்
செற்பட்டான் றனையெழுப்பிச் சுருதிமுதல் வனையெழுப்பி.

206 தேன்புக்க துழாயலங்கற் றிருமாலே மார்கழியின்
நோன்புக்கு வேண்டுவன தந்துநோற் பித்திடுவான்
வான்புக்க புகழினாய் வருதியென வறையவிறை
தான்புக்கங் கவையீந்து தவக்குறையு முடித்துவந்தான்.

207 என்றனர் நன்றாய்த் தென்ன விலங்குசீ ரலங்கற் கோதை
யன்றவர் செயல்போ னம்மா லானவா செய்து நாமு
நின்றவெந் துயர மாற்றி நிமலனை யடைவோ மென்ன
வொன்றிய மகிழ்ச்சி யோடு மோங்குசீர் ஞானத் தாலே.

## வேறு.

208 சீரார் புத்தூர் தனைச்சிறந்த திருவாய்ப் பாடி யாக்கியதி
லேரார் கின்ற வடபெருங் கோயி றன்னை யெம்பெருமான்
கூரார் வேற்கை நந்தகோன் றிருமா ளிகையாய்க் கொண்
டாரா யணனை நப்பின்னை கேள்வ னாக்கி நாடொறும்.

## வேறு.

209 அத்திரு நகரில் வைகு மரிவையர் தம்மை யாயர்
சித்திர மகளி ராக்கித் தனையுமங் கவரிற் சேர்ந்த
மெய்த்திறத் தாய்ப்பெ ணாக விளங்குசீர் மனத்துக் கொண்ட
ளுத்தம குணத்தாள் கொண்ட தியானுமென் னுரைக்கே ன

## வேறு.

அப்படியே கோதைமன மாய்ப்பாடி தனைமருவிச்
செப்பரிய நறுங்கந்தத் திருமேனி கிடைமுடைய
மொப்பரிய விடையுடைய மிடைநடைய மொருகாலுந்
ப்பரிய விடைமொழிய மிடைமுடியுந் தானமா.

## வேறு.

11 ஆய்மக ளாய பின்பெ னச்சுத னணையும் வண்ண
மேயுநன் மடலொன் றேந்தி யிருப்பதோ கருமமன்றேற்
றூயநற் றவநாஞ் செய்யத் துணிவதோ வெனச்சிந் தித்து
மாயவன் சுனையி லாதான் மடலினுற் பலியா தென்ன.

212 அவத்தொழி லகற்றித் தன்னை யடைந்தவ ருயிர்க ளெல்லாம்
பவக்கடல் கடக்கும் வண்ணம் பார்மிசைப் பிறந்து தோன்றுந்
துவர்த்தசெவ் வாயின் மிக்க தோகையிற் சிறந்த கோதை
தவத்தினி லொருப்பட் டாளன் றதனையுஞ் சாற்ற லுற்றும்.

213 மார்கழி நீரு மாயர் மடந்தையர் நோற்ற நோன்புஞ்
சீர்பெறு மேது வாகக் கண்ணனை யெழுப்பிச் சென்றிங்
கேர்பெறு முனக்குச் சேஷ மாயவெ னுவி யீசா
பார்மிசை யொருவற் காகிப் பழுதிலே கழியா வண்ணம்.

214 அண்டனே சொரூப மாய வனுகூலம் பிறந்தெ னன்மாத்
தொண்டினிற் பதிய நான்செய் துகளறு தொழில்கள் செப்பி
விண்டலத் திலங்கு நீதி மேலவீ டளவு மேலோய்
தண்டமற் றடிமை நாளுந் தலைச்செயும் படிகள் செய்து.

215 காக்குதி யென்னை யென்னுங் கருத்தினுற் றனையோ மாய்ப்பெண்
ணைக்கியத் தோழி மார்க ளுடன்கலந் ததன்மேற் பூண்டாள்
வாக்கொடு மனமு மொன்றாய் மாயனை வணங்கி வாழும்
பாக்கியப் பட்டன் பெற்ற பனிமலர்ப் பைம்பொற் கோதை.

216 மார்கழித் திங்க ளென்ன வருத்தருள் புரிந்த பாட்டிற்
சீருறு நோன்புக் கான திங்களுந் தினமுந் தந்து
நேர்பெறுங் காலந் தன்னைக் கொண்டாடி நேயத் தாமல
யேர்பெற் வருளிச் செய்தா ளிடைக்குடி யிடைச்சி யானாள்.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

217 வையத்து வாழ்வீ ரென்னு மாசறு பனுவ றன்னை
யையுற வற்றோர் செய்யுங் கிருத்தியா கிருத்தி யங்க
ளுய்வுற விவேகம் பண்ணி யுவந்தருள் புரிந்து செய்தாள்
மையமர் கருங்கட் செவ்வாய் மதிமுக மல்லி நாடி.

## வேறு.

218 தூங்கி யுலக மெனக்கோலி யுரைத்த பாட்டி னேன்புக்குப்
பாங்கி னறு [illegible] யருமறிகள் பண்ணி னார்கள் பெரும்பலனை
யாங்கே [illegible] றவருள்செய்தா ளாழ்வார் மகளா யாய்மகளா
யேங்கு [illegible]டைச்சி மடவன்ன நடைச்சி யென்னு மெழிற்கோதை.

219 ஆசி லாத மழைக்கண்ணன் வருண னைப்பி யடற்றிகிரி
யீசற் குவந்த கரிங்கரிய மெனையு [illegible]யமந் திடலென்ன
நேசத் துடனீ பில்லாரே பெய்க வென்ன [illegible]யளித்தாள்
வாசக் கமலந் தடம்புடைசூழ் மல்லி நாட்டில் வளர்கோதை.

220 ஆற்றன் மிக்க மாயனென வறைந்த பாட்டி லொருதோழி
யாற்று முலகி லெல்லாரு மறியப் பெருக்கித் தொடங்கினாள்
சாற்று நோன்பு நிலைக்கட்டித் தருதற் கின்று நிடமுண்மே
லேற்று முனஞ்செய் வினைகெடுத்தா னென்றே நுணிந்த விளைவென்றே

## வேறு.

221 அறையவே தாந்தம் போன வாயிழை யொருத்தி மன்னே
குறைவற வான்பா னேனும் குடிப்பவ ரிடத்திற் பித்து
முறையுமோ வதுபோ னேமு மடித்தன டொழிலை யும்ப
ரிறைவனிற் செய்ய முன்[illegible]னமெலா மிரியு மென்றாள்.

222 ஆதலா லிதற்கு நாமு மன்[illegible]மென்ன வுன்னி
காதலா னேற்கு நோன்பைக் கைவிடக் கடவோ மன்றேன்
றோதிக்கீ ழுஞ்சு பாட்டாற் பிராப்பியத் தோடு மோங்கும்
பூதநா யகனைப் புல்லி யனுபவித் தவனிற் பூணும்.

223 உரைக்குமே காந்த மான வுபகர ணங்கள் கொண்டு
நிரைத்தமேற் பத்துப் பாட்டா னினைத்திரண் டேய்த்த கோவை
யிரைப்பற வனுப் விக்கு மவர்களை யெழுப்பிப் பின்னும்
விரைக்கொள்பூந் துழாயான் போக மிகப்பெரி தாத லாலும்.

224 எலையறப் பெருகு மாற்றி விழிபவர் துணைக டேடி
நிலைபெறத் திரிதல் போலு மொருவனை யொருவர் நின்றே
யுலைவற வெழுப்பு கின்று மன்றியு மூலக முண்ட
தலைவனை வணங்க லம்மா றமர்களை முன்னிட் டன்றி.

225 தொண்டர்கள் வணங்கார் மண்ணி லன்றியுந் துகளில் வீட்[illegible]
பண்டுள நித்தர் முத்தர் பரம்பர னனுப வத்தைக்
கண்டனு பவித்து வீழ்ந்தக் கடலிடை நீந்த லல்லா[illegible]
லுண்டிதற் களவென் றுன்னி யுணர்ந்திடப் படாமை

226 மண்மிசை வைகு மாயர் மகளிர்க ளாத லாலு
மெண்ணிமுன் போக வாற்றி லிறங்குத லின்மை யாலு
நண்ணிநாம் பலருங் கூடி ஞானநா யகனைச் சேரு
முண்ணினை வோடுங் கூடி யொருவரை யொருவர் கூவி.

227 நின்றுற வெழுப்பு கின்ற நெறியினு லுரைத்தாள் கோதை
பன்றியும் புள்ளி வீச னனுபவ வரிசை காணு
மன்றல்சேர் குழலா ணென்பை மறந்துற வுறங்கு வாளைச்
சென்றுற வெழுப்பு கின்றாள் சேடியர் தங்க ளோடும்.

228 கீசென வுரைத்த பாட்டிற் கேசவ னனுப வத்தை
வாசற வறிந்து தன்னை யயர்ந்துட னுறங்கு வாளைப்
பேசுபல் குறியுஞ் சொல்லி யெழுப்பினாள் பிறைசேர் மாடத்
தேசமர் மதிள்சூழ்ந் தோங்குஞ் சீவிலி புத்தூ ரன்னம்.

229 எண்ணிய கீழ்வா னத்தி லேந்திழை யார்க ளெல்லா
நண்ணிவை கறையி லென்னை நாளைவந் தெழுப்ப வேண்டு
புண்ணியக் கொழுந்தே யென்னப் புனிதனை வேண்டித் து
முண்ணினை வுடையா டன்னை யெழுப்பினு ளுலகை யீன்று

230 மன்னுதூ மணியின் மாயன் வந்தபோ வருகின் றனென்
றுன்னுத லுடையாள் கண்ண னுண்மகிழ் கலவி மிக்கா
டன்னுடை நலத்தி னலே யனுதரித் தமளி சார்ந்த
மின்னிடை யொருத்தி தன்னை யெழுப்பினாள் விரக மிக்கா

வேறு.

231 தொடுத்த நோற்றுச் சுவர்க்[illegible]கிற் சுருதி முதல்வ னனுபவ
மடுத்த வுள்ளம் பரதவித்[illegible] வருந்தி யிரங்கி வாசப[illegible]
படுத்த வணையிற் றுயிலாத பாவை மார்கள் படும்பாட்டி
லெடுத்தன் றுலகை யுண்டுமிழ்ந்த விறைவன் வருந்தும் படி

232 கல்வி நலத்தின் மாலுக்கு மாலைக் கொடுத்துக் கண்டுயிலு
[illegible]லவ வாயா ளொருகொடியை யெழுப்பு கின்றா ளொண்டிக
பலவுந் தெங்கும் வாழைகளுங் கமுகு நெருங்கும் பைம்பொ
குலவும் புத்தூ ருறைவாற்குக் கோதை சூடிக் கொடுத்தமயி

வேறு.

233 உற்றசீர் மருவுங் கற்றி லொளிவளை யார்க ளோடுங்
குற்றமொன் றில்லா வாயர் குலக்கொழுந் தென்னு மாங்கே
பொற்றொடி முற்ற மெய்தி யெழுப்பினாள் புத்தூர் மன்னிக்
கற்றவ ரிதயப் போதிற் கலந்துவீற் றிருக்குங் கன்னி.

234 கனைத்திளி விராமன் றன்னை யகத்தினும் புறத்துங் கண்டு
தினைத்துணை யளவு நீங்காச் சுமித்திரை சிங்க மென்ன
வனைத்தையு முண்ட கண்ண ஞருயிர்த் தோழ னுகு
மனைப்பெரு வளத்தின் மிக்கான் றங்கையோர் மங்கை தன்

235 சென்றுற நின்று கூடுஞ் சேயிழை யார்க ளோடு
மன்றவள் வாசன் மன்னி யளவறு பனிநீர்த் துள்ளி
மன்றல்சேர் குழலிற் றோய வருத்தமுற் றழைத்தாள் செய்த
நன்றிகொன் றுழலு மென்னை நரகிடைப் புகாதாட் கொண்டா

வேறு.

236 புள்ளின் மானம் வன்கண்ணி னாண்டேற் றனியே பொருந்தெ
வுள்ளி மிகவு மனுகரித்துங் குறங்கு வாளை யுறக்கூவிப்
பள்ளி கொள்ளேல் பிள்ளைகள்போய்ப் பாவைக் களத்திற் பதிந்
கள்ளந் தவிர்ந்து கலந்திடென வுரைத்தாள் விரைத்தார்க் கனங்

237 உங்க டன்னி னோன்புக்கங் கொருப்பா டுற்ற வொளிவளைக்கை
மங்கை நல்லார் தமைநென்னற் றானே யெழுப்ப வாய்பேசி
யங்கச் செய்கை மறந்துறங்கு மாய்ச்சி வெள்க வுரைத்துச்சொல்லி
சங்கத் துடனே புகுந்தெழுப்பி நின்றா டாமக் கணங்கு

238 சீரா ரெல்லே யிளங்கிளியிற் றோழி மார்க ளுடன்கண்டு
போரா னந்தம் பெறவெண்ணி நினைந்து கிடந்த பிறைநுதலை
வாரார் முலையா ரெல்லாரும் வந்தார் வந்து காணென்று
னாரா யணனைத் தான்கூடுந் தாரா னுருக்கி னைவித்தாள்.

வேறு.

239 எண்ணரிய நாயகனி லெல்லாரு முடன்கூடி
நண்ணரிய நந்தகோன் றிருவாச றனைநண்ணி
விண்ணியல்பி லவ்வாசல் காப்பவனை மெய்ஞ்ஞானக்
கண்ணிபுனை செழுங்கோதை யெழுப்பவவை காப்பவனும்

240 சென்றவர்க டிறநோக்கித் திருக்கதவைத் திறந்திலங்கு
மன்றல்கமழ் குழன்மடவீர் வம்மினென வுள்புகுந்தங்
கன்றதனிற் கண்டுயிலு நந்தகோ னாதியரை
நின்றுறவன் றெழுப்பினா ளம்பரத்தி னெறிநின்றாள்

241 அப்படிநின் றாயிழையா ளாங்கவரைத் துயிலெழுப்ப
வொப்பரியார் பேருறக்க மொழியாத படிநோக்கிச்
செப்பரிய நப்பின்னைத் திருமகளை யெழுப்பிநமக்
கிப்பொழுதிங் கிவண்முன்னா யீடேற வேண்டுமென.

வேறு.

42 உரைக்கு முந்து மதகளிற்றி னவளை யெழுப்பி யொளிகிளர
நிரைத்த குத்து விளக்கென்னு நிகரில் பாட்டி லவள்விழித்து
விரைக்கொள் குழலார் தமையுள்ளே விடுப்ப நினைத்தாங் கெழுந்

## வேறு.

243 முன்னிலை யிவளா மந்த முகிணைகை யாருக் கெல்லா
மென்னவே யுவிகா ரத்தா ணிலங்குமோர் விகாரம் பண்ணி
யன்னவ ளெழாத வண்ண மணைத்திரு கரத்தால் வாசப்
பொன்னணி மார்பி னென்றுய்ப் பொருந்திடத் தழுவிக் கொள்ள.

ஆங்கவ ளெழாமை கண்ட வரிவைய ரதற்பின் முன்ன
மோங்கியே யுலகு முண்ட வொருவனை யெழுப்பிப் பின்னும்
பாங்கொடு வவனுந் தோன்றுப் படியுணர்ந் தென்செய் கோநா
மீங்கினி...... ..... கிண்டு மிறைவனை யெழுப்பும் வண்ணம்

245 பின்னையை யெழுப்பி யந்தப் பெண்ணமு தத்தை நோக்கி
முன்னையா ரணங்கள் போற்று ........................ ........
...........யே யனையாய் கூறு மிலக்கென வேத நாலு
மன்னையே யனையா யென்ன வாங்கவ ளாகி யாய.

246 நந்தகோன் புதல்வன் றேவி மார்களாய் நயந்தின் மிக்க
டந்தனை விரலோர் தம்மைப் பிரிந்துமுப் பத்து மூவர்ச்
சுந்தமார் பழுவ நன்னி லெழுப்பினு டனக்காட் செய்வோர்
சிந்தனை கோயி லாகத் திருந்தவீற் றிருக்கும் கோதை.

## வேறு.

247 எற்ற கலங்க டனிர்பின்னை யெழுந்து கதவு திறந்தவரிற்
றேற்ற மிகுந்த நயிச்சியத்தாற் சொல்லுந் தோகை மீரொணக்கி
கூற்ற மேதிங் குங்களிலே யொருத்தி யன்றே யாமுமவ
ளூற்றன் மிக்க குணம்பரவி யெழுப்ப வம்பி னென்வழைத்தே.

## வேறு.

248 ஆங்கவர்க ளுடன்கூடி யச்சுதனை யன்பினொடும்
பாங்குடனே நின்றெழுப்பும் படிபகர்ந்தாள் பகர்ந்ததற்பி
னோங்கியசீ ரங்கண்மா ஞாலத்தி லொளிவளையார்
தாங்கியுல குண்டுமிழ்ந்த தத்துவனை யுற்றிறைஞ்சி.

## வேறு.

249 ஆசை யரிய நயிச்சியத்தை முன்னிட் டுக்கொண் டனைத்துயிர்க
மீச வெம்மைக் கைப்பற்றி யினிநீ கொள்ள வேண்டுமெனத்
தேசு பெரிலியக் கட்டுரைத்தாள் சீரார் வில்லி புத்தூரி
னேச மிகுந்த பெரியாழ்வார் மகளாய்த் தோன்று நேரிழையாள்

250 மன்னு மாரி மலைமுழுஞ்சின் மாய னணைமேற் கிடந்தவரை
யென்ன கருமம் வந்தமையென் றியம்பக் கேட்ட விடைமகளி
ருன்னுஞ் சிறுமைப் பராமுகமாய்க் கேட்கு மதிலே துளதின்ப
மின்னு நேமி நெடுமாலே யெங்கட் கமையா விரிவோங்கும்.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

251 சீரார் சிங்கா தனந்தன்னிற் றிருவோ லக்க மாயிருந்து
வாரார் முலையார் பலர்கூடி வந்த கருமமென்னென்ன
வாராய்ந் தருள வேண்டுமென வறைந்தாள் புத்தூர் வேதியர்தங்
கோரா ராடிப் பூரத்துத் தோன்றிக் கொடுத்த வெழிற்கோதை.

வேறு.

252 அப்படியே விரும்பியவா றங்குரைத்த படிசெய்வான்
செப்பரிய திருப்பள்ளி யறைநின்றுந் திருமகள்போ
லொப்பரிய மண்டபத்தி லோங்குமரி யணைமேவ
லிப்படிமே னடந்ததனை யெடுத்துரைக்க லிங்கிழையார்.

வேறு.

253 அன்றிவ் வகை செய்யப்பாட்டி லாதிநாத னடந்திடப்பின்
சென்று திருமா னடந்ததனை யெல்லாங் கண்டு திருப்பல்லாண்
டென்று கூறிக் காப்பிட்ட பரிசை யன்பா லெடுத்திசைத்தா
ளொன்றி யுலகம் பதினான்கும் வணங்கப் புத்தூ ருறைகின்றாள்.

254 ஒருத்தி மகனா யம்மாய னோங்கு மரியா சனந்தன்னி
லருத்தி செய்தாங் கிருந்தருளி யாயர் மகளி ரின்றுங்கள்
கருத்தில் வேண்டும் பொருளேது கழறு மென்னக் கண்ணனொடு
வருத்த மின்றி நின்றந்த மடவார் நீல மணிவண்ணனை.

255 பண்டே நாங்கள் செய்தமைந்த பாவத் தொடர்கள் பற்பலவு
முண்டே யெனினு நீபோக்கி யருளி யெங்க ளுயிருய்ய
வண்டேர் துழாயாய் கைப்பற்ற வேண்டு மென்ன வுருத்துரைத்த
தொண்டே துணையாய்ப் பிறந்திருந்த வண்ட மனைத்துந் தொழுமின்

வேறு.

256 அத்திறத் தாயர் மகளிர்கண் மொழிய வச்சுத னதுசெய்தாங் கதற்பின்
மெய்த்திற மாலே மணிவண்ணன் றன்னின் மெல்லிய லார்களோ டிரைக்கு
மித்திறம் புகுந்து நீங்களுற் றின்ற நோன்புக்கின் றென்னிடை வேண்டு
சித்திர நெறியி லுபகர ணங்க டம்மையுஞ் செப்புமி னென்ன.

257 ஆயர்கண் மகளி ராயினர் மாலே யாங்கதற் காயின சங்க
மேயுநற் பறையு மிலங்குபல் லாண்டை யிசையுட னறையவல் லவருந்
தூயமா விளக்குஞ் சுடர்நெடுங் கொடியுந் துகளின்மேற் கட்டியுந் துந்
நேயமோ டெங்க ளோன்பினுக் கிரங்கி யருளுதி நீயென நிகழ்த்த.

258 இன்னவா றுரைத்த மடந்தையர் தங்கட் கெம்பிரா னியம்புவா னொப்பி
வன்னமென் னடையீர் சங்குக்கெம் பாஞ்ச சன்னியமு மாசறு பறைக்கு
முன்னமா மறையிற் கட்டிய பறையு முழங்குபல் லாண்டுக்கு முகுந்தன்
றன்னுடை மகனும் விளக்குக்கெம் பின்னைப் பிராட்டியுந் தயங்குசீர்க் கொ

தேசுடைக் கருடன் றனையுமேற் கட்டி தனக்கெம தரையினிற் சிறந்த
வாசறு பீதாம் பரத்தையுங் கொண்டி னென்றனன் மாயவ னவர்க
ளீசமற் றிவைகள் பலபல வேண்டு மென்றன ரிறைவனெம் போன்றார்
பேசுமே மூலகிற் பலருள ராகிற் பெறுதிர்நீ ரிப்படிப் பலவும்.

என்றிறை பகர மடந்தையர் மொழிவார் யாவையுந் திருவயிற் றமைத்தே
யன்றொரா லிலையி லடங்கிடு நினக்கின் றருளுத லருமையன் றதனாற்
குன்றெடுத் துயர்ந்தாய் தருதியென் றறைந்தாள் கொடிநெடு மாடமா ளிகை
றென்றல்வந் துலவுஞ் சீவிலி புத்தூர் நகருறை கின்றதே மொழியாள்.

அப்படி யிறைவ னருளிட நோற்றார் பெற்றபே றியின வெல்லாஞ்
செப்பருங் கூடா ரென்பதோர் பாட்டிற் றெரிதர மொழிந்ததற் பின்னே
யொப்பிலாக் கறவை தன்னிலே யிறைவ னொளிதிகழ் மாமுக நோக்கி
யிப்படி யுள்ளா றறியநோன் பென்றோ ரேதுவிட் டெய்தினோ மெங்கள்.

நினைவினை யன்று நின்னுடை யருளா னேமிவா னளந்துநின் செய்ய
கனைகழற் குவந்த கயிங்கரி யங்கள் செய்யுமா கருதிவந் தணைந்தோ
முனைவினை யென்ன நயிச்சிய விருப்ப முன்னிலே யாகவன் றுரைத்தாள்
வினையெலாந் திரண்டோர் வடிவெனத் திரியும் வேட்கையே னுக்கையுள்

## வேறு.

263 ஆங்கதற்பின் சிற்றஞ் சிறுகாலி லச்சுதனை
யோங்கியசீர்க் கயிங்கரியந் திருவுளத்துக் குவந்தபடி
பாங்குடனே யுரைத்தெம்மைப் பணிகொள்வா யெனப்பகர்ந்து
பூங்கோதை தொழுதெடுத்த விரதத்தின் குறைமுடித்தாள்.

264 சீராரும் வங்கக் கடலிற் றிருப்பாவை
யோரா ரிசைத்தமிழை யின்பமுறக் கற்றுரைப்பா
ரோரா யினும்வாழ்ந் தலர்கமலச் செல்வியொடு
நாரா யணன்றா ளடைவரென்றா ணன்னுதலாள்.

## வேறு.

265 இப்படியே பாவகத்தா லிடைமகளாய்த் திருப்பாவை
முப்பதையு முரைத்ததினு முகில்வணனெய் தாமையினாற்
செப்பரியாண் மிகக்கலங்கித் திருமொழிகள் பலபகர்ந்தா
ளப்பரிசு தனையடியே னறைந்தபடி யறைகின்றேன்.

266 கனங்குழையா டிருமொழியின் முதற்பாட்டிற் காலபர
முனம்பிரித்துக் கூட்டிடினு முன்னிலையே வேண்டுகையான்
மனந்தனிலே நினைத்தந்த மாசிலா மயிலனையா
ளனங்கனையங் காமனைய மடிதொழுதீ தறைகின்றாள்.

## வேறு.

267 உன்னை யும்பி தனைநோக்கி யுலகத் தவர்நோற் றுய்யுநெறி
மன்னு நோன்பை நோற்கின்றேன் வடவேங் கடத்தி லுறைப
கென்னை விதித்துச் சோலைமலை யுறைவா ரரங்கத் தினிதமர்வா
தன்னை யிலக்கா யெனைக்கணையா லெய்தி யென்று டவர்க்கா

## வேறு.

268 இந்த வாறு மன்மதற்கி லக்க ணைந்தி ரங்கிடுங்
கந்த மேவு கோதை யுள்க லங்கல் கண்ட கண்ணனும்
முந்தை நாளின் மூல மென்றி யானை மோக முற்றபோ
வந்த வாறு போல வந்து மங்கை முன்னரின் மன்னினான்.

அற்ற முள்ளு ணர்ந்து மாட னைத்து நின்ற மாயனை
யிற்றை நாளி ரங்க வந்தி டாமை யுன்னி யூடிடு
ஞற்ற தோழி மார்க ளோடு கூடி யுண்ம கிழ்ச்சியாற்
சிற்றி லுற்றி ழைத்தி ருந்து தேவி தைத்தன் மாறினாள்.

270 அண்ட முண்டு மிழ்ந்த மாய னுசில் கோதை யூடலைக்
கண்டு வண்ட லுண்ம ணற்க லந்தி ழைத்த சிற்றிலைத்
தண்டி வந்து தாள்க ளாலு தைப்ப மிக்க வையனுந்
தெண்டி ரைக்க டற்கி டந்த தேவ வெங்கள் சிற்றிலை.

எது வின்றி யின்ற ழிப்ப தேதி னாலி ருந்தவோ
மோது கைகண் மெய்க ளேவ வுற்றி ழைத்த சிற்றிலைப்
பூத நாத மேல ழித்தி டாதி ருத்தி யென்றுபூ
மாது கூற மாய னந்த வாச கம்பு ணர்ச்சியாய்.

72 ஏகி னானி ருங்க டற்கி டந்த மாய னெய்திய
மேக வண்ண னோடு கூடி மேவி டாத காதலோ
யாக மெங்கு மூளு காம வங்கி பொங்க மங்கையு
மோக மெய்தி மற்றை நாளொர் பொய்கை மேவி முன்புபோல்

273 சேடி மார்க ளோடு சென்று சீத வார்பு னற்படிந்
தாடி யந்த வங்கி வெப்ப கற்றும் வண்ண மெண்ணியே
மாடு நீள்கு ருந்து சூத மன்னு வாவி மன்னினோ
டோடு கூறை யிட்ட ணைந்த தோழி மார்க ளோடுமே.

274 பெரும்பு னற்ப டிந்து கோதை பெண்க ளோடு மாடிடக்
கருங்க டற்கி டந்த மால்க டப்பி னெய்தி யாங்கவர்
மருங்கி லுற்ற கூறை முற்றும் வாரி வாரு நீரெனக்
குருந்த ணைந்தி லங்கு தோள்கு லுங்க நக்கி ருந்தனன்.

நக்கிருந்த கண்ணன் மாமு கத்தை நாடி நங்கையும்
பக்க நின்ற பேர்கள் காணி லேது ஷைப்பர் பண்ணவா
தக்க தன்று கூறை யின்று தந்து போதி நீயென
வெட்க முற்றி ருந்து மாலி ரங்குமா விளம்பினுள்.

276 கோதை கூறை யீதி யென்று கோம ளம்பொ ருந்தவே
யோது பாடல் பத்து மன்பொ டோத வோத வண்ணனும்
போது மீது மிக்க தோர்பு ணர்ச்சி யென்று பூந்துகி
லீது கொண்மி னென்ற ளித்தி றங்கி யங்க ணேகினுன்.

277 மாய மாம யக்க ணேக மாத ரோடு கோதையுந்
தூய வாடை சென்றெ டுத்து டுத்து வந்து சுந்தரன்
போய திக்கை நாடி நின்று பூவை வண்ண னின்னுமெந்
தோயு மென்ன தாவி யுய்ய வெய்து மேகொ லென்னவும்.

## வேறு.

278 மாசறுநுண் மணற்பரப்பி யதைவட்டப் படவளைந்துத்
தேசுறுமென் காந்தளங்கைத் திருவிரலால் வலஞ்சுழித்துப்
பேசியவக் கூடலுளும் பெருஞ்சுழியாங் கொன்றமைத்திங்
கீசனிலும் வரும்வாரா னெனுமிரண்டி லொன்றதனை.

## வேறு.

அறிய வேண்டு மெனக்கருதி யலுங்கற் கோதை யன்றந்தக்
குறியை நோக்கி யிளையிளைகள் கூறி நின்றுள் கோலநறும்
வெறிகொ ளளபத் திருத்தாரான் விளைத்த விரக முதிர்ச்சியிசுக்
செறிய மனமும் வாசகமுஞ் செயலு மழிந்த திருவனையாள்.

## வேறு.

280 மாடு மேய்த்து வரிவளை யாய்ச்சிய
ரோடு கூடி யுலக றிறைஞ்சிட
நீடு மாலிருஞ் சோலையு ணின்றவன்
கூடு மாகினீ கூடிடி கூடலே.

281 பண்டு வானம் படியளந் தோங்கிய
தண்டு ழாய்முடித் தத்துவ னுத்தம
னண்டர் நாத னணியரங் கத்துறை
கொண்டல் கூடிடிற் கூடிடு கூடலே.

282 கன்று மேய்த்துக் கடுந்திறற் கஞ்சனை
யன்று மாய்த்தட லைவர்க டோதனச்
சென்று சேனையைச் செற்றவென் வேங்கடக்
குன்று ளான்வரிற் கூடிடு கூடலே.

### வேறு.

283 இப்படியே யிசைந்து பாட்டுமெழுற் கூடலுடன்
செப்பியுறை நைந்து திருமேனி யுண்மெலிந்து
வெப்பமுற்றுக் கூட லுறையாமை யால்வெதும்பி
யொப்பரிய கோதை குயிலோ டுரைவாடி.

### வேறு.

284 அனங்கற் கிணங்கும் விருந்தா யணைந்து பிரிந்தவர் தம்மை
மனங்களைத் தாவி யுருக்கி மாளா விழுற்றுங் குயிலே
யெனங்கம் பசலை பொருந்த விருகையிற் சங்கமுங் கொண்டு
புனைந்திகழ் காவிப்பின் போன பூவை வண்ணன் வரக்கூவாய்.

285 காரிருண் மையுங் கலங்கக் கண்ணங் கறுத்த குயிலே
யாரினி யுனையல் லாதென் னுருயிர் காப்பவ ரந்தோ
பாரினிற் சிற்றி லழித்துப் பணிப்பட் டெடுத்தளித் தேகிச்
சீரிய வேங்கட மன்னுந் தேவர் பிரான்வரக் கூவாய்.

286 நல்லியற் கீதக் குயிலே நாடோறு நாரியார் முன்னே
யல்லியந் தாமரைக் கண்ணை யருவினை யேனுயிர் கொண்ட
மல்லுயர் தோண்முகில் வண்ணன் மாலிருஞ் சோலையுண் மன்னி
வில்லிபுத் தூரு ளுறையும் வித்தகன் றன்வரக் கூவாய்.

287 கீதமினிய குயிலே கிளிமொழி யாயர்சேரி
மாதரொல் லாரு நகைப்ப வல்வினை யேன்மனங் கொண்டு
சீதக் கமல மலைய திருக்கண் வளர்பவர் போலே
போதுமரங்கத்தின் மன்னு முலகளந் தான்வரக் கூவாய்.

288 என்றெடுத் திப்படி பத்து நியம்பி யிரவும் பகலுங்
குன்றெடுத் தானிரை காத்த கோவல னென்றென்று கூறி
மன்றல் கமழுந் திருத்தார் மாலுக்குச் சூடிக் கொடுத்தா
ளொன்றி[illegible]யி லுருகு மெழுகினை யொத்தாள்.

### வேறு.

289 இ[illegible]ருந்துதல் கண்டுளி ரங்கிய ரங்கநகர்க்
கெப்பொழு தும்மருண் மாரிபெய் மாமுகி லெய்தியி லங்கிழையா
டப்பறு மாமண மேவுமுன் வாடுவ டூனென வப்பொழுதே
சொப்பன மன்னிம ணத்தொழின் முற்றும ளித்தனர் தோமறவே

290 ஒண்டொடி கண்டமை முற்றும னத்துளு வந்துக ளிப்பினொடே
வண்டமர் கோதைய ராயின தோழியர் வம்மினெ னக்கனவிற்
கொண்டணி றத்தவர் வந்தருள் செய்தமை கூறினள் சேறுபடாப்
புண்டரி கத்திரு மாதனை யாள்புது வாபுரி மாமயிலே.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

291 வாரண மாயிரம் வந்துஞ் சூழ்ந்திட மாமுனி வோர்கடொழு
நாரண நம்பிந மக்கருள் செய்யந டந்தமை கண்டுலகோர்
பூரண பொற்குட மாரண மந்திர மோடுபு ரிந்தழகார்
தோரண மாநகர் வீதிக டோறுநி றைத்தனர் தோகையனர்.

292 சீரிய மாமண நாளையெ ழுமறை தேர்மறை யோர்புகல
வேரியன் முத்துநி றைத்தணி பந்தரி னென்கையின் முன்கையிலே
சேரிய நூல்கொடு காப்பணி வித்துநி றைப்பிற கேதிரியுங்
காரிருள் வண்ணனெ னச்சுரர் கூறிய காளைபு குந்தெனையே.

293 அன்றுவி டிந்தபின் னல்லது வைத்தொழு லாயின வாயவெலா
மொன்றெழு யாமமன்மு டித்தென நங்கையை யுத்தம நாரணரு
டொன்றுரை செய்தவர் பத்தியி னேடுமெ ழுந்தொரு நற்கரிமேற்
சென்றுவ லங்கொடு நன்னக ரிற்பொலி சிட்டர்கள் பட்டனுடன்.

294 மன்னிய வீதிக டோறுமகி ழ்ச்சிவ ழங்கிக டம்பயிலப்
பொன்னணி மாளிகை மேவியி லங்கிய பூவணை யிற்றிருமா
லென்னிரு கொங்கைபு ணர்ந்திட விற்றையி ராத்துயி லுங்கனவி
னன்னுத லீரிவை கண்டனெ னென்றன ளற்புது வைக்கினியாள்.

வேறு.

295 பொங்கோத வண்ணர் பொருந்தி யனுபவித்த
லங்கோர் கனவி லதனை லருள்கோதை
செங்கோலக் கண்ணர் திருவாய்ச் சுவைவாசங்
சங்கோடே தான்வினவிச் சாற்றினு ளோர்பத்தும்.

296 இப்படியே சங்கோ டிருந்து வினவிடநா
ளொப்பரிய வான்முகில்க ளோங்கியொ [illegible]
செப்பரியா னப்பாற் செறிகால மீதென்ன
வப்பொழுதிற் கோதை யணிமுகிலோ டோதுவாள்.

297 விண்ணுறைக் கூண்டேகு மேகங்கா ணீர்போர்
தண்ணுறை யருவித் தடவேங் கடமுடையென்
கண்ணுளன் வந்திலனே கட்டுரையு மென்று
டிண்ணுறைர் மதில்புடைசூழ் சிவிலிபுத் தூருறைவாள்.

298 குன்ற மெடுத்தானைக் கொண்டலுடன் கேட்பவளை
யொன்று மியம்பாமை கண்டே யொளிவளையா
ளின்று கலங்கியந்த நீல முகிற்கணத்தைச்
சென்றுதிரு வேங்கடவற் கென்றுயரஞ் செப்புமென

299 ஆதுவிட மேகங்கள் சுந்தரத் தோளருக்கம்
மாதின் றுயர முரையாமை மாமழையா
யோது முலகி லுறப்பெய்து போயழியக்
கோதற்ற கோதை கொடுந்துயரத் துள்ளழுந்தி.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

300 முன்புநா டேதவு முகில்பொழிந்த மாரியினு
லின்ப வுலகி லியாவுமுளைத் தழைப்பளிப்ப
வன்புநனூர்ச் சோலை மலையழகர் மேனியையும்
பொன்பொருந்தும் வெண்ணகையுஞ் செவ்வாயும் போன்றதென

301 பாராரும் பூவை மலரினையும் பாரமருஞ்
சீராரு முல்லை முகையினையுஞ் செப்பமுட
னேரார் சிவந்தூரு மிந்திரகோ பத்தினையு
நோக வெண்ணனினைக் துரைந்து வாயுரைத்தாள்.

302 இந்தவகை யெண்ணம் பெருஞ்சோகை மாமாயன்
வந்து கலவா வருத்தத்தால் வாய்வெருவிச்
சிந்தை கலங்கித் திகைத்தாண் மனங்குளிரச்
சந்தத் தடம்பொழிலிற் றங்கி யனிதமர்ந்து.

303 காலை யெழுந்து கரியகுரு விக்கணங்கள்
மாலின் வரவுரைக்க மலர்க்கோதை
சோலை மலையமருஞ் சுந்தரத் தோளனுடையும்
வேலைவண்ணர் நம்பால் வரும்வந்தால் வெண்பழுமன.

304 திந்திப்புக்க திருவடிசி லக்கார
மெந்திக் கடாநூறில் வெண்ணெயுமண் கலவையும்
வைத்திப் பரிசாற் பரமனுக்கு வாய்நேர்ந்து
புந்திக்குத் தக்கவனைக் காட்செய்வேன் போதிலென.

305 செப்பினள் செப்பியநிற் சேதான்செல் லாமையினு
லப்பொழுதே வாடி யுருகி யலமந்திங்
கொப்பில்சிலம் பாறுடைய வந்தமன்கை விவ்வொலியு
முப்பொழுது மேத்தி முழங்குதிருச் சங்கொலியும்.

306 என்றுகேட் டுய்வே னியானென் றருகிருந்த
மன்றல் கமழு மலர்க்கோதை தோழியுட
னன்றுரைத்துப் பின்னி துரைக்கின்று ளாரணங்கே
சென்றிலங்கை செற்ற திருமா றிருவாக்கால்.

307 என்னை யடைந்தார்க ளெப்பிழைகள் செய்திடினும்
பின்னையவர் செய்த பிழைநோக்கே னுங்களையென்
மன்னுமுயி ரென்றுரைத்தார் மன்னவனூர் மாமகளே
ரன்னவுரை பொய்த்தாலு மாழ்வார் மகளாதல்.

308 பொய்யாதே தோழீ யெனப்புலம்பி நீண்டகன்ற
மையார் தடங்கண் மலர்க்கோதை கட்டுரைத்துச்
செய்யாள் பொருந்துந் திருமார்பர் தம்மைநா
னையாமல் வல்லபடி செய்து நமக்களிப்பா

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

309 ஐயரெனக் கோதை யனைத்தினுள்ளு நிற்பரைய
ருய்யுந் திறத்தா ருறுஞ்சீ ருபாயத்தார்
செய்யுந் திறத்தை மறந்துசில நாளிருப்பக்
கையமரு மாழியினா னங்கவைகள் கண்டிருந்தும்.

310 வந்துகல வாமன் மலர்க்கொடியை வாட்டினா
னெந்துவகை செய்தா லினியுய்வே னென்றிரங்கிக்
கந்தமலர்க் கோதை கலங்கிக் கருமுகிலா
மெந்தை யரங்க ரெடுத்திட்ட விடர்க்கடலில்.

311 தங்கினா டாமுவக்குஞ் சங்குதனிற் றூயருக்குக்
கொங்கமருங் கோதைக் குவிமுலையா டானுரைப்பா
செங்கயல்கள் பாயுந் திருக்கா விரிமடுவே
லங்கண்வளர் கின்ற வரங்கர்செய்த மாமரமும்.

312 பங்கென் றுணிவினையு மெல்லீருங் காண்மினெனப்
பூங்குழலாள் விம்மி யரங்கன் பொருந்துமுனை
மாங்கழுந்தா ரோடுலக மாக்கியவை காத்தனை
யோங்கியளந் தான் [illegible] மெயின்.

13 என்று பகர விருந்தா டாதவைக
னின்றே மறப்பா யெனவுரைப்ப வாங்கவர்க்கு
மன்றல் கமழு மலர்க்கோதை மானனையீ
ரொன்றுளது கேண்மினென வோது மிவையிவையே

14 ஆசையுற்ற வெண்ணினையுங் காணா தயலிருந்து
பேசுகின்ற தெல்லாம் பிறவியுறு மூங்கனுக்கு
மாசுமனனும் வஞ்சச் செவிட னுரைமானும்
கூசிப் பயனேது கொண்டுபோ வென்னையவன்.

15 மனனுந் துவாரகையின் மாமதுரை மாநகரிற்
சின்னமுழுங் காய்ப்பாடி தன்னிலெனைச் சேர்மினெ
யன்னவர்கண் மானே யவன்குடிக்கு முன்குடிக்கு
பின்னனையாய் மாறுப் பழியா மெனவிலக்க.

16 ஆகிலவன் சாத்தும்பீ தாம்பரமு மான்பொடியு
மேகவண்ண னிட்ட வனமாலை வெண்ணகைசேர்
பாகி லினிய பவளவா யூறமுதந்
தோகைமீர் சீபாத தூளிமுத லாமிவைகள்.

17 எல்லா மளித்தவனை யென்பால் வரவழைத்து
மல்லாண்ட தோளானை வல்வினையேன் மன்னுமவை
வில்லார் நுதன்மடவீ ரெண்ணுமின்கள் வேறென்று
சொல்லா தகன்மினெனத் தோகைதுய ருற்றிரங்க.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

318 இல்லாப் பொருளை யெமக்கீக வென்றுலகைக்
கொல்லாமற் கொல்லுங் கொடுங்கோ லரசனைப்போற்
செல்லார் குழலாளைச் செப்பார் தனயிரண்டும்
வில்லா விலங்கைநகர் செற்றவிறற் சேவகனை.

319 காட்டித்தா வென்னைக் கனத்தெழுந்து சீர்பொருந்தப்
பூட்டியுவா மீரப் புடைபார்த்து மேனிதனை
வாட்டி வருத்த மணவாளன் வாராது
வீட்டத்தார் கோதையினி யென்செய்வே னென்றவளே

320 உன்னித் திருமாலே யோடிவந்தெ னருயிரை
மன்னிநா மெய்தும் வருத்தத்தை நீக்கலையோ
வென்றுயிரின் மேற்க விடைதந் திடுகவெனப்
பன்னிமலர்க் கோதை பதைப்பொடுங்கிப் பூவையயில்.

321 தாங்கினே ளக்கணத்திற் றூழா தலைகளிக்க
செங்கட் கரிய திருவரங்கர் வந்துவுடன்
கொங்கை குழைய வரிக்கோல் விழிசிவப்ப
யங்கங் குளிர வணைத்திடவா யாற்றினர்.

வேறு.

322 ஆங்கவ னெய்துமுனம் பட்டவ ருந்துயரு
மோங்கிய மாமாய வுற்றபி னுள்ளமிகத்
தாங்கிய நல்வளமுந் தானவ னப்பரிசைப்
பாங்குட னுற்றுணர்வோர் பார்க்கை யின்மையினால்.

323 ஒண்டொடி தன் னுணர்வி லோரிரு வோர்களுமாய்ப்
பண்டிரி மையப்பிறகே போனப ருஞ்சுடரைக்
கண்டிலி போலெனவுங் கண்டன ளுமெனவு
மெண்டிசை யும்புகழு மின்னிசை பாடினளால்.

வேறு.

324 இந்தவகை யனுபவித்தன் றியம்பியிடுந் திருமொழிகள்
சந்தமிகு மொருநூற்று நாற்பதையுந் தமிழ்விளங்கக்
கந்தமிகு மலர்க்கோதை கட்டுரைத்தா ளவைகற்றோர்
பந்தமறப் பரமபத மடைந்துய்யும் படிபாரில்.

வேறு.

325 தேடிமறை காணாத செல்வி திருப்பாற்கடல்விட்
டாடிப்பூ ரத்தி லவதரித்துப் பூமாலை
சூடிக் கொடுத்துத் துணிந்தபடி பாமாலை
பாடிக் கொடுத்துப் [illegible]

326 இப்படியே கோதை திருமொழிக ளாங்கியம்பி
யொப்பிறிரு மாலோ டுறச்சேர்ந் தனுபவித்துச்
செப்பமுடன் வாழ்ந்து திருவரங்கத் தம்மானைத்
தப்பறநான் சென்றிறைஞ்ச வேண்டுமெனத் தானினை

327 ஆசில்பெரி யாழ்வாரை நோக்கியைய ரேயடியேன்
றேசுபொலி தென்னரங்கத் துள்ளே திருக்கண்வளர்
நீசன் கழல்வணங்க வேகநினைந் தேனெனைநீர்
கூசாம லின்றே கொடுபோய் விடுமென்றாள்.

328 என்றவுரை கேட்ட வெனையாண்ட பட்டர்பிரா
னன்றென் றுலகி னவைதீரக் கண்வளரு
மன்றல்கமழ் சென்னி வடபெருங் கோயிலர்மு
னன்றுசென்று நின்று தறைவா னரவணையாய்.

என்னுடைய கோதை யெழின்மடவார் நால்வர்களு
மன்னுந் திருவரங்க மாநகரிற் பாம்பணைமே
லுன்னுருவங் காண வுவந்தாளென் செய்வதெனப்
பன்னரிய வேதக்கோன் பட்டர்பிரான் கட்டுரைப்ப.

வண்டமருஞ் சோலை வடபெருங் கோயிலருந்
தண்டமிழ்நூல் வல்லீரத் தார்குழலைப் பல்லக்கிற்
கொண்டுபோய்த் தென்னரங்க மேவிக் குவலயங்க
ளுண்டுறங்கு நங்கோல முள்ளபடி கண்டிறைஞ்சி.

331 கோதையொடு நீயும் வருகியெனக் கோதில்லா
வேத முதல்வன் விடைகொடுப்ப வேதக்கோ
னோதவண்ணன் றன்னை யுளக்கமலத் துள்ளிருத்தி
காதன்மக டங்குங் கனகமணி மாளிகையில்.

332 வந்தவளைப் பல்லக்கில் வைத்தடியார் தோழியர்கண்
முந்தை மறைவாணர் முனிவர் புடைசூழ
வந்தரத்தோர் பூமாரி பெய்ய வுருடைப்ப
நந்தா விளக்கனைய ஞானச் செழுங்கனிசே

333 மாணிக்கப் பல்லக்கை மூடிமுன்ன மாகவிட்டுப்
பேணிப்பின் றூமோர் பெருஞ்சிவிகை மீதேறி
வாணித் திலநகைசேர் மாமகளார் முன்னேகப்
பூணித்த காவலர்கள் சூழ்ந்துபொதிந் தேகியிட.

334 வில்லார் புருவத்தாள் வேதக்கோன் பட்டனுடன்
மல்லாண்ட திண்டோண் மணிவண்ணனைக் கும்பிட்டுச்
செல்லார் பொழில்சூழ் திருமா லிருஞ்சோலை
நில்லாநின் றூனை நினைவாற் பணிந்தேகி.

335 அண்டர் புகழு மரங்க நகர்நோக்கிப்
புண்டரீகத் தாளோனும் பூந்துழாய்ச் செல்வனி
லொண்டொடியாள் கோதைதனைக் கொண்டுதிருப் பல்லாக்
பண்டிசைத்த வேதக்கோன் பட்டர்பிரான் றன்றுணையும்.

336 செப்புவா னோர்வார்த்தை யையமில தென்னரங்க
ரொப்பில் சிகா மொளிகெழுங் கோபுரங்க
ளெப்பொழுது தோற்று மெனக்கருத்தோ டேர்நோக்கி
யப்பொழுதே கூறு மடியேனிப் பல்லக்கில்.

337 நின்றிலங்கி வானளவ நின்றமுகிற் கோபுரத்தைப்
பொன்றிகழு மோங்கும் பொருவில்விமா னத்தனையே
யின்று பணிந்தே னிருகா னடையாகச்
சென்றரங்கந் தன்னைத் தெரிசிக்க வேண்டுமென.

338 தந்திருள் கோதையவள் பின்சென் றுரைகேட்ட
வேதக்கோன் பட்டர்பிரான் மெல்லியலா ளோடேகி
யாதக்கோ டேத்த வரியாவிற் கண்டோரும்
பூதக்கோன் மன்னிவளர் பொன்னரங்கப் பொற்கோயில்.

339 இன்றே தெரிகின்ற தேக்கிழையே யென்றுரைப்பார்
தென்றுறும் பொன்னிநதித் தென்கரையிற் சென்றதற்பின்
சொன்றே துமுன்னந் தோற்றியபோ சொல்லாமை
யின்றே யிடையா னடையான் மெல்லியுமென.

340 இந்தா தெரியு தெனப்புகன்ற வப்பொழுதே
நந்தா விளக்கனையாண் ஞானிகட்குங் காண்பரிதா
யந்தாமப் பல்லக்கி னின்றேகி யப்பொழுதே
செந்தா மரைக்கட் டிருவரங்கர் சேவடியை.

341 சென்று பணிந்து திருமார்பின் மீதேறி
மன்றலங் கமழு மலர்க்கோதை வீற்றிருந்தா
ளன்றிவளோப் பல்லக்கிற் போதந் தாங்குமவர்
நின்றனர்கீ ளவ்வழியி னின்றார் நிலைநோக்கி.

342 என்னென்று பட்டர்பிரான் கூற விலங்கிழைபோய்
முன்றென்றச் போதந் தாங்கு மவர்மொழிவார்
பின்றென்று நுண்ணிடையார் மேவுமிந்தப் பல்லக்குத்
தன்றென்று பாரந் தவிர்ந்தவட்டான் றங்கிடுதல்.

343 இன்மைபோ லெங்கட் கிருந்த தெனவியம்ப
நன்மைமிகு மாழ்வாரு நற்றூசை நீக்கியந்த
மென்மையுறு பல்லக்கின் மெல்லியலைக் காணாதே
திண்மையடைந் தெங்கேயென் சேயிழையென் றங்கழுது.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

344 சீரார் திருவரங்கர் செய்தகள வீதென்னைப்
பாரோ ரிறைஞ்சப் படிமீதிற் றூமோடி
யேரார் பொழில்சூ ழெழிலரங்கத் துட்கிடந்த
பேரா யிரமுடைய பெம்மானைச் சென்றிறைஞ்சி.

345 நின்றழுது விம்மி நெடுமாலே நீகவர்ந்திங்
கின்றடியேன் பெற்ற விலங்கிழையை யெங்கொளித்தீர்
நன்றடியே னும்மையென்று நம்பெருமா னொன்றிருந்தா
லொன்றும் பலமு மிதுவோ வுலகின்முனம்.

வேறு.

346 கல்லைப்பெண் ணாக்கிக் கவுதமனுக் களித்தோமே
நல்லமறை யோன்மக்க ளைவரையு மளித்தோமே
யொல்லையினிற் கலையனைத்து மோதுவித்த தக்கணையாய்ச்
செல்வமிகுஞ் சாந்தீபன் றிருமகனை யளித்தோமே.

ஒருமகளே யடியேனுக் குலகறிய வுள்ளவளைத்
திருமகள்சேர் மணிமார்பா சேவிப்பக் கொடுபோந்தேன்
வரும்வழியி னீர்புகுந்து களவாண்டுன் மாயத்தாற்
குருமணியே யொளித்தக்காற் குவலயத்திற் பல்லுயிர்க்கும்.

வேறு

தென்னார் நதிசூழ் திருவரங்கர் காவலெனை
முன்னா ரணங்கண் மொழிய வடைந்தவர்க
ணின்னா விடரெய்தி னேமியாய் நின்கீர்த்தி
யென்னா மடாதவையென் கோதையெங்கே யென்றிரங்க.

349 மஞ்சேர் பொழில்சூழ் மதிளரங்க ராழ்வானை
யஞ்சே லெனத்தன் றிருமார் பமர்ந்தருளும்
பஞ்சே ரடியாளைப் பாரென் றுடனளிப்ப
வுய்ஞ்சேனென் றுள்ளங் களிகூர்ந் துவப்பினொடும்.

வேறு.

350 சீரமரும் பெரியாழ்வார் திருமகளார் தமைநோக்கி
யார்வமருங் களிகூர வருகணைத்து முடிதடவி
யேரமரு மரங்கத்தீ ரெல்லாரு மறியவிந்த
வாரமரும் பூண்முலையை மறைமுழங்கும் புத்தூரில்.

351 வந்துமணம் புணர்ந்திந்த மாதினொடு மத்தலத்திற்
சந்தமருந் தடம்புயத்தீர் தங்கியினி தமர்ந்தருளப்
பந்தமறப் பல்லுயிரும் பணிந்தருளும் படிகண்டு
சிந்தைகளிப் புறவடியேன் வணங்கநினைந் தனன்றேவ.

352 இப்படிச் செய்தருள வேண்டுமென விறைதானி
லொப்பரியான் பணித்தேத்தப் பங்குனி யுத்திரத்தி
லப்படியே சீவில்லி புத்தூரி லண்டர்தொழத்
தப்பறநாம் வந்துமணம் புரிவோமத் தார்குழலே.

வேறு.

353 இன்னே யிருந்த விலங்கிழையைக் கொண்டேகித்
தன்மனை மனைய புதுவைநகர் தான்மருவி
யென்னே யிடையாண் மணத்துக்கு வேண்டுவன
முன்னே யியற்றிடுக பட்ட னெனமொழிந்து.

வேறு.

354 இத்தலத் தனைத்துக் கொத்து மெழுந்தருள்வன் றுகப்பி னோடு
மத்தலத் திவனை யிட்டு வருகவென் றருளிச் செய்து
பத்தர்கட் கினியா னேறும் பல்லக்குஞ் சோதைக் கீந்தே
யுத்தமப் பெரியாழ் வார்க்கு மொழிவளர் சிவிகை நல்கி.

வேறு.

355 வருகென்க வினியென்ன வொல்லையங் கருள்செய்ய
மேகவண்ணன் சரணமென விருவர்களும் விழுந்திறைஞ்சி
யாகமுறத் திருவரங்கத் தமுதத்தைப் பறைத்தருள்சேர்
பாகவதர் பலர்சூழப் பைந்தொடியா ருடனெருங்க.

356 திருவரங்கத் திருப்பதியிற் சீர்மருவி வாழ்பவரும்
பெருவரம்கொண் டவதரித்த பெரியாழ்வார் திருமகட்குப்
பொருவொரங்க மெடுத்துளராம் பூவையரு முளரோவென்
றிருவரங்கம் பிரியாதே யிருப்பதுநம் விருப்பென்ன.

357 பின்செல்ல வமரர்குழாம் பிரசமலர் மழைபொழியப்
பொன்செல்லும் புகழரங்கப் பூசுரர்கண் மறைபுகல
மின்செல்லுந் துடியிடையார் திருவெண்சா மரைவீச
முன்செல்லு முழவோசை முகிலொலியின் மிகமுழங்க.

வேறு.

358 பேரிகை காளங் கொம்பு பெருந்தவின் மகுடந் தாளஞ்
சீரிய நவுரி யாதிச் சிறந்தவாத் தியங்க ளார்ப்ப
நாரியர் வீணை வல்லோர் நாதகீ தங்கள் பாடக்
கூரிய கவிஞர் பாணர் குழாங்கள்பல் லாண்டு கூற.

வேறு.

359 அம்பரத்தின் முனிவர்குழா மணியணியே தொழுதேத்தத்
தும்புருவு நாரதனுஞ் சுருதிநெறி யிசைபாட
வம்பவிழுங் குழற்கோதை மணவாள ருகந்தளித்த
செம்பொன்மணிப் பல்லக்கி லெழுந்தனடென் றிசைநோக்கி

### வேறு.

360 முத்திற் கோமே தகந்தன்னின் முழுநீ லத்தில் வயிரத்திற்
றுத்தி யரவி னொளிமணியிற் றுலங்கும் பற்ப ராகத்திற்
றத்தித் தத்தி நிரைத்தெங்குந் தயங்கும் புணிகள் பெரியாழ்வார்
பத்திக் குடையு மிடையிடையே பவளக் கொடியு முடனிழற்ற.

### வேறு.

361 மன்னியசீர் மதிளரங்க மாநகரங் கடந்திசைக்கும்
பொன்னிவள நதிகடந்து புகழ்ச்சோழ னெல்லைவிட்டு
மின்னியெழும் வச்சிரக்கை விண்ணவர்கோன் விறன்மவுலிச்
சென்னிமிசை வளையெறிந்த தென்னவன்சீர் நாடணைந்தாள்.

362 மருவரிய திருவரங்க வளநகர்விட் டெழுந்தருளிப்
பொருவரிய சீவில்லி புத்தூரிற் புகுமளவு
மிருமருங்குந் திருச்சின்ன மெடுத்திசைத்தா ரங்கவற்றி
லருவினையேன் சிறிதென்னு ளறிந்தபடி யறைகின்றேன்.

### வேறு.

363 இருமா நிலத்தி னிடர்கெடும் வண்ணம்
மருவார் திருத்துழாய் மாநர்வாய் மாசி
லருமா மறைதேரு மாழ்வார் மகளாய்த்
திருவாடிப் பூரத்திற் சென்மித்தாள் வந்தாள்.

364 தேடி மலர்க ளெடுத்துதன் றேவற்கு
நாடித் தொடுத்த நறுந்தாரைக் கோதையாய்ச்
சூடிக் கொடுத்தபின் சொற்றமிழ் தன்னையும்
பாடிக் கொடுத்தருள் பைந்தொடி வந்தாள்

### வேறு.

365 மட்டவிழும் பொழில்புடைசூழ் மதுரை தன்னில்
வாதியரை யீடழித்து மறையி னந்த
மெட்டெழுத்தே யெனக்கூறி வேத நான்கு
மிருந்தபடி யெடுத்தோதி மன்னர் மன்னன்
கட்டியபொற் கிழியறுத்துத் திருப்பல் லாண்டைக்
கட்டுரைத்துக் கண்ணனுக்குக் காப்பிட் டேத்தும்
பட்டர்பிரான் றிருமகளார் வந்தார் வந்தார்
பாடவல்ல நாய்ச்சியார் வந்தார் வந்தார்.

366 மனையுஞ் சாமனையுங் கருத்தா லுன்னிக்
கருதியசீர்த் தைத்திங்கள் கனித்த நோன்பின்
மருவும் வேங்கடவ னிலக்கா யென்னை
மலர்க்கணையாய்த் தொடுத்தெய்யு மதன னென்னப்
பாமருவுந் தமிழ்பத்து மிசையி னோடே
பட்டர்பிரான் கொண்டாட வருளிச் செய்த
தேமருவு மலர்க்கோதை வந்தாள் வந்தா
டிருப்பாவை பாடினாள் வந்தாள் வந்தாள்.

367 மற்றநங்கா மங்கண்மாற் றென்றார் வந்தார்
மாமாலே மாறன் மகளே யுன்னைப்
பெற்றிலே னென்றருளிச் செய்தார் வந்தார்
பெரியாழ்வார் திருமகளார் வந்தார் வந்தார்
நற்றமிழ்சேர் நாமமா யிரமோர் பத்தி
னாரணனே நானேநீ நாங்கள் செய்த
சிற்றில்சிதை யேலென்றார் வந்தார் வந்தார்
திருமாலை வழங்கினார் வந்தார் வந்தார்.

368 சீரிணங்கும் பொய்கைநறும புனல்புக் காட
செங்கண்மா றங்கிலெடுத்துக் குருந்தி லேற
நாரணனே கூறையைநல் கிவ்வா றென்றி
னங்கயினிப் பொய்கைக்கு வாரோ மென்ற
பூரணனை யிரந்திறைஞ்சிப் பூப்பட் டேற்றுப்
பொருவரிய தமிழ்பத்து மருளிச் செய்து
வாரணங்க டொழுதேத்து மாண்டாள் வந்தா
ளணியரங்கர் திருமார்பி லமர்ந்தாள் வந்தாள்.

369 எடுவிழ்பூ மாலிருஞ் சோலை நின்ற
வெழிலழகர் வேங்கடவ ரிலங்கு நீதி
மாடமிசை மதிதவழு மரங்க மன்னு
மணவாள னம்பாலே வருமோ வென்னக்
கூடல்வளைத் திருந்துகுறி பார்த்தோர் பத்தாங்
கொழுந்தமிழா லருள்செய்து குலவு மல்லி
நாடமரு மாரணங்கு வந்தாள் வந்தாள்
ஞானமயச் செழுங்கோதை வந்தாள் வந்தாள்

370 மன்னுபெரும் புகழாதி பத்தும் புத்தூர்
மலர்க்காவி லினிதமருங் குயிலை நோக்கி
யின்னிசைகள் மிகவல்லாய் கூட லொன்று
மியம்பாமை கண்டாயோ வென்று கூறிப்
பின்னதனை மாலிருஞ் சோலை நின்ற
பிரானைவரக் கூவுதியென் றருளிச் செய்த
வன்னநடை மின்னிடையார் வந்தார் வந்தா
ராழ்வார்தந் திருமகளார் வந்தார் வந்தார்.

371 நாரணனைக் காணாத வருத்த மெய்த
நம்பெருமாள் சொப்பனத்தி னூட்டார் காண
வாரணமா யிரஞ்சூழ வந்து தன்னை
யணம்புணர்ந்த படியெல்லாம் வகுத்தோர் பத்திற்
சீரிணங்க வருள்செய்த செல்வி வந்தாள்
செங்கமலத் தடவயல்சூழ் மல்லி நாட்டி
ணாணங்கு வந்தாள்பூங் கோதை வந்தா
ளனைத்துயிர்க்கு மன்பருளி யாண்டாள் வந்தாள்.

372 செங்கோலக் கண்ணன்வாய்ச் சுவையின் வாசஞ்
செப்புதியெப் போதுமவன் கையின் மன்னி
யங்கோதும் வாயமுத முண்டு வைகு
மடலாழி வெண்சங்கே யென்றோர் பத்துஞ்
சங்கோடு கேட்டுவந்தாள் வந்தாள் வந்தாள்
சதுமறையோர் குலவிளக்காந் தையல் வந்தாள்
பொங்கோத வண்ணரிட மருங்கில் வைகும்
புவிமடந்தை வந்தாள்பூங் கோதை வந்தாள்.

373 மஞ்சினங்காள் வேங்கடவற் கென்றூ தாக
வான்மீதி லேகியவன் மயலிற் பட்டு
நஞ்சருந்துங் கொண்டையென வறிவு சோர்ந்து
நான்படுமித் துயரெல்லா நயந்து கூறிப்
பஞ்சவர்க டூதனை கொண்டு மீளிற்
பாவியே னுயிர்பெறுவே னென்றோர் பத்துஞ்
செஞ்சொல்பெற வெடுத்துரைத்தார் வந்தார் வந்தார்
செவ்வியிற் சூடினார் வந்தார் வந்தார்.

374 சிந்தூரச் செம்பொடியி லழகார் கோலத்
திருவுருவை நினைந்துபத்து மருளிச் செய்த
சந்தநறு மலர்க்கோதை வந்தாள் வந்தாள்
கார்க்கோடற் பூவாகிக் கருதும் பத்தி
னோந்தாவி யறச்சோர்ந்தாள் வந்தாள் வந்தா
ளென்புக்கன் றுருப்பட்டு நோற்றாள் வந்தாள்
செந்துவர்வாய்ச் செங்கமல முகத்தாள் வந்தா
டிருமாலைப் பிரியாதாள் வந்தாள் வந்தாள்.

375 எண்ணியசீர்த் தாமுவக்குஞ் சங்க மாதி
யெழிறிகழு மொருபத்து மருளிச் செய்து
மண்ணினிடர் கெடப்பிறந்தாள் வந்தாள் வந்தாள்
மற்றிருந்தீர் கட்கென்ன வகுத்த பத்தி
னண்ணியமா தேசத்திற் கொடுபோ மென்ன
நாரியர்க ளூடனுரைத்த நங்கை வந்தாள்
கண்ணனெனுங் கருந்தெய்வந் தன்னிற் கூடிக்
கலவிநலத் துறவாழ்ந்து கலந்தாள் வந்தாள்.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

## வேறு.

376 ஆதி மூர்த்தி யுறக்கலந்த பின்பு மகிழ்ச்சி யடங்காமல்
வீதி யார வருவானை விருந்தா வனத்தே கண்டேனென்
றோதிக் களிக்கு மடவோ வந்தா ளுலகமேழுந் தொழுதேத்தச்
சோதி திகழு மதிமுகத்தாள் வந்தா டோகை மயில்வந்தாள்

## வேறு.

377 பங்கய முகமதி யெனமுகிழ்நகையார் பவளிதழ் கலமுடை யவள்வந்தாள்
கொங்கலர் குழல்பொங் கியகாமக் கோகிலை திருமரு மகள்வந்தாள்
மங்கையர் குலமகா மயில்வந் தாள் வாலொளி விமல மெனமாப்பிருந்
செங்கயல் விழியினை யவள்வந்தா டெவளி திருமரு மகள்வந்தாள்.

## வேறு.

378 பொன்னவிர் பூண்முலை வந்தாள் பொருவறு புதுமையை யென்று
நன்னக ருடையவள் வந்தா ளின்பமொழி பயில்பவள் வந்தா
ளன்னமென் னடையினள் வந்தா ளமுதெனு மொழியினள் வந்தாள்
என்னெனு மிடையினள் வந்தாள் மின்னெனும் விழியினள் வந்தாள்.

## வேறு.

மதுமலர்க் குழன்மா மயில்வந்தாள் வாரிசூழ் புவிமா மயில்வந்தாள்
பதுமநற் றிருமங் கையின்மிக்க பாவைத் தரியந் தினள்வந்தாள்
முதுமொழித் திருமா மொழிதந்த முந்திகல் கியவுந் தாள்வந்தாள்
புதுமதுப் பொழிகா வினமன்றல் புதுவையூர் நகரொளிர் கொடிவந்தாள்

## வேறு.

380 பரிபுரப் பதத்தி வந்தாள் பழமறைக் கிழத்தி வந்தாள்
சரிவளைக் கரத்தி வந்தா டடமுலைக் குடத்தி வந்தாள்
எரிவரைக் கருத்தி வந்தா ளனநடைத் திருத்தி வந்தாள்
கரிவளைக் கழுத்தி வந்தா ளிணைவிழிப் பிணைச்சி வந்தாள்.

## வேறு.

381 வேதநா யகிவந்தாள் வேள்விநா யகிவந்தாள்
கோதைநா யகிவந்தாள் கோலநா யகிவந்தாள்
போதநா யகிவந்தாள் பூமிநா யகிவந்தா
ளாதிநா யகிவந்தாள் ஞானநா யகிவந்தாள்.

## வேறு.

382 என்றிசைக்குஞ் சின்னங்க ளெண்டிசையுங் கீழ்மேலு
மொன்றிவள ரன்பினர்க ளுளங்குளிர வெடுத்தூதி
மன்றல்கமழ் வேங்கடத்தோன் சேனையொடு மற்றவண்ட
சென்றுவழி நடத்தவெழிற் றிரவரங்க மருள்சூழ.

383 சீரார்மா லிருஞ்சோலை நின்றருளுந் தேவனு
ரோராருஞ் சேனையொடு மெதிர்ப்பவிஞ்சிட் டெதிர்சென்று
வாரார்பூண் முலைக்கோதை மாணிக்கப் பல்லக்கி
னேராய விடம்வலத்து முன்னுமணி நெருங்காமல்.

வேறு.

384 பிரம்படி கார ருகைப் பெண்ணணங் கருகே யேகச்
சிரம்படிந் தமரர் தாழச் சித்தர்கள் கற்ப கத்தின்
மரம்படு மலர்கள் சிந்த மறையவர் மறைகள் பாட
நரம்பொடு வீணை வல்லார் நவிலுமே ழிசைகள் பாட.

385 பல்லாண்டு பட்டன் பாடப் பறவைமே லிருந்து கேட்ட
மல்லாண்ட திண்டோ ளாதி மணிவண்ணன் சேனை யோடும்
வில்லாரு நுதலாள் பாங்கின் வெளிபட நடந்து சென்று
கல்லாரம் பிடித்த கையாள் கண்கணே ராக வேக.

386 மாசறும் வில்லி புத்தூர் வடபெருங் கோயி லாதி
யீசனு மவ்வூர் தன்னை யெழில்பெற வலங்க ரித்துந்
காசறு தோரணங்க ளணியணி பொருந்தக் கட்டித்
தேசுற வுடன்செல் வார்க்குத் திருவிருந் தமைத்தவ் வூரில்.

387 உறைபவ ரனைவ ரோடு முவந்தெழுந் தெதிரே செல்ல
நறைகமழ் கோதை யாகு ஞானநா யகியார் வந்து
௫, பிறைதவழ் மாட நீடு பேரருட் புதுவை புக்கார்
முறைமுறை பணிந்து நிற்பர் முக்கரு மடிக டாழ.

388 வேங்கடத் துறைவா ரன்றே மீண்டுதம் பதியிற் புக்கார்
பாங்குடன் கோதை யேகும் பல்லக்கின் முன்ன ராகி
வாங்குவித் துடனே மன்னு மாலிருஞ் சோலை யாரும்
பூங்குழ லருளி னாலே பொருந்துதம் பதியிற் புக்கார்.

389 மணிவணர் சேனை யோடு மதுரைமா நகரம் புக்கா
ரணியணி நிரைத்து வந்த வரங்களு ரனைத்துக் கொத்து
பணியணைப் படுத்தார் நல்கும் பயன்படு விருந்து முண்டு
பிணிபசி பிரவி யற்றார் பிரான்வள ரரங்கம் புக்கார்.

390 ஆசிலா மலர்ப்பூங் கோதை யரங்கர்நா மணைவோ மென்ற
மாசறு மனைத்துக் கெண்ணி வகுத்தநாள் வரவு நோக்கித்
தேசுற விருந்தா ளாழ்வார் சிலபகல் செல்ல மாயன்
பேசிய மணநா ளுனை யெனமறை யவர்கள் பேச.

391 திருநக ரலங்கரிக்க திருமணங் காண வென்றே
வருபவ ரறிய யானைக் கழுத்தில்வள் ளுவனை யேற்றிப்
பெருமுர சறைக வென்னப் பெண்ணமு தத்தைப் பெற்ற
ருமறை யந்த ணாள னருளவங் கறைந்தா னன்றே.

392 திருக்கலி யாண நாளை யெனச்செழு முரசு கொட்டிப்
பெருக்கொலி யந்த ணாளர் பெருநலக் களிப்போ டோது
இருக்கொலி வீதி யெங்கு மெழுந்தபே ராசை கேட்டோர்
நெருக்கொலி கடலு மஞ்ச நிறைந்தன வான மெல்லாம்.

393 நலந்தரு வளங்க ளாலு [illegible]ணகர்ப் புதுமை தன்னைக்
குலந்தரு வளங்க ளாலுங் கொழுமறை வளங்க ளாலும்
புலந்தரு வளங்க ளாலும் பொதுவறு வளங்க ளாலு
மலங்கரிக் கின்ற வாற்றை யறிந்தவா றுரைய லுற்றேன்.

வேறு.

394 படவரவத் தணைக்கிடந்து பங்கயக்கண் வளர்ந்தருளும்
வடபெருங்கோ யிலர்கோயின் மணிமாட கோபுரங்க
ளிடவகைகண் மண்டபங்க ளெழிற்றிகழ வலங்கரித்துத்
தடவயல்சூழ் புத்தூரிற் சதுர்விளங்கும் வீதிதொறும்.

வேறு.

395 ஆணிக் கனகப் பசும்பொன்று லமைக்கிறங்க வமைத்துளவா
மேணித் திவள்கொ டுவெனக்கண்டோ ரியம்ப விலங்கு நித்திலத்தி
மாணிக் கத்தின் பவளத்தின் மாலை தூக்கி மறுவற்ற
சேணிற் பொலியுந் தோரணங்க ளெட்டி யிடையெ சிறந்தோங்கு

வேறு.

396 இந்திர விமான மேகொ லென்றெணி வியவி தேர்கொல்
சந்திர விமான மேகொ றமணிய மலைக ளோகொல்
மந்தர கிரிக ளோகொ லென்றுமண் ணவர்கள் கூற
வந்தர மளப்ப வோங்கு மணிநிலைத் தேர்கள் செய்தார்.

வேறு.

மின்னுமா மணிசேர் மாடமா ளிகையில் விசும்புறத் தூக்கிய கொடிகளா
பொன்னினுட் டவளைத் திருமணங் காணப் போதுமி னென்றழைப் பது
மன்னிநின் றுடந் தமனியக் கும்ப மலைமிசை மதியொளிர் கின்ற
கென்னலாம் படியே மனம்பகர் மாடத் தெழில்பெற வமைத்தன ரிலங்க.

வேறு.

398 காவணை நகர மெங்கு மிட்டதிற் கவின்கொண் டோங்கு
மாவண விதானந் தூக்கி வளநகர்க் கழகு செய்தங்
காவண வீதி தோறு மணியணி வாழை வாசப்
பூவணக் கமுகு நாட்டிப் பூரண பொற்கும் பங்கள.

399 அணியணி நிரைத்துப் பூம்பட் டாடைக ளதன்மேற் சுற்றி
மணியினுந் தென்னங் காய்கள் வயங்குமாந் தளிருஞ் சேர்த்துக்
குணிகொணூன் மறையோர் மன்னர் குலத்துயர் நலத்தோ டே
வணிகர்வே ளாளர் தத்தம் வாயில்க டோறும் வைத்தார்.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

## வேறு.

400 ஆணிக் கனக நெடுந்தூணி லாடை பொதிவா ரலங்கரிப்பார்
மாணிக் குறளாய் நிலங்கொண்டான் மணநா ளென்று வருமென்று
பேணிப் பகர்வீர் மறையவர்க ளென்பார் பெண்ணை வளர்த்தவர்க
ளாணி யிறைக்குச் சுருள்வைக்க நலனுர் பலன்க ளுடிடுவார்.

## வேறு.

401 மஞ்சன மாடு வாரும் வரிவிழி யிணைக டம்மி
லஞ்சன மெழுது வாரு மம்மனை யாடு வாரும்
பஞ்சுக ளணிகின் றாரும் பரிபுரப் பதத்தி னேர்ந்த
வஞ்சிபோ லிடையின் வண்ண மேகலை யணிகின் றாரும்.

402 மருவிருங் குழல்க டம்மின் மாலைக ளணிகின் றாரு
மருமறைப் பயன்க டம்மை யாசற விரிக்கின் றாரும்
வருவிருந் தெதிர்கொள் வாரு மனைதொறுங் கொடுசெல் வாரு
மிருமிரு மென்னப் பேணி யாசன மிடுகின் றாரும்.

403 அறுசுவை யடிசில் பேணி யணைந்தவர்க் களிக்கின் றாரு
நறுமலர் புனைகின் றாரு நாசியா பரணம் வெள்குக்
குறுநகை விளக்கின் றாருங் கூன்பிறை நுதலில் வட்
மறுவறு திலத மிட்ட மயிலென வருகின் றாரும்.

404 எழிசை பாடு வாரு மெழின்மலர்க் கோதை யென்றும்
வாழியென் றேத்து வாரு மறையவர் மனையிற் சென்றிங்
காழிமா லெய்து நாளை யறைமினென் றார்க்கின் றாருந்
தோழிய ரோடுங் கூடிச் சூதுகள் பயில்கின் றாரும்.

405 ஓவிய மெழுது வாரு முயிர்ப்புள திதற்கென் பாரு
மாவிபெற் றுடையீர் வாதிட் டாடுமெம் மோடென் பாரு
காவிபோற் சிவந்து நீண்ட கயல்விழிக் கடைக்கூர் வாள
மேவிய விளைஞ ராவி மெலிவுற நலிகின் றாரும்.

406 தண்ணறும் புழுகும் வாசச் சந்தனக் குழம்புங் கூட்டித்
திண்ணைகண் மெழுகு வாருந் தெருக்களிற் றெளிக்கின் றாரு
பண்ணமர் சிந்திற் சேர்ந்த பாடல்கள் பயில்கின் றாரும்
வண்ணமா மணிப்பட் டாடை வறியவர்க் களிக்கின் றாரும்.

407 தேசுறு பொன்னில் விட்டந் திரண்டகால் பட்டுத் தாம்பிட்
டாசறு வயிரத் தாலே யழகுறு பலகை சேர்த்தே
யூசல்க ளாடு மாத ரும்பர்நா டிவ்வூர்க் கொவ்வா
சீசியென் றிகழக் கேட்டுச் சிந்தனை களிக்கின் றாரும்.

MAHAMAHOPADHYAYA
DR U V S IYER LIBRARY



408 பாலிகை பொன்னிற் செய்து பலமுளைப் படுத்து வாரு
மாலிருஞ் சோலை யானே மணஞ்செய வருமென் பாரு
மாலிலைப் பள்ளி கொண்ட வரங்கனார் காமெனன் பாருந்
தாலிவேங் கடவர் முன்னே சமைத்தன ரிவட்கென் பாரும்.

409 வடபெருங் கோயி லுள்ளான் வளர்ப்பமற் றவர்கள் கொள்ளக்
கடவிதோ வென்றின் றுருங் கைப்பிடி வலியி லென்னி
விடவைகை யடுக்கு முண்டேன் மவற்கென விசைக்கின் றுருங்
குடதிசை முடியை வைத்தான் கோமக னமென் பாரும்.

410 சிறுது பெரியாழ் வாருந் திரிந்துமின் றுகந் தன்னை
யார்திருக் கையில் விட்டா ரவர்க்கிவ ளாமென் பாரு
நேர்பெற நால்வ ரொக்க நிரைத்தகை பதிரு லுக்கும்
பார்திசை நின்ற தொண்ட னென்செய்வார் பகரென் பாரும்.

வேறு.

411 குரவைகண் முழக்குவார் கொடிமனை புதுக்குவார்
பாவையி னிரைக்குமா பழமறை பயிற்றுவார்
நிரைய வெளிக்கணே நிலவிசை பரப்பிமால்
வரவையு முணர்த்துவார் மணவினை பயிற்றுவார்.

412 வீதியி னடிப்பொரு வெயின்மணி யொதுக்குவா
போதிம நடக்குமா றுறுநடை பயிற்றுவார் ஸு,
வேதிகை புதுக்குவார் விரைமலர் பரப்புவார்
சாதியி னொழுக்கமே தருகலை வழுத்துவார்.

413 சிறுபறை முழக்குவார் சிலர்பணி விளக்குவார்
குறுநகை பெருக்குவார் குழன்முடி கனக்கவே
யறுபதம் விலக்குவா ரமரர்கள் விடுத்தசீர்
நறுமல ரொதுக்குவார் நவமணி திருத்துவார்.

414 பங்கய முகத்தினர் பஞ்சணை பதத்தினர்
குங்கும மிகுத்தமா கொங்கைகள் பெருத்துளார்
செங்கையி லெடுத்தயாழ் திண்டிம மொலிக்கவே
மங்கல நகர்க்கெலாம் வந்தொலி பரப்புவார்.

415 பேரிகை முழக்கினர் பேரருள் விளக்கினர்
தூரிய முழக்கினர் சூழ்வினை துளக்கினர்
சீரிய முகத்தினர் தேவமர் தரத்தினர்
கூரிய கருத்தினர் கோமள வளத்தினர்.

416 மாசறு குணத்தினர் மான்மத மணத்தின
ல்வரி- ராசறு தனத்தின ராடவர் மனத்தினர்
-16, தேசறு குலத்தினர் தேமொழி வளத்தினர்
வீசிய கரத்தினர் வீதியி னெருக்கினர்
வேல்விழி யிணைத்தினர். வீதியால் நெருக்கினர். 7
வீணைகள் பயிற்றுவார் மேவினை யியற்றுவார்.

417 பான்மொழி வளத்தினர் பனிமதி முகத்தினர்
மேலிடு தனத்தினர் மேகலை துவக்கின
ராலிலை வயிற்றின ராடவர் மனத்தினர்
வேல்விழி யினத்தினர் வீதியி னெருக்கினர்.

418 வேதியர் நெருக்குவார் வேள்விகள் பெருக்குவா
ரோதிய மறைக்குழா வோசைக ணிரப்புவார்
சாதியி னொழுக்கமே சார்வுற நிறுத்துவார்
வீதியி லெடுத்தயாழ் வீணைகள் பயிற்றுவார்.

419 கச்சணி தனத்தினர் கட்கடு விடத்தின
ரச்சிலை பிடித்தகா மற்கரு ளளித்துளார்
வச்சிர மனத்தினர் வற்கலை நிறுத்தினர்
நிச்சலு நெருக்கவே நித்திரை யருக்குவார்.

வேறு.

420 இந்தவகை யனைவர்களு மெழில்விளங்க வலங்கரிப்ப
முந்துமறை தொழுமாதி மொழிந்ததிரு மணநாளாம்
பந்தமறும் பங்குனி யுத்திரத்தின் முனைநாளி
லந்தரத்தி லரம்பையரு மமரர்களு மணியணியே.

421 இரைத்தேத்து மிந்திரனு மியக்கர்களு மெழுந்திறைஞ்சி
நிரைத்தேத்தச் சித்தர்குழா நிலவுமலர் மழைபொழியத்
திரைத்தேத்துங் கடலரசன் சேவிப்பச் செழுமறைக
ளுரைத்தேத்திச் சீவில்லி புத்தூரி னுட்புகுந்தார்.

422 வாசநறு மலரயனும் வாக்கியுமற் றுள்ளவருந
தேசுபொலி விமானமிசைச் செழுமறைக டொழுதேத்த
மாசகன்ற வில்லிபுத்தூர் வளநகரி னுட்புகுந்தார்
வீசுபுனற் சடையானு மெல்லியலா ளுடன்செறிந்தான்.

வேறு.

423 வித்தியா தாரும் வீணைவல் லவரு மேவுதம் மனைவிய ரோடுஞ்
சித்தியா தவர்கள் சித்திய மென்று செங்கண்மா றிருமணங் கா
பத்தியால் வந்து புலருடன் றோன்றிப் பாம்பணைப் பரன்பணி செ
நித்தியா னந்த முறைந்திடும் புதுவை நகரினீ ணகரம தடைந்தா

வேறு.

வேதவி யாதன் சூதன் மேதினி படைக்கப் புக்கா
னோதுமா சுகத்தி முன்ன மொலிகடல் குடித்தோ னுள்ள
போதெலா மரியைப் போற்றும் புண்ணிய வசிட்டன் மிக்க
காதலா லுலகமேத்துங் கவுதமன் கருணை மிக்க.

425 காசிபன் சுதிட்டன் ஞானப் புலத்தியன் கலைக்கோட் டும்ப
ஞசறு சனகன் மிக்க வத்திரி பரத்து வாசன்
பேசிய சனக்கு மாரன் பிருகுமாற் கண்ட ஞதிக்
கேசுறு முனிவ ரெல்லாந் திருமணங் காணச் சென்றார்.

426 முனிவர்க ளுலகின் மிக்க மூதறி வுடையோர் மாயன்
பணிமலர்க் குழலி ஞளைப் பங்குனி யுத்தி ரத்தி
லினியநன் மணஞ்செய் கோல மறைஞ்சிட வேண்டு மென்னக்
கனிபொழிற் புதுவை தன்னிற் கணத்தினி லெழுந்து சென்றார்.

427 அண்டத்துக் குட்பட் டார்க ளனைவரும் புதுவை புக்குப்
பண்டைத்தென் டிசைமீர்ப் பொன்னி மடிமிசைப் பள்ளி கொண்டு
தொண்டர்க்கின் னருள்க ணல்குஞ் சுடரொளிக் கருணைக் குன்றும்
வண்டுற்ற துளவத் தாரான் வரும்வழி நோக்கி நின்றார்.

வேறு.

428 அற்றைநா ளிராப்பக லவணம் வைகினோர்
மற்றைநாள் வைகறை யெழுந்து வாச்சிய
மிற்றைநா டிருமண மென்ற பேரொலி
யுற்றநான் மறையொலி யுலகி னேங்கவே.

வேறு.

429 காரார் குழலாளைக் கலியாண குணங்கள் கைவி டாது
வேரா ரிடையாளை யிறைவாவா நல்கிய வின்சொ லாளை
வாரார் முலையாளை யின்னமுமு தென்ன வளர்த்த தாதை
சீரார் திருமாளிகை முன்றிலினிற் றேவர்கள் சூழ்ந்து போற்ற

வேறு.

430 மாணிக் கத்தின் காலுட்டி வயிரத் திலங்கும் விளைபோட்டுப்
பேணிப் பவளக் கொம்பாலே பெருக்கி நிரப்பி [illegible]
யாணிக் கனகப் பொற்றகட்டால் வேய்ந்து [illegible] வாவணத்துநல
வாணித் திலத்தின் செழுங்கோவை மணிக்கோ வைகளோ டுறத்தூக்

சுற்று மிலங்கும் பொற்றகட்டாற் சுவர்கள் பொதிந்தோ வியமெழுதி
பற்றும் பளிங்காற் றளவிசைகள் படுத்துத் தொடுத்த தொடர்தூக்கி
மற்று முள்ள பலவளமு மணக்கா வணத்தின் மன்னுவித்தா
ருற்ற வரங்கன் குறித்ததின மிகன் [illegible] றேங்கு மொளிவளையை

வேறு.

432 மடந்தையர் கூடி வாச மஞ்சன மாட்டி யீரந்
தொடர்ந்திழு திருவொற் றுடை சுரிகுழற் றுவட்டி முற்று
மிடந்துடிக் கின்ற கோதைக் கிமைப்பினிற் சாத்தி மாற்றி
நுடங்கிடைக் கிணங்கும் பூவி னெய்யபட் டாடை சாத்தி.

433 தேனமர் மொழிக ணல்குஞ் செந்துவர் வாயி னுட்கு
மான்மதச் சந்தங் கந்தக் குங்கும மற்று முள்ள
வானநற் கலவை சாத்தி யலர்கம லங்க ளென்ன
வானவர் வணங்கி யேத்து மலரடி யிணைக டம்மில்.

434 பேசுமங் குலியிற் றோன்றும் பெருவிரன் முடிச்சு மிக்க
வாசறு பீலி கான்மோ திரமயி லடிக ளன்றித்
தேசுற நின்ற கோலச் சிறுவிரன் முடிச்சுஞ் சாத்தி
மாசிலா மயிலின் சாயல் வல்லிதன் புறந்தாண் மீதில்.

435 சிலம்புபா டகநற் றண்டை திகழ்மணிச் சதங்கை சாத்தி
நலந்திக ழரைஞாண் சாத்தி நான்மறை வணங்கி யேத்தும்
வலந்திக ழாழி மாமான் மலரடி வருடி நாளு
மலர்ந்தெழு கமல மன்ன செங்கையங் குலிகட் கான.

436 சிறந்தமோ திரங்கள் சாத்தித் தேமொழி திருமுன் கைக்கு
நிறங்கிளர் பவள மிக்க நீடொளிக் கடகஞ் சாத்திப்
புறம்புட னகழு மிக்க பொலிமணிச் சரிகள் பூட்டித்
திறந்திகழ் கெச்ச மாதி தோள்வளை சிறப்பச் சாத்தி.

437 செப்பெனப் புடைத்து விம்முந் திருமுலைக் கச்சின் மீதே
யொப்பறு முத்துத் தாம மொளிதிகழ் பதக்கஞ் சாத்தி
யப்பரு வத்துக் கான வாபர ணங்க ளெல்லாந்
துப்பறு களத்திற் சாத்தித் துயங்கிரு குழைக டம்மில்.

438 இருகதிர் வட்ட மென்ன விலங்குபொற் றோடுஞ் சாத்தி
மருவுசீர்ச் செவிப்பூச் சாத்தி மாசறு கொப்புச் சாத்திப்
பொருகயல் கழுநீ ரன்ன போர்விழி யிணைக டம்மிற்
கருமுகிற் கழகு நல்கிக் கறுத்தமைக் காப்புஞ் சாத்தி.

439 ஆசிலா முத்திற் பொன்னி லழகுறச் சமைத்த கோல
நாசியா பரணஞ் சாத்தி நளிமதி நுதலிற் றோன்றத்
தேசுறு திருமண் காப்புஞ் சிறப்புடன் சாத்தி யூடே
வாசமார் மஞ்சட் காப்பும் வயங்குறச் சாத்தி னார்கள்.

440 பட்டமுந் திருவும் பூரப் பாளையும் பரிவாற் சாத்தி
மட்டவிழ் குழலில் வாச மலர்த்துழாய் மாலை சூட்டி
யுட்டெளி வுடைய கோதைக் கோங்குசீ ரரங்க னருஞ்
சிட்டரு மகிழும் வண்ணந் திருமுடிப் பூட்டு மிட்டார்.

வேறு.

441 அப்பரிசே மணக்கோலஞ் செய்தாண்டா ளங்கிருப்ப
வொப்பரிய வயனாழ்வார் முகநோக்கி யுத்திரத்தி
லிப்பொழுதை யிலக்கினமே திருமணத்துக் கிட்டதினி
யெப்பொழுது வருமிறைவ னென்றனனென் றலுமாழ்வார்.

## சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

### வேறு.

442 அன்றென் னோடே பங்குனி யுத்தி ரத்தி லாசில்லா
மன்றல் கமழுங் குழலாளை வதுவை செய்ய வருகின்றே
னென்று ரங்க னையருளி னேழை யேனம் மாமாயன்
சென்று மயக்கை யென்னுரிந்து கூறக் கடவ னெனக்கூற.

443 இருந்த வயனை முருக்கிரனு மிமையோர் கோனு மிமையவரு
மருந்த வஞ்சேர் முனிவர்களு மக்ஞு ருரைரேவா மவர்களு
வருந்தி யிரங்கி யனியரங்கன் வாமான் சொல்லோ வெனமரு
திருந்து மாழ்வார் திருமகளா ருரைக்க சென்றென் செயவெனு

444 என்னென் றாண்டான் வினவிட வெழிலா ரரங்கத் தினிதமை
முன்னைய போரிட கட்டுரைத்த முகிழ்த்த முறுவிற் றம்மாய
னின்னம் வந்தா னில்லையினி யென்செய் கேனிங் கியாவர்கட
மன்ன நடையாய் சொலாடி யழுங்கு கின்று முணவுறைந்தார்

### வேறு.

445 வையமர் கருங்கட் கோதை யுற்றதை கேட்ட போதே
மையமின் றஞ்ச வெண்டா மங்கலை நாமெல் லோரு
முய்யவிக் கணத்தி லிங்கே யாக்குவ மம்ப லொல்லா
மைக்கட வண்ணக் கேற்றி யடுகான் னலைந்தா லென்றான்.

### வேறு.

446 சீரார் கருடன் றனைக்கூவிச் சென்றிக் கணத்திற் றிருவரங்கத்
தாரா வமுதைக் கொணருதியே யவனோ டென்னோ டருகமரு
மோரா ஞனநான் றருகின்றே னென்றுள் கோதை யுடனவனு
பாரா யென்னப் பகர்ந்தேகி யரங்கன் பாதாம் புயம்பணிந்தே.

### வேறு.

447 மல்லாருந் திண்புயத் தோய் வளர்புதுவை மாநகரிற்
பல்லாண்டு முன்புரைத்த பட்டர்பிரா னருகியர்க
ளெல்லாரு மியங்கு விலக்கினைத்துக் கொய்தாயேற்
செல்லாருங் குழலியொடுந் தீதுறுவர் சீக்கிரத்தில்.

448 என்னுடைய தோண்மீதி லேறியரு ளென்றுரைப்ப
முன்னுலக மேழுமுண்ட முழுமுதல்வ னப்படியே
பொன்னடியைக் கட்டுரைத்த புள்ளரசின் மேல்வைத்து
மின்னமரு நேமியினு னீள்விசும்பின் மீதானான். மே.

### வேறு.

449 கண்டனர் புதுவை யுள்ளோர் ககனமீ தூறைவோர் மிக்க
வெண்டிசைத் தலத்தி லுள்ளோ ரிருடிக ளாழ்வா ராதி
கொண்டலிற் பொலிந்த மேனி குளிர்மதி வதனங் கைகா

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

450 ஆடினா ரன்பு கூர்ந்தா ரலர்மழை சிந்தி வானோர்
பாடினார் சித்த ரார்த்தார் பங்கயத் தயனும் வாணி
லோடுநீர்ச் சடையி னானு மும்பர்கோன் றானுஞ் சென்று
சூடினார் கருடன் செய்ய தோண்மிசை யமர்ந்த தாளை.

வேறு.

451 சீரார் கருடன் றிருத்தோள்விட் டிறங்கித் தேவர் புடைசூழ
வேரார் மகிழ்சூழ் வடபெருங் கோயி லெய்தி யினிதமர்ந்து
காரார் வண்ண னிந்திரனைக் கண்டாட் டாழ்வார் திருமகளா
வாரார் முலையா டன்னைப்போய் மகட்பே சிடுக வெனவிடுப்ப.

வேறு.

452 ஆங்கவன்போய் மகட்பேச வாழ்வாரு மதற்கிணங்கிப்
பாங்குடனே யிருந்ததற்பின் பாம்பணையும் படர்வானி
லோங்கியசீர்ப் பந்தர்க்கீ ழும்பர்தொழப் போய்ப்புகுந்தான்
பூங்குழலாண் மனமகிழப் பூதலத்தோர் புகழ்ந்தேத்த.

வேறு.

453 பங்கயப் போதி னுள்ளான் பரிந்துநற் சடங்கு காட்டக்
கொங்கலர் குழலி னார்கள் குரவைகண் முழக்க வேத
மெங்கணு நிறைப்பச் சங்க மேழ்கட லொலியி னார்ப்ப
மங்கல முரச மார்ப்ப மந்திரக் கோடி சாத்தி.

454 செந்துவர் வாயி னாட்குத் திருமண மாலை சாத்திப்
பந்தனை காத்திற் காப்பும் பழமறை விதியிற் கட்டிச்
சந்தத் தோளா னீண்ட சோதிவேங் கடவன் மாதை
மூந்துற வளர்த்தோ னாழ்வார் முன்னின்று முகத்தை

ஆங்கவர் தமைநோக் காதே யழகிய மணவா ளற்குப்
பூங்குழற் கோதை தன்னைத் தந்தனன் புனித வெள்ள
தாங்குட னுதகம் பண்ணிப் படிமிசைப் பணிந்து நின்று
நிறங்கமழ் பொழில்சூழ் செல்வச் சீவில்லி புத்

வேறு.

இருக்காதி மறைபுகழு யாவர்களு மானந்தப
பெருக்காற்றி னிடைத்திளைப்பப் பெரியாழ்வார் திருமக
ளொருக்காலுஞ் சிதையாத வோங்குதிரு மங்கிலியக்
திருக்காறைப் பட்டத்தி னுள்ளாகச் செறிவித்தார்.

வேறு.

சீரார் பிரமன் செறிந்தா குதிசெய்ய
வோரார் பெரியாழ்வார் பல்லாண் டெடுத்தேத்த
வாராத காத லடியார் குழாம்புகழக்
காரார் குழலணங்கைக் கண்ணபிரான் கைப்பிடித்தான்

வேறு.

458 மாயவன் கோதை செய்ய மலர்க்கரம் பிடித்த தன்றிச்
சேயிழை திருத்தா டன்னைத் திருக்கரம் பிடித்து முக்கா
லாயமி ம... தீயின் மதிப்பித்... சுவலுவர் பொற்றக்
தீவினை வலஞ்செய் தாங்கே திருக்கையிற் பொரியு மேற்றே.

459 அருந்ததி நோக்கி ...க்க வாருதிக் குழைகை யேர்ந்து
திருத்திய வெள்ளி யாலை ...திலைத் தீவலி யொடும்
விரும்பெருக் கிளைய ருண்ணோர் வாதுமோளர் மெனியோர் கால
நெருங்கின ...ரசி கூற நீணகர் வலம தாக.

460 பாற்கடன் ... ...றிப் பரிதியா ...கள் ...
சீர்ப்பொலி மன்னெனன் ...கிற் செய்யது மணைகள் புகுந்தார்
கார்க்கடல் வருவ ...ன்னுங் கண்ணனும் கருங்கை கோல
வார்ப்பொலி கொங்கை யாளும் வந்தனர் வாயிலூர் சூழ.

வேறு.

வாரணத் தெருத்தம் விட்டிழித் தருள் மாணிக்கத் திருவடி ...ப்பெட்டோட்
டாரண மொலிப்ப வாச்சிய மொலிப்ப வடியவ ரனையவர் துதிப்பப்
பூரண கும்பந் திருவிளக் கெடுத்துப் பூசு ...ரசிகள் பகரக்
காரணப் புலிமா மடந்தையுந் தாமுங் கடிமணக் கனகமா ளிகையில்.

மணவறை புகுந்தார் மன்னனூர் மாலை வழங்கிய மடமயி லொடும்
பணவறை திறந்து பட்டர்கோன் பாரில் வறியவர் பசிகெடச் சமைத்த
வுணவளித் தாடை யாபர ணத்தோ டோங்குசீர் நிதியமும் வழங்கி
வணமலர்ப் பிரம தேசிவா னவர்க்கு மாசறு பேறு மளித்தான்.

அன்னமென் னடையாள் கருடற்கு முன்னை மறைந்தவே காசனை மாட்டு
மன்னரு ளிட்டத்து மருங்கினி லிவளும் வலத்திரு மருங்கினிற் றேனு
மன்னுமா முகிலு மெருமாம் வளையும் மேறிதற் குவமையோன் றில்லை
யென்னலாம் படிநின் றருள்தரு மாண்டா ளிமையவர் முறைமுறை தெ

வேறு.

திருமணம் ... ... வாழ சிவனயின் முனிவர் சித்தர்
தருமணக் கடவுள் வானோ ராதியர் சார்ந்தோ ரெல்லா
மருமணக் குழலி யோடு மன்னனை வணங்கிப் போனார்
பெருமணம் வில்லி புத்தூர் நகர்தனிற் பெறுமுன் வேண்டும்.

வேறு.

465 பட்டர்பிரா னுளமகிழ்ந்து பங்கயக்கட் டனிமுதல்வன்
மட்டவிழ்பூம் பொழிலரங்க மாநகரா னென்மகளை
யிட்டதிரு முகிழ்த்தந்தி லெழுந்துமணஞ் செய்பெற்றே
னுட்டெளிவா லுறநோக்கி லொருகுறைவே றினியுளதோ.

466 என்றுமகிழ்ந் தரங்கனையு மேழுலகுந் தொழுதேத்து
மன்றல்கமழ் குழலியையு மணக்கோலச் சேர்த்தியினிற்
சென்றுதொழு வேமென்னச் செறிந்திறைஞ்சி யக்கோல
மொன்றியசீ ரன்பதினு னூறவிருத்திப் பல்லாண்டும்.

467 இப்படிநீ கோதையொடும் யாவர்களுந் தொழுதேத்த
வொப்பரியா யித்தலத்தி லுறைகுதியென் றுற்றிறைஞ்சிச்
செப்புமறை யடியாருந் திருவரங்கத் தினிதமர்வா
ரப்படியே செய்கின்றோ மென்றருளிப் பின்னுழ்வார்.

முகநோக்கி யறைகின்றார் முகுந்தனார் திருமகனே
மகநோக்கு மேலோர்கள் வணங்கருநம் மூவுருவ
மகனுக்கு மர்ச்சாவ தாரமா யருள்விளங்கப்
புகநோக்கு கின்றேனுன் புத்தூரி லெப்பொழுதும்.

469 ஆதலா லதுசெய்தி யென்றருள வாழ்வாருந்
தீதெலாங் கெடவென்றுஞ் சென்றிறைஞ்சி யுலகுய்யக்
காதலான் மூவரையுங் கணத்தேறி யருள்வித்து
வாதெலாங் கெடவென்றார் நின்றார்பின் மதிளரங்கர்.

வேறு.

470 சீரார் வில்லி புத்தூர்க்குச் சிலை குண்டத் தினிதமரு
மோரார் செல்வ மெப்பொழுது முண்டா யிடுக வெனவிசைத்தங்
காரா வன்போ டாழ்வாரை யரங்க நகரில் வருகவெனக்
காரார் குழலா டன்னோடுங் கண்ணன் கருடன் மேற்கொண்டு.

வேறு.

471 திருவரங்க நகரணைந்து சீபூமி விண்டுவெனுந்
திருவரங்க மொன்றாகி யினிதமர்ந்தா னிறையாழ்வா
ரொருவரங்க மொன்றேனும் புத்தூரி லுறைபவர்கண்
மருவரங்கம் பலவாகி வாழ்ந்தனர்மற் றவர்வருந்த.

ஆதிவட பெருங்கோயி லச்சுதனைப் பணிந்தேத்தி
வேதியர்கள் புடைசூழ விடைகொண்டு கூடலிடைச்
சோதிவளர் மணிவணனைத் தொழுதகன் றங்கழகனையு
நீதியினு லுறவணங்கி நிலவுமணி மதிளரங்கம்.

சென்றணைந்தார் தேவர்தொழுந் திருமாலைத் தாம்வணங்கி
நின்றனரங் காழ்வாரு நெடுமாலு நிகரிலாக்
குன்றனைய மெய்ஞ்ஞானக் குணத்தினனே செய்திறமிங்
கொன்றுளது கேளென்ன வாங்கவரோ டுரைக்கின்றான்.

இத்தலத்தி லொருகோயி லுனக்கென்றே யெடுத்தென்
யத்தலத்திற் கோதையையிக் கருடனையே காசனத்திற்
பத்தர்தொழும் படிபண்ணிப் படிவான முள்ளளவு
முத்தமமாங் குணத்தினனே நீயுமுட னுறைதியென.

475 கட்டுரைத்தான் திருவரங்கத் தினிதமரும் கார்வண்ணன்
பட்டர்பிரா னப்படியே பன்னுவித்துப் பழமறைதேர்
மட்டவிழ்பூங் குழற்கோதை முன்னிலையாய் மதிளரங்க
னெட்டெழுத்தை யெடுத்தோதி யிணையடிக்கீழ்ப் போய்ப்புகுந்தான்.

வேறு.

476 அன்பதினாற் கன்மத்தால் ஞானத்தால் யோகத்தால்
வின்பதரு பத்தியினாற் குருவாக்கியத்தால்
றன்பகன்ற வின்பக் குலக்குடியிற் பத்தியினுன்
முன்புமிக்கார் பட்டர்பிரான் கொத்தாரார் மூலமதில்.

477 ஆங்கவன்றன் பின்னேயா னண்டாளைப் பீசியத்துக்
சொரு நு முலகி னயர்வீட்டி நற்றவிர்
பாசுடலின யாராய்ந்து பார்க்காலு முண்டோங்கொல்
புகழ்மாட் கொத்தார்களை யக்கார் புகன்றிடிலே.

வேறு.

478 ஆக்கை யாவி யபியானைப் பன்னுமைக்கு மான்மாவை
நோக்கிச் சொரூபம் பிறப்பித்து கொண்பில் னைக்கு மிருடிகட்கும்
பார்க்கி லுருவைகை மெருவினை யொத்த வாறி யெனப்பகர்வார்
வாக்கு மனமுஞ் செய்தொழிலு மொன்றாய் நின்ற மதிமிக்கார்.

479 அந்த வாறு மிருடிகட்கு மாழ்வார் களுக்கு முளவேற்றம்
பக்தர் னெல்லாப் பத்தர்கட்கும் பட்டன் றனக்கு முளவேற்ற
முந்த மொழிந்த வாறுமொரு மாறு முகுந்தன் மகளோர்க்கும்
கந்த மலர்ப்பூங் கோதைக்கு மவள வேற்றங் கண்டுரைத்தார்.

வேறு.

480 முனிவர்களி லாழ்வார்கட் கேற்றங் கண்டு
மொழிந்தபடி யென்னென்னின் முனிவர் ஞான
னியிருப்பக் காய்கவர்ந்த வாறு போலும்
கண்டிருப்பக் கரும்புகடித் தெய்த்தல் போலும்
பனிமலர்ச்செந் திருமகள்கோ னுய சோதிப்
பரம்புருட னிருப்பவன் படைப்பிற் றேவைத்
தனிமுதலா மிதுவென்றே நாட்டி நாலுஞ்
சமையங்க டோறுமதற் கிணங்கச் சாற்றி.

481 மாய்ந்துணர்க ளிருடிகளந் நூலைச் சுற்று
மதியாம லாழ்வார்கண் மறையி னந்த
மாய்ந்துதிரு வாய்மொழிக ளருளிச் செய்தே
யச்சுதனே பரமெனவந் தன்றென் றுரைக்
காய்ந்துபிர பஞ்சச்சொற் கலைகடம்மைக்
காற்றிலிடு மிலவம்பஞ் சென்னக் காட்டிச்
சாய்ந்துசரண் புகுந்தேத்துஞ் சமையத் தார்க்குத்
தத்துவத்தைக் கட்டுரைத்த தலைமை யாலே.

482 ஆழ்வார்கண் மேருமால் வரையை யொத்தா
ரருந்தவஞ்சேர் முனிவர்களு மணுவை யொத்தா
ரேழ்பாரி லுள்ளவர்கள் வேதாந் தத்தை
யிகழ்ந்துதிரு மாறிறத்தை யிகழ்ந்த பின்பு
வாழ்வாரோ வாழ்வாரோ மீட்சி யில்லா
மாநரகப் பெருங்குழியிற் குடை வாரும்
வீழ்வாரோ வெழுவாரோ வறியே னந்தோ
விளக்கி[illegible]ன்னியை விருப்பு வாரோ.

483 ஆசிலா வாழ்வார்கள் பதின்மர் தம்பி
லாண்டாளுக் கேற்றமென்கொ லென்ப ராகி
லீசனவர் சுழுத்தியிற்சென் றெழுப்பித் தன்சீ
ரிருந்தபடி காட்டக்கண் டின்புற் றார்க
ளேசுபொலி யாண்டாளுந் திருமா றன்னைச்
சென்றெழுப்பித் தன்குறைகள் செப்பி வாழ்ந்தாள்
பேசருஞ்சீ ராழ்வார்கண் மகளா யாண்டா
டாயாளு ளங்கிலையின் பெருமை யாலே.

484 ஆயநெறி யாழ்வார்க டம்பி லாணிச்
சோதிதரும் பட்டர்பிரா னேற்றஞ் சொல்லின்
மாயவன்மற் றவர்ஞான மங்கா வண்ண
மயர்வறுசீர் மதிநலத்தை வழங்கிக் காத்தா
னுயனெனு மத்திருமா லனக்குக் கண்ணே
றுகாதே காப்பிட்டுத் திருப்பல் லாண்டை
யேயவருட் பட்டர்பிரா னருளிச் செய்தா
னதனாலே யவரிலிவ னேற்ற மாமே.

485 இத்திறஞ்சேர் பட்டனிலும் கோதைக் கேற்ற
மெவணமெனிற் பட்டர்பிரான் புருடன் பொன்று
முத்திதருந் திருமாலும் புருட னென்னு
முறைமையினாற் புருடனுக்குப் புருட னானை
சித்திரஞ்சேர் பெண்புருடன் மேலே வைத்த
சீராளை நேராமோ தேருங் காலை
யத்திறத்தாற் பெரியாழ்வார் தம்மி லேற்ற
மாண்டாளுக் கென்றனர்மெய் யறிவி னோரே.

வேறு.

ஆதலா லாண்டாளு மாழ்வார்க டம்மின்மிக்
காதலரன் மாலைக் கலந்தா ளதனாலுங்
காதிலாழ் வார்களிலிக் கோதைக்கே யேற்றமென
வோதலா மென்று ருணர்வா லுயர்ந்தோர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வடிவழகிய நம்பி தாஸர்

இயற்றிய

# எம்பெருமானார் வைபவம்.

20764
(7423)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய-ஸமயவேதாந்த
ப்ரதிஷ்டாபநாசார்யராய்

எழுந்தருளியிருக்கும்

வானமாமலை ஸ்ரீ இராமாநுஜஸ்வாமி

நியமித்தருளியபடி.

பண்டிதர் P. R. கிருஷ்ணமாசாரியரால்

பரிசோதிக்கப்பெற்று

திரிசிரபுரம்
ரிவ்யூ அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.
1909

(Copy Right.)

# Life of Sri Ramanuja

BY


## VADIVALAGIA NAMBI DASA


EDITED BY


PANDIT P. R. KRISHNAMACHARIAR,


AND

PUBLISHED UNDER THE DISTINGUISHED PATRONAGE OF

**HIS HOLINESS**

**THE SWAMIGAL OF VANAMAMALAI MUTT.**


TRICHINOPOLY

WEDNESDAY REVIEW PRESS.

1909.



*(Copy Right.)*

# PUBLISHER'S NOTE.

Like most other gems of Tamil literature, the Life of Sri Ramanuja by Vadivalagia Nambi Dasa has hitherto lain hidden in cadjan manuscripts, musty with age and decipherable by none but the practised Pandit. It is now for the first time offered to the public under the distinguished patronage of His Holiness the Swamigal of Vanamamalai Mutt whose love of letters is only equalled by his practical zeal in applying as much as possible of the resources of the Mutt over which he presides with such dignity to the promotion of learning, both secular and religious. No less valuable has been the help rendered in its publication by Brahma Sri Pandit P. R. Krishnamachariar who undertook the responsibility of collecting the necessary manuscript copies and editing them,-a task in which he has already shown a rare skill and earned a just reputation by publishing several other works of great merit. It is to be hoped that his indefatigable industry, and vast and accurate scholarship will be the means of bringing to light other manuscripts equally precious. As regards the present publication, it is not quite in the publisher's province to discuss either its intrinsic merits or the beauty of its style. A biography in verse is one of the hardest of literay tasks and its chief difficulty lies in adapting to a full and faithful delineation of the incidents of a life so eventful as Sri Ramanuja's to the exigencies of metre. The conspicuous success which marks Vadivalagia Nambi's work is due to his evident anxiety to acquaint the reader with every detail of the career of his hero, without lingering to impress him with his own scholarship-a failing which is so common to authors whether they sing in verse or expound their thoughts in prose. It is needless to say anything more in praise of a work which is best recommended by the soul-stirring greatness of its theme and the inspiring devotion of its author.

SRIRANGAM,
*October 8, 1909.*

S. M. RAJA RAM RAO.

20764

பண்டித. கா. ஸ்ரீநிவாஸய்யங்கார்
பதிப்பாசிரியர்
திருஞானமுத்திரைப் பிரசுராலயம்
ஸ்ரீபெரும்பூதூர்

# எம்பெருமானார் வைபவம்

—————(*)—————

துன்ப நீக்கி யிதுதீர்ப்ப னென்னத் துலங்கும் பாற்கடலு
ளின்ப யோகத் துயில்கொள்ளு மிறைவ னிந்த விருநிலத்தின்
முன்பு தம்பின் போந்திலங்கை முற்றுஞ் செற்று விலக்குமணை
வன்பின் வாரி யெனுநீதி யனந்தாழ் வானை யழைத்தருளி. (க)

ஆசி லாத காதலினை யாள வந்தார் நம்முடைய
தேசு பொலிந்த தரிசனத்திற் பிரவர்த் தகரைத் தேடியுளம்
வேசற் றிருந்து கரைகின்றார் விரைவி னேகிப் பூதூரி
னேச முடைய வாசூரிப் பிள்ளை* மகனாய் நீதோன்றி. (உ)

வேறு.

வாரு முத்திநெறி யெப்பொழுது மிருநிலத்தி
லோரான்† வழியாக வருமந்த வுண்மையினைச்
சீராருந் தேசிகர்கள் பலர்க்குமுப தேசித்துப்
பாராரப் பரப்பியெனைப் பலரறியும் படியாக்கி. (௩)

வேறு.

பிறந்து தோன்றா றனைப்போற் பெருநீர் சூழ்ந்த புவியினமை
மறந்து தியங்கு மானிடர்க்கு மாசின் ஞான மளித்தவர்கள்
சிறந்த செய்கை சொற்சிந்தை யென்பா லாக்கும் படிசெய்தங்
கறந்தன் னிலையை‡ வழுவாம னிறுத்தி வாவென் றருள்செய்தான். (௪)

வேறு.

திருமகள்கோ னருள்புரியச் சீபெரும்பூ தூர்நகரின்
மருவுதிரு வாசூரிப் பிள்ளைதிரு மகனாகிப்
பொருவரிய காந்திமதி§ வயிற்றுதித்துப் பூதலத்தி
லருமறைசேர் சித்திரையி லாதிரையி லவதரித்தான்.¶ (௫)

---

* இவருக்கு ஆஸூரி கேசவப்பெருமாள் என்றும் ஸர்வக்ரது தீக்ஷிதர் என்றும் ஸர்வக்ரது கேசவ ஸோமயாஜியார் என்றும் திருநாமமுண்டு.
† ஓராசான் வழியாக என்றும் பிரதிபேதம்.
‡ அறந்த நிலையை என்றும் பாடம்.
§ இவருக்குப் பூமிப்பிராட்டியார் என்றுந் திருநாமம.
¶ சகவர்ஷம் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பதுசென்ற வர்த்தமான பிங்கள ஸம்வத்ஸரத்தில் ஸ்ரீமத்தான சைத்ரமாஸத்தில் சுக்லபக்ஷத்தில் பஞ்சமி குருவாஸர ஸஹிதமான திருவாதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்தாரென விவரங் கண்டுகொள்க.

வேறு

மருளுறு மூலக வஞ்ச மாயவல் லிருளைச் சிக்குந்
தெருளுறு மிரவி யென்னத் திருவனந் தாழ்வான் மாய
னருளுறு சிறுவ னாகி யவனியிற் றோன்றத் தோன்றா
விருளுறு சமயக் கங்குல் விடிந்ததென் றெவரு மேத்த.

வேறு.

பத்தியின் கொழுந்தோ நயிச்சியக் கொழுந்தோ
பாரதந் தரியத்தின் கொழுந்தோ
முத்தியின் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ
மூதியவ ருளத்தினில் விளையுஞ்
சித்தியின் கொழுந்தோ செழுந்தவக் கொழுந்தோ
தேசிகர் சிந்தையுட் டிகழும்
புத்தியின் கொழுந்தோ புண்ணியக் கொழுந்தோ
போதத்தின் பொலிசுடர்க் கொழுந்தோ. (எ)

டலகெலாந் துதிக்குங்கருணையின் கடலோ வோங்குமா னந்தமாக் கடலோ
பலகிலா வின்ப வமுதமாக் கடலோ வாசுறு கமையருட் கடலோ
மலமிலா நிலைசேர் போதவான் கடலோ வென்றென்று மதலையைக் கண்டார்
பலபல பகரப் பாலனுய்க் கிடந்தான் பங்கயக் கண்ணனுக் கிளையான். (அ)

வேறு.

அப்படியே யுலகுய்ய வவதரித்த சிறுவனுக்கங்
கிப்படியின் மடக்கொடியா ரின்புறவே யூர்ந்தினத்திற்
செப்பரிய பொற்காப்புத் திருவருளாற் செறிவித்து,
முப்பொழுதுங் கோதாட்டி முலையூட்டி மூன்றுலகும். (கூ)

துன்பகல வளர்த்ததற்பின் றென்றுமறு திங்கடனி*
லன்புறுநற் றிருநாம மிளையாழ்வா ரெனவருளி
முன்பின்மறை விதித்தபடி பாறென்றூக் கனிபெய்த
வின்பமுறு மின்னமுத மருத்துவித்தா ரேந்திழையார்.† (கo)

வேறு.

பூங்கவ னவணம் வளருநாட் செய்ய வலர்கம லத்திணைப் பதத்திற்
றங்குபொற்சதங்கை தண்டையோடணிந்து தன்னையே யனையவன் மருங்கி
லோங்குபொன்னரைஞாண்கிண்கிணிமார்பிலொளிநிகழைம்படைசுருண்
பூங்குழன் முடியிற் சுட்டிகை கட்குப் பொருவறு கெச்சம தாதி. (கக

* பெரிய திருமலைநம்பி பன்னிரண்டாந் திவஸத்திலே நாமகரணஞ் செய்தாரென்
குருபரம்பராப்ரபாவத்திற் சொல்லுகிறது.
† அருந்துவித்தா ரீன்றெடுத்தார் என்றும் பாடம்.

# எம்பெருமானார் வைபவம்

அவயவந் தோறு மழகுற வணிந்தங் கரிவைய ரணிமுலை யருந்தி
நவையறத் தவழ்ந்து தளர்நடை நடந்து நாடொறும் பேதைய ரிழைத்த
சுவையறச் சுவைசேர் சிற்றிலை யழித்துச் சுருதிக டொடர்ந்துபின் செல்லக்
கவையறுகுணத்தானுருளுறுசிறுதேர்கவின்பெறவோட்டிமீட்டிலாவி. (கஉ)

வேறு.

மாசற வளரு நாளின் மறையவர் விதித்த வண்ணம்
ஆசறு சவுளஞ் செய்தங் கலங்கலஞ் சோதி* மார்பிற்
றேசுமுப் புரிநூல் சாத்திப் பிரமசா ரியத்தைப் பேணி
யீசனு ரருளி னாலே யீரிரு மறைக ளோதி. (கங)

செருக்கிள ராழி சங்க மேந்திய திருமா லன்பா
லிருக்கொடு மூன்று மோதி யாவரு மிறைஞ்ச நின்றார்
மருப்பொலி குழலி னுங்கோர் மாசறு மயிலைப் பேசித்
திருக்கலி யாணஞ் செய்து சிலபகல் செல்லு நாளில். (கச)

மாதவன் வடிவைக் கூறு மன்னுசாத் திரத்தின் மீதே
காதன்மிக் குடைய வன்பாற்† காஞ்சிமா நகரு‡ ளெய்தி
யாதவப் பிரகா சன்பா லெலையறு கலைக ளோதிப்
பூதல மிறைஞ்சி வாழ்த்தப் பொருவற வாழு நாளில். (கரு)

பாக்கியந் திரண்டா லன்ன§ பான்மையா லிளையாழ் வாரோர்
வாக்கியந்¶ தனக்கன் றத்த மற்றவ னோடு கேட்பத்
தூக்கிய வுணர்வோன் றில்லான் சுருதிச்சொல் லன்றி வேறொன்
றாக்கியப் பொருளைக்|| கூற வாசறு மிளையாழ் வாரும். (கசு)

மற்றதைக் கட்டி யந்த மறைப்பொரு ளுளவா கூறக்
கற்றன னிவனோர் தேவ னெனவவன் கருத்து ணேக்கப
பெற்றதிவ் வுலக முன்னைப் பெருந்தவ முடைய தென்று
னுற்றவ னெறிக ளெல்லா வுலகமு மறிந்த வன்றே. (கள)

எண்ணருங் கலைகள் வல்ல யாதவப் பிரகா சன்பா
னண்ணியோர் மறையோன் கற்ற நான்மறை தன்னி லிந்த
மண்ணின்மற் றொருவர் காணா வாக்கியத் தத்தந் தன்னைத்
திண்ணமா யுரைத்தா னென்னுஞ் சீருரை தேச மெங்கும். (கஅ)

---

* அலங்கலங் கோதைமார்பில் என்றும் பாடம்.
† அன்பன் என்றும் பாடம்.
‡ பெருமாள் கோயிலுக்கருகான திருப்புட்குழியிலே என்பது குருபரம்பராப்ரபாவம்.
§ திரண்டாலென்ன என்றும் பாடம்.
¶ "ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம" என்கிற சுருதிவாக்கியம்.
|| ஆக்கிய பொருளை என்றும் பாடம்.

ஆனமை யரங்க மன்னு மாளவந் தாருங் கேட்டுத்
தேனமர் கமலத் தார்ரோன் சீபெரும் பூதூர் மன்னு
மானவா சூரிப் பிள்ளை மகனிளே யாழ்வா னென்போன்
றூனவ னேயா மிந்தத் தரிசனத் தலைவ னென்ன. (கசு)

சென்றுநா மவனைக் கண்டு திரும்பிட வேண்டு மென்ன
வன்றுதந் தாளின் முன்ன மாச்சரித் தவர்க ளோடுங்
கன்றுறை தலத்திற் கற்றுக் கருத்துடைந் தேகு மாபோ
லொன்றிய கருணை மிக்கா ரொளிவளர் காஞ்சி புக்கார். (உ0)

ஆரரு ணிறைந்த சிந்தை யாளவந் தாரு மன்பாற்
பேரரு வாளர் தம்மைப் பிராட்டிமுன் னிலையாப் போற்றிச்
சீருற வணங்கி யாங்கே திருவனந் தாழ்வான் கோயி
னேர்பெற விருந்தா ரெங்கே யவனென நினைவி னெண்ணி. (உக)

இப்படி யவரும் வைக யாதவப் பிரகா சன்பாற்
செப்பருங் கலைக ளோதுந் திரளுமற் றிளையாழ் வாருந்
தப்பறு மவனுந் தோன்றத் தமரொடு மாள வந்தா
ரப்பொழு தவரை நோக்கி யருகினின் றூர்க ளோடும். (உஉ)

செப்புவா ருரைமி னிந்தத் திரளிடை யிளையாழ் வானுந்
தப்பறு கலைகள் வல்லா னெவனவ னென்னத் தக்கோ
யொப்பறச் சிவந்து நீண்ட வுருவின னவன்கா ணேக்கா
யிப்பொழு தென்றூர் நின்று ரிலங்குசீ ராள வந்தார். (உந)

தேனமர் கமலக் கண்ணற் றிருந்துற நோக்கி யிந்த
மானுபா வன்றூன் வந்தெம் மதத்தினி லுறுவா னுகிற்
போனகா லத்தின் மாறன் பொருவென வுலகை யெல்லா
மூனமி லின்ப வீட்டி லுறும்படி பண்ணு மென்ன. (உச)

சிந்தனை செய்து நின்று திருமகள் கோனே யிந்த
வந்தமில் குணத்தி னானை யடியனேன் றனக்குப் பின்பிங்
கெந்தைநின் றரிச னத்துக் கதிபனு யிருத்தி மண்ணோர்
பந்தமாம் பிறவி நீங்கிப் பரகதி யடையும் வண்ணம். (உரு)

எண்ணின னடியே னிந்த விருநில மூய்யும் வண்ணங்
கண்ணனே யவண்ஞ் செய்தென் கருத்திடர் கெடுப்பா யென்ன
வுண்ணெகி ழன்பாற் போற்றி யோதநீர் வண்ண னுர்க்குத்
திண்ணவிண் ணப்பஞ் செய்து திரளொடுந் திரும்பிப் போனர். (உசு)

2076 4



போனவர் திரள்க ளோடும் பூம்புன லரங்கம் புக்கா
ரீனமி லிளையாழ் வாரும் யாதவப் பிரகா சன்பா
லானபல் கலையு மோதி யமருநா ளொருநா ளாங்கே
மானவேற் சோழன் பெற்ற மடக்கொடி யொருத்தி தன்னை. (உஎ)

வேறு.

விதியாற் பிரம ராக்கதனங் கொருவன் விரும்பி மிகத்தீண்ட
மதியா ளொருமந் திரவாதி யுண்டோ வீதிம் மடக்கொடியைச்
சதியா முன்னந் தீர்ப்பதற்கென் றரசன் றேடத் தாரணியில்
முதியா ரரசன் முகநோக்கி மொழிவார் மன்னர் மன்னவனே. (உஅ)

வேறு.

யாதவப் பிரகா சன்மற் றியாவையும் வல்லா னந்தப்
போதமிக் கவன்பேர் சொல்லிற் போக்கரப் போமி தென்ன
வோதினர் மன்ன னன்றென் றொருவனை நோக்கி யந்த
வேதியர்க் கிதனைக் கூறிக் கொணர்கென விடுத்து விட்டான். (உகூ)

மற்றவன் சென்று நின்றம் மந்திர வாதி யோடே
யுற்றமை யனைத்து மன்ன னோதிய வாறுங் கூறக்
கற்றவ னவனை நோக்கிக் கடுப்பினி லேகி நீயச்
சிற்றியற் பிசாசை மன்னன் றிருமக ளாரை விட்டு. (௩௦)

விரைவினும் போகச் சொன்னே மென்றுநீ மீண்டு சென்றங்
குரையவை சொல்லா முன்ன மோடுமென் றுரைக்கத் தூத
னரசர்கோன் றிருமு னெய்தி யத்திறங் கூறிப் பின்னவ்
விரைசெறி குழலி னாளை மேவிய பிசாசி னோடே. (௩க)

இன்னல்செய் பிசாசே யுன்னை யாதவப் பிரகா சன்றான்
மன்னவன் மகளை விட்டு மற்றொரு தலத்திற் போவாய்
சொன்னனன் விரைவி லென்றான் றூதுவ னதுவு மாங்கே
தன்னிரு கரங்[illegible]ட்டித் தரணியுங் குலுங்க நக்கே. (௩௨)

[illegible]யீங் கிரு[illegible]ண்டா மெனச்சொலு மேழைப் பார்ப்பான்
றன்னையீங் கிருக்க வேண்டா மென்றுநான் சொன்ன தன்மை[illegible]
யுன்னைநான் வேண்டிக் கொண்டே னுரைத்துமீ ளென்ன வோதப்
பின்னையுந் தூதன் மீண்டப் பிரமராக் கதன்சொல் லெல்லாம். (௩௩)

மந்திர வாதிக் கோத மற்றவன் கோபத் தோடு
மந்தரத் தமர ரேனு மடக்குவ னுற்ற லென்னச்
சுந்தர மயிலைத் தீண்டித் துயர்செயும் பிசாசின் முன்னே
வந்தனன் மந்தி ரித்த வாக்கொடு மறைகள் வல்லான். (௩௪)

மன்னனுங் காண நின்று மந்திர வாதம் பண்ண
வன்னமென் னடையாண் மேலே யணைந்தவன் பிசாசு பார்ப்பா
னென்னடா செவிக்கப் புக்கா யிதுவன்றோ வதுதா னென்ன
முன்னூற வோதிப் பண்டே முடக்கிய காலை நீட்டி. (௩௫)

உன்னைநீ யறியாய் பார்ப்பா னுருவெடுத் திங்கு வந்தா
யென்னையு மறியா யென்றால் யானுனக் கஞ்சு வேனோ
பின்னைநீ மந்தி ரித்தென் பெறும்பயன் பராந்தா வென்ன
முன்னைநான் மறைகள் வல்லான் மூண்டமந் திரத்தை விட்டே.(௩௬)

பண்டுநான் யாவ னீயார் பகருதி பிசாசே யென்னத்
திண்டிறன் மன்னன் முன்னே மந்திர வாதி செப்பக்
கண்டுகொ ளுன்னை யென்னைக் கழறுவ னென்றப் பேயு
மொண்டொடி மேலே யேறி யுரைக்குமந் தணநீ முன்போர். (௩௭)

உடம்புநீ பார்ப்பா னானூற் றனக்குமன் றெனக்கும் வந்த
நடுங்கிடா நன்மை யெய்து நானிலந் தன்னி லுற்ற
கொடும்பழி யிரண்டு நானே கூறுவ னிருந்து கேணீ
யொடுங்கிய கருத்தாய் முன்ன மோங்குசீ ரரங்கந் தன்னில். (௩௮)

வேறு.

இருந்த பாக வதர்சிலர்க ளெழிலார் திருவேங் கடத்துறையுங்
கருந்தண் முகிலை யடிவணங்குங் காத லோடும் புறப்பட்டு
வருந்த நடந்து வரும்வழியின் மதுராந் தகத்துக் குளக்கரையில்
விருந்து சிலர்கள் சமைத்தளிப்ப வருந்தி யிருந்து விடாய்தீர்ந்தார். ()—

சிந்தை குளிரப் புறங்குளிரத் திரளோ டெழுந்தே யவர்போனா
ரந்தக் கரையி லொருபுற்றி லமர்வை நீயோ ருடும்பாகி
வந்த மேலோர் சேடத்தி லொன்றை நீயுன் வாய்க்கொள்ள
விந்த வுடம்பு பெற்றனையா லீதுன் சென்ம மிதுவன்றி. (௪௦)

வேறு.

உன்னுடைச் சென்ம முற்று முணர்ந்தெடுத் துரையா நின்ற
வென்னுடைச் சென்மந் தன்னை யாவதப் பிரகா சாகேள்
முன்னுடைச் சென்ம நானோர் பிராமண னாகி மூவர்
தன்னுடை யருள்பெற் றுய்வான் றரைமிசை யிருந்தோர்வேள்வி.(௪௧)

பண்ணினேன் கன்மந் தப்பிப் படிமிசை யுடல்விட் டிங்கிப்
பெண்ணினை விதியாற் றீண்டும் பிரமராக் கதனு மானேன்
விண்ணினை நண்ண வெண்ணி வெகுண்டுபோ தாலத் துற்றே
னெண்ணிய யாகத் தங்கோ ரெட்டனை யளவு கன்மம். (௪௨)

# எம்பெருமானார் வைபவம்.

தப்பிடச் செய்த வஞ்சத் தமியனேன் பட்ட கட்ட
மொப்பிலாய் கண்டா யென்று னுரைத்திடும் யாகம் யார்க்குஞ்
செப்பிட வெளிது கன்மஞ் சிதைவற முடித்துக் கூட்ட
வப்பனே யரிது காணம் மறிவினு லாயுங் காலே. (௪௩)

இறையும் பிழையா வகைபண்ணும் யாக மெவர்க்குங் கூடாதம்
முறையே செய்து முடிவுற்றாற் பயன்மேன் முளரியயனுலகி
னுறையு மற்றை வினைதொலைந்தா லுடனே திரும்பு மாதலினன்
மறையின் முடிவில் வீற்றிருக்கு மாய னடியா ரடிபேணி. (௪௪)

தொண்டு செய்து நிற்பவர்க டுகெடார் செல்வச் சுகவீட்டி
லண்ட ரேத்தும் படியடைவ ரடியா ரளவில் பிழைசெயினுங்
கண்டுங் காணுக் கண்ணுடையான் கமலக் கண்ண னிதினெளிதோன்
றுண்டு கொண்ணிற் பவர்க்கவன்ற னுலகின் மேமேலா முலகுளதோ. (௪௫)

வேறு.

ஆங்கவன் றொண்டர் தொண்டர் தொண்டனென் றறைந்த மாற
னோங்குசீ ரருளை யெல்லா வுலகமு மறியு நீயும்
யாங்குட னறிதி யந்தப் பத்தர்க டெய்த்த சேடம்
பூங்கழல் விளக்குந் தீர்த்தம் புலவர்க்கும் புனித மன்றே. (௪௬)

உடம்புரு வாகி மண்மீ தொழிவிலா வஞ்சத் துற்ற
விடும்பையைக் கெடுத்திடு மேலாம் யாக்கையைத் தந்த தந்தக்
கடும்பசி யற்ற தொண்டர் தளிகையிற் கழித்த சேடந்
தடங்குமோ ரவிழிற் பாதி யெனிலவை யரிய ரென்றே. (௪௭)

நானுனக் குரைக்க வேண்டா நான்மறை யறியு மன்றித்
தேனமர் கமலத் தாரோய் சிந்தையி னுணர்ந்து நீயே
தானறி தக்க தன்றோ தம்மையே யனையார் செய்கை
யூனமி லாதா யென்ன வொண்டொடி யிடத்தில் வைகும். (௪௮)

பிரமராக் கதனுங் கூறப் பிடியடி யென்று சென்ற
வுரமராக் கண்ட தேரை யாமென வொடுங்கி நின்று
திரமராச் சிந்தை யோனுந் தெளிவுறத் தெளிந்து நின்று
மரமரா மரங்க ளெய்த மாயவன் செயனு மன்னன். (௪௯)

அடியவர் பெருமை தானு மாக்கிய யாகந் தப்பி
முடிவிலாத் துயரத் துற்ற முதியவன் றிறனு நோக்கி
நெடிதுபோ துணர்ந்து நின்று நீதியோர் நின்னை யொத்தார்
படிமிசை யொருவ ரில்லை யெனப்பல கானுங் கூறி. (௫௦)

தேனமர் துழாயான் றொண்டர் சீபாதம் விளக்குந் தீர்த்தம்
போனகஞ் செய்த சேடம் புசித்தவர் தமக்கு மிவ்வா
றீனமாம் பிறவி யுண்டோ வியம்புதி யென்ன நின்றான்
மானமார் பிசாசு மற்றும் மறையவன் றன்னை நோக்கி. (ருக)

நன்றுநீ கேட்ட தன்மை நவையிலாய் பசியி னாலே
சென்றுற வருந்த லன்றித் திருந்திய ஞானத் தாலே
யன்றுற வருந்தப் பெற்றா லணைந்திடார் பிறவி யென்ன
வொன்றிய மறைகள் வல்லா னெக்குமென் றுளார்வா னோக்கி. (ருஉ)

சீருறு நிலையா யிந்தச் சேயிழை தன்னை விட்டிங்
காருறச் சொல்லிற் போவா யறையென வந்த னாளா
னேருற நின்று கூற நித்தியர் தம்மி னின்பா
லேருறு சுலோக மோதி யிருப்பதோர் திருப்பே ருண்டு. (ருங)

அவனெனைப் போகச் சொன்னாற் போகின்றே னன்றி யிங்கே
சிவனயன் வரினும் போகே னென்றது செப்பப் பார்ப்பா
னெவனவன் காட்டா யென்ன வெழுந்திளை யாழ்வார் தம்மை
யிவனெனத் தூண்டிக் காட்டி யிணையடி யிறைஞ்சி நிற்ப. (ருச)

எந்தையு மதனை நோக்கி யெங்கிருப் பாய்நீ யென்ன
வந்தமில் குணத்தா யிந்த வரசிடை யுறைவே னென்ன
விந்தமா மயிலை விட்டின் றேகுதற் கடையா ளந்தான்
வந்தநீ யுரைத்தி யென்ன மாசறு பிசாசு கூறும். (ருரு)

விரைசெறி குழலி னாளை விட்டுநீ போகச் சொன்னா
லரசினை முறித்தப் பாலே யேகுத லண்டயா ளந்தா
மரைநெடுங் கண்ணாற் கன்பா வென்றது வணங்கி வாங்கே
தரைமிசை யிருந்த வேதத் தலைவனும் போதி யென்றான். (ருசா)

ஆங்கவன் வாக்கு விள்ளு முனமெழுந் தரசைத் தள்ளி
யோங்கிய பிசாசு போக வுலகையாண் மன்னன் பெற்ற
பூங்குழல் வெள்கி யந்தப் புரத்தினுட் புக்காள் வையந்
தாங்குமோர் தரும வைப்போ விவனெனப் பலருஞ் சாற்ற. (ருஎ)

எண்ணரும் புகழ்சேர் மன்னன் யாதவப் பிரகா சன்பி
னண்ணிய புலவர் பூதூர் நாதனை மகிழ்ந்தார் மீண்டப்
புண்ணியக் கொழுந்தி னோடும் புலவர்க டலைவன் போனா
னுண்ணெகி ழறிவின் மிக்க வேந்தனு முறையு ளானான். (ருஅ)

207.64
7223



இப்படி நிகழ்ந்த பின்னும் யாதவப் பிரகா சன்பாற்
செப்பரு மிளையாழ் வாருஞ் சிலபகல் படிக்கு நாளிற்
றப்பற வொருநா ளந்தத் தலைவனுக் கெண்ணெய் தேய்த்தா
ரப்பொழு தவனை நோக்கி யாசறும் பூதூர் வள்ளல். (௫௯)

இந்தவாக் கியத்துக் கர்த்த மியம்புதி முதியோ யென்ன
வந்தவாக் கியத்தைக்* கூற வவனுமன் றதற்கு வாக்கில்
வந்தவா றொருபுன் சொல்லை வழுத்தமற் றதனைக் கேட்ட
வந்தமில் குணத்தி னானு மாருயிர் மிகவும் வாடி. (௬௦)

இருகணீர் பெருக்க வாங்கே† யாதவப் பிரகா சன்றன்
மருளிரு துடையில் வீழ்ந்து சுறுக்கென வாளி யொப்ப
வுருவிட வவனு மஞ்சி யுத்தமா பூறை யென்பால்
வருகலை கற்ற லின்றே மாசிலா யகல வென்ன.‡ (௬௧)

செப்பினு னிளையாழ் வாருஞ் சிலகலை யிவரிற் கற்றோ
மெப்படி யெனினும் போதி நீயென வியம்பி யன்றி
யப்புறத் தேக ரீமை யெனமயிர்த் தொடரில் யானை
தப்புற நின்று வாடுந் தன்மைபோற் சலித்து நின்றார். (௬௨)

அன்றவன் போதி யென்ன வருளிய பொழுதே தாமு
நன்றென வகன்றார் மாய னம்மையு மெடுத்தா னென்னச்
சென்றரு ளாளற் கன்பின் மஞ்சனஞ் சிறப்பி னோடு
மொன்றிய மனத்தர் சாலைக் கிணற்றினி லுவந்து கோரி. (௬௩)

தினத்தினங் கொடுத்து மாயன் றிருவடி வணங்கி யாங்கே
மனத்தினி லெழுந்த வன்பின் *வாழ்ந்தனர் சிலநாள் வாழப்
புனத்துழாய் மாலை மார்பன் பூம்பொழி லரங்க மன்னி
யினத்திர ளோடும் வாழு மெழிறிக ழாள வந்தார். (௬௪)

எண்ணிய படியே யிந்த யாதவப் பிரகா சன்பா
னண்ணிய விளையாழ் வாரு நாரணற் கான வாற்றை
மண்ணினிற் சிலவர் கூறக் கேட்டுள மகிழ்ந்தன் பாலப்
புண்ணியக் கொழுந்து கேட்பப் போயிதைப் பலகா லோதி. (௬௫)

---

"தஸ்ய யதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிற சுருதி வாக்கியம்.
ததும்பியாங்கே என்றும் பாடம்.
"ஸர்வங்கல்விதம் ப்ரஹ்ம," "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" இத்யாதி வாக்கியங்களை
த்வைத பரமாக யோஜித்து ஜீவப்ரஹ்மணோரைக்யம் ப்ரதிபாதிக்க, இவரும் அதை
ாகரித்து அவ்வாக்கியங்களை விசிஷ்டாத்வைத பரமாக யோஜித்து அர்த்தஞ்
ால்ல, அவனும் அதிகுபிதனாய், 'இன்று தொடங்கி என்னிடம் வாசிக்கவேண்டாம்.
ம்முடைய புத்திக்குத் தகுதியான விடத்தேபோய் க்ரந்தங் கேளும்' என்று போகச்
ான்னான் என்று குருபரம்பராப்ரபாவத்திலுள்ளது.

வருதியென் றருகே நின்ற மாசறு பெரிய நம்பி
திருமுக நோக்கிச் செப்பிச் சீர்பெறத் தாமுன் சொன்ன
சுருதியின் செல்ல வஞ்சு தோத்திரங் கொடுத்து விட்டா
ரிருபதம் வணங்கி யந்த நம்பியும் விரைவி னேகி. (சுசு)

கண்ணனெம் பெருமான் வைகுங் காஞ்சிமா நகரு ளெய்தி
யுண்ணெகிழ் கருணை மிக்க வோங்குபூ தூரின் வள்ளல்
விண்ணவ ரிறைஞ்சச் சாலைக் கிணற்றினில் விரைநீர் கோரி
மண்ணவர் துதிப்ப வேகும் வழியினின் மகிழ்ச்சி யோடும். (சுஎ)

இருந்துதம் மாள வந்தா ரிசைத்ததோத் திரத்தை வாக்காற்
பொருந்துமே மூலகுந் தீசேர் பொன்மெழு காகும் வண்ணந்
திருந்துற வோதக் கேட்ட சீபெரும் பூதூர் வள்ள
லருந்தவ முடையார் முன்ன மருளிய பாட றம்மில். (சுஅ)

வேறு.

பிரமா சிவவென் றுலகேழும் பேச வினிய சுலோகத்தைத்
திரமாய்க் கேட்டன் றிளையாழ்வார் சிந்தை தெளியும் பயனுணர்ந்து
பரமாய் நின்ற வருளாளர் பாதாம் புயத்திற் பரிந்துருகி
மரமா யசைவற் றோர்கடிகை நின்றார் பகரு மறையவனே. (சுகூ)

வேறு.

யாரிது பகர்ந்தா ரென்று ராளவந் தார்கா ணென்று
சீர்பெற நம்பி செப்பச் சீபெரும் பூதூ ரானிப்
பார்மிசை யுண்டோ வந்தப் பத்தனைக் காண லாமோ
நேர்பெற வுரையீ ரென்ன நெகிழ்ந்திளை யாழ்வார் கூற. (எO)

வேறு.

பெரியநம்பி யிளையாழ்வீர் பிரமனரன் காண்பரிய
யரியையிறை விட்டகலா வாளவந்தார் தொண்டரொடும்
விரிபொழில்சூ ழரங்கத்தின் மேவுகின்றார் நீர்விரைவில்
வரிலவரைக் காணலா மின்றென்ன வகுத்துரைத்தார். (எக)

நன்றென்ன விளையாழ்வா ரக்கணத்தி லாரணன்முன்
சென்றந்த மஞ்சனத்தைத் திருவடியிற் பரிமாறி
யொன்றியசீ ரன்பினொடு முற்றிறைஞ்சி யாளவந்தா
ரென்றொருவர் தென்னரங்கத் திருக்கின்றா ராமவரை. (எஉ)

வேறு.

கண்டு வணங்கிப் புகழ்ந்தடியேன் கடுப்பின் மீள வருகின்றேன்
கொண்டல் வண்ணா விடையென்னக் கோதில் பெரிய நம்பியொடு
மண்ட ரேத்தும் படிநடந்தா ரரங்க நோக்கி யந்நாளிற்
றொண்டர் குமாக்க ளினிதமர மாள வந்தா ரெனுந்தூயோன்.

வேறு.

சீராருந் திருக்கோட்டி நம்பிதனைத் திருமாலை
நேராக வாண்டானை நிலையாருந் திருமலையி
லேராரு நம்பிதனை யழைத்தாங்கே யுடனிருத்தி
நாராய ணன்வீட்டை நண்ணுதுநா நீரெல்லாம். (எச)

வேறு.

இருந்து பெரிய நம்பிதனை யிளையாழ் வானுக் கிதங்கூறித்
திருந்து பகவற் சம்பந்தம் பண்ணித் திருமந் திரந்துயத்தைப்
பொருந்த வுபதே சித்திந்தப் புவியை யுய்வித் திடச்சொன்மின்
வருந்த வேண்டா மென்பிரிவி லென்னத் தேற்றி வைத்திருமின். (எரு)

ஆங்க தற்பின் றிருக்கோட்டி நம்பி யிளையாழ் வாருக்குப்
பாங்கிற் சரம சுலோகத்தைப் பாகம் வருத்தி யுரைசெய்க
வோங்கு திருமா றனையாண்டா னுன்பால் வைத்த தமிழ்வேதந்
தாங்கும் பொருள்க ளனைத்தையுமத் தலைவன் றனக்கே சாற்றிடுக. (எசா)

அன்பு மிக்க திருவரங்கத் தரைய ரிடத்தி லிரண்டுண்மை
முன்பு வைத்தோ மதையந்த முதல்வற் குரைக்கும் படிசொன்மி
னின்ப மிக்க வான்மீகி யிசைத்த ராமா யணமனைத்தும்
பின்பு திரும லைநம்பி பிள்ளைக் கருள்க வெனப்பேசி. (எஎ)

வேத நான்கு மிருடிகளும் விண்ணோர் குழுவு மிவணமென
வோத வரிய பரமபதத் துற்றார் மற்றவ் வருத்தத்தாற்
போத மிக்க தொண்டர்குழாம் புலம்பித் தேறி யவ்வுடலை
யேதங் கடியும் பிரமரதத் தேற்றி யிமையோர் மலர்தூவ. (எஅ)

மாசி லாத வடவாற்றங் கரையில் வைத்து மறுவற்ற
தேசு பொலியுந் தொண்டர்பெருந் திரளா யிருப்ப வக்கணக்கி
லீச னருள்சே ரிளையாழ்வார் நம்பி யென்னு மிருவர்களும்
பேச வரிய திருக்கரம்பன் றுறையில் வந்து புறப்பட்டார். (எகூ)

வந்தா ரிருந்த பெருந்திரளை மலர்க்க ணாலே யுறநோக்கி
நந்தா ஞானச் செழுந்திரளாய் நமர்க ளிருந்த படியென்கொ
லந்தோ வென்ன வாளவந்தார் போனா ரென்றா ரணைந்தவரச்
சிந்தா குலத்தாற் பெரியநம்பி தேசி காவோ வெனவீழ்ந்தான். (அ0)

மண்ணிற் சோக மிகமேவி மயங்கி விழுந்தான் றனைத்தாங்கி
யெண்ணிற் பிறந்தா ரிறப்பர்களென் றிருந்து மிவையென் னம்பியென
விண்ணிற் றூய சொற்கொண்டு விளங்கு மிளையாழ் வாரருகு
நண்ணித் தேற்ற வுடன்றேறி ஞாலம் போற்று மத்திரளில். (அக)

சென்று ரந்த விருவர்களுஞ் செறிந்தா ரதனு ளிளையாழ்வார்
குன்று ஞானக் கொழுஞ்சுடரா மாள வந்தார் கோலத்தை
நன்றுஞ் சிந்தை யுறவிருத்தி ஞான மூர்த்தி யுன்றோடே
யின்றோர் வாக்குக் கேட்டிடநான் பெற்றே னிலையென் றிடழிந்து. (அஉ)

சீரா ரரங்க நகர்க்கிடந்த திருமால் செய்த வுபகாரம்
போரா தோவின் றெனக்கென்னப் பூவை வண்ண னுடன்வெறுத்தங்
காரா வன்ப ராளவந்தார்க் கடுத்த கன்ம மமைத்ததற்பி
னேரா ரிளையாழ் வாருடனே மீண்டு காஞ்சிக் கேகினார். (அங)

வேறு.

ஆசிலாப் பெரியநம்பி முதலாய வன்பர்களுந்
தேசுபொலி திருவரங்க நகரணைந்து சிலகால
மீசனரு ளால்வாழ்ந்தா ரந்நாளி லெழிற்காஞ்சி
மாசிலாத் திருநகரின் மன்னுமரு ளாளற்கு. (அச)

அன்பனாந் திருக்கச்சி நம்பியெனு மருளுமைத்
தின்புறுசொல் லுடையவனு யார்க்குமரி தாந்தவத்தை
முன்பியற்றிப் பிறந்தவனாய் மூவுலகுக் கோராணி
யென்பவனாய் நயிச்சியங்கள் யாவைக்கு மிருப்பிடமாய். (அரு)

வேறு.

பொய்ச்சார் வில்லா நிலையோனாய்ப் பூமி மேலந் தரசொர்க்க
மெச்சாங் கேத்துங் குணத்தினனாய் வேத நாதன் றன்னுடைய
வர்ச்சா வதாரந் தன்னை யவதா ரம்போ லாக்குதற்கு
நற்சார் வுடைய நிலையோனாய் ஞானா னந்த நலத்தினனாய். (அசு)

திருவைப் பொருந்துந் திருமார்பன் றன்னைச் சிந்தை யுள்வைத்து
மருவப் பட்ட மனத்தினனாய் வாக்கு மனமுஞ் செய்கையுந்தான்
கருவிற் புக்க நாண்முதலாய்க் கண்ணற் காக்குங் கருத்தினனா
யொருவ னுள்ள பேரருளா ருடனே மன்னி யிரவுபகல். (அஎ)

வேறு.

வேலைவட்டஞ் சூழ்ந்தபுவி மெல்லியலாண் மலர்மடந்தை
நீலவட்ட விழிநீளை யுடனெடுமா லருளோக்கி
பாலவட்டம் பரிமாறி யவரோடு மூரையாடிச்
சோலைவட்டக் காஞ்சிமா நகர் துதிப்பத்தொழுதமர்வான். (அஅ)

### வேறு.

ஆங்கவன் றன்னைப் பற்றி யல்லுரன் பகலும் பேணிப்
பூங்கழ லிறைஞ்சிப் பூதூர்ப் புண்ணியக் கொழுந்தி தென்ன
வோங்குசீ ரிளையாழ் வாருஞ் சிலபக லொழுகி வாழ்ந்து
பாங்குட னொருநா ளந்தப் பத்தனை நோக்கிச் சொல்வார். (அகூ)

இன்றெனக் கிரங்கி நீயே யின்னருள் புரிய வேண்டு
மொன்றிய கருணை வல்லா யெனவிவ ருரைப்பக் கேட்டு
நன்றிசேர் கச்சி நம்பி நவையில்சீர்ப் பூதூர் வந்த
மன்றல்சேர் கமலத் தாராய் மாசிலுற் குலத்து மேலாம். (கூ0)

### வேறு.

ஐய பிரம வைதிகத்தி லாசி லாத நிட்டையையுன்
மெய்யி லுடைமை யத்திறத்தா லதுநீ செய்ய விரும்பிடினும்
வைய மடாது வைதிகர்க்கு மற்றத் தொழிலென் றுரைக்குமெனற்
செய்யுங் கரும மன்றிதுநீ செய்ய வேண்டா மெனச்செப்பி. (கூக)

போன னன்று திருக்கச்சி நம்பி யதற்பின் பூதூர்வாழ்
தேனர் கமலத் திருத்தாரான் சிலநா ளவன்பின் சென்றவனே
டான தமர்ந்தா னதிலொருநா ளருளா ளற்குச் சிலநினைவு
தானய் நினைத்துத் திருக்கச்சி நம்பிக் கதனைச் சாற்றுவான். (கூஉ)

நம்பி சிலசொ னினைத்தனனன் ஞான மிக்கா யுன்னுடைய
தம்பி ராறேெ ட்வைகேட்டுச் சாற்ற வேண்டு மடியேற்கா
மெம்பி ரானீ யெனச்செப்பி யிளையாழ் வார்போய்த் தண்டமிட
வும்பர் புகழுந் திருக்கச்சி நம்பி நன்றென் றுவந்தேகி. (கூங)

### வேறு.

பேரரு ளாளர் முன்பு பேணியெப் போதும் போலச்
சீரரு ளெய்தி நின்று திருவால வட்டந் தாங்கி
யாரரு ளோடுஞ் சேவித் தமர்ந்தன னவனை நோக்கிப்
பாரருட் பன்றி யாகி யிடந்தவர் பகர லுற்றார். (கூச)

மன்னுசீர்க் கச்சி நம்பி வதனமு மனமுங் கண்டா
லென்னிடை யொன்று கேட்பா னெழும்பிய நினைவு போன்ற
துன்னுடைக் குறிப்பி லென்ன வோதநீர் வண்ணர் கூறப்
பன்னரும் புகழ்சேர் நம்பி பணிந்திவை பகர லுற்றான். (கூரு)

### வேறு.

அக்கும் புலியி னதளுமுடை யரனார் துயர மறுத்தவனே
யொக்குந் துய்த்த பைக்குறையி னுடையா னறியாச் சரக்குளதோ
தக்க பூதூ ரிளையாழ்வார் தமியேன் சிலது நினைக்கின்றேன்
றொக்க புகழாய் திருமாலைக் கேட்டின் றென்பாற் சொல்லென்றார். (கூசு)

அதுவே சொல்ல வுன்னியது மடியே னென்றா னாசில்லான்
மதுவார் துளபத் திருத்தாரான் மற்றை நம்பி முகநோக்கி
முதுவே தத்தின் முடிவுணர்ந்த முதல்வா பூதூ ரிளையாழ்வா
னிதுவே நினைந்தா னதுகேட்டி யென்னப் பின்னு மிசைக்கின்றான். (கூஎ)

செப்பு மந்த விளையாழ்வான் சேடத் துவத்தி னுடன்பிறந்தா
னொப்பி லாத சிந்தனையி லெனையே பரமென் றுணர்ந்திருப்பான்
றப்பி லாத நாமுன்பு சாந்தீ பனியா முனிபக்க
லப்ப வோதி யிடும்படிபோற் சகல கலையு மவரவர்பால். (கூஅ)

ஓதிப் பூத மைந்திடமா முடம்பு முயிருந் தத்துவமும்
பேதப் படுத்தித் தன்னுள்ளே யெல்லா மறிந்து பிணக்கற்ற
மாதக் கோனா யிருந்துநமைக் கேட்டான் மனத்தி னினைவுதனைப்
போத மிக்கா யுரைக்கின்றேன் கேட்டின் றவற்குப் புகலுதியால். (கூகூ)

செப்பு கின்ற பரத்துவமும் யாமே யென்னச் செப்புதிவே
றொப்பி லாதாய் தரிசனமும் பேத மென்றே யுரைத்திடுக
தப்பி லாத வுபாயமதும் ப்ரபத்தி யென்றே சாற்றிடுக
வப்ப புகல்க விவையன்றி நினைவும் வேண்டா மந்திமத்தில். (க௦௦)

இந்தச் சரீர வவதானந் தன்னி லிசையு மோக்கமது
மந்த மில்லாக் குணத்தினனுக் காசா ரியனும் பெரியநம்பி
சிந்தை யுள்ளே யிவையெல்லாந் தெளிந்து நோக்கி யிளையாழ்வான்
முந்த நினைந்தா னிவையிவையே மொழிந்து வருக போயென்றான். (க௦க)

என்று மாய னருள்செய்ய வின்ப துன்ப மிரண்டுமற
நின்ற நம்பி நெடுமாலை நெகிழ்ந்த வன்பால் விழுந்திறைஞ்சிச்
சென்று பூதூ ரிளையாழ்வார் சேருந் தலத்தி லணைந்திடலு
மன்றல் கமழுஞ் செழுங்கமல மாலை மார்பர் வணங்கினார். (க௦௨)

### வேறு.

நம்பியு மந்த மறையவன் கழலி னவையற வணங்கிநின் னினைவை
யம்புயக் கண்ண னருளின னிவையோ நினைந்தவை யாசிலா யென்ன
வெம்பிரா னுரைத்த படியெலா முரைப்ப விலங்குசீர்த் தயரத ராமன்
றம்பியாய்ப்பிறந்தானுக்குமென் றிறைஞ்சித் தாமரைக்கண்ணனீ யென்ன.

திருந்திய கருணை நம்பியை வியப்பத் திருக்கச்சி நம்பியும் பூதூர்ப்
பொருந்துசீர் மறையோ னுள்ளமு மாயன் பொருவருந் திருவுளக் கருத்து
மிருந்தமை நோக்கிச் சிந்தையுட் களித்திங் கிவனுமோர் திருவவ தார
மருந்தவ முலகஞ் செய்ததின் பொருட்டா லவதரித்தனனெனவகத்துள்.()

உன்னியீண் டிருத்தி யொப்பிலா யென்ன வோதநீர் வண்ணனு ரிடத்தின்
மன்னினன் முன்போற் றிருக்கச்சி நம்பி மாசறுஞ் சீபெரும் பூதூ
ரென்னுநன் னகரிற் றிருவவ தரித்தா ரெண்ணுவா ரீங்கிவன் சேடந்
தன்னைநா மருந்தி யாருயி ரதனைத் தரைமிசைப் பவித்திர மாக்கி. (கoரு)

பின்புமா லருளும் பெரியநம் பியைப்போய்ப் பேணுத லியல்பெனநினைந்தங்
கன்பினு லோங்குந் திருக்கச்சி நம்பி யடியிணை நாடொறும் வணங்கி
யென்பெலா முருகப் பின்செல்வார் பூதூ ரெம்பிரான் றிருக்கச்சி நம்பி
துன்பிலா நிலையாயடியனேன் செய்யும்பணியைநீ சொல்லெனத் துதித்தான். (கoசு)

வடிவினுற் குணத்தா லொப்பிலாப் பூதூர் வள்ளலு நம்பியை நோக்கி
முடிவிலாப் பத்தி வாரிதி யனையாய் மூங்கரின் மூங்கனுய்க் கழியு
மடியனே னகத்திற் பொன்னடி சார்த்தி யொருபக லமுதுசெய் தருளில்
விடியுமென் மாயா கங்குலென் றிசைத்தான் விளங்குசீர் நம்பியும் விளம்பும். (கoஎ)

வேறு.

உன்னுடைத் தளிகைச் சேடத் தோரவி முருந்தப் பெற்று
லென்னுடைச் சென்ம மென்னைச் சார்ந்தவ ரெலேயி றீமை
மன்னுடை யிராமன் செய்ய மலரடித் துகள்சார் கல்லின்
றன்னுடை மேன்மை யன்றோ தமியனேற் கெய்தப் பெற்றால். (கoஅ)

என்றதற் கிசைந்து நம்பி யியம்பிட விளையாழ் வாரு
மன்றவை யின்று வேண்டும் வருதிநீ நம்பி யென்னச்
சென்றன ரகத்துத் தாந்தந் தேவியர் தம்மைக் கூவி
யின்றுநான் விருந்து நம்பிக் கிடும்படி யிசைந்து போந்தேன். (கoகூ)

நறுமலரக குழலி னுளே நாரண னுருவா மந்த
மறுவறு குணத்தி னுனை மானிட னெனவெ ணுதே
யறுவகைச் சுவையி னுன்கு விதத்தினி லன்பாற் பேணி
யுறுகறி யமுது மிக்க போனக முண்டாக் கென்ன. (கக0

வேறு.

செப்பி நம்பி வரும்வழியை நோக்கி யிருந்தார் செழுமறையோ
ரொப்பி லாத திருக்கச்சி நம்பி யோத வண்ணரிடைத்
தப்பொன் றின்றித் தனக்கடுத்த தொழில்செய் தாங்கே தானமர
வப்பன் கச்சி யருளாள னவனை நோக்கி யறைகின்றான். (ககக)

வருந்தும் பிறவித் துயர்கடிந்த மைந்தா விப்போ தோரகத்தில்
விருந்துண் பான்போ கின்றவன்போ லிருந்த துன்றன் மெய்க்குறிப்பு
திருந்த வுரைய தியாவரிடை யென்று கூறத் திருமாலே
பொருந்துமன்பி னிளையாழ்வார்பணித்தா ரொப்பிப் போந்தனனால். (௧௧௨)

என்று நம்பி தொழுதுரைப்ப வீரே ழுலகு முண்டுமிழ்ந்து
நின்ற மாயன் கட்டுரைப்பா னீதா னவன்றன் சேடத்துக்
கின்று விரும்பி யொப்பினையவ் விளையாழ் வானு நின்கலத்தி
னன்றி சேரு முச்சிட்ட நயந்து கொள்ள நினைக்கின்றான். (௧௧௩)

வேறு.

மருவருங் குணத்தி னானே மற்றவ னென்னைத் தாங்குந்
திருவனந் தாழ்வா னாகுந் தெசரதன் மகனாய் நான்முன்
பொருவரு மயோத்தி தன்னிற் போந்தநா ளெம்பி மாரா
மிருவரோ டொருவ னான விலக்குவ னிளையாழ் வானாய். (௧௧௪)

மன்னினா னவனின் சேடம் வாய்க்கொளல் பழுதம் மேலோன்
பொன்னடி வருந்த விங்கே போதுவா னின்னைத் தேடிப்
பன்னருங் குணத்தாய் வேறோர் நெறியினிற் பரிவா லேகி
யன்னமென் னடையாண் மற்றவ் வந்தணன் றேவி தன்னை. (௧௧௫)

வேறு.

அன்பினால் வணங்கி யடிசில்கேட் டருந்தி யாங்கவன் றிரும்புமு னீயு
நின்பசி தணித்து விரைவினில் வருதி யென்றிறை நின்றருள் புரிய
வென்பெலா முருகிக் கண்கணீர் கலுழ மாயவ னிணையடி யிறைஞ்சிப்
புன்புலன் கடிந்த சீபெரும் பூதூர்ப் புண்ணியன் வருநெறி யன்றி. (௧௧௬)

மற்றொரு நெறியி லேகின னம்பி யாண்டையின் மறையவன் றேவி
யுற்றசீர்விருந்துசமைந்ததென் றுரைப்பவுலகெலாந்திருத்துதற்குதித்தா
னற்றவ முடைய நம்பியைக் கொணர்வ னானென, வெழுந்துள வஞ்ச
மற்றவ னமரும் பேரரு ளாள ரருகிலென் றாங்கெழுந் தருளி. (௧௧௭)

தேடினா ரெங்கே நம்பியென் றவருஞ் செங்கண்மால் கோயிலு ளெங்கு
நாடினார் காணார் திரும்புமுன் போன நம்பியு மவர்மனை நோக்கி
யோடினார் வாசற் புறத்தினிற் செறிந்தாங் குள்ளம ரோவிய மனையா
டாடொழு தன்னே வருந்தினேன் பசியா லெங்குளார் தலைவரென் றிசைத்தான். ()

அத்திறங் கேட்ட வருந்ததி யனையா ளாக்கிய விருந்தினை யருந்த
மெய்த்திற முடையீ ரும்மையே நாடி வேதியர் தலைவனார் போனார்
பொய்த்திற மில்லா ரிக்கணம் வருவ ரென்றனள் புண்ணியம் போல்வாள்
சித்திர நெறிசேர் கச்சிநம் பியுமச் சேயிழை யாளொடின்று செப்பும். (௧௧௯)

அன்னையே யனையாய் பசியினா லடியே னருயிர் வாடினேன் மிகவும்
பின்னையென் றாதே யிக்கணத் துதவப் பெற்றதே யமையுமென் றுரைப்ப
மின்னையே யனையா டளிகைபோட் டன்பின் வேண்டிய போனக மளித்தா
டன்னையே யனையான் விரைவினி லருந்தித் தளிகையு மாற்றியத் தலமும்

வேறு.

விரைவினிற் சுத்தி பண்ணி விண்டுவின் கோயில் புக்கான்
புரையிலா மனத்தாள் வந்து போனகஞ் செய்து போன
தரைமிசைப் பின்னுந் தானுஞ் சாணிநீர் தெளித்தா டைய
னிரையுறு துவலே மேலே தெறிப்பவந் நிலையி லேகி. (கஉக)

தடம்புன லாடி மீண்டு தையலு மகத்தில் வந்தா
டிடம்படு பூதூர் வள்ள றிருக்கச்சி நம்பி தன்னை
நடந்துறத் தேடிக் காணு தக்கண மனையி னண்ணி
மடந்தையோ டிங்கே நம்பி வந்தனன் கோல்லோ வென்ன. (கஉஉ)

அன்னமென் னடையாள் செப்பு மரும்பசி யுடைய ராகி
யென்னுட னடிசில் கேட்டா ரீந்தன னருந்தி யாங்கே
மன்னிய தளிகை யோர்கை மற்றொரு கையாற் சுத்தி
பின்னுறச் செய்து போனு ரென்றனள் பிரம னைத்தார். (கஉங)

கேட்டதி னுள்ளஞ் சோர்ந்து கெடுத்தனை தளிகை யெங்கே
போட்டனன் கொல்லோ வென்னப் புறம்புட னுள்ளு மிக்க
தோட்டமுந் துரவு நாடிக் கண்டிலர் சுருதி வல்லார்
வாட்டமுற் றகத்தி லெய்தி மனைவியை வெறுத்து நோக்கி. (கஉச)

விருந்தவ ரருந்திப் போன பின்புநீ விரைவி னேகிப்
பொருந்துநீ ராடி யிங்கே புக்கா ரணமென் னென்று
ரருந்ததி யனையாள் மேலோ யாங்கவன் சுத்தி பண்ணித்
திருந்திய தலத்திற் பின்னுன் றெளித்திடத் துவலையென்பால். (கஉரு)

தெறித்திட வதனு னுஞ் சென்றுநீ ராடி வந்தேன்
பொறித்தவல் வினைக ளற்றீ ரென்றவள் புகலக் கேட்டங்
கெறித்தெழு கனலிற் சீறி யானவன் றளிகைச் சேடங்
குறித்திவண் டிரியச் செய்தாய் குற்றமொன் றீக நின்பால்

வேறு.

உண்டாய்த் தணங்கே குலமேலிட் டொரு மூணர்வா லூதியங்கள்
கண்டார் யாவர் தாந்தம்மைக் கடையா யெண்ணிக் கணிப்பிறந்தோ
ரெண்டா ளின்றிப் பலகுலமா யாக்கை தாங்கும் வேதனைமா
றெண்டாய்த் தொண்ட ருடன்கலந்தா லன்றோ தீர்க்கு சுகங்காப்பார். ()

முன்னை மறையோர் நான்கினுறு முடிவு மிதுகாண் மொய்குழலே
யுன்னை வேண்டி யுரைக்கின்றே னொருநா ளிவணங் குலவீற்றை
யென்னை வேண்டிப் பாகவத ரிடத்திற் காட்டா திருத்தியென
பின்னை நோக்கி யிளையாழ்வார் விளம்பி விண்டு வருள்செய்த. (கஉஅ)

வேறு.

குருமணி யாய பெரியநம் பியைப்போய்க் கூடுதல் வேண்டுமென் றருள்சேர்
திருவுளத் தெண்ணித் தென்றிசை நோக்கி நடந்தன னிந்திர சித்தை
யொருதிறற் கணையா லறுத்தறங் கர்த்திங் குவரிசூழ் பூமிவான் முழுதும்
பொருவருந் தன்சீர்ப் புகழினை நிறுத்திப் புங்கவன் புலம்பமுன் போனன்.

வேறு.

அப்படி நிகழு நாளி லரங்கமா நகரந் தன்னி
லொப்பிலா வாள வந்தா ரோங்குசீ ரடியி னானுந்
தப்பற மன்னி வாழு முதலிக டம்மி லொன்றுஞ்
செப்பமார் பெரிய நம்பி தன்னொடுஞ் செப்பு கின்றார். (கங0)

வேறு.

ஆசிலா நம்பிநம் மாளவந்தார் பூதூரிற்
றேசுறுசீ ரிளையாழ்வார் தெரிசனத்துக் கதிபரெனப்
பேசினார் நம்மோடும் பின்பணைந்து கடாக்கித்தா ரீசனார் திருவருளா லவரிசைத்த வின்னுரையும். (கங௧)

வேறு.

பொய்யா காது நீயின்னும் போயப் புலவன் றனக்கருள்கள்
செய்யா நின்று யெனிலிந்தத் தெரிச னத்துக் கோருறுதி
மையார் கண்ணு ளலர்மீதின் மங்கை முதலிம் மாநிலத்தி
லையா கேட்டி யாளவந்தார் வரையி னுள்ள வாசிரியர். (கஙஉ)

பண்டு பண்ணுப் படிபண்ணிப் பாரை முழுது முய்வித்தா
யண்டர் புகழும் பெரும்புகழா யேகென் றனுப்பி யருளவவர்
புண்ட ரீகப் பதங்களினும் புவன மனைத்து முண்டுறங்குங்
கொண்டல் வண்ணன் றாள்களினுங் குழைந்து வணங்கிப் பெரியநம்பி.

விரைவா லேகி யிளையாழ்வார் மேவுங் காஞ்சி நகரணைவான்
வரையார் மாட மாளிகைசூழ் மதுராந் தகத்தின் மன்னிவளர்
திரையா ரேரி காத்தபிரான் றிருமு னெய்தி யிருந்தனர்முன்
புரையா நின்ற விளையாழ்வா ருவப்போ டன்றத் திருநகரில். (கஙச)

வந்தா ரெதிர்கொண் டிருந்தவரை மலர்க்க ணாலே யுறநோக்கி
யெந்தாய் சரண மெனப்பணிந்தின் றிரங்கி யருளா யெனக்கமரர்
சிந்தா மணியே யெனப்போற்றச் சீரார் பெரிய நம்பிதிரு
நந்தா விளக்கா மிளையாழ்வார் முகத்தை நோக்கி நவில்கின்று... (கஙரு)

## வேறு.

எண்ணியின் றுனக்க நீவா னெய்தினே னிளையாழ் வானே
பண்ணிய பாவ முற்றும் படிமிசை யகல்வித் தோங்கும்
புண்ணிய கோடி யென்னும் பொருவரும் விமானப் பாங்கி
னண்ணிமுன் னாள வந்தார் நம்மிடை யுனக்கு வைத்த. (கஙசு)

உறுதியை யுரைக்கின் றேனு னுத்தமா கருத்தாற் பேணிப்
பெறுதியென் றருளிச் செய்தான் பெரியநம் பியுநால் வேதத்
தறுதியை யுணர்ந்து நின்ற வாசறு பூதூர் வள்ளன்
மறுமொழி யிவையென் றந்த நம்பிபால் வழுத்த லுற்றான். (கஙஎ)

தேவரீ ரடியேன் றன்னை யாளவந் தார்பாற் சேர்க்கப்
பூவடி வருந்த வந்து புன்மையே னோடு மீண்டு
மூவரும் வணங்கி யேத்து முதல்வள ரரங்கன் றன்னுண்
மேவுமு னாள வந்தார் வீடடைந் திட்ட தன்மை. (கஙஅ)

## வேறு.

அறிந்தருளு மெய்யடியே னாக்கையுயிர் தொந்தமறப்
பிறிந்தழியுந் தன்மையினைப் பேதையேன் பேசுவதென்
றிந்துவிழு மிவ்வுடம்பி னிலையாமை மகிழ்மாறன்
சறிந்தமிழன்னி னிலையிலதா மென்னமுனஞ் செப்பியதும். (கஙகூ)

ாய்யாதே யதனாலே புலையேனை யிப்பொழுதே
யையாநீ யங்கிகரித் தருள்கவென வடியிணையைக்
கையார்ந்த மலர்தூவிக் கண்கள்பனி நீர்ததும்ப
மெய்யார்ந்த சிந்தையனு மேதினியில் விழுந்திறைஞ்ச. (கச0)

பெரியநம்பி யதுகண்டு பேரருள்கூர்ந் தருகணைத்திட்
டரியதன தாருயிரோ டொன்றாக வெடுத்தணைத்து
விரிபொழில்சூ ழரங்கநகர் விட்டெரும் வீடடைந்த
வுரியவரு ளாளவந்தார் திருவடியை யுவப்பினொடும். (கசக)

பற்றென்ன முன்புரைத்துப் பகவற்சம் பந்தத்தான்
முற்றுமுன முடையவற்கம் முகுந்தத்தி லவைபண்ணி
யுற்றகுரு பரம்பரையைத் துய்த்தினொடு முபதேசித்
தற்றமற வாளவந்தார் தமக்களித்த பொருளனைத்தும்.

ஒன்றொழியா தருள்செய்தங் கோங்கியசீர்ப் பெரியநம்பி
யன்றதற்பி னிளையாழ்வா ரோடமைவை யறைகின்று
னன்றிசெறி மனத்தினனே நாட்டார்க்கா யிராகவனார்
வென்றிதரும் பரதாழ்வார் திருமுடியில் வேதாந்தம். (கசங)

செப்பரிய திருவடியா மரவடியைச் செறிவித்துத்
தப்பின்றி வனம்புக்க தன்மைபோ லாளவந்தா
ரொப்பரிய திருவடியை யென்றலைமே லுனக்காக
வப்பொழுதே வைத்தகன்று ரதுநீயு மறிகுதியால். (கசச)

வேறு.

என்றிவை பெரிய நம்பி யியம்பிட விளையாழ் வாரு
நன்றிசேர் கருத்தி லந்தப் பொருளெலா நயந்து கொண்டங்
கொன்றிய காத லோடு முத்தமக் குருவை நோக்கி
நின்றமூ வகையா லந்த நினைவுறு பொருளைக் கேட்பார். (கசரு)

அருளுறு சிந்தை யெந்தா யறைந்தவிப் பொருள்கட் கெல்லாந்
தெருளுறு பிரமா ணந்தா னேதுதைச் செப்பிப் பின்பென்
மருளறப் பிரமே யத்தை வாக்கினுன் மொழிதி மாயை
யிருளறு பிரமா தாக்க ளியாரதை யியம்பு கென்றார். (கசசு)

என்றிவை யிளையாழ் வாரன் றியம்பிடப் பெரிய நம்பி
நன்றுநன் றன்பு நீயோர் ஞானத்தின் கொழுந்தோ வென்ன
வொன்றிய காத லோடு முவந்துநீ கேட்ட வெல்லா
நின்றனக் குரைக்கின் றேன்கே ளெனவிரித் தியம்ப லுற்றார். (கசஎ)

வேறு.

து கின்றேன் பிரமாணந் தன்னை முன்பி லுத்தமர்கள்
வத நான்கிற் பலகலையில் விரிந்து குவிந்து திரண்டபொருண்
ாத வன்பேர் சொல்லுமதே மைந்தா வோத்தின் சுருக்கென்று
தின் பயனும் பிரமேயந் தனையுங் கேட்டி யிசைக்கின்றேன். (கசஅ)

 புந்த நாம முடையவர்நம் மதத்தி லாசிரியர் லருளவளர
ிந்த வுலகத் தவருய்ய வெடுத்த வாழி சங்கினொடு
மந்த நின்ற திருமாலா முத்தி வித்துக் காதவனே
ந்த மறவிவ் விரண்டொழும் பிரமா தாநீ யெனப்பகர்ந்தார். (கசகூ)

வேறு.

த்திரு மொழிகண் மூன்றையுங் கேட்டாங்கனலுறமெழுகெனக்கரைந்தோ
த்தர மின்றி விழிகணீர் சொரிய வுரோமங்கள் சிலிர்ப்பமெய் விதிர்ப்பச்
த்திர வுருவ மிதுவென நின்றான் சிறிதுபோ தயோத்திமன் னவற்குப்
த்திர னாகி முன்பவ தரித்தான் புந்தியி லுணர்ந்தினு புகல்வான். (கருo)

வேறு.

பங்க மில்லா மறைமுடிவிற் பரத்துவத்தைப் பாரிடையே
சங்கை தீர வெடுத்தினிதாய்ச் சாற்ற வல்ல தேசிகனு
ரெங்கள் கோவே யெனக்கென்ன விதயத் தெண்ண வீங்கிவரைத்
துங்கக் கடலைக் கடைந்தபிரான் சொன்னன் முன்பித் தூயவரும். (கநூ)

வேறு.

இன்றெனக்குரைத்த மந்திரந் தனக்கிங் கிசைந்தநற் பொருளெது வென்ன
நன்றிசே ரத்தி கிரியினி லாழி நலந்திகழ் சங்கமு மேந்தி
நின்றநந் திருமா லென்றன னிருவர் நிலைமையு நேர்பெற நோக்கி
லொன்றெனும் படியா யிருந்ததின் றந்தோ வோங்குசீர் விட்டுணு சித்தன்.

திருமொழி தன்னிற் பீதக வாடைத் தேவனே தேசிக னுருவா
யிருநிலத் துற்றானென் றுரைத்திட்ட வின்சொலை யின்றிவண்டெளிந்தேன்
மருவிய பெரிய நம்பியாய்த் தோன்றி வையக மனைத்தையுந் திருத்துங்
குருமணி யாகிப் பேரரு ளாளர் குவலயத் தவதரித் தமையால். (கநூ)

எனவுணர்ந் திருந்த தேசிகக் குன்றி னிணையடி முடிமிசைத் தரித்துப்
புனை மலர்த்துழாயாய்க்குருமணி யுருவாய்ப் போந்தனை யோவெனப்பலகான்
மனமுற நிறைத்த வன்பினால் வணங்கி நின்றனன் வையக முய்ய
வினமொருசனனமெடுப்பனென்றெடுத்தவிலக்குவனம்பிபின்னிசைப்பான்.

இரைக்குமேழ் கடலு மணுவெனப்பெருகுமின்பவாரிதிப்பெரும்புனல்சேர்
திரைக்கணுய்ச் சுழிக்குஞ் சுழிக்கணு யமருந் தெள்ளியோய் கேட்டிநான் முன்ன
முரைத்தமா ப்ரமாண மதுதனக் கத்த மோங்குசீர்ப் பிரமேய மதனை
நிரைத்தமா மாடக் காஞ்சிமா நகரு ணீபுகுந் தனுபவித் திடுவான். (கநூ)

வேண்டுமென் றெழுந்து சீபெரும் பூதூர்விமலனைத் தன்னுடன்கொண்டங்
காண்டுவிட் டேகிக் காஞ்சிமா நகரி லணைந்தரு ளாளரைக் காட்டிப்
பூண்டகா தலனே பிரமேய மிதுவாம் புரையறப் பற்றுதி யென்று
ணுண்டகை மணக்கா னம்பியு மன்பி லாளவந் தார்க்கரு ளோடும். (கநூ)

மதுவிரி துழாயா னரங்கமா நகரின் மன்னுசீ ரரங்கனைக் காட்டி
யிதுபொரு ளுங்கண் முன்னுளோர் வைத்த வெலையறு மிருநிதி யென்னு
முதுமொழி யொப்பக் கூறினு னம்பி முத்திவித் தாமிவை யாழ்வான்
பதுமனைப் படைத்தான் றிருமுடிமுதலாய்ப் பங்கயப் பாதுகை வரையாய்.

அன்பினுன் மருவி யனுபவித் துள்ள மனலுறு மெழுகென வுருகி
முன்புநானினைத்தநினைவெலாமுரைத்தமுதல்வனைசரணெனப்பணிந்தான்
புன்புலா னுகரு மரக்கர்கள் குலத்தைப் பொடியெழச் சுடுசரந் துரந்தான்
றன்பினுய்ப் பிறந்தன் றிந்திரன் பகைஞன் றன்னையும்பின்னையுந்தடிந்தான்.

## வேறு.

ுப்படியே மடைமாறுப் பத்தியினு லிளையாழ்வார்
ெசப்பரிய சிந்தையினுற் சொல்லினுற் செய்கையினுன்
ம்பொழுது மனுபவித்து மூவிரண்டு திங்களவ
னுப்பரிய பெரியநம்பி யுடன்வாழ்ந்தா ரந்நாளில். (கருகூ)

பெரியநம்பி யன்பின்மிகும் பேரருளா லாங்கவர்க்குத்
தரிசனத்தி னெறியனைத்துஞ் சீர்பெறவாங் கெடுத்தோதிக்
ரியநிறச் செய்யவாய்க் கமலநய னத்தழகா
ரியையிளை யாழ்வார்த மகத்திலுறப் பதிவித்தே. (கசுo)

வகினு ரறுதிங்கண் மலர்மகள்கோன் றரிசனத்தின்
செய்யநெறி முறைகேட்டுச் சீபெரும்பூ தூருறைய
மயனுள முகந்தருளி யாருயிரும் யாக்கையும்போ
ய்யுநெறி யவைகாட்டு மறையவனே டுடன்வாழ்ந்தான். (கசுக)

பதமறு மிளையாழ்வார் பெரியநம்பி யென்றுரைக்கு
ாதவஞ்சேர் நிலையினரு மறிவறுசீர் நயிச்சியத்தா
லாதுமுட லிரண்டாகி யுயிரொன்ருய் வாழுநாட்
போதமிகும் பெரியநம்பி மனையாட்டி பூதூரில். (கசுஉ)

ந்துதித்த விளையாழ்வார் மனையாட்டி யென்றுரைக்குஞ்
ந்தமிகும் பூங்குழலா ரிருவர்களுங் களிகூர்ந்த
ந்தையரா யொக்கலைமேற் றிகழ்செம்பொற் குடமேந்தி
ந்தநிலத் தொருகிணற்றி லிரும்புனலுக் கேகினர். (கசுங)

சென்றுசெழும் புனல்பெருகிச் செறிகிணற்றின் றிண்கரைமே
ரின்றிறைவைத் தோண்டியினி னெடுந்தாம்பை யுறப்பூட்டி
ன்றுவிடுத் தரும்புனலை யலைத்தெற்றி யுறமுகப்ப
வொன்றுசென் றங் கொன்றேடே யுறக்கலந்து பிரிவுறலும். (கசுச)

## வேறு.

ண்டகை யாளயாழ வாரதங் தேவியா ரதுகண் டந்தத்
தாண்டியை யுடைத்துப் போட்டுச் சுரந்தெழு வெகுளி யோடு
ண்டுதம் மகத்துட் புக்கு வேறொரு தோண்டி கொண்டு
ண்டதங் குலத்தைப் போற்றிப் புனன்முகந் தகத்துட் புக்கார். ()

## வேறு.

பெரியநம்பி தேவியா ரொருமொழியும் பேசாதே
ரிபுனலாற் குடநிறைத்து மெய்ந்நிறைத்த துன்பினெடுந்
தரிவுறச்சென் றவையெல்லாஞ் செப்பினள் கணவனுக்கங்
ரியபொரு ளுணர்ந்தவனு மத்திறங்கேட் டிருந்தெண்ணி. (கசுரு)

வேறு.

இப்படிச் செய்தார் காணா மென்றிதை யிளையாழ் வான்பாற்
செப்பிடி லவனு மந்தச் சேயிழை தன்னைக் கோபித்
தப்பொழு தகற்றுஞ் சொல்லா தடக்கிலோ வஞ்ச மாகுந்
தப்பற விரண்டு நாமே சாற்றல்சாற் றமை வேண்டாம். (கசஎ)

என்றிருந் தகத்து ளெண்ணி யேந்திழை யாடன் னோடு
மன்றெழுந் திளையாழ் வாரு மறியுமுன் விரைவி னேகிச்
சென்றுசீ ரரங்க மன்னித் தேசிகர் சிங்கம் வாழ்ந்தா
னொன்றுமி துணராப் பூதூர் வள்ளலு முவப்பி னோடும். (கசஅ)

தேசிக னெங்கே யென்னச் சென்றன ரென்றும் போலே
யாசிலா னரங்கம் புக்கா னென்றன ரருகி னின்றார்
பேசிடா தேகற் கேது வென்கொலப் பெரியோ னென்றார்
வாசவார் குழலா ளின்சீர் மனைவியாற் றுன்புற் றென்றார். (கசகூ)

ஏங்கியப் பொழுதே நெஞ்ச மீடழிந் திளையாழ் வாரு
மாங்கவை யெதனா லென்று ராயிழை செய்த தன்மை
பாங்குநின் றவர்கள் கூறப் பதைத்தெழு சிந்தை யோடும்
பூங்குழ லமர்ந்து வைகும் பொற்றிரு மனையிற் புக்கார். (கஎ0)

வானவ ரிடுக்கண் டீர்த்தான் மனைபுக வெதிரே சென்ற
தேனமர் குழலை நோக்கித் திருக்கச்சி நம்பி முன்னம்
போனகஞ் செய்த சேடந் தருவரேற் புனித மென்றே
நானவன் பின்சென் றேத்த நவையுறு மபசா ரந்தான். (கஎக)

அன்றுநீ யொன்று பண்ண வப்பிழை பொறுத்தே னந்தோ
வின்றுமென் னாவி நாத னெனவரு பெரிய நம்பி
தன்றிரு வுளத்திற் கன்றத் தரணியோர் காண வென்னைக்
கொன்றதிற் கொடிய பாவம் பண்ணினாய் கூற்ற மன்னாய். (கஎஉ)

என்றுரைத் துன்னோ டென்னோ டிசைந்தன தொந்த மெல்லா
நின்றதிங் கின்றோ டென்ன நீணில மிரங்க வந்த
மன்றல்சேர் குழலாள் வைகு மனையைவிட் டகன்று வேறோர்
நன்றிசேர் தலத்தின் மன்னி நான்மறை வியந்து கூறும். (கஎ௩)

உத்தம வேட மாகி யோங்குசீர்ச் சந்நி யா[illegible]
மித்தலந் தன்னி லின்றே கைக்கொள்வே னென்ன வெண்ணி
முத்தரு மறைக ளோர்ந்த முனிவரும் புகழ்ந்து போற்று
நித்தரி லொருவ னாகி நீணிலத் துதித்தா னன்றே. (கஎச)

வேறு.

இருந்தா னொருப்பட் டிளையாழ்வா னிசைக்கு மாசூ ரிப்பிள்ளை
தருந்தா மஞ்சேர் குழலணங்கித் தலைவ னார்க்கு முன்பிறந்த
வருந்தா னஞ்சீர்த் தவம்பொறைசே ராண்டாள் வயிற்றி லவதரித்து
மருந்தாம் பிறவிப் பிணிக்கென்ன வந்த நந்தா விளக்கனையான். (௧௭௫)

பேச வினிய கந்தாடை முதலி யாண்டான் புறப்பட்டுத்
தேச மறிய விளையாழ்வார் திரிதண் டேந்த வொருப்பட்ட
மாசி லாத சீருரையைக் கேட்டு மனத்திற் களிகூர்ந்து
நேசத் தாலே வந்திருந்த நினைவின் மிக்கான் கழல்பணிந்தான். (௧௭௬)

பணிந்த முதலி யாண்டானைப் பார்த்துப் பரம சாத்துவிகன்
றுணிந்தோ மதலாய் நான்மறைமுன் சொன்ன சந்நி யாசத்தி
லணிந்த மென்பூங் குழலியைவிட் டகன்றோ மெதுநின் கருத்தென்றான்
றிணிந்த வினையின் றொடர்வற்ற முதலி யாண்டான் செப்புவான். (௧௭௭)

வேறு.

ண்டனேன் றேவ ரீர்க்குச் சொல்வதொன் றுளதோ வானிற்
டிற லிரவி தன்னைச் செறிமுகிற் கணங்கண் மூடிக்
ரண்டுவிட் டகன்ற தன்மை போன்றதுங் கோலங் கண்டு
பண்டு ா னறிவே னின்று பார்த்துள பொழுதின் மேலோய். (௧௭௮)

முற்றவும் விடுமி னென்ன மூதறி வுடைய மாறன்
சொற்றது நினக்கே யன்றோ சுருதிக ளனைத்து நின்னிற்
கற்றவர் யாவர் கற்றுங் கண்ணனைக் கருத்தி லோர்ந்து
பற்றில ரென்னிற் கற்ற கல்வியாற் பயனென் றுண்டோ. (௧௭௯)

சீருறு மாறன் முன்னஞ் செப்பிய தமிழ்வே தத்துக்
காரதி காரி நீயே யன்றியு மொருவ ருண்டோ
பார்மிசை முன்னந் தோன்றும் பத்தரிற் பின்னு மண்ணி
னோர்பெறத் தோன்று வாரி னின்னையே யனையா யன்றி. (௧௮௦)

குலத்தினைக் கல்வி தன்னைக் கோதறு மிளமைச் செல்வ
நலத்தினைத் தனத்தை நம்பி நானிலத் தெவர்க ளுய்ந்தார்
சொலப்புகி னறிவின் மிக்கோய் துணிந்தமை நன்று பொன்றுப்
பலத்தையும் வெறுத்து நின்ற பரமசாத் திகனே யென்றான். (௧௮௧)

என்றிவை யிளையாழ்வார்மு னிறைஞ்சிநின் றியம்பக் கேட்டு
நன்றுநுங் கல்வி நன்று நலனுறு முணர்ச்சி யென்னச்
சென்றெடுத் துணர்வுந் தூய சிந்தையு மழுந்தப் புல்லி
யின்றெனை தாவி யொத்தா யிருத்தியென் றிருத்திக் கொண்டான். ()

# எம்பெருமானார் வைபவம்.

அப்படி நிகழு நாளி லாசிலாக் கூர மென்னுஞ்
செப்பரு நகரில் வைகுஞ் சிறந்தசீர்க் கூரத் தாழ்வா
ரொப்பிலா மைந்த னாய வோங்குநற் கூரத் தாழ்வான்
றப்பற விளையாழ் வாருந் தவத்தின்மே லொருப்பா டுற்ற.

திறத்தினைக் கேட்டின் புற்றுச் சென்றவர் சரணந் தாழ்ந்தங்
கறப்பொரு ளாகி நின்ற வாசறு மிளையாழ் வார்பா
லுறப்புகு முதலி யாண்டா னுடனமர்ந் தாச்ச ரித்தான்
பிறப்பெனுங் கடலை நீந்திப் பேரருட் கரையைச் சேர்ந்தான்.(௧௮௪)

வேறு.

அந்தவா றிருவர்களு மாச்சரிப்ப வதன்பின்பென்
றந்தையா மிளையாழ்வார் கச்சிநம்பி யெனுந்தவஞ்சேர்
சிந்தையார் மெய்ஞ்ஞானச் செழுந்தவனைக் கண்டிறைஞ்சி
யெந்தையா னினைந்ததிறைக் கியம்புகவென் றிசைத்தனரால்.(௧௮௫)

வேறு.

தனைவிடுத் தருளா ளற்குத் தன்னுடை மனத்துட் டோன்று
நினைவினை யுரைப்பித் தந்த நேமியா னருளி னாலே
வினையெலா மறமுன் னேற்றான் விண்ணவர் மகிழ்ந்து வாழ்த்தத்
தினையின தளவு மொன்றுந் திருவுளத் தாசை யின்றி. (௧௮௬)

வேறு.

அனந்த சரசுக் கரைமன்னி யதனுட் புகுந்து நீராடிச்
சினந்திண் மயக்கங் கொடுங்காமந் தீரா வஞ்ச மிவைபுணர்ந்த
மனந்த னோடே யறவிட்டு வாக்கு முளமுஞ் செய்தொழிலுந்
தினந்தண் டுழாயான் றனக்காகும் வண்ண நின்று சிந்தித்தே.(௧௮௭)

வேறு.

கருதரு முதலி யாண்டான் கலியாண குணங்க டம்மைத்
திருவுளத் தெண்ணி யந்தத் தேசிஞன் றன்னை யன்றி
மருவிய பற்றை விட்டேன் வாதனை யோடு மென்னக்
கருமுகில் வண்ணன் வைகுங் கனகமா மேரு வொத்த. (௧௮

புண்ணியக் கோடி யாழ்வார் பொருவரு குரவ னாகை
வெண்ணிமற் றவரை நோக்கி யாவருங் கேட்ப முக்கா
னண்ணிநின் றருளிச் செய்து நான்மறை மகிழ்ந்து வாழ்த்தத்
திண்ணிய காவி தோய்த்த திருப்பரி வட்ட முக்கோல். (௧௮௯)

சாத்தின னரையிற் கையிற் றரித்தன னரியை நோக்கி
யேத்தினன் றிருப்பல் லாண்டை யாவரும் பண்ணி நின்றார்
தோத்திரங் கூரத் தாழ்வான் றுகளிலா வொளிகொண் ஞான
நேத்திர முடையாய் வாழி நீணிலத் தூழி யென்ன. (கசு0)

மங்கலா சாத னத்தை வாக்கினன் மகிழ்ந்து பண்ணி
யங்கமர் முதலி யாண்டா னுசாறு முகத்தை நோக்கிப்
பொங்குசீர்ச்சுலோக மொன்றை யுரைத்தனன் பொருளேதென்னிற்
றங்குமே மூலகின் ஞானத் தலைவராய் வைகு வோரில். (கசுக)

வேறு.

உன்னி லுன்னை யொத்தவர்க ளுண்டோ வந்தோ விளையாழ்வார்
சன்னி யாதங் கொளுமிடத்துத் தனையும் விட்டின் றனைபொழிய
மன்னும் பொருள்க ளனைத்தினையும் விட்டேன் விட்டேன் மதிமிக்கா
யென்னு முரையிங் குனக்கல்லா லொருவர்க் குளதோ வெனச்சொன்னன்.

வேறு.

அப்படி முதலி யாண்டா னுசுறு குணத்தைச் சொல்லிச்
செப்பருங் கூரத் தாழ்வான் றிருவுள மகிழ வந்த
வொப்பிலா விருவ ரோடு மோங்குசீ ரிளையாழ் வாருந்
தப்பற வவ்வூர் மாயன் சரண்பணிந் தமரு நாளில். (கசுங)

இலங்குசீ ரிருவர் கட்கு மிசைத்தநற் றரிச னூர்த்தந்
துலங்கிட வருளிச் செய்து தொந்தங்கள் பலவு நல்கும்
புலங்கெடுத் தருளா ளன்றன் பூங்கழ னிழலில் வைகி
மலங்களெந் தமல மாகி மன்னின னந்நா டன்னில் (கசுச)

இருநிலத் தறிஞர் போற்றும் யாதவப் பிரகா சன்றூ
னொருபக லவனைப் பெற்ற வன்னைபா லுணவு துய்த்து
வருமிடத் தவனை நோக்கி மற்றவ ளுரைக்கு ளமர்ந்த
வருமறை நான்குங் கற்று யனைத்துள கலையுங் கற்றாய் (கசுரு)

உன்னுடன் சிலநாட் கற்ற வோங்குசீ ரிளையாழ் வானு
மன்னுல களந்த மாமான் மலரடி களைக ளுகச்
சன்னியா சுத்தைப் பற்றித் தலைவரிற் றலைவ னுனன்
புன்னுனிப்பனிநீர்வாழ்வைப் புதல்வநீ பொருளென்றெண்ணி. (கசுசு)

நிற்றலா வுலகந் தன்னி லெனடும்பக லிருந்து நீமுன்
கற்றநூ லனைத்து நோக்கிற் கழுதைகுங் குமங்கொண் டேகு
மற்றதின் கந்தங் கொள்வா னுணர்விலை யதுபோ லென்னப்
பெற்றதாய் பகரக் கேட்டுப் பேதைமை தவிர்ந்தே னன்னே. (கசுஎ)

வேறு.

அடியேன் செய்யத் தக்கததை யருள்வா யென்ன வவனடியை
முடியால் வணங்கி முன்னிற்பான் முகத்தை நோக்கி யுரைச்
செண்டியா னுலக முன்னளந்த நெடுமா லடியா ரடியேனுங்
குடியாய்ப் பூதூ ரிளையாழ்வான் போன்று நீயுங் கோதில்லா (கசூஅ)

முக்கோல் காவித் துவராடை முறையாற் றரித்து மூவுலகுந்
தக்கோ னென்னும் படிநடந்து தன்னுள் விளையுங் காமாதி
யொக்கோ திணையு மறிவனலா லெரித்து மரித்த மனத்தாலே
தொக்கோ டிறையு முறவின்றி நிற்றி யென்று டொழுதவனும். (கசூசூ)

வேறு.

ஆங்கு நின்ற கன்று சென்ற கம்பு குந்த னைத்தையும்
பாங்க றத்து றந்து சன்னி யாத மின்று பற்றநாம்
வீங்கு நீர்வ ளைந்த வேலை வட்ட மாகி மெய்ம்மையா
மோங்கு பூவ லஞ்செய் தெய்த வேண்டு மென்ன வுன்னினன். (உ00)

உன்னி நாளை யேக வென்ன வோரி டத்த மர்ந்தனை
னன்ன வேதி யன்க ணுவி லன்றி ராநம் மாயனார்
மன்னி மாசில் பூதூர் வந்த வள்ள லேவ லஞ்செய்தச்
சன்னி யாத மெய்தி நீயும் வாழ்தி யென்று சாற்றினர். (உ0க)

அன்று சென்று மாய னார ளித்த சொப்ப னத்தையோர்ந்
தின்றி தென்கொ லோர்க ணுவி ருந்த தென்ன வேதியன்
சென்று கச்சி நம்பி யோடு செப்பு மொப்பில் செங்கணாற்
கொன்று நானி னைத்து ளென தின்ன தென்னவொள்ளியோய். (உ0உ)

கேட்டு வந்து ரைத்தி யென்று கேடி லாத நம்பிதன்
றூட்ட லம்ப ணிந்து செப்ப நம்பி யுஞ்ச மைந்துபோய்
வாட்ட மற்ற தாம ரைக்கண் மாய னார்ம லர்ப்பதத்
தீட்டு கின்ற காத லோடி றைஞ்சி யால வட்டமும். (உ0ரு)

எடுத்தி ரண்டு கைக ளானு மின்றெ ணுவி நாதமவன்
றடுத்து நின்று வீசி நின்ற வச்சு தன்னி டத்துள
மடுத்து நீங்கு போதி னம்பி மாய னோடு தன்னைமுன்
விடுத்த வன்ப கர்ந்த தன்மை யொன்று கூறன் மேயினன்.

வேறு.

ஈறிலா மாயம் வல்லா யாதவப் பிரகா சன்றன்
மாறிலா மனத்தி லொன்று நினைத்துளேன் மாய னார்பாற்
கூறியந் நினைவைக் கேட்டுக் கொண்டெனக் குரைத்தி யென்றான்
றேறமற் றவன்றான் கேட்ட நினைவினைச் செப்பா யென்றான். (உ0ரு)

# எம்பெருமானார் வைபவம்.

என்றிவை நம்பி கூற யாதவப் பிரகா சன்ற
னன்றிசேர் நினைவைக் கேட்டி நவையிலா யவனை யீன்று
ளின்றுநீ யிளையாழ் வானென் றிசைத்திடு மேலோன் போலப
பொன்றிலில் சன்னி யாதங் கொள்ளெனப் புகன்றுணென்னல். (உ0௬)

ஆங்கதற் கிசைந்து பூமி வலஞ்செய்தவ் வேடங் கொள்வான்
பாங்குற வெண்ணி னாரப் பத்தனார் கனவி னன்போ
யோங்குநம் மிளையாழ் வானை யொருமுறை வலம்வந் தானன்
றுங்குமே பூலகு முக்கால் வலம்வரு பலத்தைத் தக்கோய். (உ0௭)

தருமென வுரைத்தே னத்தை நம்புத லின்றித் தான்வந்
தொருநினை வுண்டு கேளென் றன்னொடு முரைத்து விட்டான்
பொருவிலா நிலையா யெல்லாப் புவனமு மென்னுள் வைகு
மருவுநான் காரி மாறன் மனக்கம லத்தி லென்றும். (உ0அ)

தங்குவே னவனைத் தன்சீர் மனத்திடைத் தங்க வைத்தான்
பங்கமி லிளையாழ் வானப் பத்தனை யொத்நா ரிங்கே
யெங்குளா ரந்தோ வந்தோ வேலையறு குணத்தா யித்தை
யங்கவன் றனக்குச் செப்பென் றச்சுத னருளிச் செய்தான். (உ0௯)

இப்படி மாயன் கூற யாதவப் பிரகா சன்பாற
செப்பினு னிதனைச் சென்றத் திருக்கச்சி நம்பி கேட்டன்
றப்பொழு தெழுந்து தூய வந்தணன் பூதூர் மன்னு
மொப்பிலா மணியை நோக்கி யுருகிநின் றினைய சொல்வான். (உ௧0)

வேறு.

நக்க மாறன் திருவுளத்திற் றுமோ தரனுந் தனிமுதல்வ
னுக்க வுலகமனைத்தினையும் விழுங்கிப் புகுந்தா னெனவுரைத்தான்
புக்க காலத் தவனுகி யின்று பூதூர் நகர்ப்பிறந்து
தொக்க வினையே னிடர்கெடுப்பான் றேன்றுங் கருணைச் சுகோததியே. ()

வேறு.

திருமகள் பூமி யோடே செங்கண்மா லுன்ற னுள்ளே
மருவுவா னென்று னீயோர் மானிட வேட மாகி
யிருநிலத் துற்று யந்தோ யாவரே யறிவார் நின்னைப்
பொருவரும் புகழாய் நான்முன் னுரைத்தவை பொறுக்க வேண்டும்.

வேறு.

புவியு மேலா மிருவிசும்பும் புகலுந் திசைக ளோரெட்டுங்
குவிய நின்ற நின்னகத்துட் கொண்டு குரவ னருளாலென்
செவியின் வழியாய் வந்தடியேன் சிந்தை புகுந்தா யெனும்பரம
கவிக ளுரைத்த படிநின்னிற் கண்டேன் கண்டே னெனக்கழறி. (உ௧௩)

சென்று வணங்கி வலஞ்செய்து சீமா னிளையாழ் வாரருளா
லன்று சன்னி யாதம்பெற் றுய்ந்தா னந்த வருமறையோ
னன்றி சேரு மிளையாழ்வார் ஞான மிக்க தொண்டரொடு
மொன்றிக் கச்சி யருளாள ரோங்கு கழற்கீ ழுறவாழ்ந்தார். (உகச)

வேறு.

அந்த வாற னைத்தை யும்ம றிந்த ரங்கர் தாளின்மேற்
சிந்தை வைத்து மன்னு கின்ற தேசி கக்கு ழாங்களு
மிந்த மாநி லத்தி னிற்பி றந்தி றக்கு மின்னல்சேர்
பந்த முற்று மின்றெ டுந்த விர்ந்த தென்று பாரின்மேல். (உகரு)

ஆடி னார்கள் தென்ன ரங்கர் தாளை யன்று சென்னியிற்
சூடி னார்கள் வேத மாதி சொற்றெ ரிந்து பன்முறை
பாடி னார்க ளங்கு மிங்கு மத்தி றம்ப கர்ந்தெழுந்
தோடி னார்க ளன்ப ரின்ப முற்ற தென்னு ரைப்பதே. (உகசு

வேறு.

அப்படியே திருவரங்கத் தினிதமர்ந்தெம் மாளவந்தா
ரொப்பரிய திருவடிக்கீ ழுற்றுறையு முதலிகளுஞ்
செப்பரிய வரங்கனார் திருமுன்பிற் புகுந்திறைஞ்சி
முப்பொழுது மமரர்தொழு முழுமுதலே யிளையாழ்வார். (உகஎ

வேறு.

சன்னி யாதங் கைக்கொண்டு தயங்கு கச்சி மாநகரின்
மன்னி வாழா நின்றனரும் மானு பாவ ஞூதமுனி
யுன்னி வகுத்த தரிசனத்துக் கோங்கு மதிப ரெனவுரைத்தார்
முன்ன மாள வந்தாரெம் மூவா முதலே நீயவரை. (உகஅ)

விரைவி லழைத்துத் தலத்தாக்கி வேண்டு முறுதி யாளவந்தார்
தரையி லவர்க்கென் றெங்களிடை வைத்துப் பரம பதஞ்சார்ந்தா
ருரையும் பொருளு மெங்களைக்கொண் டவருக் கிறைவ வோதுவித்துப்
பரையொன் றின்றி யெம்மொடவர் பொருந்தும் வண்ண மருள்கவென்.

வேறு.

பாராரப் பணிந்தேத்திப் பாகவதர் கட்டுரைப்ப
காராரு முகில்வண்ணன் காஞ்சிமா நகரமருஞ்
சீராரு மிளையாழ்வார் சீக்கிரத்தில் வருகவென
வேராருந் திருமுகமு மீந்திருவர்ப் புகவிடுத்தா (உஉ0)

சென்றவர்க ளிளையாழ்வார் திருவடியி லுறவிறைஞ்சி
நின்றாங்கர் திருமுகத்தை நீட்டினா ரவரெழுந்தங்
கன்றுமரப் பணிந்தேற்றா ரருளியசொற் பயனுணர்ந்து
நன்றெனவே திருக்கச்சி நம்பியொடு நம்பெருமாள். (௨௨௧)

வருகவெனத் திருமுகமும் வரவிடுத்தா ரருளாளர்
திருவுளத்துக் கறிவித்தத் திறத்தினையிங் குரைத்தியென
மருவருஞ்சீ ரிளையாழ்வார் வணங்கியிவை கட்டுரைப்பப்
பொருவருஞ்சீர்க் கச்சிநம்பி புனிதனுட னவைபகர்ந்தான். (௨௨௨)

அங்கதுகேட் டருளாள னவனியின்க ணெதுவரினுந்
தங்கடங்கள் பெண்டுகளைப் புறம்போக்க றக்கதுவோ
பொங்குகட லுலகத்தார் புகல்வரிது போமென்னச்
சங்கமருந் திருக்கூத்தான் சாற்றினா னதைநம்பி. (௨௨௩)

ஆசிலா விளையாழ்வார்க் கறைந்தனர்போ யதையரங்கத்
தீசனார் திருமுகங்கொண் டேகினா ருடனுரைத்து
நீசனே னென்செய்கே னெடுமாலுக் கித்திறத்தைப்
பேசுமென விடுத்தனர்நம் பெருமாளு மதுகேட்டு. (௨௨௪)

வேறு.

சீரா ராழ்வார் திருவரங்கப் பெருமா ளரையர் தமைக்கூவி
யேரார் கச்சி யருளாள ரிளையாழ் வாரை யாங்கேட்டாற்
றாரார் நீயிர் போயவரைச் சந்தோ டிக்கும் படிபாடிப்
பூரா யத்தாற்கொணர்மினெனப் பூவைவண்ணரெனத்தோன்றும். (௨௨௫)

செம்பொற் றிரட்டிண் மதிளரங்க ரிவணஞ் செப்பச் சென்றிறைஞ்சி
யம்பொற் சிவிகை மேற்கொண்டங் கரையர் காஞ்சி நகரெய்தி
யும்பர்க் கமுத மளித்தபிரா னோங்கு கமலப் பூங்கழற்கீழ்
வம்புற் றலர்ந்த மலர் வி வணங்கிச் சிலநாண் மன்னினார் (௨௨௬)

வேறு.

துய்யமா மலராள் புவிமக ளிறைஞ்சத் தொடுகடற் கிடந்துபற் பகலுஞ்
செய்யமா மலர்க்கண் வளரருளாளர் தேவர்க டொழுதெழ வொருநாள்
வையமா ளிகையி லினிதிருந் தருளி யரையரை வருகவென் றழைத்திட்
டுய்யமாதவஞ்செய்தோங்கினாய்பாடென்றுரைத்தனரோங்குசீரரையர்.

மண்ணெலா முருகக் கல்லெலா முருக மரங்களும் புற்களு முருக
விண்ணெலா நிறைந்த வமரரு முருக விரிஞ்சனு நக்கனு முருகக்
கண்ணெலா மருவி பாயவிந் திரனுங் கனலுறு மெழுகெனக் கரையப்
பண்ணெலாமெடுத்துப்பாடினாரினிதாய்ப்பங்கயக்கண்ணனுமகிழ்ந்தான்.

பண்டுலக ளந்தான் றிருவுள மகிழ்ந்து பாடிய வரையரை யுவந்து
கொண்டவர்க் குபய சாமரஞ் சிவிகை கோதறு மாடையா பரண
மண்டர்கண் மகிழக் கொடுத்தன னரைய ராங்கவை கைக்கொளா தலர்ந்த
புண்டரீகக்கட் புரவலாகேளென்றடிதொழு திவையிவைபுகல்வார். (உஉகூ)

ஒருவனை யொருவன் பாடினா லுவந்தால் வேண்டுவ தென்னெனவுரைத்துத்
திருமக டலைவா பாடிய புலவன் செப்பிய தளிப்பர்க ளுலகின்
மருவரும் புகழா யைதுநொய் தாகப் பாடினான் மகிழ்ச்சியற் றவர்க
டருவதுபோலத் தந்தனை யின்னும்பாடுவேன் றலைவவென்றிசைத்தார். (உ௩௦)

செங்கணா யகனா ரறிந்தறி யார்போற் சீரிய புலவனை நோக்கித்
தங்கிய புகழா யொக்குமின் றெம்பாற் றப்புள வவைபொறுத் திடுக
பொங்குபூங் குழலா டிருமகள் பூமி யன்றியெப் பொருளைநீ கேட்பா
யங்கவை யுடனா மளிப்பதற் கைய மில்லையேதறையெனவறைந்தார். (உ௩க)

வேறு.

ஆனா லிந்த விளையாழ்வார் தம்மை யடியேற் கருளென்னத
தேனார் கமலத் தாடொழுதா ரரையர் திருமா லங்கிங்குத்
தானா யிருந்து மிகச்சலித்துத் தந்தோ மென்றா ரிருவர்களும்
போனார் சிவிகை மேற்கொண்டப் பூவை வண்ணன் கழல்வணங்கி. (உ௩உ)

ஆடிப் பூரத் தவதரித்த வாண்டா ளருளா லுடையவரைப்
பாடிப் பெற்றோ மிளையாழ்வார் தம்மை யின்றெம் பரமனுக்கங்
கோடிச் சென்று சொல்லென்ன வொருவன் றன்னை முனம்விடுத்தான்
றேடிப் பிரம னரன்காணாத் திருமா றாதன் செல்வதின்முன். (உ௩௩)

அரைய ரிராமா நுசனைக்கொண் டேகின் றாரின் றவர்க்கெதிரே
நிரைசெய் திடுக நம்மனைத்துக் கொத்துங் கொண்டு நீயென்னத்
திரைசெய் கருணைச் சேனையர்கோன் றனக்குச் சீரார் திருவரங்க
ருரைசெய் தருள வங்குள்ள வனைத்துக் கொத்து முடன்கூட்டி. (உ௩௪)

ஆக மெல்லா மானந்த மயமா மாற னருளுடைய
பாக வதர்கள் புடைசூழப் பசும்பொன் றிகழும் பல்லக்கிற்
றாக மோக மற்றிலங்குந் தமர்க ளாங்கச் சேனையர்கோன்
மேக வண்ணர் பணித்தபடி வடவாற் றளவும் விடைகொண்டான். (உ௩௫)

அந்தா மஞ்சீ ரரங்கமதா யரையர்க் கிளையாழ் வார்க்கெதிரே
வந்தார் நித்தர் திரளாகி மற்றை யவரே முத்தர்களாய்ச்
சந்தார் பொழில்சூழ் வடவாறே சாற்றற் கரிய விரசையதாய்
நந்தா வளங்கண் மிகவோங்க ஞான மிக்கார்க் கெதிர்கொண்டார். (உ௩௬)

வேறு.

இப்படி யிவர்க ளெதிர்கொள வெதிகட் கிறைவனை யிதயமா மலரிற்
றப்பற விருத்தி மூன்றுதண் டேந்துந் தலைவனு மரையனுங் கூரத்
தொப்பரு நகரின் மன்னுமாழ் வானு முடன்வரு முதலியாண் டானுஞ்
செப்பரும் வடவா றதனினீ ராடித் திருப்பரி வட்டமுஞ் சாத்தி. (உ௩எ)

சீரிய கருணைத் துவாதச நாமஞ் செப்பிநற் றிருமண்காப் பணிந்தங்
கேரிய மஞ்சட் காப்பணிந் திலங்க வெழிறிகழ் திருமணி வடமுங்
கூரிய கருணை திகழ்திரு மார்பிற் கோப்புற வணிந்துதென் கரையிற்
றாரிய முழங்கக் கொம்புகா ளங்க டுந்துமி குடமுழ வதிர. (உ௩அ)

பேரிகை தாள மத்தளஞ் சின்னம் பேரணி நிரைத்தெதிர் முழங்கக்
கூரிய விழியார் புடைவர வமரர் குலவுநன் மலர்மழை பொழியச்
சீரிய கவிஞர் பாணர்க ளேத்தச் சேனையர் கோனிணை யடியி
லேரிய மலரிட் டிறைஞ்சினன்புவியிலெதிகளுக்கரசனு மெம்மான். (உ௩௯)

வேறு.

இடிநிகர் முரச மார்ப்ப யாவரு மிளையாழ் வாரைப்
படிமிசை வணங்கி யேத்தப் பத்தர்கள் பல்லாண் டோதக்
கொடியணி நெடுவா னோங்குங் கோபுரங் கண்டு மண்ணின்
முடியுறத் தாழ்ந்தார் சென்றார் முறைமுறை துதிசெய்தேத்த. (உ௪0)

வேறு.

தண்டார் திகழுந் திருமார்பன் றமோ தரன்கோ புரந்தன்னைக்
கண்டாங் கிறைஞ்சி யெழுந்ததற்பின் கண்க ளிரண்டுங் களிகூர
மண்டான் குழைய முனிவர்தொழ மறையோர் புகழ விரைந்தேகி
விண்டா னளப்ப மிகவோங்கி விளங்கிக் களங்க மேவுகிலா. (உ௪௧)

வேறு.

திடமுடை யமரர் போற்றுந் திட்கொடி மதிளைக் கண்டார்
தடமுடைக் கரங்கள் கூப்பித் தாழ்ந்துறப் பணிந்துள் புக்கார்
படவர வணைய தாகிப் பங்கயக் கண்ணன் றன்னோ
டுடனமர்ந் துலக முய்ய வோங்கிளை யாழ்வா ரானார். (உ௪௨)

வேறு.

திருமலை தந்தான் வீதியே* முதலாய்ச் சிறந்தசீர் வீதிக டோறும்
பொருவரும் புகழான் வலஞ்செய்தாங் கதனுட் பூசுரர் துதியொடு மேகிக்
குருமணி யாய பெரியநம் பியையுங் கோதறு மன்பினு லேத்தி
யிருபதம் வணங்கி யவனொடு மேகி யிமையர் மலர்மழை பொழிய. (உ௪௩)

* "திருமாலைதந்தபெருமாள்திருவீதி" என்று குருபரம்பராப்ரபாவத்திலே காணப் படுகிறது.

௨0௧௪, (7227)

### வேறு.

சந்திர புட்கரிணித் தண்புன லிற்றமரோ
டிந்திர சித்தினைவென் றிட்டவி லக்குமனு
மந்திர வித்தழகார் மஞ்சன மாடியுடன்
செந்துவ ராடைசெழுந் திருவரை யிற்றிகழ. (உசச)

அன்றபு னைந்தழகா ராசறு நற்றிருமண்
ணென்றல பன்னிருநா மத்துட னொக்கவணிந்
தென்றுமு யிர்க்குதவு மெந்தையு முப்பகையை
வென்றதி ருக்கையினில் வேதவி திப்படியே. (உசரு)

செப்பரு முக்கோலுஞ் சீர்கொள்ப வித்திரமு
மொப்பறு செங்கையினி லும்பரு மன்புசெயு
முப்புரி நூன்மார்பன் முத்தியின் வித்தெனுமென்
னப்பனு மன்றுதரித் தன்பரு மின்புமுற. (உசசா)

கோகன கத்துளபக் கோமள மாமணியு
மாகன கத்தொளிரு மார்பிலணிந் தசுர
னேகந கத்திரளா லொள்ளிய வொள்ளியனை
மேகந கத்துருவாம் வேத பரம்பரனை. (உசஎ)

உன்னிந டந்துபலி பீடமு முள்ளுறையும்
பொன்னினி லங்கியசெம் பொற்கொடி மாமரமு
மன்னுத லங்களினும் வந்துப ணிந்தழகா
ரன்னமு மாமையுமா மழகிய மணவாளன். (உசஅ)

மண்டப மெய்திடலும் வந்தவ ரெதிர்கொளவன்
றண்டர்தொ ழுங்குருகூர் மாறனை றைந்தமைபோற்
புண்டரி கைத்திருமால் பூசுரர் கைத்தலமேற்
கொண்டெதி ரெய்திடநங் கோதறு பூதூரில். (உசகூ)

வந்துபி றந்தவரு மாதவ னாருள்ற
சிந்தைக ரைந்துருகிச் சென்றுந மோநமவென்
றந்தமு மாதியுமில் லாதவ னைப்புவியின்
முந்தவ ணங்கினரம் முதலியு மாழ்வானும். (உரு0)

அப்படி யேபடிமீ தச்சுத னைப்படியச்
செப்பரு மெம்பெருமா னார்வளர் சென்னியின்மேற்
றப்பற நம்பெருமாள் வைத்தனர் தாமரைதூ
னொப்பென வன்றெனவா ழொள்ளிய சேவடியை. (உருக)

மண்டிய காதலொடு மண்ணில்வ ணங்கியெழுந்
தண்டர்க ளும்புகழு மச்சுத னைப்பழைய
தொண்டர டிப்பொடிநற் சொற்படி யேயழகார்
புண்டரி கப்பதமும் பொன்முடி யும்வடிவும். (௨௫௨)

வேறு.

ஆசறப் பூண்டு புல்லி யனுபவித் தான வந்தா
ரீசனே பெரிய நம்பி யிதயமே யளவி லாத
பாசமாக் கடலு ளேவாய்ப் பாம்பினாற் பதைப்புண் டோய்ந்த
நீசனேன் றன்னைக் காத்த நின்மலா சரண மென்ன. (௨௫௩)

பின்னையும் பணிந்தா னந்தப் பெருங்கடற் சுழியி லாழ்ந்து
தன்னையு மறந்து நின்ற தொண்டரைத் தலைவர் நோக்கி
முன்னைநான் மறைகள் வல்லீர் முழங்குநீர் சூழ்ந்த மண்ணு
மின்னொளி விசும்பு நஞ்சீர் விபூதிக ளிரண்டு மின்றே. (௨௫௪)

பொதுவறத் தந்தோ நீரிப் பொற்புறு நமது வீட்டி
லிதுவது வதுவென் னாதே யாவையுந் துறைக டோறுங்
கதுமென நோக்கி மற்றைக் காரிய மனைத்துங் காண்பீர்
முதுமொழி மறைகள் வல்லீ ரென்றிவை முகுந்தன் கூற. (௨௫௫)

வேறு.

உற்ற வடியா ரெங்குறினு முணர்தற் கரிய பரமபத
மற்றை யவர்கள் கையதுவா மென்ன மாறன் வருத்தபடி
கற்ற பூதூ ரிளையாழ்வான் கையி னெல்லிக் கனியென்னப்
பெற்ற விபூதித் துயங்களையும் பேத மின்றி யுறநோக்கி. (௨௫௬)

வேறு

விரிபொழில்சூ ழரங்கத்துட் டமர்களொடும் வீற்றிருக்கும்
பெரியநம்பி முகநோக்கிப் பேதையேற் குனக்காக
வரியரவி னுலகனைத்தும் வயிற்றொடுக்கிக் கண்வளருங்
கரியமுகி லனைத்தினையுங் காட்டிடநான் கண்டொழிந்தேன். (௨௫௭)

பெரியார்க்காட் பட்டக்காற் பெறுதபய னென்றுளதோ
வரியானே யெனவுரைத்தன் றவனடியி னுறவிறைஞ்சத்
தெரியாத கலையனைத்தும் யாவர்கட்குந் தெளிந்துணர்த்தும்
விரியாநின் றொளிர்கருணைப் பெரியநம்பி விளம்பிடுவான். (௨௫௮)

வேறு.

கண்டு கொண்மின் பின்னடையக் கலியுங் கெடுமென் றருண்மாறன்
பண்டு பகர்ந்தா னப்படியே யாள வந்தார் பார்வையினாற்
றெண்ட ருய்யும் படிநீயுந் துறந்து பெற்றா யிச்செல்வ
முண்டுகொல்லோ வுனக்கல்லா லொருவர்க்கென்ன வுவப்போடும். (உ௫௯)

அரிய குரவ னிவையருள வவரை வணங்கி யன்பரொடும்
பெரிய திருமண் டபஞ்செறிந்து பேரோ லக்க மாயிருந்து
தெரிய வரிய நம்பெருமாள் சீகா ரியங்க ளனைத்தினையு
முரிய முறையா லாராயப் புக்கா னெதிகட் கிறையானான். (உ௬0)

வேறு.

வருகூரத் தாழ்வானு மருமகனு முதலிகளுங்
குருகூரன் றிருவருளு முடன்மன்னக் கொழுந்தவத்தா
லருகூரும் புனற்பொன்னி யம்மான்முன் னமைத்தபடி
கருகூலத்* தறைபலவுந் திறப்பித்தான் கருணையினான். (உ௬௧)

வேறு.

சீர்கொண்மா ணிக்கப் படியனைத் தினையுந் திருந்துற நோக்கிமற் றதற்பி
னேர்கொணித்திலத்தின் படியெலாநோக்கியிசைத்தநற்பவளத்தின்படியு
நேர்பெற நோக்கி மரகதப் படியு நீடொளி வயிரத்தின் படியும்
பாருறா புகழா னீலத்தின் படியும் பகருங்கோ மேதகப் படியும். (உ௬௨)

ஆங்கதற் பின்பு பற்பரா கத்தி னழகுறும் படியெலா நோக்கிப்
பாங்குறும் வயிடூ ரியப்படி நோக்கிப் பசும்பொனின் படியனைத் தினையு
மோங்கிய் புகழா னோக்கிமற் றதனி லுறுமறா வகற்றிநம் பெருமா
டாங்குசீராரமனைத்தையுமுன்போலிருந்தவத்தலங்களிலமைத்தே. (உ௬௩)

வேறு.

திருப்பரி வட்ட வர்க்கஞ் சிறந்தபட் டாடை முற்றும்
விருப்பொடு நோக்கிச் சல்லிச் சவர்முனம் விரிஞ்ச னுளி
விருப்புவை யனைத்து நோக்கி யெலையறா பொன்னிற் செய்த
வுருக்களி னெடையு மாற்றா முள்ளவா றுவந்து நோக்கி. (உ௬௪)

வேறு.

எண்ணிய வேந்த ரிக்குவா குவாதி யிராகவன் வரையினி லுள்ள
புண்ணியம் போன்றா ராங்கனுக் களித்த பொருவரு மாப ரணங்கள்
விண்ணம ரிரவி யொளியின பலவு மிக்குள பலபல பொருளுங்
கண்ணுற நோக்கிச் சீர்பெறவிளக்கி யமைத்தனன் காவலரி த்தில். (உ௬௫)

*கருகூலம்—கருவூலம்; ஆபரணப்பெட்டி.

வேறு.

மற்றதிற்பி னமுதுபடி மணிவிளக்குத் திருமாலை
யுற்றதுறை துறைதோறு முறநோக்கி யனைத்தினையுங்
கற்றவர்கள் புகழ்ந்தேத்தக் கலாதிசெயு மைம்புலனு
மற்றவனுங் கத்தூரி சந்தனமங் கதற்கிசைந்த. (௨௬௬)

வேறு.

கலவைகள் பலவும் விழிகளா னோக்கிக் கண்டதிற் றீமைகள் கடிந்து
நலமுற விளங்கு மண்டபம் பலவு நாடிமற் றவைபுதுக் கிடுவான்
செலவுகள்கொடுத்துத்திருமடைப்பள்ளியனைத்தையுந்திருந்துறநோக்கிப்
புலவர்கள்பெருமான்புதுக்குவித்ததற்பின்பொற்புறுதிருமதிண்முழுதும்.

நோக்கிமற் றவற்றிற் பழையன புதுக்கி நோன்பின்மிக் கவர்வர மிகுந்த
பாக்கிய முடையார் செய்தகோ புரங்கள் பலவுந்தன் விழிகளாற்பார்த்தங்
காக்கிய வுருவி லழிந்தவை சமைத்தன் றலங்கரித் ததன்புறத் தலர்ந்த
பூக்குடைந் தாடி வண்டினமுரலும் பொழில்கள்பூம் பொய்கைகள் பலவும்

செண்பகந் துளவ மல்லிகை யலரி முதலிய திருநந்த வனங்க
ளெண்படு பலவு நோக்கிமற் றவற்றி லின்னல்க ளகற்றியங் கதற்பின்
விண்பகர் கான மானிடர் கானம் வீணையில் யாழினி லிசையும்
பண்பகர் பாணர் கவிஞரேமுதலாய்ப் பலபலவாச்சியம் வல்லோர். (௨௬௯)

ஆதியா வனைத்துந் துறைதுறை தோறு மாசற நோக்கிமெய் யன்பாற்
சோதியா தவைகளனைத்தையும்புகுந்துதுறைதொறுஞ்சோதனைபண்ணிப்
பேதியா தருளி னின்றவர் நிற்கப் பிறர்களை முனிந்தற வகற்றி
நீதியா நின்ற வன்பரை யகன்று னின்றவத் துறைதொறு நிறுத்தி. (௨௭௦)

வேறு.

சீரொத் திலங்கு மெதிராசன் சிந்தை யென்ன வுடன்மருங்
கூரத் தாழ்வான் றனைநோக்கிக் குடும்பம் பிரிந்திங் கிருத்தல்பிழை
நீரத் தலத்தி லெழுந்தருளி நெடுமாற் குறையு ளாய்விளங்கும்
பாரொத்திலங்கும்பொறையாண்டாளென்னும்நப்பைங்கொடியை. ௨௭௧

சென்று கொணர்வீ ரெனவருளித் திருமாற் கினியா ராங்கிருப்ப
நன்றென் றிறைஞ்சி யாழ்வானு ஞான மிக்கான் றன்னையிளங்
கன்று பிரிந்த கற்றுப்போற் பிரிந்து கடுப்பின் விரைந்தேகிச்
சென்று கூர நகர்புக்குத் திருவை யனைய நயிச்சியத்தாள். (௨௭௨)

ஆண்டா ளன்றி மற்றனைத்து மறிவிற் றுறந்தங் கவளோடு
மீண்டா னாழ்வா னாண்டாளும் விட்டா ளனைத்துங் கணவனுக்காய்த்
தூண்டா விளக்கே யனையாளுந் துலங்கு செம்பொற் சுடர்வள்ளற்
றீண்டாவுளத்தா டிருமடியிற்செறிவித் தவன்றன் பின்சென்றாள். (௨௭௩)

கல்லு மரமும் பறவைகளுங் கானில் விலங்குங் கானத்திற்
புல்லுங் குழைய வனுபூதிப் பொருளுங் குழைய நால்வேதச்
சொல்லுங் குழைய மெய்குழையத் தோகை யனையாள் பின்றொடர
வல்லும் பகலு நடந்தாழ்வா னமர ரேத்த வருநெறியில் (உஎச)

கள்ள ருளர்கொ லிந்நெறியி லென்ன வாண்டாள் கலங்கியரு
ளுள்ள முடையாற் குரைப்பவவ னுண்டோ சிலது கொணர்ந்ததென
வெள்ளங் கோலி நீர்தகைத்தா ளளிப்பான் விளங்கும் பசும்பொன்னின்
வள்ள மொன்று கொணர்ந்தேனென் றுரைத்தாள் கேட்டு மதிமிக்கான்.

பெருக நகைத்துப் பயந்தீர்ப்பென் பேதாய் தருதி யெனவாங்கி
யருகி னின்ற செடிமுகட்டி லச்சங் கொடுத்தீ ரகலுமென
வொருவர்க் காகும் படிபோகட் டுள்ளந் தூயா டனைநோக்கி
வெருவப் பண்ணு மச்சமினி முளதோ சொல்லாய் மெல்லியலே. (உஎசு)

என்று ணண்டா ளச்சமெலா மிருந்த வள்ளத் துடன்போய்த்து
குன்று நிலையா யெனப்பணிந்து கும்பிட் டெழுந்தா ளவ்வேளொடுஞ்
சென்று ளாழ்வான் றென்றிசைமேற் செழுநீ ரிலங்கை யரக்கர்களை
வென்றான் கிடந்து கண்வளரும் விரையார் பொழில்சூழரங்கத்தில்.(உஎஎ)

வேறு.

ஆங்கமரும் பாகவத ரனைவர்களு மாழ்வான்றன்
பூங்கழற்கீழ்ப் பணியவந்தப் பூசுரர்கள் பதங்களினும்
பாங்குடனே தேவியொடு பணிந்தேத்தி முக்கோலுந்
தாங்கியசீ ரெதிராசன் சரண்பணிந்தான் றையலொடும். (உஎஅ)

வேறு.

அடிமிசைப் பணிந்த கூரத்தாழ் வானை யாவியோ டழுந்துறத் தழுவித்
துடியிடை தன்னைத் தன்னையீன் றெடுத்த சுரிகுழற் றிருவெனா நினைந்து
முடிகுட திசையின் வைத்தினி துறங்கு முகுந்தனை ரின்னரு ளமரும்
வடிவினை யாண்டா ளிதயமாமலரின் மன்னுவித்திடும்படி பண்ணி. (உஎகூ)

மற்றையர் [illegible] வானு முதலியாண் டா [illegible] ண்டர்கள் பலரு
முற்றுட னமரத் தரிசனர்த் தத்தி னுறுதிகள் பலபல வுணர்த்திக்
கற்றமா தவருங் கருணைமா தவனுங் கண்ணினுண் மணியெனக் கருதப்
பற்றெலா மறுத்த வெதிகளுக் கதிபன் பரிவொடு மரங்கமா நகரில்.(உஅ0)

வேறு.

ஏவரு மகிழ்வுற் றேத்த வினிதமர் கின்ற நாளின்
மேவரு பெரிய நம்பி விரைப்பதம் வணங்கி யோர்நா
டேவரீ ரடியே னுக்குச் சீரரு ளாள வந்தார்
பூவடி வணங்காத் துன்பம் போக்கினீர் புவிமே லனனும். (உஅக)

# எம்பெருமானார் வைபவம்.

தருவுளத் தமரப் பட்ட சீரிய பரமார்த் தங்கள்
குருபரா வுள்ள வெல்லாங் கூறிட வேண்டு மென்றுங்
கிருபதம் வணங்கி நின்று ரெம்பெரு மானார் நம்பி
யொருபொருளின் றிமுற்றுமுரைத் தவர்க்குரைப்பார்பின்னும். (உஅஉ)

மாசிலா நிலையி னாலென் வல்வினை யேனை யாண்ட
தேசிக ராள வந்தார் செப்பிய தனைத்துஞ் சொன்னேன்
பேசுமோ ருண்மை முன்பே திருக்கோட்டி நம்பி பெற்று
னீசனேன் பெறுநா டன்னி லாளவந் தார்பா னீயும். (உஅங)

சென்றதை யன்பாற் கேட்டுச் சீரியோ யுப்தி யென்ன
வன்றருட் பெரிய நம்பி யருள்செய வவரை முக்கா
லொன்றிய கருணை மிக்க வுடையவர் வலஞ்செய் தேத்தி
நன்றிசேர் மனத்துள் வைத்து நான்மறை துதிப்ப மீண்டே. (உஅச)

சீரமர் தொண்ட ரோடுந் திருக்கோட்டி யூரை நோக்கி
யார்வம்வந் துருகுஞ் சிந்தை யாளவந் தாரும் பண்டே
யோரொரு தலத்தில் வைத்த வுறுதியை நினைந்து நைந்து
பார்மிசை யிலங்கு செம்பொற் பல்லக்கின் மீது மேவி. (உஅரு)

வேறு.

திருவரங்க நகர்நீங்கித் திருக்கோட்டி யூர்நம்பி
மருவுதிருக் கோட்டியூர் வளநகரின் றிசைநோக்கிப்
பொருவருஞ்சீர்ப் பாகவதர் புடைசூழ வடையலர்கள்
கருவழியத் திருச்சின்னங் காளங்கள் வந்திசைப்ப. (உஅசா)

வேறு.

சென்றன ரிளையாழ் வாருந் திருக்கோட்டி யூரின் மன்னி
யன்றறி வுறையு மாய னடிதொழு தன்பின் வாரி
யென்றெழு நம்பி செம்பொற் கழறொழு தெழுந்தோர் பாங்கி
னின்றனர் ஞான நந்த நீடொளிப் பரிதி யொத்தார். (உஅஎ)

சீரிய ரிவண நிற்பத் திருக்கோட்டி நம்பி யென்னும்
ஆரியன் மார்பர் நின்ற தலைவர்த முகத்தை நோக்கா
ராரிவ ரென்னா ரெவ்வூ ரமர்வது நம்பால் வந்த
காரிய மென்கொ லென்னார் கண்டுகண் கண்டி லார்போல். (உஅஅ)

இருந்துதந் திருவோ லக்கத் திருந்தமெய்த் தொண்ட ரோடுந்
திருந்துநன் மொழிகள் கூறிச் சிலபல கடிகை வைகிப்
பொருந்துதம் மனையுட் போனார் சீபெரும் பூதூ ரானும்
வருந்திமற் றவர்பின் சென்று வணங்கியுண் மறுகி மீண்டே. (உஅகூ)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
எம்பெருமானார் வைபவம்.


தன்செய லழிந்து மற்றோர் தலத்தினி லமர்ந்து நானு
முன்செய்த வினைகட் கெல்லா முடிவிலா வாறு கண்டே
னென்செய்கே னென்று னேனு னிவனுடை நிலைமைக் கென்னப்
பொன்செய்தார் மார்ப னன்றைப்பொழுதெலாம்புலவரோடும்.(உகூ

வேறு.

எண்ணா யிரங்கி மற்றைநா ளெழுந்து நம்பி திருமுன்பிலேக
னண்ணி வணங்கி யடியேற்கு நாதா விரங்க வேண்டுமென
மண்ணி னுள்ளோர் கண்டிரங்க நின்றான் மறைக ளெடுத்தேத்தும்
புண்ணி யத்தின் கொழுந்தனைய நம்பி யந்தப் புங்கவனை. (உகூக)

ஒன்று மனுவின் றனையளவு மதியா திருந்த வுத்தமனு
மன்றும் பகவற் கலியாண வனந்தா னந்தத் திறங்கூறிச்
சென்று செறிந்த தொண்டரொடுந் திருமா ளிகையிற் போய்ப்புகுந்தா
னின்று வருந்தி யிளையாழ்வார் நெடுமா றொண்டர் பின்சென்றே. (உகூஉ)

திருந்த வணங்கி மனையளவுஞ் சென்று மீண்டு தாமுனைநா
ளிருந்த தலத்திற் போயிருந்தா ரிவண நாள்கள் பலசெல்லப்
பொருந்தி யொருநாட் டிருக்கோட்டி நம்பி போவா வென்னுமல்
வருந்தி யின்னு மொருநாளா மென்ன வெண்ணி மாசில்லா. (உகூங)

தொண்டர்க ளோடு மீண்டு துகளறு மிளையாழ் வாரும்
வண்டின முரலுஞ் சோலை மதிட்டிரு வரங்கம் புக்கா
ரண்டரண் டத்தின் மண்ணி லாசைக ளெட்டில் வேத
முன்சொ .ன வுரைக்கப் பட்ட வுத்தமர் தம்மின் மேலாம். (உகூச)

வேறு.

தெருளு மிளையாழ் வார்க்குமுனந் திருமால் பார்த்தன் றிருச்செவியி
லருளுஞ் சரம சுலோகத்துக் கதிகார ரம்போ தாதென்னப்
பொருளின் றொகைசேர் திருக்கோட்டி நம்பி யிகழப் போந்தனர்போ
யிருள்சே ருலகத் ததிகாரத் தெல்லை காண்பா ரினியெவரே. (உகூரு)

ஆசா ரியனைப் பிரிந்திருப்பா ராரென் றுரைக்கு ---த்தைத்
தேசார் சிந்தைத் தேவாரி யாண்டான் காட்டித் தெளிவித்தான்
வாசா கன்ம மனமொத்து மந்தி ரத்தின் வழிநிற்பார்
பேசா நின்ற மூவுலகி லின்மை நம்பி பிறப்பித்தான். (உகூசு

வேறு.

உத்தம குணத்த ராய வுடையவர்க் கதிகா ரந்தா
னித்தலத் தில்லை யென்ன விகழ்ந்தன னம்பி யென்று
னித்தரி லொருவர்க் கில்லா நினைவொடு நம்பி யங்கோ
வெத்திற மிருந்தான் மண்ணில் யாரவன் பெருமை தேர்வார்.(உகூஎ)

# எம்பெருமானார் வைபவம்.

தேசுறு குரவர் தம்மிற் றிருக்கோட்டி நம்பிக் கொத்தா
ராசறு முலகந் தன்னி லாருளா ரறிவா னோக்கி
னீசனேன் கண்ட திந்த நீணிலத் தில்லை யில்லை
பேசினும் பாவி கூசும் பிறிதினி யுரைப்ப தென்னே. (உகூஅ)

ஆங்கவை கிடப்ப பூதூ ரவதரித் தல்ல றீர்த்தா
னீங்கரு மதிள ரங்க நீணகர் நின்று பின்னுந்
தேங்கமழ் மாலை மார்பன் றிருக்கோட்டி நம்பி யன்பி
னோங்குசீ ரருளெய் தேனே னுயிரினாற் பயனே தென்ன. (உகூகூ)

விற்றுவக் கோட்டா னென்னை வேண்டில னெனினு நாயேன்
பற்றில னவனை யன்றி யென்றநற் பனுவ றன்னைக்
கற்றவ னிளையாழ் வானக் கருத்தினாற் பலகாற் றன்ப
மற்றசீர் நம்பி செம்பொ னடிதொழு தரங்கஞ் சேர்வான். (௩௦௦)

ஆங்கதி லொருநாட் பூதூ ரண்ணலை நம்பி நோக்கி
யீங்குநீ பலகா லெய்திய தெதனா லென்றா
னோங்குசீர்ப் பூதூர் வள்ள லுரைக்குமுன் பார்த்தன் பெற்ற
பாங்குறு சுலோக நானும் பெறும்படி பரமா வென்ன. (௩௦௧)

கூறிட நம்பி கேட்டக் கோதிலான் றன்னை நோக்கி
மாறிலாய் திங்க ளொன்று மற்றது கேட்க வேண்டிற்
றேறிய நிராகா ரத்தைச் சேர்ந்திட வேண்டு மென்றா
னாறிய வெகுளி யோனே யாங்கது செய்வே னென்ன. (௩௦௨)

வேறு.

செப்பினா ரிளையாழ்வார் திருக்கோட்டி நம்பியினை
யிப்போதைக் கல்லபோ யினமொருகால் வருதியென்றா
னப்பொழுதே பணிந்தரங்க நகர்புக்கா ரிளையாழ்வா
ரொப்பறுசீர் நம்பியுமங் கந்நாளி லோங்கரங்கன். (௩௦௩)

வேறு.

திருவிழா வணங்கச் சென்று செறிந்தன னவ்வூர் தன்னின்
மருவிய வரங்க னாரை வணங்கியாங் கமர்ந்த காலைப்
பொருவரு மிளையாழ் வாரு நம்பிபொற் பதத்திற் றாழ்ந்தா
ரிருவருந் திருமான் முன்னே யெழில்பெற நின்ற வேலை. (௩௦௪)

வேறு.

பெருமா ணம்பி முகநோக்கிப் பேத மில்லா யிவனுக்கங்
கருமா மறையின் முடிவுரைக்குஞ் சரம சுலோக மருளென்றான்
கருமா முகிலே யெனநம்பி கழறு மந்தக் கண்ணனொடுஞ்
செருமாச் சேர பாண்டியனுஞ் சிங்கா சனமுந் தேர்த்தட்டும். (௩௦௫)

நோக்கிச் செய்ய லாவதெது நுண்ணி யோயென் றுரைப்பவ்வுறை
வாக்கி னுலப் பொருள்வழுத்த வல்லார் களைக்கொண் டப்பொருளை
யாக்கு வேன்மற் றவனிடத்தி லென்று னதுசெய் திடுகவென்
றுக்குப் பிறழா தென்னினைவின் படியே நைவு பிறந்தன்றி.' (௩௦

என்று கூறித் திருவிழா வெட்டு மிரண்டுங் கடந்ததற்பின்
வென்றித் திகிரித் திருமாலை வணங்கி நம்பி விடைகொண்டு
சென்று கோட்டி யூர்நகரிற் செறிந்தான் பூதா ரிளையாழ்வா
ரன்று நம்பி பின்சென்று திரும்பி யடுத்த தொருநாளில். (௩௦௭)

திருத்துங் கருணைத் திருக்கோட்டி நம்பி பதத்திற் சென்றிறைஞ்சக்
கருத்தி னுலே யிளையாழ்வார் காதன் முற்று முறநோக்கி
யிருத்தி யீண்டென் றருள்செய்ய விருந்தார் பின்னு மறுதிங்க
ளருத்தி மிக்கார் மாதுகரம் பண்ணி யருந்தி யதிலொருநாள். (௩௦௮)

மாது கரத்துக் கெழுந்தருளி வரும்போ தன்றிப் போம்போது
மோதுங் கோதை திருப்பாவை யுரையோ டுலாவித் திரிபவரும்
வேதம் வல்ல திருக்கோட்டி நம்பி மனையின் மெய்ஞ்ஞானப்
போத முடையா ராங்கொருநாட் புக்கா ருந்து மதகளிற்றில். (௩௦௯)

வேறு.

பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையாற் சீரார் வளையொலிப்ப
வந்தா ருணங்கே திறவென்ன வாசலின்முன்
னெந்தாதை நின்றூரவ் வெல்லையினி னம்பிதரும். (௩௧௦)

வேறு.

அன்னமமன னடையா டேவகி யென்னு மரும்பெய ருடையவா ரணங்கு
தன்னொரு கரத்தாற் கந்துக மொன்று தாங்கியோர் தாமரைக் கையா
லின்னிசை யெதிகட் கிறைவனூர் திறவென் றிசைத்தசொல் லிறுமுனந் திறந்தாண்
மின்னுமா மணிசேர்ந் திலங்கிய கபாடம் விண்ணின் னொண்டர்மெல் லியலை. (௩௧௧)

கண்டனர்பின்னைப்பிராட்டிமற்றிவளுங்கள்வனேன்பொருட்டினலலர்ந்த
புண்டரீ கச்சீர்த் திருவடி வருந்தப் போந்திவை திறந்தன ளென்னப்
பண்டரும் பனுவன்மறந்தனர்மண்ணிற் பதைப்பறவொடுங்கினர்விழுந்தா
ரொண்டொடி கண்டு வெகுளியோ டேகி யுற்றதைப் பெற்றவர்க் குரைப்பாள். (௩௧௨

ஐயரே வாசற் புறத்தினி லமர்ந்தாங் காசறு மூன்றுதண் டுடைய
கையனோர் மறையோன் றிறவெனக் கபாடந் திறந்துநா னிற்பதைக் கண்டு
மெய்யுறக் குழைந்து மோகமுற் றுடனே விழுந்தனன் மண்மிசை வேடம்
பொய்யுறச் சமையு மிராவணன் போல்வார் பூதலத் துளர்கொலோ புகலில்.

என்றிவை மகளா ரியம்பிட நம்பி யின்பமுற் றிருந்தினை யாழ்வி
ரொன்றுசி ருந்து மதகன்ரி றென்ன வோதிய பாடலோ சந்தை
யின்றுநம் மூரசற் றலையுறு மளவி லென்றன ராமென வெழுந்து
சென்றுமி மாது கரம்பரி மாறத் தேசிகக் குன்றையும் வணங்கி. (௩கச)

திரும்பியன் றகத்தி லேகினர் பின்னு மொருபக றேசிக னிடத்தில்
விரும்பிய சிந்தை யுடையவர் செறிந்தார் செறிதலும் விளங்குசீர் நம்பி
யிருந்துநா டோறும் பயிலிடம் விட்டாங் கெழிறிகழ் மாளிகை மீதிற்
பொருந்துமாமச்சிலேணிபோட்டேறிப்பொருவருஞ்சமாதியிலிருந்தான்.

வேறு.

எண்ணருஞ்சீ ரினையாழ்வா ரெய்திநம்பி நாடோறு
நண்ணுமிடத் தெய்தியந்த நற்றவனைக் காணுதே
யுண்ணிறைந்த காதலருந் தேவகியா ருடன்கேட்பப்
பெண்ணணங்கு மச்சின்மீ திருந்தனனெம் பிரானென்ருள். (௩கசு)

ஆங்கதுகேட் டெதிராச ரேணிமிசை யடியிட்டங்
கோங்கியசீர் மச்சின்மிசை யும்பர்தொழ வினிதமர்ந்து
பாங்குறுசீர்ச் சமாதியினிற் படிந்தானை யுறநோக்கிப்
பூங்கழல்க டொழுதிறைஞ்சி யொருமருங்கிற் போயிருந்தார். (௩கஎ)

வேறு.

சென்றிருந் தவரை முன்பிருந் தவனுந் திருக்கணைத் திறந்துற நோக்க
வொன்றிய கருணை யன்பினல் வணங்கி யுத்தமர் தம்மினுத் தமனே
யின்றுநீ யிருந்த தியானமென் னென்று ரெதிகளுக் கிறைவர்மற் றவனு
நன்றது பகர்வ னுளவந் தாரா நான்மறை முடிவினி லுறைவார். (௩கஅ)

வேறு.

செல்லார் பொழில்சூ ழரங்கத்திற் றிருக்கா விரியில் வட்வாற்றிற்
பொல்லாப் புலன்க ளற்றவனே பொருந்திக் கவிழ்ந்து முக்குளித்திங்
கெல்லாப் பகையு மறவறுத்தார் கிடப்பா ரவர்த மெழின்முதுகு
வல்லான் கடாரங் கவிழ்த்தியதொத் திருக்குஞ் சிவப்பின் வுருநலத்தால்.

அதனைத் தியானம் பண்ணியிருந் தல்லும் பகலு நான்கழித்தே
னெதனைப் பின்னு னினைப்பதுவு மென்று ணம்பி யெதிராசர்
மதனைக் கடிந்தான் மந்திரமே தென்ருர் மற்றை யவர்பெயரா
மிதனை யமுனைத் துறைவரெனு மெழுத்தோ ராறை யெனவிசைத்தான்.

வேறு.

சீரமரு மெதிராச ராளவந்தார் திறநோக்கி
நீரமருங் கண்ணினராய் நீளிரவும் பெரும்பகலுங்
காரமரும் பொழில்சூழுங் கழனிமலி திருக்கோட்டி
யூரமரு நம்பியன்புக் குரித்தாவே னைவென்ன.

வேறு.

மன்னினர் பலநா ளவ்வண மன்னி வருந்தினம் பலசெல நம்பி
யென்னுமாமறையோனருள்பெருமையினுலெரியுறமெழுகெனக்கரைந்து
மின்னுமா மௌலி விண்டுவின் றிருமு ஞெருபகல் வேதனை யோடு
முன்னுமாய்ப் பின்னு மாயினு ரிருந்தா ரிருந்துழி முதல்வனு ரருளால். (௩௨௨)

வேறு.

அந்நாளி னம்பிபதத் தமர்வாரோர் பாகவதன்
மன்னுநின் ருன்பூதூர் வள்ளலவன் முகநோக்கிப்
பொன்னாழிக் கையார்க்குப் பூந்துழாய் முடியார்க்கிங்
கென்னுவி யீடழித்த தகவன்றென் றியம்பிரே. (௩௨௩)

வேறு.

என்றுரைத் தழுது விம்மி யிருந்தன ரதனைக் கண்டு
சென்றவ னம்பிக் கந்தத் திறமெலா மெடுத்துக் கூற
வன்றதற் கிரங்கி நம்பி யார்த்தியில் வளவுண் டாய்த்தே
நன்றுநன் றென்ன நின்ற நவையிலான் முகத்தை நோக்கி. (௩௨௪)

செப்புவான் றிங்க ளொன்று சீருறு மிளையாழ் வானைத்
தப்பற நிராகா ரத்தைச் சார்ந்துபின் வரச்சொ லென்ன
வப்பொழு தவனு நம்பி யடிபணிந் தேகி யந்த
வொப்பிலா வெதிரா சர்க்கது துரைத்தன னுவப்பி னோடும். (௩௨௫)

நன்றது செய்வே னென்ன நவையிலார் திங்க ளாங்கே
யொன்றுசீ ருபவா தத்துக் கொருப்பட்டாங் கும்பர் போற்ற
மன்றல்சேர் கமலத் தாரார் வைகினர் நிராகா ரத்திற்
சென்றன தினமீ ரெட்டுந் தீர்த்தமு மருந்த லின்றி. (௩௨௬)

எட்டிரெ டெட்டுஞ் சென்றுங் கிசைந்தபி னடுத்த நாளிற்
பட்டினி மோகத் தாலே பரமசாத் திகர்க்குச் சீவன்
விட்டது போல மூச்சு மெய்யுற வடங்கக் கண்டார்
கெட்டது திருமான் மார்க்கங் கெடுத்தன னம்பி யென்ன. (௩௨௭)

வேறு.

ஆனாத திருத்தொண்ட ரழுதுநம்பிக் கவைகூறப்
போனானே லாளவந்தார் பாற்கேட்பன் போகிலனே
னானாக வுரைக்கின்றே னிளையா றிளையாழ்வான்
றனைத் தொடுமிருந்தாற் றப்பாதீ திரண்டொன்ற. (௩௨௮)

வேறு.

என்றா னம்பி தேசிகனு மிலங்கு நீதிக் குருமானு
மன்றாங் கவர்க ளிருவருமே யல்லா திந்த வம்புவியி
னின்றார் மேலோர் பலரெனினு நிகரி லாமற் றிவர்க்கிணையாய்க்
கன்றாற்கனிகொண்டவனைகாணேன்காணேன்காணேனே. (௩௨௯)

வேறு.

ஆங்கது கிடப்பப் பின்னு நம்பியை யன்பாற் போற்றி
யோங்குசீ ரெதிக ளாதர்க் குணவொரு சிரங்கைத் தீர்த்தம்
பாங்குட னீமி யென்னப் பணிந்தனர் பலகா னம்பி
யேங்கிட வேண்டாந்தீர்த்த மருந்துதற்கிசைந்தோமென்றான். (௩௩௦)

விருப்பொடுந் தொண்டர் மீண்டு விளங்குமா லிளையாழ் வார்க்குத்
திருப்படிக் கத்திற் றீர்த்தஞ் சீர்பெறக் கொணர்ந்து நம்பி
யருத்தியி னுரைத்தா னென்ன வமுதுசெய் வித்தா ரங்ஙன்
கருத்துற திங்கள் சென்ற தொருவனைக் கண்டு நம்பி. (௩௩௧)

ஆங்கெதி பதிபா லேகி யரிபமுப் பகையை வென்று
தாங்கிய தண்டி னோடும் பவித்திரத் தோடுஞ் சால
வோங்கிய குணத்தி னானை யொருவனாய் வரச்சொல் லென்றான்
பூங்கழ லிறைஞ்சி யந்தப் புலவனும் விரைவி னேகி. (௩௩௨)

உடையவ ரருகின் மன்னி யுணர்வினா லுயர்ந்தோன் சொன்ன
வடைவெலா மருளிச் செய்ய வளவறு மகிழ்ச்சி யோடுந்
தடையற முதலி யாண்டான் சாற்றிய கூரத் தாழ்வான்
புடைசெலச் சென்று நம்பி பூங்கழ லிறைஞ்சி நின்றார். (௩௩௩)

சென்றடி வணங்கி னாரைத் தேசிகன் றிருந்த நோக்கி
நன்றிசேர் குணத்தாய் தண்டு பவித்திர நற்சார் வாக
வன்றிமற் றாரு மின்றி வரச்சொனா மதுசெய் யாதே
யின்றிவ ரிருவ ரோடு மெய்திய தெதனா லென்றான். (௩௩௪)

தேசிக னவணங் கூறச் சீபெரும் பூதூர் வள்ள
லாசிலா நிலையாய் தொண்ட னப்படித் தானே வந்தே
னீசனேன் பவித்தி ரந்தா னிவனவ னினைவி னொன்றிப்
பேசினற் றண்டா மன்றே யென்றுதன் பின்பு நின்ற. (௩௩௫)

கூரத்தாழ் வானை முன்பே குணத்தினா லுயர்ந்தோர் காட்டிச்
சீரொத்த முதலி யாண்டான் றன்னையுங் காட்டிச் செப்ப
வார்வத்தி னம்பி யிந்தப் பவித்திர மழகாந் தண்டு
நேரொத்த தில்லை யென்ன நிகழ்த்திமே னிகழ்த்த லுற்றான். (௩௩

எம்பெரு மானர் தம்மோ டியம்புமிவ் வுண்மை மைந்தா
வம்பவிழ் துளவத் தாரோன் மலர்மகட் குரைத்தம் மங்கை
யும்பரிற் சேனை நாதர்க் குரைத்திட வவரு மங்கா
ளிம்பரிற் காரி மாற னிடத்தினில் வைப்ப மாறன். (௧௧௭)

வேறு.

நாதமுனிக் கருள்செய்ய நற்றவனு மற்றதனைப்
போதமிகு முய்யக்கொண் டார்க்குரைப்பப் பூதலத்தின்
மாதவஞ்செய் மணக்கானம் பிக்கந்த மாப்பொருளை
யோதினரன் றுய்யக்கொண் டாரென்னு முத்தமனர். (௧௧௮)

வேறு.

மற்றதை மணக்கா னம்பி யாளவந் தார்பால் வைப்பப்
பெற்றன னுள வந்தார் பிள்ளையாய் நானு மீதை
யுற்றதின் றளவு மைந்தா வோராசான் வழிகண் டாயே
கற்றசீர் மேலோய் நானுங் கழறுவ னுனக்கு மீதை. (௧௧௯)

நின்னுடை மாறனுந் தத்தி னிலையுடை பொருவன் பாலே
மன்னவைத் திடுத லன்றி மற்றொரு வருக்குஞ் சொல்லே
னென்னவென் சிரத்தைத் தொட்டின் றிடுகநீ யாணை யென்னத்
தன்னுயிர்க் கிரங்கா வேதத் தலைவரா மிளையாழ் வாரும். (௧௨௦)

அப்படிச் செய்வே னெந்தா யென்றெழுந் தடியிற் றாழ்ந்து
செப்பரு நம்பி செய்ய திருவடி யிரண்டுந் தீண்டித்
தப்பிலே னருளிச் செய்த படியெனச் சாற்ற நம்பி
யொப்பிலார் செவியி லந்த வுண்மையை யுபதே சித்தான். (௧௨௧

வேறு.

வேத முடிவில் வீற்றிருந்து விளங்குஞ் சரம சுலோகத்தைப்
பூத மைந்துந் தன்னிலையிற் பொறுத்த புனித னெனவிருந்தன்
றோதக் கேட்டாங் குடையவரு முள்ளத் தெழுந்த மெய்ஞ்ஞானப்
போகக் காலே யின்றிஞ்சியிதன்பொருளையருள்கபுனிதவென.(௧௨௨

நின்றார் கண்கள் புனறதும்ப நிகரி லாத வெதிராசர் 'ஸ்ரீ'
குன்று நிலையாின் றிருக்கோட்டி நம்பி கண்ண னெனக்கூறக்
கன்றால் விளவின் கனியெறிந்த கமல நயனக் கருமுகிலும்
பொன்றாப் போதக் குருமணியு நீயே யென்றப் புங்கவனை. (௧௨௩

திருந்த விறைஞ்சி மன்னுயிர்க்காய்ச் சீரார் பரம பதந்தன்னி
லிருந்த ஞானச் சுகோததிவந் திவண மெளிதா யிருநிலத்திற்
பொருந்து நெறியை யறியாதே போத மிழந்து போய்ப்பிறப்பி
வருந்து முயிர்க ளந்தோவென் றழுதா ரிரங்கி மதிமிக்கார். (

வேறு.

அப்படி யழுது நின்ற வன்பரை நம்பி நோக்கி
யொப்பிலா யினியுன் றாலே யுலகிடை யுயிர்க ளெல்லாந்
தப்பற மேலை வீட்டைச் சாருமா நரகஞ் சாரா
வெப்பமார் கலியுந் தீரு மேதினிக் கிடரு மில்லை. (௩௪௫)

என்றருள் செய்த மேலோ னிணையடி யிரண்டுந் தீண்டிச்
சென்றுதஞ் சிரத்திற் சேர்த்தித் திருமுகத் தமைத்து மார்பி
லன்றுறப் பதித்து மண்ணோ டழுந்துற வணங்கி நிற்ப
வொன்றிய கருணை நம்பி யேகென வுடனே சென்ற. (௩௪௬)

கந்தாடை முதலி யாண்டான் கதமறுங் கூரத் தாழ்வா
னந்தாத விளக்கன் றூர்க ளிடம்வல நண்ண மீண்டார்
முந்தாதி* விளைத்த துன்பான் முளரியங் கண்ண னேகச்
சிந்தாமெய்ந் நிழல்போற் செல்லுஞ்சுமித்திரைபெற்றசிங்கம். (௩௪௭)

வேறு.

சீரார் நம்பி பாற்கடலாய்த் திருமா றுமாய் மந்தரமு
மோரார் பத்தி யாய்த்தாம்பு மெய்தற் கரிய நயச்சியமா
யாரா வன்பி னுபதேச வமுதங் கடைந்து கொண்டெளிதின்
வாரா நின்று ரிளையாழ்வார் மலர்த்தா ளுறும்பூ சுரர்க்காக. (௩௪௮)

அறிவின் மிக்க திருமகள்கோ னமுதங் கொணர்ந்து வானவர்முன்
செறிய வந்த வானவர்க டிரளோ டாடிக் களித்ததுபோ
னெறிநின் றேருங்கு மெதிராசர் நிமல வமிர்த வுபதேசங்
குறியிற் கொணரக் கண்டாடிக் களித்தார்குழைந்துபாகவதர். (௩௪௯)

வேறு.

அப்படியே யெதிராச ரணையவவர் தாளிணை
யெப்பொழுதுஞ் சிந்தனையு ளுறவிருத்தி யினிதமருவு
செப்பரிய பாகவத ரெதிர்கொண்டு சேவிப்பத்
தப்பறவங் கவரோடுந் தெற்காழ்வான் சந்நிதியில். (௩௫௦)

சென்றிருந்து† தொண்டர்கட்குத் திருக்கோட்டி நம்பியெனுந்
தன்றனைய திரடோளான் கலியாண குணங்கடமை
யென்றுமகிழ்ந் தெப்பொழுது மிரவுபக லெடுத்திசைத்து
ன்றல்கமழ் தார்மார்பர் சிலபகல்கள் வைகினார். (௩௫௧)

---

ன்றுதி என்பது எதுகை நோக்கித் திரிந்தது போலும்; முந்து+ஆதி என்று
ரித்துரைத்தலுமாம்.
சன்றிரந்த என்றும் பாடம்.

வேறு.

அந்த நாளிற் றெற்காழ்வா ராகு மழகார் சிங்கருக்கிங்
கிந்த நிலத்தோ ரிடர்நீங்கி யீறி லின்ப மெய்திடுவான்
வந்த திருநாள் பலவவற்றில் வயங்கு மொருநாண் மண்டபத்தி
கந்த மிக்க துழாய்முடியான் றிருவோ லக்கங் கண்டருளி. (௫௨

வேறு.

பாகவதப் பெருந்திரளோ டிருந்தனனப் பரனதுகண் பால
டாகமுற வானந்தச் சுகோததியை யருந்தியெழு
மேகவரு ளெதிராசர் மேதினிமேன் ஞானபரன்
போகம்விளை வித்துலகை யுய்விக்கும் பொருட்டாக. (௫௩)

வேறு.

தானறப் பெய்து மாயுந் தடமுகி லென்ன நம்பி
தேனமர் கமலத் தாளைத் தீண்டிய தோடத் தாலே
நானொரு வனுமே யன்றே நசிப்பதித் திரள்க ளெல்லா
மானவான் பேரின் பத்தை யருந்துமே யந்தோ வென்றே. (௫௪)

வேறு.

பரனற் கவியின் சொற்றுணிவே பரமா னந்தப் பேரிடியாய்க்
கரனிற் புரிமுத் திரைமின்னாய்க் கடிசேர் கிரிக ளடியவராய்ச்
சிரனிற் பதிமெய்க் காலூன்றித் தேச மெங்குஞ் சிறந்தோங்கச்
சரமச்சுலோகமெனுமழையைப்பொழிந்தாரெதிகடனிநாதர். (௫௫)

வேறு.

தத்தை யனையவரு மறியும் வண்ணஞ்
செப்பினா ரினையாழ் வாரத் திறத்தினை நம்பி கேட்டு
வெப்பமுற் றவரை யிங்கே விரைவினிற் கொணர்மி னென்ன
வொப்பிலா விருவர் சென்றாங் குடையவ ரடியிற் றாழ்ந்தே. (௫௬)

அருளிப்பா* டிமைை நமபி யமரருந் துதிசெய் தேத்துந்
தெருளுற்ற நிலையா யென்று செப்பினா ரதனைக் கேட்டப்
பொருளத்தம் பெறநா மிங்கே புகன்றதன் பொருட்டி தென்னா
மருளற்ற நிலையார் கூட மற்றவ ரோடுஞ் சென்றே. (௫௭)

சீரிய நம்பி செய்ய திருவடி யிறைஞ்சி நிற்பப்
பாரினி லொருவர்க் கிந்த வுண்மையைப் பகரே னென்ன
நீரெனை யாணை யிட்டு நீங்கினீ ரதனைப் பாரா
தூரவர்க் கெல்லாங் கூறி யுமக்குமென் பெற்றீ ரென்றார். (௫௮)

---

*அருளப்பாடு என்று சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

என்றவ ரருளிச் செய்ய வெம்பிரா னிளையாழ் வாரும்
பொன்றலி னரகம் பெற்றேன் புனிதனே யென்ன நம்பி
யென்றிதை யறிந்து மெத்தா லிதுசெய்தீ ரென்று கூற
மன்றல்சேர் மாலை மார்பர் மற்றவ ரோடுஞ் சொல்வார். (௩௫௯

என்னுயி ரொன்று மன்றோ விருநர கடையுங் கேட்ட
மன்னுயிர் பலவு முய்யு மந்திரத் துறுதி யாலே
நன்னெறி யுடையா யென்றே நானது செய்தே னன்றிப்
பின்னொரு நினைவு மில்லை பேதையே னினைந்த தென்றார். (௩௬(

அன்றவை யறையக் கேட்ட நம்பியு மவரோ வென்னச்
சென்றெடுத் துடலுந் தூய சிந்தையு மழுந்தப் புல்லி
யொன்றிய வன்பி னாலே யுச்சியை வளைத்து மோந்து
நன்றுநன் றன்ப வுன்னை நானிலத் தெவர்க ளொப்பார். (௩௬

தன்னுயிர் தன்னைக் கொண்டு தான்பிழைத் திடுவ தன்றி
மன்னுயிர்க் கிரங்கித் தன்னை மைந்தனே மாய்க்கப் புக்கா
ரிந்நிலத் தில்லை யில்லை யேழுல கத்து மில்லை
பன்னருங் குணத்தாய் செங்கட் பரஞ்சுட ராகு மெம்மான். (௩௬௨

இடையிலோர் கோட்பா டின்றி யாவரு மெவையுந் தன்பாற்
றடையற விருத்திக் காக்குந் தனிப்பெருங் கடவு ளேனும்
விடைவலான் விரிஞ்ச னாதி மேவுபல் லுயிர்கட் கெல்லா
முடையவர் நீரே யாமென் றுரைத்துமீண் டுரைப்பார் நம்பி. (௩௬௩

வேறு.

எம்பெருமா னாருடைய தரிசனமென் றின்றுதொட்டே முதல்
யும்பருமா முனிவர்களு முலகேழு மொலிகடல்சூ
ழிம்பருமா தவத்தினரு மிசைத்திடுக வெனவிசைத்துத்
தம்பெருமா கருணையெனுந் தடம்புனலா லெகிராசன். (௩௬

வேறு

தன்னுயிர் குளிர வாட்டித் தனையனை முகத்தை நோக்கி
முன்னுனக் குபதே சித்த மந்திர முதன்மை யாலே
யுன்னருங் மகிழ்ச்சி தன்னை யுடையனா யிருந்தாய் நானும்
பன்னரும் பொருளை மேலிட் டொருபடி பகர்ந்த தன்றி. (௩௬

பதந்தொறு மறுத்துச் சொல்லின் பயனுனக் குரைத்தே னில்லைச்
சிதம்பெறச் சொற்க டோறுஞ் செப்பென வலிய நீயே
யிதம்பெறக் கேட்ட பின்னு மியம்புதல் கடனென் றெண்ணிக்
கதங்கெடு சிந்தை யாய்நீ கழறென வென்னை முந்தி. (௩௬

கேட்டிலை முற்றுங் கேட்டக் கிளரொளி யுறுதி* யாலே
வாட்டமின் ஞான னந்த மதியரின் மன்று நின்று
மீட்டுபம் றவத்தாய் கேளா திருந்தவை தமையு நெஞ்சிற்
கோட்டிய வுணர்வா னீயே குறையற வுணர்ந்த வாறும். (௬

செப்புதி தெளிய வென்னத் திருக்கோட்டி நம்பி கூற
வொப்பிலாய் கேட்டி யென்ன வுடையவ ரிறைஞ்சிச் சொல்வார்
தப்பற நீயன் றென்பாற் றந்தமெய் மந்தி ரந்தா
னெப்பொழுதினுநின்றென்னையெலையறுமகிழ்வின்வைக்கும். (௬௬அ)

ஆங்கதற் கொன்றுப் நீயே யருளிய படியை விட்டுத்
தாங்குமோ ரத்த மின்னு முண்டுகொல் சாற்றென் றேனேற்
பாங்கறு மவிச்சு வாதி யாயினேன் பதங்க டோறுந்
தேங்கமழ் மாலை மார்ப செப்பெனக் கேளா ஞகில். (௬௬௯)

கூறிய வுண்மை நெஞ்சிற் கொண்டவ னல்லே னென்று
வேறுறு மிரண்டி னாலும் வேதனை யுடைய ராயுந்
தேறிநின் றதனைக் கேட்கும் விரகறி யாதுஞ் சிந்தை
மாறரக் கேட்கும் வேட்கை மன்னவும் வைகி னேனன். (௬௭௦)

என்றிவை வணங்கி நின்றுங் கெதிகடந் தலைவர் கூறச்
சென்றவர் தம்மைப் பின்னுந் திருக்கோட்டி நம்பி புல்லி
நன்றிசேர் குணத்தி னேனே நவையற நின்னை யொத்து
நின்றநற் குருமா னிந்த நீணிலத் தொருவ ரில்லை. (௬௭௧)

மருவரு மத்த மொன்று வழங்குவே னின்று போய்நீ
யொருவனும் வருதி யென்று நம்பியு முரைப்ப நின்ற
பொருவிலா நம்பி செய்ய பூங்கழ லிறைஞ்சி மீண்டு
திருவரங் கத்தின் மன்னிச் சிலபக லிருந்து வாழ்ந்தார். (௬௭௨)

ஆசற விவணம் வாழ்ந்தா ராங்கதி லொருநாட் பின்னுந்
தேசிகர் திலத மாய திருக்கோட்டி நம்பி முன்னம்
பேசிய பரமார்த் தத்தைப் பெறும்படி யொருவ ராகி
நீசனே னவி சாத்த நின்மல ரெழுந்து சென்றார். (௬௭௩)

வேறு.

சென்றவருந் திருக்கோட்டி யூரென்னுஞ் செழுநகா வாழ்
மன்றல்கமழ் தார்மார்பன் மலரடியை யுறவணங்கி
நின்றனரத் திறநோக்கித் தேசிகனு நிமலனந்தக்
குன்றனைய திரடோளார் குணநோக்கி மனமகிழ்ந்தே. (௬௭௪)

---

*கேட்ட கிளரொளி யுறுதி என்றும் பாடம்.

வேறு.

வந்தவர் யாவர் மைந்தா மற்றுநின் னோடு மென்ன
வந்தமில் குணத்தான் கேட்ப வாசிலாப் பூதூ ராரு னு
மென்னைதநா னொருவ னன்றி யெய்தின ரில்லை யென்றார்
முன்னைதநாண் மறைத்த வத்த முழுவது முதல்வன் கூறி. (௩௭௫)

ஈங்கிதை யொருவ ருக்கு மியம்பிடா திருத்தி யென்றான்
றீங்கறு மாழ்வா னுக்குத் தேசிகா செப்ப வேண்டு
மாங்கவ னன்றி யார்க்கு மறைகிலே னென்றார் மைந்தர் ஏன்
தேங்கமழ் மார்ப னுய திருக்கோட்டி நம்பி செப்பும். (௩௭௬)

வேறு.

இப்பொருளுக் கதிகார மாழ்வானுக் குண்டெனினு
மொப்பரியா யோராண்டுன் னுளமகிழ்ந்த கைங்கரியந்
தப்பறச்செய் திட்டதற்பின் சாற்றிடுக போதியெனச்
செப்பமிகுந் திருக்கோட்டி நம்பியருள் செய்தருள. (௩௭௭)

வேறு.

மண்ணுறப் பணிந்து மற்றவன் செய்ய மலரடி முடிமிசைத் தரித்து
விண்ணுறப் பதிந்த வமரரு மமரர் வேந்தனு மலர்மழை பொழியக்
கண்ணுறப் பொழியு மானந்த வாரி கனைகட லணுவெனப் பெருக
வுண்ணிறை மகிழ்ச்சியுலகெலாமுருக்கவொருவராய்த் திருவரங்கத்தில். ()

அன்றவ ரெய்து முனமவர் போன வாசறு தென்றிசை நோக்கி
நின்றவாழ் வானு முதலியாண் டானு நிகரிலா முதலிகள் பலரு
மென்றினி வருமென் றிரங்கினர் கண்டா ரின்னருள் சுரந்தவான் கண்ட
கன்றெனத்துள்ளிச்சென்றெதிர்பணிந்தக்கருணைவாரிதியொடுங்கலந்தார்.

சீரிய விராமன் றேவர்கள் பொருட்டாத் தென்றிசைக் கேகிமற் றவர்கள்
காரியங் கண்டு திரும்புமுன் கலங்கிக் கண்டபின் களித்தெழுந் தாடுந்
தாரியன் மார்பன் பரதனை யொத்தார் தனித்தனி முதலிக டாங்க
[illegible]யல் சிவிகைமீதினிலெழுந்தாங் கெழிலரங்கத்தினிற்புகுந்தார்.(௩௮௦)

தென்னரங் கத்திற் புகுந்தபின் மகிழ்ந்த சிந்தையர் சீபெ[illegible] [illegible]தூ
ரென்னுநன் னகரிற் றிருவவ தரித்தா ரிலங்குமாழ் வான்முக நோக்கி
யுன்னரும் பொருள்க ணம்பியும் பகர்ந்தீதுரைக்கலையொருவர்க்குமென்று
னன்னவன்றன்னோடிதனையாழ்வானுக்கறைந்திடவேண்டுமென்றறைந்தேன். (௩௮௧)

அப்படி யாகில் வருடமொன் றுன்பா லன்புறு கைங்கரி யங்க
டப்பறக்கொண்டுபின்னிவைமொழிதியென்றனன் றலைவனென் றிசைத்தா
ரொப்பறு நிலைசேர் கூரத்தாழ் வானு முரைத்தவவ் வுறுதியைக் கேட்டே
யெப்பொழு திறக்கு மவதியென்றறியேனிவ்வுயிரிவ்வுடம்போடும். (௩௮௨)

மாசிலா நிலையாய் வருடமொன் றிருந்து மற்றது நின்னிடைப் பெற்றே
நீசனே னுய்வே னென்பதற் கவதி யுண்டுகொ லினிவிளு ளுேக்கிற்
பேசிலா ரென்போற் பாவிக ளென்னப் பெருந்துய ருற்றுற லிருந்தி
யாசிலாக்குருமானிலையினைமறைகளறைந்தநற்சாத்திர மனைத்தும். (௩௮

திருந்துற நோக்கி யாங்கவை தம்முட் டேசிகன் றிருவுள மகிழ
வருந்தியோ ராண்டு கைங்கரியங்கள் வழுவறச் செய்ததற் கொக்கும்
பொருந்துமோர் மாதம் பட்டினி விட்டப் பொருவிலான் றிருமனை வாட
விருந்திடப்பெறினே யென்றிருந்தமைகண் டிணையிலானப்படியிருந்தான்.

வேறு.

ஒப்பிலான் றிங்களொன்றுங் குபவாத மாயிருப்பத்
தப்பறவங் கதைநோக்கிச் சாற்றருஞ்சீ ரெதிராசர் ன்
செப்பினுர் நம்பிதம்பாற் செப்பியசீர்ப் பொருண்முழுது னம்பிதன்
மப்பொழுதே முதலியாண் டானுமது பெறவெண்ணி. (௩அ௫)

வேறு.

உடையவர் திருமு னெய்தி யொப்பிலா யாழ்வான் பெற்ற
வடைவுறு பொருளை நீநின் னுசிலாக் கருணை யாலே
கடையனேன் றுனு மெய்தும் வண்ணநீ கழற வேண்டுந்
தடையற வின்றே யென்றத் தத்துவன் சரணந் தாழ்ந்தான். (௩அ௬)

ஆங்கவன் றன்னை நோக்கி யாசிலா வெதிக ளுத
ரோங்குசீர் நம்பி யாழ்வா னொருவனுக் குரைத்தி யன்றிப்
பாங்குறு மிதனை யார்க்கும் பகரலை யென்றுன் பல்காற்
றுங்குறற் குணத்தின் மிக்காய் நீயுமத் தலைவன் றன்பால். (௩அ௭)

சென்றவ னருளின் வைகித் திருந்தநின் றதனைக் கேட்டு
நன்றிசேர் குணத்தாய் பின்னை நம்மிடை வருதி யென்ன
வொன்றிய கருணை மிக்க வுடையவ ரருளிச் செய்ய
வன்றுற முதலி யாண்டா ருங்கவ ரடியிற் றுழ்ந்தே. (௩அ௮)

உடையவா தம்மை முக்கால் வலஞ்செய்தென் னுயிர்க்கு நாதா
விடையெனப் பெயர்ந்து தென்பால் விரைவினி னடந்து ஞானத்
தடைவுறு நம்பி மன்னு மணிதிருக் கோட்டி யூரிற்
றடையறச் சென்று நம்பி தாமரைச் சரணந் தாழ்ந்தான். (௩அ௯)

அந்தமில் கருணை நம்பி யாங்கவன் றன்னை நோக்கி
வந்ததென் முதலி யாண்டா னென்றனன் மற்றை மைந்த று
னெந்தைநின் னிடத்தி லுண்மை யிருவினை யேனும் பெற்றென்
பந்தமார் பிறவி வேரைப் பறிப்பதன் பொருட்டா லென்றுன். (௩௯0)

என்றிவை முதலி யாண்டா னியம்பிட நம்பி கேட்டாங்
கன்றதற் காமா கிதென் றறைந்தில னருகு நின்ற
வொன்றிய சிந்தை மைந்த னுத்தமக் குரவ னார்க்கோர்
நன்றிசேர் தொழில்கள் பண்ணி நாமிவண் வைக வேண்டும். (௩௯௧)

வேறு.

என்னநினைந் தன்றுமுத லாறுதிங்க ளெழிற்குரவன்
மன்னுதிரு மடைப்பளிக்கு மஞ்சனமு முவந்தளித்துத்
தன்னுடலை மிகவாட்டிச் சதாசேவை யொடுங்குரவன்
பின்னுமுனும் பகலிரவும் பிரியாதே யுடன்வாழ்ந்தான். (௩௯௨)

அப்படியே யாறுதிங்க ளற்றதற்பி னங்கொருநா
டப்பறுஞ்சீர் மைந்தனந்தத் தவமிக்கான் முகநோக்கி
யொப்பரியா யடியேனுக் குய்யுநெறி யருளென்றான்
செப்பமிகு நம்பியந்தச் சீரியோன் முகநோக்கி. (௩௯௩)

வேறு.

ஆங்கொரு சுலோகந் தன்னை யருளியிப் பாட்டி னுள்ள
பாங்குறு பொருள்க டம்மை மைந்தனே பகரக் கேட்டி
யோங்கிய கல்வி யத்த மொழுங்குறு குலமிம் மூன்றுந்
தாங்கிடுஞ் செருக்கை யிந்தத் தத்துக்குப் பிழைத்தா யாகில். (௩௯௪)

வருதியிப் போது போதி மைந்தவென் றறைந்தா னம்பி
சுருதிதேர் முதலி யாண்டான் றனுக்கமுற் றதனை நோக்கிக்
கருதியம் மூன்று மூன்று காலனு மாவிக் கென்னப்
பரிதியே யனையான் பாதம் பணிந்துமீண் டரங்கம் புக்கான். (௩௯௫)

புக்கவ னம்பி தன்பாற் புகுதுமுன் குலத்தி னாலு
மிக்கசீர் ஞானத் தாலு மேம்படு தனத்தி னாலுந்
தக்கசீ ரெதிக ளாதர் தொண்டர்க்குத் தலைவ னாகி
யொக்கநிற் பவர்க ளின்றி யொருவனா யிருந்து வாழ்ந்தான். (௩௯௬)

வேறு.

த்திற மூன்று மறுத்தற வொடுங்கி யாசறு முதலியாண் டானு
மெய்த்திற முடைய வுடையவர் பதத்தில் விரைமலர் சொரிந்துற வணங்கிப்
பொய்த்திறங் கடிந்த முதலிக டமையும் பூமிசைப் பணிந்தவ னின்று
ரித்திறங் காண்மி னெனவெதி ராச ரிருந்தவம் முதலிகட் கிசைப்பார். (௩௯௭)

வேறு.

திருக்கோட்டி வளர்க்குங் கண்ணன் றெரிசனத் தடைந்தோ ருற்ற
திருக்கோட்டி யாவி காக்குஞ் சீரிய நெறியா லன்றோ
திருக்கோட்டி யூரின் மன்னுஞ் செழுந்தவன் றனக்குத் தொண்டர்
திருக்கோட்டி நம்பி யென்னு நாமமுஞ் சேர்ந்த தன்றே. (௩௯௮)

என்றிவை யருளிச் செய்தாங் கிறைஞ்சிய முதலி யாண்டான்
றன்றிரு முகத்தை நோக்கிச் சாற்றுவார் மைந்தா நம்பி
யன்றுநீ விரும்பிக் கேட்ட தருள்புரிந் தனனோ வென்ன
நின்றசீர் மறையோ னந்த நிமலரோ டுரைப்ப தானான். (௩௯

வேறு.

ஆன்றொழுமெய் யறிவுடையா யறுதிங்கள் பின்சென்று
தோன்றியசீர் நம்பியுடன் றொண்டனேற் கிரங்கென்றேன்
மூன்றுளவாந் தத்தவற்றுண் முடியாது தப்பினையே
யூன்றியதோர் மதிமிக்காய் பின்வருதி யெனவுரைத்தான். (௪௦௦)

வேறு.

அந்நெறி மூன்று மகல்வதெக் கால மடியனேன் றனக்கென வழுதா
னன்னெறி யுடைய மைந்தனுங் கதுகண் டுடையவர் நவையிலாய் கடிந்தா
யின்னமு முளவோ வுனக்கவை யில்லை யினிச்செலி னம்பியஃ தியம்பு
மன்னுசீ ரன்ப வேகென விடுப்ப மாசறு முதலியாண் டானும். (௪௦௧)

சென்றனன் மீண்டு நம்பியை வணங்கித் தேவகிப் பிராட்டிமுன் னிலையா
யன்றது பெற்று* மீண்டன னெதிகட் கதிபரு மத்திறங் கேட்டாங்
கின்றெனக் கன்றோ பவித்திரத் துடனே யிலங்குதண் டெய்திடப் பெற்றே
னென்றிய தவத்தா யெனவுள மகிழ்ந்தாங் கோங்கரங் கத்தினி லுறைய. (௪௦௨)

வேறு.

தேசிகனுந் திருக்கோட்டி நம்பியெனுஞ் செழுந்தவனு
மாசிலாத் திருமாலை யாண்டானு மாங்கொருநா
ளீசன்வளர் திருவரங்கத் தெய்தினா ரவர்பதத்தி
னீசனேன் றனையாண்ட நிமலவரு ளெதிராசர். (௪௦௩)

சென்றிறைஞ்சி யிருந்தளவி றிருக்கோட்டி நம்பியெனு
மன்றல்கமழ் தார்மார்பு னுடையவர்மா முகநோக்கி
யின்றுமுதற் றிருமாலை யாண்டானோ டெழின்மாற
னன்றுரைத்த தமிழ்மறைகட் கத்தங்கேட் டருள்கவென. (௪௦௪)

வேறு.

செப்பின னதற்பின் மற்றைத் திருமாலை யாண்டா னோடு
மொப்பிலா யிவருக் கந்த வுண்மையை யுரைத்தி யென்னத்
தப்பறப் பகர்ந்து மீண்டு திருக்கோட்டி யூரைச் சார்ந்தான்
முப்பகை யற்றார் மற்றவ் விருவரு மதனிற் பூண்டார். (௪௦௫)

* முதலியாண்டானுக்கு உடையவரே ஸர்வரஹஸ்யதமமான • சரமசலோகார்த்தத்தை

வேறு.

...ரார் மாறன் றெரிந்துரைத்த திருவாய் மொழியின் செழும்பொருளை
...யரா ரருள்சே ராளவந்தா ரிசைத்த படியே யெடுத்தெடுத்தாங்
...ாரா வமுதைத் திருமாலை யாண்டா னருளிச் செயக்கேட்டு
...ரா யலைந்து கரைந்துருகி யெதிக டலைவர் நினைவுறுநாள். (௪௦௬

...னி லறியாக் காலத்துக் குரைப்பான் றிருமா றனையாண்டான்
...றனுட் டிகழுந் துழாய்முடியாய் சிறியேற் கறியாக் காலத்தே
...ானப் பொருளைத் தந்தனையந் நலத்தை யழிக்கும் பொருட்டாயோ
...னப் படுமிவ் வுடலோடும் வைத்தா யென்று னெனவிசைத்தான். (௪௦௭

வேறு.

ஆங்கதுகேட் டுடையவரு மதின்முன்னும் பின்னுமுள
வோங்குறுசீர்ப் பனுவலுறு முறையெல்லாங் கேட்டருளி
யீங்கிதனுக் கிவ்வண்ண மானாலோ வெனவிசைத்தார்
தாங்குமருட் டிருமாலை யாண்டானுஞ் சாற்றென்றான். (௪௦௮

வேறு.

...ன்னும் பின்னுங் களிதோன்ற மொழிந்தாங் கிடையி லொருபாட்டி
...ன்ன ரோன்று மிழவாக விசைத்தான் மாற னென்னுமதின்
...ன்னும் பொருளம் மகிழ்மாறன் மாய னோடே மாதவனே
...ன்னு நேமி நெடுமாலே வினையே னுயிரே வித்தகனே. (௪௦௯

...றியா மாமா யத்தமரு மடியேற் கறியாக் காலத்தே
...றியா ஞான மளித்துன்னை நீங்கா வன்புன் னடிமைக்கண்
...றியார் துளவ முடியானே வைத்தா யிந்த மேதினியிற்
...றியார் புலன்கள்வெள்கும்வகையென்னவியந் தபகம்நகனால். (௪௧௦

வேறு.

என்பதை யெதிக ளாதரிய்ம்பிடக் கேட்ட போதே
யன்பினாற் றிருமா றன்னை யாண்டவ னுள வந்தார்
முன்பெமக் கருளிச் செய்யக் கேட்டில முனிவன் முன்னாட்
டுன்புறும் வெகுளி பொங்கத் தொடங்கிய சிருட்டி* போல. (௪௧௧

தொடங்கினீர் நீரு மாறன் சுருதியின் பொருளி னுள்ளே
யிடம்படு சிந்தை யெந்தை யியமுனைத் துறைவர் காணாத்
திடம்படு பொருளை நீரோ தெளிந்துரைக் கின்றீ ரென்ன
வடங்கிடாச் சிந்தை பெற்று லாவது மிதுவோ வென்றே. (௪௧௨

---

*...லாப் பிரதிகளிலும், 'திருட்டி' என்றே காணப்பட்டது.

வேறு.

தெருளின் மிக்க திருமாலை யாண்டான் திருவாய் மொழிக்குத்
மருளிச் செய்ய றவிர்ந்திருந்தா னதுகண் டாசி லெதிராசர்
பொருளைக் கேட்டு நாமுணர்ந்து புந்தி யுள்ளே யடங்காம
'லிருளிற்படிந்து துன்மதியா லிசைத்துக் கெடுத்தே னெனையென்ன. (சச

வேறு.

பெரும்பசி யாளன் முன்னே பேரமு தத்தை யிட்டிங்
கருந்தென வைப்ப வாரி யாங்கவ னருந்தும் போதிற்
பருந்தினும் விரைவிற் பற்றிப் பறித்திடக் கொடுத்த தேபோ
லிருந்திருந் தாவி வாடி யெதிகடந் தலைவர் நைந்தார். (சகச)

வேறு.

அந்தவா றனைத்தினையு மாளவந்தார் திருவுருவைச்
சிந்தையுற வைத்துவளர் திருக்கோட்டி நம்பியெனு
மெந்தைபிரான் கேட்டருளி யிலங்கியசீ ரருடழைப்ப
வந்தனனத் திருமாலை யாண்டான்முன் வரக்கண்ட. (சகரு)

சீரியநற் றிருமாலை யாண்டானுஞ் சென்றெதிரே
பாரினுறப் பணிந்தேத்தப் பழமறைதேர் நம்பியுமக்
கூரியனை யுடன்பணிந்தான் குருமணியா மிருவர்களு
மார்வமுற வளவளவி யொருதலத்தி லமர்ந்ததற்பின். (சகசு

வேறு.

திடவான் மறையை வடித்தமைத்தடுத்த திருவாய் மொழிக டமக்கத்த
நடவா நின்ற தோவென்று னம்பி திருமா றனையாண்டான்
மடமான் பொருட்டாற் றென்னிலங்கை மன்னை மாய்த்துப்பின்னொருநா
கடவான்களிற்றின்கொம்பொசித்தான்கருணை திரண்டவாளவந்தார். (சகஎ

வேறு

மெய்ச்சுவா வப்பொருள் விளம்பி னானதை
யச்சுவா பத்தினி லறையக் கேட்பவர்
விச்சுவா மித்திர சிருட்டி மீளவு
நச்சுவார் பண்ணினா னடப்ப தெவ்வணம். (சகஅ)

வேறு.

என்றன னதுகேட் டாங்கே யிருந்துற நகைத்து நம்பி
நன்றது செய்தார் தம்மை நவில்கநா மறிய வென்று
றொன்றிய கருணை மிக்க திருமாலை யாண்டா னோங்கு
மன்றல்சேர் மார்பா பூதூர் வந்தவ தரித்தா னென்றான். (சககூ)

நீட்டுபெல் புகழாய் முன்னஞ் செண்பக மாற னன்பிற்
கோட்டிய பனுவ லாகுங் கொழுந்தமிழ் தன்னி லெந்தப்
பாட்டினிற் றர்க்க மந்தப் பத்தனு நீயு மென்ன
வாட்டமில் குணத்தா னம்பி மற்றவ னோடு கூற. (சஉ0

## வேறு.

அறியாக் கால மெனும்பாட்டுக் கான வந்தா ரருளியது
நெறியா ரெதிக டனிநாதர் நவமாய் நினைத்து நிகழ்த்தியதுங்
குறியா ஞானத் திருக்கோட்டி நம்பிக் கடைவே குறித்துரைத்தான்
றறியார் களிற்றின் றுயர்தீர்த்த திருமா றன்னைத் தாளுண்டான். (சஉக

## வேறு.

ஆங்கது கேட்டு நம்பி யாளவந் தாரு மிந்தப்
பாங்குறு பொருளை முன்னம் பகரநாங் கேட்டோ மந்தத்
தாங்குபல் குணத்தின் மிக்க தலைவர்முன் புணரா வத்த
மீங்கிவன் கருத்திற் றோன்று தெனவிரு மென்று பின்னும். (சஉஉ

## வேறு.

அறைவா ணறியா தவன்றன்னை யறிவிக் கின்றே னெனுநினைவை
மறையா யிரமும் வல்லவனே மறத்தி சாந்தீ பனிபக்கற்
குறையா நெறிசேர் வசுதேவர் குமரன் படித்தன் றுணர்ந்தருளு
முறையா மிந்த விளையாழ்வா னம்பாற் கற்ற லெனமொழிந்தே. (சஉங

## வேறு.

சீரியநம்பி யந்தத் திருமாலை யாண்டா னோடு
மேரிய லெதிக ளுத ரிருந்தவத் தலத்தி னண்ணிக்
கூறிய பொருளை யோதா துணர்ந்தவக் குறிப்பி னாலும்
பாரிய வுயிர்கட் கெல்லாம் பரிவற காக்கி னைவம். (சஉச

மதுவமர் துளபத் தாரான் மானிடர்க்காக மண்ணி
லிதுவுமோ ரவதா ரந்தா னெடுத்தன னென்னா வுன்னிக்
கதுமென விறைஞ்சி னாரக் கவையறு குணத்தி னாரு
மெதுசெய்தா ரிவரென் றன்னா ரிணையடி யிறைஞ்சி னைந்தார். (சஉரு

உருகினைந் தவண நின்ற வுத்தம ரோடு மற்றை
யிருவரு மிருந்த காலை யெம்பிரா னிளையாழ் வாரைப்
பொருவிலா நம்பி யந்தப் புங்கவ னோடு மைந்தா
வருமறைப் பொருளி னத்த மனைத்துங்கேட் டறிந்த தற்பின். (சஉசு

வேறு.

அன்பி னாழ்வார் திருவரங்கப் பெருமா ளரையர்க் காளவந்தார்
முன்பு கொடுத்தா ரிரண்டுண்மை முறையா லதுகேட் டறிந்துணை
பின்பு சீரா மாயணத்தைப் பெரிய திருமலை நம்பியெனு
மின்ப வாரி யுடன்கேட்டி யென்ன நோக்கி யிசைத்தருளி. (௪௨௭)

மீண்டா னம்பி திருக்கோட்டி யூரின் மன்னி வீற்றிருந்தா
னீண்டா னுலக மாவலிபாற் குறளா யிரந்து நின்றவனை
யாண்டா னுடனே யாழ்வார்க ளருளிச் செயல்கட் கல்வழக்கைத்
தீண்டாச் சிந்தை யெதிராசர் சிறந்த பொருளின் றிறங்கேட்டு. (௪௨௮)

நாரா யணனு மிறைநிலையு நடுங்கா வுயிரி னன்னிலையுஞ்
சீரா ரிருவர்க் குலமுறையுந் திணிந்த விருளாஞ் சேணிலையு
மோரார் சரணத் துறநெறியு மின்பத் தியல்பு மனுபவமு
நேராம் வண்ணந் திருமாலை யாண்டான் காட்ட வந்நெறியால். (௪௨௯)

எந்தை பூதூ ரிளையாழ்வா ரிருகண் டாரை மழைபொழியச்
சிந்தை குளிரக் கேட்டழகார் திருமான் மார்க்க மெனச்சிறந்த
வந்த மில்லா நெறியெல்லா மகத்துட் டெளிவுற் றனுபவத்தின்
வந்த வாரிப் பெருஞ்சுழியி லடங்கித் தம்மை மறந்தருளி. (௪௩0)

இருந்து தெளிந்து திருமாலை யாண்டான் செய்ய விணையடிக
டிருந்த விறைஞ்சி விடைகொண்டு சீரா ராள வந்தார்முன்
மருந்து பிறவிப் பெரும்பிணிக்கு வைத்தார் பலர்பான் மற்றவைகள்
பொருந்து மிடங்க டொறும்புகுந்து பெறுவார்போகமிக்கிலங்கும். (௪௩௧)

சீரா ராழ்வார் திருவரங்கப் பெருமா ளரையர் திருவடியை
யாரா வன்பி னுறவணங்கி யவருக் குவந்த கைங்கரிய
மோரார் மஞ்சட் காப்பரைத்தாங் கின்ப மிக்க புனலாட்டி
நேராய் நின்றா ராகிங்க ளிலவும் கருணை யெதிராசர். (௪௩௨)

வேறு

ஆங்கதி லொருநாண் மற்றவர் தமக்கன் றரைத்தசீர் மஞ்சணன் றன்பின்
பாங்குறு மையினுற் றிருமுகம் வாடப் பார்த்துமீண் டரைத்தெழும் புரிவா
லோங்குநீ ராட்ட வரையரு மிவரை யுவப்பொடு நோக்கியேன் னுவி
தாங்குறப் பெற்ற சருவசொத் தினையுந் தலைவனேமைக்கொளச்சமைந்தோ.

இன்றுநீ யிதுசெய் திட்டதென் றிரங்கி யெம்பிரான் வலத்திருச் செவியி
லன்றுப தேசஞ் செய்தனர் முனைநா ளாளவந் தார்தமக் குரைத்த
வொன்றிய பொருளை யுடையவர்பெற்றுங்குவப்பொடுமவர்பதம்வணங்கிச்
சென்றனர் மடத்திற்றொண்டர்களோடுஞ்செறிந்தவண்சிலபகல்செலுநாள்.

கங்கையின்கரையின்மன்னும்வேதியரிற்கவையிலாமனத்தனோர்மறையோன்*
பொங்குநால் வேத மூவ்று புராணம் புவியின்மற் றுளபல கலைக ,
ளங்கமர்ந் தோதிப் பின்புறப் பட்டே யாசைக ளெட்டினு மடக்கந்
தங்குற வடித்துச் சமயமோ ராறின் றலைவரை நிலையற வென்றே. (௪௩௫)

இனியெதி ரில்லை நமக்கிரு நிலத்தி லென்றதற் பின்புமீண் டேகி
நனிதரும் கங்கைக் கரையினை முன்போ னண்ணியாங் கேகதண் டேந்து
முனிவர்கள் சூழ வேகதண் டதனின் முறையுறு சன்னியா தத்தைத்
தனியனுய் நின்ருன் பற்றினுன் பற்றிச் சகமெலாந் திறையிட விருந்தான்

வேறு.

அப்படி யிருப்ப வந்நா ளணியரங் கத்தி னின்றுஞ் சீர்
செப்பரு மறையோ னுங்கே சென்றனன் கங்கை யாட
வொப்பிலா னவனை நோக்கி யெங்குளா யுரைத்தி யென்ருன்
றப்பற வவனு நின்று சாற்றினு னரங்க மென்ன. (௪௩௭)

அத்திரு நகரிற் கல்விக் கதிபரா ரறைதி யென்ரு
னுத்தம குணத்தாய் மூன்று தண்டனே ருவமை யில்லா
னித்தரி லொருவ னென்றிந் நீணில மறையத் தக்கான்
றத்துவ வாதி புத்தன்† சைவனென் ருதி யாய. (௪௩௮)

வேறு.

இருளைச் சீறி யெழுந்திலங்கு மிரவி யென்ன விருக்கின்ருன்
மருளற் றெளிரு மெதிராசன் மற்றை யவன்றன் றிருநாமந்
தெருளுற் றவனே யறிதியெனச் செப்பி நின்ருன் மற்றயவனப்
பொருளைச் சிந்தை யுறநினைத்தப் புலவன் றனைக்கண் டிடுதுமென. (௪௩௯)

ஏக தண்டிபலவண்டிக் கிசைய வேற்றிச் சாத்திரங்கள்
மாகம் வெருள மண்ணெளிய வூர்ந்து விரைவின் வழிநடந்து
மேக வண்ணன் கண்டுயிலும் மென்கா விரிசூழ் விண்ணளக்கும்
ஆக வேலிப் புனலரங்கம் புக்கான் புலவர் புலியன்னான். (௪௪0)

புக்க முனிவ னரங்கத்துட் புனிதன் கழல்கள் புகுந்திறைஞ்சித்
தக்க புகழ்சே ரெதிராச னெங்கே யென்ருன் சந்நிதியிற்
றிருக்க பகவற் பத்தரிடைச் சுடரோ னென்னப் பொலிந்திலங்கி
ருக்கன் புகழ நின்றமுனி யிங்கே காணு னெனநின்ருன். (௪௪௧)

---

* 'யஜ்ஞமூர்த்தி யென்கிற மஹாவித்வானை ஒரு ப்ராஹ்மணன் கங்காஸ்நாநத்துக்குப் போய் அங்கு ஸ்நாநம்பண்ணி அங்குள்ள வித்வான்களை ஜயித்து அங்கே மாயாவாத ஸந்யாஸாச்ரமத்தையும் பரிக்ரஹித்து வித்யையாலும் சிஷ்யஸம்பத்தாலும் மிகுந்தவனுயிருக்க' என்கின்ற குருபரம்பராப்ரபாவ வாக்கியத்தால் இவருக்கு யஜ்ஞமூர்த்தி என்பது பெயரென்றும், வேறோரிடத்திலிருந்து சென்று கங்கைக் கரையருகே யமர்ந்தவரென்றுந் தெரிகிறது. † பௌத்தன் என்னும் பொருளது.

வேறு.

எண்ணருஞ்சீ ரெதிராச னீயே யாகி
வெளியேனுஞ் சிலதர்க்கத் திசைந்து நின்பாற்
பண்ணுதற்கே யொருப்பட்டு வந்தே னந்தப்
படிசெய்ய வேண்டுமெனப் பகர்ந்தா னெம்மான்
மண்ணவர்கள் காணநாந் தர்க்கஞ் செய்தான்
மற்றுநீ தோற்றிடிலென் செய்வ தென்னத்
திண்ணமறி செருப்பெடுப்பே னுனக்கு நானே
தேவர்களு மானிடருஞ் சிரிப்ப வென்றான்.

வேறு.

நன்றென்றுங் கதற்கிசைந்து நவையறுசீ ரெதிராசர்
குன்றென்றுங் குயர்ந்தோங்குங் கோதறுசீர் மண்டபத்திற்
சென்றன்றுங் கினிதமர்ந்தார் திரிதண்டர் பலசூழ
வொன்றென்றே யுரைதண்ட னெதிரேவந் துடனிருந்தான். (௪௪௩)

வேறு.

ஒருதின மென்ன நாள்பதி னெட்டாங் குடையவ ருடனவ னெதிர்ந்தே
யருமறை முடிவி னின்றுதர்க் கிக்க வவனைவென் றிடப்படா மையினாற்
பொருவரும் பூதூ ரிறைவனு ரற்பம் புந்தியிற் சலித்தன ரதுகண்
டிருவருஞ் சலித்தோ மின்றுபோய்நாளைவருகவென்றேகதண் டுடையான்.

முன்னெழுந்திருந்துதன்னிடம்புகுந்தான்முகுந்தனையகந்தனி லமைத்தார்
பின்னெழுந் திருந்து நம்பெரு மாளாம் பிரமனுர் தாதையை வணங்கி
மன்னுசீர் நாத முனிவனு ராது மாசறு மியமுனைத் துறைவ ரனு
ரென்னுநான் மறைதே ராளவந் தாராமெம்பிரானுலுமுன்விதித்த. (௪௪௫)

திருவருள் வளருந் தரிசன மடியே னேதுவாச் சிதைவதோ சிந்தயா
வருமறை முதல்வா வெனவுரைத் திடலு மரங்கனு ருரைசெய்வா ருனக்கே
பொருவிலாச் சீட னொருவனைக் கொணர்ந்தேன் போன்றுமோ நந்தரி சனந்தா
னிருவரு நாளை யெதிர்ந்தபோ திதுவே யியம்புவா னவன்முன மியம்ப. (௪௪௬)

பின்புநீ யிதனைப் பகருதி யென்னப் பீடுறு மீருரை பகர்ந்தாங்
கென்பொலா மணியுங் கண்டுயில் செய்தா ருடையவ ரிவையரு ளிறையை
யன்பினுல் வணங்கி மீண்டுதம் மடம்புக் கன்றையிற் பொழுதெலா மிருந்து
துன்பிலான்கற்றகல்வியையுணர்ந்துதுஞ்சிலார்நெஞ்சினில்வியந்தே. (௪௪௭)

மற்றைநா ளெழுந்து தர்க்ககூ டத்தின் மாசிலர் மறைமுதற் பலநூல்
கற்றவன் வருமு னிருந்தனர் பின்பக் கலைவலா னெய்தினன் கண்ணு
லுற்றுற விருந்த வுடையவர் முகத்தை நோக்கினு னுண்ணிறை மகிழ்வா
யிற்றைநாள்வெல்லுமினைமையென்னவெண்ணியாங்கிருந்திவையிசைப்பான். (௪௪௮)

# எம்பெருமானர் வைபவம்.

வேறு.

ற்றே னுனக்கு நானீடோ வங்கீ கரித்தி யெனையுனக்கே
தாற்றேன் றேற்றே னெதிராசா வென்று னெந்தை துகளில்லாய
ாற்றாய் நூர்க்கம் பின்காண்டு மென்று ரவனுந் தனிமுதலே
ற்றே சலித்த திருவுளத்தை நிமலா நீயே யகல்வித்தே. (சசக)

ந்தை யார்ந்த களிப்போடுஞ் சீரார் கருணை முகத்தோடும்
ந்தாங் குதய கிரிமருவும் வானு ரிரவி யெனத்தோன்றி
பந்தை நீயே யின்றிருந்தாய் யானே வெல்வ தினியுன்னைத்
ந்துன் சரண மெனைக்காத்தி தலைவா வென்னச் சாற்றினன். (சரு0)

வேறு.

ஆங்கதுகேட் டெதிராச ரப்படியே யுரைத்தனைநா
மோங்குமறை மொழிப்படியே யுரையாடி யதினனே
பாங்குபெற வென்றலப் படிசெய்வேன் பகரென்றார்
தாங்குமொரு தண்டன்முன்மால் சாற்றியதைச் சாற்றினன். (சருக)

மற்றதற்கு மாற்றமந்த மாயவனர் கட்டுரைத்த த்த்
வுற்றதிரு மொழிப்பொருளை யுடையவரு மெடுத்தறைந்தார்
கற்றுணர்ந்தோன் முட்டுண்டேன் கள்வனே னெனவெழுந்து
நற்றவஞ்சே ரெதிராச நமோநமவென் றிறைஞ்சினன். (சருஉ)

வேறு.

திருவடி யிணையிற் றாழ்ந்த செவ்வியோன் றன்னை யெந்தை
யிருகையா லெடுத்தன் றுன்று னேந்திய வேக தண்டைத்
தருகென வாங்கி யாங்கே தடையற முறித்துப் போட்டப்'ரி'
பொருவிலா நினைவி னுற்குப் புனருப நயனம் பண்ணி. (சருங)

வேறு.

பண்ணமரும் வேதாந்தம் பகராருஞ்சீர்த் திரிதண்டில்
விண்ணவர்க டொழுநாலா மாச்சிரமம் வியந்தளித்தங்
கெண்ணருஞ்சீ ரருளாளப் பெருமாளெம் பெருமானர்
நண்ணுமிவர் திருப்பெயரென் றுரைத்தருளி* நாடறிய. (சருச)

வேறு.

ஓருயி ருடலொன் றாக வுறைந்தவெம் பெருமா னார்க்கங்
கீருயி ருடம்பு மாங்கே யிரண்டென விசைக்கப் பட்டுச்
சீருயிர்க் கிரமத் தானுந் திருந்திய ஞானத் தானு
மாருயிர்க் கிதங்கள் பண்ணி யங்ஙனம் வாழு நாளில். (சருரு)

---

ான் தோற்றேனுகில் உம்முடைய பாதரக்ஷையைச் சுமப்பதோடு உம்முடைய பரையு மீட்டுக்கொண்டு உம்முடைய ஸித்தாந்தத்திற் புகக்கடவேன்' என்ற ப்ர ஜ்ஞையின்படி அருளாளப் பெருமா ளெம்பெருமானர் என்று திருநாமமிட்டனா ரன வறிக,

வேறு.

ஒருவரா யுலக மனைத்தையுந் திருத்தற் கொருப்பட்ட வுடையவ ரந்தப்
பொருவிலா நிலையான் றிறத்தினை நோக்கிப்புந்தியின் மகிழ்ந்தினெமக்குக்
குரவனுந் திறமுந் தோழனுந் திறமுங் குணத்தினி லுளனென வவரோ
டிருவராயிந்த வுலகினைத் திருத்தலினியெளி தெனவுளத்தெண்ணி. (௪௫௬)

வேறு.

திடமொன்று மனத்தெந்தை சீபெரும்பூ தூர்வள்ளன்
மடமொன்று வேறாக மற்றவற்குப் பண்ணுவித்துக்
கடமொன்றும் வினையில்லாக் காதலனை யதிலிருத்தி
நடமொன்று படவரவி னடித்தபிரான் றரிசனத்தில். ' ' (௪௫௭)

வேறு.

அனைத்தையுந் தான்முன் றேசிக ரருள வறிந்தமை* யாங்கவற் கறைந்து
தனைத்தொடர்ந் துய்வா னடைந்தவர் தமையத் தவமிகுந் தானிடத் தாக்கி
வினைத்தொகைய றுக்குந்திருவிலச்சினைக்கோல் விளங்குற வாங்கவற் களித்துத்
தினைத்துணையளவுஞ் சிந்தையிற் பிரியா திருந்தவண் சிலபகல்செலுநாள். ()

வேறு.

பெரியநம்பி திருக்கோட்டி நம்பி யன்பிற்
பேசரிய திருமாலை யாண்டா னென்னும்
விரிபுகழ்சேர் மூவருந்தம் மைந்த ரோடு
மேவினர்க ளெதிராசன் விளங்கு ஞானத்
தெரிவரிய திருமுடிச்சம் பந்த முள்ளா
ராயினுந் திருவடிச்சம் பந்தம் வேண்டி
யரியநிலைமைந்தர்களை யெதிரா தன்பா
லாச்சரிப்பித் தாருலகி லல்ல னீங்க.† (௪௫௯)

அந்நாளி லுடையவர்க்காட் செய்ய வென்றே
யனந்தாழ்வா னெச்சானன்§ மருதூர் நம்பி
தொன்னாளிற் றவஞ்செய்திப் புவியிற் றோன்றுந்
தொண்டனூர் நம்பியெனுந் தூய்மை மிக்கார்
மன்னுநின் முரவரைப் பூதூ ரெந்தை
மாசிலா வருளாளப் பெருமா ளாய
வென்னுவி யெம்பெருமா னார்தம் பக்க
லேகினீ ராச்சரிமி னின்றே யென்றார். (௪௬௦)

---

* அருளாலறிந்தமை என்றும் பாடம். † உலகினல்லனீங்க என்றும் பாடம்.
§ இவர் திருநாமம் எச்சான் என்பதாகக் குருபரம்பராப்ரபாவத்திலே காணப்படுகிறது. எச்சாணன் என்றும் பிரதிபேதம்,

அப்படியே யாச்சரித்த பின்பு துன்பி
வருளாளப் பெருமாளெம் பெருமா னாரு
மொப்பரியார் தமைநோக்கி யென்னை யாண்ட
வுடையவர்தந் திருவடியே தஞ்ச மாக
வெப்பொழுது மிருந்திடுநீ ரிதுவே யுண்மை
யென்றுவிக் குறுதுணையு மிதுவே யென்னச்
செப்பரிய நால்வர்கட்கு முபதே சித்தத்
திருமிக்கா ருடன்வாழ்ந்து செல்லு நாளில். (சகூ

வேறு.

பின்னுஞ் சிலவர் வடதிசையி னின்றும் பிரான்சே ரரங்கத்தின்
மன்னு மிராமா நுசர்தம்மை வணங்க வேண்டு மெனவந்து
பொன்னி சூழு மரங்கத்துட் புகுந்தா ரவர்கட் கெதிராக
முன்ன முரைத்த வருளாளப் பெருமா ளேக முன்பணிந்தே. (சகூ

வேறு.

எம்பெருமா னார்மடமே தியம்புமென்றா ரவரோடுந்
தம்பெருமா னிருக்குந் தலங்காட்டி யதுவென்றா
னம்பெருமா னுனக்கினியா ரொருநாமத் திருவரதி
னும்பருமா நிலத்தவருந் தொழுதேத்து முடையவர்வாழ். (சகூ

இடமோதா னதுவென்றா ரெய்தினர்மற் றதுகேட்டுத்
திடமாய வாருயிருஞ் சிந்தனையுந் தடுமாறி
விடமார வருந்தினர்போன் மெய்பதறி விழுந்தெழுந்து
தடவானி லிரவியுடன் மின்மினியுஞ் சொலத்தகுமோ. (சகூ

வேறு.

முயிருங் குமட்டையிடக் காலா கோலக் கொடும்பிறப்பி
ரடி. வாடு மெனதுயிர்க்கு முலையா நிலையா யொளிமயமாம்
வீடு காட்டி யாண்டானுக் கிணையோ நானும் விளம்புதற்கு
நாடு நகரு நன்கறிய நன்றா [illegible] னென்னினை? (சகூ

ங்கு நின்று மீண்டுதன தட்டா ளங்க ளனைத்தினையும்
ராங்கொன் றின்றி யறவிகழ்ந்து பதியை யிடித்துப் பொடியாக்கி
யங்கு முள்ளத் துடனிற்ப விராமா நுசரு மதுகேட்டன்
றாங்கு மடியார் புடைசூழச் சென்றார் விரைந்தவ் வுத்தமன்பால். (சகூ

சா ரியனைக் கண்டளவி லசி ருளா ளப்பெருமா
டசார் கழற்கீ ழுறப்பணியத் திருக்கை யாலே யெடுத்தணைத்து
ாசா காத சிந்தனையும் வருந்த மடத்தை யிடித்ததிறங்

# எம்பெருமானார் வைபவம்.

என்னை யளித்த பெருமானே கேட்டி யிற்றை நாட்காலை
மன்னும் வடபாற் றிருநதிக்கு விடைகொள் போதில் வழியெ
யுன்னைத் தேடிச் சிலர்வந்தா ருரைத்தா ரிரண்டெம் பெருமா
பன்னப் பட்ட விருவர்களிற் பகரும் பூதூர் நகர்வள்ளல்.

இடத்தைக் காட்டு மெமக்கென்றா ரென்னை யாண்டீர்க் கிணை
றிடத்தைக் கொடுக்கு மான்பாலை யருந்த விடினுந் தீபரவு
விடத்தைக் கொடுக்கு மதுவன்றோ வினையே னறிந்த தத்திறத்தான்
மடத்தை யிடித்த தினிமையன்று மாசி லாய்நின் சன்னிதியில். (௪௬௯)

இருந்து வினையேற் கடுத்ததொழி லியற்றி வாழ்வே னதுவல்லாற்
பொருந்து கில்லேன் வேறிருத்தல் புனித வென்னத் திருவடியிற்
றிருந்த விறைஞ்ச வதுகண்ட சீமான் பூதூ ரிளையாழ்வார்
வருந்த வேண்டா நம்மருகே மடத்தி லிருத்தி யெனக்கொடுபோய். (௪௭௦)

அன்பு கூர்ந்தோ ரதிகார மிருந்த படியே யெனவணைத்துப்
பின்புந் திருவாய் மொழிப்பொருள்கள் பேச வரிய ரகசியங்க
ளின்பம் வளர வவற்குரைத்தா ரிணையி லருளா ளப்பெருமா
னுன்பங் கடிந்த திருவுளத்தி லெல்லாந் தரித்துத் துகளில்லா. (௪௭௧)

வேறு.

பேசரு ஞான சாரம் பிரமேய சார மென்னத்
தேசுறு மிரண்டு நூலுஞ் செப்பியாங் குடனே மன்ன
மாசிலா வெதிக ளுதை ரவ்வணம் வாழு நாளி
லீசனும் வேங்க டத்து ளெம்பிரா னெதிரா சன்பால். (௪௭௨)

வந்தொரு கூங்குற் போதின் மாசறு கனவு தன்னி
லந்தமில் குணத்தி னானே யாசில்வேங் கடத்தி னுளுஞ்
சிந்தனை வருந்த வென்னைச் செய்கின்றார் சிலர்க ளந்தப
பந்தநீ தீர்க்க வேண்டு மெனப்பகர்ந் தருளுங் காலை. (௪௭௩)

புண்ணியச் சிந்தை யெந்தை புகலெதி ராசர் தாமு
நண்ணிய கனவு தன்னின் ஞாலமுண் டுமிழ்ந்த வெந்தாய்
திண்ணிமை யோடு நின்பாற் றீமைசெய் நீசர் யாவ
ரெண்ணிநா னதற்குச் செய்யுங் கருமமே தியம்பு கென்றார். (௪௭௪)

வேறு.

ஞான திறத்தை யுரைக்கின்றே னன்பா கேட்டி தீயவினை
போன காலந் தனிலியற்றிப் புவியிற் குருடாய் முடவர்களாய
ான மில்லாக் கூனர்களாய் மைந்த ரில்லா மலடர்களா
ின் மாகிப் பிறந்துழலு மிவர்க ளெல்லாம் வந்தெய்தி. ௭௫)

இல்லாப் பொருளைத் தருதியென வெடுத்த மலர்க டொடுத்ததொடர்
பல்லா யிரங்க வெனக்களித்துப் பகலு மிரவு மிரங்தென்னைக்
கொல்லா நின்ற ரதைமாற்றிக் கோதி லாத குணத்தினனு
மெல்லாப் பொருளு முடையவனு யாது மெனைவேண் டாதவனாய். (௪௭௬)

ஒருவ னுண்டேல் வரவிடுதி யோங்கு நின்னை யுற்றிறைஞ்சி
மருவும் பாக வதர்தம்மின் மாசி லாதா யெனவுறைந்தான்
றிருவின் கேள்வ னெதிராசர் திருக்கண் விழித்தங் குடனெழுந்து
பொருவில் கனவின் றிறமெல்லாம்பொருக்கென் றுரைத்தங்கிருந்தவரில்.()

அனந்தாழ் வானை முகநோக்கி யாசி லாதாய் வேங்கடவன்
மனந்தான் மகிழத் திருமாலை மலைமே லேகிச் சமைத்தளித்துத்
தினந்தான் வருதி நீயென்னத் தெண்ட னிட்டாங் கெழுந்திருந்து*
கனஞ்சேர்குழறன்மனைவியொடுங்கருணைமுகில்சேர்வேங்கடத்தில்.(௪௭௮)

சென்று மன்னி மாயவற்குத் திருப்பூம் பொழிலொன் றுக்குதற்குக்
குன்றில் வேலி யுறக்கோலிக் குளிர்நீ ரேறப் பெருமேட்டை
யன்று நோக்கி வெட்டியெடுத் தகல விடுவித் தத்தலத்தின்
மன்றல் கமழும் பூமரங்கள் வைப்பா னினைந்து மனைவியொடும். (௪௭௯)

கொட்டு மதற்காங் கூடைகளுங் கொண்டு செறிந்தாங் கனந்தாழ்வான்
வெட்டி யெடுக்க வம்மனைவி விளங்கும் வயிற்றி லொருபுதல்வ
னெட்டு மாத மாயிருப்ப விருண்டு நீண்ட கருங்குழன்மேற்
பட்ட சுமடாய்க் கூடையின்மண் பலநாட் சுமந்து பரிவினொடும். (௪௮௦)

வருவா ளந்த மயிலனையாள் வயிற்றிற் கனத்தாற் றலைச்சுமையா
லொருநா ளிளைத்துக் கூடையொடு மோயும் பரிசை யுறநோக்கித்
திருமா மகளார் தனிக்கேள்வன் பீதாம் பரஞ்சேர் திருவரையின்
மருவாக் கட்டுக் கச்சையொடோர் மனுவாய் வயது மீரைந்தாய். (௪௮௧)

---

"பின்பு உடையவரும் அமர்சுவையாயிரமான திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச் செய்துகொண்டு திவ்யகோஷ்டியாக எழுந்தருளியிருக்கிறவளவிலே, 'ஒழிவில்கால மெல்லா முடனாய் மன்னி' என்கிற திருவாய்மொழி நடவாநிற்க, 'சிந்துபூமகிழுந் திருவேங்கடம்' என்கிறவிடத்திற்கு அர்த்தமருளிச்செய்கிறவர், முதலிகளைப் பார்த்தருளி'புஷ்பமண்டபமான பெரியதிருமலையிலே திருவேங்கடமுடையானுக்கு உகப்பாகத் திருநந்தவநஞ்செய்து திருமாலைகட்டிச்சாத்துவார் ஆரேனும்உண்டோ?' என்று அருளிச்செய்ய, அவ்வளவிலே அநந்தாழ்வான் எழுந்திருந்து, 'அடியேன் விடைகொள்ளுகிறேன்' என்று விண்ணப்பஞ்செய்து தண்டன்ஸமர்ப்பித்துத் திருமலைக்கு எழுந்தருளித் திருவேங்கடமுடையானையும் திருவடிதொழுது திருநந்தவநஞ்செய்து அத்திருநந்தவநத்திற்கு 'இராமாநுசன்' என்று திருநாமஞ்சாத்தித் திருமாலைகட்டித் திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்" என்று குருபரம்பராப்ரபாவத்திலுள்ளது.

20764



வேறு.

ஒட்டர் குலத்தி லுதித்தவன்போ லோங்கு நெறியே ரனந்தாழ்வான்
கட்டி யடிக்கும் வெளிப்படிலக் கமலை யனையா ளூறும்வருந்த
மட்டு மதியு மிலையந்தோ வென்ன வந்த மாதிவளெதிர்ப்
பட்டங் கனந்தன் விழிகளினோர் படாது மறைந்தோர் பழுவத்தில். (சஅஉ)

நின்று கூடை தனைவாங்கி நிகரி லொளிசேர் நீண்முடியி
னின்று தாங்கிக் கொடுபோய்ப்போட் டவள்பான் மீண்டு மதுகொடுத்து
மன்றல் கமழுந் துழாய்முடியா னிற்ப வந்த மயிலனையாள்
சென்றாள் விரைவி லதுகண்ட வனந்தாழ் வானத் திருவினொடும். (சஅங)

வேறு.

கூடைமண் ணிட்டு மீளக் குறித்தவத் தலமுந் தூர
மாடொரு தலத்திற் போட்டு வந்தனை கொல்லோ விப்போ
தேடவிழ் குழலி னாளே யென்செய்தா யென்றான் மாது
தாடொழு தவனை நோக்கி யத்திறஞ் சாற்ற லுற்றாள். (சஅச)

மறுவறு மனத்தி னானே வழியிடை யெதிரே வந்தோர்
சிறுபய லொருவ னெட்டச் சென்மமே தோன்றி நின்றான்
விறலினென் றோடி வந்து மேவுமென் னிளைப்பை நோக்கித்
துறுமயிர்த் தலைமேற் கூடை துண்ணென வாங்கி வைத்தே. (சஅரு)

போட்டுமீண் டென்பாற் கூடை பொருக்கெனத் தந்தா னென்றாள்
வாட்டடங் கண்ணாள் கேட்ட மறையவ னிறையவன் றெண்ணிக்
கோட்டிய தொழிலைத் தானுங் கூறிட வந்தான் றன்னைக்
காட்டுகின் றனைகொ லென்றான் காரிகை வருதி யென்றாள். (சஅசு)

நன்றென வெட்டி யிட்டு நாரியார் தலைமே லேற்றி
மன்றல்சேர் குழலாய் முன்னே யேகென்றான் மாதுந் தாங்கச்
சென்றன னனந்தாழ் வானச் சேயிழை வரவு நோக்கி
நின்றனன் மாயன் [illegible] யிவனென்று ணிகரி லாதான். (சஅஎ)

வேறு.

தேசார் கருணைத் திருவுருவைத் திருந்த நோக்கி யனந்தாழ்வா
னாசா ரியனன் றெனக்குவந்தே யருளும் பணியைச் செந்திருவி
னேசா பறிக்க வந்தனைகொ னின்னில் லென்ன மாறுகொடு
கூசா தடிப்பவிரைந்தோடிச்சென்றான்கருத்தைக்குறித்திறைவன். (சஅஅ)

அடிக்கு மிவன்கைக் கெட்டினமை யைய மில்லை கைப்பிடியாய்ப்
பிடித்துக் கொள்ளிற் கொல்லுமெனப் பெருமா னோடி யோர்நடலம்
நடிப்ப வெருட்டி யனந்தாழ்வா னுயு முயலும் போற்றொடரத்
தடித்தங் குயர்ந்த தொருமரத்தி னொளித்தா னமரர் தனிநாதன். (சஅகூ)

வேறு.

ஆசிலா வனந்தாழ்வா னம்மரத்தை விழுந்திறைஞ்சி
யீசனை யினியிவணஞ் செய்யேலென் றெழுந்திருந்து
வாசவார் குழலியொடு மீண்டுநந்த வனஞ்சார்ந்து
தேசுறமப் பணிசெய்து திருமாலை சமைத்தளித்தே. (சகூ0)

வருநாளின் மண்முழுதும் வானகமுங் காத்தருளுந்
திருநாத னனந்தாழ்வான் றிறநோக்கி யிவனம்மை
யொருநாளு மோர்பொருளும் வேண்டாத வுணர்வினனு
யிருநான்கு திருவெழுத்தின் படிவாழ்ந்திங் கிருக்கின்றான். (சகூக)

ஆங்கதுபொய் மெய்யென்ன வளந்தறிய வேண்டுமென
வேங்கியுல கலமெய்த விரும்பிணியை யருந்தவன்மேற்
பாங்குறுசெந் திருவின்முகம பாராதே யேவினான்
றாங்கினு னப்பிணியை யனந்தாழ்வான் றமர்நடுங்க. (சகூஉ)

வேறு.

பெரும்பிணி சென்று பிடித்தவ னுடம்பைப்பேதுறச் செய்தொருபுறத்தே
பருந்துயர் விளைத்தங் கரித்தெலும் பாக்கி யழிப்பதை யாவியோ டதனிற்
பொருந்தியு மிறையுஞ் சலித்திலன் மகிழ்ச்சி பொங்கிய சிந்தைய னான்
றிருந்துமெய்ந் நிலையி னிற்றரு னரிதோ வெளியதோ செப்புக் தெரிந்தே.

அப்படிப் பிணியி லொருமந் நாளி லருட்டிரு வேங்கட முடையா
னெருப்பிலா நிலையா னிடத்தினி லொருநா ளுற்றுனக் கோங்கிய குணத்தாய்
தப்பற விதனைத் தீர்க்கவோ வுடம்பிற் சாற்றிய தழும்புமில் லாமற்
செப்புதி யிப்போதென்றன னென்ற திருமகள்கொழுநனை நோக்கி. (சகூச)

பொருவிலா நிலைசேர்மறையவனுரைகரும்பொங்குமூவுலகுமுண்டுமிழ்ந்தா
யொருபுறந் தநதா யதனினீ செய்யு முதவியும் புலையனேற் குளதோ
கருமுகில் வண்ணு வேகுதி யென்னக் கண்ணனுந் திரும்பியப் பொழுதே
திருமக ளுரைப்ப விலச்சையுற் றஙனே யேகினான் றீர்ந்தவர்க் கெளியான்.

ஆங்கவன் விடுத்த வரும்பிணி யுடனே யகன்றதன் றனந்தன்மெய்த் திறத்தி
னோங்குசீர் நிலகண் டுலகமுண் டவனு மும்பரு மனங்களி கூர்ந்தார்*
தாங்கிய வுடம்பிற் றழும்புமில் லாமை கண்டவத் தமர்களு மகிழ்ந்தார்
பாங்குறுகுரவன் பணித்தன தொழிலைப் பத்தனும் பண்டுபோற் பயின்றான்.

துன்பிலா நிலையா னவ்வணம் வாழ்நாட் டொண்டனூர் நம்பியென் பவனு
மின்புறு மடிசி றதியருக் கினிதா யிராப்பக லளிப்பதி லொருநாண்
முன்புள விதியால் வநதொரு தவசி முடிவிலாப் பெரும்பசி யுடையா
னன்பினன் மிகுந்த தொண்டனூர் நம்பி யமருமூ ரமர்பவ ரோடும். (சகூஎ)

* 'மனங்களி லுவந்தார்' என்றும் பாடம்.

வருந்தினேன் பசியாற் கஞ்சிகூ ழுளதேல் வாருமென் ரொருவனைக் கேட்பத்
திரிந்துநின் றவனுங்* தொண்டனூர் நம்பி திருமனை வாசலைக் காட்டி
யரும்பசி யுடையா யத்திரு மனையி லமுதுசெய் கின்றனர் ததியர்
மருங்கினீ நின்றங் கெம்பெரு மானுர் திருவடி சரணென வாக்கா ... சகூஅ

சொல்கநீ கிடைக்குஞ் சோறெனு நெஞ்சிற் றேன்றிய மகிழ்ச்சியா லுரைப்ப
நல்லதென் றவனுங் தொண்டனூர் நம்பி நவையறு திருமனை தன்னி
லெல்லையி றதிய ரமுதுசெய் பொழுதி லெழிற்றிரு வாயிலின் புறத்திற்
கல்லுமே யுருகக்† கழறினு னெதிக டலைவனுர் திருப்பெயர் கழற. (சகூகூ)

கேட்டன னதனைத் ததியர்மேன் மிகவுங் கிளர்ந்தபே ரன்பினு லவரை
யூட்டுகின் றவனும் பொருக்கெனக் கபாடந் திறந்துவந் தூற்றதை நோக்கி
நீட்டிய சடையுங் கந்தையு மெய்யை நிறைத்தன சாம்பரும் பசியால்
வாட்டிய முகமு முடையனுய் நின்ற மதிமிகு தவசியை நோக்கி. (ரு௦௦)

தொண்டனூர் நம்பி யெம்பெரு மானு ரென்றுநீ சொல்வதென் னென்றுன்
கொண்டவென் பசியைத் தீர்ப்பதன் பொருட்டாற் கூறினே னென்றன னதுகேட்
டண்டரின் முதியா ளேரிடத் திருத்தி யருந்தவ ரருந்திய சேட
முண்டிது கொள்கநீ யெனக்கொடுத்தா னுறநெறித் ததியர்க ளதனை. (ரு௦க)

நோக்கிநீ மேலோர் தளிகையிற் சேட நோன்பிலாத் தவசியும் புசித்தற்
காக்கினுய் பிழைத்தா யென்றுறச் சீற வாங்கவர் பூங்கழ லிறைஞ்சிப்
பாக்கியத் தொண்ட நம்பியும் பிழைத்தேன் பாவியே னதுபொறுத் திடுக
வாக்கினு லொருகா லெதிகணு யகனுர் திருப்பெய ருரைக்கின்மற் றதுவும்.

என்பெறு மதனை யருள்கவென் றிசைத்தா னெலையிலா முதலிக ளதுவு
மன்புறு பரம பதம்பெறு மென்று ராசறு தொண்டனூர் நம்பி
துன்புறு தவசிக் கதுவொரு பொழுதைச் சோறுதான் பெறுதுகொ லென்று
னின்புறு நமது மார்க்கமில் லானுக் கீவது முறையல வென்றுர். (ரு௦உ)

அப்படித் தர்க்க மிடுவதைப் புனித மருந்திய தவசியுங் கேட்டங்
கொப்பிலா நம்பி தன்னுெடு முன்னை யுத்தம ரிகழலென் னென்று
செப்பினு னம்பி யுனக்கவர் தளிகைச் சேடமிட் டதன்பொருட் டென்றுன்
றப்பற வின்றே நானுனக் காளாய்ச்சமைவனிங் கெனத்தலைசிரைத்து. (ரு௦ச)

கந்தையுஞ் சடையுங் கைவிட வெறிந்து கண்ணனுக் கடியனுய் நெறிசே
ரந்தமில் குணத்தான் றெண்டனூர் நம்பி யாழிசங் களித்திடப் பெற்றிங்
கெந்தைநீ யடியேற் கொருகயிங் கரிய மியம்புக செய்யவென் றிசைத்தா
னுந்தமி றதியர் துய்த்தபின் றளிகை மாற்றலுன் பணியெனப் பகர்ந்தான்.

* 'திருந்திநின் றவனும்' என்றும் பாடம். † 'கன்முத லுருக' என்றும் பாடம்,

அப்படிச் சிலநாட் குருவுரை பேணி யாசற வாழ்பவ னிலைமைக்
கொப்புமூ வுலகி லொருவரு மின்மை யானதை யுடையவ ரறியச்
செப்பமார்மலையான்வைகுநாளொருநாட்டிருவளர்வேங்கடப்பொருப்பிற்
றப்பற வுறையு மிறைவனை வணங்கச் சென்றனன் றன்னையே யனையான்

வேறு.

ஆங்கிருந்து திருமாலை சமைத்திறைவற் களித்தருளு
மோங்குநெறி யனந்தாழ்வான் செய்திறத்தை யுறநோக்கி
யேங்கியந்தோ வனந்தாழ்வ னிம்மலைமே லுறைவதெலாம்
பாங்குறாசீர்நித்தரெனப் பகர்ந்தனன்முன் கொல்லியூர்கோன். (ருo௭)

உரைமறந்தோ வவரவர்க ளுவந்ததலத் திருப்பவரை
நிரைசேரப் பேர்த்தெடுத்து நீநினைந்த படிவைப்பை
விரைசேர்பூந் தார்க்காக வேரறுப்பை தலையறுப்பை
கரைசேர்க்கு மிறைக்குவந்த கைங்கரிய மிதுவெனினும். (ருoஅ)

பெரும்பழுது காணிவைகள் பேசுங்கா லெனக்குநம்பி
திருந்தியசீர்ப் பாகவதர் திருத்தளிகை மாற்றுதொழி
லருந்தவமென் றருள்செய்தா னுங்கவற்றி னுலிலொன்று
பொருந்தியுனக் களிக்கின்றேன் வருதியெனப் போயினுன். (ருoகூ)

ஆங்கதுகேட் டனந்தாழ்வா னுக்கையொடா ருயிர்பதைப்ப
வேங்கியிது தவிர்ந்தோமே லெதிராச ருரைமறுத்தோம்
பாங்கொடிது செய்தோமேற் பாகவத ரபசாரந்
தாங்கினோ மெனநின்று சலிப்பொடுமப் பணிசெய்தான். (ருகo)

அப்படியே நிகழ்நாளி லாசறுசீ ருடையவருஞ்
செப்பரிய திருக்கோட்டி நம்பிமுன்பு செப்பியசீ
ரொப்பரிய பெரியதிரு மலைநம்பி யெனுமுரவோன்
றப்பறமுன் னுறைவதுவும் வேங்கடப்பொற் சயிலமதே (ருகக)

படிமிசையில் வைகுந்த மெனமறைகள் பகர்வதுவுங்
கடிபொழில்சூழ் வேங்கடப்பொற் கனககிரி தனியனையா†
ளடிகளிது பரமபத மம்புவியோர் பற்றமென
வடிவமருங் கரமலராற் காட்டியது மற்றதுவாம். (ருகஉ)

வேறு.

நக்க குருகைக் கோன்சரணந் தயங்குந் திருவை முன்னிட்டுப்
புக்க வாறும் வேங்கடத்துப் புனித னூர்க்குக் கொல்லிக்கோன்
மக்க டேவர் பெருவாழ்வை மதியோ மென்று திருமலைமேற்
பொருக்க சரத்தி லசரத்தி லொன்றாய்ப் பிறக்கத் துணிந்ததுவும். (ருகங)

'சயிலத்தே' என்றும் பாடம். † 'தனையெனையாள்' என்றும் பாடம்.

வேறு.

அத்தலத்தி லவர்க்கன்றே வன்பரொடு நாமீபுகுந்த
வுத்தமமாந் திருமலையை யுறவணங்க வேண்டுமென
சித்தமுற நினைத்தழகார் பாகவதத் திரளோடுங்
கொத்தலர்ந்த துழாயலங்க லரங்கர்கழல் குறித்திறைஞ்சி. (நுகச

வேறு.

ஆங்கவ னேடும் விடையருளடியேற் கமலநின் றிருமலை தன்னைப்
பாங்குடன் வணங்கி வரும்படி யென்னப் பத்தியாற் பகர்தலு மதுகேட்
டோங்குசீ ரரங்க ரவ்வணஞ் செய்க வுத்தம வென்றுரைத் தருளத்
தாங்கிய மகிழ்ச்சிச் சுகோததி படிந்தார்* தமரொடும் வடதிசை நோக்கி.

ஏகினு ரேகிப் பேரருளாள ரிணையடி திருவைமுன் னிட்டாங்
காகமு மனமு மாவியுங் கரைய வாசறு மன்பினில் வணங்கி
மேகவான் கோல வடிவினுய் விடையென் றெழுந்தருள் வேதியர் துதிப்ப
மாகமார் கருணை வேங்கடப் பொருப்பைக் குறுகினு ரவயகம் புகழ்வார்.

சிறந்தசீ ரமரர் வந்தடி வணங்குந் திருமலை தனையெதி ராச
ரறந்திகழ் மனத்தா னினைத்துவாக் காலே யாசற வழுத்திமற் றதனின்
புறம்புற வலஞ்செய் தன்பர்க ளோடும் பொருவருந் திருப்பதி தன்னிற்
றுறந்தவர் திறவிற்பொருந் துமாழ்வாரைச்சுருதியின்மொழிகொடுவணங்

ஆசில்சீ ராழ்வார் திருமலை மீதி லடியிடற் கஞ்சியீண் டிருந்தார்
நீசனேன் காலோ மிதிப்பதின் றந்தோ நிமலவெற் பினையென மனத்திற்
கூசியாண் டிருந்து வேங்கடத் துறையுங் கொண்டலை யன்பினுற் றொழு
ரீசனுர்க்கினி ... பியாய்ப்பின்போயிராக்கதக் கருவறுத் திட்டார். (நுக

அப்படித் தினங்கள் பலசெல விந்த வவனியாள் விட்டல தேவ
வொப்பரு நாம முடையவேந் தனையுந் திருத்தியாங் கோங்குதொண் டர்களின்
மூப்பது பேரை யத்திருப் பதியின் முறைதிகழ் கிராமமொன் றுக்கித்
தப்பற விருத்தி வேந்தனைக் கொண்டே தடையற விளையமண் டியத்தை. (நுகக)

கேத்திர மாக வாங்கவாக களபபத தருநதனா கிளர்ந்துவா னவர்கள்
டோத்திரஞ் செய்யும் வேங்கடப் பொருப்பி லுறைபவர் துகளிலா ரணைதல்
பார்த்திருந்தனர்களணைந்திடாமையினுற்பலரொடுமெழுந்தனந்தாழ்வான்
காத்திரமென்னையினியெடாதாண்டான்கழறெழுக்கதுமேனப்புகுந்தான்.

வந்தனந் தாழ்வான் றிருமலை மீதின் மன்னுசீர் முதலிக ளோடு
மெந்தையா மெதிக டலைவரை யிறைஞ்சி யெம்பிரா னெழுந்தரு ளாதே
யெந்தையா ருன்றன் வேங்கடப் பொருப்பிற் றேவனை யடிவணங் காதே
யிந்தயா நிலத்தோ ரிதுவென்கொ லென்ன விருந்தமை யெதன்பொருட் டென்றுன்.

---

* 'சுகோததி யடைந்தார்' என்றும் பாடம்.

அடிதொழு திந்தப் படிபகர்ந் தருளு மன்பனை யன்பினு னோக்கி
முடிவிலாப் பத்தி வாரிதி யனையாய் முத்தராய் நித்தராய் நிகழும்
வடிவுடை வர்னோ ரத்திரு மலைமேன் மன்னுவர் சராசர மாகிக்
கொடியனென்செடியார்யாக்கைகொண்டதன்மேலேறுதற்குறுவதோகூறாய்.

என்றெனை யாண்ட வுடையவ ருரைப்ப விறைஞ்சினின் றெழிலனந்தாழ்வா
னன்றது செய்க தேவரீ ரேறு நற்றிரு மலைமிசை நாங்க
ளின்றள விருந்த பிழையெலாம் பொறுத்தி யேறிலோ மினியதில் யாருஞ்
சென்றுற மிதித்தற் கஞ்சுவார் நீயே செறிந்திடா யெனிற்றிரு மாலும்.

தொண்டரூ டாடாத் தலத்தினின் மாறன் றுகளறு சோடச கன்ம
மண்டரே செயினு மவன்கடன் ஞாலத் தளிமிக்க வமலனென் றறைந்தார்
தெண்டிரைப் பொருனைத் திருக்குரு கூரிற் றிருவவ தரித்தசீ மானுர்
கண்டுகொண்ணீயேயிறைவநானினக்குக்கழறலென்னென்றுறக்கழற. (நுஉச)

திருவுளத் தந்தத் திறமெலா முணர்ந்தெத் தேவருந் தொழுமெதி நாதர்
மருவிட வேண்டு மத்திரு மலைமேன் மன்னுசீர்த் தொண்டரோ டென்னப்
பொருவரு ஞானி பொருக்கென வெழுந்து புனிதநீ ராடியப் பொழுதே
யருமறை புகழுந் துவாதச நாம மணிந்தெழுந் தடிப்புளி யடியில். (நுஉரு)

தெண்டமிட் டேகித் திருமலை யாழ்வார் தம்மையுஞ் சென்றுற வணங்கிப்
புண்டரீ கத்துட் டிருமகள் கொழுநன் பொருவரும் வைகுந்த நாதன்
றண்டுழாய் முடியன் பாதபீ டத்திற் றடையறு பிரபத்தி பண்ணிக்
கொண்டணைந்தார்க ளேறுதல்போலக்* கோதறும் வேங்கடப்பொருப்பில்.

மன்னுசீ ரன்பிற் பிரபத்தி பண்ணி மறுவறு மிராகவன் றுணையாய்
முன்னுதித் திட்டார் பின்மிதித் தேறி மொய்த்தசீர்த் திருமலை மீதே
பன்னரு நெறியாய்க் கிடந்தநன் னிலையைப் பன்முறை கண்டுற வணங்கி
மின்னுநூன் மார்பர் சிந்தையுண் மகிழ்ந்து மெய்யெலாம் புளகம்வந் திளக.

வேறு.

ஒப்பார் மிக்கா ரில்லாத வுலக முண்ட பெருவாயன்
செப்பார் கருணைத் திண்வரையைத் திருந்த நோக்கி மனங்களித்திங்
கெப்பா லெவரு மனமருளு மெழிலார் மணிகள் பொருதுபுன
றப்பா தோடுங் கானுற்றைத் தமர்க ளோடு முறநோக்கி. (நுஉஅ)

வேறு.

ஆராத காதலன்பி னன்னனைய பொற்குவடு
நேராக வுறநோக்கி நிகரிறிருப் பரியட்ட†
சீராரும் பாறையினிற் சென்றனராங் கிவர்செல்ல
வேராரும் பெரியதிரு மலைநம்பி யெனுந்தூயோன். (நுஉகூ)

---

பாதேநாத்யாரோஹதி" என்கிறபடியே ஸ்ரீவைகுண்டநாத நியோகாத் முக்த
தனன் பாதபீடத்திலே யேறுமாபோலே' என்பது குருபரம்பராப்ரபாவ
க்கியம் † 'பரிவட்ட' என்றும் பாடம்

வேறு.

நாடிநாள் முகனும் விடமிடற் றவனு நான்மறை முனிவர்கள் குழுவும்
பாடிவா னவரும் பணிசெயும் பரமன் பங்கயச் செல்வியோ டிருந்து
சூடுநாண் மலரிற் கழித்ததும் விரும்பித் துய்த்ததிற் சேடமுந் தொண்ட
தேடிநாண் மலரிட் டிறைஞ்சிநின் றேத்துந் திகழெதி ராசருக் கெதிரே.

கொண்டுவேங் கடவன் குரைகழல் வணங்கிக் கோயிலான் புகுந்தனன் புகுதக்
கண்டவன் கழலின் மண்ணுறப் பணிந்து காதலோ டெழுந்தொரு மருங்கி
லண்டருந் துதிப்ப வெதிகளுக் கதிபர் நின்றன ராசறு நம்பி
புண்டரீ கக்கட் கருமுகி லளிப்பக் கொணர்ந்தவை புனிதருக் களித்தார்

பின்னையும் வணங்கி முந்தியி லந்தப் ப்ரசாதங்க ளாயுள புனிதந்
தன்னையு மேற்றுத் தொண்டரோ பாதி தாமுமாங் கருந்திய தவத்தி
யென்னையோர் பொருட்டாத் தேவரீ ரெதிர்கொண் டிவேதே யாங்கொரு சிறியோ
ரன்னையே யனையா யில்லைகொல் விடுதற்கென் றிவைநம்பியோ டறைந்தார்.

அப்படி யிராமற் கிளையவர் பகர வாசறு நம்பியு மன்பா
செப்பரு மிந்தத் திருமலை மீதிற் செறிவுன வீதிகள் பலவுந்
தப்பற நோக்கி நாடினேன் சிறியோர் தமியனை யனையராங் கில்லை
யொப்பிலா யென்று னெதிகளுக் கிறைவ ருருகிநைந் தங்கனே யொடுங்கி.

நின்றனர் பின்னு நம்பியை வணங்கி நிகரில்கல் வேலியி னருகே
சென்றவவ் வளவி லர்ச்சக ராதி திகழ்திருத் தொண்டர்கள் பலரு
மன்றெதிர் கொண்டாங் கிறைஞ்சின ரிறைஞ்சு மவரின்மு னிவர்பணிந் தெழுந்தாங்
கொன்றியமகிழ்ச்சி யுள்ளூற நிறைத்தா ருத்தமக்குழாங்கடற்சூழ. (ருஙச)

வேறு.

ஈசனருள் வைகுந்த நீள்வாச றணிலெய்தித்
தேசுபெறத் தெண்டமிட்டுத் திருக்கோனே ரிக்கரையா
லாசிலா வன்பரொடுஞ் சென்றணைந்தாங் கதிலிறங்கி
வாசநறும் புனலாடி மன்னுதிரு மண்காப்பும். (ருஙரு)

வேறு.

சீர்பெற வணிந்தத் திருமலை நம்பி திருவடி முடிமிசைத் தரித்தாங்
கார்வமிக் குடைய தொண்டர்க ளோடு மணிமணித் தோரணங் களிற்றண்
டாரணிந் தமரர் தொழுந்திரு வீதி நான்கினுந் தமரொடும் வலஞ்செய்
தேரணி சிந்தா மணிபக ரல்லைப் பகல்செய விலங்குமா மாடம். (ருஙசா)

அனைத்துநன் ஞான விரத்தின மயத்தாற் றகழவகை யங்கணு னோக்கி
வினைத்தொகை யறுத்தென் னுருயிர் காத்தார் விழிகளான் முகந்தனுபவித்து
நனைப்பெரு வளப்பூ மண்டபங் களையு நவையற வனுபவித் தாங்கே
நினைப்பருந் தேனேய் பூம்பொழி லென்று நிகரிலா வமரர்க ளிறைஞ்சும்.()

வேறு.

தேனார் பூஞ்சோலைகளென்றுந் திருமொய்த் தொளிர்சோலைகளெ[illegible]
மானா தென்றுங் கோற்றேன்பாய்ந் தழகார் குளிர்சோலையென்று
நானா விதத்தா லாழ்வார்க ணவிலும் பொழில்கள் பற்பலவுந்
தானாய் மன்னுந் தமர்களொடுந் தலைவர் நோக்கி யனுபவித்தே. (௫௩௮)

திருப்பூ மரங்கள் சண்பகங்க டொடக்க மாகச் செறிவனவும்
விருப்ப மோடாங் குறநோக்கி விமல னுறையும் வேங்கடத்தின்
பொருப்பின் மன்னுந் தெண்ணறுநற் பொருவில் சுனைகள் பற்பலவு
நெருப்பிற் செந்தீ யொத்துமலர் நிகரில் சேறூர் தாமரையும். (௫௩௯)

நோக்கி மகிழ்ந்தாங் கச்சுனையி னுவல வினிய திருமொழியை
வாக்கிற் பயிற்றுங் குருகாதி மன்னும் பகையை யிருதாளாற்
றாக்கிப் பறக்கும் பறவைகளைத் தமர்க ளோடுங் கண்டுவந்தா
ராக்கி யுலகம் பதினாலு மாண்டா னனுச ராயினார். (௫௪௦)

வேறு.

ஆங்கதற்பின் றென்னாதெ னாவென்ன வளிமுரலும்
பாங்குறுநற் பாடலையுங் கேட்டுவந்து பயனறிய
வோங்குநிலங் கோட்டில்வைத்த வும்பனைச்சென் றடிவணங்கித்
தாங்குமவா வறச்சூழ்ந்தான் றிருவாச றனைவணங்கி. (௫௪௧)

'ள' மற்றதற்பி னுட்புகுந்து மாசிலா வத்தாணி
நற்றவஞ்சேர் திருப்புளியை நன்றாக விழுந்திறைஞ்சி
யுற்றறிவாற் சீபீடத் தடியணைந்தாங் குறவணங்கிக்
கற்றவரோ டேயமுனைத் துறைவரர்தங் கழல்வணங்கி (௫௪௨)

வேறு.

சீரார் திருச்சண் பகமன்னுந் திருவா சலிற்புக் குறவணங்கி
யேரார் சேனை முதல்வனைச்சென் றிறைஞ்சித் திருவேங் கடத்தரியைத்
தாரார் மார்ப ருறவணங்கித் தமர்கள் புகழத் தம்மாவி
நீரா யுருகச் சென்றதற்பி னிகரி லாத பலவளத்தால். (௫௪௩)

ஒப்பி லாத திருமடைப்பள்ளி தன்னை யுவந்திறைஞ்சிச்
செப்ப மிக்குற் றொளிர்திருமா மணிமண் டபத்தைச் சென்றிறைஞ்சி
யப்பன் றிருவேங் கடமுடையா னலர்மேன் மங்கை யுடனின்றுந்
தப்பா துறையும் விமானத்தைத் தலையால் வணங்கி வலஞ்செய்தே. (௫௪௪)

உள்ளங் கரைய வுட்புகுந்தன் றலக முண்டான் றனைநோக்கிப்
பள்ள மடையி னுடைபுனல்போற் பத்தி யாய பேரன்பின்
வெள்ள மடுப்ப வுடையவரும் விளங்கு ஞான பரவசராய்க்
கள்ளங் கடிந்தா ருடன்வளருங் கருணைத் திருவேங் கடத்துறையும். (௫௪௫)

---

‘யமுனைத் துறைவர்’ என்கிற திருப்பூமண்டபத்தையும் ஸேவித்து’ என்பது குரு பரம்பராப்ரபாவ வாக்கியம்.

சீரார் நாற்றே ளின்னமுதே சிவனு மயனுங் காணாத
காரா ரமுதே செங்கனிவாய்க் கமல நயனக் கருமணியே
கூரா ராழி சங்கினையோர் கோவுக் களித்த கோவிந்தா
நாரா யணனே யெவ்வுயிர்க்கு ஞானங் கொடுக்கு நலச்சுடரே. (௫

என்ன வொழிவில் காலத்தை யெடுத்துக் கூறி* யாங்கதற்பின்
மன்னு முலக முண்டபெரு வாயன் றனையும் வழுத்தியதி
லன்னை யலர்மேன் மங்கைதனை முன்னிட் டடிக்கீ ழுறப்பணிந்து
தன்னை யனையார் சரண்புக்குச் சாற்றுங் கமல மலரடிகள். (௫௪௭)

ஆதி யாகச் செம்பொன்முடி யளவு நோக்கி யனுபவித்து
நீதிக் கடலா முடையவரு நின்று கரைந்து நெக்குருகிப்
பேதி யாத தொண்டரொடும் பெற்றே மேயிப் பெரும்பேறென்
றோதிக் கண்கள் புனல்சொரிய வுள்ளங் களிப்ப வுவந்தாடி. (௫௪௮)

நாவாற் பாடி மனத்தாலே ஞானச் சுடரை யுள்ளிருத்திப்
பூவார் கழலைப் பின்னுமுறப் பொருந்த நோக்கி விழுந்திறைஞ்சி
யோவா தன்ப ருடனெழுந்தாங் குருகிக் கசிந்த பேரன்பாற்
றேவா காத்தி யென்னுயிரைத் திருவே காத்தி யெனச்செப்பி. (௫௪௯)

நின்று திருமஞ் சனகால நிகரி லமுது செய்கால
மன்று சென்ற தொண்டரொடு மாங்கே கூடி யனுபவித்து
நன்றி சேரு மனத்தினராய் ஞான மிகவு முடையவரா
மொன்று மிந்தப் படியீதி லோங்கு பரம பதமீதே. (௫௫0)

என்ன மறைக ளாழ்வார்க ளிசைத்த படியே கண்டுய்ந்தேன்
மன்னும் விண்ணோர் வெற்பிதுவா மதனு லிதனின் மன்னுமவ
ருன்னு நித்தர் முத்தரென வுரைக்கும் வேத மதனாலே
துன்னு மழுக்குச் செ யாக்கை சுமந்து நாமு மிங்கிருத்தல். (௫௫௧)

தக்க தன்றன் றுடனிழியத தலைவர் நினைந்தா ரதுகண்டு
தொக்க தொண்டர்க் கதிபதியாய்த் தோன்றித் துளங்காச் சுடர்விளக்கை
யொக்கு நம்பி யுடையவரை நோக்கி யுவமை யில்லாதீர்
மக்க டேவ ரெனினுமிந்த மாலை யிறைஞ்ச மன்னுமவர். (௫௫௨)

ஏதுந் தினங்க ளொருமூன்றிங் குறைவர் முனனை விதியுமதாஞ்
சோதி யான சுடரனையீ ரென்றான் றலங்கு மெதிராசர்
தீதி யிலது நினையுனுமங் நிலையி னிறுத்த னின்கடனு
மாதி மாதா வப்படியே செய்கின் றேனென் றவர்பக

* 'எத்திக் கூறி' என்றும் பாடம்.

தினங்கண் மூன்று மலசலங்கள் விடலா காமை சிந்தித்தே
யனங்கன் றிறலை யறமாய்த்தா ரொன்று மமுது செய்யாதே
மனங்கொண் ஞானச் சுடர்விளக்காய் மன்னு திருவேங் கடமுடையா
னினங்க ளாய தொண்டரொடு மிருந்தார் பொருந்து மெதிநாதர். (௫௫௪

வேறு

ஆகந்தற்பின் னுலாநா ளன்பரொடு நம்பியொடு
மோங்குதிரு வேங்கடத்து ளும்பனையுந் தொழுதேத்திப்
பூங்கமலக் கழல்பணிந்து பொன்னுழி சங்கிறைவ
தாங்குதியென் றவற்களித்துத் தமரோடும் விடைகொண்டே. (௫௫௫

வேறு.

மருவரு மயோத்தித் தசரத ராமன் மாக்கதை தன்னைவான் மீகி
பொருவற வுரைத்த படியெலா மடியேன் புந்தியி லுணருமா றுரைத்தி
கருமுகில் வண்ணற் கினியகா தலனே யென்றிவை கட்டுரைத் திட்டுத்
திருமலைநம்பிதிருவடி தன்னைத்திருந்துற விறைஞ்சிநின் றுரைப்ப. (௫௫௬

வேறு.

ஒப்பெவரு மில்லாத நம்பியந்த வுரைகேட்டாங்
கப்படியே செய்கின்றே னுடவந்தா ரளித்தபடி
யிப்பொழுதே திருப்பதியி லிழிந்தாங்கே நீரிருமின்
றப்பறநா னத்தலத்தில் வருகின்றே னறவமிக்கீர். (௫௫௭

வேறு.

என்றுரைத் தருள வுடையவ ரந்த வினையிலா னிணையடி யிறைஞ்சி
யொன்றிய கருணைத் திருமலை மீதி லோங்குசீர்ச் சராசரங் களையு
நின்றுநின் றிறைஞ்சிச் சென்றுசென் றந்த நிகரில்கீழ்த் திருப்பதி தன்னி
லன்றுசென் றணைந்த தொண்டர்க ளோடு மாங்கிருந் தருளின ரந்நாள். (

வேறு.

மற்றொரு தினத்தி னம்பி மாசிலா ரருகின் மன்னிக்
கொற்றவ னயோத்தி வேந்தன் குமரனாய்ப் பிறந்து தீவாய்ச்
சிற்றவை சொல்லைப் பேணுந் தேவனார் சரிதை முன்னாட்
கற்றசீ ராள வந்தார் கட்டுரைத் திட்டவெல்லாம். (௫௫௯

உடையவர்க் கருளிச் செய்தா னுடையவ ரவற்றை முற்றுந்
தடையற வுணர்ந்து நம்பி தாளிணை சார்வ தாக
வடைவொடு வாழு நாளி லாங்கவன் றுளிற் பாங்கா
மடையொரு கணமு மாறாப் பத்தியின் மன்னு வோனாய். (௫௬0

ஓதுமா கமங்கள் முற்று முணர்ந்துமுன் னுமையோர் பாகன்
பாதமே துணையாய் நாளும் பரிந்துகா ளத்தி தன்னிற்
கோதற மன்னு நாளிற் குருகைக்கோன் றிண்ணன் வீட்டில்
வேதசா ரத்தை மேலோர் விளம்பிட விரும்பிக் கேட்டே. (௫௬௧

வேறு.

தம்பா லிருந்த சைவமதத் தலைமை தன்னை யறவிட்டே
னும்பா காத்தி யெனத்திருமா லோங்குஞ் சமயத் தாட்புகுந்து
வம்பார் பொழில்சூழ் திருமலைநன் னம்பிக் குவந்த குருமானு
மெம்பா ரென்னுந் திருநாம முடையா னொருவ னிணையில்லான். (ருசுஉ

வேறு.

ஆங்கவ னம்பி கைங்கரி யங்க ளனைத்திற்கு முரியவ னொருநாள்
பாங்குட னம்பி கண்வளர்ந் தருளும் படுக்கையை விரித்ததன் மீதே
யேங்கிடா தேறிக் கண்வளர்ந் தனனவ் வியற்கையை யெம்பெரு மானர்
பூங்கமலச்சீர்க் கண்களானோக்கிப்புந் தியிற் பொருமிநின் றென்னே.(ருசுஙு)

தேசிகன் றுயிலும் பூவணை மீதிற் செறிந்திவர் துயின்றன ரிவர்த
மாசுறு பரிமாற் றத்தினை யென்னென் றறைகுவ தினியென வஞ்சி
மாசிலா நம்பி யருகணைந் திறைஞ்சி மற்றவன் செய்தமை யுரைத்தா
ரீசனர்க் கினிய நம்பியெம் பாரை யீங்கழை விரைவிலென் றிசைத்தான்.()

சென்றவ ரெம்பார் தனைக்கொணர்ந் தந்தத் தேசிக னிடத்தினில் விடுத்தா
ரன்றவ னோடு நம்பியும் பகர்வ னுசிலாக் கோவிந்தப் பெருமா
னின்றெமக் கானய் போனுநீ மைந்தா யான்றுயில் படுக்கையி லேறி
யொன்றுறத் துயின்று யாங்கதிற் பயனென் பெற்றனை யுரைத்திடென் றுரைத்தான்.

அத்திறஞ் செய்து நான்பெறு பலனு மருநர கென்றன னமல
னித்திற மறிந்திங் கிருந்தநீ யதனை யெதன்பொருட் டெண்ணியோ செய்தாய்
பொய்த்திற மில்லா யென்றன னெம்பார் பூவணை மீதினீ யமர்ந்தான்
மெய்த்திற முடையா யுறத்துத லூர்தல் கடித்தலவ் விரோதிக ளின்றி. ()

ஆசறு நீயுந் துயின்றிடப் பெற்று லடியனேன் றனக்கிரு நரகந்
தேசிகா வமையு மென்றுநின் றெம்பார் செப்பிட வுடையவ ரதுகேட்
டீசனு ரளித்த நினைவிவர்க் கிருந்த திறத்தினை நினைப்பரி தென்றார்
மாசிலா நம்பி காளமவ் வரையின் மைந்தனை மகிழ்ந்தெடுத் தணைத்தான். (ருசுஎ)

வேறு.

ஈங்கிதோ ரதிகா ரந்தா னிருந்ததே யந்தோ வென்னத்
தீங்கிலா வெதிக ளுதர் சிந்தையில் வியந்து பின்னு
நீங்கிடா திருந்து நம்பி நினைவுறு பொருள்கண் முற்று
பாங்குற வுணர்ந்தவ் வூரிற் பலபக லிருந்து வைகி. (ருசுஅ)

திருமலை நம்பி செய்ய சேவடி முடிமேற் சூட்டி
யொருபகற் றெண்ட ரோடு முற்றுநின் றுவந்து நோக்கிக்
கருமுகில் வண்ணன் றங்குங் கடிபொழி லரங்கந் தன்னின்
மருவிட வேண்டு மீதி விடையென வணங்கி நின்றார். (ருசுகூ)

நன்றெனா நம்பி யந்த நவையிலார் தம்மை யின்றே
சென்றுவாழ்ந் திடுகெ மைந்தா திருவரங் கத்தி னின்பா
லொன்றுநா நல்கப் பெற்றே மில்லையென் றுருகி நைந்தா
னன்றது கேட்டு நின்ற வன்பரு மருளிச் செய்வார். (௭0)

நீசனேற் கொன்று நல்க நினைவுள தாகி லெந்தா
யாசிலா வெம்பார் தம்மை யருளுதி யடியேற் கென்றார்
தேசிகர் திலத மாய திருமலை நம்பி யந்த
மாசிலான் கையைப்பற்றி வழங்கினன் கொடுபோ வென்றான். (௭௧)

வேறு.

உடையவரு மெம்பாரு மோங்குசீர் முதலிகளு
மடைவினொடு நம்பிதனை யகங்குழைய விழுந்திறைஞ்சி
விடையென்ன வவர்போதி வித்தகனே யெனவுரைப்பப்
புடைமருவுந் தொண்டரொடும் புகழ்க்காஞ்சி நகர்புக்கார். (௭௨)

வேறு.

அத்திருப் பதியிற் பேரரு ளாளர் தம்மையு மாசிலா நிலைசேர்
மெய்த்தவ முடைய திருக்கச்சி நம்பி தன்னையும் விழுந்துற வணங்கி
யுத்தம குணத்தார் விடையெனப் பெயர்ந்தாங் கோங்குசீ ரரங்கமாநகரிற்
பத்தர்க டுதிப்பப் புகுந்தன ரலர்ந்த பங்கயக் கண்ணனுக் கினியார். (௭௩)

அப்படிப் புகுந்த வன்பரை யரங்க நகருறை முதலிகள் யாருந்
தப்பற வணங்க வவர்கள்சே வடியிற் றாழ்ந்துற விறைஞ்சிநம் பெருமா
ளொப்பருங் கமல மலரடி யிறைஞ்சி நின்றன ருவமையொன் றில்லார்
செப்பருந் தொண்டர் பலரொடு மெதிக டலைவரைத் திருவினை யகனார். ()

வம்பவிழ் கமலக் கண்களா னோக்கி மாசிலா வெதிகணா யகனே
நம்பெரு வட்க்கு வீடணைந் திறைஞ்சி நண்ணினை கொல்லென நயத்தாற்
செம்பவ ளத்தம் வாயினால் வினவத் தேவர்க டேவபொய்ப் பாவை
யின்புற வாட்டு மியந்திரி நீநா னியந்திர மெனவிசைந் தமையால். (௭௫)

என்செய் துளவோ வின்றவநீ யிசைவித் திட்டன படியெலாம் பெற்றே
னஞ்சினுங் கொடிய வைம்புலன் களையு நவையொடு நாடொறு மருவும்
வஞ்சநெஞ் சினையு முனதுநீ ளருளில் வைத்தநின் செயலலா துரைக்கிற்
பொன்செய்நீண் முடியாய் பின்னுமோர் செயலு முளதுகொல் புகலெனப்பணிந்தார்.

வேறு.

அப்படி நிகழு நாளி லதளங்க நாடாள் வானுஞ்
செப்பமார் நீதி மன்னன் றிருவுறை யூரின் மன்னித்
தப்பற வாழ வன்னான் றனக்குறுங் கண்ணனைச் சேவித்
தொப்பற மன்னும் பிள்ளை யுறங்காத வில்லி தாதர். (௭௭

மருமக்க ளாகி யுள்ளார் வண்டருஞ் சொண்டர் தாமு
மொருவர்க்கே யொருவ ரொப்பா ரன்றியெப் பொருவ
ரிருவர்க்கு மன்னன் றன்பாற் சேவக மிடுவித் தாங்கோ
ரிருவொக்குங் கண்ணி தன்பாற் சென்றனர் சிந்தையோடும். (௫௭௮)

மன்னுவா ரவர்க்கு மந்த மைந்தர்க்கு மாதந் தோறுஞ்
சொன்னமா யிரங்கள் கைக்கு மெய்க்குமோர் துகளி லாதீர்
முன்னமே பெறுமென் றீய முறையினிற் பெற்றுக் கூறு
மன்னமென்னடையாள் கண்ணி லகப்பட்ட முதிர்ச்சியாலே. (௫௭௯)

வேறு.

மன்ன னிடத்து மமரிடத்து மற்றுந் தொழில்கள் பயிலிடத்து
மின்னி னிடையா ளுடன்செறிந்து மீள்வார் பிள்ளை யதிலொருநா
ளன்னந் திகழு முறையூர்நின் றூசி லாத வெள்ளறைக்குக்
கன்னங் கரிய குழலியொடுங் கதிரோன் மதியங் காண்பளவில். (௫௮0)

போனார் பொன்னி நதிமணலிற் பொருந்துஞ் சூடு பொறுதந்த
மானார் விழியா ளடிகன்ற மாதின் றலைவ ரதைநோக்கித்
தானுங் குடுத்த துகில்போட்டுத் தைய னடப்பா யிதிலென்னத்
தேனார் குழலா ளதினடந்து சென்றா ளதனைத் திருக்கண்ணால். (௫௮௧)

மன்னு மரங்கத் தினிதமரு மாசி லாத வெதிராசர்
பொன்னி நதியிற் புனலாடப் புகுந்தா ரந்தப் புதுமையினைப்
பன்னுந் தொண்டர் தமைநோக்கிப் பரிவா னோக்கி யிதுகாண்மி
னென்னப் பிள்ளை யுறங்காத வில்லி தாதரியற்கையினை. (௫௮௨)

காட்டித் தாநீ ராடாதே கன்னி தனையக் காதலருங்
கூட்டி யருகில் வருமளவுங் குறித்து நின்று வாருமென
நீட்டிக் கூவி யவரணைய நெடுமா லடியா ரொடுமேவரை
வீட்டின் மூட்டவேண்டுமென வெண்ணி விறல்கொள்வேலோனை. (௫௮௩)

வேறு.

ஆங்குநீ யுடுத்த துகிலினைக் களைந்திவ்* வாயமழு யடியிடக் கொடுத்தா
யேங்கிமற் றிவளும் பொடிசுட நீயின் றிடுதுகின் மிசையடி யிட்டா
ளோங்கிய குணத்தா யெங்குளா யென்றா ருடையவர் பிள்ளையு மருளைத்
தாங்கிய வெதிக டலைவநீ ரெம்மூர் தக்கசீர் வெள்ளறை யாகும். (௫௮௪)

என்றுரைத் திடலு மத்திறங் கேட்ட விராமனுக் கிளையவ ரிப்போ
தென்றிசை நின்று வருவதென் னென்னச் சேவகன் றிகழுறை யூரி
லொன்றுமன் னவனுக் காங்கவன் றன்னைப் பணிந்தெம தூர்புகும் வண்ண
மின்றியா னணைந்தே னென்றன ரிறைவ ரிவளுடன் வருவதென் னென்றார்.

* 'துகிலினைக் கழித்து' என்றும் பாடம்.

மண்ணழுக் பெறப்பிறந்து மறையனைத்து முணர்ந்தோயிப்
பெண்ணழுங் பெரிதெனினும் பேதையேன் பிறைநுதலி
கண்ணழகி லகப்பட்டுக் கணமுமக லேனென்றார்
விண்ணழகு பெறவிலங்கை யொன்னலரை வென்கண்டார். (நஅசு)

வேறு.

அருளிச் செய்வா ரிவள்கண்ணி லழகார் கண்கள் கண்டிடிலிம்
மருளிற் படிந்த சிந்தனைநோய் மாறு மோகொல் சொல்லென்னச்
சுருளுற் றிருண்ட கனங்குழலாள் விழியிற் றுவக்கைத் துடைப்பதற்கோர்
பொருண்மற் றுலகில் யாங்காணே மென்றார் பிள்ளை பூதூரில். (நஅஎ)

வந்தார் காட்டு கின்றேனுன் வருதி யென்ன வுடன்கொடுபோ
பிந்தா காண்டி யெனவரங்க ரிணையி லிணைத்தா மரைக்கண்ணைச்
சிந்தா வறிவின் மெய்ஞ்ஞானி திருந்தக் காட்டக் கண்டிறைஞ்சி
பந்தோ விதனுக் கவள்கண்க ளிணையாங் கொல்லென் றகங்குழைந்தே. (

பெரிய வாய கண்களெனைப் பேதஞ் செய்த வெனமுன்னம்
விரியும் பொழில்சூ ழுறையூரின் ஸ்ரீமலன் பகர்ந்த படிபிள்ளை
கரிய குழல்கள் விழியழகிற் கலந்த வாசை யனைத்தினையுந்
திரிய மீட்டுத் தென்னரங்கன் றிருக்கண் ணழகிற் செயலழிந்தார். (நஅகூ

வேறு.

அப்படி நின்று செயலழிந் துருகு மன்பரை யுடையவர் நோக்கி
யெப்படி யந்த மடக்கொடி கண்ணோ விவர்நய னங்களோ வழகிற்
செப்புதி சிறப்பின் மிக்கதென் றுரைப்பத் தேவரீர் திருநய னத்துக்
கொப்பவோ பிளை சாரியகண்களும்பனே யெனப்பிள்ளையுரைத்தே. (நகூ0

உடையவ ரடியிற் சென்றுற வணங்கி யுத்தம வெணையங்கி கரித்தி
தடையற வென்ன நின்றுற விரப்பச் சாற்றிய வெதிகளு யகரு
மடைவுறு மாது தன்னொடு மிருத்தி யணியரங் கத்திலப் படியே
கொடைநிகழ் கரத்தா யெம்மொடுங் கூட்டிக் கொள்ளுது மின்றெனக்கூறி

மடத்தினிற் கொடுபோ யாங்கவர் தமக்கு மாதினல் லாளுக்கு முடனே
திடத்தொடு மிலங்குந் திருவிலச் சினையுஞ் சீர்பெற வளித்துயிர்க் குறவாப்
படத்தர வணையான் றுயத்தையுங் கொடுத்துப் பண்டுபோ லரசனைச்சேவி
திடக்கட வாய்நீ தடக்கைவா ளேந்தி யென்றன ரிதற்கென்னு னிசைக்கேன். (நகூஉ

வேறு.

முன்ன மடிக்துப் பறித்திட்ட முதல்வன் கலியன் றிருமுன்பே
மன்னு கமல மணவாளன் வந்து தோன்றி யுறநோக்கி
யின்னு மடித்துப் பறியென்ன விசைத்தா னவனுக் கிவருமொரு
பின்ன மில்லாப் பின்னுகிப் பிறந்தா ரென்றாற் பேசாரோ.

வேறு.

அப்படி யருளிச் செய்தாங் கத்திரு நகரி லின்றே
செப்பரு மடமொன் றாக்கிச் சேயிழை யாளை யின்றே
தப்பற விருத்தி நீயு மன்னவன் சரணந் தாழ்ந்தங்
கொப்பரு நிலையாய் வாழ்தி யெனவுரைத் துவந்தா ரெந்தை. (ருகூ

வேறு.

ஆசி லாத தேசிகனா ரருளிச் செய்த படிபிள்ளை
தேசு பொலிந்த திருவரங்கத் திருந்து திருந்தத் திறன்மன்ன
னேச மழுந்தச் சேவித்து நினைவை முற்று மெதிராசர்
வாசக் கமல மலரடிக்கீழ் மன்ன வைத்தே வைகினரால். (ருகூ

வேறு.

ஆங்கதி லொருநாள் வண்டார்சொண் டரையு மாசறு முடையவ ருடைய
பூங்கழ லிணையி லாச்சரிப் பித்துப் பூபதி சேவகத் தொழிலுக்
கோங்குமூவர்க்குங் கொடுத்திடு முடைமை யனைத்தையு முடையவர் திருமு
பாங்குட னமைத்துப் பணிந்தனர் பிள்ளை பழிப்பிலா வெதிகளு யகரும்

ஆசையொன் றேடுந் துவக்கற விருந்தாங் கணியரங் கத்திலே மகத்தின்
மாசற மாது கரமுவந் தருந்தி வாழுவார் மற்றிவ ருவந்து
நேசமோ டளித்த திரவிய மதனை நீக்குதல் பழுதென நினைந்தாங்
கீசனார்க்கினியதொண்டரையமுதுசெய்வித்தாங்கெழுலகிறைஞ்ச. (ருகூ

மன்னினார் முன்னாட் சுமித்திரை யிடத்தில் வந்தவ தரித்தவர் மன்னன்
முன்னுறவளித்த திரவிய மனைத்து முறைமையாற் பிள்ளையுங்கொணர்ந்
பன்னரும் பகலு மளித்திட வதனாற் பாகவ தக்குழா முவந்தாங்
கின்னமு தருந்த வாழ்ந்தன ரவணம் வாழுநா ளெதிகளுக் கிறைவர். (ருக

வேறு.

பிள்ளை யுறங்கா வில்லிதாதர் பேரா யிரத்தா னினிதமரு
முள்ள நோக்கி யன்புமிகுந் துருகுங் கருணை யானந்த
வெள்ள மாறா தருவிசொரி விழியை நோக்கி விட்டகன்ற
கள்ள நோக்கி நாடோறுங் கசிந்த சிந்தை யடையவரும். (ருகூ

நிலத்தி னடந்து காவிரியி னீரா டத்தாம் போம்பொழுது
குலத்தி னுயர்ந்த சாத்தினபேர் கோக னகக்கை பிடித்தேகி
நலத்தின் மிக்கார் புனலாடி மீளும் போது ஞானத்திற்
புலத்தின் மிக்க பிள்ளை திருக் கையைப் பிடித்தே போதுவரால். (சுO

வேறு.

ஓதிய பலநா ளிந்த வொழுங்கவ ணிகழக் கண்டு
சாதியிற் றலைமை யாய தலைமையந் தணர்க ளெல்லா
நீதியிவ் வுலகுக் கெல்லா நிறுத்திய வெந்தை யார்க்கும்
வேதியர் பரிசந் தன்னின் மிக்கதோ வுறங்கா வில்லி. (சுO

வேறு.

எண்ணெய்க் கச்சை யழுக்குடம்பங் கெடுத்துக் கட்டுந் தொப்பராம்
பெண்ணைப் பிரியா வுள்ளன்பு பெருநீர் சூழ்ந்து கிடந்திடுமிம்
மண்ணைப் பொருளென் றறவாழு மன்னன் சேவை வருந்தொழில்கள்
தண்ணை யருளி னுயிர்செகுக்கும் வாளைப் பிரியாக் கரப்பரிசம். (௬௱௨)

என்ன நினைந்து சாத்தினபே ரெல்லா மொன்று யுடன்கூடிப்
பின்ன மின்றி யுடையவர்பாற் பேச வஞ்சிச் சிலபகல்கண்
மன்ன வொருநாட் கந்தாடை முதலி யாண்டான் வந்திறைஞ்சி
யன்ன மூர்த்தி திருத்தாதை யாவி யன்று யெனப்போற்றி. (௬௱௩)

நின்று னவண நின்றவனை நிகரி லாத வுடையவரு
மொன்று கேட்பான் போனின்றாய் முதலி யாண்டா னுரையென்றார்
நன்று கேளென் னுயிர்நாதா நலத்தான் மிகுந்த வேதியரா
யின்றுன் றொண்ட ராயுள்ளா ரிலங்கு திருக்கை தரநீயும். (௬௱௪)

வேறு.

நீராட வெழுந்தருளி நீமீள வருமளவிற்
பேராசை யுடைத்தொண்டர் பின்முன்வரப் பிள்ளைகரந்
தாராநின் றுனக்குச் சாத்தாதா னெனவொன்று
மோராதே நீபிடித்து வருதிறத்தை யுரையென்றான். (௬௱௫)

வேறு.

அத்தி றத்தைக் கேட்டருளி யாசி லாத வுடையவரும்
பத்து வார்த்தை யெடுத்தங்ஙன் பழுதி லாத வாண்டான்சீர்ச்
சித்தந் தெளியக் கட்டுரைத்தார் சிலநா ளவணஞ் சென்றளவி
லொத்திவ் வுலகை யாண்மன்ன னுறையூர் நின்று மொருநானில் (௬௱௬)

ஒப்பி லாதான் வேட்டைக்கங் கொருநா ளேக விடம்வல்மூந்
தப்பொன் றில்லா வண்டர்சொண்டர் சாரப் பிள்ளை பின்செல்ல
வப்போ தவர்கள் முன்னாகச் சமணர் கோவி லாங்கிரண்டு
மிப்பார் தன்னி லெழுந்தோங்க விறைவ னதனை யறிந்திருந்தே. (௬௱௭)

மறைத்துத் திருமால் கோயிலிது வணங்கும் வண்டர் சொண்டரென
நிறைத்த மெய்ய ருடன்கூற நீண்ட விமானத் தரிகண்டாங்
குறைத்த நிலைமை மைந்தர்களு முடனே பணிந்தா ரப்பொழுதிற்
பொறைத்திண் பாராண் மன்னவனும் பொய்பொய் சமணர் புகறெய்வம்.()

தன்னைத் திருமா றிருத்தொண்டர் தாழ்ந்து பணிந்தா ரெனச்சிரித்தா
னன்னை பிதாவு மரியன்றி யறியா மைந்த ரதுகேட்டு
முன்னை வினையோ முடித்ததெனை முடிந்தா ராவி முற்றுமற
மன்னைச் சூழ்ந்தா ரெழுந்திருமி னென்றார் மைந்தர் மாய்ந்ததிறம். (௬௱௯)

DR U V S IYER LIBRARY.
BESANT NAGAR, MADRAS-90



அறியா நிலையார் கட்டுரைப்ப வவர்க ளொழாத படிகண்டு
நெறியார் மன்ன னருகணைந்து நின்று நோக்கி யுயிருடம்ன
பிறியா நிற்கும் படிகண்டு பெருக வருந்தித் துன்புற்று
வெறியார் துழாயான் றனக்கினிய பிள்ளைக் கிதனை விளம்புமென. (கூக௰

ஆய தொழில்க ளிவைமுற்று மறிந்தா னொருவன் றனைவிடுப்பத்
தூய சிந்தை யுறங்காத வில்லி கேட்டுத் தோமில்லா
மாயன் றமர்க ளடிப்பொடியே மற்றிம் மைந்தர் தமைமாய்க்கு
நோயை யரியு மருந்தென்ன நோக்கி நின்றந் நோய்தீர. (கூகக)

வேறு.

தன்னுடைப் பாதப் போதாற் றடவினர் கேசாந் தங்கண்
முன்னுட லாவி நீங்க மோகமுற் றடங்கு மைந்தர்
மன்னனுங் காணத் துண்ணென் றெழுந்தனர் மாலை வாழ்த்தி
யென்னவர் திறத்தை வாக்கா லிசைப்பதிங் கெளியே னந்தோ. (கூகஉ)

அரசனத் திறத்தை நோக்கி யஞ்சிநின் றுவி வாடி
யுரைசெயத் தகாதின் றிந்த வுத்தமர் பரிசென் றுன்னி
நிரைசெயு மூவர் தம்மை நேர்பெற நோக்கி நீங்கள்
புரையுறு மெம்மைச் சேவித் திடுதலிப் பொழுதே பூரை. (கூகந

வேறு.

ஏதங் கடிந்த திருவரங்கத் திருமி னின்றே யுங்களுக்கு
மாதந் தோறும் பெறுமுடைமை மாசி லாதீர் வரவிடுவேன்
வேத முடிவை யுணர்ந்துவர்கா ளுடனே சென்று வீற்றிருமென்
றோதுந் திறத்தை மூவர்களுங் கேட்டாங் குடனே புறப்பட்டு. (கூகச)

வேறு.

பொன்னரங் கத்திற் புகுந்துடை யவர்க்கப் பூபதி பகர்ந் னைத்து
முன்னுற வுரைத்தாங் குடையவர் வியப்ப மூண்டநோ யனைத்தையுந் தப்பி
மன்னினர் மாத மொன்றவண் செல்ல மற்றையம் மாதத்தில் வரும்பொன்
மின்னுமா மௌலி வேந்தனுங் கொடுத்து விட்டனன் விரைவினிற் கொணர்ந்தார்.

கொண்டுவந் தவர்கள் பிள்ளைமுன் னந்தக் குறைவறு தனத்தைவைத் திறைஞ்சப்
பண்டுபோற் பிள்ளை யத்தனந் தன்னைப் பரமதே சிகர்முன்பில் வைப்பக்
கண்டிவை யாகா வினியென வெதிகள் காவலர் பகர்ந்தன ரதுகேட்
டண்டர்நாயகனேயெ தன்பொருட்டிதனையகற்றுதலுரையெனவறைவார்.

மாசிலா நிலையீ ரிராசசொம் மாமோ மற்றுநம் மிடத்திலென் றுரைப்பத்
தேசிகா முன்னம் வந்தபொன் னெல்லாந் தேசமாண் மன்னன தன்றே
சீசியென் றிதனை யிப்பொழு திகழ்ந்த திறத்தினைச் செப்புதி யென்று
ரீசனுக் கினிய வெதிகளுக் கிறைவர் கேளுமென் றிசைக்கலுற் றனரால்.

முன்பெலா நீங்கண் மூவரு மன்னன் மொழிந்தன பணிசெய்து முடிப்பப்
பின்பவ னகப் பெறுந்தனம் வேர்ப்பு வழித்துறப் பெற்றனீ ரதனை
யன்புமிக் குடைய தொண்டருக் கதனைக்கொண்டுநா மமுதுசெய்வித்தோந்
துன்பகன் றிருந்தீ ரிப்பொழு துமக்கு மிதுக்குமென் றெரந்தநீர் சொல்லீர்.

ஏன் றுரைத்தருள வொக்குமென் றிறைஞ்சி யெய்தினர்தம்மொடுந் தாங்கள்
சென்றுமன் னவன்முன் றனத்தைவைத் தெங்க டேசிகன் றிருக்கையாற் றொடாதே
யின்றிதை யிகழ்ந்தா னெமக்குமீ தாகா திராசசொஞ் சேவியா தெடுத்தல்
குன்றனதோளாய்பிழையெனவுரைப்பக்கொற்றவன்மற்றவர்க்குரைப்பான்.

என்னைநீ ரின்றுங் கும்முடன் கொடுபோ யிருந்துநுந் தேசிகர் திலதந்
தன்னைநான் வணங்கும் படியொரு சகாயந் தருதிரோ தவமிகுந் துயர்ந்த
நன்னலமுடையீரென் றுமன் னுரைப்பநவையிலார்வருகெனக்கொடுபோய்த்
தென்னரங் கத்துட் புகுந்தெதி ராசர் திருமுனில் விடுத்தனர் திறல்வேல்.

அரசனும் வணங்கி நின்றன னெதிகட் கதிபரு மரசனை நோக்கி
விரைசெய்தார் மௌலி வேந்தநீ நம்பாற் புகுந்தமை தன்னையும் விளங்க
வுரைசெயென் றுரைப்ப மன்னனு மிறைஞ்சி யுத்தமர் தம்மிலுத் தமனே
புரையற நினக்கின் றடிமையா யுய்யும் பொருளினை நினைந்துபோந்தனனால்

நன்றெனவந்த வரசனுக் கிரங்கி ஞானநா யகரருள் செய்து
வென்றியந் திகிரி யரங்கனுக் கந்த வேந்தனைக் கொண்டுபல் லூர்க
ளன்றுற விடுவித் தன்பர்கள் புகழ வாசறு திங்களு நாளு
மொன்றிய திருவின் விழவரு வண்ண மோங்குசீ ரரங்கனுக் காக்கி. (௬௨௨)

மன்னுநா ளந்த மன்னவன் வந்து மாசிலா வெதிகணா யகனார்
பொன்னடி வணங்கித் தேவரீ ரிந்தப் பூம்பொழி லரங்கனா ருடைய
முன்னுற நிகழுங் கருமங்க ளனைத்து முறையினா னோக்கியக் கோயி
றன்னையும்பரித்துவரும்வரமருள்கதமியனேற்கெனச்சரண்டாழ்ந்தான். (

அப்படிப் பகர்ந்தாங் கடியிணை தொழுத வரசனை யெம்பிரா னோக்கிச்
செப்புதி யிப்போ துதித்ததென் பொருட்டாற் செப்பின தென்றன ரரச
னுப்புவா ணியர்கள் கற்பூர விலையி னுறுநெறி யறிவரோ பாலன்
றப்பறத் தவழும் பருவஞ்பொற் கிண்ணத் தரமறிந் திடுங்கொலோ தலைவர்

மாசுறு மலடி பிள்ளையை யுயிர்க்கும் வருத்தமொன் றறிவளோ விறைவா
தேசுறு கவினு ரருமையை மூடத் திரள்களாற் செப்பிடப் படுமோ
வாசுறு மணியைப் வேகடி யல்லா தறிவதார் புத்திரர் நேய
மேசுறு தீன்ற தந்தைதா யல்லா தியாவரே தெரிபவர் தெரிவாய். (௬௨௫

ஆங்கவை போல வித்திரு நகரி லச்சுதன் றனக்குன்னை யல்லாற்
பாங்குற வறிந்து சோடச கன்மம் பத்தியோ டளிப்பதார் பகரிற்
பூங்கமலக்கண் வளர்பவன் றன்னைப் பொருளென வுணர்வதார் புவியிற்
றூங்குநற்குணத்தாய் மண்ணவரெல்லாங் கடையறு மக்ககாமக்கில். (௬௨௬

நின்றழிந் திடுவார்க் குன்னுடைக் கடவு ணிலைமையு மருமையுந் தெரியா
தென்றுனக் குரைத்தே னெம்பிரா னீயே யாவையுந் துறைதுறை தோறுஞ்
சென்றுற நோக்கித் திருவரங் கத்திற் செல்வர்தந் திருவுளப் படியே
யொன்றிநின் றிடுக வென்றன னரச னுடையவர் கேட்டுள முருகி.(சூஉ

செப்பரு மன்ன னுரைத்திடுந் திறத்திற் றிருவுள மகிழ்ந்தவ னோடு
மப்படி செய்யக் கடவதென் றெழுந்தாங் காசறுங் கோயிலுட் புகுந்தே
ரொப்பிலார் பரித்துச் சிலபகல் செல்ல வோங்குமத் தானத்தி லுள்ளார்
தப்புற நடக்கும் படிகள்கண் டிவருந் தடுத்திடச் சத்துரு வாகி. (சூஉஅ)

ஈங்கிவன் றன்னைக் கொல்வதற் குபாய மென்னென நினைந்திணை யில்லா
னோங்குசீர் மாது கரத்தினுக் கென்றே யுற்றுநம் வாசலில் வந்தாற்
றீங்குறு விடத்தைச் சோற்றொடுங் கலந்து திரட்டியக் கூடையி லிட்டாற்
பாங்குடன் புசித்து மற்றிவனசிக்கிற் பகையிலைநமக்கெனப் பலரும் (சூஉகூ)

நண்ணியோ ரிடத்தி லத்திறம் பகர நானது செய்கின்றே னென்னத்
திண்ணியோ னொருவன் றன்னகம் புகுந்து தேவியோ டுரைப்பனீ நாளை
யெண்ணிய மாது கரத்தினுக் கிங்கே யெதிகளுக் கதிபனும் புகுவன்
புண்ணிய பாவ மெண்ணலை மயிலே பொருக்கெனச் சோற்றொடு நஞ்சை.()

உறக்கலந் திடுதி யென்றன னவளு முடையவர் பக்கலாச் சரித்தாங்
கறப்பொரு ளுணர்ந்தா ளாதலா லந்தோ வவர்க்குநா னஞ்சிட லாமோ
பிறப்பெனுங் கடலைக் கடத்திய தலைவர் பேதையே னாருயிர் நாத
மறப்பதே யுமக்கு நலனிதை யென்றாண் மலர்மிசைத் திருமக ளனையாள்.()

நஞ்சுநா னவருக் கிடேனென வுரைத்த நவையறு முறையினைக் கேட்டு
வெஞ்சின முடைய வரக்கரை நிகர்ப்பான் மெல்லிய றனையுறக் குமைத்துக்
கஞ்சமா மலர்க்கை தன்னிலந் நஞ்சைக் கதுமென விட்டிதைச் சோற்றிற்
பஞ்சின்மெல் லடியாய் கலந்துற விடுதி யிடாயெனி லுன்னையும் படுப்பேன்.()

என்றன னந்தப் பாதக னஞ்சி யேந்திழை யாளதைச் சோற்றி
லன்றுறத் திரட்டி யெதிகணா யகனா ரணைந்தபோ தழுகணீர் மழைக
ணின்றுறப் பொழியச் சென்றெதிர் செறிந்து நிகரிலான் றிருக்கையிலிருக்கு
மொன்றிய வமுதக் கூடையி லாங்கோர் மருங்கினி லொதுங்கவிட் டகன்றாள்.(சூஙங)

அத்திறங் கண்டங் கெதிகணா யகனா ராயிழை நாமிவ ணணைந்தான்
மெய்த்திற மாது கரம்பரி மாற விரைவினில் வரும்பொழு தெல்லாம்
பொய்த்திற மறத்தான் வணங்கியிட் டேகும் புழுதியிற் புரண்டமெய்யோடு
மெத்திறத் தாலோ வழுகணீ ரோடு மெமக்கிடு மின்னமு தத்தை. (சூஙச)

பிடித்தநாம் பிடித்த கூடையின் மருங்கிற் பேதைமை யோடுழிட் டகன்றா
ளடித்ததுண் டிவளைத் தாரமா யுடையா னரிப்பினுக் கஞ்சியோ ருபாயங்
துடிப்பொரு விடையாள் செய்ததுண் டிந்தச் சோற்றினிற் றோற்றுவித் தகன்றா
ணடிப்புறு முலகை நம்புத லரிது நாமிது சோதிக்க வேண்டும். (சூஙரு)

என்றெதி ராசர் மடத்தினிற் சென்றுங் கேந்திழை யாளிட்ட விடத்தோ
டொன்றிய சோற்றுப் பிடியினை யெடுத்தாங் கும்பனைய் விடுகநீ யென்ன
நின்றதோர் வாய்முன் னிட்டன ரதனை நேர்பெறத் தின்றுநீ ணிலத்தி
லன்றுடறவிர்ந்துவிசும்படைந்தந்நாயமரரோடுறவெனையாண்டார். (௬௩௬)

இந்தமா நிலத்தில் யாவரே யந்தோ விரப்பவ ரிறப்பநஞ் சிடுவார்
முந்தைநா ளுள்ள கதையினுங் கேளோ மூவுல கத்தினு மில்லை
தந்தைதா யனையா ரித்திறஞ் செய்யத் தக்கதோ நமக்கெனச் சலித்து
நொந்துமா மலர்க்கண் புனறர நின்றார் நோற்றநோன் புடையவர் தலைவர். ()

சிலபல கடிகை யவ்வண மிருந்து சிந்தையில் வருந்தித்தற் சார்ந்த
புலவர்கட் கெல்லா மத்திறம் பகர்ந்து பூமியில் வாழுத லரிது
மலமறு பரத்தை யுணர்ந்தவர்க் கென்ன மற்றவ ரோடுரை செய்து
நலமுறு மமுது செய்குத றவிர்ந்து நாள்பல வுபவதித் திருந்தார். (௬௩௮)

வேறு.

அந்நாளிற் றிருக்கோட்டி நம்பியரு ளரங்கத்திற்
பொன்னாருந் திகிரியினன் பூங்கழல்க டொழப்போந்து
தென்னாற்றங் கரையருகிற் செறிந்தனராங் குடையவருந்
தன்னாவித் துணையாய தமரோடு நீராட. (௬௩௯)

சீராருங் காவிரியிற் செழும்புனலிற் சென்றிறங்கி
யேராருந் திருக்கோட்டி நம்பியைக்கண் டெதிர்கொண்டு
கூராழி சங்கேந்துங் கொண்டறொண்டர் குழாத்தோடு
மாராத காதலொடு மாங்கவர்பூங் கழனோக்கி. (௬௪௦)

வேறு.

சென்றார் நம்பி யுடையவரைத் திருந்த நோக்கித் திருமேனி
குன்றா நிலையா யறவாடிக் குறைதற் கேது வென்னென்னக்
கன்றால் விளவின் கனியெறிந்தா னனையாய் மாது தரமுணவாய்
நின்றார் தமக்கு மதினஞ்ச நேரச மென்னி னிலையாமோ. (௬௪௧)

என்ன நஞ்சங் கலந்திட்டா ரியற்கை கூறித் திருவடியின்
மன்னி விழுந்தா ரெதிராசர் மணற்சூ டாற்ற மாட்டாதே
பின்ன மற்ற தொண்டர்குழாம் பெருக வருந்தித் துன்பமுற
வுன்னி நம்பி யெழுந்திரென வுரைத்தா லன்றி யாமெழுதல். (௬௪௨)

நீதி யன்றென் றறக்கொதிக்கு நெருப்பை நிகர்க்கும் வெண்மணலிற்
பேதி யாத சிந்தையருங் கிடந்தார் தொண்டப் பெருந்திரள்கள்
சோதி மணலி லடிச்சூட்டாற் றுள்ளிப் புடைத்தார் நம்பியுமிங்
கோதி லிவனுக் குரியார்க ளுண்டோ காண வேண்டுமென. (௬௪௩)

நின்று ரெழுந்தி ரென்னும நெறிசேர் கிடாம்பி யாச்சானுஞ்
சென்று னந்த வவளிட்ட நஞ்சிற் கொடிதோ தேசிகனர்
குன்று வருடா னெனக்கூறிக் கோதி லெதிரா சர்தம்மைச்
சென்றுங் கெடுப்ப நம்பியந்த மேலோன் றிருக்கை தனைப்பிடி

வேறு.

எப்பொழுது நீயிவனுக் கின்றுமுத லின்னடிசி
றப்பறவே சமைத்தளித்துத் தான்வருதி தாரணியி
லொப்பொருவ ரில்லாதா யெனவுரைத்தாங் கவரோடு
மப்பொழுதே போயரங்கத் தம்மானை யடிபணிந்தார். (௬௬௫)

வேறு.

சீரிய கிடாம்பி யாச்சான் றிருமடைப் பள்ளி சேர்ந்தக்
காரியஞ் செய்து நாளும் வைகவக் காலந் தன்னிற்
கூரிய சிந்தை யாழ்வான் கோதறு முதலி யாண்டான்
பேரியன் ஞான சாரஞ் செய்தவப் பெரியோ ரைசி (௬௬௬)

வேறு.

சிட்டர்களை யழைத்தருளிச் சீரியீர் முன்பிலிங்கத்
திட்டபுரா ணத்தவரென் றெழின்மாற னெடுத்திசைக்கப்
பட்டவறு சமயமெனும் படுகுழியைத் தூர்த்தவர்க
ளிட்டமுறு நூல்களையு மெரியிலிடு பஞ்சாக்கி. (௬௬௭)

வேறு.

வேத முடிவில் வீற்றிருந்து விளங்குந் தத்வ மசியென்ன
வோதும் வாக்கி யத்தத்தீ முயிரும் பரமு மொன்றேயாம்
பேத மில்லை யென்றுரைக்கும் பேதை களையும் புறமிடுவிக்
கேதங் கெடும்வன் ஞச்சிரம வனுட்டா னத்தி லிசைரூபம் (௬௬௮)

ஆன கன்ம மனுட்டித்தா லாதி முதற்கு மாருயிர்க்கு
மூன மான பேதமறும் பேத மாகி யொன்றுகு
மீன மறவங் கவையறித லிலங்கு முத்தி யெனவிசைக்கு
நானென் றெங்குந் தனைத்தானே நசிக்கப் பண்ணிப் பிறந்துழலும். (௬௬௯)

மதிகே டரையு மறத்துறந்து மாசி லாத மறைநான்கின்
விதியை வழுவாக் கன்மமுடன் மெய்ஞ்ஞா னமுமென் றிவையிரண்டு
முதிய துணையா யெழும்பத்தி முத்திக் குபாய மெனவிறையைத்
துதிசெய் துரைக்கு மாரணத்தின் முடிவை யிந்தத் தொல்லுலகில். (௬௭௦)

தங்கு மேலோ ரறிந்துய்வான் றபித் திடுதல் வேண்டுமெதற்
குங்க ணிணைவி னுதித்தமையே துரைமி னென்று ரெதிராசர்
பங்க மில்லாப் பாகவதர் பலகால் வாழ்த்திப் பணிந்தெழுந்திங்
கெங்க ளாவிக் குறுதுணையே யார்க்கு மிதமா மிதுவென்றார். (௬௭௧)

ஆனு லதற்கு வேதாந்த நடக்க வேண்டு மென்றெங்குந்
தானய் நின்ற வெதிராசர் சதுர்வே தத்தின் சாரத்தாற்
றேனர் கமலத் திருவுகப்பச் சீபா டியமுந் தீபமுமெய்
வானர் முத்தர் புகழ்சார மென்ன வகுத்த மூன்றினையும். (சுருஉ)

அருளிச் செய்தா ரதுகேட்ட வன்பு மிக்க முதலிகளுந்
தெருளு மிலங்கு மெதிராசர் தம்மை நோக்கிச் செப்புமிதன்
பொருளுற் றதுவிற் செலின்முன்னஞ் சொன்ன வுபாயம் புகறுணையாய்
மருளற் றிறைவன் றனைப்பற்ற லரிதா மென்ன மிகமலங்க. (சுருங)

வேறு.

அத்திறங் கண்ட வெதிகணு யகனு ரஞ்சன்மின் மாதவ னென்றென்
றெத்திறத் தீரு மோதவல் லீரே லெளிதின்வீ டெய்துவி ரென்ன
மெய்த்திற மாறன் பிரபத்தி மார்க்கம் விளம்பிய திறத்தினை விரகாற்
கெத்தியதிரயத் தருளியன் றவர்கள் சோகமுங்கெடும்படி செய்து.(சுருச)

வேறு.

இறைவனை யுயிர்பெற வெண்ணிற் றாரமா
முறையையு மவன்பெறின் முடிகு தன்மையு
குறையிலான் புகலிவ னவனைக் கூடிடுந்
துறையையு மருள்செயத் துள்ளி யாடியே. (சுருரு)

வேறு.

முதியநான் மறையி னந்தமாய்ப் பொன்ரு முத்தியாய் நித்தவுத் தமமாய்
விதிசிவன் சனக ஞதியோர் களுக்கும் விளம்பவு மரியமெய் வீட்டை
யெதிகணு யகனே யெளிதினி லெங்கட் களித்தனம்க் கின்றுகைம் மாறு
மதியினு லேக்கிற் காண்கிலோ மென்ன மனங்களித் தன்பொடும் வணங்கி.

வேறு.

எண்ணருங் காதல ரிவணஞ் செய்தபின்
மண்மிசைப் பின்னையும் வணங்கி யேத்திநற்
புண்ணியம் போன்றுளாய் புகல்வ தொன்றுண்டு
திண்ணமா யறியென விறைஞ்சிச் செப்பினர். (சுருஎ)

ஏதனை யுரைமினென் றெதிக ணுயக
ரோதினர் முதலிக ளுரைப்ப ருத்தம
வேதமார்க் கத்தினின் வேறு பட்டுள
தீதுறு நிலையெலாஞ் சிதையப் பண்ணினய். (சுருஅ)

ஆதலா லினியுனக் கன்ப ரோடுநீ
தீதிலா நன்னெறி காட்டிச் சீர்பெற
வோதிய திசைதொறுஞ் சென்று னுண்மையை
மாதவக் குன்றமே காட்டி வையகம். (சுருகு)

அனைத்தையுந் திருத்திட வேண்டு மாலென
வினைக்கடல் கடந்தவர் விளம்ப மெய்ம்மையீ,
நினைத்தது நலனதற் கெழுமி னீரெனத்
தனைத்தனக் கொத்தவன் சாற்றி யாங்கவர். (௬௬0)

உடனெழுந் தரங்கனை யிறைஞ்சி யுத்தம
திடமுற நீயெனக் களித்த செல்வத்தைக்
கடல்புடை சூழ்புவி யெங்குங் காட்டிநின்
னிடவகை தொறும்புகுந் தேத்தி மீண்டிட. (௬௬க)

ஆசையுற் றேனதற் கருள்க நீவிடை
யீசவென் றிறைஞ்சின னிறைவ னன்றவை
தேசுறு குணத்தினு யவனுஞ் செய்கென
மாசிலா மணிவிடை கொடுப்ப வள்ளலும். (௬௬உ)

அன்பர்க டொழுதெழ வரங்க னார்தமை
யின்புற வலஞ்செய்தாங் கிறைஞ்சி யேத்திமான்
முன்புறு தென்றிசை நோக்கி முத்தனார்
துன்பறு தொண்டர்க டிதிப்ப வேகினார். (௬௬௩)

நடந்தன ரரங்கமா நகரில் யாவருந்
தொடர்ந்தன ருடன்செலத் துணிந்து சீரிய
தடம்புனற் காவிரிக் கரையைச் சார்ந்துநின்
றிடம்படு சிங்கையா ரிதயத் தெண்ணுவார் (௬௬௪)

உத்தமர் யார்க்குநம் மோடு போதுவான்
சித்தமுண் டரங்கனைச் சேவித் தன்பினோ
டித்தலத் துறைபவர் யாரு மில்லையப்
பத்தரி லொருவரைப் பார்த்து நாமிவண். (௬௬௫)

இருமெனக் கூறினு லிதம லாததாம்
வருமப சாரமு மற்றெ மக்கெனப்
பொருவிலா நிலையினர் புந்தி யுண்ணினைந்
தருமறை துதிசெய வாங்கு நின்றனர். (௬௬௬)

வேறு.

அத்திறத்தை யருளாளப் பெருமாளெம் பெருமானார்
சித்தமுற நினைந்தருளித் தேசிகனார் திருவுளத்தை
யித்தலத்தி லிருந்துவப்பித் திடுவதுநம் பணியென்னப்
பத்தர்தொழு மெதிராசர் பாதுகைக்கீழ் விழுந்திறைஞ்சி. (௬௬௭)

தேசிகனீ யெழுந்தருளித் திக்கனைத்துஞ் செயித்தவைசே
ராசறுத்து மீள்வளவு மரங்கரிணை யடிவணங்கி
நீசனேன் றிருவரங்கத் திருக்கின்றே னெனநின்றான்
மாசிலா வெதிராசர் மற்றவனை யுறத்தழுவி. (௬௬௮)

வேறு.

இத்தலத் திருந்தென் னாவி யிறைவனைப் போற்றி நீயென்
சித்தநோய் தீர்த்தி யென்னத் திருமுடி தடவ வந்தப்
பத்தனுஞ் சிலவ ரோடும் பணிந்தெழுந் தரங்கம் புக்கா
னுத்தம குணத்தி னெங்கு முடையவர் தொண்டர் சூழ. (௬௬௯)

வேறு.

தெண்டிரைநீர்ப் பொன்னியெனுந் தெய்வநதி கடந்தேகி
மண்டுபுனற் றலையருவி வளமிகுமா லிருஞ்சோலைக்
கொண்டலையுங் கண்டிறைஞ்சிக் கோதின்மெய்யத் தினிதமரும்
புண்டரிகக் கண்ணெம்மான் பூங்கழல்கள் புகுந்திறைஞ்சி. (௬௭௦)

வேறு.

சீரிய தொண்ட ரோடுந் திருக்கோட்டி யூரின் மன்னித்
தாரியன் மார்ப னம்பி சரண்பணிந் தன்றவ் வூரி
லேர்பெற விருந்த வெந்தை யென்றுமந் நம்பி துய்த்தாற்
பார்மிசை யடிநா றிட்டுப் படுத்தபூ வணையின் மன்னும். (௬௭௧)

அன்றிராப் பொழுதுந் துய்த்தாங் கடிகணா றிடுவான் மாட
முன்றினி னடக்கு மெல்லை முற்றுமுன் னிடையின் மீண்டா
னென்றிய கருணை மிக்க வுடையவ ரதனை நோக்கி
யின்றிவனுளத்திலொன்றுண்டெடுத்ததென்றிதயத்தெண்ணி. (௬௭௨)

வடித்தசீர்த் தமிழ்வே தத்தின் மாசிலாய் மனத்தி லிப்போ
பிடித்ததோ வெடுத்த தென்றார் பிரானெங்ங னறிந்த தென்றா
னடிப்படு நூறு நேரே நாளுமின் றைம்ப தேயா
மடித்ததின் மடித்தாய் கண்டு கூறினேன் வாழ்வே யென்றார். (௬௭௩)

ஆங்கது கேட்ட நம்பி யன்பனை யுவந்து புல்லித்
தாங்கிய வுயிர்க டோறுந் தங்கிய முதலோ யென்ன
வோங்கெதி பதியை வாழ்த்தி யுளங்கரைந் துருக வன்னான்
பூங்கழ லிறைஞ்சி மாயன் பொன்னடி வணங்கிப் போனார். (௬௭௪)

போனவர் திருமோ கூரிற் புனிதனைத் தொழுதன் றெந்த
யானசீர்ப் பரலோ கத்துக் காம்வழித் துணைநீ யன்றோ
தேனமர் துளபத் தாரா யெனச்சொலிச் சிந்தை செய்து
வானவர் வணங்குங் கூடன் மாயனை வணங்கி வாழ்த்தி. ௭௫)

# எம்பெருமானார் வைபவம்.

## வேறு.

ஆங்குநின்றும் விடைகொண்டே யாசிறுபு புலலாணை
பூங்கமலக் கண்ணனைப் போதத்தாற் புகழ்ந்திறைஞ்சித்
தேங்கமழ்பூந் தார்மார்பர் சேதுதரி சனம்பண்ணி
யோங்குபெருஞ் சிந்தையராய்த் திருத்தங்கா லுறைமுகிலை. (௬௱௬)

சென்றிறைஞ்சி யாங்குநின்றுஞ் சீவிலிபுத் தூர்புகுந்து
மன்றல்கமழ் கோதையையு மாயனையு மடிவணங்கி
யொன்றியசீ ரன்பினொடு மோங்குபுகழ்ப் பொதியமெனுங்
குன்றினின்றும் வரும்பொருனை வடகரைவை குந்தத்தில். (௬௱௭)

உறுமன்பிற் கள்வனைமற் றேங்குமிடர் கடிவாரை
மறுவறுஞ்சீர்த் தொண்டரொடும் வணங்கியருட் புளிங்குடியிற்
குறுகியமால் கழறொழுதாங் கேகவவ்வூர்க் குலமறையோர்
சிறுமியர்கள் சிலரெதிர்ந்தா ரவரோடுஞ் சிறுமியர்காள். (௬௱௮)

சீராரு மகிழ்மாறன் றேவர்தொழ வீற்றிருக்குங்
காரார்பூம் பொழிற்குருகூர் காதமுண்டோ பின்னுமதை
நேராக வுரைமினென நெடுமாலுக் கினிதாய
வாராத காதலரா மருண்மிக்கார் கேட்டருள. (௬௱௯)

## வேறு.

ஆங்கதி லொருபெண் ணையரே நீரு மாசற மாறன்முன் னுரைத்த
வோங்குசீர்த் திருவாய் மொழிகளா யிரமு மோதின தில்லைகொ லென்றாள்
பாங்குறு மெதிக டலைவரு மணங்கே யோதினே னென்றவண் பகர்ந்தார்
றூங்குழ லாளுற் கூவுதல் வருதற் பொருளொரு கூப்பிடு தூரம். (௬௱௰)

என்றறி யீரோ மவனறனள் கேட்ட வுடையவ ரிதுவுமோ ரத்து
மின்றிவ ளிடத்தி லிருந்ததே திருமா மகளிவ ளாமென வியந்து
சென்றவ டாளிற் புரையற வணங்கிச் சீரிய முதலிக ளோடு
மன்றவ ளகத்தி லமுதுசெய் தருளித் துலைவிலி மங்கலத் தமர்ந்தே. (௬௱௰௧)

நின்றிருந் தவரைச மசனமுற வணங்கி நகாலா மாடமா ளிகைகள்
குன்றென வளர்ந்த குளந்தைமா யவனைக் கோதறு தொண்டர்க ளோடு
மன்றுற விறைஞ்சித் தென்றிருப் பேரை யமலனை யடிதொழு தகன்று
மன்றல்சேர் வகுளத் தாரினன் புகுமூ ரெங்கென மற்றதிற் புகுந்தார். ( )

## வேறு.

மாசிலா மதுரகவி வந்துதித்த திருநகரே
முசைபற்றித் தொழுதிறைஞ்சி யன்பரொடும வலனுமசயது
வாசவார் குழற்றிருவின் மணவாளன் கழல்வணங்கித்
தேசுறுசீர்ச் சிந்தையருந் திருக்குருகூர்ப் புறஞ்செறிந்தார். (௬௱௰௩)

வேறு.

அண்டமூ டுருவுங் கோபுரத் தெழிலை யணிதிகழ் மாடமா ளிகையை
யிண்டலத் திலங்குந் திருமதிட் சிறப்பை விசும்புறு கொடிகளை விழியாற்
கண்டுற வணங்கி யன்பர்க ளோடுங் காதன்மிக் குறவலஞ் செய்து
தெண்டிரைப்பொருணைச்சங்கணித் துறையிற்செறிந்துறு செழும்புனலாடி.

வேறு.

முருக்கிதழ் நிகர்க்குஞ் செய்ய வாடையு முறையிற் சாத்திக்
கருத்துறு திருமண் காப்புங் கவின்பெற வணிந்து நீதித்
திருத்திகழ் மார்பிற் சோதித் திருமணி வடமுஞ் சேர்த்தி
யருத்தியிற் சிறந்த முக்கோ லண்டரூந் துதிப்ப வேந்தி. (சுஅரு)

வேறு.

ஆங்குநின்றுங் குருகூரை நோக்கியிதை யருண்மாற
னோங்குமுளங் கொளுஞானத் திருத்துமென வுரைசெய்தான்
பாங்குடன்மற் றதுகிடப்பப் பாவியேன் முக்குறும்புந்
தாங்கியிரு காலாலே மிதிக்கின்றே னெனத்தளர்ந்து. (சுஅசு)

நின்றுநின்று தள்ளாடி நெடுங்கண்கள் புனறதும்பச்
சென்றுகரு டனைப்பணிந்து சீரியமா மேருவெனுங்
குன்றுநின்ற தெனநின்ற கோபுரத்தைக் கும்பிட்டாங்
கொன்றுங்தே வினையுன்னி யுள்புகுந்து தொண்டரொடும். (சுஅஎ)

வேறு.

ஞானப் பிரானை விமானத்தை நலங்கொ டிருவைப் புவிமகளைக்
கானத் தேகி யருந்தவத்தோர் கலக்கந் தவிர்த்த கருமணியை
வானத் தோங்குந் திருப்புளியை வலஞ்செய் திலங்கு மறையுரைத்த
மோனத் திருந்த மகிழ்மாறன் றிருமு னெய்தி முழுமுதலே. (சுஅஅ)

வறு.

சரணென வணங்கி யிதயதா மரையிற் றமிழ்மறை யருளிய ஞானப
புரணனை* யிருத்தி யவனைமுன் னிட்டுப் பூமகள் பொருட்டினு லரக்கர்
முரண்றுத் தோங்கிப் பொலிந்துநின் றவனை முடிவிலா வன்பொடு புலனுங்
ரணமுங் கரையச் சென்றடி பணிந்தார் கருங்கட லடைத்தவற் கினியார். (சுஅக)

ஆங்குநின் றேகி வானமா மலையை யடிதொழு தயன்பணி செய்யுந்
தேங்கமழ் பொழில்சூழ் திருக்குறுங் குடியிற்செறிந்ததிற் றேவனை வணங்கிப்
பாங்கொடு திருவாழ் மார்பரைப் பணிந்து பத்தர்க டுதித்தெழ வேகி
யோங்குசீர் வாட்டாற் றினிதமர்ந் துறங்கு மொருவனைத் திருவொடும் பணிந்தே. ()

* பூரணன் என்பது 'புரணன்' என எதுகை நோக்கிக் குறுகிற்று.

# எம்பெருமானார் வைபவம்.

வேறு.

பொருவருஞ்சீர் நிலையாரும் பூசுரர்க டொழுதேத்த
திருவனந்த புரத்தமர்ந்து திருக்கண்வளர் திருமாலை
மருவருஞ்சீர்த் தொண்டரொடும் வணங்கியதிற் சிலதினங்க
ளருமறைதே ரெதிராச ரமர்ந்திருந்தாங் கந்நாட்டில். (௬௯௧

வேறு.

உறையும் புலவர் தமைவென்றுங் கோங்குந் தஞ்சீர் நாமத்தான்
மறையின் விதியான் மண்டபமொன் றாக்கி யந்த மண்டலத்தி
லிறைவ னருளா லுறைபவரை யிலங்குந் தொண்டக் குலமாக்கு
முறையை நினைந்தா ரெதிராசர் மூவா முதல்வ னதையுணர்ந்தே. (௬௯௨

வேறு.

ஆங்கவர் கனவின் மன்னி யாசிலா நிலையி னானே
பாங்கொடித் தலத்து ளாரைப் பத்தராய்ப் பரிவிற் செய்தாங்
கோங்குவை குந்தத் தேற்ற நினைந்தனை யுறுதி யேனுந்
தாங்குநற் குணத்தா யிந்தத் தலமொரு கோணங் கண்டாய். (௬௯௩

ஆதலா லிதனின் மன்னு நரர்களு மூற்ப மாகுங்
காதன்மிக் குடையா யுன்றன் கற்பனை யுறுதி யாலே
கோதறு முத்தி தன்னைக் குறுகுவ ரிருந்தா ரெல்லா
மோதுமித் தலத்தி லின்புற் றுறங்குநம் பணிகள் செய்வான். (௬௯௪

ஒருவரு மின்றிக் காடா முற்றவித் தலமு மன்றிப்
பொருவருங் குணத்தா யிவ்வூர் புகலும்வை குண்ட மென்ன
வருமறை விதிப்ப மாற னருளிய படியுங் கண்டாய்
கருதரு மிதனின் பாங்குங் கைவலி யங்க ளாகும். (௬௯௫)

பண்டரு மறைகள் வல்லாய் பசியுளா ரிருப்ப மண்ணி
லுண்டவர் தம்மை யூட்ட லுறுதியோ வுணருங் காலை
மண்டலம் பெரிதுண் டோங்கும் வடதிசை யதனி லேகிக்
கண்டநா டெல்லா நீயே திருத்துதி கடுக வென்ன. (௬௯௬)

செப்பியப் பொழுது கையாற சீரிய மலர்களை மேந்தைத்
தப்பறு தமர்க டம்மைத் தாங்கியே மூலகுந் தாங்கு
மப்பனுங் குறுங்கை தன்னி லழகிய நம்பி யாகி
யொப்பற நின்றான் முன்பில் வைத்துமீண் டுறங்க லுற்றான்

வேறு.

கங்குற் பொழுதிற் கருமுகிலைக் கனவிற் காணக் கண்வளருஞ்
செங்கட் கரிய திருமாலுக் கிளையா ராகிச் செனித்தவன்பர்
பங்கிற் றோன்று மெதிராசர் பரமன் பிரிந்த வுடன்பரிவோ
டங்கக் கனவி னதிசயத்தை யடியார்க் கருளிச் செயவெழுந்தார். (௬௯௮

வேறு.

ஏழுந்திருந் தங்கே யெதிகளு யகளு ரித்தலந் திருக்குறுங் குடியுன்
றழுந்துயிர்த் தீனையாந் தொண்டரை யெழுப்பி யாசறு நிலைமையீர் னென்ன
றெழுந்திருவனந்த புரத்தினிற் படுத்தோ மதுவன்றிச் சுருதியின் முடிவின்
தெழுந்தென நின்ற வழகிய நம்பி குறுங்கைமா நகரிது குறிமின்.(௬௬௬)

என்றுரைத் தருள வவர்களு மெழுந்தாங் கீதென்கொ லதிசய மென்ன
நின்றனர் திகைத்து நின்றழிக் கனவி னீண்டவ ணுண்டுசென் றுரைத்த
வொன்றிய பொருளை முற்றவு முரைத்தா ருடையவர் முதலிகள் கேட்டாங்
கன்றவன் றிறத்தை நினைந்துநைந் துருகி யனலிடு மெழுகெனக் கரைந்தே. ()

வேறு.

திருவனந்த புரநகரைச் சீவைகுண்ட மெனமாறன்
பொருவருஞ்சீர்த் தமிழ்மறையிற் புகன்றதையும் பொன்னுழி
மருவருஞ்சீர்ச் சங்கேந்து மாமாய னுரைத்ததையுங்
கருதிநின்றுங் கதிசயித்தா ரெதிராசர் கழல்வணங்கி. (௭0௧)

வேறு.

எல்லாங் கிடப்ப வின்றந்தோ வெவ்வணம் யாரு மறியாதே
செல்லார் பொழில்சூழ் திருவனந்த புரம்விட் டீண்டுச் செறிவித்தான்
சொல்லா யிந்தப் பெருந்திரளைச் சுருதி முதல்வன் யாவருக்கு
நல்லா யென்றார் முதலிகண்மெய்ஞ் ஞான மிக்கா ரருள்செய்வார். (௭0௨)

வேறு.

தண்டுழாய் மாலை மார்பன் றமர்களை யுகை மேழு
முண்டநா ளறிந்தா ருண்டோ வுமிழ்ந்தநா ளறிந்தா ருண்டோ
பண்டைநான் மறைக ளன்றிப் பன்றியாய்க் கோட்டி லேற்றுக்
கொண்டநா ளறிந்தா ருண்டோ கோதறு பிரம னேனும். (௭0௩)

உளந்தனு லுணர்ந்து காண வல்லனோ வுலகின் மேலாய்
வளர்ந்தநா ளனைத்துந் தோய மாசறு மிருதா ளாலே
யளந்தநா ளறிந்தா ருண்டோ வாதலா லரக்க னுகம்
பிளந்தமா றனக்கு மீதோர் பெருமையோ பேசுங் காலே (௭0௪)

என்றுரைத் தெதிக ளுத ரெடுத்தவண் வைத்துப் போக
மின்றல்சேர் துளவி னனை மற்றநீ மன்னு நாட்டை
யின்றுநாந் திருத்த வென்றே நினைகிலே னென்ன வேத்தி
யன்றுசென் றனந்தா னந்த புரத்தினி லமலன் றன்னை. (௭0௫)

பூங்கழ லிறைஞ்சி வாழ்த்திப் பூவலஞ் செய்யப் புக்கா
ராங்குநின் றன்பின் மிக்கா ரன்பர்க ளோடு மேகிப்
பாங்குட னந்நாட் டுள்ள திருப்பதி தோறும் புக்குத்
தாங்கியே யுலகுங் காக்குந் தலைவனை வணங்கி வாழ்த்தி. (௭0௬)

எண்ணருஞ் சமயத் தாரி லிலங்குமேற் றிசையி லோங்
நண்ணிடும் புலவர் தம்மை நான்மறை முடிவால் வென்
மண்ணவர் வணங்கி வாழ்த்த வானவர் துதிசெய் தேத்
வுண்ணிறை யறிவின் மிக்கா ருத்தர திசையை யுற்றார்.

வேறு.

அத்தலத் துள்ள சமயவா திபரை யருமறை விதியினல் வென்றே
யுத்தம குணத்தார் துவாரகைக் கேகி யூபத்தை யுவப்புட னேக்கிப்
பத்தர்க டுதிப்பப் பட்டிமண் டபத்தின்* மன்னியப் பட்டிமண் டபத்தி
லெத்தலத்தெவருமிறைஞ்சவீற்றிருக்குமிலங்குவெண்டாமரை யுறைவா

தன்னரு கணைந்தா ரெதிகளு யகனர் சரச்சோதி கண்டடி வணங்கி
யென்னுடை யுடைமை யனைத்தையுங் கைக்கொண் டிடுகெ யிறைவவென் றிறைஞ்
முன்னுறத் திறந்து கொடுத்தனள் கொடுப்ப முத்தரு மத்திற நோக்கி
யன்னமென் னடையாய் நமக்குநீ யிதுசெய் திடுவதற் கடியென்கொ லென்றார்.

என்றலும் வாக்கு நங்கையு மென்பா லெய்தினன் சங்கரா சிரிய
னன்றிசேர் குணத்தாய் முன்புநா னவனை நவிலுமோர் சுருதிவாக் கியத்து
கின்றநீ யத்த மருள்கவிங் கிதற்கென் றியம்பினே னத்தனே கறுு
மன்றதற்கத்தம்வானராதனமேபோன்றகண் ணுடையனென் றறைந்தான

செப்பருங் குணத்தா யருமறை முடிவைத் தெளிந்துநீ பாடியஞ் செய்த
யப்பொழு தந்த வாக்கியந் தனக்கு மாசறு புண்டரீ கம்போன்
றொப்பிலா நயன முடையவ னென்றுங் குள்ளவா றுணர்ந்துநின் னறிவி
றப்பற வுரைத்தா யத்திறங் கண்டுன் றுதிநா னுயினே னென்றாள். (எக

என்றவ ளுரைப்ப வெதிகளு யகரு மிராகவன் கவுசிகன் புகழ்
நின்றன னென்ன நின்றனர் தம்மை நெஞ்சினி லிறைஞ்சியப் பின்றி
யன்றுபோய மற்றோர் தினத்தினிற் புலவ ரடிதொழ வாக்கிதன் னிடத்தி
சென்றவள் கையிற்சீ பாடியந் தன்னை வைத்தனர் யாவருந் தெளிய (எகஉ

வைத்தவ ரணங்கே யிந்நூ லிந்த வைபவ மெடுப்பதற் குரித்தேற்
கைத்தலத் திதனை வைத்திரு நாளைக் காலமே வருகின்றே னலதேல்
மெய்த்தவ முடையாய் கீழிடென் றியம்பி வேதியர் முறைமுறை துதிப்ப
பொய்த்தவங் கடிந்தார் மீண்டுபோய் மடத்திற் புலவர்கள் புகழவீற் றிருந்தார். (எகஙு)

அத்தலத் துறையுஞ் சமயவா தியர்க ளனைவரு மொன்றுறக் கூடி
யுத்தமப் பனுவல் வாக்கிதன் கரத்தி லுடையவர் வைத்தகன் றிட்டார்
சித்தமு மகிழ்ந்தப் பனுவலை வாக்கி சிரத்தினிற் றரிப்பதுந் திண்ண
மித்தலத் திருந்தோம யாவரு மிதின்றெற் றிட்டவர் பட்டதே படுவோம.

---

* பட்டிமண்டபம்-வித்யாஸபை, "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" என்பது கம்பராமாயணம்,

# எம்பெருமானார் வைபவம்.

ஆதலா லிவரை வெல்வதற் குபாய மர்ச்சகன் றன்னைவிட் டந்த
வேதசா ரத்தை யிற்றைநா ளிரவில் விரைவினி லெடுத்ததை வாங்கிப்
பூதமோ ரைந்தி லக்கினிக் கிரையாய்ப் போக்குத றகுதியென் றவரின்
மூதறி வுடையா ருணர்ந்துரைத் திட்டா ரனைவரு மொழிநல னென்றார்.

அற்றைநாட் கங்குற் பொழுதினிற் சிலரவ் வர்ச்சகன் மனையினி லேகி
யிற்றைநாள் வாக்கு நங்கைதன் கரத்தில் யாவருந் தொழுதெழ வனைத்துங்
கற்றவன் வைத்த நூலினை யின்னே கதுமெனக் கொணர்ந்தளித் திட்டான்
மற்றொரு வாக்கு* முரைக்கிலே நினக்கு மலையெனப் பெருநிதி யளிப்போம்.

என்றன ரென்ற பொழுதினி லவனு மெழுந்திருந் தத்தராத் திரியிற்
சென்றனன் வாக்கி கோயிலு ளவளுந் திருக்கையி லிருந்ததைச் சிரத்தி
லன்றுறத் தரித்தா ளிருகணுற் பெருகு மானந்த வாரிதி† யொழுக
நின்றன ணின்றா ணிலைமையை நோக்கி நெடிதுபோ தஞ்சிநின் றவனும்.

ஆருயி ரெய்து நரகினை யறியா னற்பசா ரஞ்சுவைப் பதற்காய்ச்
சீரிலான் வாக்கு நங்கைதன் சிரத்தி லிருந்தசீ கோசத்தை யெடுத்துப்
பார்மிசை நடந்து தன்னகம் புகுந்தான் பரிந்தவன் வரவுபார்த் திருந்தார்
தாருமென் றதனைக் கதுமென வாங்கித் தடையறக் கனலிடை யிட்டார்.()

கனலிடை யிடவு மக்கினிக் கடவுள் கண்டகர் செய்கையை நினைந்து
மனமிக நடுங்கி வாங்கினன் வாக்கி மற்றவ னருகணைந் ததனை
வினவரும் புகழாய் தருதியென் றேற்றாள் விரிஞ்சனார் தேவியென் றஞ்சி
யனலவன் கொடுத்து வணங்கிநின் றன்னே யறைதியிக் காரண மென்றான்.

நன்றென வாக்கு நங்கையு மதனை நனைமலர்க் கூந்தலு ளமைத்து
நின்றெரி வேந்தே கேளிந்த வுலகி னெடுந்துயர் தீர்ப்பதன் பொருட்டா
லன்றிரா கவன்பி னிலக்குவ னாக வவதரித் திட்டசீ மானா
ரின்றுநா னிலத்தோ ருய்வதன் பொருட்டா லவதரித் திந்தநூல் செய்தார். (௭௨0)

இந்தநூல் வேத நான்கையும் வடித்தாங் கெடுத்தநற் சாரமா தலினா
லந்தமில் புகழா யிவருட னெதிர்ந்தா ரனைவருந் தோற்றனர் விரைவில்
வந்தன ரிந்த மண்டலத் தவரை வாதிடை வெல்லவென் றெண்ணிச்
சிந்தையின் மகிழ்ந்தா ரென்கரத் திந்தச் சீரிய நூலைவைத் தகன்றார்.(௭௨௧)

எண்ணரும் புகழாய் தெய்வநூ லெனக்கொண் டென்னுடைச் சிரத்தினி லமைத்தங்
குண்ணிறை பொருளிற் சிந்தைபோ யென்னை மறந்தற வொடுங்கிநின் றனளென்
பண்ணமர் புனுவ றன்னையென் னற்ற நோக்கியிப் பாதக ரெடுத்துன்
கண்ணமைத் திட்டா ரீதுமுன் னிகழ்ந்த காரண மென்றுகட் டுரைத்தாள். (௭௨௨)

---

மற்றொரு வர்க்கும்' என்றும் பாடம். † இச்சொல் வருமிடந்தோறும் 'வாருதி' என்றே எல்லா எட்டுப் பிரதிகளிலும் எழுதப்பட்டுள்ளது.

வாக்கியுந் தன்சீர்க் கோயிலு ளமர்ந்தாண் மற்றைநாட் காலையி லெழுந்து
பாக்கியந் திரண்ட பான்மையா ரெதிக டலைவரும் பத்தரைக் கூவி
நோக்கிஞ னென்னற் கொடுத்தசீ கோச நோன்பின்மிக் கவணிலை வோடு
மாக்கிய தலத்திற் சென்றதை விரைவிற் கொணர்மினென் றன்பர்கட் கறைந்தார்.

வேறு.

அப்படியே யன்பர்கள்சென் றயனுவில் வீற்றிருக்கு
மொப்பரியாள் கரத்தினென்ன லோங்கியசீ ரெதிராசர்
செப்பமிகுஞ் சீகோசஞ் செறிவித்தா ராங்கதனைத்
தப்பிலாய் தருதியென வாங்கவனுந் தடுமாறி. (எஉ௫

வேறு.

பொய்யரிற் பொய்யன் போதமிக் கவரே போயின தினத்திதைத் தேவி
கைமிசை யிருப்பக் கண்டன னின்று கதிர வனெழுமுனம் புகுந்திம்
மையமர் கண்ணு டிருவடி விளக்க மன்னிமே னந்தநா ளன்னை
மெய்யமர் வாணி யெங்கொளித் தனளோ வெறுங்கையோ டிருந்தன ளென்றான். ()

என்றவன் பகரத் தொண்டருங் கலங்கி யெழிறிகழ் கோயிலுட் பலராய்ச்
சென்றன ரெங்கு நாடினர் காணார் திகைத்தனர் திகைத்தல மந்து
நின்றன ரெதிக டலைவருக் கிந்த நீர்மையை யுரைத்திட மீண்டா
ரன்றவர் திரும்பி வருநெறி தன்னி லந்தணர் சிலரவ ணிருந்தே. (எஉ௬)

னென்னலோர்கோசமுடையவர்கொணர்ந்துநெறியுடை வாக்கிதன் கரத்தின்
மன்னவைத் தகன்று ராங்கதை யிவ்வூர் மறுசம யத்தவ ரெடுத்திட்
டின்னதென் றெண்ணு ரெரியிடை மடுத்தா ரென்றுபேச் சூரெலா மிதுதா
னன்னல முடைபீர் மெய்கொலோ பொய்யோ நவில்கவென் றிவரொடுங் கேட்டார்.

ஒக்குமென் றிவரு மாருயிர் வாடி யுடையவர்க் கத்திற முரைத்தார்
முக்குணங் கடிந்த வெதிகளு யகரு முடிவிலாத் துயர்க்கடற் படிந்தார்
பக்கநின் றூழ்வான் பரமதே சிகனே பாடமற் றெனக்கவை யனைத்துந்
தக்கசீ கேசு நாலுநா ளகத்துத் தருகின்றே னென்றுறச் சாற்ற. (எஉ௮)

உடையவ ரெழுந்து சிந்தனை களித்தீ துரைத்தவாழ் வான்றனை நோக்கித்
தடையறப் புல்லி யென்னுயி ரனையாய் சார்புமற் றுன்னையே யுடையேற்
கிடையிலோர் துன்பம் வருங்கொலோ வென்ன வியம்பின ரியம்பிய பின்பு
புடையிருந் தவரை நோக்கியென் னூலைப் பூமக ளுவினி லுறைவாள். ()

கொடுத்திடா ளவர்க்கு மின்றுநீ ரேகிக் கோதறும் வாக்குடை யாளை
படுத்துநின் றணங்கி னர்ச்சகன் றனைக்கொண் டாங்கவ ளோங்குபூங் குழலை
விடுத்துற விரித்து நோக்குவித் திடுமின் மெல்லியல் சிரத்தினி லிருக்கும்
படுத்தபாம் பணையான் பரத்துவ மெனுஞ்சொற் பனுவலுக் கினியவ ளறியும்.

என்றுரைத் தருள விரைவினி லேகி யெம்பிரான் றொண்டர்கள் வாக்கி
மன்றல்சேர் குழலை விரித்தியென் றுரைத்தார் மாசறு மர்சகன் விரித்தா
னன்றுசீ கேர்சம் வாக்கிகே சந்தி லடக்கிவைத் தன்பர்கட் களித்தா
லொன்றிபேழ்கட லுமணுவெனப் பெருகுங் காதல ருடையவர்க் களித்தார்.

தேவரே வரினு முனிவரே வரினுஞ் சீரிய வறநெறிக் கிடராய்
மூவரே வரினு மரிதரோ வுலகின் முளைப்பதைப் புதைப்பதற் கிசைத
லேவரே யெனினு மறநெறி வழாதா ரெய்திய திழுந்துமற் றவர்போற்
போவரே யந்தோ வுலகமோரேழும் பொடிபடமுடியினும்புவிமேல். (௭௬௧)

அன்னமென் னடையா டிருக்கையி லிருந்த வாசறு கோசத்தை யவள்பான்
மன்னுமர்ச் சகனு ரெடுத்தவர்க் களிப்ப மறுசம யத்தவ ரெரியி
னென்னலிட்டனர்கண் மற்றதை வாக்கி நெடுமுடி மிசையில்வைத் திருந்து
நன்னலத் தெதிகடலைவருக் களித்தாளென்பதை நானில முழுதும். (௭௬௨)

வேறு.

அப்பொழுதே யறிந்தனவாண் டரசானு மன்னவனு
மிப்பொழுது பிறந்தவுரை யதிசயமீ தென்கொலெனத்
தப்பறவக் கணத்திலது சோதிப்பான் றுன்சமைந்து
வெப்பமுட னதுசெய்த சமயிகளை விரைவினொடும். (௭௬௪)

வேறு.

கொண்டு வாரு மெனச்சிலரைக் கோவும் விடுப்பப் பலகலையுங்
கண்டுங் காணுக் கண்ணுடைய கலைஞர் வம்மி னெனத்தூத
ரண்டர் வியப்ப வழைத்தரச னருகே நிறுத்த நீர்திருமா
றொண்டர்க் ககித நென்னற்செய் திட்ட பரிசைச் சொன்மினென. (௭௬௫)

மன்னன் கேட்ப வாங்கவர்கண் மனத்தில் வஞ்ச மறவிட்டு
மின்னு மவுலி வேல்வேந்தே வேண்டாங் கேட்கப் பிறந்தவுரை
யன்ன தேயாந் தேவனிவ னைய மில்லை யாமெல்லா
மென்ன தவத்தை முற்பிறப்பிற் செய்தோ நம்பா லிவனெய்த. (௭௬௬)

என்று கூற மன்னவனு மெழுந்து விரைவி லுடையவர்பாற்
சென்று வணங்கி யானுனக்காட் செய்வே னிறைவா விரங்கென்ன
நின்றுன்வன்பின் மறுசமய நிலைமை யுடைய புலவர்களு
மின்றிங் கியாஞ்செய் பிழைநோக்கா திறைவா விரங்கா யெனப்பணிந்தார்.

வேறு.

மற்றவர் பணிய வெதிகளு மிகரு மன்னனை மறுசம யிகளை
யுற்றுறத் திருத்தித் தந்திரு நாமத் தோங்குமோர் மண்டபங் கட்டிப்
பற்றற வறுத்த பத்தரும் வணங்கப் பட்டிமண் டபத்தினை நீங்கிக்
கொற்றவன் பின்சென் றீரறு காதம் வழிவிடக் குணதிசை யடைந்தார். ()

அங்குள புலவர் தங்களைத் திருத்தி யண்டருந் தொண்டரு ழுக்
கங்கைநீ ராடி யத்தலத் தமருங் கண்ணனைக் கண்டடி வணா
பங்கய நயனப் புருடவுத் தமனைப் பணிமலர் சொரிந்தடி வணங்கிச்
சங்கமொ டாங்கே சிலபக லிருந்தத் தலத்துறும் புலவரை வென்றே.(௭௩

வேறு.

சீர்கொடங் திருநா மத்தாற் சிறந்தமண் டபமொன் றுக்கி
யேருறு மெதிக ளுதை ரிலங்குமத் தலத்தோர் முத்தி
சார்வுற வெண்ணி ஞர்தந் தமரொடு மந்நாட் கங்கு
னேருறு மிராக்கா லத்தி னினைந்துகண் வளர்ந்த காலை. (௭௪௰)

வேறு.

திருத்திகழுந் திருமார்பன் செகநாதன் முன்புலகிற்
குருக்களுக்குங் குருக்கவெனக் குலவுமறை யுறைதலினு
லிருக்கின்முடி வுணர்ந்தொடுங்கு மெதிநாதர் கனவிடையி
லருத்தியொடுஞ் சென்றுநம்மை யாசிரிய னுகவென்றும். (௭௪௧)

வேறு.

எண்ணி யிருப்பா ராதலினு லீங்கு ளாரை நீதிருத்தல்
புண்ணி யத்தின் கொழுந்தன்னுய் வேண்டா மப்பாற் போதியென
விண்ணி லோங்கும் விரிபுகழார் தொண்டக் குழாத்தை விரைந்தெடுத்து
மண்ணி லீரா றேசனைக்குத் தெற்கே வைத்தம் மான்மீண்டான்.

வேறு.

மருவருஞ்சீர் மாமாயன் வைத்தகன்ற விடத்தாங்கே
பொருவரிய வெதிராசர் பொருக்கெனக்கண் விழித்தருளித்
திருவனந்த புரத்தமர்வார் செகநாத ரெனுமிருவ
ரொருவரெனும்படிகாண்மின் றெண்டர்களேயெனவுரைத்தே.(௭௪௩

வேறு.

தொண்டரை யெழுப்பி நென்னலிற் படுத்த தோமறு தலத்தையு மிதையுங்
கண்டிடுந் தொண்டர் கனவுமொன் றுண்டு கேளுமென் றுங்கது கழறித்
தண்டுழாய் மார்பன் செய்கையை நினைந்து தத்தமிற் சிந்தையில் வியந்தங்
கண்டர்சேர்சிங்க கிரியமரப்பன் கழல்பணிந் தன்பரோடெழுந்தே.(௭௪௪)

ஆங்குள தெய்வத் திருப்பதி யனைத்து மன்பினு லன்பரோ டிறைஞ்சி
யோங்குவேங் கடத்திற் புனிதனை யிறைஞ்சி யுரைத்தவத் தொண்டைமண் டலத்திற்
பாங்குறு புலவர் செருக்கினை யடக்கிப் பழனஞ்சூழ் காஞ்சிபுக் கருளாத்
தாங்குநற் கருணைப் பேரரு ளாளர் தம்மையுந் தமரொடும்பணிந்தே.(௭௪௫)

வேறு.

ஆசிலாக் கோவலூ ராழ்வார்க ணயினரைத்
தேசிகனார் புகுந்திறைஞ்சித் திருவகீந் திரபுரத்தி*
லீசனையு மடிபணிந்தாங் கெழிற்சோழ மண்டலத்தில்
வாசவனுந் துதித்திறைஞ்சுங் கலிகன்றி† கழல்வணங்கி. (௭௪௬)

சீராருந் திருக்கண்ண புரத்திறையைச் சென்றிறைஞ்சி
நேராய மண்டலத்தி னிகழுந்திருப் பதியிலொன்றுஞ்
சோராமற் புகுந்திறைஞ்சித் தொல்லமரர் தொழுதேத்த
வாராமஞ் சூழ்ந்ததிரு வரங்கனைவந் தடிபணிந்தார். (௭௪௭)

வேறு.

மறைகளா யிரமு முணர்ந்தவர் வணங்க வானவர் தொழுதெழு மரங்கத்
திறைவனும் பணிந்த வெதிகண யகரை யிருகண னேக்கியா சறவோர்
குறையற வெங்குந் திரிந்துநஞ் செங்கோற் கோவுண்மை செலுத்திமீண் டனையோ
பொறையெலாந் திரண்டோ ருருவெடுத் தோங்கும் புண்ணியா வென்றிறை புகழ. ()

வேறு.

சீராரு மெதிநாதர் திருமகள்கோன் றனைநோக்கி
யாராமஞ் சூழ்ந்ததிரு வரங்கமெனும் படியாகப்
பாரார்நின் பதிதோறும் பணிந்துவிடை கொண்டுதுழாய்த்
தாரார்நீண் முடிமாலே யுனக்காட்செய் திடச்சமைந்து. (௭௪௯)

வேறு.

வந்தேற் குண்டோ குறைகளருண் மாமா யவனே மாதவனே
செந்தே னொழுகும் பூம்பொழில்சூழ் சீரா ரரங்கத் தாரமுதே
நொந்தேன் சரண மென்றவர்க ளெய்தீர் மருந்தே நுண்ணியனே
தந்தே னென்னை யுனக்கென்ற தலைவா சரண மெனத்தாழ்ந்தே. (௭௫௦)

வணங்கி வாழ்த்தி வலஞ்செய்து மாசி லாத வெதிராஜ
ரிணங்கு மடியார் புடைசூழ விறைஞ்சி மடம்புக் கப்பதியிற்
குணங்கண் மிக்க வருளாளப் பெருமாள் கூரத் தாழ்வானு
மணங்கின்பொருட்டாலிதமுரைத்த வாண்டான்முதலோ ரடிபரவ. (௭௫௧)

இருந்தார் சிலநா ளெதிநாத ரந்நா டன்னி லிருநிலத்தின்
விருந்தா லமர ருண்மாரி மிகவுஞ் சுருங்க மேனாட்டிற்
பொருந்தா நின்ற சாதிகளிற் புகலுங் கட்டளை வாரியரி‡
லருந்தாப் பசியான் மிகவாடி யரங்க நகரிற் சிலர்புக்கார். (௭௫௨)

* ‘திருவயிந்திரபுரத்தில்’ என்றும் பாடம். † கலிகன்றி-திருமங்கை மன்னன்.
‡ ‘கட்டளைவாரி’ என்பது ஒரு ப்ராஹ்மணனுடைய பெயரென்று குருபரம்பரா ப்ரபாவத்திற் சொல்லப்பட்டது.

வேறு.

சவார் குழலா ளாங்கதி லொருத்தி மன்னுமுந் றவத்தினுற் புவியி
சிலாக் கொங்கிற் பெரியபி ராட்டி யாரென வறைவதற் கமைந்தா
ாசமார் கணவன் றன்னெடோ ரகத்தி லிருந்தனள் சிலபக லிகரி
ஞர்க்கினிய வெதிகளு யகனு ரியற்கையை மயக்கற வுணர்வாள். (எருங)

ந்திரு மனையின் மச்சின்மீ தேறி யன்புறு கணவனே டிருந்தாங்
ந்தம குணத்தா ருடையவ ரிடத்தி லோங்குல காளுமன் னவனும்
தர்கள் குழுவும் புகுவது மவரைப் பணிவதுந் திரிவது மவர்தஞ்
தமுமொடுங்கியாவருங்காணத் திருக்கையிற்கூடையுமெடுத்தே. (எருச)

வேறு.

ஓங்கிய மனைக டோறு முபாதானம் பண்ணி நாளு
மாங்கவை யுணவ தாக வாழ்வது மனைத்து மாண்டப்
பூங்குழ லேக்கி யீதோர் புதுமையிவ் வுலகை யெல்லாந்
தாங்கிய மன்ன ஞதி சரணென விவரைத் தாழ். (எருரு)

திருந்துற விவருந் தொண்டர் திருமனை தோறும் புக்காங்
கருந்துவ துபாதா னத்தி லாதலா லிவர்பா லொன்று
மருந்தெனக் கேட்க வேண்டு மெனமனத் தெண்ணி மாது
மிருந்தன ளகத்தி லோர்நா ளேகினர் பிச்சைக் கெம்மான். (எருசு)

சென்றுறு மனையுட் சேர்ந்து சீர்பெறு முபாதா னத்தை
யன்றுபெற் றெந்தை மீண்டா ரமர்ந்தமச் சிழிந்த வன்ன
மின்றுநிற் கேட்பி தொன்றுண் டேகலே சீயா வென்ன
வின்றிடை காரியிற் கையான் மறித்தன ளெடுமா றெண்டர். (எருஎ)

அன்னையே யனையாய் கேட்ப தேதென்னி லறைதி யென்றார்
பின்னையே யனையாண் மேலோர் பெருநில மாளு மன்ன
னின்னைவந் திறைஞ்ச நீயிந் நீணிலத் தவர்க்கென் னீந்தாய்
மின்னையே யனையி மேனி வித்தகா ... ...ன்றுள். (எருஅ)

ஆயலத தறத்தைக் கேட்டி யருவினை யேனை யீன்ற
தாயெனத் தகையா யிந்தத் தண்புன ரெங்க மன்னு
மாயவன் றிருநா மங்கள் வரம்பில வவற்றி லொன்றத்
தூயவர்க் குரைப்பே னந்தச் சொற்பொரு ளினிமை யாலே. (எருகூ)

என்னைமே லாக வெண்ணித் திரியவரென் றெம்மான் கூற
வன்னமென் னடையா ளுன்னை வணங்குவே னதனை யிப்போ
துன்னரும் புகழா யெற்கு முரைத்தியென் றுரைத்துத் தாழ்ந்தாண
மன்னிய வருளின் மிக்கார் மற்றவ டனக்கப் போதில். (எசுo)

தொக்கவல் வினைகண் மாயச் சுருதிநா யகனு ரேந்துஞ்
சக்கரஞ் சங்க நல்கித் தார்குழல் செவியிற் கண்ண
னக்கர மெட்டு மோதி யன்னமே பிடித்தி யென்னத்
தக்கசீ ரெதிக ளுதர் தம்மிட வகையிற் சார்ந்தார். (எசுக)

மாதுநல் லாளு மன்றே மணிமதி லரங்கத் தானைக்
கோதறு மிதயப் போதிற் குடிபுக விருத்தி வாழ்ந்தா
ளோதுமக் காலந் தன்னி லுலகுறு கரிப்பு நீங்கிச்
சீதவான் மழையா லெல்லாத் திசைகளுஞ் செழித்த வன்றே. (எசுஉ)

வேறு.

அந்நாளி லெதிராசர் திருவடியி லாயிழையா
ளென்னுவிக் குறுதுணையே யெனவணங்கி யெழுந்திருந்து
முன்னுங்க ளிருந்ததலஞ் செழித்ததென்றார் முதியோனே
யிந்நாளெங் கணவனொடு மேகவிடை யீகென்றாள். (எசுங)

வேறு.

விடையரு ளெனக்கென் றேத்து மெல்லிய லாளை நோக்கி
யுடையவ ரணங்கே யென்னல் வேண்டுவ துரைத்தி யென்றார்
தடையறப் பின்னுந் தாழ்ந்தத் தார்குழல் செப்பு மெந்தா
யடைவுறு முதலொன் றீந்தா யடியனேற் காவி நாதா. (எசுச)

இன்னமொன் றருளிச் செய்தென் னின்னுயிர்க் குறுதி யாக
மன்னுநின் பாதப் போதின் மரவடி யிரண்டு நல்கி
யுன்னரும் புகழின் மிக்காய் விடையரு ளென்ற லும்ப
னன்னமென் னடையா டன்பா ற்றுயத்தையுமருளிச்செய்தே. (எசுரு)

வேறு.

சீராரு மரவடியைத் திருவணியாள் வசத்தளித்தா
ராராத காதலளா யேற்றுமுடி மிசையமைத்துப்
பாராரப் பணிந்தேத்திப் பனிமலர்க்கண் ணீர்ததும்பக்
காரார்பூங் குழலியங்கன் கணவனொடு மேகினாள். (எசுசு)

வேறு.

அந்த நாளிற் றிருவரங்கத் தமுத னாரென் றருணும
மிந்த நிலத்தி லுடையவரா யிலங்கு மரங்கன் குணத்தின்
முந்தும் வரிசைக் கதிபதியாய் முந்நீர் ஞாலத் துறுசெல்வம்
வந்துபணியவீற்றிருக்கும் வாழ்க்கை நெறியில்வளர்பவராய். (எசுஎ)

ஒருவருளரங் கவர்மபடவா ருருவிற் பதிந்த சிந்தையராய்ப்
பருவங் கண்ட விடந்தோறும் பழியு நரகும் பாராதே
யுருவங் கண்ணுக் கழகாக வுடையார் மன்னுங் கடைதோறு
மருவி யிரவும் பகலுமுற மயங்கித் தம்மை மறந்தவமே. (எசுஅ)

திரிவா ரதனை யுடையவர்க்குச் சிலர்கண் மொழிய வுடையவ
பரிவா னோக்கி யவர்க்கிரங்கி யருளிப் பகவற் சம்பந்தந்
துரியா தீதத் துறுமுண்மை துலங்க வளித்தாங் குடனாளும்
பிரியா ஞானப் பெருந்திரளுள் வைத்தார் பினுமுற் பேதமை

வேறு.

வாதனையி னூற்றத்தான் மாதவர்க ளனுட்டானப்
போதறிந்தங் கவர்பிரிந்து பூவையர்பாற் போய்விழுந்தாங்
கேதமுற நாணுறு மிவையறிந்தென் னெதிராசர்
தீதில்லா வரங்கர்முன்பி லவரோடுஞ் செறிந்தொருநாள். (எஎ0)

வேறு.

என்னு லான படிபார்த்தே னிறைவா விவரைத் திருத்துதற்கிங்
குன்னு லன்றி யொருவருக்கு மோயா திவர்முன் செய்தவினை
பன்னு ளிவருக் காயடியேன் பட்ட வருத்தம் பகர்வரிதா
மின்னார் சோதி மணிமுடியாய் வேண்டும் படிசெய் திடுகவென. (எஎக)

செப்பிக் காட்டிக் கொடுத்தருளச் சீரா ரரங்க னிருதலைக்கு
மொப்பா னுத லாலொன்று முரையா திருந்தா னுடையவருந்
தப்பிற் றந்தோ விவ்வுயிரென் றறவுஞ் சலித்துத் தமர்க்குரைப்ப
வப்பன் கூரத் தாழ்வான்வந் தடியேற் கிவரை யருளென்ன. (எஎஉ)

நின்று ளாழ்வா னவன்கையி னிகரி லெதிக டனிநாதர்
நன்றாய்த் திருத்திப் பணிகொளென வமுத னாரை நயந்தளிப்பச்
சென்று ரவன்பின் முன்னாழ்வான் றிரிந்தான் பலநா ளிதங்கூறிக்
குன்று வினையின் றொடரறுத்துக் குணமூன் றினுக்குங் குறிப்பரிய. (எஎங)

பேரா னந்தச் சுகோததியைப் பெருக்கி யவர்தஞ் சிந்தனையி
லாரா வமுதா மெதிராச ரடியா ரடியா ரடியென்னுஞ்
சீரார் நினைவைக் கொடுத்தருளித் திருத்தா ளிணைக்கீழ்ப் பணிவித்தா
னேரார் கூரத் தாழ்வானை யொத்தார் யாவ ரிருநிலத்தே. (எஎச)

வேறு.

ஆங்கவர் தமிழ்வே தங்க ளனைத்தையும் வடித்த சாரத்
தோங்கிய நூற்றந் தாதி யுரைத்தன ருலக முய்யப்
பாங்குட னூற்றெட் டான திருப்பதி யடைவும் பாடித்
தேங்கமழ் பொழில்சூழ் பூதூர்த்தேவனார்கழற்கீழ்வாழ்ந்தார். (எஎரு)

எதிகளா ரமுத மாய வெம்பிரான் றானும் வானோர்
துதிசெய வரங்கந் தன்னிற் றுகளறத் தருளின் வைகி
மதிமிகு தொண்ட ரோடு மன்னினு னதிலங் கோர்நாட்
டதியரோ டெழுந்து மாறன் றாடொழ வேண்டுமென்ன. (எஎசு)

மன்னுசீ ரரங்க நீங்கி மாலிருஞ் சோலை நின்ற
வென்னமு தத்தை வாழ்த்தி யாவருந் துதிசெய் தேத்த
வுன்னருங் கூடல் சார்ந்தாண் டும்பனை வணங்கிப் புத்தூ
ரன்னமென் னடைப்பூங் கோதை யடிதொழ வேகுங் காலை. (எஎஎ

வேறு.

தன்பா னின்றோர் பாகவதன் வடபா லெதிரே செலக்கண்டாங்
ன்பாற் சிவிகை விட்டிறங்கி யடியே னென்ன வெதிநாதர்
றன்பே பணியப் பின்பணிந்து நின்று னந்த முதல்வனொடு
மன்பா லகனென் றெனைநோக்கு மெந்தா யெங்கே யிருந்திப்போ.(எஎஅ

வேறு.

எழுந்தருளு கின்றதென வெதிநாதர் கேட்பவறக்
கொழுந்தனையாய் கோளூரெங் குடியிருப்பென் றருள்செய்தான்
விழுந்திறைஞ்சி மகிழ்மாறன் புகுமூரு மெய்ஞ்ஞானத்
தழுந்துமடி களுக்குப்போ மூராயிற் றேவந்தோ. (எஎகூ

வேறு.

ன்று ரெதிக டனிநாத ரெதிரே சென்று பணிந்தெழுந்து
ன்றான் குடும்ப நிருவாகம் பெரிதங் கதனு னிலைகலங்கிக்
ன்று நிலையே விடைகொண்டே னென்று னெந்தை கோளூரிற்
ன்றாற் கணிகொண் டவன்றெண்டீர் கழுதை மேய்த்தக் கூலிகொடும். (

டக்க வேண்டிற் றெனவறையக் கேட்ட பொழுதே பாகவதன்
டக்கு நோக்கு நினைவொழிந்து வருவேன் கூட வெனவுடனே
டக்க வில்லி புத்தூரின் ஞானக் கோதை தனைவணங்கி
டத்திற் கொடியபுலன்கடிந்தார் வேதந்தமிழ்செய் தவன்வளரும்.(எஅக

வேறு.

சீராருந் திருவழுதி வளநாட்டிற் சென்றமர்ந்தாங்
கோராருந் திருப்பதிக ளனைத்தினையுந் தொழுதேத்திக்
காரார்பூம் பொழிற்குருகூர் காரியார் திருமகனை
யீர்ராத காதலொடு மடிபணிந்தாங் கதிலிருந்தே. (எஅஉ

வேறு.

இத்திரு நகரின் மன்னு மெம்பிரா னுமஞ் சாத்தப்
புத்திர னொருவன் வேண்டும் பூதலத் தெமக்கென் றுங்கே
சித்திர மறையோர் பாலோர் சிறுவனை வாங்கி யன்றே
யத்திற நீத்தா னோனு மருளூறு மஞ்ச ணீரால், (எஅங

வேறு.

பெற்றனராங் கப்பொழுதே பெறுபாலன் றிருநாம
முற்றசீர்த் திருக்குருகைப் பிரான்பிள்ளா னெனவுரைத்துக்
கற்றவர்க டொழும்வான மாமலையைக் கண்டிறைஞ்சி
நற்றவத்தா லுயர்ந்தபிரா னம்பியைச்சென் றடிவணங்க. (௭௮௪)

வேறு.

சீரார் நம்பி யெதிராசர் செறிந்த பொழுதிற் குறுங்குடியிற்
பேரோ லக்க மாயிருந்து பிறழா நிலைசேர் பெருந்திரளை
நேரே கண்டங் கடிபணிந்து நின்ற விராமா னுசர்தம்மை
யேரா ரெதிகட் கதிபதியே யெமக்கொன் றியம்ப வேண்டுமென. (௭௮௫)

அருளிச் செய்தா ருடையவரு மருள்க விறைவ வதையென்னத்
தெருளிற் படிந்த சிந்தையனே சிறந்த லீலா விபூதிகளை
மருளைத் தவிர்த்தே முத்தரொடு மன்ன வைக்கும் பொருட்டானு
மிருளிற் படிந்த விவ்வுலகி லெடுத்த செனன மெண்ணரிதால். (௭௮௬)

வேறு.

அப்படிப் பிறந்து மொருவர்நங் கையி லகப்படப் படாமையி னாலே
செப்பருங் குணத்தாய் பெருந்துயருற் றுஞ்செகத்தினிற்சிலவரைப்பிடிப்ப
வெப்பமுற் றவரு மதோகதி களிலே விழுந்துமாய்ந் தழுந்துவர் நரகி
லிப்படி லீலா விபூதியி னியற்கை யீண்டுநீ செனனமொன் றெடுத்தே. (

எண்ணரும் புகழாய் நாற்கடல் சூழ்ந்த விருநில முழுவதுந் திருத்தி
விண்ணமர் பரம பதத்தினி லமரு மெய்ப்பெருந் திரளினும் பெரிதாய்
மண்ணிடைத் தழைப்ப வைத்தனை வைத்த பரிசினை மாசிலா யருளென்
கண்ணென நம்பி யருள்செய வெதிகட் கதிபருங் கட்டுரைத் திடுவார். ()

மாசிலா மணியே கேட்டிடு மடைவிற் கேட்கிலோ வாக்கினு லதனைப்
பேசலா வதுதா னன்றியப் பொருளைப் பேரருட் டிருமகட் கினிய
வீசனீ யெனினு மேழைநா னெனினு மியம்புதற் குரித்ததன் றென்று
ராசைவாய்ச் சென்ற சிந்தையேன் றன்னை யாண்டசீ ரிராகவ னனுசர். (

தக்கவா சகத்தை யெதிகளுக் கதிபர் சாற்றலு மழகிய நம்பி
யொக்குநம் பாலே குற்றமுண் டென்ன வோங்குசிங் காசனந் திழிந்து
பக்கநின் றவரும் பாலனும் போலப் பத்தனை யரியனை யிருத்தித்
தொக்கசீர்த் தொண்டக் குழாநடு நடுங்கச் சுருதியோ டமரர்க டுதிப்ப. (

வேறு.

திருக்குற் றொலிய றனைத்தரையிற் சிறப்ப விரித்தே யதிலிருந்தாங்
கிருக்கின் முடிவி லமர்ந்தபிரா னியம்பு கென்று வாய்புதைத்தான்
குருக்க ணம்பி திருச்செவியிற் குன்று விதோப தேசத்தை
யுருக்குக் கல்லு மரங்களுநின் றுருகும் வண்ண முரைசெய்தார். (

வேறு.

அமையுதவு மருட்ட வழங்கிய நம்பி யாசறு தேசிகர்க் களிப்பா
னென்றுநாங் காணே மனைத்துமுன் கொடுத்தோ முடையவர் பெறும்படி யினிமே
லின்றுதொட் டிராமா னுசர்தமை யுடையோம் யாமுமென் றிசைந்தருள் புரிந்தார்
வென்றியந் திகிரி வேதநா யகனார் வேறினி விளம்புவ தெவையே. (எகூஉ)

வேறு.

இப்படி நிகழ்ந்தபி னெதிக ணாயகர்
செப்பருந் தமரொடு நம்பி சேவடி
தப்பற வணங்கிமீண் டமரர் தாந்தொழ
வப்பனே விடையென வரங்க மன்னினார். (எகூங)

வேறு.

சீராரு மரங்கத்துச் சிலபகல்கண் மன்னவந்நாட்
பாராளு மன்னவனப் பாகவத ரிடத்திலென்று
மாராத காதலனு மகளங்க நாடாள்வா
னேராரும் வைகுந்த நாடாள வேகினான். (எகூச)

வேறு.

மாசறு கிருமி கண்டன் மற்றவன் மவுலி தாங்கி
யாசறு முலக மெல்லா மாண்டன னாளு நாளிற்
றேசுறு வேத நான்குஞ் செப்பிய பொருளு நிற்பப்
பேசிய தமத்தின் முன்னம் பின்னுகன் பிறப்பித் திட்ட. (எகூரு)

வேறு.

சைவா கமமே பிரமாண மாக நக்கன் றத்துவமே
மெய்வாய் பரமாய் மற்றெல்லா மபர மாகி விதிப்பதற்கு
மைவாய்ப் புலனை யடக்கறியா வசட்டுக் குரவர் சிலரோடு
கைவாய்ப் பிட்டு விபரீதக் கருத்தா யுலகை மிகக்கலக்கி. (எகூசு)

நாட்டிற் கற்றோர் தமைநாடி நஞ்சிற் கொடிதாய்த் தண்டித்துக்
கூட்டிச் சிவமே பரமல்லா தபர மென்னக் குறித்தெழுத்துக்
காட்டி யோலைக் கிடுமினெனக் கற்பித் திடுவித் திங்கங்கே
யோட்டிப் பிடித்துத் திரிகின்ற னொருநா ளானைக் காப்புக்கான். (எகூஎ)

வந்த மன்ன னுடையவரை மடியைப் பிடித்துக் கொணர்ந்துநா
மிந்த வோலைக் கெழுத்திடுவித் திடுதல் வேண்டு மெனப்பலகாற்
சிந்தை யுள்ளே நினைந்தொருவர் செவியிற் படாமற் பரிகரத்தை
யெந்தை யிருந்த வரங்கத்தி லேவிக் கொணர்க வீண்டென்றான். (எகூஅ)

வேறு.

முன்னவன் சேனை வந்து மடத்தினை வளையு முன்ன
முன்னரும் புகழின் மிக்க வுடையவர் கோயில் சேர்ந்
பன்னரும் பெரிய நம்பி பழுதறுங் கூரத் தாழ்வா
னென்னுமம் மெய்ம்மை யாள ரிருந்தனர் மடத்தி லக்க (௭௯௯)

சேவகர் மடத்தைச் சூழச் செறிந்தனர் சிலருள் புக்காங்
கேவரு நடுங்கக் கண்ட விருவரைக் கொண்டு போனார்
மூவரும் வணங்கு மாதி முதல்வனர் திருமு னின்ற
பாவலர் பெருமா னந்தப் பரிசெலாம் விரியக் கேட்டார். (௮௦௦)

கேட்டவ ரருகு சார்ந்த கேதமி ரெண்ட ரோடு
மோட்டுமன் னுணர்ச்சி யுன்னி முறைவழு மிருவர்க் காகக்
கோட்டிய துன்புந் தாங்கிக் கோகன கத்துண் மன்னும்
வாட்டமி றிருவின் கோன்முன் சென்றுற வணங்கி வாழ்த்தி. (௮௦௧)

வேறு.

அடியேன் செய்ய வேண்டுவதென் னரசன் செய்கைக் காழ்வானை
நெடியோய் பெரிய நம்பியையுங் கொண்டு போன னிகரில்லாக்
கடிசேர் துளபத் திருத்தாராய் கற்பித் தருள்க விதற்கொன்று
நொடியார் பொழுதி லெனநின்றார் நோற்றநோன்பின் மிக்கபிரான். (௮௦௨)

வேறு.

மறுப்படாப் புகழின் மிக்க மன்னுசீ ரரங்க னாரும்
வெறுப்பொடு சமணர் மிண்டர் விதியில்சாக் கியர்க ணம்பாற்
பொறுப்பரி யனகள் பேசிற் போவதே கருமஞ் சென்னி
யறுப்பகற் கிசையா தன்று னரசனென் றருளிச் செய்தார்.* (௮௦௩)

அண்ட [illegible] ஞ ரவ்வா றருள்செய வேதிக ஞாதர்
கண்டக ஞழ்வான் றன்னைக் கருதரு நம்பி தன்னைக்
கொண்டுபோய்ச் செய்யுந் தண்டங் கூடிநான் புசியா தேயிப்
புண்டரு முடல்கொண் டப்பாற் போவதோ கருமமென்றார். (௮௦௪)

ரத் தவர்பா லேக நினைந்தன ரேதிக ஞாத
ன்றதற் கரங்க னஞ்சி யருகினின் றாரை நோக்கி
யின்றவ ரரையில் வெள்ளை யம்பர மெடுத்துச் சாத்தி
யொன்றிய காவி வாங்கி யோரிடத் தமைத்து வைத்து. (௮௦௫)

* வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில்சாக் கியர்க ணின்பாற், பொறுப்பரி யன பேசிற் போவதே நோய தாகிக், குறிப்பெனக் கடையு மாகிற் கூடுமேற் றலையை ங்கே, யறுப்பதே கருமங் கண்டா யரங்கமா நகரு ளானே."—என்றபடி 'இப் ாது சடக்கென அரசன் தலையை யறுக்கக்கூடாது; அவன் பரிகரவானுகையாலே ாந்தரேண செய்துவாராநின்றேன்' என்று உடையவர் பெரிய பெருமாள் திரு ன்பு விண்ணப்பஞ் செய்தருளியதாகக் குருபரம்பராப்ரபாவத்தாற் றெரிகிறது.

### வேறு.

மகாணம பையன் மேனாட்டிற் கூறு நொடியுந் தாழாதே
தொண்டக் குழாங்கள் விரைவிலெனச் சுருதி முதல்வ னருள்செய்யப்
புண்ட ரீகக் கண்ணெம்மான் புகன்ற படியே திருவரையிற்
பண்டு சாத்துங் காடாயம் வாங்கி வெள்ளைப் பரியட்டம். (அ0ரு)

உடுத்தித் திரண்ட பாகவத ரொருவர் காணுச் சின்னெறியி
லெடுத்துக் கொண்டு மேனாட்டுக் கேகி னார்க ளதையறிந்து
விடுத்தான் மன்னன் பரிகரத்தை விரைவி னேகி வழிக்கட்டிப்
பிடித்துக் கொணர்க வுடையவரை யென்ன வவரும் பின்றொடர்ந்தார். ()

முன்னே திருமால் சீரடியா ரேக முடிமன் சேவகர்கள்
பின்னே தொடர்ந்து சென்றனரத் திறத்தை யெதிகள் பிரானோக்கித்
தன்னேர் தானுந் தொண்டர்களே காண்மின் மன்னன் றந்திரத்தா
ரின்னே நெறியிற் பின்றொடர்ந்தா ரீதோ வந்தா ரெனவிசைத்தார். (அ0அ)

அண்டா வண்ட மிடிந்திடினு மசையா நிலையார் செல்பவரைக்.
கண்டார் கண்ட காலையினிற் கருதற் கரிய வெதிநாதர்
தண்டா மரைக்கை யிரண்டாலுந் தரையின் மணலை யுறவாரிக்
கொண்டாங் காழ்வார் பெரியாழ்வார் கோதி லாத தமிழ்மறையில். (அ0கூ)

அடிமை களுக்கிங் கிடர்தீர்ப்பா னமைத்த பாட்டைத்* தெரிந்தெடுத்துக்
கொடுமை செய்யுங் கூற்றமுமென் கோலாடி† குறு கப்பெறுதென்
றிடியு மஞ்ச வார்ப்பவர்க ளெய்து நெறியிற் கைம்மணலைப்
படியிற் றூற்றிப் பத்தரொடும் பரம ஞானி யேகினார். (அக0)

அந்த மணலின் மதிகெட்ட வரசன் விடுப்பப் பின்றொடர்ந்து
வந்த சேனை யுறமிதிப்ப மனமும் வாக்குஞ் செய்தொழிலுஞ்
சிந்தை கலங்க வெவ்வேறாய்த் திருட்டி மறைந்து தடுமாறி
நொந்து விழுந்தா ரனைவர்களு நோன்பின் மிக்கார் போயினார். (அகக)

### வேறு

அந்தரத் தமரர் காண வரசனார் வி
தந்திரத் தவர்க ளெல்லாந் தத்தமி னினைவர் பார்ப்பா
மந்திர வாதம் பண்ணி மறைத்தனன் கண்ணை யையோ
விந்தநோய் தீர்ப்பார் யாவ ரெனக்கிடந் திரங்கி மாண்ட

* "கடல்கடைந் தமுதங்கொண்டு கலசத்தை நிறைத்தாப்போ
லுடலுருகி வாய்திறந்து மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன்
'கொடுமை செய்யுங் கூற்றமுமென் கோலாடி குறுகப்பெறா
தடவரைத்தோட் சக்கரபாணி சார்ங்கவிற் சேவகனே"—என்ற பாட்டை யென்க.

† கோலாடி—ஆஜ்ஞை.

மருவருந் தொண்ட ரோடு மன்னுசீ ரெதிக ளு
கருதருங் கான மெல்லாங் கடந்துபன் மலைக ே
பொருவிலார் தினங்க ளாறும் புசிப்பற மறந்து
திருமலை நல்லான் றெண்டர் சிலரமர் புனத்திற்

ஆங்கவ ரேகு முன்னே யரங்கமா நகரு ணின்று
நீங்கியோர் பத்த னன்றிந் நிமலரை யெங்குந் தேடி
யோங்குசீ ரன்பின் வேட முதலிக ளூரிற் சென்று
பாங்கறு தகைப்பால் வாடி விழுந்தனன் பரிதி சாய்ந்தான். (அகச)

வேறு.

ஆசிலா வேட முதலிகள்சென் றங்கவனைத்
தேசுபெறத் தொழுதேத்தித் திருமேனி யிளைப்பாற்றி
மாசிலா யெங்கிருந்து வருகின்ற யெனக்கேட்டார்
பேசரிய தவமிக்கா னரங்கமெனப் பேசினன். (அகரு)

என்றலுரம் முடையவர்க்கு மெழுந்திலங்கும் பெருந்திரட்கு
மொன்றியசீர் வாழ்விளுக்கு மொருகுறையு மருண்மிக்கா
யின்றளவு மில்லை யன்றே வருளென்ற ரிருந்தவனு
நன்றிசெறி மனத்தினரே நாடாளு மன்னவனல். (அகசு)

வேறு.

உடையவர் வெள்ளை சாத்தி யொளித்தொரு திசையிற் போனர்
தடையற நானு மந்தத் தலைவரை நாடி வந்தேன்
படைகளு மன்ன னேவப் பரந்தன தேச மெங்கு
மடைவுறு மரங்கத் துள்ள வாழ்வினென் றருளிப் போ (அகஎ)

வென்றதொட் டாறு நாளு மருந்துத லின்றி யாங்கே
யொன்றிய கருணை மிக்க வுடையவ ரென்செய் தாரோ
வென்றறப் பதைத்து வேட முதலிக ளிரங்குங் காலைச்
[illegible] காற்றுஞ் செறிதரு மிருளி லெம்மான். (அகஅ)

வேறு

இருளி லேகு நெறிபிழைத்தங் கெரியுங் கனல்கண் டெழுந்தருள
தெருளிற் படிந்த சிந்தையருஞ் சீறார் வேலிப் புறத்தாகி
யருளிச் செய்தார் நெறியேதென் றதனை வேட முதலிகளு
மருளற் றெளிரும் பாகவதர் குரலீ தென்னச் செவிமடுத்து. (அகசு)

விரைவிற் சென்று வேலியினைப் பிரித்து வேத முதல்வர்களிந்
நிரையிற் போது மென்க்கொடுபோய் நெருப்பின் மிகவும் விறகிட்டே
புரையிற் கொண்டு புகுந்தங்ஙன் பொருந்து மழையா லுறுபசியா
லுரையிற் றடுமா றுற்றவரை யோங்கு நெருப்பா லிதம்வருத்தி. (அஉ0)

டுத்த வீரத் துகில்வாங்கி யுடுப்பான் வெளுத்த துகில்கொடுத்துப்
படுக்கை கொடுத்துத் தேன்றினைமாப் பரிவாற் கொணர்ந்தே யருகளித்து
டுத்த காதன் மீதூர மலர்க்கண் பனிப்ப மனங்குழைந்தாங்
கடுத்து வேட முதலிகணின் றிறைஞ்சி யருளின் மிக்கோரே. (அஉக)

வேறு.

இப்பொழு தெங்கு நின்றும் வருவதென் றிசைத்தார் மேலோ
ரொப்பிலீ ரரங்க மென்று ருடையவ ரென்செய் தாரென்
றப்பொழு தவரைக் கேட்டா ரவர்களை யன்பா னோக்கித்
தப்பறு தவத்தீர் நீரத் தலைவரை யறிந்த தெங்ஙன். (அஉஉ)

என்றன ரிவர்க ணல்லா னெங்களா சிரிய னெங்கட்
கன்றவ னுபதே சித்த தாசறு மெதிரா சன்றன்
மன்றல்சேர் திருத்தாண் மேலாம் வைப்பென விருமி னென்று
னன்றிசேர் தனக்குந் தஞ்ச மதுவென நவின்று னென்றார். (அஉங)

அத்திற மவர்கள் கூற வாசறு மெதியைச் சூழ்ந்த
பத்தர்க ளாயிற் காண்மின் பரஞ்சுடர் வடிவு நீங்கி
யித்தலத் திந்த மேனி யெடுத்துடை யவரென் றெண்ணு
முத்தம ரிவர்கா ணென்று ருருகிநைந் தவர்க டாழ்ந்தே. (அஉச)

உடையவர் திருத்தா டன்னை யுறப்பிடித் தழுது விம்மிக்
கடையனிப் படிசெய் தானே கண்ணனை யனையா யென்ன
வடைவொடு தினைமாத் தேனோ டமுதுசெய் யிறைவா வென்றார்
தடையற வென்னை யாண்டார் தமரொடு மமுது செய்தார். (அஉரு)

வேறு.

கண்வளர்ந் தருளி மற்றைநா ளந்தக் கானக முதலிக டம்மிற்
றிண்மையா னொருவன் றன்னையு மிறைவர் சேர்த்தியி லொருதலை வரையுந்
தண்ணமர் பொழில்சூ ழரங்கமா நகரிற் றமர்களைக் கொடுவர விடுத்தார்
பண்ணமர் பனுவல் வல்லவர் நாற்பத் தைவர்கள் பரிந்துவந் தணைந்தார்.()

வேறு

ஆங்கவர் தங்க ளோடு மம்மலை தனக்கப் பாலே
யோங்கறு காதஞ் சென்றங் குடையவர் தம்மை யங்கே
பாங்குறு மன்பின் வேட முதலித னகத்திற் பத்தர்
பூங்கழ லிறைஞ்ச வைத்துப் பொருக்கென மீண்டு போனார். (அஉஎ)

வேறு.

அந்த வேட முதலிபுக லெல்லாம் வேட்டைக் காங்கேகிப்
பந்தம் பிடிப்ப விருட்பொழுதிற் படைஞ ரோடும் பதியணைய
வந்த வாறே யவனுடைய மனையா ளொருத்தி மாசில்லாக்
கந்த மலர்ப்பூங் குழலணங்கு கண்ண னடியார் புகுந்தமையை. (அஉஅ)

உரைத்தா ளிவனும் வேதியர்க ளுண்ணு திருக்க நாமுண்ண
விரைப்பூங் குழலா யடுக்கன்றன் றென்ன வேண்டும் பதார்த்தங்
ணிரைத்தா ளெடுத்துக் கொடுத்தருகே நின்ரூர் தம்மை யுடன்
திரைப்பாற் கடலிற் கிடந்தபிரா னடியார் களுக்குச் சீக்கிரத் (உகூ)

வேறு.

போனகஞ் சமைத்துப் படைத்திடச் சொன்மின் போமினீ ரக்கிரா மத்திற
ருனமா கின்ருன் வாரிய ஞெருவன் றன்னகந் தனிலென வவருந்
தேனமர் துளபத் தாரிஞற் கினியார் சீரிய பத்தர்க ளோடு
மானமர் நெறிசேர் வாரிய னகத்திற் சென்றனர் வானவர் துதிப்ப. (அ௯ ௦)

கொண்டுசெல் பதார்த்த மனைத்தையும் வைத்துக்கோதறு செங்கணுயகனர்
தொண்டர்கட்கினியவமுதளித்திடுமினெனச்சொலித்துத்தங்கண்மீண்டார்
தண்டடஞ் சூழு மக்கிரா மந்தான் கொங்குக்கோர் தலைப்பதி யதனுட்
கண்டவா ரியனர் தேவியார் பெரிய பிராட்டியாரதையிவர்கருதார். (அ௯க)

அப்பதி யமரும் வாரிய னகத்திற் சென்றவ ரணையவவ் வணங்கு
தப்பற வந்தோர் தண்டமிட் டெழுந்து சதுமறை முதல்வனர் தமர்கா
ளிப்பொழு தடியேன் போனகஞ் சமைப்பே னெழுந்துநீ ராடுமென் றிசைத்தா
ளொப்பிலா வெதிக டலைவனர் தமர்க ளொன்றும்வேண் டாமென வுரைத்தார்.

வேறு.

அடைவுறு நிலையீர் நீரு மஞ்சிட வேண்டா நானு
முடையவர்க் கடியை யாவே னென்றன ளுவமை யில்லா
டடையற வவளை வேதத் தலைவரு முவந்து நோக்கிக்
கொடையினுற்குணத்தான் ஞானக்கோதறு நலத்தான்மிக்க. (அ௯௯)

எதிகணு யகனர்க் காணீ யானவா றெவண மென்றூர்
முதியவ ளவரை நோக்கி முத்தமிழ் வல்லீ ரிந்தப்
பதியது பஞ்ச மாகப் பண்டுநான் கணவ னேடும்
விதிதொழு மரங்கம் புக்கேன் வேதியர் விண்ணு ளோர்கள். (அ௯ச)

வேறு.

அடிதொழ வுடையவ ரமர்ந்து வாழுநாட்
கொடியனே னவர்கழல் குறுக வென்னையு
நெடியமா லனையவர் நினைவி லாண்டுதங்
குடியடி யார்க்குறக் கூறு முண்மைகள்.

ஓரிரண் டளித்தன ரோங்கு தாமரைத்
தாருறு மரவடி யிரண்டுந் தந்தன
ரேருறு கரிப்பிவ ணீங்கப் போந்தவர்
பேர்சொலிப் பிதற்றிவாழ்ந் திருப்பன் பேதையேன். (அ௯௬)

# எம்பெருமானார் வைபவம்.

ஏன்றுமுன் னிகழ்ந்தமை யாவு மோதிநின்
றன்றவ ரளித்தசீ ரடியி ரண்டையு
மின்றுநா னருச்சனை செய்வ தீண்டென
மன்றலங் குழலினு ளுரைப்ப வள்ளலும். (அகஎ)

சிந்தையி னினைந்திவள் செப்பும் வாசக
மந்தமில் குணத்தினீ ரறிந்த துண்டுமுன்
வந்தன ளொருத்தியிந் நாட்டின் மாதினாள்
சந்தமார் பொழிற்றிரு வரங்கந் தன்னிடை. (அகஅ)

என்றன ரெதிகளுக் கதிப ரென்றலு
மொன்றிய தொண்டர்க ளுரைத்த மாதையக்
குன்றன தோளரிக் குழுவி லுண்டெனி
லின்றுகாண் டிருவிளக் கெடுத்திங் கென்றனர். (அகக)

வேறு.

சீரிய மயில் லனுந் திருவிளக் கெடுத்து நோக்கக்
கூரிய கருத்தின் முன்னங் குறித்தவக் கோல மீண்டும்
பாரினி லிருப்பக் கண்டு பணிந்திரு திருத்தா டம்மைத்
தாரியன் முடிமே லேந்தித்தலையறத்தரித்துக் கொண்டாள். (அசo)

வேறு.

உள்ளேப் பார்ப்பள் புறம்பார்ப்ப ளோங்கு மிவரே யுடையவரேல்
வெள்ளை சாத்தற் கடியென்கொ லென்பள் விம்மிப் பதைத்தழுவள்
பள்ள மடையி லுடைபுனல்போற் பத்தி வாரிச் சுழிமூழ்கி
யள்ளற் கமலத் திருமுகத்தா ளடிய ரோடு மறைகின்றாள். (அசக)

வேறு.

உம்பருங் கலங்க முனிவருங் கலங்க வுடையவ ராகிவீற் றிருக்கு
மெம்பெரு மானார் வெள்ளைசாத் திடுதற் கேதுவை யியம்புமி னென்றாள்
வம்பவிழ் குழலா ளன்புகண் டுற்ற பரிசெலா மறையவ ருரைத்தார்
தம்பமே மூலகுக் காயவர்க் கடுப்ப திதுகொலோ வென்றறச் சலித்தாள்.

சீருறு மணங்கே மரவடி யிரண்டுங் கொணருதி சீக்கிரத் தென்றார்
நேர்பெறக் கொணர்ந்தாடிருமகளனையாணிகரிலாத்தொண்டர்கள்வாங்கிப்
பார்மிசை வைத்தாங் கெதிகளு யகர்தம் பாததா மரைகளிற் பதித்தா
ரேர்பெறக் குறைத மேலுறுதல் காணு ரினிச்சமை போனக மென்றார். ()

துன்பிலாள் சமைக்குந்திருமடைப்பளியிற்சோதனைக்கொருவரை வைத்தா
ரன்பினார் திருவு மவள்கிருத் தியத்துக் கஞ்சிடப் போனகஞ் சமைத்தா
ளன்பெலா முருகித் திருவடி விளக்கி யிறைவனை யமுதுசெய் வித்து
முன்புதான் பணிந்த தலைவரையமுதுசெய்வதற்கழைத்தனண் முதியாள்.

சோதனைக் கிருந்த வன்பரை யெதிக டலைவனார் தொண்டரென் னென்றார்
போதினா ளனையா ளிவடிறத் தினுக்கோர் பொதுவிலைபொதுவிலை யென்றார்
வேதநா யகரா முடையவர் தாமு மிக்கசீர்த் தொண்டர்க ளோடு
மோதுசீ ரிராமன் சபரிபால் விருந்தன் றுண்டது போலவு முண்டார்.

தேவகி தனயன் விதுரனார் விருந்து சென்றுற வருந்துதல் போல
நாவலர் பெருமா னாகிய வெதிக னாயகர் தொண்டர்க ளோடு
மேவரும் வியப்ப விருந்தருந் தினர்பின் னேந்திழை செய்கையை நோக்கி
மூவரும் வியந்தார் முனிவரும் வியந்தார் முதியநான் மறைகளும் வியந்த.

வேறு.

ஆசறு மன்பின் மிக்கா ளளித்தபோ னகமுந் துய்த்துத்
தேசிகர் திலத மன்றைத் தினத்தினைக் கடத்தி யந்த
மாசிலாள் கணவன் றன்னைத் திருத்தினார் மற்றை நாளு
நேசமோ டிருந்தவ் வூரி னிகரிலார் தொண்ட ரோடும். (௮௪௭)

போயினார் கோவைக் கேறப் போயவூர் தொண்ட ரோடு
மாயவ னருளாற் கோவை மன்னினார் மன்பாற் போன
தூயநற் பெரிய நம்பி துகளறு கூரத் தாழ்வான்
றாயினைப் பிரிந்த கன்று தானெனத் தவிக்கு நெஞ்சர். (௮௪௮)

அத்திறங் கிடப்ப மன்னன் பரிகர மழைப்பப் போன
சித்திர நம்பி யாழ்வான் றேவர்க ணடுங்க வந்நாட்
பொய்த்திற முடைய வேந்தாற் பொருந்திய துன்பஞ் சார்ந்து
மெய்த்திறந் திறம்பா வாறு மறிந்தவா விளம்ப லுற்றேன் (௮௪௯)

தடையற வந்த சேனைத் தலைவர்க ளிருவர் தம்மைக்
கடையரிற் கடைய னான காவலன் முன்னே விட்டோர்
புடையுற வணங்கி நின்றார் பூபதி யவரை நோக்கி
யுடையவரெங்கேயென்றான்கண்டிலோமொளிக்காரென்றார். (௮௫0)

அவமரழுத் துறுநா ளன்றோ வரன்பர மாவ தன்றி
யிவரெழுத் தாலிங் கென்னா மென்றனன் மன்னன் மா[illegible]
கவருறு நெஞ்சன் மன்னன் காரியம் பரிக்கு நீரா
னெவரினு முயர்ந்தோ னாழ்வான் சீடனா லூரா னெனபான. (௮௫௧)

திருத்திகழ் மௌலி வேந்தே சிறந்தவிப் பெரிய நம்பி
குருக்களா மெதிரா சர்க்குக் கோதறு கூரத் தாம்வான்
கருத்துறு சீட னாகுங் கதுமென வுறுதி யீதா
மிருத்துவித் திவரைத்தண்டித் தெழுத்திடுவித்திடென்றான். (௮௫௨)

# எம்பெருமானார் வைபவம்.

நன்றென மன்னன் சென்ற நற்றவத் தோர்க டங்க
கொன்றல திரண்டு பாங்கி லோங்குமா தனங்க ளிட
கின் றுநீ ரிந்த வோலைக் கிடுதிர் நும் மெழுத்தை யென்று
னென் றுமெக் காலும் பொன்று விருநர கத்தில் வீழ்வான். (அ௫௩)

ஓலையே தெழுத்தே தென்று ருடையவர்க் கினிய வன்பர்
வேலைசூழ் பூமி வேந்தன் விளங்குசை வாக மந்தான்
மாலய னறியா நீதி வண்பாஞ் சிவமா மென்னக்
கோலிய வோலை யென்றான் கோதிலா விருவர் மன்னா. (அ௫௪)

எங்களைக் கொண்டிவ் வோலைக் கெழுத்திடு விப்ப தென்னோ
வுங்களுக் கான வாறு செய்வதே யுறுதி யென்று
ரங்கவர் தம்மை நோக்கி யரசனு மறைவ னோலை
பங்கமில் குணத்தீ ருங்க ளெழுத்திடப் படாதே யாகில். (அ௫௫)

உறுதியோ ரிறையு மில்லை யென்றன னுலகாண் மன்னன்
மறுவறு கூரத் தாழ்வான் மன்னவன் முகத்தை நோக்கி
வெறுவிது துடங்கி யென்னும் வேந்தனே யெவர்க்கு மேலா
கிறுமலப் பிரம மோலை யளவுமோ நிற்ப தென்றாம். (அ௫௬)

சிவன்பர மென்ன நீயே செப்பியீங் கெழுத்தி டென்று
பிவன்பர மானால் வேத னிருந்தலை கொய்த துன்பு
மவன்பர மன்றோ தீர்த்த லாங்கது கூடா தேபோ
யெவன்பர மென்ன வேன்றோ ரிறைவனை யிரக்க லாமோ. (அ௫௭)

பாண்டியன் கூட றன்னிற் பரத்துவ முணர்ந்த வுந்நா
ளாண்டுசெய் கிரியை யன்றோ வரசர்செய் கிரியை மன்னா
கூண்டிருந் துனக்குத் துன்பம் வருத்திடுங் குருக்க ணின்பால்
வேண்டுவ துரைத்திட் டாலு மெய்மெய்யாம் பொய்பொய் யாமால். ()

உலகினை யுண்ட வந்நா ளுமிழ்ந்தநாட் பன்றி யாகி
நிலவிய கோட்டி லண்டம் வைத்துற நிமிர்ந்த வந்நா
ளலகிலா விரிவின் விண்ணு மண்ணையு மளந்த வந்நாட்
சிலவர்நின் போல்வ ருண்டேற் சிவனவன் சேட மாமோ. (அ௫௯)

ஏருறு சிவனை மேலைப் பரமென வெழுது மோலை
சீர்பெற வவனை யீன்ற திசைமுக னிறந்த நாளிப்
பாருறு விசும்பு நீராய்ப் பாழுள வோங்கு மன்று
தாரமர் முடியாய் மற்றுத் தங்கரிக் கின்ற தெங்கே. (அ௬0)

ஓதுமின் மினியை நோக்கி யொருவனு தவனீ தென்றுங்
கீதறு மிரவி தன்னைச் சிறியமின் மினியீ தென்றும்
பேதமுற் றுணரத்தா லந்தப் பேதைதன் னளவு மன்றிக்
கோதறு முலகுக் கெல்லாங் குறிப்பதற் குறுமோ கோவே. (அ௬௧)

# எம்பெருமானார் வைபவம்.

வேறு.

வேத மீறியு மரனறியும் விரிஞ்ச னறியு மெய்ம்மை யினைக்
கோதி லுலகம் பதினாலு மறியு மந்தக் குறிகேட்ப
வோது மோலைப் புறத்தெழுதி யுபையப் படுத்த லெவரோமே
பூத மைந்து மிறந்தாலும் புரளா நிலையைப் புவிமன்னு.

அறியா தொன்றை யோரொருவ ரறிவிற் காட்டிச் செயப்புக்கா
னெறியா னின்ற குரவர்கட னதனைத் தவிர்த்து நிலைநிறுத்தல்
பொறிவாய்ப் புலனா லாங்கவரும் போத மயங்கிப் பூபதியே
யெறியா நின்ற கனலிடைநெய் யீவா ரொத்தா ரென்னுமால். (௮௬௩

என்றித் திறத்தை யாழ்வானுங் கியம்ப மன்னன் மிகச்சீறி
யொன்றும் பேச வேண்டாநீ ருரைத்த தெல்லாம் பொறுத்தனனா
னின்று சிவத்தின் மேலொன்று மிலதென் றோலைக் கெழுத்திட்டுக்
குன்ற மெடுத்தான் றமர்விரைவிற் போமி னென்னக் கூறினான். (௮௬௪

கூரத் தாழ்வா னதுகேட்டுக் குருணி யென்றுஞ் சிவமென்று
நேரொப் பிடுமோர் சொல்லுளதா மதனை நிலையாய்ப் பிடித்தெடுத்தாங்
கோரப் பட்ட குருணிக்கு மேலே பதக்கு முண்டென்னத்
தீரத் தெளிந்து திருவெழுத்தை யிட்டுக் கொடுத்தான் சீக்கிரத்தில். (௮௬௫

மன்ன னோலை தனைவாங்கி வாசித் தந்த வாசகங்கண்
டென்ன செய்தாய் கண்ணிரண்டு மின்று வாங்கு வேனென்று
னுன்னைக் கண்ட கண்புலையா யிருக்க லாமோ வெனவுரைத்துத்
தன்னை யனையான் றிருநயனந் தன்னைத் தானே சேதித்தான். (௮௬௬

வேறு

அ[illegible] ம்பியு மாழ்வான் றனக்கிதோ வடுப்பமெ
யித்திறங் காண வென்னைவைத் தனையோ வென்றிய முனை
மெய்த்திற முடையார் தமையினைந் தென்னை வாங்குதி விரைவிலென் றழுதான்
பொய்த்திறங்கடிந் தானாருயிர் தன்னைப்பொருக்கெனத் திருமகள்கொழுந

வாங்கிவை குந்தத் திருத்தின னாழ்வான் மடிமிசை நம்பிதன் னுடலைத்
தாங்கினான் மன்னன் சடக்கெனத் தில்லைச் சித்திர கூடத்தைச் சார்ந்தா
னேங்கினா ரமரர் முனிவர்க ணீச னென்செயப் புகுந்தன னென்ன
வோங்குமே ழுலகும் படைத்தவெம் மானை யுவரியி லெடுத்திட வுன்னி.

சென்றனன் றில்லைச் சித்திர கூடஞ் செறிந்தனன் செறிவதன் முன்னே
யன்றதிற் றிருக்கண் வளர்ந்தருண் மாய னனந்தனே முதலவ ரோடு
மொன்றுமாங் கின்றி மறைந்தனன் மறைந்தாங் கோங்குவேங் கடமென மறைக
ளொன்றுநின் றேத்துந் திருப்பதி தனிலே யெழுந்தனன் யாவரு மிறைஞ்ச

கண்டில னீசன் கண்ணனை யெங்கே கருமுகி லனையவ னென்றா
னெண்டிசை நடுங்கச் சித்திர கூடந் தனையிடித் தெடுத்திருங் கடலி
லண்டரும் பதைப்ப விட்டன னாழ்வா னலக்கணு நம்பிபோ னதுவுந்
தண்டுழாய்முடியான் றிருவரங்கத்திற்கேட்டனர்கேட்டலுந்தமர்கள்.

விரைவினி லனைக் காவினி லெய்தி விண்ணுல கடைந்தநம் பியைபோர்
புரையறு சிந்தை கூரத்தாழ் வானைப் பொருக்கெனக் கொண்டரங் கத்தி
னிரையுறத் தொண்ட ரேகியக் கணத்தி னிகரிலா நம்பியை வேத
விரைவழிப் பள்ளி படுத்தன ராழ்வா னுறுதுய ரரங்கர்கேட் டிரங்கி.(அளக)

ஆனவாள் விடுவித் தழைத்தரு காக்கி யாசறு கூரத்தாழ் வானீ
போனகா லத்திற் செய்ததீ வினையாற் புகுந்தமை யிதுவது கிடப்ப
வானவர் நடுங்க வுன்னையித் துயர மன்னனைக் கொண்டுசெய் வித்துத்
தானலான் போலப் போனநா லூரான் றன்னையுந் தம்மொடு முனிந்தோம்.()

மன்னவ னுடனே யவனுமா நரகின் மன்னுவன் மற்றதற் கவதி
யென்னுயி ருள்ள வளவுநீ யறிதி யாவருங் காணவிக் கணத்தி
லுன்னிநீ யுரைத்த தனைத்தையுந் தருவே னுரைத்தியிக் கணத்திலென் றுரைத்தான்
பொன்னவிர் மெளலி யரங்கனும் மானப் புனிதனை யடிதொழு தேத்தி. ()

வேறு.

தேன்பெற்ற துழாயலங்கற் றிருமாலே வேண்டுவது
நான்பெற்ற பெருஞ்செல்வ நாலூரான் பெறும்வரமிவ்
வூன்பெற்றுக் கிடைத்தபல மடியேனுக் குறுதிநின்னைத்
தான்பெற்றே னினிப்பெறு வேறுண்டோ தனிமுதலே. (அளச)

வேறு.

என்றிவை யாழ்வான் கூறி யிறைஞ்சலு மரங்க னாரு
மன்றல்சேர் குழலாள் சீதை மாருதி யோடுங் கேட்ட
நன்றிசேர் வரத்தை மானு நற்றவ முடையா யுந்தோ
வின்றுநீ யென்னிற் கேட்ட வரமென விகங்கள் கூறி. (அளரு)

ஏகுதி மடத்தி லென்ன விறைஞ்சிநின் றேத்தி யாழ்வான்
மேகமே காத்தி யென்ன விடைகொண்டு மடத்திற் புக்கா
பர்கசா தனனும் வானத் தலைவரும் பணியு மெய்யன்
மாகமா றனைச்சென் றேத்த மற்றுமோர் தினத்திற் போனான்.(அளசு)

தடையற வொருவன் கையைத் தாங்கிட வேகுங் காலே
யடைவிலா மன்ன னுட்க வரங்கனார் கோயில் காப்போ
ருடையவர் சம்பந் தத்தா ருட்புகத் தகாதிங் கென்றார்
நடையினின் றாழ்வான் மீண்டா னுனவ னடிமை யென்ன. (அளஎ)

DR U.V.S IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90.


ஆசுறு கிருமி கண்ட னாகிய துயரிற் பட்டுத்
தேசுறு மரங்கத் துள்ளார் சேர்ந்தனர் துன்ப மீதூ
நீசனு லேகி யாழ்வா னம்பியை நினைந்து வாடு
மாசிலா வெதிக ளாதர் செய்கையும் வழுத்த லுற்றே

மன்னினர் சிலநாட் கோவை மன்னிநற் றொண்ட
தன்னையே யனைய வெம்மான் சாலிகா மியத்தைச் சார்ந்து
பன்னருந் துன்ப நல்கும் பாதக னசிக்கும் வண்ணா
முன்னினர் ஞான வேந்த ராகையா லுவமை யில்லார். (அஎகூ)

பாதகக் கிருமி கண்டன் பொன்றிடப் படிமே லோமம்
வேதமந் திரத்தாற் பண்ணி விளங்குமக் கனலி னாங்கே
யோதுமோர் குறியை நோக்கி யுலகினைக் கெடு மன்னிப்
போதிவ னசித்தா னென்னப் பூரையிட் டிருந்தா ரந்நாள். (அஅ0)

கட்டுட னந்நா டாளுங் காவலன் கல்வி மிக்கான்
விட்டல தேவ னென்னும் வேந்தன்வந் ததிரா சன்றன்
மட்டவிழ் திருத்தாள் சேர்ந்து மாசறு சீட னானா
னெட்டெழுத் தவனுக் கோதி யெதிகடந் தலைவ னாரும். (அஅக)

வேறு.

ஏராரம் மன்னவனு லேழுலகுந் தொழுதேத்துஞ்
சீராருந் திருநாரா யணபுரத்திற் சிறப்பினொடுங்
காராரு முகின்மேனிக் கருமணியைப் பிரதிட்டித்
தாராத காதலர்க்கங் காராத னைக்காக. (அஅஉ)

வேறு.

முனபுற றமபாற மசறிந்தமரு முதிய பாக வதத்திரளி
லன்புற் றைம்பத் திருவர்தமை யமைத்தாங் காழ்வா னம்பியெனத
துன்பக் கடலி லேபடிவா ரொருநாட் டுதிக்குந் தொண்டரொடு
மின்பத் திசையுஞ் சலியானை னாசின் கரையிற் போயிருந்தார். (அஅ௩)

வேறு

ஆங்கிருந் தருளுங் காலை யம்மங்கி யம்மா ளன்பி
னோங்குசீர் மாறொன் றில்லா மாருதி யும்பர் வாழ்த்தும்
பாங்குறு சிறியாண் டானிப் பத்தர்கண் மூவர் நெஞ்சிற்
றூங்கிய வின்ப துன்பந் தன்னொடு மரஙக நீங்கி.

எதிகளு யகனார் தம்பா லெய்தியாங் கிறைஞ்சி யன்பிற்
றுதிசெய்து கரங்கள் கூப்பிச் சோபனந் துக்க மெந்தாய்
மதிசெயு மிரண்டுண் டென்ன மன்னவன் மடிந்த வாறும்
விதிவழி நம்பி யாழ்வான் பட்டதும் விளங்குந் தில்லை. (அஅ௫)

சித்திர கூடத் துற்ற செய்கையுஞ் செப்பி நின்று
ரத்திறங் கேட்ட வெம்மா னுசைறு குரவா வென்ன
வெத்திறத் தெவரு மஞ்ச விருநிலத் தலறி வீழ்ந்தார்
பத்தர்க டேற்றத் தேரு்ர் பலபல பன்னி நைவார். (அஅசு)

## வேறு.

என்னை நாடி வந்தவரோ டியானே காதே யிருவினையா
லுன்னைக் காட்டிக் கொடுத்தடியேன் வந்தே னிந்த வுடறுங்கிப்
பொன்னுக் கிடையாய் மண்பெற்றேன் புரைதீர் குருவே பூதலத்தின்
மன்னப் பட்டா ரென்போல்வா ருளரோ வென்ன வாய்குழறும். (அஅஎ)

எந்தாய் பெரிய நம்பியெனக் கிதுவோ வடுப்ப தெனவலறு
மந்தா மம்புக் கணையோவென் னமுதே யென்னு மாவென்னுஞ்
செந்தே னொழுகும் பூம்பொழில்சூழ் சீரா ரரங்க ரிவ்வாழ்வோ
தந்தார் நமக்கென் றகங்கரையுந் தரையிற் புரளுந் தனையயரும். (அஅஅ)

ஊட்டி வளர்த்த குருமணியே யுனக்கு நானே யொன்னலன்போ
ளுட்டிற் பழிக்கு மஞ்சாதே நரனை யிறைவு மதியாதே
காட்டிக் கொடுத்தேன் கிருமிகண்டன் கையி லதுகா ரணமாய்நீ
வீட்டிற் புகுந்தா யங்குள்ளார் வினையேன் செயலை வியப்பாரே. (அஅகூ)

சீரா ராழ்வான் றிருநயனம் போன திறத்தைச் சிந்திக்குங்
கூரா ராழி சங்கேந்துங் கொண்ட றமர்கட் கிவ்வாழ்வோ
பாரோர் காணக் கிடைப்பதுதா னென்னும் பலகாற் பதைத்திரங்கு
மேரார் சித்ர கூடத்தி லிறைவர்க் கிரங்கி யீடழியும். (அகூ0)

இன்ன வாறே துன்புற்றங் கெம்மா னிரங்கி யெழுந்திருந்து
முன்னை வினையென் றடன்றெளிந்து சென்ற முதியோர் முகநோக்கி
மன்னன் புரண்ட படியெங்ங னென்று ரவர்கள் வணங்கியெழுந்
துன்னவரியாய்மன்னவன்வாய்புழுத்துச்செத்தானெனவுரைத்தார் (அகூக)

அந்த வார்த்தை செவிபுகலு மாசி லாத வெதிராத
ரிந்த வார்த்தை யுரைத்தவர்க்கிங் கேது கொடுப்போ மெனவெண்ணிச்
சிந்தை குளிர்ந்தார்க் கதின்மேலொன் றில்லாத் திறத்தைத் தெளிந்தவர்க்கு
முந்த மொழிந்த துயர்தன்னைப் பின்னு மொழிந்தார் முழுமுதல்வர். (அகூஉ)

## வேறு.

ஓதரு நம்பி யாழ்வா னுறுதுயர் முற்கா லத்திற்
கோதறு வினையா லேனுங் குலத்தொடு மரங்க ரந்தப்
பாதகன் றனைக்கொன் றின்றே யறுத்தனர் பகையென் றூனு
மேதிலா வரங்கர் தன்னி லெய்திலோ மினிநா மென்ன, (அகூஙூ)

வேறு.

எண்ணித் திருநா ராயணத்தி லிசையுஞ் செல்வப்* பிள்ளைக்கு
மண்ணின் மறைகள் விதித்தபடி வகுத்துத் திருவா ராதனைமுறை†
பண்ணிச் சிறந்த திருநாட்கள் பலவு நடத்திப் பரிவோடும்
விண்ணிற் றமர்க ளுறவாழ்த்தச் சிலநா ளதனுள் வீற்றிருந்தார். (அகூச)

அந்த நாளிற் றிருவரங்கத் தம்மா னெதிக டனிநாத
ரெந்த நாட்டி லெவரருகி லிருந்தா ரெனினுந் தாம்விரைவில்
வந்து நம்மைக் காண்பதற்காய் வருக தமர்க ளொடுமென்னப்
பந்த மறுக்குந் திருமுகத்தைப் பரிவா லெழுதிப் புகவிடுத்தான். (அகூரு)

வேறு.

திருமுகங் கொண்டு சென்ருர் ருடையவர் திருத்தாளை போற்றி
யருமறை முதல்வ னீந்தான் றிருமுக மையா வென்ருர்
தருகவென் றிறைஞ்சி வாங்கித் தலைமிசைச் சூடி நோக்கி
வருகநீ விரைவிற் ருெண்ட ரொடுமெனும் வாச கத்தை. (அகூசு)

வேறு.

கண்டு கதுமென் றெழுந்திருந்து காதற் செல்வப் பிள்ளைக்காங்
கண்டர் புகழத் தொழில்செய்யு மைம்பத் திருவர் தமையழைத்திக்
கொண்டல் வண்ணன் கிணற்றருகிற் குறுகும் பிள்ளை யதுகுறித்து
மண்டு காத லொடும்பேணி வம்மி னென்ன வகுத்தமைத்தார். (அகூஎ)

வேறு.

இப்படி யெதிக ளுதை ரியம்பிட வவர்க ளெந்தா
யொப்பரு முத்தி தூர முமைப்பிரிந் திருக்கி லென்ருர்
செப்பரு மெந்தை யிந்தச் செங்கணு யகர்க்காட் செய்வூர்
தப்பற நான்சேர் முத்தி சார்ந்திடக் கடவ ரென்ருர். (அகூஅ)

வேறு.

அன்புற் றைம்பத் திருவரையு மவர்தாள் வணங்கி யுமைநோக்கி
யின்புற் றிருந்தோ மின்றளவும் பிரிந்தோ மில்லை யினிப்பிரிந்தாற்
றுன்பப் புலிக்கே யிரையாவோ மென்று தொழுதா ரெந்தையவ
ரென்பு முருக நின்றதுகண் டாளு லென்னைக் கண்டிருமின் (அகூகூ)

என்னத் தம்மை யக்கணத்தி லேறி யருளப் பண்ணுவித்துத்
தன்னைத் தானே தாபித்துத் தழுவித் தாந்தஞ் சத்தியெல்லா
முன்னற் கரிய திருவுருவிற் ருபித் தும்பர் தொழுதேத்த
மின்னைப் பொருவுந் திருமேனிச் செல்வப் பிள்ளை விடைகொடுப்ப. (கூ00)

---

* ‘செல்லப் பிள்ளைக்கு’ என்றும் பாடம். † ‘திருவாராதனைகள்’ என்றும் பாடம்.

வேறு.

சீராருந் தொண்டரொடுந் திருவரங்க நகர்புக்காங்
காராத காதலரும் பெருமானை யடிதொழுதா
ரேராரு நம்பெருமா ளெதிராசர் தமைநோக்கிப்
பாரோரி லொருவர்படாப் பெரும்பாடு பட்டனையே. (௬0௧)

வேறு.

என்பதனைத் திருவரங்கத் தெம்பெருமா னருள்செய்ய வெதிக ணாதர்
வன்பெருவா னகமுய்ய மண்ணுய்ய மண்ணுலகின் மனிதருய்யத்
துன்பமருந் துயரகலச் சுகம்வளர வகமகிழுந் தொண்டர் வாழ
வன்பொடுதென் றிசைநோக்கி நீகிடப்பத் துயருளதோ வாதிநாதா. (௬0௨)

வேறு.

என்றடி பணிய நம்பெரு மாளு மிருபதஞ் சென்னியிற் பதித்துச்
சென்றுநீ யாழ்வான் றிருநய னம்போ யிருந்தன னவனிடஞ் செறிந்தாங்
கொன்றிய கருத்திற் றுன்பறத் தழுவி யோங்கிய வன்பர்க ளோடு
மின்றுநின் மடத்திலேகெனவிசைத்தானெதிகளுக்கதிபருமீண்டார். (௬0௩)

வேறு.

மீண்டவர் கூரத் தாழ்வான் மேவிய விடத்திற் சென்று
பூண்டுறத் தழுவிக் கொண்டு பொருமியப் பொரும றீர
வாண்டுற வழுது விம்மி யையகோ வாழ்வா நம்பி
மாண்டனன் கொல்லோ வென்ன மண்ணவ ரிரங்க நைந்தே. (௬0௪)

எனக்கிது வருவ தேயென் னுயிரனு யென்று ராழ்வான்
மனத்திடைத் திருமண் கோணி மற்றிவர்க் கிருந்த தென்னக்
கனத்தசீர்த் ததியர் தம்மிற் கருதியாங் கொருவர் பாலு
நினைத்திரா திருந்தே னேரா* னெறியுறு நிலையா மென்றான். (௬0௫)

வேறு.

தொண்டக் குழாம்பின் னாழ்வானைத் தழுவி மனத்திற் றுயர்தீர்ந்தார்
மண்டு புனல்சூ ழரங்கத்தின் மன்னும் பாக வதரெல்லாங்
கண்டங் கெதிகட் கதிபரிரு கழற்கீழ் விழுந்து கதறியுளங்
கொண்ட துயர மறமுன்போற் குருமா மணியைக் கூடினர். (௬0௬)

சந்தார் பொழில்சூ ழரங்கத்திற் றம்மை யனைய வெதிநாதர்
வந்தா ரென்னுஞ் சோபனத்தைக் கேட்டு மண்ணும் வானுலகுஞ்
சிந்தா குலர்க டீர்ந்தனரெண் டிசையி லிசையுந் தொண்டர்களு
நந்தா விளக்கா முடையவரைக் காண்பான் வந்து நண்ணினர். (௬0௭)

* "ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருநாமங் கோணிற்றென்றாகிலும் நினைத்திரேனோ' என்று ஆழ்வான் விண்ணப்பஞ்செய்ய' என்பது குருபரம்பராப்ரபாவ வாக்கியம்,

### வேறு.

நண்ணிய தமர்க ளெல்லா நான்மறை முடியில் வைக்கும்
புண்ணியக் கொழுந்தன் றனைப் பூண்டுகொண் டெழுதின் றிந்த
மண்ணினி லும்மைக் காணப் பெற்றதே வாழ்வின் கென்ற
ரெண்ணிய விதியை வெல்வார் யாவரென் றெதிக ளாதர் ௯௦௮

மற்றவர் தம்மைத் தேற்றி மாசிலா நம்பி யாழ்வான்
கொற்றவன் கைப்பட் டெய்துந் துன்பமுங் கூறி நொந்தச்
சிற்றிய லாளன் றன்னைச் சீதரன் சிதைத்த வாறு
முற்றவர்க் குரைத்துப் பின்னு முடையவ ருரைக்க லுற்றார். (௯௦௯)

### வேறு.

கல்லைப் பெண்ணுரு வாக்கிய காகுத்தன் கிடக்குந்
தில்லைச் சித்திர கூடத்தைச் சிதைத்தவத் தீயோ
னில்லைப் போயின னினியதைச் சீக்கிரத் தெடுத்துத்
தொல்லைப் பாம்பணைப் பரமனைத் துயில்விக்க வேண்டும். (௯௧௦)

என்று கூறலு மறிந்தவ ரியம்புவ ரெந்தாய்
நன்றி யொன்றிய சித்திர கூடத்தை நலியப்
பொன்றிப் போயவந் நீசனப் பதியினிற் புகுநாட்
குன்றம் போற்கிடந் தருளிய கோவிந்த ராயர். (௯௧௧)

சீரு லாவிய சித்திர கூடம்விட் டேகிக்
காரு லாவிய பொழிலிடைக் கரிகளு முலாவ
வேரு லாவிய வேங்கடத் திமையவ ரோடும்
யாரு லாவிய பத்தருந் தொழுதெழப் பரிவால். (௯௧௨)

உதித்து ளாமரன யாவரு முரைத்தன ரென்று
ரெதிக்கு நாயகர் கேட்டலு மின்பமுற் றிறையைத்
துதிக்கு மங்கையர் கோனுரை சொற்றவ ருமல்
விகிக்கு நற்பதி யிரண்டுக்கு மொருவனு மென்மை. (௯௧௩)

காடடி ளனகொலோ வெனிலது காண்டுமென் றந்தக்
கூட்ட மோடெழுந் தேகிநற் குருமணி யருளிற்
பூட்டும் பேரரு ளாளர்தம் பூங்கழல் வணங்கி
நாட்டின் மாந்தரும் பின்செல நான்மறை முழங்க (௯௧௪)

ஆங்கு நின்றெழுந் தமரர்க ளுடொறும் பரவும்
வேங்க டத்தினை மன்னியப் பதியின்மெய் யனந்தன்
றுங்கக் கண்வளர்ந் தருள்வதைத் தமரொடுங் கண்டா
ரோங்கு தென்றில்லைச் சித்திர கூடத்தி லுவப்ப (௯௧௫)

மன்னுஞ் செல்வனை வானவர் முறைமுறை பணிய
மின்னு மாமழை தவழும்வேங் கடத்தில்வித் தகனை
யென்னெ முன்பெரு மடலினிற் கலிகன்றி யிசையாற்
பன்னு நூர்பய னிதுவெனக் காட்டிய படியே. (௯௧௬)

அங்கு நின்றற மறைந்தினி தமரர்கள் வணங்க
விங்கு வந்துகண் வளர்ந்ததின் றெந்தையென் றிறைஞ்சி
மங்கு ரூப்மணிக் கோயிலு மாடமா ளிகையுஞ்
செங்க ணுபகர்க் கத்தலத் திருந்துசெய் வித்தே. (௯௧௭)

எந்தை பின்புவேங் கடத்திறை பூங்கழ லிறைஞ்சிச்
சிந்தை யுண்மகிழ்ந் தேத்தின ரேத்தலுந் திருமா
லந்த மில்குணத் தாயுனக் கரங்கமா நகரிற்
றந்து ளோமுனம் விபூதிக ளிரண்டையுந் தனதாய். (௯௧௮)

இன்னும் வேண்டுவ தியம்புதி யெனத்திருப் பவள
மன்ன மூர்த்திதன் றூதையார் திறந்தருள் செய்ய
வுன்னை யென்னுயிர்க் குறுதியாய்ப் பெற்றன னிதன்மே
லென்ன வேண்டுவ தினியென விறைஞ்சிநின் றேத்தி. (௯௧௯)

வேறு.

பெரியதிரு மலைநம்பி பிரசமல ரடிவணங்கி
விரிபுகழ்சே ரெதிராசர் விடைகொண்டு தொண்டரொடு
மரியமறை தொழுங்காஞ்சி யருளாள ரடிவணங்கித்
தெரிவரிய தென்றில்லைச் சித்திரகூ டந்தன்னை. (௯௨௦)

வேறு.

கட்டுவித் ததனின் மாயன் கண்வளர்ந் தருளும் [illegible]
சிட்டர்க ளோடும் வந்தத் திருப்பதி தன்னை மன்னி
யுட்டெளி வுடைய வெம்மா னும்பரும் பிறரும் வாழ்த்த
மட்டவிழ் பொழில்சூழ் தில்லை வளநகர் வளங்கொண்டோங்க. (௯௨௧)

சித்திர கூட முனபாற சறபபுறக கடடு வததாங
கெத்திறத் தெவரும் போற்று மிறைவனைப் பிரதிட் டித்திட்
டத்திறத் தவற்கன் போடு மணிதிரு விழாக்க ளாளும்
பத்தர்கள் பரவி யேத்த நடந்திடும் படிகள் செய்தே. (௯௨௨)

வேறு.

அந்த மாயன் றனைநோக்கி யருள்சேர் தில்லைக் கோவிந்தா
விந்த விஞ்ஞை மினியொருகாற் செய்யே லென்ன விசைத்தேத்திப்
பந்தங் கடிந்த லெதிராசர் பத்தர் துதிப்ப விடைகொண்டு
சிந்தை களிப்ப வரங்கத்திற் றேவைப் பணிந்தாங் கினிதிருந்தார். (௯௨௩)

வேறு.

அந்நாளி னம்பெருமா ளாழ்வானை யனை
முன்னுய்ந்த வடமொழியி லொன்றுரைத்தி யெனமொழிய
வென்னுவிக் குறுதுணையே யெனவிறைஞ்சி யெதிர்நின்று,
தன்னுவுக் கிதத்ததொரு சுலோகமவண் சாற்றினன். (௩௨

வேறு.

கூறிய சுலோகத் திற்குக் குறித்தநற் பொருளை யெல்லாந்
தேறிநின் றுரைப்ப வன்றத் திருமகள் கொழுந ளுைய
நாறுபூந் துழாயா னன்பி னயம்பெற விருந்து கேட்டு
மாறுறு மாழ்வான் றன்னை மலர்க்கணுற் குளிர நோக்கி (௩௨டு)

சிந்தனை மகிழ்ந்தோ மன்பாற் செப்பிய சுலோகந் தன்னு
லந்தமில் குணத்தாய் வேண்டும் பொருளெலா மறையா தின்றே
தந்தனம் யாநீ வேண்டிக் கொள்ளுதி தடையா தென்று
னெந்தைமற் றதுகேட் டாழ்வா னெண்ணிலாப் பெருமா யன்றான்.(௩௨௬)

வேறு.

மெய்ய னல்ல னொருவருக்கு மென்ன மாறன் விளம்பியதிச்
செய்ய கமலத் திருமகள்கோன் றன்னை யதனுற் செப்பியசொ
லைய மின்றி நிச்சயித்தல் வினையேற் காமோ வெனவஞ்சிப்
பொய்ய னேனுக் கீங்கொன்றும் வேண்டாம் புனித வெனநின்றான்.(௩௨எ)

வேறு.

ஆராத காதலனு மாழ்வானீ தறையவிறை
நேராய்நீ கேட்டபொரு டப்பிலோ நிச்சயமென்
சீராருந் திருவாணை சீபெரும்பூ தூர்த்தோன்று
மேராரு மெதிராச ராணையவை யீகின்றோம். (௩௨அ

வேற

கேட்டுக் கொள்க வென்றுரைப்பக் கேடில் கூரத் தாழ்வானும்
வாட்டமின்றி வீழ்ந்திறைஞ்சி மலராள் கோனே யாயிலிங்கென்.
கூட்டை விடுவித் திடுகவின்றென் றுரைப்பக் குருகூர் மகிழ்மாறன்
பாட்டுக் குருகும் பிரானதனை யொழிந்த வெல்லாம் பகரென்றான்.(௩௨௯

அதுகேட் டிறைஞ்சி யாழ்வானு மாசி லரங்கத் தினிதமரு
மதுவார் துழாயாய் திருவாணை மறுத்தா ருலகிற் படும்பாட்
பொதுவாய் நோக்காய் மணந்தவிர்ந்த பூவுக் குளதோ வீடு
னிதுவாய்ப் புற்ற சொல்லுக்கென் றெந்தை பிரிவுக் கிருந்திரங்கி. (௩௩0)

ஆனாற் றங்ஙோ மென்றுவிடைப் பரியட் டத்தோ டணிகளபந்
தேனார் துளபத் திருமாலை திருக்கைச் சிறப்பென் றிவைநல்கிப்
போநா மன்னு முத்தியிலென் றருளிப் புனிதன் விடைகொடுப்ப
வானோர் மகிழ மண்ணிரங்க மலராள் கோனை வலஞ்செய்தே. (௯௱௧)

ஈ ராழ்வான் விடைகொண்டு சிறந்த வர்ச்ச ராதிமையிப்
பேரோர்க் கறிவித் திடுவான்போற் பத்தர் துதிப்ப வலங்கரித்தன்
றேரார் திருமா ளிகைதன்னி லேகா தாழ்வார் கோயில்செறிந்
தாரா வன்ப னினிதிருந்தா னண்டாள் கேட்டாங் கருகணைந்தாள். (௯௱௨)

வேறு.

மைந்தர்க ளிருவர் தாமும் வந்துதந் தாதை பாதஞ்
சிந்தையு ளிருத்தித் தாழ்ந்தார் சீரிய வெதிக னாதை
ரிந்தவா றனைத்துங் கேட்டென் னின்னுயிர் பிரிவ தென்ன
நொந்துதன் னுணர்வை யுன்னு நுண்ணுணர் வுடையா னேகி. (௯௱௩)

இருந்தவக் கோயி லெய்தி யிதுவென்கொ லாழ்வான் வீடென்
பொருந்துகைக் கனிதா னன்றோ போவதாங் கெற்பி னன்றோ
திருந்திய முறைதா னீமுன் செல்லநான் பின்னே போத
லருந்தவ முடையாய் நோக்கி லடாதைதை யயர்த்து ளாயோ. (௯௱௪)

எனத்திரு வுளத்திற் றுன்புற் றெதிகடந் தலைவர் கூற
மனத்தினிற் களிகூர்ந் தாழ்வான் வள்ளலே நீமுன் போயாங்
கெனக்கெதிர் கொள்ளுந் தன்மை நீதியோ யானே முன்போய்
கனத்தசீ ரன்போ டுன்னை யெதிர்கொளக் கடவே னென்றான். (௯௱௫)

வேறு.

என்றுமகிழ்ந் தாழ்வானு மிவையுரைப்ப வெதிநாதர்
நன்றிசெறி வைகுந்த நாட்டவரே சீமான்க
ளின்றமுத லிங்கிருந்தார் யாவர்களுஞ் சீகேடர்
குன்றனைய குணத்தானைப் பிரிந்திருக்கக் கூடாதால். (௯௱௬)

வேறு.

என்ன மனத்தின் மிகநொந்தாங் கிருந்த பத்தர் முகநோக்கி
யுன்ன வரிய வெதிநாத ரமுதா ராழ்வா னோங்கியசீர்
மன்னு மாண்டா டிருமடியில் வைத்து முடியை மைந்தர்மடி
தன்னிற் றிருத்தாள் களைநீட்டி யெதிரா சர்க்குச் சரணமென. (௯௱௭)

படுத்தா னாழ்வா னுடையவரும் பலகால் வருந்தி யுடன்றெளிந்தே
யடுத்தாங் கிருந்து திருச்செவியிற் றுயத்தை யருளி விண்ணேற
விடுத்தார் வேத விதிப்படியே மெய்ஞ்ஞா னத்தின் வேதியனை
யெடுத்தார் சால வலங்கரித்தார் பள்ளி படுத்தா ரிருநிலத்தில். ௭

ஓதுந் தினங்க ளொராறு கடந்த பின்னுங் குடையவரும்
போத மிக்க வாழ்வான்றன் புதல்வ ராய விருவரையும்
வேத முதல்வன் சன்னிதியிற் கொடுபோய் விட்டு வித்தகனின்
பாதஞ் சேர்ந்த வாழ்வான்றன் புதல்வ ரிந்தப் பாலகர்க்கு.

நிறைந்த வுயிரை நீகொடுத்தி நிமலா நீமுன் னென்வசத்தி
லறைந்த வித்தை யீங்கெல்லா மடியே னனைத்துங் கொடுக்கின்றேன்
குறைந்த நிலையிற் குறையாதா யென்னக் காட்டிக் கொடுத்தனராண்
டுறைந்து துயிலும் பெருமானு மோங்குந் திருமா மகள்கையில். (௯௪0)

காட்டிக் கொடுப்ப வாங்கவளுங் காதன் மிக்க புத்திரராய்
நாட்டிற் சனங்க ளறிந்துய்ய நலனார் மஞ்ச ணீர்கொணர்ந்தாங்
கூட்டி மீள வுடையவரை யுவமை யில்லா யீங்கிவரைக்
கூட்டிக்கொடுபோய்ப் பலகலையுங் கொடுத்தியென்றாள் கோகனகை. (௯௪௧)

வேறு.

உடையவ ரருகு நின்ற வுத்தமக் குணத்தின் மிக்க
வடைவுறு மெம்பார் தம்மை யாசற நோக்கி யன்பா
தடையறத் தரிச னார்த்தந் தனையிவர்க் களித்தி யென்ன
விடையெனப் பணிந்து தொண்டர் தொழுதெழ மீண்டு போனார். ()

போனவ ரரங்கந் தன்னிற் புரையறு தொண்ட ரோடும்
வானவர் கொழுந்தை வாழ்த்திச் சிலபக லிருந்து வாழ்ந்தா
ரானசீர்த் தரிச னார்த்த மனைத்தையு மெம்பா ரந்த
மானமா மைந்தர்க் கன்றே வழங்கினார் மண்ணோ ருய்ய. (௯௪௩)

வேறு.

இந்தவகை நிகழ்நாளிற் றிருவரங்கத் தெதிமுதற்குச்
சிந்தைமகிழ் கயிங்கரியஞ் செய்துவருந் தேசிகர்க
ளந்தமில்சீர்த் திருநாம மவரவர்கட் கடுத்ததொழின்
முந்துதமறை யுரைத்தபடி செய்ததிற மொழிகின்றேன். (௯௪௪)

வேறு.

சீரிய முதலி யாண்டான் சிறந்தமெய் நடாதூ ராழ்வான்
கூரிய கருத்தின் மிக்க குணக்கட றனக்கு நநனுங்
காரியஞ் செய்து வாழ்வர்* கதமறு கூரத் தாழ்வா
னேரியல் பாடி யத்துக் கிருந்துசாத் துணையாய்ப் போனா (௯௪௫)

* 'கூரத்தாழ்வானும், முதலியாண்டானும், நடாதூராழ்வானும், பட்டவர்க்கமும் ஸ்ரீபாஷ்யத்துக்கு உசாத்துணையாய் இருப்பர்கள்' என்பது குருபரம்பராப்ரபாவ வாக்கியம்.

ஆசிலா நிலைசே ரெந்தை யருளாளப் பெருமா ளந்தத்
தேசிகர் மடத்தின் மன்னுந் திருமகள் கொழுந னுய
வீசனை யாராதிப்ப ரெழுந்தபே ரன்பா னுரு
மாசிலாக் கிடாம்பி யாச்சான் மடைப்பளிக் கவன்ற னேடும். (கூசசு)

வேறு.

கேதங் கடிந்த மெய்ஞ்ஞானி கிடாம்பிப் பெருமா ளறுசுவையோ
டோது நாலு விதத்தடிசி லும்பர் மகிழச் சமைத்தளிப்பர்
போத மிக்க வடுகநம்பி புனிதர்க் கெண்ணெய்க் காப்பழகார்
வேத முடிவில் வீற்றிருக்கு மெய்யிற் சாத்தி வியந்தெழுவான். (கூசஎ)

வேறு.

கோமடத்துச் சிறியாச்சான்* கலசப்பானை குலவுதிருவடிநிலைகள்கொண்டம்மேலோர்
போமிடத்துப்பின்செல்வன்போதமிக்கபொருவருஞ்சீருறங்காதவில்லிதாதர்
தாமடத்திற் கருகூலம்† நோக்கி வாழ்வர் தவமிக்க வம்மங்கி தக்க நீதிப்
பாமடந்தை பணிந்தேத்தெம் பெருமா னுர்க்குப்பாலமுதுகாய்ச்சுவனற்பரிவானுளும்.

வேறு.

ஆசி லாத வெதிராச ரமுது செய்யுந் தளிகையினை
மாசி லுக்க லாழ்வானு மாற்றிப் போது நாணுளுந்
தேசொ டுக்க லம்மாளுஞ் சீரா ரால வட்டத்தா
லீசற் கினியார் தமைமகிழ்வித் திடுவா னருண்மா ருதியாண்டான். (கூசகூ)

கூறுந் திருமஞ் சனமெடுப்பன்‡ குலவு மருளி னெறிநின்ற
மாறொன் றில்லா மாருதியு மாசில் சிறிய வாண்டானுங்§
தேறி மடத்துக் கமுதுபடி சிறந்த நெய்பால் கறியமுதாங்
காறு சுவைக்கு மிதந்தேடி யளிப்பார் நாளு மளிமிக்கார். (கூருO)

வேறு.

இப்படிப் பலபல வெண்ணி றேசிகர்$
தப்பறு கயிங்கரி யங்க டாஞ்செய்வ
ரொப்பிலா வுடையவ ரேற்ற முள்ளவா
செப்பினோர் சிலரதிற் சிறிது கூறுவாம். (கூருக)

* 'கோமடத்துச்சிறியாழ்வான்' என்பவருமிவரே. † 'கருவூலம்' என்றும் பாடம்.

‡ 'மாருதிப் பெரியாண்டான் திருக்கைச்செம்பு பிடிப்பர்' என்றும், 'தூய முனி வேழம் திருமஞ்சனமெடுப்பர்' என்றும் குருபரம்பராப்ரபாவத்தால் தெரிகிறது.

§ 'மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான்' என்ற ஒருவரையே இந்நூலாசிரியர் 'மாறொன்றில்லா மாருதியாண்டான்', 'சிறியாண்டான்' என இருவராகக் கொண்டார் போலும்.

$ 'எண்ணில் தேசிகர்' என்றது-திருவரங்க மாளிகையார், வண்டர், சொண்டர், இராமாநுசவேளைக்காரர், அகளங்கநாட்டாழ்வான் முதலியோரை.

வேறு.

சீரா ரரங்கர் வேங்கடவர் சிறந்த கருணை யருளாளை
நாரா யணனுந் தென்குறுங்கை நம்பி குருகூர் நம்மாழ்வார்
பாரோர் புகழு நாதமுனி பத்தர் பரவு மாளவந்தா
ரேரார் பெரிய நம்பிதிருக் கோட்டி நம்பி யெழின்மிக்க. ௫௨

திருமலை நம்பி திருமாலை யாண்டான் சீரார் திருவரங்கப்
பெருமா ளரைய ரிதுவன்றிப் பிரம முணர்ந்த பிசாசூமை
குருமா மணியா மெதிராசர் குலவு மேன்மை வெளியிட்டா
ரருமா மறையின் முதலாநம் பெருமாள் வெளியிட் டவைதெளியில். (௯௫௩

சீரா ரருளா ளப்பெருமா ளுடனே தர்க்கஞ் செய்தெழுநா
ளாரா வமுதத் திருவாக்கா லவனை யிதனால் வெல்கவென
வேரார் வேத முடிவையெடுத் திசைந்த லாலு* மெம்முடைய
நேரா முபய விபூதியையு நினக்கே தந்தோ மெனலாலும். (௯௫௪

எந்தை திருவேங் கடத்துறைவான் வெளியிட் டவைதா னென்னென்னிற்
பந்தங் கடிந்த வெதிராசர் பத்த ரோடுந் தொழுதெழுநாட்
டந்தோ முபய விபூதியையுந் தெற்கு வீட்டிற் றுனிருந்து
மூந்தவின்னும்வேண்டுவதைமொழிகவென்னமொழிந்தமையால்.† (௯௫௫

வேறு.

அருளாளர் வெளியிட்ட படியறையி லாங்கொருநாட்
டெருளார்ந்த பாகவதத் திரளோடு மோலக்க
மருளார்ந்த வுலகினிடர் மாய்ந்தறவாங் கிருந்தனரப்
பொருளார்ந்த சிந்தையுறும் பூசுரர்க ணிலைகாண்பான். (௯௫௬

---

"அருளாளப் பெருமா ளெம்பெருமானா ருடனே தர்க்கித்தபோது உத்தரஞ் சொல்
மாட்டாமல் பேரருளாளர்க்கு விண்ணப்பஞ் செய்ய, அப்போது, 'இன்னபடி உத்
ரஞ் சொல்லும்' என்று செங்கனிவாய் முறுவல் தோன்ற அருளிச் செய்கையாலு
யாதவப்ரகாசனுக்கு ஸ்வப்நமுகேந, 'நம் இராமாநுஜனை ஒரு ப்ரதக்ஷிணம்பண்ண
த்ரிதண்டி ஸந்யாஸியாவாய்' என்று அருளிச் செய்கையாலும் உடையவர் ப்ரபா
த்தைப் பேரருளாளர் வெளியிட்டபடி." என்றுள்ள குருபரம்பராப்ரபாவ வாக்
யத்திற்கு இது மாறுபடுகின்றது. முன்னும் இவ்வாறே யுரைத்திருத்த லறிக.

"உடையவர் திருமலைக்கு எழுந்தருளும்போது ததிவிக்ரயம் பண்ணுமவளான து
பையூர்க் கொண்டியென்பா ளொரு கோபாங்கனை வந்து க்ரயத்ரவ்யார்த்தமா
உடையவரையும் முதலிகளையும் ஸேவித்து நிற்க, உடையவர் அவளுக்குத் தளிகை
ப்ரஸாதம் ப்ரஸாதிக்கச் சொல்லிக் கிடாம்பி யாச்சானை நியமித்தருள, அவர் ப்ரஸ
தித்த ஸ்ரீபாத தீர்த்த தளிகை ப்ரஸாதங்களாலே ஸம்யக்ஜ்ஞாநோதயமுண்டாய்
'அடியேனுக்குத் ததிமூல்யந் தரவேண்டா ; மோக்ஷந் தரவேண்டும்' என்று ப்ரார்
திக்க, உடையவர், 'அதற்குத் திருவேங்கடமுடையான் கடவர்' என்ன, அவளு
'அதற்குத் தேவரீர் ஒரு சிறுமுறி தரவேண்டும்' என்ன, உடையவரும் உகந்து தர
பெற்றுத் திருமலையேறி த்வரித்து வரக்கண்டு திருவேங்கடவர் எதிரே சென்று அச்
சிறுமுறியை வாங்கி வாசித்துக்கொண்டு திருநாடு தந்தருளுகையாலும்" என்று
திருவேங்கடத்தப்பன் உடையவர் ப்ரபாவத்தை வெளியிட்டதற்கு மற்றோர் உதா
ஹரணமுங் குருபரம்பரா ப்ரபாவத்திற் காட்டப்பட்டிருக்கின்றது.

வேறு.

இருந்துநம் மிராமா நுசர்த்தமை யுடையார் வருகவென் றிசைத்தன ரிசைப்ப
வருந்தவ முடைய தேசிகர் பலரு மணைந்தன ராங்கதை மதியார்
திருந்திய பெரிய நம்பிதன் மரபிற் சிலரதை யிசைவுற நோக்கி
விருந்தினி லமர்ந்தார் நீங்களு மழைப்பக்கோத றாநிலையினீ ரிராவில். (௯௫௭)

வேறு.

வாரா திருந்த படியென்கொ லென்றார் நம்பி மைந்தர்களும்
சீரார் முகிலே யெதிராசன் சீட னன்றோ வெமக்கென்றார்
காரார் வண்ண னதுகேட்டுக் கமலை யுடனாங் குறநகைத்துப
பாரா ணீதித் தசரதர்நற் பரிந்த சிந்தை வசுதேவர். (௯௫௮)

ஆதி யோர்க ணழைப்புதல்வ னாக நினைத்தல் போலந்த
நீதி யோனைச் சீடனென நீங்க ணினைத்த லெனவுரைத்தச்
சோதி முகின்மற் றாங்கொருநாட் டிலங்கு கிடாம்பி யாச்சானும்
பேதி யாத சிந்தையனை யழைத்துப் பின்முன் னுணர்ந்தோனே. (௯௫௯)

ஒன்று சொல்லிக் காணென்ன வுரைத்தா னவனு மெதிராசர்
மன்றல் கமழுந் திருத்தாள்க ளிரண்டு மன்றி மறைமுதலே
யொன்று மறியே னடியேனென் றிசைத்தா னதுகேட் டின்புற்றுக்
குன்ற மெடுத்தா னுடையவரை யுடைமை யாகக் குறித்திருந்தும். (௯௬0)

கூறா நின்ற கலைகள்பல கற்றா யதிலே குறித்திவனைத்
தேறா தொன்றை வேறாகச் செப்பி யல்லாக் கதிகளிலே
போறா யோவென் றறிவதற்காய்க் கேட்டே னென்னப் புகறலினா
லாறார் சடையான் றொழுநம்பி வெளியிட் டதுதா னங்கவனை. (௯௬௧)

வேறு.

தேசிக னாகக் கொண்டு செப்பிய விதத்தைக் கேட்டுப்
பேசிய வெதிகள் வேந்தெம் பிரானென விருந்த லானும்
வாசமார் பொழில்சூழ் நீதி வண்குரு கூரின் மாற
னாசற வெளியிட் டானென் றிசைத்தது மறைய வூற்றாம். (௯௬௨)

வேறு.

உலக மனைத்துந் திருத்துதற்கென் றுதித்திங் குலக மளந்தவமே
நிலவு முயிர்க ளனைத்தினுக்கு நின்கண் வேட்கை யெழுப்பிடுவெ
னலகி லாத மாமாயா யானென் றேறட் டவ்வெதிரே
பலவுங் கூறி மார்புதட்டிப் பீடியைத் திருத்தப் பார்த்தளவில். (௯௬௩)

மாபா வத்தில் விழுந்துலக மாறு பாடா யிதமருளுங்
கோபா லக்கோ னரிதன்னை மறந்திட் டுழல்வோர் கொடுந்தொழில்கண்
டேபா வம்பர மேயொன்றாங் கிருந்து வருந்திக் கிலேசித்துச்
சீபா தங்கொண் டவதரித்தார் திருத்தப் படாத சிறுகுலகை. (௯௬௪)

வேறு.

இன்றெமக்குத் திருத்துதற்கிங் கிசையுங்கோ லெனநோக்காக்
கன்றுமுதற் கைவாங்கி யச்சுதன்முன் னன்பினெடு
சென்றுநின்றென் சிந்தனையும் யானுமே தீர்ந்தொழிந்தோங்
குன்றெடுத்தா யெனவுலகின் கொடுமைகண்டு கூறினன். (சு

வேறு.

கூறினன் கால மூன்றையு முணருங் கோதறு ஞானியா தலினன்
மாறிய வுலகுக் கிரங்கினு னினிமேல் வருவதோர் காலத்தைப் பார்த்து
னூறிய ஞானி யுடையவர் மண்ணி லுதிப்பதை யுணர்ச்சியி னேக்கித்
தேறுமின் கலியுங் கெடுமினி யுயிர்கா ளெனத்திரு வாய்மொழி செய்தான.

வேறு.

நாதமுனி யுடையவரை வெளியிட்ட படிநவிலில்
வேதமருந் தமிழ்செய்த விமலனைப்போன் மெய்ஞ்ஞானப்
போதவிழி யுடையவனுய்ப் புகுங்கால முறநோக்கி
யேதமறு மெதிராச ரெய்துதலைச் சிந்தித்தே. (சுசஎ)

வேறு.

பெருகா நின்ற வருண்மாற னல்கப் பெற்ற பொருட்கினிமேல்
வருகா லத்தி லெதிராச ரிலக்கா மற்றை யவரென்னே
டொருகா லத்தி லாயிலரென் றுருகிப் பொருவில் பேராற்றை
யருகா நின்ற குளப்படியிற் றேக்கிற் குருவி குடித்தலறும். (சுசஅ)

நாரா யணப்பே ரேரியினிற் றேக்கி ஞடு விளைந்திடுமென்
றுரா வன்பி னருள்செய்தா னந்த வேரி யுடையவராய்
நேராய்க் குறித்தன் றுரைத்தமையா னிகரி லாத வெதிராச
ரேரார் குளமா யிடும்படியீங் கெவண மென்னி லிசைக்கின்றேன். (சுசகூ)

வேறு

வேதமுத னம்பெருமாண் மெய்ஞ்ஞான வாரிதியாய்ப்
போதமிகு மாழ்வார்கள் புகுந்துமுகந் தெழுமுகிலாய்
நாதமுனி யெனும்பொருப்பிற் றமிழ்வேத மெனுநாடித்
தோதருஞ்சீ ரானந்த மழைபொழிய வுலகனைத்தும். (சுஎ0)

உய்யக் கொண்டா ரொடுமணக்கா னம்பி யென்னு மோங்கருவி
யைய விழியத் தாழ்வரையிற் படியி லாள வந்தாரா
மெய்கொ ளாறு மிகப்பெருக மிக்க குரவ ரெனுங்கால
லைய னெதிக டனிநாதர் குளமாய்ப் பெருகி யலையெறிந்தே. (சுஎக)

## வேறு.

மற்றவ ரருளி லீண்ட மாசறு குரவ ரெல்லா
முற்றசீர் மடைக ளாக வுலகெலாந் திருத்தி யாங்கே
நற்றலம் விதைத்து ஞான போகமே விளைய நாளுங்
கொற்றவர்க் காறி லொன்றுங் குடிகளுக் கஞ்சு மாக. (௯௭௨)

## வேறு.

ஆனந்த பரபோக மகவிடத்தில் விளைதலினால்
வானந்த நிலைகண்ட நாதமுனி மணம் புகழ்சேர்
மோனந்தர் தொழுதேத்து மெதிராசர் தமைமுறையாற்
றானந்த மாதியுறு வேரியெனச் சாற்றினான். (௯௭௩)

## வேறு.

அந்த வாறு நிற்ப வாள வந்த வெந்தை யையனை
யெந்த வாறு கண்டு தெய்வ மென்ற தென்ன வேண்டிடின்
முந்தை நாளி லன்ப ரோடு மெய்தி யந்த முத்தனை
யிந்த மானு பாவ னம்ம தத்தில் வந்தி சைந்தநாள். (௯௭௪)

ஏது செய்தி டானிம் மெய்ய னென்ற சொல்லி ருத்தலா
லோது பஞ்ச தேசி கர்க்குண் முன்ப† னந்த வும்பனைக்
கோதி லாத நித்த னென்று கொண்ட தெங்ங னென்றிடிற்
போத மிக்க நம்பி யத்து ழாய்த னோடு புக்கொர்நாள். (௯௭௫)

இருந்த னன்னி ருந்த காலை யெந்தை பூதூர் வள்ளலுந்
திருந்து தொண்டர் தங்க ளோடுந் தேசி கர்ப்ப ணிந்திடப்
பொருந்தி னான வன்ப தத்தி னம்பி புக்கி றைஞ்சினா
னருந்த வத்தின் மிக்க தொண்ட ரத்து ழாய்த னோடுமே. (௯௭௬)

மாசி லாத பூதூர் வள்ளன் மாத வத்த னையினுந்
தேசி கர்க்க டிப்ப தோசி ரத்தி னாலி றைஞ்சலின்
றூசி லாத நம்பி யோடு மன்பர் கூற நம்பியு
நேச மிக்க தொண்டர் கேண்மி னென்று மேனி கழ்த்துவான். (௯௭௭)

பண்ட ரங்கர் தம்பி யின்று பத்த ரோடு மெய்தலுங்
கண்ட போதி லென்னை யாள வந்த காத லாளனார்
தொண்ட ரோடு மெய்தி னாரெ னத்து ணுக்க மெய்தியப்
புண்ட ரீக பாத போதி லாவி சென்று புக்கதே. (௯௭௮)

---

'குடிக்கஞ்சும் வாரமாக' என்றும் பாடம்.
† 'பஞ்சதேசிகர்க்குள்முன்பன்' என்றது பெரியநம்பியை.

என்றுரைத்து மைந்தர் சீரி லங்கு புண்டரீ*
யுன்றெ திக்கு நாத னார டித்தொ ழிற்கு ரித்
யின்று தொட்டு வாழ்க வென்று நம்பி யன்றி சைத்தலா
குன்ற மன்ன மாட நீடு கோட்டி யூர்நன் னம்பியும்.

எந்தை பூதூர் வள்ள லாரை யேற்ற மாக யாரினுஞ்
சிந்தை யுள்ளு ணர்ந்து முன்பு செப்ப வேதி னானெறி
யிந்த வுண்மை யென்ற னாணை யீய லைபி றர்க்கென
முந்த வாணை யிட்ட வன்மொ ழிந்த மந்தி ரந்தனை. (௩௮௦)

உற்ற தொண்டர் கட்கெ லாமு ரைப்ப நம்பி யொன்றெனும்
பற்றி லானை யன்று கூவி யென்ற னாணை பாழ்படப்
பெற்ற தென்னு னக்கு மின்று பேச கென்று பேசனுங்
கற்ற பூது ரெந்தை யைய நரக மென்று கழறினான். (௩௮௧)

ஈத றிந்தி ருந்து சொன்ன தென்பொ ருட்டி னாலதை
யோது கென்று நம்பி யோத வுண்மை கேட்ட யாவருந்
தீதி லாத வீடு சேர்வர் தேவ நானொ ருத்தனே
பேத முற்ற நிரய மெய்தி பெறுவ னென்று பேசனும். (௩௮௨)

நம்பி பல்லு யிர்க்கு நீகொ டுத னென்ன வோதியன்
றெம்பி ரானை யன்பி னாலெ டுத்த ணைந்து மெய்ம்மையாய்
வம்பு லாவு தாம ரைக்கண் மாய னார்த மார்க்கமு
மிம்ப ராலுன் மார்க்க மென்ன வின்று தொட்டு வேண்டுமால். (௩௮௩)

வேறு.

எனவுரைத்துத் தன்புதல்வ னெழிறிகழ்தெற் காழ்வானை
மனமகிழ்ந்த கயிங்கரிய முடையவர்சீர் மலரடிக்கீழ்த்
தினமுமினிப் பயில்கவெனச் செப்பினா னதுநிற்க
வினையருஞ்சீர்த் திருமாலை யாண்டான்முன் வெளியிட்ட. (௩௮௪)

படியெவண மெனிற்றிருவாய் மொழிக்கத்தம் பகர்பொழுதி
லடிகள்ரு ளாளவந்தா ரகத்துதித்த வத்தமிங்கக்
கடிகமழ்பூம் பொழிற்பூதூர்க் காதலர்க்குத் தோன்றுதலா
னடியவன்சீ ரவதார மிதுவுமொன்று மெனநினைர் (௩௮௫)

தெண்டமிட்டுப் புதல்வனையுஞ் சிறந்திலங்கு மெதிபதிக்குத்
தொண்டனாய் வாழ்கவெனச் சுந்தரத்தோ ளுடையானை†
யண்டர்தொழுந் தலைவனிடை யாச்சரிப்பித் தனனதனு
கொண்டலமர் பெரியதிரு மலைநம்பி குணமிக்க. (௩௮௬)

---

* இவருக்குப் 'புண்டரீகாக்ஷர்' என்றுந் திருநாமமுண்டு. † 'சுந்தரத்தோளுடையார்' என்பது திருமாலையாண்டான் திருக்குமாரரது திருநாமம்.

எதிநாதர் தமைவெளியிட் டிசைத்தபடி யெவணமெனின்
மதியானல் வேங்கடத்தின் மாயவனைத் தொழப்புகுநாட்
டுதிசூழ்ந்த புரம்நம்பி தொண்டரொடு மெதிர்கொண்டு
நிதிதழைக்கும் பரியட்டப் பாறையினி னேர்படவும். (கூஅஎ)

வேறு.

சீரா ரெதிக டனிநாதர் சிறந்த நம்பி தனைநோக்கி
யாரா வன்பின் மிக்கவனே யடியேற் கெதிரே யொருசிறியோன்
வாரா நின்று லமையாதோ நீயோ வருவ தெனவணங்க
வேரார் நம்பி யெதிநாத வெழிலார் திருவேங் கடப்பதியில். (கூஅஅ)

கோல மிக்க வுனக்கெதிரே விடுப்பக் குறித்தோர் சிறியோனை
நாலு தெருவு மாராய்ந்து நாடிப் பார்த்தே னொருவரெனைப்
போலுஞ் சிறியோர் கண்டிலனுங் கதனு லெதிரே புறப்பட்டேன்
பாலுந் தேனுஞ் செழுங்கனியு மனையா யெனமுன் பகர்ந்ததற்பின். (கூஅகூ)

வேறு.

தன்னுடைப் புதல்வன் றிருமலை நம்பி* தன்னையு முடையவ ரடியின்
மன்னவைத் தெம்பார் தன்னையுந் தானம் வழங்கிய சதிரினு லரைய
ரென்னுயிர்த் துணையா மெதிபதி தம்மை வெளியிட்ட படியினை யியம்பின்
முன்னவ ரிடத்தி லியமுனைத் துறைவர் மொழிந்திவர்க் காகவைத் தருளும்.

உண்மையைப் பெறுதற் குபாயமிட் டரைய ருளமுவந் துருகிடும் பணிக
டிண்மையிற் செய்ய வரையரு நீயென் சீரிய சருவசொத் தினையும்
வண்மையில் வாங்கும் படிநினைந் தோசொன் மாசறு மெதிபதி யாமப்
பண்ணமர் மறைகள் வல்லவொள் ளியனே பகர்கவென் னினைவினை யுன்னி.

வேறு.

மஞ்ச மாரைத்து நீராட்டி மகிழ்வித் தாயின் றெனத்தனக்குத்
தஞ்ச மாக முன்பிருந்த சதுச்சு லோகந் தோத்திரமென்
றெஞ்ச லில்லா வடமொழிக ளெல்லாம் பொருளோ டெதிபதிக்கு
நெஞ்சங் களிப்பக் கட்டுரைத்தா னதனு லந்த நெறிகிடப்ப. (கூகூஉ)

வேறு.

பேசரு மெதிகள் வாழ்வைப் பிரமராக் கதன்முன் னுளி
நேசுற வெளியிட் டானுங் கெவணமென் றதுவுஞ் செப்ப
லாசிலாச் சோழன் பெற்ற வாயிழை யிடத்தின் மன்ன
மாசறு மதனைப் போக்கு மந்திர வாதி யாக. (கூகூங)

---

இவருக்கு, 'பிள்ளைதிருமலைநம்பி' எனவுந் திருநாமம். பெரிய திருமலைநம்பி 'இராமாநுஜர்' என்ற மற்றொரு திருக்குமாரரையும் உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தாரென்று குருபரம்பராப்ரபாவத்தால் தெரிகிறது.

எண்ணியாங் கெய்தி நின்ற யாதவப் பிரகா சர்க்குப்
புண்ணிய நித்தர் தம்மி லொருத்தனிப் புனித னியுந்
திண்ணமா யறிதி யென்னச் செப்பிய திறத்தா லன்றி
யுண்ணினை வுடைய வூமை யுரைத்தது முரைக்க லுற்றே. (௯௯௪)

வேறு.

கண்ணன் கமலை யுடன்வளருங் காஞ்சி புரத்தி லவனருளி
னண்ணும் பாக வதத்திரளி னவையி லாதாங் கோர்மதலை
யெண்ணுந் திறத்தி லூமையென விருந்தா னைந்து வயதளவுந்
திண்ண மதற்பின் மூவாண்டு தேசத் தெவருங் காணாதே. (௯௯௫)

மறைந்து வைகி வயதெட்டில் வந்தா னந்தத் திருநகரி
லுறைந்த மேலோர் கண்டுவப்பா லூமை யெங்கே யொளித்தனையென்
றறைந்தா ரறைய வவ்வூமை யாங்கே யவர்க்கு வாய்திறந்து
நிறைந்த திருப்பாற் கடற்கிடந்த நெடுமா லருகே மூவாண்டும். (௯௯௬)

இருந்து வந்தே னிப்பொழுதிங் கென்ன விசைப்ப மற்றவர்நீ
பொருந்து திருப்பாற் கடலுதன் பொருவி றிருவோ லக்கத்திற்
றிருந்தும் வாய்மை யென்னதனைச் செப்பா யென்று ரப்பாலன்
கருந்தண் முகிலைப் பழித்தவுருக் கமலம் பழித்த கண்ணைகால். (௯௯௭)

திருமாற் கினிய வனந்தாழ்வான் றேவர் மகிழப் பல்லுயிர்க்கா
யிருமா நிலத்தி லிளையாழ்வா னென்னத் தோன்றி யாவரையு
மருமா நரகிற் புகலொழித்தாங் கமல னாதி பிரான்* றன்னை
யொருமா னொடியும்பிரியாதே யுறைகின்றானென் றுரைக்கின்றார். (௯௯௮)

என்று னிவண் மனந்தம்பே ரெதிக ளுதர் தமைவெளியிட்
டன்றுங் கறைந்தா ரதுநிற்ப வவர்தந் திருத்தாள் களைகண்ணாய்
நின்றுங் கோங்குந் தேசிகர்க ணினைவு மவர்க டிருத்தாளிற்
சென்றுச் சரித்தார்க் குறுதியவர் செப்புந் திறமுஞ் செப்புவாம். (௯௯௯)

சகல வேத சாத்திரங்கண் முடிந்த நிலத்திற் றனிவைப்பைப்
புகலும் வடுக நம்பிதனைச் சார்ந்தோர்க் கெல்லாம் புரைதீரப்
பகலு மிரவும் பிறந்திறக்கும் பஞ்ச பூதச் சடத்தையுயி
ரகலும் பொழுதிற் பேரின்ப மங்கைக் கனியாய்ப் பெறவேண்டில். (௧000

ஆசி லாசா ரியபதந்தான் றனியே யொன்று மாங்கதுதா
றேசு பொலிந்த வெதிராசர்க் கன்றி யெவர்க்குஞ் சேராதா
னேசத் துடனத் திறமறிந்து நின்று நடந்து கிடந்திருந்து
பேசப் படுநும் முரையெல்லா மிராமா நுசர்பேர் பிதற்றுதி ௧00௧

* 'அமலனாதிப்பிரான் றன்னை' என்றும் பாடம்.

DR U V S IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA

திண்ணம் வீடு திருவாணை பெறாத தென்னச் செப்பினான்
விண்ணு மறிய வதுநிற்க விளங்குங் கணிய னார்மன்னுங்
கண்ணற் கினிய சிறியாச்சான் கழற்கீ ழடைந்த பத்தர்கட்கும்
[illegible] வார்த்தியொடு மிருந்து மாசில் பேரின்பம். (க00௨)

வேறு.

அடைவதற் குபாயந் தொண்ட ரெளிதினி லறையக் கேண்மி
னுடையவர் பாதப் போதை யுன்னிடில் வீடு திண்ண
மிடையிலோர் களைக ணில்லை யெமக்கெனத் திருமா றன்னை
தடையற வாணை யிட்டுக் கொடுத்தனன் றருமம் போல்வான். (க00௩)

வேறு.

என்னையா ளருளாளப் பெருமாளெம் பெருமானார்
தன்னையே களைகண்ணாய்ச் சார்ந்தவனந் தாழ்வானுங்
கன்னையினு மன்புடைய வெச்சானுக் காக்கைநிலை
மின்னினிலை யெனக்காணு மெய்ஞ்ஞான நிலைநின்று. (க00௪)

தொண்டனூர் நம்பிக்குத் துகளறுசீர் மருதூருட்
கொண்டுவளர் நம்பிக்குக் கூறுவான் பலகலையும்
பண்டுபயின் றேகதண்டி யாய்ச்சிலநாட் பாவித்தே
னண்டர்தொழு மெதிராசர் கழலடைந்தே னதற்பின்னும். (க00௫)

வேறு.

ஆங்கவ னெனக்கு நல்க வனந்தநா ளாய்ந்து மாய்ந்தே
னோங்குயர் வீடு சேர்தற் குபாயமு மெதிக ணாதர்
பூங்கழல் களைக ணாகப் புநதியி னினைதல் போலப
பாங்கொடோ ருபாயங் காணேன் பங்கயக் கண்ணி னானே. (க00௬)

ஒப்பரு மெயதிரா சர்க்குச் சரணமென் றுரைக்கில் வீடங்
கப்பொழு தவர்கட் கங்கைக் கனியென வறிய லாகு
மெப்படி யெனினும் யாரு மெறிந்தகற் புவியிற் சேர்ந்த
றப்பிடா வாறு போலாமவனல்லாச் சாத னத்தால். (க00௭)

உயிர்பர கதியைச் சேர வுன்னுத லுணர்வா னேக்கின்
மயிரில்க் காத றிண்ண மலரய னெனினு மென்னத்
தயிரொடு நெய்பா லுண்ட தலைவனை யாணை யிட்டுச்
செயிறற வுரைத்தான் யார்க்குஞ் செய்தவம் போன்ற தேவன். (க00௮)

---

'ஸத்யம் ஸ்த்யம் புநஸ் 'ஸத்ய்ம் யதிராஜோ ஜகத்குரு:—ஸஏவ ஸர்வ லோகாநா முத்தர்த்தாநாத்ரஸம்சய:' என்று இவர்தாமே பெரியபெருமாள் திருவோலக்கத்திலே ஸ்ரீசடகோபனைத் தம் திருமுடியிலே நிறுத்திக்கொண்டு அருளிச் செய்தருளினார் என்பர்.

ஆங்கதற்குப் பின்னொருநாள் பிள்ளைப்பிள்ளை யாழ்வானை
பாங்குடனே யாச்சரித்தோ ரானத்தப [illegible] தனொடு
மோங்கியவென் மனவாக்குக் காயமுட னுத்தமனே
வாங்குகுரு தெக்கணையா யீகின்றே னெனவழுத்தி ௦௦௯

வேறு.

வணங்கி யுரைப்ப வருளாளன் மனத்தி லெண்ணி யப்பேறொடு
நுணங்கு கேள்வி யுடையவனை நுணித்தாம மெய்த்தா மனவாக்கும்
பிணங்கு முடம்பும் வெவ்வேறாய்ப் பேரப் படும்ப பேதமையை
யிணங்கி யொன்றாய் நின்றதுனக் கீவ னென்று பெறுதி யெனவிசைத்தாய

மண்ணிற் காய மெதிரிற மன்னர் கொடுமை தனைநாளு
மெண்ணி யடங்கும வாக்குரைத்தற் கித்தத வசனங்க [illegible] ரக்கும்
பண்ணிற் சிறந்த மறைவல்லாய் பாழ்த்த மனத்தினை பரந்தா
னண்ணிப் பொருந்தத் தரியாமிக நல்லா லெவ்வாறு நா ரிதால (௧௦௧௧)

வேறு

ஆதலா லீபவர்க்கு போறபவர்க்கு மச்சமுறுங்
காதலான் மனத்திடைநம் மெதிரா [illegible] கற்றநமை
போதெலா முறவிருத்தி வாக்கிலவா புகழ்கூறித்
தீதிலா வவரடியா ரேவலுமல செய்யெப்பொறல். (௧௦௧௨)

வேறு.

அதுவே நமக்குத் தெக்கணை நீ யளிக்கு நிறைந்தா னெனவறைந்தான்
முதுவே தத்தின் முடிவுணர்ந்த முதல்வ னுவந்த திறங்கிடப்பா
வெதுவே வரினுந் திருவுளத்தி லிறையுங் கலங்கா தெவ்வுயிர்க்கும்
பொதுவாய் நின்ற புகழ்கூரத் தாழ்வா னென்னும் பொருவில்லான் (௧௦௧௩)

வேறு.

பேதமற விவந்தாண்ட பிள்ளைப்பிள்ளை யாழ்வானே
டோதுவான் மனை [illegible] ன்மமென வவனன்றி
லேதமுறு மென்றி [illegible] லகு முன்னு [illegible]
பாதமலர் தொழவாழும் பதம்வேண்டிற் படியுள்ளார். ([illegible])

வேறு.

இன்னாச் சொல்லாம் பெரும்பயிரி லிறங்கி மேயுங் கோக்களென
வுன்னு நின்ற வைம்புலனை யொடுங்கக் கட்டி யுரனடக்கி
யென்னு ரமுதா மெதிராசர் திருப்பேர் வாக்கி லிசைத்திருக்கின்
மன்னு நின்ற மூவுலகும் வசமா மென்றான் மதிமிக்கான் (௧௦௧௫)

பாவகந்தான்’ என்ற பாடமும் காணப்படுகின்றது.

# எம்பெருமானார் வைபவம்.

## வேறு.

பொருவரு முதலி யாண்டான் முன்புநற் புலவர் காண
வொருபகல் மிளகாழ் வான்வந் தொப்பிலா யின்றென் னோடே
வருகநீ தர்க்கம் பண்ண வென்றனன் மாசி லாண்டா
னிருவரி லொருவர் தோற்றா லேதுசொல் சபத மென்றான். (௧௦௧௬)

என்றவ னுரைப்ப வாழ்வான் யானுனக் கின்று தோற்றால்
மன்றல்சேர் மார்ப நின்சீர் மனையள வுனைத்தோட் கொண்டு
சென்றுவிட் டகல்வ னென்றான் சீரிய வாண்டா னோக்கி
நன்றது செய்வோ மென்ன நானிலத் தெவருங் காண. (௧௦௧௭)

ஆங்கவ னோடு தர்க்கஞ் செய்தவன் றன்னை வென்றா
னோங்குசீர் முதலி யாண்டான் றன்னைவா னவர்கள் காணத்
தாங்கினான் சீபா தங்க டரைமிசை மிளகாழ் வான்பின்
பூங்கழ லிறைஞ்சி யந்தப் புனிதனை நோக்கி யெந்தாய். (௧௦௧௮)

இன்றுநா னுய்யும் வண்ண மிரங்கிநீ யருள்க வென்ன
மன்றல்சேர் திருத்தா டன்னில் வணங்கிட மாசி லாண்டா
னொன்றிய கருணை மிக்க வுடையவர் தம்மைக் காட்டி
நன்றிசேர் மனத்தா யிந்த நற்றவர் திருப்பேர் சொல்லி. (௧௦௧௯)

## வேறு.

சீர்பெற் றருளில் வாழுதியென் றுரைத்தா னந்தத் திறங்கிடப்ப
வேரொத் திலங்குஞ் சீபட்டர் வதன நோக்கி யெம்பார்நீர்
கூரத் தாழ்வான் மகன்பின்பு குமார ரரங்கர் தமக்கென்றுந்
தேரப் பட்ட மறையனைத்துங் கற்றோ மென்றுஞ் சிந்தனையில். (௧௦௨௦)

இறுமா வாதே யெதிராசர் திருத்தாள் சரண மெனுமுரையை
யுறுமாப் பொருளாய் நினைத்திருமென் றுரைத்தா ரந்த நெறிகிடப்ப
சிறுமா மேனி நஞ்சீயர் முகத்தை நோக்கிச் சீபட்டர்
பெறுமா றுமக்கொன் றுரைப்பவதைப் பிடித்தி ரென்று பே[illegible]

வேதாந் திகளென் றுலகனைத்தும் விரிந்த புகழால் யாவர்களு
மோதா நின்ற தெம்பெயர்மற் றொருவர்க் குளதோ சீபட்டர்
பாதாம் புயத்தி லாச்சரித்தோம் பகர வரிய பெருந்தனங்க
ளதா கொள்க வெனக்கொடுத்தோ மென்ன நினையுநவைநினைவை. (௧௦௨௨)

வேரோ டறுத்துப் பேரின்ப மேவ வேண்டி. லெதிராசர்
சீரார் திருத்தாள் சரணமெனச் சிந்தித் திருத்தி ரெனவிசைத்தா
ராரா வன்பர் நஞ்சீயு ரருள்சேர் மெய்ம்மை நம்பிள்ளை
யேரார் முகம்பார்த் தங்கொருநா ளிசைப்பர் வகுளத் திருத்தாரான். ()

திருவாய் மொழிக்கு மகிழ்மாறன் றிறத்தை நினைவை யறிந்திடிங்
கொருவாய்ப் படாநாங் கட்டுரைத்தோ முலகுக் கெல்லா மெய்ஞ்ஞான
குருவா யிருந்து வாழ்கின்றேங் குருவே தெமக்கிங் கெனுநினைவின்
மருவா திருந்து பாகதிக்கு மாசி லாத வெதிராசர். (கo

பாதாம் புயமே தஞ்சமெனப் பகலு மிரவு நினைந்திருமென்
றோதா நின்று ரதுநிற்ப வுலக மூன்றுக் கொருவைப்பாம்
வேதாந் தத்தி னிலைநின்ற மெய்ஞ்ஞா னத்தி னம்பிள்ளை
போதா னந்தக் கழலடைந்தோ னொருவன் பொருவின் மெய்ஞ்ஞானி.

வேறு.

சிவக்கரைப் பிள்ளை* செய்ய திருக்கையைப் பிடித்தங் கோர்நா
ளவத்தொழி லகற்றி யாளு நம்பிள்ளை யகத்திற் சென்றாட்
பவக்கடல் கடந்தா ரேகு மிடைகழி யதனிற் பாங்காய்த்
தவத்திற மறியான் மேலோர் சரணசம் பந்த முள்ளான். (கoஉகூ)

வேறு.

கிடந்தா னொருவன் பாகவதன் வழியை மறித்துக் கிடப்பாளவி
னடந்தாங் கணைந்த நம்பிள்ளை ஞான மிக்கான் றிருத்தாளைக்
கடந்தாற் பழுதென் றனைனிற்பக் காலை மடக்கா யெனவுரைத்தான்
றொடர்ந்தாங் கவர்க்குக் கைகொடுத்துச் சென்ற தூகளில் சிவக்கரையான்.

வேறு.

என்றுரைத் திட்ட போதி னம்பிள்ளை யிதய நொந்தாங்
கன்றிவன் கையை விட்டென் னறைந்தனை யாழ்வார் கட்கு.
நன்றிசேர் மாயன் மங்கா மதிநல நல்கப் பெற்று
ரொன்றுபட் டிங்க ளெல்லா மோங்குமா றெண்டர் தாளை. ()உஅ)

வேறு.

திருத்தா ளென்று கட்டுரைத்தார் சிறியோ ரல்ல ரெனவதையுன்
கருத்தாற் பேண மாட்டாது நீயோ காலை மடக்கென்பாய்
வருத்தா திவணின் றென்னை யின்னே யேகா யென்ன மனநொந்தக்
குருத்தார்க் கறியப் படுமாறற் கல்லா லென்னக் குழைந்திரங்கி. (கoஉகூ)

வேறு.

செப்பினர் பிள்ளை யன்றே சிவக்கரைப் பிள்ளை நீங்கி
வெப்பமுற் றுவி வாடிச் சிவக்கரை தன்னை மேவி
யெப்படி யுய்வ தென்ன விருந்தல மந்து நைந்து
தப்பற வொருநா ளந்தத் தேசிகன் றன்பா லோராள்.

* இவருக்குச் 'சிவிக்கரைப்பிள்ளை' யென்றுந் திருநாமம்.

விடுத்தன னடியேன் செய்ய வேண்டுவ தென்னென் பான்முன்
னடுத்துள வடசா ரத்துக் கெனவதைப் பிள்ளை கேட்டுக்
கடுத்தசொல் வழியால் வந்த கடுநர குடனே தீரு
மெடுத்துநும் வாக்கா லெந்தை யெதிபதி திருப்பேர் சொல்லில். (௧௦௯௧)

வேறு.

துனக்குப் பரகதியுந் தருநஞ் சீய ராணையென,
வப்போ துரைத்துப் புகவிடுத்தா னதற்பின் குருகைப் பிரான்பிள்ளான்
செப்பா நின்ற சிறுப்புத்தூர்* தன்னை மன்னிச் செறிந்திடுநா
ளொப்பா ரில்லாச் சோமாசி யாண்டா னவன்பா லோங்கியசீர். (௧௦௯௨)

வேறு.

பாட்சியந் தன்னை மூன்றுரு வாசித் திட்டனன் படியுளோர் புகழ
மாட்சிமை யுடைச்சோ மாசியாண் டானம் மதிமிக்கான் றனைப்பிள்ளை நோக்கிச்
சூட்சிமெய்ஞ் ஞானச் சகலநூல்களுக்குஞ்சுடரெனத்துலங்குபாடியத்தை
யாட்சியா யிங்கே மூன்றுருக் கற்றோ மாரெனை நிகர்ப்பவருலகில். (௧௦௯௩)

என்றிறு மாவா திருந்துநீ திருந்தி வெதிகனு யகர்திரு நாம
மொன்றுமே வாக்கிற் பிடித்தியிவ் வுலகி லுள்ளநா ளளவுமுன் னுடலம்
பொன்றினு லதுவே கொண்டுபோய் வைக்கும் பொருவரும் வீட்டிலென் றிசைத்தா
னன்றது கிடப்ப யாவரும் புகழு மாசிலா ஞானமே யுடையான். (௧௦௯௪)

வேறு.

வாக்குத் தூயோன் கோமடத்துப் பிள்ளா னருளின் மதிமிக்க
காக்கைப் பாடி யாச்சான்†சீ பாடி யத்தைக் களிப்போடு
நாக்குக் கிரதம்‡ பெறமுக்கா னாட்டா ரறிய வாசித்துத்
தாக்கு மிறுமாப் பொடுங்கூடித் தன்னை வியந்து திரிவதனை. (௧௦௯௫)

கண்டா னவனைக் கோமடத்துப் பிள்ளா னோக்கிக் கற்றமையா
லுண்டாய்த்§ துனக்கிங் கிறுமாப்பிவ் வுலக மறிய வப்பழியைப்
பண்டான் வல்லாய் தீர்த்தாவி பரம பதத்தைச் சேர்வதற்குக்
கொண்டாங் கிருக்கு மோருண்மை குறிக்கொ ளென்னக் கூறுவான்.

சருவ வேத முடிந்தநிலஞ் சாற்று மெதிரா சன்சரணம்
பெறுவ தெவர்க்குந் தனிவைப்பாம் பேதை நீங்கி யுனக்குமதே
யுறுவ தாகப் பிடித்தியென வுரைத்தா னெதிகட் கதிபதியோர்
மறுவற் றுலகி னின்றதையென் வாக்கா லுரைக்க வல்லேனே. (௧௦௯௭)

---

* 'சிறுவேற்றூர்' என்பது எட்டுப் பிரதிகளின் பாடம். † 'காக்கையாடியாச்சான் பிள்ளை' என்றும் பிரதிபேதம். ‡ 'கிரந்தம்பெற' என்றும் பாடம். § 'உண்டாயிற்று' என்பது 'உண்டாய்த்து' என மருவிற்று; போலியுமாம், 'உண்டாயதுனக் கிறுமாப்பு' என்ற பாடமுங் காணப்படுகின்றது.

மாசி [illegible] ளாழ்வானு மதிமிக் கானங் கொருதினத்தி
லாசில் காக்கைப் பாடியெனு மாச்சான் பிள்ளை முகநோ
நேச மிக்கா யரங்கத்தி னெடுமா லுன்னை முனிந்திடுநா
டேசற் றிறையுங் கலங்காதே யிருந்த தெதனுற் செப்பெ

ஆனுற் கேளு மரங்கரெனுஞ் சண்ட வாயு வடியேனைத்
தானுய்த் தோன்றி யெடுத்தெறியத் தமியே னெதிகளுதரெனும்
வானுர் மேருப் புறத்தொதுங்கி வாழ்ந்த பின்னம் மாருதமாந்
தேனுர் துளபத் திருத்தாரான் சிறியேன் றனக்கா ருயிரானுன்.

என்ன வுரைத்தா னடாதூரி லிலங்கு மம்மா டாளிணையின்
மன்னிச் சீபா டியந்தன்னை வாசித் தார்கள் பன்னிருவ
ருன்ன வரிய வதினத்த முறைக்கு மம்மாள் குருபாய
பன்னும் பத்தி யாயிருக்கு மதனுற் பகரும் பிரபத்தி.

தன்னை யுபாய மெனநினைந்திங் கிருமி னென்னச் சாற்றினுன்
முன்னைத் தவத்தா லுயர்ந்தவர்கண் மொழிவா றுரைக்க பத்தியி
மன்னை யனையாய் பிரபத்தி யரிதா மென்று ரதுகேட்டிங்
கென்னை யாண்ட நடாதூரி னம்மா ளிசைக்கு மாயிலிதை.

அருளிச் செய்த வெதிராச ரருட்டா மரைத்தா ளிணைதம்மைத்
தெருளிற் பொலிந்த நம்வாக்காற் றஞ்ச மென்னச் செப்பியிருந்
திருளிற் செறிந்த தீவினையை யிரிவித் துய்ம்மி னெனமறையின்
பொருளிற் பொருளைக் கட்டுரைத்தான் புவன மேழும் விரிபுகழான். ()

வேறு.

சீராருந் [illegible] ணபுரத்திற் சிறப்பினொடு
மேராரு நிலிலாழ் வான்புகுந்தாங் கின்பமொடு
மாராத பெருங்காதற் றொண்டர்கட்கப் பாடியத்தை
நேராகக் க[illegible]ளைக்க வருங்காலந் தனினிலைசே. (௧௦௪௩)

வேறு.

வங்கிப் புரத்தில் வருமாய்ச்சி சொட்டைக் குலத்தில் வருமம்மா
ளங்கத் திறத்த ருள்ளிட்டா ரந்த நூலைக் கேட்டஞ்சி
யெங்கட் குணர வரிதென்ன விசைத்தா ராகி லிதையிசைத்
செங்கட் கருணை மதிமுகத்தெம் மெதிக ளுதர் திருவடிகள். (௧௦௪௪)

தஞ்ச மென்ன நினைந்திருமி னென்றுங் கவர்க்குச் சாற்றினுன்
வெஞ்சொற் கடிந்த மெய்ஞ்ஞானி வேத வியாத பட்டர்திருக்
கஞ்சத் திருநா ரணபுரத்துக் கருணை மிக்க வுடையவர்முன்
னெஞ்சுட் பதிசீ பாடியத்தை நெகிழ்ந்தவன் போடாங்கொருநாள். (௧௦௪௫)

---

'தன்னிலை சேர்' என்றும் பாடம்.

உரைத்தா ரந்தத் தலத்திலிருந் தோங்கு மைம்பத் திருவர்களு'
நிரைத்தார் பட்ட ரெதிர்நின்று நீரிங் கெங்கட் கருளியசொற்
றிரைத்தார் கலிசேர் பகிரதிபோற் றிகழு முகமா யிரமாயுள்
கரைத்தா லெங்கட் கப்பொருளைக் கருதற் குறுமோ கழறென்றார். (க0சசு)

ஞானீங்க ளிவையுரைத்த வாசி லாத வெதிராசர்
தேனார் கமலத் திருத்தாளைத் திருப்பே ருடனே சிந்தித்திங்
கூனா ருடலச் செடிநீங்கி யும்ப ருலகின் மேலாய
வானார் வீட்டிற் புகுமளவு மிருமி னென்ன வகுத்துரைத்தார். (க0சஎ)

நடுவிற் றிருவீ திப்பிள்ளை வெள்ளைக் குளத்தி* னலமிக்க
மடுவிற் றுயர்முன் கடகரிக்குத் தீர்ப்பான் சென்ற மான்முன்பிற்
படுநற் பொருட்சீ பாடியத்தைக் கோட்டி பண்ணா வவர்பத்தன்
வடுவற் றுலகிற் படர்நீதி விளைய வழகி யானென்போன்.† (க0சஅ)

வஞ்ச னெனுக் கிதன்பொருளை மனத்திற் றரிக்கக் கூடாது
தஞ்ச மாக வடியேனுக் கொன்றாய்ச் சாற்ற வேண்டுமெனக்
கஞ்சத் திருத்தா ளிணைபிடித்தான் காதன் மிக்க பிள்ளையுநீ
யஞ்ச வேண்டா மெதிராச ரருட்டா மரைத்தா ளிணைதம்மை. (க0சகூ)

அல்லும் பகலு நினைந்திருந்தா லதுவே வீடு தரும்புலனைக்
கொல்லும் படையு மவன்பெயரா மதனு லிதனைக் குறிக்கொளெனச்
கல்லு முருகக் கட்டுரைத்தான் கருணை மிக்க வெதிநாமஞ்
சொல்லுமவர்க்கு மேலொன்று சொல்லு மவர்க்கென் சொல்கேனே. (க0நு0)

வேறு.

இந்தவகை தேசிகர்க ளன்றமுத லின்றளவு
சிந்தைமகிழ்ந் தவரவர்தஞ் சீடர்கட்குத் திடம
வந்தமிங்ஙீ ரெதிராச ரிணையடியை யகத்திருத்
பந்தமுறும் வினையகற்றிப் பரகதியை யடைமி...... (க0நுக)

கட்டுரைத்தா ரனைவர்களுங் காதலொடத் திறங்கிடப்ப
மட்டவிழ்பூம் பொழிற்குருகூர் மகிழ்மாறனருள்பெற்ற
சிட்டன்மெய்ந் நாதமுனி முதலாய தேசிகர்க
ளெட்டெழுத்தின் படிநடந்தார்க் கில்லாத வேற்றந்தான். (க0நுஉ)

வேறு.

எதிபதிக் கேவண முண்டாய்த் தென்றிசைத் திடுகில் வேத
துதிசெயு மவதா ரத்திற் றோன்றிய ஞான வேன‡
மதிசெய்மன் னிராமன் கண்ணனேற்றமாய் வகுத்தல் போல
விதிதொழு மரங்க மாதி மெய்த்திருப் பதிக ளெல்லாம். (க0நுங)

* 'வள்ளைக் குளத்தில்', என்றும் பாடம்.
† 'வளையமழகிற்பரனென்போன்' என்றும் பாடம். ‡ ஏனம்—வராகம்.

20764

வேறு.

ஒத்திருந் தானு மரங்கமா நகர்க்கு மோங்கிய திருமலை தனைக்குரா
வித்தகச் செங்கட் பேரரு ளாளர் விளங்கிய திருநகர் தனக்கும்
பத்தர்க ளேற்றம் பகர்வது போலும் பற்பல விருதுக டம்மி
னுத்தம வியாதர் பராசரர் சுகர்சீ ரோங்கிய நாரதர் சவுனர்.

என்றவர்க் கேற்ற மானவா போலு மிலங்குமாழ் வார்களிற் குருகூர்
மன்றலம் வகுள மாலைமார் பருக்கு வந்தசீ ரேற்றமே போலு
மொன்றிய கருணைத் தேசிகர் களிலாங் கோங்கிய வுடையவர் தமக்கு
நன்றிசே ரேற்ற முண்டென வுரைத்தார் நான்மறை முடிவினை யுணர்ந்தார்

வேறு.

ஏன மிராமன் கண்ணனிவர்க் கேற்ற மென்கொ லெனிலேன
ஞானப் பிரானா யவதரித்து நலங்கொ ளுலக மனைத்தினையுந்
தானத் துடனே யிடந்தசுரன் றனை விறல்கொண் டிலகுப்பா
மானத் தொழிலோர் பூமகளை மடியில் வைத்தங் கபயத்தின். (௧௦௫௬)

ஏற்றந் தன்னைத் திறப்படவன் றிசைப்ப மாற னதையுணர்ந்து
சாற்றுந் திருவாய் மொழிதன்னிற் சரணம் புகுந்தே னுனக்கென்ன
நோற்ற நோன்பி லிருமூன்றும் பாட்டி* னேக்கிக் கூறுதலா
லாற்றன் மிக்க காகுத்தர்க் கேற்ற மென்கொ லெனவறையில். (௧௦௫௭)

வேறு.

ஆரணியந் தனிற்புகுநா ளன்புமிகுங் குகர்க்கினிய
சீரணிந்த தோழருமாய்ச் சடாயுவுக்குப் புதல்வருமாய்
வாரணிந்த முலைச்சபரி யமுதூட்ட மகிழ்ந்தருந்தி
யேரணிந்த திருவடியோ டிருந்துண்பே னிருந்தென்ன. (௧௦௫௮)

வேறு.

ஆங்கவ னுடனே யினிதிருந் தருந்தி யருளலா லிராகவர்க் கேற்ற
மோங்குசீர் நந்த கோபனார் மதலைக் குலகுய்யத் திருவவ தரித்த
பாங்குறு மவதா ரங்களி லேற்ற மென்கொலோ வெனப்பகர்ந் திடுங்கா
லாங்குசீர்ச் சரம சுலோகமொன் றருளித் தமர்களை யுய்விக்கை யாலும். ()

* ஏனமாய் நிலங் கீண்டவென் னப்பனே கண்ணா வென்று மென்னை யாளுடை
வானநா யகனே மணிமாணிக்கச் சுடரே
தேனமாம் பொழிற் றண்சிரீவர மங்கலத் தவர்கை தொழவுறை
வானமா மலையே யடியேன்றொழ வந்தருளே.

† "ஸ்ரீராமாவதாரத்திற்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:—பெருமாள் அபயப்ரதாநம் அருளிச்செய்தும், குஹப்பெருமாளுடன் சீரணிந்த தோழமைகொண்டும், பெரிய உடையாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தும், ஸ்ரீசபரி கையாலே ஸம்யக்போஜனஞ்செய்தும், திருவடியுடன், 'உண்பன் நானென்ற ஒண்பொருள்' என்னும்படி ஸஹபோஜனம் பண்ணியும் போருகையாலே" என்ற குருபரம்பராப்ரபாவ வாக்கியம் இங்கே யறியத்தக்கது.

சீரிய துரோணர் வீட்டுமரகத்திற் செறிந்திடா தவற்றைநிந் தித்துக்
கூரிய மதிசேர் விதுரன் மாளிகையிற் கோகன கத்திருச் சமைத்த
வேரிய லமுதி னினிதுகந் தருளி யிருந்துநல் விருந்தருந் துகையா*
[illegible]ணுந் தலைவர்கட் கேற்றம். (க0சு0)

இத்திறங் கிடப்பத் திருப்பதி களிற்சீ ரிலங்கரங் கந்திரு மலையின்
னுத்தமப் பெருமாள் 'கோயிலுக் கேற்ற மெதுவெனி லோங்கிய வரங்கர்
பத்தனு மூலக சாரங்க முனிவன் றன்னொடும் பாணர்தம் மோடு
மொத்துறக் கலந்தங் களவள வுகையா லோங்கிய வேங்கடத் துறைவார்.

குறும்பறுத் தோங்கு நம்பிக்கு மன்பிற் கோதறுதொண்டை மான்றனக்கு
முறும்பெருந் துணையாய் வார்த்தைகளுரைத்தங்குற்றிடத்துதவியபரிசாற்
பெறும்பெரு மின்புமடியவர்க் களிக்கும் பேரரு ளாளருக் கேற்ற
நறும்பசுந் துளபமணிமுடி யுடையோ னுமெனத் தனைமதி யாதே. (க0சுஉ)

சீரிய வன்பன் றிருக்கச்சி நம்பிக் கின்புறத் திருப்பல வத்தை
நேர்பெறத் திறந்து வேண்டிய தருளிச் செய்கையா னெறியுறு மூன்றுக்
கேருறு மேற்ற மென்றனர்† புலவ ரிருடிக டம்மிலை வர்க்குப்
பாரிமிசை யேற்றம் பகர்வதென் னென்னிற் பழுதறுசீரியவியாதர். (க0சுஙு)

வேதியர்க் குயிராம் வேதங்க ளனைத்தும் விளங்குநற் பொருள்பெற நோக்கி
யோதிமற் றதனுட் கன்மகாண் டம்விட் டோங்கிய ஞானகாண் டத்திற்
சோதிசேர் புருட சூக்தத்தி னுலுந் துலங்கிய மெய்ந்நெறி விளக்கா
மாதிகா ரணமா வாக்கியத் தாலு மச்சுதன் பரமெனு வெவர்க்கும். (க0சுச)

சத்திய முக்கா லுரைத்துவே தத்திற் சாத்திரங் களில்வெளிப் பட்ட
மூத்திரா யணனற் கேசவன் பரமா மல்லவை மொழிந்திடல் பாவம்
பத்தியா லுணரிற் காணலா மென்னப் படியுளோர்க் கறிவுற வுரைத்து
வத்துநிர்ணயத்தைப்பண் ணுகை யாலே மாசறுபராசரர்க்கேற்றம். (க0சுரு)

---

* "ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்துக்குப் ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:—கீதோப நிஷத்தை வெளியிட்டுச் சரமச்லோகம் அருளிச்செய்கையாலும், பீஷ்மத்ரோணாதிகளுடைய க்ருஹங்களைவிட்டு ஸ்ரீவிதுரர்திருமாளிகையிலே, 'சுசீநி குணவந்திச' என்கிற பாவநத்வ போக்யத்வங்களை யுடைத்தாயிருந்ததென்று அமுதுசெய்து, 'த்விஷதந்நம் நபோக்தவ்யம்' என்று முறைகூறுகிற சோற்றை நிராகரித்து, இது தன்னையே சத்ருகோஷ்டியிலும் ப்ரஸித்தமாக்குகையாலும்" என்ற குருபரம்பரா ப்ரபாவ வாக்கியம் இங்கே ஒப்புநோக்கத்தக்கது. இச்செய்யுளில், புள்ளியிட்ட இடங்களிலுள்ள சொற்கள் இன்னவென்று புலப்படவில்லை. எமக்குக் கிடைத்த எல்லாப் பிரதிகளிலும் புள்ளியிட்ட இடங்கள் ஒன்றும் எழுதாதுவிடப்பட்டிருந்தன. பின்னர், நல்ல பிரதிகள் கிடைக்கும்போது பூரணஞ் செய்துகொள்ளலாமென்று உள்ளவாறே பதிப்பித்தோம். இவ்வாறே பின்னுஞ் சில செய்யுட்கள் வந்துள்ளன.

† கோயில், திருமலை, பெருமாள்கோயிலோடு திருநாராயணபுரத்தையுங் கூட்டி, அத் திருநாராயணபுரத்திற்கு, 'ஸ்வசரிததநயன்பக்கல் ஆதராதிசயத்தாலே தந் நிவேதிதாந்நத்தை ஸஹபோஜனம் பண்ணி அவனை வாழ்விக்கையாலும், யதிராஜ புத்ரரான ஸௌசீல்யத்தாலும்' ப்ராதாந்யத்தைக் கற்பித்துரைத்தலுமுண்டு.

என்னெனிற் புராணமென்னவொன் றிசைக்கி ங்குசீர் விட்டுணு புராண
மன்னுதற் கிணையொன் றெடுக்கவுந் தகுமோ வாயரி யொனத்தலைபனைத்
பன்னரு நெறிசேர் சித்தசித் துடனே பழகிய வீசர னியல்பை
நன்னெறி விளங்கக்கட்டுரைத்தருளவாங்கதைநளை யயிலை நிலைசேர். (௧௦௬

அன்பினு லுயர்ந்த வாளவந் தார்கண் டாசறு பரா ர் தமக்கே
யின்புறு மடிமை நானென விசைத்தாங் கிறைஞ்சுதற் குரியரா கையினுற்
றுன்பறு சுகருக் கேற்றமென் னென்னிற் றுகளறு பரிட்சித்து கேட்ப
வென்பெலா முருக வேதசா ரத்தை யெடுத்துமுன் றிரட்டினைத் திருந்த.

வேறு.

சீரார் பாக வதந்தன்னைச் செப்பி யத்தந் தெளிந்துரைத்தங்
கேரார் வத்து நிரணயத்தைப் பண்ணு வதுகேட் டியாவர்களு
மாரா வன்பிற் சுகர்முத்த ராக வேண்டு மெனவெவர்க்கு
நேரா யுரைக்கும் படிதோன்றி நிற்ற லாலே யதுநிற்ப. (௧௦௬௮)

வேறு.

சாற்றரு மன்பு மிக்க சௌனக முனிவ னுருக்
கேற்றமே தென்னின் மாய னிலங்கிய திருமந் தன்னிற்
ரேற்றுதன் மங்க ளங்குந் துலங்குநிர் ணயங்கள் பண்ணி
யாற்றலோ டெழுத லாலே யத்திறங் கிடப்ப மெய்சேர். (௧௦௬

நாரதர்க் கேற்றங் கூறி னுற்பெருங் குலம லாதே
பாரிடைச் சண்டா ளர்க்கும் பணிசெய்ரண் டாள ரேனுஞ்
சீருறு திருமாற் காளாய்ச் செஞ்சுட ராழி சங்க
நேர்பெறத் தரித்தன் பாலே நெறியுறு திருமண் காப்பும். (௧௦௭௦)

பன்னிரு தலத்திற் சாத்திப் பகர்வரு மஞ்சட் காப்பு
மன்னதி னூடே சாத்தி யச்சுதன் றமரைக் கண்டாற்
சென்னியால் வணங்கித் தூய திருமணி வடமுஞ் சாத்தி
யின்னல்சேர் வெகுளி காம மூலோபமென் றிவைக ணீக்கி. (௧௦௭௧)

வேறு

நாரா யணர்க்குக் கவிசொல்லி ஞாலத் தருபபா ராங்கவி
யாரா வுன்பி னெனமையாளு மடிக வென்ன முன்பறைந்த
சீரா ராழ்வா ரதுகண்டு சேம முடைநா ரதரென்ன
வேரார் திருமாற் காம்வாக்கா லெடுத்துந் துதிக்கப் படலாமை (௧௦௭௨)

---

* "ஸ்ரீநாரதபகவானுக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:— 'யுகமபிசிஹ்நைரங்கிதம் யஸ்ய விஷ்ணோ: பரமபுருஷநாம்நாம் கீர்த்தநம் யஸ்ய வ...—ருஜூர்த்வமபிபுண்ட்ரம் மஸ்தகே யஸ்ய கண்டே ஸரஸிஜமணிமாலா யஸ்ய தஸ்யாஸ்மி தாஸ:' என்று இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தாஸனென்று சொல்லுகையாலும், பெரியாழ்வாரும், 'சேமமுடை நாரதனார்' என்னும்படியான வைபவத்தினாலும்" என்ற குருபரம்பராப்ரபாவ வாக்கியத்தோடு ஒப்புநோக்குக.

வேறு.

ஆங்கது கிடப்ப வாசிலாழ் வார்கள் பதின்மரி லருட்குரு கூரி
லோங்குநம் மாழ்வார்க் கேற்றமென் னென்னவுரைத்திடி லாயிரஞ் சாகைப்
பாங்குறு வேதத் துட்பொரு டன்னைப் பத்தியால் வடித்தெடுத் தருளைந்
தாங்கிய [illegible]தாரணியி லெவர்க்கும். (௧௦௭௩)

ஓதுதற் கெளிதாய் வெளியிட லாலே* யுடையவர் கட... ......
...... ... ...... ...... ...... கபயமேன் மையையுந்
தீதிலாப் பிள்ளை யருளிய சரம சுலோகத்தின் சீர்மையுஞ் சிறப்பும்†
வேதமந் திரத்தா லிருடிகடெளிந்து வெளியிட்ட மெய்ப்பொருள் களையும்.

வேறு.

அன்பு மிக்க வாழ்வார்க ளருளிச் செய்த பாடலையு
மின்ப வாரி நம்மாழ்வா ரிசைத்த திருவாய் மொழிகளையுந்‡
துன்பங் கடிந்த நாதமுனி தொகுத்த பனுவ லனைத்தினையும்
பின்பெம் மாள வந்தாராம் பெரியோன் பகர்ந்த நூலினையும். (௧௦௭௫)

வேறு.

ஓதாநின் றுடையவரு[illegible]சொல் லிறவொதுக்கி§
வேதாந்த சங்கிரகம் வேதாந்த சாரமெனப்
போதாந்த வேதாந்த தீபத்தைப் புரைதீர
நாதாந்த சீகீதா பாடியத்தை நலத்தினுடன். (௧௦௭௬)

வேறு.

மன்னுஞ் ஸ்ரீபா டியந்தன்னை மாசி லாத மதிமிக்கா
ருன்னுங் கத்ய திரயத்தை யுரைத்து விரை[illegible]
பின்னு மன்பி னித்தியத்தை யருளிச் செய்து பிறசமய
மென்னு மிருளுக் காதவனா யிருந்து திருமான் மார்க்கத்தை. (௧௦௭௭)

---

* "நம்மாழ்வாருக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:—ஸஹஸ்ரசாகையான நாலுவேதத்தினுடைய பொருள்களையும் நாலு ப்ரபந்தமுகத்தாலே ஸர்வாதிகாரமாக்குகையாலும், நாதமுனிகளுக்கு ப்ரஸந்நராய் அருளிச்செயல் நாலாயிரத்தையும் ப்ரஸாதித்து மற்றுமுண்டான தர்சனதாத்பர்யங்களையெல்லாம் அருளிச்செய்து தர்சனத்தை நிலைநிறுத்துகையாலும், ('பயிலுஞ் சுடரொளி', 'நெடுமாற்கடிமை' முதலான இடங்களில் வர்ணோத்கர்ஷங்களை நிராகரித்து வேதப்ரமாண முக்யதாத்பர்யமான ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் எல்லாருக்குந் தெரியும்படி அருளிச்செய்கையாலும்") என்றுள்ள குருபரம்பராப்ரபாவ வாக்கியம் இங்கே யறியத்தக்கது. இதில், 'பயிலுஞ்சுடரொளி' என்பது முதலான குண்டலித க்ரந்தம் சில குருபரம்பராப்ரபாவ ஸ்ரீகோசங்களில் மட்டுமே காணப்படுகிறது.

† 'சிறப்பையுஞ் சிறந்த' என்றும் பாடம்.

‡ 'திருவாய்மொழிகளையும்' என்றும் பாடம்.

என்றும் பெரன்றுப் படிசெய்திங் கிராமா நுசர்சீர் மார்க்கமெனக்
குன்றுமெடுத்தா னுள்ளளவுங் கோதி லுலகம் பகினைவு
நின்றா கூறும் படியிந்த நிலத்திற் றாபித் திடுகல்லு
னன்றி சேரு மெதிராசர்க் கேற்ற மெனவே நவின்றனர (௧௦௬

வேறு.

முன்புதித் தவர்க ளருள்வழி நின்ற முக்தரின் முதல்வரா மிவரைப்
பின்புதித் தவரி லேற்றமென் றடியேன் பேசிடக் கிடந்ததொன் றனமே,
வென்புதித் துரோம மூளைநோன் மச்சை யிவற்றினு லெடுத்துமுல் சடய்
லன்புதிப் பித்தென் னுவினைக் காட்டி யாண்ட சிரெதிபதியருளை. (௧௦௭

கோதிலாக் குருமா னுயினுர்க் கெல்லாங் குருபர னிணையடி தானே
தீதிலாத் தந்தை தாயுமாய்ச் சார்வாய்ச் செல்வமாய்க் கல்வியா யுயிராய்
வேதமாய் முடிவில் வீடுமாய் வீட்டின் மேவுசீ ரின்பமும் பிறவு
மோதலா நன்மை யாவுமா மென்ன வுபநிடதப்பொரு ளுரைக்கும். (௧௦௮

படியுணர்ந் தந்தப் படிபிடித் திருந்து பத்தர்க ளெதிபதி தன்னை
நெடியவன் றிருமா லிவனமை யாள நீணிலத் துதித்தன னமுன்னர்
வடிவுடைக் கருணை விட்டுணு சித்தன் மாசறு பீதக வாடை
யடிகளே குருவா யிருநிலத் துறுமென் றருளிய திவனேயென் றன்பாய்.

சிந்தையு ளிருத்திப் பேணினுர் *த்தத்தேசிகர யன்றியோர் தெய்வம்
வந்தனை புரியா ரென்பதை முன்பு மாசறு கோட்டியூர் நம்பி
யந்தமில் குணத்தி னுடையவர் புகுநா ளாளவந் தார்தமைத் துதித்துப்
பந்தம தறுத்துத் தியானமா யிருந்தா னவர்பெயர் பதிந்தமந் திரமாய்.

அப்படி யாகி லெதிகளு பகளு ரடித்தலத் தாச்சரித் திட்ட
[illegible] ...யோ ரெல்லாந் தத்தமைச் சேர்ந்தவர் தமக்கா
கொப்பரு மெதிகட் கதிபதி தன்னை யுன்னிவாழ்ந் திருமினென் றுரைப்ப
தப்பற வவர்க ளுடையவர் திருத்தா டஞ்சமாய்ச் சாற்றலென்னென்னி

---

* "உடையவர், கீழ்ச் சொன்னவர்களைப்போலன்றி, பெருமாளருளிச்செய்த அபய தாநத்தை விசதமாக்குகையாலும், கீதாசார்யன் அருளிச்செய்த சரமச்லோகார்த்தத்தை ப்ரகாசிப்பிக்கையாலும், ரிஷிப்ரோக்தமான ப்ரமாணங்களுக்கு அர்த்தமருளிச்செய்கையாலும், மற்றையாழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களை அங்கோபாங்கமாகவுடைய திருவாய்மொழி ப்ரபந்தத்தைஅர்த்தவத்தை விசதமாக ப்ரகாசிப்பிக்கையாலும், நாதமுனிகள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களையும் ஆளவந்தார் அருளிச்செய்த திவ்யபிரபந்தங்களையுங்கொண்டு ஸூத்ராலயங்களை ஒருங்கவிட்டும், ஸ்ரீபாஷ்யம் கத்யத்ரயம் முதலான ப்ரபந்தங்களை யருளச்செய்தும், நிகிலகுமதிஸமயங்களையும் நிராகரித்து, ஸ்வமதஸ்தாபனம்பண்ண, 'எம்பெருமானார்தர்சனம்' என்னும்படி பண்ணுகையாலும் இவர் எல்லாரினும் ப்யதாநர்" என்பது குருபரம்பராப்ரபாவ வாக்கியம்,

ஆசறத் தன்னை யாண்டவன் றிருத்தா ளகத்தினி லிருத்தலே குருமான்
பேசிடு முகப்பு மற்றது கெடப்ப பேதமை யறுத்தறி வாக்குந்
தேசிகர்க் குகம்புப் பரமதே சிகனைச் சிந்தையா னினைத்துவாக் காலே
மாசறத் துதித்த லத்திற முணர்ந்த மறுவறு மாளவந் தார்தாம். (கO அச)

வேறு.

சீரார் மணக்கா னம்பிக்குஞ் சிறந்த வுய்யக் கொண்டார்க்கு
மோரார் மகிழ்ச்சி மிகத்தோன்ற வெழிலார் பரமா சாரியனு
யாரா வன்பி னுதமுனி யருட்டா மரைத்தா டுதித்திறைஞ்சி
நேராய் நின்று வீடடைந்தார் நிகரி லாத வெதிராசர். (கO அரு)

தன்னை யாண்ட தேசிகர்க ளவர் மகிழ்ச்சி தரிப்பதற்கு
முன்னை மறைகண் முடிந்தநில முற்றுங் கவியின் மொழிந்ததற்கு
மன்னை யினுமிக் கன்புடைய வாள வந்தா ரிருந்தொருநா
ளென்னை நோக்கப் பெற்றிடுனு னிலங்கும் பரம பதத்துக்கு. (கO அசு)

கருளும் படியு முறக்கட்டித் தோன்று முயிர்க ளனைத்தினையு
முருளுஞ் சகட முதைத்தபிரா னுங்கு முலகத் துறும்வண்ணந்
தெருளுற் றேறும் படியாகச் செய்யே னென்வென் செயலாமென்
றருளிச் செய்தா ராளவந்தார் தம்மை நினைந்தன் றகங்குழைந்தே. (கO அள)

வேறு.

அன்றியாங் கொருநா ளரங்கமா நகரி லாசறு முடையவர் தம்பா
லொன்றிய வன்பின் றொண்டர்க டமக்காங் கோங்குசீ ரிராகவ னார்தம்
வென்றிசே ரபய மேன்மையைப் பகர வெடுக்கெனவெழுந்துட னடந்தார்
நன்றிசேருறங்காவில்லியென்றோங்குநற்பெயருடையசீர்த்தாதர். (கO அஅ)

அத்திற நோக்கி யுடையவர் பிள்ளா யகங்குழைந் திடவனு பவிக்கு
மித்திறமொழிகேட்டெழுந்துறநடந்ததெதன்பொருட்டென்றிசைத்தருள
வுத்தமக் குருவே வீடணுழ் வான்ற னுயிரல்லா தியாவையுந் துறந்த
சித்தமுந் தானு மாகிவந் தருளிச் சீரிய விராகவற் கபயம். (கOஅகூ)

புக்கநா னன்றய் வந்தகப் பட்டாய் போக்கினி யெங்கென வவர்க்குத்
தக்கவா னரங்கண் மலைகள்கொண் டோங்குந் தயரத ராமனார் கோட்டி
தொக்கவில் வினையேன் கேட்பதென்னென்னத்தோன்றலே யெழுந்தன னென்றான்
பக்கநின் றிவணி முரைத்திட வெதிகட் கதிபரப் பத்தரைநோக்கி. (கOகூO)

வேறு.

அரிய நிலையா யஞ்சாதே யறையக் கேட்டி மெய்ஞ்ஞானத்
தரிய வீடு நான்பெற்று னீயும் பெறுதி யுயர்வீட்டைப்
பெரிய நம்பி பெற்றுனன் பெற்றே னெனக்காண் பேதமற
விரியும் புகழ்சே ராளவந்தார் பெற்று னம்பி மேவிடுமால். (கOகூக)

அப்பா லாயனார் பெற்றுளா ராளவந்தா ரதுபெறுவ
தப்பா தாங்கத் திறந்தன்னைச் சாற்றக் கேளாய்த் தவம்க்கா
யொப்பா ரில்லாத் திருமகளார் புருட காரத் துவறுதி
யெப்பா லவர்க்குங் கைகண்ணு யிருக்குமிருக்கின் முடிவுமதால். (௧௦௯௪

வேறு.

ஆங்கது கிடப்ப வுள்ளவா றனையி லவனியிற் சங்கு ரத்தி
பாங்கொடெப் போதுந் தங்குவோர் களுநம் பரம்பரன் சங்கிலித் தொடரி
லோங்கியுட் பட்டுக் கிடப்பது காணு முற்றதை நோக்கினம் மொழுக்குந்
தாங்குதே சிகர்கொடாட ரிலேகாணு நதங்குத லதுதி மடிபிடித்தே. (௧௦௯௫)

சீரிய கமுகு நீருணிற் கதலி சிறந்த நீருண்ணுமென் றெண்ணி
நீரிரு மண்பின் வீடணுழ் வானை நினைவுறு கலைகணுய்ப் புக்க
கூரிய சிந்தை நால்வரை நீக்கித் தகைநதகு மறிடக மேகவோ
மேரிய லருளிப் பாடவர்க் கிட்ட போதினுங் கனித்திட்ட தில்லை. (௧௦௯௬)

ஆதலால் வீடு நான்புகி னீயும் பெறுவதற் கையமொன் றில்லை
கோதிலா நிலையா யத்திற முணர்ந்தோர் குறையற மகிழ்ந்திரென் றிசைத்துத்
தீதிலா வெதிக டலைவனுர் பின்னுஞ் செப்புவார் திருமகள் கோனைப்
போதெலா மேத்தி யிருப்பவர் தம்மைப் புரையறச் சார்த்தியங் கிருப்பார்.

சீரிய தவத்தா லுயர்ந்தவ ரென்பர்† தசாத குமாரனைப் பரத
னேர்பெற வேத்தி யிருந்தன னவனை யிரங்கிய சத்துருக் கனன்மு
னேர்பெறத் துதித்தாங் கிருந்தன னன்றி நிகரிலாச் செண்பக மாற
னுரமு தனையான் றனையிருந் தேத்தி யமர்ந்தன னவன்றனைப் பரிவால். ()

அன்பினன் மதுர கவிதுதித் திருந்தா னுசறும் விட்டுணு சித்த
னென்பெலா முருக நந்தகோன் மகனை யேத்தியாங் கிருந்தன னவனைத்
துன்பெலாந் தவிர்ந்த வில்லிபுத் தூரிற் றோன்றிய சுடர்க்கொடி கோதை
யின்பமார் சொல்லா லெடுத்துறத் துதித்தாங் கிருந்தன ளிதுகுறிக் கொள்வ ௧௦௯௭)

வேறு.

என்னப் பிள்ளை தனைநோக்கி யிசைத்தா ரீரே ழுலகேத்துந்
தன்னொப் பாரைத் தெரிந்துணரிற் றானே தனக்கு நிகரான
மின்னொப் பான திருமேனி வேத முடிவி லெப்பொழுது
மன்னப் பட்டிங் கடியவர்க்காய் மண்ணிற் போந்த மதிமிக்கார். (௧௦௯௮

எல்லாத் திறமும் பிள்ளைக்கன் றிசைத்தா ரென்னைப் பற்றென்னச்
சொல்லா மற்சொல் லருளியதா மதனிற் றுலங்கு மெதிராசர்.
நல்லா சிரியன் றனைப்பணிந்து தொழுவே துன்ப நானிலத்திற்
கல்லாப் புல்லர் தமக்குமெனுங் கருணை தோன்றக் கட்டுரைத்தான். (௧௦௯௯

---

* சங்குசாரம்-ஸம்ஸாரம்; 'வம்சம்' என்பது 'வங்கிசம்' என்று வந்தாற்போல வந்தது. † "எத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்-சார்த்தி யிருப்பார்தவம்

வேறு.

விருப்பமுட னப்படியே யெதிராசர் விரைமலர்த்தா
ளருத்தியுறப் பணிந்தவர்க்குப் பணிசெய்வா ரமருமிடந்
திருப்பதிக ளனைத்துமெனத் திருவரங்கத் தமுதனா
ரிருப்பிடம்வை குந்தத்தி* லின்பமுற வெடுத்திசைத்தார். (கக00)

அப்படிவா முடையவரை யமுதுசெயப் பண்ணுவதே
செப்பருஞ்சீர் நூற்றெட்டுத் திருப்பதிசேர் திருமாலைத்
தப்பறவே யூட்டுதலத் தலைவரையே வலஞ்செய்தா
லொப்பரிய திருப்பதிக ளனைத்தும்வலஞ் செய்ததொக்கும். (கக0க)

வேறு.

எனவும் பின்னும் பலசொலினும் பூதூர் வாழு மெதிபதிக்கென்
மனமும் வாக்குஞ் செய்தொழிலுங் கொடுத்தேன் மற்றை யவனடியேன்
கனவு நனவுந் தானாகிக் கலந்தா னெனவுங் கட்டுரைத்துத்
தினமு நினைவாய்த் திருமாலை விளங்குந் திருவை மேன்மையுற. (கக0உ)

போற்றி யன்பா லங்கவர்தம் புருட காரங் கொண்டடியேன்
சாற்ற வரிய வெதிராசன் சரணம் புயமென் றலைமீதி
லேற்றி னானு மன்னுதற்கா மெனவும் வேதப் பொருடெரிந்த
நூற்றந் தாதி முடிந்நிலத் துரைத்தா னந்த நுண்ணுணர்வான். (கக0ங)

ஈசன் றன்னை யுறநோக்கி யிலங்குங் குரவ ரெடுத்திசைத்த
நேச முடைய கன்மமரு ளீங்கா ஞான நெகிழுத்தா
லாசி லாத பிரபத்தி யாதி யுபாய மனைத்தினையு
மாசி லாத வெதிராசர் வசத்தாம் வண்ணம் வகுத்தெண்ண. (கக0ச)

ஓங்கு நிலைசே ரவர்கழலே யுபாய வுபேய மெனவுண்ணிப்
பாங்கொ டுணரும் பிரபத்தி பகர வரிய மந்திரமாய்த்
தாங்கு மிதய மலரிடையத் தலைவர் தம்மை யுறவிருத்தி
வாங்கு திருவ ரங்கத்திற் குரவர் வாழ்த்த மகிழ்ந்திருந்தார்.† (கக0ரு)

---

இருப்பிடம் வைகுந்தம் வேங்கட மாலிருஞ் சோலையென்னும், பொருப்பிட மாயனுக் கென்பர்நல் லோரவை தன்னொடும்வந், திருப்பிட மாய னிராமா நுசன் மனத்து" என்கையாலே எம்பெருமானார் திருவடிகளைத்தொழவே திவ்ய தேசங்களையெல்லாந் திருவடி தொழுதானாகக்கடவன் என்க.

நின்றவண்" "பேறொன்று" என்கிறபாட்டில், 'கர்மமும் உபாயமன்று, ஞானமும் உபாயமன்று, பக்தியும் உபாயமன்று, ப்ரபத்தியும் உபாயமன்று, எம்பெருமானாரது திருவடிகளே யுபாயோபேயம்' என்கையினாலே எம்பெருமானாரைப் பற்றுகையே ப்ரபத்தி, ராமானுஜன் என்கிற சதுரக்ஷரியே திருமந்த்ரம், அவர் திருவடிகளிலே பண்ணும் கைங்கர்யமே பரமபுருஷார்த்தம்; இதுவே நிச்சிதார்த்தமான என் ஸித்தாந்தம்' என்று நடாதூரம்மாள் அருளிச்செய்தருளுவர்.

வேறு.

அப்படியே சிலகால மன்பர்குழாத் தமர்ந்தபிற
செப்பமிகுந் தமக்குற்ற திருவயதைச் சிந்தித்தே
யிப்படியில் வயது நூற் றிருபதும்வந் திசைந்ததென
வெப்பொழுதுந் தொழுமரங்கத் திறையருகி லோர்தினத்தில்.

வேறு.

தன்னந் தனியே சென்றிறைஞ்சித் தாழ்ந்து திருவை முன்னிட்டுப்
பன்னும் பனுவல் பலபுகழ்ந்து பரனை மகிழ்வித் திருந்தனவி
லென்ன நினைவிங் கெதிராசர்க் கியம்பு மென்றா னிலர்குமணன்
கன்னங் கறுத்த கருமுகிலே கலிகா லத்தோர் கணப்பொழுதும். (ககo

இந்த நிலத்தின் மெய்யுணர்ந்தோ ரிருந்தன் முனமீ திருப்பாகு
மந்த மில்லாக் குணத்தோனே யடியேன் றன்னை யையம்புலன்கள்
வந்து தீண்டா வகைகாத்தாய் வயதிங் கொருநூற் றிருபதினிப்
பந்த முறுமிவ் வுடறன்னை விடுவித் திடுக வெனப்பணிந்தார். (ககo

பணிந்த வெதிக டனிநாதர் பரம பதத்துக் கேகுதற்
துணிந்த சிந்தை யுறநோக்கித் தூநீ ரரங்க ரெதுவரி
திணிந்து கலங்கா முகமேல ... அயோத்தி ந
பணிந்து தான்முன் பிரியவவர் பட்ட பாடே பட்ட ககo

மன்னர் மன்னன் றனில்வருந்தி மாய னுடனே தெளிந்தந்தோ
வென்னி ...... ...... லீலா விபூதி யெனவிரங்கி
யன்னந் திகழு மணியரங்க ரன்பா னோக்கி யெம்மோடு
மின்னுஞ் சிலநா ளினிதிருந்தங் கேக லாகா தோவென்றார் (கக

என்ற பெருமா னிணையடியின் மீட்டு மிறைஞ்சி யெதிராச
குன்ற மெடுத்தா னிரைகாத்தாய் கொடியே னுன்னைப் பி
வென்றும் பொன் றந்துன் னின்ப வீட்டி லினிதமர்ந்தாங்
கொன்று நித்தர் முத்தருட னுறைய விடைதந் துதவென்றார். (கக

ஆறு லிற்றைக் கேழாநா ...ரார்க ளெல்லாரும்
வா ர் சோதி தரவருவர் மண்ணே ரிரங்க விண்டுதிப்பப்
போநீ மன்னும் பெருவீட்டி லென்றுங் கரங்கர் புகழுடைய
தானுய் நின்றான் றனக்களிப்பச் சரண சதியை யுச்சரித்தே. (கக

வணங்கித் துதித்து வலஞ்செய்து மடத்திற் புக்க வெதிராசர்
குணங்கண் மலியுங் குரவர்களிற் கூரத் தாழ்வான் றிருமகனு
மிணங்குஞ் சிந்தைச் சீபட்ட ரெம்பார் சீடர் வருகவெனக்
கணங்கொ டிருந்த ... ... கெல்லாங் களைகண்ணாய். (கக

இருத்திக் கூரிச ஞார்த்தங்க ளெல்லா மருளிச் செய்துலகைத்
திருத்தி யருளு மெனவுரைந்து சீரார் பாக வதர்க்கெல்லா
மருத்தம் பெறவாங் கோரொன்றை யருளிச் செய்தார் மற்றவர்தங்
கருத்தை யறிந்து பாகவதர் ...... நிலத்தைக் கலிப்பாவி. (ககககச)

விழுங்கக் காட்டிக் கொடுத்தெம்மை விட்டுப் போவாய் கொல்லோவென்
றழுங்கிப் பதைத்து மண்மீதி லாரப் புரண்டாங் கன்புருகித்
தொழுங்கை மறையோர் தமைத்தழுவித் துன்பந் தீர்மி னெனத்தேற்றி
யெழும்பல் லாண்டை யவர்க்காக விசைத்தா ரிசைத்தங் கேழாநாள். ()

அர்ச்ச ராதி மார்க்கத்தா லாசி லாத வெதிராசர்
மெச்ச வானோர் புகழ்ந்தேத்த விரிஞ்சன் முதன்மா முனிக்கணங்க
...... ...... ...... ...... ...... ......
விச்சை மருவு மாபரண மேழுங் கடந்தாங் கெலையறு ... (கககசு)

மூலப் பெரும்பா ழவைகடந்து மூழ்கி விரசைப் புனனீங்கிச்
சாலப் பரியு மமானவனோர் தடக்கை சேர்ந்தாங் கொளிக்கொண்ட
கோலச் சோதித் திருவுருவங் கொண்டு வளங்க ளெதிர்கொள்ள
ஞாலத் தவர்கட் கிதமளித்தான் ஞான னந்தப் பெருவீட்டை. (கககள)

மருவா நின்ற வணவர்களு மாசி லாத செழுஞ்சோதிக்
கருமா முகிலுங் கமலையுங்கண் டுகந்து கண்கள் களிகூர
விருமா நிலத்தா ருயிர்காத்த வெதிரா யகவென் றெடுத்தேத்தத்
திருமா மணிமண் டபஞ்சேர்ந்தான் சென்றூற் குடையா மெனுஞ்சீமான். (ககக அ)

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

20764
(7223)

20764